சுதந்திர சரித்திரம்

ஆக்கியோர்:

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்

நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1
சென்னை-1

பதிப்பாளர்:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு :: சென்னை 1

பதிப்புரிமை] 1953 [விலை ரூ. [illegible]-0

First Edition: October 1953

12658

The Progressive Printers, Madras—1

முகவுரை

"நாமார்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்" என்று முழக்கினார் ஒரு பெரியார். "பரிபூரணனுக்கே யன்றி வேறெவர்க்கும் அடிமை செய்யோம்" என்று பாடினார் பாரதியார். நமது பாரததேசப் பண்பாடு அஃதேயாம்.

மகா அலெக்சாந்தரின் படையெடுப்புக்காலம் முதல் நேற்று வரையில் அடிமை வாழ்வினுக்கு நாம் ஒருப் பட்டதில்லை; அவ்வப்போது வெகுண்டெழுந்து, வீரமே விளைத்து, ஆண்மைகாட்டி விழுமிய சுதந்திரம் எய்தவே முனைந்துள்ளோம்.

நடுவிலே சிறிது காலம் அன்னியருக்கும் நாம் ஆட் பட்டிருந்தாலும், அதனை வெறுத்து, வீறுப்பு மிகுந்து, வீரங்காட்டி, அடிமை வாழ்வை அகற்றி எறியவே முயன்றுள்ளோம். சுதந்திர சித்திக்கு இரண்டு உபாயங்கள் உண்டு. ஒன்று அறவழி, மற்றொன்று மறவழி.

உலகமெல்லாம் மறவழியையே நம்பிக் கிடக்கின்றது. ஆதலின், அறவழியை அறிவுறுத்தவும், அதன் வலியை விளக்கவுமே மகாத்துமாகாந்தி நம்மிடையே முளைத்தார்; முனைந்தார்; கடலரசி என்று காசினி எல்லாம் போற்றிய இங்கிலாந்தை—இருமுறை ஜெர்மனியை வீழ்த்திய இங்கிலாந்தை—அம்மகான் பணிய வைத்தார்; சுதந்திரமும் தேடித்தந்தார்.

ஆதியிலே மறவழியையும், முடிவிலே அறவழியையும் மேற்கொண்டு, நம்மவர் முனைந்தெழுந்த வரலாறு இந்நூலில் சிறிது விரிவாகக் காணப்பெறும்.

ஆதிமுதல் ஞான விளக்கு ஏற்றிவைத்து ஞாலத்தி னுக்கு வழிகாட்டிய நமது பாரத பூமி, அண்மையிலே சுதந்திரப் போராட்டத்திலும் சீரிய அறவழி காட்டியுள்ளது.

அவ்வரலாறு பாரதம், இராமாயணம் போல் விரியும் ஆயினும், அதனை வகுத்தும், தொகுத்தும், சுருக்கியும் இங்கே உரைத்துள்ளோம்.

நாம் சுதந்திரம் எய்தி நாலைந்து ஆண்டுகளே ஆகின் றன அச் சுதந்திரத்தின் சரிதத்தை நமது நாட்டு இளைஞரும் பிறரும் நன்கு அறியவேண்டும் என்பதே நமது அவா.

நமது அரசினர் ஆதியோடு அந்தமாக அச் சரி தத்தை வெளியிட எண்ணியுள்ளார். அது வெளிவர நெடு நாட்களாகும். அதற்கு முன்னதாக இந்நூலை நம்ம வருக்கு ஒரு காணிக்கையாக அளிக்கின்றோம்.

எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்
ஆக்கியோர்.

பொருளடக்கம்

			பக்கம்
1.	தோற்றுவாய்	....	1
2.	நாட்டு வளம்	....	4
3.	உலக பண்டசாலை	....	8
4.	வல்லரசர்	....	12
5.	வீர எழுச்சி	....	17
6.	சிவாஜியும் சீக்கியரும்	....	25
7.	மேனாட்டினரின் வருகை	....	30
8.	மண் சேர்த்த மாயம்	....	34
9.	மாயத்துணையும் பிணையும்	....	40
10.	பாளையப் போர்	....	46
11.	வீரபாண்டியன்	....	54
12.	வேலூரில் பூசல்	....	61
13.	வேலுத் தம்பியின் வீறுப்பு	....	67
14.	சீக்கியரின் சிதைவு	....	76
15.	நம்பிக்கை மோசம்	....	83
16.	மான ஈனம்	....	90
17.	போர் முயற்சி	....	98
18.	முதல் தியாகி	....	110
19.	யுத்த மூட்டம்	....	116
20.	டில்லியில் கொடியேற்றம்	....	127
21.	இரத்தம் பேசுதல்	....	136
22.	டில்லியில் சண்டை	....	141
23.	துரோக சூழ்ச்சி	....	148
24.	கான்பூரில் கொந்தளிப்பு	....	153
25.	நீலனது நரவேட்டை	....	164
26.	ஜான்ஸி ராணி	....	170
27	அயோத்தியில் அமளி	....	182

28.	இராஜீயப் பிரளயம்	....	190
29.	ஆங்கில ஆட்சி	....	195
30.	தீவிர முயற்சி	....	205
31	கலகச் சதிகள்	....	212
32.	ஜெர்மன் உதவி	....	221
33.	பட்டாளங்களைக் கிளப்பு	....	228
34.	கலக வேள்வி	....	235
35.	தேசம் திரளல்	....	245
36.	குட்டிப் போர்	....	253
37.	சத்தியாக்கிரகம்	....	260
38.	பஞ்சாப் படுகொலை	....	266
39.	ஒத்துழையாமை	....	273
40.	சட்ட மறுப்பு	....	281
41.	சிங்கத்தின் குகையில்	....	287
42.	வரிகொடாமை	....	297
43.	ஆட்சி ஒரு சாபம்	....	303
44.	வெற்றி அல்லது சாவு	....	309
45.	தடியடி தர்பார்	....	317
46.	பலப் பரிட்சை	....	323
47.	இங்கிலாந்தின் இறுமாப்பு	....	330
48.	இறுதிப் போர்	....	336
49.	சுபாஷின் முனைப்பு	....	344
50.	தேசியச் சேனை	....	354
51.	அரசும் ஆண்மையும்	....	363
52.	உயிர் நிலையில் பேரிடி	....	369
53.	சுதந்திர உதயம்	....	374
54.	முடிவுரை	....	381

சுதந்திர சரித்திரம்

1. தோற்றுவாய்

"பாருக்குள்ளே நல்ல பூமி பாரத பூமி," என்று தமிழகத்தின் தேசியக் கவிஞரான சுப்பிரமணிய பாரதியார் பாடியுள்ளார். நமது தேசத்தின் புராதமான புனித நூல்கள் பலவற்றையும் ஆங்கிலத்தில் பெயர்த்து எழுதி, அவற்றின் அருமைபெருமையினை அகில தேசத்தினுக்கும் அறிவுறுத்திய மாக்ஸ்முல்லர் என்னும் மேனாட்டு மேதாவியோ, "பாருக்குள்ளே பெரும் போக பூமி பாரத பூமியே," என்று வரைந்துள்ளார்.

இனி, அப்துல் வாசப் என்னும் சரித்திர ஆசிரியர் சாற்றியிருப்பது ஈதாகும்:—"இப்பூவுலகிலே மக்களின் வாசத்துக்கு மிக்க வாசியான தேசம் பாரத தேசமே! காசினியின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து, பேரின் பமும் பெரும் போகமும் தரத்தக்கது அதுவேயாம். ஆனந்தமயமான அதன் சமவெளிகள், போக பூமியின் பூங்காவை நிகர்க்கும். போக பூமி என்பது அதுதான் எனின், அதில் ஆச்சரியம் ஏது? ஏனெனில், போக பூமியும் இந்தியாவுக்கு ஈடாகாது!".

அப்துல் வாசப் அங்ஙனம் கூறியிருக்கையில், "பழமையும் பண்பும் நிறைந்த பாரத பூமியே! கலைஞான உணர்ச்சிக்கும் தத்துவஞான முதிர்ச்சிக்கும் உற்றதல மான ஓங்குபுகழ் ஆரிய தேசமே! உன்னை மன மொழி

மெய்களால் பக்தி விசுவாசத்துடன் வணங்குவேன். மேம்பாடெல்லாம் வாய்ந்த மேனுட்டினர் என்போர் மேன்மை இழந்து, நாடோறும் நலிந்து, ஒருவரை யொருவர் வெட்டிக்குவித்து, ஆண்டவனையும் குனிய வைத்து, ஆன்மகோடிகளை அடக்கியொடுக்கி வரினும், உனது புராதன மகிமை கண்டு அன்னவர் உன்னை வணங்கா நிற்பர். உனது விழிப்பும் விருப்பமுங் கண்டு அவர்கள் முடிசாய்க்க வேண்டும்" என்று பிரான்ஸ் தேசப் பெரியாரான பியரி என்பார் பேசுகின்றார்.

உலகின் பல பாகங்களிலே கிளைகள் கொண்டு, சென்னைமா நகரிலுள்ள பிரமஞான சங்கம் என்பதை ஆதியில் அமைத்த கர்னல் ஆல்காட் என்பாரோ, "எகிப்து, கிரீஸ், உரோமபுரி, ஐரோப்பாவின் வடபாகம் ஆகிய இடங்களிலுள்ள மக்களின் சமயங்களையும் தத்துவங்களையும் கூர்ந்து நோக்கின், ஆரிய மக்களின் அரிய ஞானமே அங்கெல்லாம் மிளிர்ந்ததெனை அறியலாகும். மேனுட்டின் தத்துவ ஞானிகளான சோகரதர், பிதியாகரஸ், பிளேட்டோ, ஹோமர் முதலியோரின் போதங்களையும், வேதவியாசர், கபிலர், கௌதமர், பதஞ்சலி, ஜைமினி இவர்களின் போதங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், இரண்டும் ஒன்றே என்று புலப்படும். இதிலிருந்து நாம் கொள்ளக்கிடக்கும் யூகம் யாது? மூத்த சோதரரான பாரத மக்களிடமிருந்தே இளைஞரான மேனுட்டினர் அத்தத்துவங்களை உணர்ந்து கொண்டனர் என்பது வெளிப்படையாம்" என்று உரைத்துள்ளளார்.

அம் மாக்ஸ்முல்லர் மேலும் மொழிந்திருப்பது இது :—"இயற்கை நலத்தினுல் ஏராளமான செல்வமும், இணையில்லாத சக்தியும், ஈடில்லா வனப்பும் வாய்ந்துள்ள தேசம் எது என்ருல், இந்தியா என்பேன். மனவிரிவு

கொண்டு, மகாசிந்தனை செய்து, மானிட வாழ்வின் நுண்ணிய சிக்கல்களை அறுத்தகற்றி, உயிர்த்தொகுதிகள் நலமும் பலமும், வளமும் வலியும் எய்துமாறு, வழி காட்டிய பூமி யாதெனில், பாரத பூமி என்றே பகர்வேன். மேனாட்டின் தத்துவ ஞானத்துக்குத் தாயகமாய், இகபரம் இரண்டிலும் மானிடவர்க்கம் ஏற்றம் பெறுமாறு இனிய மதிபுகட்டும் மகிமைத்தலம் யாதெனில், மீண்டும் இந்தியா தேசம் என்றே இசைப்பேன்."

"உண்மை நோக்கினுக்கும் உயரிய போக்கினுக்கும் உறைவிடமாய், உலகமெலாம் உவக்கும் சீர்மைக்கு இருப்பிடமாய், அதியற்புதமான இயற்கைச் சிறப்பினுக்குத் தாயகமாய், இந்தியா தேசம் துலங்குவதைக் கண்டு, யாவரும் வியக்கநேரும். பூமண்டலத்திலே இந்தியா வினுக்கு இணையாக எதனைப் பிணைக்கமுடியும்? மணியும் பொன்னும், மணமும் குணமும் அங்கே கொழித்துக் கிடக்கும்," என்று மர்ரே என்னும் ஆங்கில சரித்திர ஆசிரியர் கூறுகின்றார்.

உலகின் ஏனைய தேசங்களெல்லாம் நாகரிகம் என்பதை அறியாதிருந்த காலத்தினுக்கு முன்னதாகவே, நாகரிகத்தில் நனி சிறந்து விளங்கினர் பாரத புத்திரர், என்று ஆங்கில சஞ்சிகையொன்று அறிவியா நிற்கும். பழமையினும் பழமையான பாரத பூமியின் நாகரிகப் பண்பாட்டினுக்கும், சமய சமரசச் சிறப்பினுக்கும் எத்தேசத்தார் எதிர்காட்ட இயலும் என்று பிறநாட்டு நல்லறிஞர் பலரும் நாவார நவில்வர்.

ஆங்கில ஆட்சியின் காலத்திலே, மிடுக்கும் துடுக்கும் ததும்பிநின்ற அரசப் பிரதிநிதியான லார்டு கர்சன் என்பார் ஒருசமயம், விதியின்றி விளம்பியது யாதெனில் :- "ஆங்கிலேயராகிய நமது மூதாதையர், தமது உடலெங்

கும் அரிதாரம் பூசிக்கொண்டு, இலைதழைகளை ஆடையாகத் தரித்து, வனங்களிலே விலங்குகள்போல திரியா நின்ற காலத்தில், இந்தியாவிலே இணையிலா வல்லரசுகளும் பேரரசுகளும் பெருமைகொண்டு துலங்கின.”

இவற்றையெல்லாம் மனத்துட் கொண்டே பாரத பூமியின் புகழைப் பலபடப் பாடினார் நமது பாரதியார். அவரது பாடலொன்றை இங்கே தருவோம் :—

வண்மையிலே உளத்திண்மையிலே மனத்
தன்மையிலே மதிநுண்மையிலே
உண்மையிலே தவறாதபுலவர்
உணர்வினிலே உயர்தேசம் !

எனவே பல்லாண்டு பல்லாண்டாக நமது பாரத பூமி மாண்பும், பண்பும், சால்பும், இயல்பும் படைத்ததாம்.

2. நாட்டு வளம்

முன்னாளிலே நமது பூமி பாரதவர்ஷம், பரதகண்டம் என்றே அழைக்கப்பெற்று வந்தது. வடமேற்கே ஓடி உலவும் சிந்துமா நதியைக்கொண்டு இப்பூமியை இந்தியா என்று பாரசீகரும், கிரேக்கரும் அறியாது அழைக்கத் தொடங்கினர். ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலே இந்தியா என்னும் இப்பெயர் பிரபலம் எய்திற்று.

நமது தேசத்தின் உயர்வினை உலகினுக்கு அறிவிப்பதேபோல், வடபாரிசத்திலே பனிவரையாம் இமயமலை வானளாவி நிற்கும். அம்மலையினின்றும் ஓடிவரும் கங்கை, யமுனை, பிரமபுத்திரா, சிந்து ஆகிய நதிகள் வடநாடனைத்தையும் வளம்படுத்தும். அதனால் பூமாது பசும்போர்வை போர்த்து விளங்குவதேபோல், அப்பக்கமெல்லாம் பலவகையான பயிர்களும் செடி கொடிகளும் செழித்துத் தோன்றும்.

அப்பெருமலையின் வடமேற்குக் கோடியிலே கண்ணுக்கினிய காச்மீரநாடு உள்ளது. இயற்கை வனப்பெல்லாம் அங்கு ஒருங்கே திரண்டு ததும்பும். போக பூமி என்பதற்கு அக் காச்மீர நாடுசான்று பகரும். அது போன்ற இன்பமயமான சுகவாச ஸ்தலத்தை உலகில் வேறு எங்குமே காணமுடியாது. இன்றும் நாளையும் ஏனைய நாட்டினர் பலரும் வந்து, அங்கே தேங்கி, அதன் பெருமையினை அறிந்து, உள்ளம் பூரிப்பர்.

பாரத பூமியின் தென் பாகத்திலோ நருமதை தபதி என்னும் நதிகள் மேற்கு நோக்கி ஓடும். அவ்விரண்டினுக்கும் இப்பால், கோதாவரி, கிருஷ்ணை, துங்கபத்திரை முதலிய பெருநதிகள் பரந்து பாயும். தமிழகத்திலே வடபெண்ணை, தென்பெண்ணை, காவிரி, வைகை, பொருனை முதலிய வியன்நதிகள் விரிந்து செல்லும் ஆனதுபற்றி அப் பிரதேசங்களெல்லாம் செழித்துக் கொழிக்கும். அவை தவிர, நீர்வீழ்ச்சிகளும், ஏரிகளும் நிறைந்து தோன்றும்.

நீர், நிலவளங்கள் அங்ஙனம் நிரம்பி நிற்கவே, மக்களின் உணவுக்குரிய நவதானியங்களும், காய்கனி வகைகளும் எங்கும் மலிந்து கிடக்கும். உடைக்கு வேண்டிய பட்டும் பருத்தியும் ஏராளமாகப் பயிராகும். அவ் விளைபொருள்களின் துணைகொண்டு, தொழில்கள் பல நடந்து வந்தன. திரைகடல் வாணிபமும் நிறைந்து நின்றது.

அந்நாளிலே உரோமரும் கிரேக்கரும் எகிப்தியரும் சீனரும் நம்மிடமிருந்து மணியும் முத்தும், மிளகும் மயிலும், தந்தமும், துகிலும், ஆடையும் அணிகளும் விரும்பி வாங்கி விழுமிய சுகபோகம் துய்த்தனர். அதனால், அத்தேசங்களிலிருந்து ஏராளமான செல்வம் இங்கு வந்து

குவிந்தது. நமது தேசம் ஒரு செல்வக் களஞ்சியமாகவே விளங்கிற்று.

இனி, இங்கே பூமியின் கீழுள்ள கனிகளிலிருந்து தங்கமும் வெள்ளியும், வைரமும், இரத்தினமும் வேண்டுமளவு கிடைத்து வந்தன. அலைகடலிலே முத்தும், பவழமும் மிகுதியாக விளைந்து வந்தன. வர்த்தகமூலம் பிறநாடுகளிலிருந்து வந்த செல்வமும் கூடிக்கொள்ளவே, பொன்னும் மணியும் இங்கே கொழித்துக் கிடந்தன. வளம் நிறைந்த மண்வாசியினால் பாலும் தேனும் வழிந்தோடின.

நமது தேசத்தின் கல்விப் பெருக்கும் காவியச் செருக்கும், சமயச் சிறப்பும் நாகரிக நலமும் பேசப் போமோ! வான்மீக முனிவனும், வியாச பகவானும் ஈடிலா இதிகாசங்கள் இயற்றி உதவியுள்ளார். கம்பனும் காளிதாசனும் கருத்தை அள்ளும் கவிபாடி, இக்காசினிக்குக் களிப்பு ஊட்டியுள்ளர். திருவள்ளுவரும் திருமூலரும் தேனினுமினிய தமிழ்மொழியில், நான்மறையின் மெய்ப் பொருளை நானிலம் மெச்ச நவின்றுளார்.

அன்பும் அருளும், அகிம்சையும் ஆதரவுமே மானிட கோடிகளுக்கு நற்றுணைபுரியும் என்று உபநிஷதங்கள் கோஷிக்கும். அந்நல்லுரையை நன்கு விளக்கி, நரர் உய்யுமாறு நற்போதம் புரிந்தார் புத்தர்பிரான். அப்பெருமானது அருள்மொழியை ஆதாரமாகக்கொண்டே, அசோக மகாராஜன் அவனியெங்கும் தூதுவரை அனுப்பி, அன்புக் கொடி தூக்கி அறப்பயிர் விளைத்தான்.

சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகிய மாபுருஷர் மகத்தான தருமம் பேசி, இம்மேதினிக்கு நல்வழி காட்டியுள்ளர். நாயன்மார்களும் ஆழ்வார்களும் சிந்தைக்கும் செவிக்கும் இனிய, எண்ணரிய பாசுரங்கள் பாடி, இனிய

ஞானம் ஊட்டியுள்ளார். குருநானக், இராமதாஸ், கபீர் தாஸ் மீராபாய் முதலிய ஞானியரோ, கடவுள் ஒன்றே யென்று சமரசம் பேசியுள்ளர். “அன்பே சிவம், சிவமே அன்பு” என்று தமிழ் மறைகள் முழக்கம் செய்யும்.

இங்ஙனம் நமது மூதாதையர் இந்த உலகம் போற்றும் உத்தமராய், அவனி புகழும் அறிவுடையோராய், காசினி களிக்கும் ஞானியராய், நாமகள் நயக்கும் நாவலராய் நன்கு விளங்கா நின்றனர். நானு விதமான மொழியும் மதமும், பிரிவும் பாகுபாடும் பாரதமக்களிடையே காணப்படலாம். உடலின் நிறமும் உடையின் கோலமும் வேறுபடலாம்.

ஆயினும், உள்ளத்திலோ ‘எல்லோரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லோரும் பாரதமக்கள்’, என்னும் உணர்ச்சியே ஊடுருவி நிற்கும். வடக்கே இமயம் முதல் தெற்கே குமரிவரையில் உள்ள மக்கள் அனைவரும் மாண்புமிக்கோர் என்பதில் ஐயமில்லை. சோதரத்தன்மையும் சமரசப் பான்மையுமே நம்மவரின் உயிர்நாடிகளாம்.

நமது நாட்டிலே பலவாறுன இயற்கை அமைப்பை நோக்கலாம். தட்பவெட்ப நிலையைப் பார்க்கலாம். பரந்த சமவெளியையும், ஓங்கிய பீடபூமியையும் காணலாம். தொட்டதெல்லாம் தங்கமாகக்கூடிய ஒப்பிலா மண் வாசியை நோக்கி மகிழலாம். தேசத்தின் அமைப்பையும், பரப்பையும், விரிவையும் விளைவையும் வாழ்வையும் போக்கையும் மதிக்கையில் பாரத பூமியை ஒரு குட்டி உலகம் என்றே கூறவேண்டும்.

பாரதியாரின் பாடல் எடுத்துக்காட்டி இந்த அதிகாரத்தை முடிப்போம்:—

வடக்கில் இமயமலை பாப்பா,—தெற்கில்
வாழும் குமரிமுனை பாப்பா,
கிடக்கும் பெரியகடல் கண்டாய்—இதன்
கிழக்கிலும் மேற்கிலும் பாப்பா.
தமிழ்த்திருநாடு தன்னைப்பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா,
அமிழ்தில் இனிய தடிபாப்பா—நம்
ஆன்றோர்கள் தேசமடி பாப்பா.

3. உலக பண்டசாலை

பொன்விளையும் பூமி என்பதே நமது பாரத பூமியின் சிறப்புப் பெயராம். இப்பூமியின் மிதமான சீதோஷ்ண நிலைமை, நீர்வள நிலவளங்கள், எண்ணிலா தாதுப் பொருள்கள், விதவிதமான கைத்தொழில்கள், எங்கும் பொங்கிப் பரந்த வாணிகம் இவையே செல்வச் சிறப் பினுக்குக் காரணங்கள். ஆயினும் அதுபற்றி, உலகின் பண்டக சாலையாகவே இத்தேசம் உயர்ந்து நின்றது.

ஜெர்மன் ஆசிரியர் ஒருவர் கூறும் வண்ணம், ஆரிய பூமியின் வர்த்தகத்தில் உதிர்ந்துபோன பொருள்களைக் கொண்டே ஏனைய தேசங்கள் பிழைத்தன. உரோமாபுரி யின் அரசகுமாரிகள் டாக்கா ரவைசல்லாவை எடைக்கு எடை பொன் கொடுத்து வாங்கினர். ஐரோப்பிய அரசர்களோ தங்களது ஆடம்பரத்துக்கு ஏற்ற அரிய சரக்குகள் அனைத்தையும் இந்தியாவிலிருந்தே பெற்றுக் களித்தனர்.

சர்வ விஷயக் களஞ்சியம் என்னும் நூல் பின்வரு மாறு பகரும்:—“ கைத்தொழில் திறமையிலே பாரத மக்கள் பெருங் கீர்த்தி வாய்ந்தோர். உரோமாபுரி வல்லரசாக விளங்கிய காலத்தில், இந்தியாவின் துணி

மணிகளே உரோமரின் அரண்மனைகளை அலங்கரியா நின்றன. டாக்கா மஸ்லின் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பெருமை பெற்றதாம். வேலைப்பாடமைந்த விசித்திரப் பொருள்கள், கை வேலைத்திறன்காட்டும் மரச்சாமான்கள், பல வகையான பட்டாக் கத்திகள், பளபளப்பான பீங்கான் பாத்திரங்கள் ஆகிய இவையெல்லாம் இந்தியாவில்தான் கிடைக்கும்.''

சுருங்கச் சொன்னால், புராதன உலகின் நடு நாயகமான வர்த்தகபூமி பாரதபூமியே. இத்தேசத்தின் கப்பல்கள் அவனியெங்கும் சரக்குகளைக் கொண்டுபோய்க் குவித்தன. தரை மார்க்கமாக, பொதிமாடுகள் எண்ணிறந்த பண்டங்களைச் சுமந்து சென்று, அயலகம் எங்கும் கொட்டின. ஆயிரக்கணக்கான பொதி எருதுகள் வடமேற்கு எல்லைவழியே மேற்கேயுள்ள ஆசிய தேசங்கள் அனைத்திலும் புகுந்து வாணிபம் நடத்தின.

மகா அலெக்சாந்தர்

அன்னியர் புகலும் வண்ணம், பொன்காய்க்கும் மரங்கள் இங்கு எங்கும் நிரம்பி நின்றன. அம்மரங்களைக் குலுக்கிப் பொன்னை மூட்டை மூட்டையாகக் கட்டிக்கொண்டுபோக விரும்பியே, ஆதிமுதல் அன்னியர் இங்கே வரலாயினர். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே மகா அலெக்சாந்தர் என்

பான் இப்பூமியின் மீதுபடை கொண்டு வந்தான். இந்தியாவின் செல்வச் சிறப்பே அவனைத் தூண்டியது. "பொன்னுடு போகின்ருேம்" என்று பெருமை பேசிக் கொண்டே அவனது படைவீரர் ஆங்கிருந்து கிளம்பினர்.

முகமமது கஜினி எனபான முனனம பனமுறை இத்தேசத்தின்மீது படைகொண்டு வந்தான். ஏன்? தேசத்தின் செழுமையும் கொழுமையுமே அம்முகம்மதின் சிந்தையை மயக்கி, மையலை எழுப்பின. கன்னேசி நாட்டின் செல்வப் பெருக்கினைக் கண்டதும், "பொன்னுடும் இந்நாட்டினுக்கு ஈடாமோ," என்று கூறி அம்முகம் மது மனம் பூரித்தான்.

வடமதுரையில் உள்ள கண்ணபிரானது ஆலயத்தின் அழகையும் வனப்பையும் நோக்கியவுடனே, "ஆண்டு தோறும் கோடிகோடியாக பொன்காசுகளை வாரி இறைத்தாலும், இருநூறு ஆண்டினுக்குள் இத்தகையக் கட்டடத்தை கட்டிமுடித்தல் இயலாத காரியம்," என்றும் அவன் எழுதி வைத்துள்ளான்.

நமது சரக்குகளெல்லாம் உலகெங்கும் பரந்தமை ஒருபுறமிருக்க, நம்மவரும் உலகின் பலபாகங்களுக்கும் செல்லாநின்றனர். இந்நாளிலே பூமண்டலத்தில் எங்கே பார்த்தாலும் ஐரோப்பியர்களே ஆண்மை செலுத்துவதாகத் தோன்றும். வானவீதியில் உள்ள கோள்களில் குடியேற முடியுமாயின், அங்குச் சென்று ஆட்சி புரியவும், அல்லது வாணிபம் செய்யவும் அம்மக்கள் சிறிதும் பின்வாங்கார்.

அத்தகைய தாளாண்மை நமது மூதாதையரிடம் இருந்திராமலில்லை. ஆனல், இருவரின் குடியேற்றத்துக்கும் வேற்றுமை மிக உண்டு. சென்ற இடமெல்லாம்

நம்மவர் இன்சொல் விதைத்தனர்! வாய்மை எனும் எரு இட்டனர்; அன்புநீர் பாய்ச்சினர்; அறம் எனும் கனி கொடுத்தனர்; ஆங்காங்குள்ள அனைவருக்கும் கதிமோட்சம் தேடித்தந்தனர்.

பிரக்ஷ்பே என்பார் எகிப்தியக் கல்விமான்; ஆதி உலக சரிதத்தை ஊடுருவி உணர்ந்தவர். "எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன்னம் இந்திய மக்கள் எகிப்தில் வந்து குடியேறினர். உடனே இந்தியரின் பரந்த கலைஞானமும், விரிந்த நாகரிகமும் எகிப்தில் தோன்றி வளரலாயின," என்று அவர் சொல்லி யிருக்கிறார். ஆங்குள்ள நீலநதிக் கரையில் நம்மவரின் குடியேற்றம் முளைத்துக் கிளைத்தது.

போகாக் என்பவர் நமது பூமிக்கும் பிறதேசத்தினுக்கும் இருந்துவந்த ஆதிகாலத் தொடர்பினை நன்கு ஆராய்ந்து அறிந்தவர். "பாரதமக்கள் மிக்க நுண்ணறிவும் தாளாண்மையும் வாய்ந்த புருஷர்கள். அன்னார் எகிப்து, அபிசீனியா எனும் தேசங்களில் வல்லரசுகண்டு வாழ்ந்தனர். அப்பால் கிரீஸ் தேசத்திலும் அதனைச் சுற்றியுள்ள தீவுகளிலும் தமது நாகரிகத்தைப் பரப்பி நன்மை புரிந்த தன்மையர்" என்று கூறுகிறார்.

"துருக்கி ஸ்தானம் என்பது ஆசியாவின் வடமேற்கில் உள்ள ஒரு பெரிய நாடாகும். அங்கிருந்த மக்கள் ஆதியில் துரானியர் என்று அழைக்கப்பெற்றனர். அன்னவரின் மூதாதை பாரத புத்திரனாகிய துர்வசன் என்பவனே. இவனும் இவன் மக்களும் பாரதத்தாயகம் துறந்து, துருக்கி ஸ்தானம் புகுந்து, அங்கே தமது வமிசத்தைப் பரப்பி வாழலாயினர். அது காரணமாகவே அப்பிரதேசம் துருக்கி ஸ்தானம் எனப் பெயர் பெற்றது" என்பதாக மாக்ஸ் முல்லர் மொழிவார்.

பூமண்டலத்திலே நம்மவர் புகாத இடம் இல்லை. போதம் புரியாத பிரதேசம் கிடையாது. எங்கும் சென்று இனிமை புரிதலே அவர்களின் கோட்பாடாகும். எட்டுத் திக்கிலும் அன்னவர் பரவி, பெருமையுடன் குலவினர் என்பது சரித்திர உண்மையாம். இது குறித்து நமது பாரதியார் பாடியிருப்பது வருமாறு :—

வெட்டுக்கனிகள் செய்து தங்க முதலாம்
வேறுபலபொருளும் குடைந்து எடுத்தோம்
எட்டுத்திசைகளிலும் சென்று இவைவிற்றே
எண்ணும் பொருளனைத்தும் கொண்டுவந்தோம்
பட்டினில் ஆடையும் பஞ்சில் உடையும்
பண்ணி மலைகளென வீதி குவித்தோம்
கட்டித்திரவியங்கள் கொண்டு வருவார்
காசினி வணிகருக்கு அவைகொடுத்தோம்

4. வல்லரசர்

பாரெங்கும் நம்மவரும் நமது சரக்குகளும் பெருகி வரவே, அயலகத்தார் அனைவருக்கும் நமது தேசத்தின் மீது தணியாக் காதல் பிறந்தது. பிறக்கவே, இங்கு வந்து, இந்தியாவைக் கண்டு, களிப்படையவும் காதல் மிகுந்தது. ஆதியில் ஒரு சிலர் அங்ஙனமே வந்து போயினர் மகிழ்ச்சியுடன்.

வேறு சிலருக்கோ இப்பூமியின் வளமையும் செழுமையும் கேட்டு விபரீத எண்ணம் உதித்தது. உதிக்கவே, இத்தேசத்தின்மீது படையுடன் பாய்ந்து, பராக்கிரமம் விளக்கவே பேராசை பிடித்து ஆட்டியது. அத்தகைய புருஷரில் ஒருவன் மகா அலெக்சாந்தர் எனப்படுவான். அவன் கிரேக்க தேசக் கொற்றவன். உலகெலாம் ஒரு குடைக்கீழ் ஆள விரும்பியவன்.

ஏறக்குறைய 3,000 ஆண்டுகளுக்கு முன்னம் அந்த அலெக்சாந்தர் ஒரு பெரும்படையுடன் புறப்பட்டான்; நமது தேசத்திற்குக்கு மேற்கேயுள்ள பாரசீக நாட்டை வென்றான்; இப்போது ஆப்கானிஸ்தானம் எனப்படும் காந்தார நாட்டிலும் தலை காட்டினன்; ஆங்கிருந்த மசகம் என்னும் பிரதேசத்தில் புகுந்தான். அப்பிரதேச மக்களை மசகர் என்னலாம்.

அம்மக்களின் தலைமை பூண்ட அரசியின் பெயர் கிளியோபிஸ் என்பதாம். தனது கோட்டைக்குள் இருந்த வண்ணம் அவள் போர் தொடுத்தாள்; மகா அலெக்சாந்தருக்கு மண்டையிலே காயம் உண்டு பண்ணினள்; முடிவிலே விதிவலியால் மாண்டு போனள். ஆயினும் அவளது வீரர் ஏழாயிரவர் அக்கிரேக்க வேந்தனுக்குப் பணியவில்லை; தொடர்ந்து போரை நெடுக நடத்தி வந்தனர்.

ஒன்பது நாள் சண்டை நடந்தது. மசக வீரரின் ஆற்றல் கண்டு, அலெக்சாந்தர் மனம் மருகினன்; முடிவிலே தனது இயந்திர சாதனம் கொண்டும் வஞ்சனை வழியிலும் அவ்வீரர் அனைவரையும் மாய்த்தான். பின்னரே அவன் சிந்து மாநதியின் உபநதியான விதஸ்தா என்பதை நண்ணமுடிந்தது. அந்நதியின் மேற்குப் பக்கத்தில் அவன் படைகள் பாசறை கொண்டன. ஆங்கிருந்த இந்தியச் சிற்றரசரில் சிலர் அவருடன் சேர்ந்து கொண்டனர்.

அவ் விதஸ்தா நதியின் கீழ்ப்புறம், காவலனாக இருந்தவன் புருஷோத்தமன் என்பவன். இவன் ஒரு படை திரட்டி அவனை எதிர்த்தான். இந்தியரின் வீராவேசம் கண்டு அவனுக்கு உள்ளத்திலே உதைப்பு உண்டாயிற்று.

அத்தறுவாயில், புருஷோத்தமன் படுகாயமடைந்தான். அப்போதும் அவனுக்கு முடிவணங்க இவனுக்கு மனமில்லை. இவனது வீரம் அவனுக்கு பரவசம் ஊட்டியது. அதன் விளைவாக அவன் இவனது நட்பை நாடினன். இருவரும் மிக்க நேசர் ஆயினர்.

விதஸ்நா நதியைக் கடந்து கிழக்கே வந்து மேலும் பல நாடு பிடிக்க அவன் கருதினன். அவனது தளகர்த்தரும் வீரரும் அதற்கு இசையவில்லை. அதனல் அந்நதிக்கு மேற்கே ஜெயித்துப் பிடித்த நாடுகளுக்கு ஒருவனைத் தலைவனுக ஆக்கி, வந்த வழியே அவன் தன் சொந்த ஊருக்குத் திரும்பினன். இதனைமகா அலெக்சாந்தரின் படையெடுப்பு என்று ஆங்கிலேயர் பிரமாதமாகப் பேசுவர்.

நாட்கள் பல சென்றதும் சந்திரகுப்தன் என்னும் வீரமகன் மகத நாட்டிலே தோன்றினன்; சாணக்கியன் என்னும் மதி அமைச்சனது துணைகொண்டான்; அந்நியரான கிரேக்கரை இப்பூமியிலே அரசாள விடுவதா, என்று ஆர்ப்பரித்தான்; உடனே கிரேக்கப் படை வெள்ளத்தை இப்பாரத பூமிக்கு அப்பால் புரட்டி எறிந்தான்; அப்பால் மகத தேசத்தின் அதிபதியாகி மவுரிய வல்லரசு என்பதை நிலைநாட்டினன்.

அவ்வல்லரசு ஓங்கி நின்ற வரையில், இப்பூமியிலே அன்னியர் எவரும் படைகொண்டு புகத் துணியவில்லை; அச்சந்திரகுப்தனுக்குப் பின் வந்தவனே அசோக மகாராஜன்; புத்தர்பிரானது பெரும்போதம் கொண்டு அந்த அசோகன் எங்கும் அன்புக் கொடி தூக்கினன்; அயல் நாடுகளுக்குத் தூதுவரைப் போக்கி, அரிய போதமும் பரப்பினன்; எங்கும் பெரும் புகழ் பெற்றன்.



அசோகர்

அவ்வல்லரசு நிலைகுலைந்த பின்பு சாகர் என்னும் அன்னியர் இப்பூமியின் வடமேற்குப் பக்கத்திலே புகுந்து ஆங்காங்கு குட்டி அரசுகள் கொண்டனர்; அதுகண்டு தேசமக்கள் சீற்றம் மிகுந்தனர்; பேரரசு ஒன்று தோன்றுவதை எதிர் நோக்கி இருந்தனர். ஆண்டுகள் பல பறந்தன. விக்ரமாதித்தன் என்னும் வல்லரசன் அவந்தி நாட்டில் உஜ்ஜியினி நகரில் தோன்றினான்.

அன்னியரான சாகரின் தலையெடுப்புக்கண்டு அவ் விக்கிர மார்க்கன் வீறுடன் கிளம்பினான்; வியன் படை யொன்று திரட்டி, அச்சாகரை போர் முனையிலே முறிய டித்தான்; இப்பூமியினின்றும் அவர்களை விரட்டி

ஓட்டினான். அதுபற்றியே விக்கிரம சகாப்தம் என்பது ஏற்பட்டது. சாகாரி விக்கிரமாதித்தன் என்றும் அவனுக்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டாயிற்று.

மேலும் ஆண்டுகள் பல சென்றன. உஜ்ஜயினி வேந்தன் விக்கிரமாதித்தனை அடுத்து வல்லரசர் தோன்றவில்லை. ஆதலினால் அன்று முறியுண்டு முதுகுகாட்டி ஓடிய சாகர் வம்சத்தினர் மீண்டும் நம் தேசத்தின் வடமேற்கே தலைநீட்டிக் கோலாகலம் கொண்டனர். அச்சமயம் குப்தகுல வல்லரசு முளைத்தது. அக்குலத்தின் திலகமான சமுத்திர குப்தன் என்பான் அந்த அன்னியரை எல்லாம் அடித்து அகற்றினான்; ஆண்மை காட்டி அரசு புரிந்தான்; இத்தேசத்தினுக்குப் புத்துயிர் ஊட்டினான். காஞ்சி மாநகரம் வரையில் அவனது வெற்றிக்கொடி பறந்தது.

உலகிலே எந்த வல்லரசும் சுமார் இருநூறு ஆண்டே எடுப்பாக இருக்கும்; அப்பால் குலைந்துபோம். அங்ஙனமே குப்த வல்லரசும் மங்கிய பின் ஹூணர் என்னும் அன்னியர் வடமேற்குப் பக்கத்தில் படையுடன் தோன்றி, நம் பாரத மக்களுக்கு அல்லல் பல இழைத்து வந்தனர். பல்லாண்டுகள் பறந்த பின்னர் ஹர்ஷ மகாராஜன் என்னும் பேரரசன் தோன்றினான்; பன்முறை அந்த ஹூணருடன் கடும்போர் தொடுத்தான்; முடிவில் அவர்களை அடக்கி ஒடுக்கி இத்தேசமக்களுக்கு ஆறுதல் அளித்தான். இவ்வாறு அன்னியரின் படையெடுப்பையும் அட்டகாசத்தையும் அவ்வப்போது நமது வல்லரசர் தொலைத்தும் ஒழித்தும் வந்தனர்.

5. வீர எழுச்சி

முன்னம் சந்திரகுப்தன், விக்கிரமார்க்கன் முதலிய வல்லரசர் தோன்றி, அன்னியரை இப் பூமியிலிருந்து அடித்து விரட்டினர். ஹர்ஷ மகாராஜனுக்குப் பின் பேரரசர் இப் பூமியில் பிறக்கவில்லை. என்றாலும், இராஜ புத்திரர் என்னும் வீர மரபார் எழுந்து, இத்தேசத்தின் மானத்தைக் காக்க முனைந்தனர். கஜனி முகம்மதை ஆதியில் வழிமறித்த வேந்தன் ஜெயபாலன் என்னும் இராஜபுத்திரனே யாவான்.

அம் மரபின் திலகமான பிருதிவிராஜன் வீரமுடிவு எய்திய பின்னரே டில்லியிலே முகம்மதிய அரசு முளைத்தது; ஓர் இருநூறு வருடகாலம் அந்த அரசு இங்கே ஆட்சி கொண்டது; சிறிது சிறிதாக மண் சேர்த்து வந்து தனது மதத்தையும் இங்கே வாள்முனையில் பரப்பி வந்தது. மண்ணையும் மதத்தையும் ஒருங்கே இழக்க யாவரே ஒருப்படுவர்? வீர இராஜபுத்திரர் விருப்புடன் வாளுருவிக் கிளம்பினர்.

அதனால் அந்த அரசினுக்கும் இராஜபுத்திரருக்கும் நெடுங்காலம் ஓயாமல் ஒழியாமல் சண்டைகள் நடந்து வந்தன. சிற்சில சமயங்களில் அந்த அரசு கலகலக்க நேர்ந்தது. நேரவே அச்சமும் திகிலும் ஒருங்கே கொண்டது. அதன் பலனாக மதத்தைப் பரப்பும் முனைப்பு குறையலாயிற்று. ஆனாலும் மண்ணாசை அந்த அரசை விட்டகலவில்லை.

அந்த அரசின் அடிபிடி கட்டாயத்தினால் மதங்கெட்ட ஒருவன் அந்த அரசிலே வேலைக்கு அமர்ந்தான்; அரசனது அந்தரங்க நட்பாளன் ஆயினும் சமயம் பார்த்து நின்ற அக்குலமகன் தனது மதி வலியால் அரியணையில் அமர்ந்

தான். உடனே பெரும் படையுடன் எழுந்து அந்த அரசின் பெருமக்களனைவரையும் வாளுக்கு இரையாக்கினான். அந்த அரசினால் இடியுண்ட ஆலயங்களைப் புதுப்பித்தான்; அந்த அரசின் தொழுகைத்தலங்களையெல்லாம் பெயர்த்து எறிந்தான்.

மதங் கெட்டதனால் அக்குலமகன் குஸ்ருகான் எனப் பட்டான். அவனது மதிநலமும் புயவலியும் கண்டு அன்னிய முகம்மதியர் அனைவருக்கும் நடுக்கம் உண்டாயிற்று. அது சமயம் பாரத புத்திரரில் பலரும் அவனுக்குத் துணை புரியாதிருந்தனர் ஆயினும் இராஜபுத்திர மரபாரின் பக்கபலம் கிட்டுமுன்னம், அவனை அன்னியர் வஞ்சனை வழியில் வீழ்த்தி விட்டனர். ஆதலின் குஸ்ருவின் முயற்சி பலிக்காது போயிற்று.

முகம்மதியருக்குள்ளே பலவாறான பிரிவினர் உண்டு. அப்பிரிவினர் தம்முள் ஒற்றுமை கொள்ளாது, மாறுபட்டுக் கிடந்தனர். அதன் முடிவாக அந்த அரசினுக்குள் அடிக்கடி உட்கலகங்கள் ஓங்கி நின்றன. இதனை அறிந்து அப்பிரிவினரில் ஒருவரான முகலாயர் என்போர் இங்கே அரசு கொள்ள முற்பட்டனர். அவர்களின் தலைவர் பாபர் எனப்படுவான். இவன் டில்லியிலே சிம்மாசனம் ஏறினான். அது அறிந்து இராஜபுத்திரர் திரண்டு எழுந்தனர்.

அப்போது அந்த இராஜபுத்திரரின் முதல் தலைவன் சங்கரசிம்மன் எனப்படுவான். இப்போது உதயபுரி என வழங்கும் மேவார் நாட்டின் மன்னவன் அச் சங்கர சிம்மன். இராஜபுத்திரர் என்போர் அனைவரும் அச்சிம்மனைச் சார்ந்து நின்றனர். நிற்கவே பெருஞ்சேனையுடன் அவன் புறப்பட்டு அப் பாபரை எதிர்க்கலானான். இருவருக்கும் இடையே மிக உக்கிரமமான போராட்டம்

மூண்டது. பாபரோ போர் முகத்தே அடியுண்டு வலி யழிந்து நின்றான்.

அத் தறுவாயில் "வீர வேந்தே ! டில்லியிலிருந்து அரசாள எனக்கு அனுமதி தருவாயாக. ஆண்டுதோறும் உனக்கு நான் கப்பம் கட்டி வாழ்ந்து வருவேன். அல்லாமலும் டில்லிக்குத் தெற்கேயுள்ள நாடுகளின்மீது பாய்வதில்லை என்றும் வாக்களிப்பேன். இதற்கு நீ தயைகூர்ந்து மனமிசைதல் வேண்டும்" என்று அப் பாபர் தூது போக்கினான். சங்கரசிம்மன் அதற்குச் சம்மதி தரவில்லை.

பின்பு பாபர் என்பான் தனது படையினருக்கு மத வெறி ஊட்டினான்; வீர வைராக்கியமும் புகட்டினான்; சண்டையிலே இரண்டிலொன்று கண்டுவிடுவோம் என்றும் எழுந்தான்; எழவே, அந்த இருவருக்கும் மீண்டும் கடும்போர் மூண்டது. பாரது படைவீரர் வலியிழந்து பதைபதைத்தனர். வெற்றி கிட்டாதென வெலவெலத் தனர்.

சங்கரசிம்மன் ஜெயக்கொடி நாட்டும் தருணம் சிம்மனது முன்னணியில் நின்ற தளகர்த்தனே காசாசைமிகுந்து தேச பக்தியைக் கைவிட்டான். பாபரின் பக்கம் போய்ச் சேர்ந்துகொண்டான். பல சொல்லி என்ன ? வெற்றி முரசு கொட்டவேண்டிய சங்கரசிம்மன் தனது படைகளுடன் பின் வாங்க நேர்ந்தது. நேரவே ஆண்டவன் அல்லாவுக்கு ஆயிரம் சலாம் செய்தான் அப் பாபர். அச்சம் என்பதை மறந்து 1526-ம் ஆண்டு டில்லி அரியணையில் அமர்ந்தான்.

போர்க்களத்திலிருந்து பின்வாங்கிய சங்கரசிம்மனோ தனது தலைநகரான சித்தூருக்குத் திரும்பவில்லை ; 'அன்னிய அரசரை டில்லியிலிருந்து ஓட்டும்வரையில் அச் சித்தூருக் குத் திரும்புவதில்லை' என்று சபதம் கொண்டான்; பாரத

புத்திரரின் எண்ணத்தை ஈடேற்ருத ஒருவன், மன்னவன் என்று தன்னை மதிப்பதோ என்று மாழ்கி நின்ருன்; பாபரின்மீது பாய வகை துறைகளையெல்லாம் வகுத்தும் தொகுத்தும் வந்தான்.

முன்னம் நடந்த போரிலே அச்சிம்மனுக்கு உடலெங்கும் எண்பது காயங்கள் பட்டிருந்தன. அக் காயங்களை ஆற்ற அவனது உடலிலிருந்து ஐந்துசேர் எடையுள்ள எலும்புகளை எடுத்தெறியவும் நேர்ந்தது; என்ருலும் அச் சங்கரசிம்மன் தனது பெரும்புண்களை ஒரு பொருட்படுத்தவில்லை. உடல் நோயும் மனநோயும் மிஞ்சிவிடவே, ஆறு தினங்களுக்கெல்லாம் அவ் வீரவேந்தன் மேலுலகம் போய்விட்டான். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே என்று தேச மக்கள் துடிதுடித்தனர்.

பாபர் அத்துடிப்பினை அறிந்து, அறிவு மிகக் கொண்டான்; தேச மக்களின் மனத்தைக் கவரும் வகையில் ஆட்சியை நடத்திவர முயலா நின்ருன். அல்லும் பகலும் பாரத மக்களை அணைத்து ஆதரிப்பதே அவன் கருத்தாயிற்று. அது பற்றி அவனது அரசுரிமைக்கு மிக்க ஆபத்து நேரவில்லை. கண்மூடும் சமயத்தில் தனது மைந்தனையும் அத்துறையிலே கவனம் செலுத்துமாறு பணித்துச் சென்ருன்.

பாபரின் மைந்தன் உமாயூன் சின்னுள் டில்லியிலிருந்து அரசு செலுத்தி வந்தான். அப்போது ஷெர்ஷா என்னும் வீரமகன் கிளம்பி, அம்மைந்தனை அகற்றி டில்லியரசைக் கவர்ந்து கொண்டான். சுதந்திரம் இழந்து நின்ற தேசமக்களின் மனக்கொதிப்பை மதித்தே அவன் நடக்க நேர்ந்தது. அது பற்றி அவன் மிக மிக நேர்மையாக ஆட்சி புரிந்து, மக்கள் மனம் மகிழுமாறு பற்பல நன்மைகள் புரிந்து வந்தான்.

ஷேர்ஷாவுக்குப்பின் வந்த வேந்தர் அவ்வளவு திறமைசாலிகளாக இருக்கவில்லை. ஆயினும், ஹேமந்தன் என்னும் இந்து அமைச்சன் இத்தேச நலத்தையே மனத்துள் கொண்டு அற்புதமாக அரசியலை நடத்தா நிற்கையில், ஆண்மையும் திண்மையும் வாய்ந்த தேசப் பெருமக்கள் அவனுக்கு உற்றதுணை புரிந்து வந்தனர்.

பெயரளவில் அன்னியனொருவன் அரியணையில் அமர்ந்திருந்தாலும், தகுதியும் திறமையும் வாய்ந்த தேச மக்களே பொறுப்பான பதவிகளையெல்லாம் வகித்து நின்றனர். அது கண்டு அன்னியருக்கு ஆத்திரமும் அசூயையும் பிறந்தன. ஆனதுபற்றி அரசிலே குழப்பம் உண்டாயிற்று. அது சமயம் பாபரின் மைந்தனை உமாயூன் மீண்டும் டில்லியிலே தோன்றி அரசபதவியை அடையலானன்.

அக்பர்

ஆனாலும் அம் மைந்தன் சிறிது நாளைக்கெல்லாம் இம் மண்ணைத் துறந்து விண்ணுலகம் போயினன் உடனே அவன் புதல்வன் அக்பர் என்பான் 1556-ஆம் ஆண்டில் டில்லி வேந்தனைக ஆயினன். மறுபடி

யும் அன்னியர் அரசாளத் தொடங்கி விட்டனரே என்று ஹிந்துக்கள் கொதிப்பு மிகுந்தனர். ஹேமந்தன் என்னும் மதி அமைச்சனும் மண்டியெழுந்து பெரும்படையும் திரட்டினன்.

அத்திரண்ட சேனையுடன் ஹேமந்தன் டில்லி நோக்கிச் செல்லவே அந்நகரம் அடிபணிந்தது. பின்பு ஆக்ரா நகரையும் அவன் கைப்பற்றிக் கொண்டான். கொண்டதும் டில்லியிலிருந்து விக்கிரமஜித் என்னும் பெயருடன் அவன் பரிபாலனம் பண்ணிவர, இத்தேச மக்கள் ஆறுதலும் தேறுதலும் அடைந்தனர். முகலாய ருக்கோ மனக்கலக்கம் மிகுந்தது. இப்பூமியை விட்டு ஆப்கானிஸ்தானத்துக்குப்போய் விடுவோம் என்று அக்பரிடம் அவர்கள் ஓதினர்; அங்ஙனமே பயணமாக மூட்டை முடிச்சும் கட்டினர்.

அக்பர் அதற்கு ஒப்பவில்லை; போர் முறுக்குவோம் அதில் வெற்றி கிட்டாவிடின், வீரமுடன் உயிர் துறப்போம் என்றான். அதன்மேல், முகலாய தளகர்த்தருக்கு மனத்துணிவு பிறந்தது. உடனே முகலாயப் படையும் கிளம்பியது. பாணிபதம் என்னும் நகரிலே இரு திறத்துச் சேனைகளும் சந்தித்தன. போரோ கன கடுமையாக இருந்தது.

அச்சண்டையிலே முகலாயப் படைவரிசைகள் சிதைந்தன. தளகர்த்தரிலும் பலர் ஆவி இழந்தனர். ஹேமந்தனது பேராண்மையும் போர் ஆற்றலும் கேட்டு அக்பர் வியந்தான்; அந்த ஹேமந்தனை அணைத்து ஆதரிக்கவும் ஆசை கொண்டான். "படை முகத்திலே ஒப்பாரி ஏது?" என்று ஹேமந்தன் கர்ஜித்தான். உடனே அவன் வீரர் சிங்கநாதம் செய்து போர் புரிந்

தனர். அதன் நடுவே, விதிவலியால் ஹேமந்தன் படுகாய மடைந்து பாரில் வீழ்ந்தான். அவ்வேளை அவனை வதைத்து விட முகலாய தளகர்த்தர் முனைந்தனர். அக்பர் அதற்கு இசையவில்லை.

வீராதி வீரனை ஹேமந்தனை வதைத்தால், தேச மக்களின் கொதிப்பு கொழுந்து விடும்: இங்கிருந்து அரசாளவும் இயலாது என்று அக்பர் கருதி, அவனை அன்புடன் அழைத்துவந்து, அவன் காயங்களையெல்லாம் கட்டி ஆற்றினான். பகையை வெல்ல முடியவில்லையே என்னும் மனநோயினால் அப்பெரு வீரன் மாண்டு போயினான். தேசமக்களைத் தழுவி நின்று தண்ணளி காட்டி அரசை நடத்தினால்தான் அரியணை நிலைக்கும் என்று அக்பர் அறிவு கொண்டான்.

அதற்கிணங்க, அந்த அக்பர் இத் தேசமக்களான ஹிந்துக்களுடன் உறவு கொள்ளும் உபாயங்களை யெல்லாம் மேற்கொண்டான்; அன்னிய அரசுக்கு வைரிகளாக விளங்கும் இராஜபுத்திர மன்னருடன் விவாக நட்புக் கொண்டான்; பேரறிவும் பேராண்மையும் படைத்த ஹிந்து மக்களை அரசியலிலே பெரும் பதவிகளில் அமர்த்தினான்; சேனையிலே சிறந்த பதவிகளையெல்லாம் இராஜப்புத்திரருக்கு அளித்தான்; தேசமக்களுக்கு நன்மை புரியவேண்டி ஆவன அனைத்தும் செய்தான்.

முகம்மதியருக்கும் ஹிந்துக்களுக்கும் இடையே சமரசம் உண்டாகுமாறும் அந்த அக்பர் வகை தேடினான். புதிய சமரச மதமொன்று காணவும் முற்பட்டான். மதங்கெடாத தேசமக்களுக்கு விதித்திருந்த தலைவரியைப் போக்கினான். தன் இனத்தார், தன் மரபார் என்று அவன் சலுகை காட்டவில்லை; ஹிந்துக்களையும் முகம்மதியரையும் சரிசமமாகவே நடத்தி வந்தான்.

அதனால் அவனை மகா அக்பர் என்றனர் பலரும். அவனிடம் மக்கள் விசுவாசம் காட்டினர்.

இராஜபுத்திர வீரரிலும் வேந்தரிலும் பலர் அந்த அக்பருடன் நேசமாக வாழத் தலைப்பட்டனர். ஆயினும் மேவார் நாட்டின் மன்னவனை பிரதாப சிம்மன் என்பான் இத் தேசத்திலே அன்னியன் அரசு கொள்வதோ என்று ஆண்மையுடன் தோள்தட்டி எழுந்தான். அக்பருடன் 27 வருடகாலம் இணையிலாச் சமர் செய்து வந்தான். நாடு நகரம் அனைத்தையும் இழந்து, காட்டிலே வசிக்க நேர்ந்தாலும், அக்பருக்கு அடிவணங்க அவனுக்கு மனம் வரவில்லை. அக்பரை "மகா அக்பர் என்று வாயினால் சொன்னால் போதும் சண்டை ஓயும்" என்று அக்பரின் தூதுவர் வந்து பலபட நயந்து உரைத்தும், அதற்கு அவன் செவி சாய்க்கவில்லை. "எனது உயிர் உள்ளளவும் அன்னிய அரசுடன் மண்டமர் புரிவேன்," என்றே அப் பிரதாப சிம்மன் வீரகோஷம் புரிந்தான்.

பிரதாப சிம்மனது தலைநகரான சித்தூரைக் கைப் பற்ற அக்பர் முயன்ற காலையில், மேவார் நாட்டு இராஜ புத்ரவீரர் அனைவரும் தங்களது இரத்தத்தை வாரி இறைத்தனர். தங்களது உடலை வீரசுதந்திர தேவிக்கு நிவேதனம் செய்தனர். அந்நாட்டு மாதரும் அவ்வாறே வீரம் விளைத்து, முடிவிலே தீயில் பாய்ந்தனர், அது கண்டு அக்பரும் அவன் தளபதிகளும் அச்சமும் ஆச்சர் யமும் அடைந்து, நாட்டு மக்களின் மனம் எள்ளளவும் புண்ணாகாதிருக்கும் வண்ணம் நடந்து வரலாயினர்.

ஆயினும் எரிமலையின் மீது இருக்கும் ஒருவனே போல் மகா அக்பர் இருந்து வந்தான். மக்கள் மனம் பிணங்கினால், மன்னவனது வாழ்வு வீழும் என்பது திண்ணம் அல்லவா? அக்பரது ஆன்ற அறிவும், சான்ற

நடையும், சீரிய செயலும் காரணமாக அம்முகலாய அரசு வட இந்தியா எங்கும் பரவி, நமது தமிழகத்தின் வடக் கெல்லையிலும் தலைகாட்டியது. மக்களும் ஓரளவு நிம்மதியுடன் வாழ்ந்து வந்தனர்.

என்றாலும் இப்பரந்த பாரத பூமியிலே ஆங்காங்குள்ள வீரமரபினர் சுதந்திரத் துடிப்பே மிகுந்து, சமயம் பார்த்து நின்றனர் சுய அரசுக் காண. இதனை அக்பரும் அவனுக்குப் பின்வந்த ஜிஹாங்கீர், ஷாஜஹான் என்போரும் நன்குணர்ந்து, மக்களின் மனம் கோணாத வண்ணம் அரசு புரிவதிலேயே நாட்டம் வைத்தனர்.

6. சிவா யும ம

ஷாஜஹானுக்குப் பின்பு, ஔரங்கசீப் என்பான் டில்லியிலே முகலாய சக்கரவர்த்தி ஆனான். அந்த ஔரங்கசீப் ஆண்டவன் அல்லாவிடம் பெரும் பக்தி கொண்டவன்; சமயநெறியில் சிறிதும் வழுவாதவன்; அரசிறையிலிருந்து தனது சொந்தச்செலவுக்கு ஒரு தம்பிடிகூட உபயோகிக்காதவன். ஆனாலும் அவனிடம் மதவைராக்கியம்—மதவெறி—தலைமிஞ்சி நின்றது என்றே சொல்லவேண்டும். தனது மதத்தை இப்பூமியெங்கும் பரப்ப அவன் பெரிதும் முயன்றான்.

ஔரங்கசீப்

அவனது ஆட்சிக்காலத்திலே, ஹிந்துக்கள் தலைவரி கொடுக்க நேர்ந்தது. விக்கிரகம் வைத்துக் கும்பிடுதல் இஸ்லாத்துக்கு நேர்விரோதம். ஆதலின் ஹிந்துக்

கோயில்கள் பலப்பல இடியுண்டு மறைந்து போயின. அந்த இடங்களில் பெரிய மசூதிகள் எழுந்தன. நம்மவர் தெய்வமெனக் கொண்டாடும் பசுக்கள் ஆயிரக்கணக்கில் அழிந்துபோயின. இந்நிலையில் அவனது அரசு இந்தியா முழுவதும் பரவியிருந்தது எனலாம்.

ஔரங்கசீபின் காலத்திலே மாகாண அதிபர்களே நவாபுகள் எனப்பட்டனர். ஆங்காங்கு அவர்கள் இட்டதே சட்டம், செய்ததே தீர்ப்பு; என்றாலும் இவர்கள் அனைவரும் அச்சக்கரவர்த்திக்கு உட்பட்டவர்கள்; ஆண்டு தோறும் அச்சக்கரவர்த்திக்குக் காணிக்கை செலுத்த வேண்டும்; வேண்டும்போது படைத்துணையும் புரிதல் கடமையாம்.

அச் சக்கரவர்த்தியின் ஆட்சியைக்கண்டு, வீரமரபினரான மராட்டியர், சீக்கியர், இராஜபுத்திரர், தமிழர் என்போர் மனம் புழுங்கிக் கிடந்தனர். அம் மரபாரில் சிலர் அம் முகலாய அரசில் சேவை செய்து நின்றாலும் சித்தத்திலே பிணக்கு மிகுந்திருந்தனர். மராட்டியரிலே, சிவாஜி என்னும் வீர இளைஞன் ஒருவன் இருந்தான்.

சிவாஜி

அன்னிய முகம்மதியரின் ஆட்சியில் மக்களுக்கு அல்லல் பல நேர்வதை அச் சிவாஜி உணர்ந்தான்; உடனே தனியரசுகொண்டு, மக்களுக்கு ஆறுதல் அளிக்க

முயன்றான். அவன் ஒரு ஜமீன்தாரின் மகன். மகாராஷ்டிரத்திலுள்ள மலைநாட்டினரான மாவலரைத் துணைகொண்டு அவன் ஒருபடை திரட்டினான். திரட்டியதும் தக்காணத்திலிருந்த குட்டி முகம்மதிய அரசுகளை வாட்டித் தனது அரசைப் பெருக்கிக்கொண்டான்.

சிறிய ஜமீன்தாரின் மகனான அச் சிவாஜி சிறிது நாளைக்குள் அரசன் என்று முடிதரித்து, ஆண்மை செலுத்தத் தொடங்கினான். அதுகண்டு ஔரங்கசீப் சகியாமல், தனது படைகளை ஏவினான். வந்த படைகளையெல்லாம் சிவாஜி சிதறித்துவிட்டான். அதன்மேல், முகலாயச் சேனையின் பெரிய பெரிய தளபதிகள் அவன் மீது போருக்கு எழுந்தனர்; பிரமாதமாகவும் சண்டை போட்டனர்.

சிவாஜி திடீரென்று தன்படையுடன் தோன்றி அம் முகலாயச் சேனையை எதிர்த்து அடிப்பான்; பின்பு தனது மலைக்கோட்டைக்கு விரைந்து அதில் புகுந்து தங்கியிருப்பான். திடீரென்று தாக்கிமறையும் அவன் தந்திரத்தின் முன்னே, முகலாயரின் பெருந்தளபதிகள் பீடு அழிந்து பாடுபட்டனர். அவனை வெல்ல அவர்களில் ஒருவராலும் ஆகவில்லை; அமர்க்களத்திலிருந்து அஞ்சி ஓடவே நேர்ந்தது.

ஒரு சிறிய அரசனை அடக்க முடியவில்லையே என்று அச்சக்கரவர்த்தி அறிவழிந்தது கொஞ்சமன்று. முடிவில் அவனை ஔரங்கசீப் தந்திரமாக டில்லிக்கு வரவழைத்து, அங்கே வஞ்சனையாகச் சிறை செய்துவிட்டான். அச் சிறையினின்று சிவாஜி தப்பி வந்து, முகலாயரின் நகரங்களைக் கொள்ளையாடினான்; முகலாயரின் பிரதேசங்களில் புகுந்து படைவலி காட்டிக் கப்பமும் வாங்கினான்.

மிகப்பெரிய வல்லரசால் அச்சிறிய அரசனை அடக்கி யொடுக்க முடியவில்லை. அவன்கண்ட மராட்டிய அரசு பிறைமதிபோல் வளர்ந்தோங்கி வந்தது. அதுகண்டு முகலாயப் பெருமக்களும் மனத்தூடே வியப்பும் பிரமிப்பும் எய்தினர். மக்களுக்கோ அவ்வல்லரசின் மீதிருந்த மதிப்பு வரவரக்குறைந்து வந்தது. அச்சமயம் அப்பேரரசனுக்கு அவன் சுடச்சுட நிருபம் வரைந்து விடுத்து அவ்வல்லரசின் பராக்கிரமத்தைக் குறைத்தான்; தனது அரசை நாளுக்குநாள் பல வகையிலும் பெருக்கிவந்தான்.

வீரசிவாஜி அங்ஙனம் விளங்கி வருகையில் வடமேற்கே உள்ள பஞ்ச நதம் என்னும் பிரதேசத்தில் சீக்கியர் என்போர் சீறி எழுந்தனர். சமரசம் காணவழியில்லாமல் போகவே, அவர்களின் குருமார்கள் படைதிரட்டி ஔரங்கசீபுடன் மல்லுக்கு நின்றனர். வாள் முனையிலே அச்சீக்கியரை முகலாயரால் வெற்றிகொள்ள இயலவில்லை. ஆதலின் வேறுவகையில் அவர்களை வாட்டவும், வதைக்கவும் முயன்றார்கள். அது காரணமாகச் சீக்கியரின் வஞ்சினம் வளர்ந்ததேயன்றிக் குறைந்தபாடில்லை. பஞ்சநதப்பிரதேசத்திலே முகலாயரின் கொடி பரந்து நின்றும் சீக்கியரின் செல்வாக்கே ஓங்கிவந்தது.

அங்ஙனம் இருக்கையில், வீர, சிவாஜி காலகதி ஆனான். அது கேட்டு ஔரங்கசீப் ஆறுதல் அடைந்து களித்தான். ஆயினும் மகாராஷ்டிரரின்மீது கொண்ட வைராக்கியத்தைக் கைவிடவில்லை. சிவாஜியின் மைந்தன் சாம்பாஜி என்பானை அவன் சிறைசெய்து சித்திரவதையும் பண்ணினான்; சிவாஜி அமைத்துச் சென்ற கோட்டைகள் பலவற்றையும் கைப்பற்றிக்கொண்டான்.

அதுகண்டு மகாராஷ்டிர சமூகமே மண்டி எழுந்தது; வெகுண்டு நின்று அரும்போர் விளைத்தது. ஆயினும்

அவர்கள் விதியின்றி நம் தமிழகத்திலுள்ள செஞ்சிக் கோட்டையில் வந்து தங்கி நின்று சமர் தொடுத்தனர்; வந்து எதிர்த்த முகலாயச் சேனைகளை ஒன்றன்பின் ஒன்ருக முறியடித்தனர்; அவர்களை மடக்க முடிய வில்லையே என்று ஔரங்கசீப் மனம் ஒடிந்து போனுன்.

இனி, இராஜபுத்திரரில் பலரும் சீறி எழுந்து அவ் வல்லரசை வாட்டத் தலைப்பட்டனர். அவர்களுடன் ஔரங்கசீப் நெடுநாள் போர் புரிந்தும் பலிக்கவில்லை. தேசத்தில் ஆங்காங்கே கொந்தளிப்பு உண்டாயிற்று. "குமரிமுனைவரையில் கோலாகலம் கொண்ட வல்லரசு வாடுவதோ? மகாராஷ்டிரரையும், சீக்கியரையும், இராஜ புத்திரரையும் பகைத்துக்கொண்டோமே எனக்குப் பின் பட்டத்துக்கு வரும் மைந்தர் இந்த அவல நிலையை எவ்வாறு சமாளிக்க முடியும்?" என்னும் ஏக்கத்தினுல் அந்த ஔரங்கசீப் 1706-ஆம் ஆண்டில் ஆவி துறக்க நேர்ந்தது.

அவ்விதம் அவ் வல்லரசன் மரிக்கவே, அவனது மைந்தர்களோ அரசை நச்சி ஆர்ப்பரித்து எழுந்தனர். அதனுலும் தேசத்திலே அமைதி குலைந்தது. "எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம்" என்று அந்த அரசின் அமைச்சரும் அதிகாரிகளும் நடந்துவரத் தலைப்பட்டனர். தலைப்படவே, அவ்வல்லரசு எங்கும் மிக்க ஆட்டம் கொண்டது. ஔரங்கசீபுக்குப் பின்வந்த டில்லி பாதுஷாக்களிடம் தகுதியோ, திறமையோ காணப்பட வில்லை. எடுப்பார் கைப்பிள்ளையாக அன்னவர் தத்தளித்து நின்றனர்.

7. மேனுட்டினரின் வருகை

ஔரங்கசீபின் காலத்திலே மாகாண அதிபதிகளாக விளங்கிய சுபேதார்கள், நவாபுகள் என்போர் அந்த அரசின் ஆட்டங் கண்டு, தனியரசு கொள்ளும் நாட்டமே மிகுந்து நற்சமயத்தை எதிர்நோக்கி இருந்தனர். அந்த வல்லரசின் முதல் மந்திரியாக இருந்தவன் தெற்கு நோக்கி வந்து ஹைதராபாத் என்னும் பிரதேசத்திலே நிஜாம் என்ற பட்டம் சூடித் தனியரசு கொண்டான். அயோத்தி நாட்டின் நவாபும் தனியரசன் என்று தருக்கி வாழத் தவறவில்லை.

வங்காள மாகாணத்தின் நவாபான அலிவர்த்திகான் என்பவனும் மேலே சொன்ன இருவரையும் பின்பற்றி நடக்கலானான். அந்நிலைகண்ட மராட்டியரோ தங்களது அரசை எங்கும் வளர்த்துவர எத்தனித்தனர்; டில்லியிலே பாதுஷாவாக அமர்ந்தவர்களை மடக்கவும் முற்பட்டனர்; ராஜதந்திரத்தில் கைதேர்ந்தவர்கள் ஆதலின் பாதுஷாக்களை அவசியம் நேர்ந்தபோது அணைத்து ஆதரிக்கவும் முற்பட்டனர்.

அன்னிய முகம்மதிய அரசை அழித்து இப்பூமியிலே ஹிந்து அரசை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என்று அம் மராட்டியர் சாம, தான, பேத, தண்டம் என்னும் நால்வகை உபாயங்களையும் மேற்கொண்ட மேன்மையாளராம். சிவாஜி வேந்தன் கொண்ட கருத்தை ஈடேற்ற அம்மரபார் எந்நேரமும் முயலாநின்றனர். அவ்வல்லரசினின்று பிரிந்துபோன நவாபுகளையும் பிறரையும் அவர்கள் மறக்கவில்லை; சமயம் வாய்த்தபோதெல்லாம் அன்னார் மீது சிறிச்சினந்து வாள்வரிசை காட்டிவந்தனர்.

ஆனதுபற்றி வீர சிவாஜி கண்ட மராட்டிய அரசு மேலும் மேலும் வலுத்து வந்தது. பஞ்சநதப் பிரதேசத்திலே சீக்கியரும் அரசுகொள்ள இச்சை கொண்டனர். இவ்விதம் முகலாய வல்லரசு எங்கும் சிதறிச் சின்னாபின்னம் ஆகி வந்தது. டில்லியிலே அரியணையில் அமர்ந்திருந்த பாதுஷாக்கள் என்போர் அச்சிதைவைத் தடுக்க இயலாது விழித்தனர். தேசமெங்கும் தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரன் ஆனான்.

அவ்வல்லரசு ஓங்கி நின்றபொழுதும், கலகலத்த சமயத்திலும் தேச வளமை சிறிதும் குறையவில்லை. இங்கே வேளாண்மை அமோகமாக இருந்தது. தேசத்தின் மூலை முடுக்குகளிலெல்லாம் நெசவுத் தொழில் நிறைந்து விளங்கிற்று. உலகின் ஏனைய நாடுகளுக்கெல்லாம் இங்கிருந்து கப்பல் கப்பலாக ஆடையும், சேலையும், சீட்டித் துணிகளும் ஏராளமாக ஏற்றுமதியாயின.

தேச வளமையையும் செல்வ நிலைமையையும் கேள்வியுற்றே ஆதியில் போர்த்துகல் தேச வாசியான வாஸ்கோடிகாமா என்பான் தமிழகத்தின் மேலைக் கடற்கரையிலுள்ள கோழிக்கோடு என்னும் துறைமுகம் சேர்ந்தான்; ஆங்கிருந்த ஹிந்து வேந்தனை அடிபணிந்து இங்கே வர்த்தகம் புரிய அனுமதி அடைந்தான். ஒரு நூறு வருடகாலம் அவர்களின் வர்த்தகம் இங்கே ஓங்கி நின்றது. அப்போது கோவா, தையு, தாமன் என்னும் நகரங்களை அப் போர்த்துகல்காரர் கைப்பற்றிக் கொண்டனர்.

அவர்களை அடுத்து டச்சுக்காரர் என்போர் வாணிபம் நடத்த இங்குவந்து ஏராளமான பணம் சேர்த்தனர். டச்சுக்காரரின் முன்னே அப்போர்த்துகல்காரர் ஈடு கொடுக்க முடியாமல், இந்திய வர்த்தகத்தைத் துறந்து சென்றனர். செல்லவே, டச்சுக்காரரின் வாணிபம்

இங்கே பெருகியது. இங்கிருந்து எத்துணையோ சரக்கு களை அவர்கள் ஏற்றிச் சென்று, மேனாடுகளிலே அதிக விலைக்கு விற்று அளவிறந்த பணம் சேர்த்தனர்.

அந்நாளில் மிளகும் ஜவுளியுமே அந்த அன்னியரின் வர்த்தகச் சரக்குகளில் தலைசிறந்தவை. மேனாடுகளிலே மிளகு உற்பத்தி கிடையாது. மிளகு என்றால் அம் மேனாட்டினருக்கு மோகம் அதிகம். தவிர அங்கே நெசவுத் தொழில் பிரபலமாக இல்லாமையினால் இங் கிருந்தே அவர்கள் தமக்குரிய ஆடைகளை வருவித்துக் கொண்டனர். அவ்விரு தேசத்தாரும் மலைபோல் திரவியம் சேர்த்தமை கண்டு, இங்கிலாந்தின் வாசிகளான ஆங்கி லேயருக்கும் செல்வம் சேர்க்கவேண்டும் என்னும ஆசை பிறந்தது.

ஆயிரத்து அறுநூறும் ஆண்டிலே இலண்டன்மா நகரில் ஒரு நூறுபேர் சேர்ந்து, கிழக்கிந்தியாக் கம்பெனி என்பதை நிறுவினர். அச்சமயம் இங்கிலாந்தை ஆண்டு வந்த எலிஜபெத் ராணி அக்கும்பினிக்கு ஆதரவெல்லாம் அளித்தாள். ஜிஹாங்கிர், ஷாஜஹான் ஆகிய இருவரின் காலத்திலே, ஆங்கிலேயர் இத்தேசத்துக்கு வந்து, அரபிக்கடற்கரையில் உள்ள சூரத் என்னும் துறைமுக நகரில் வர்த்தகம் செய்யத் தொடங்கினர்.

தென்னாட்டிலே அக்கும்பினியார் திருப்பதிக் கடுத்த சந்திரகிரி நாட்டின் அரசனை வேண்டி, நமது சென்னைப் பக்கத்திலே வாணிபம் செய்ய இடம் பெற்றனர். இங்கி ருந்து மிளகு, சுக்கு, வாசனைத் திரவியங்கள், ஜவுளி முதலியவற்றை அக்கும்பினியார் மலிவான விலைக்கு வாங்குவர்; அவற்றை இங்கிலாந்துக்கு அனுப்பி அங்கே விலை கூட்டிவிற்று அபரிமிதமான இலாபம் அடைவர்.

நாளடைவில் இத்தேசத்திலே அக்கும்பினிக்கு ஆங்காங்கே பண்டக சாலைகள் ஏற்பட்டன. அவற்றைக் காவல் புரிய ஆட்களையும் கும்பினியார் அமர்த்திக் கொண்டனர். வர்த்தகம் புரிய வந்தோர் வயிறு வளர்க்கட்டும் என்று எண்ணியே முகலாய வல்லரசும், சந்திரகிரி அரசனும் இடங்கொடுத்து ஆதரவு அளித்தனர். சிவாஜி வேந்தனும் அவ்வர்த்தகரின் விஷயத்தில் தலையிடாதிருந்தான் தண்ணளி கொண்டு. அப்போதெல்லாம் நல்ல பிள்ளைகளாகவே அக்கும்பினியார் நடந்துவந்தனர்.

ஆரம்பத்தில் அந்த ஆங்கிலக் கும்பினியாருக்கு வர்த்தகத்திலேயே நாட்டம் சென்றது. அவ்வல்லரசு சின்னு பின்னமாகி, அதன் பெருமக்கள் ஆங்காங்கே தனி அரசு கொள்வதைக் கண்டு, அக்கும்பினியாருக்கும் மண்ணாசை பிறந்தது. ஆதலின் தனியரசு கொள்ளும் தலைவர்களை அண்டி அவர்களை அன்னூர் நயந்து நின்றனர்; அவர்களுக்கு வேண்டிய உதவியும் புரிந்தனர். கொள்ளிக் கட்டை கொண்டு தலையைச் சொறிந்து கொள்ளுகிறோமே என்று அத்தலைவர்கள் எண்ணிப் பார்க்கவில்லை. சுயநலம் தோன்றி மதி நலத்தை மூடிக்கொண்டது.

கும்பினியாரோ தங்களது பண்டக சாலைகளைப் பெருக்கிக் கொண்டனர்; அவற்றிற்கான காவல் படையையும் அதிகமாகச் சேர்த்து வந்தனர்; அத் தலைவர்கள் மிக விரும்பும் மதுபானம், பீங்கான், கண்ணுடிச் சாமான்கள் இவற்றை ஏராளமாக வருவித்து, அவர்களுக்கு வழங்கி வந்தனர். தேசத்தின் நலத்தை மதியாமல், தங்களது வருவாயையே பெரிதும் கருதி நின்ற இத்தேச வாணிக வகுப்பாரின் சிகரம் போன்ற தனவந்தர்கள் அக்கும்பினிக்கு எப்போதும் உடந்தையாகவே இருந்து வந்தார்கள்.

தேச மக்களிடமிருந்து பலவாறான சரக்குகளை மலிவான விலைக்கு வாங்கி, அவற்றைக் கும்பினியாருக்கு அதிக விலைக்குக் கொடுக்கும் தரக வேந்தராக அவ்வணிகர் சேர்த்து வந்த இருநிதி இவ்வளவு அவ்வளவு அன்று. அவர்களுக்கும் கும்பினிக்கும் இடையே நேசம் வளர்ந்து வரவே குட்டி அரசரேபோல் அவர்கள் விளங்கி வந்தார்கள். பணம் பத்துஞ் செய்யும் என்பதற்கு அவ்வணிகர் ஓர் எடுத்துக் காட்டு.

8. மண் சேர்ந்த மாயம்

தேசத்தின் முக்கிய நகரங்களான சென்னை, பம்பாய், கல்கத்தா இந்த இடங்களில் ஆங்கிலக் கும்பினிக்கு மிகப் பெரிய பண்ட சாலைகள் இருந்தன. அம்மூன்று நகரங்களும் துறை முகங்களாம். அந்நகரங்களின் மூலமே மேனாடுகளுக்கு அக்கும்பினியார் சரக்குகளை அனுப்பி வந்தனர். நாளடைவில் சென்னை, கல்கத்தா இந்த இரண்டு இடங்களிலும் அவர்கள் கோட்டை கொத்தளங்கள் கொண்டார்கள்.

அங்ஙனம் ஆங்கிலேயர் இங்கே ஒரு பக்கம் வர்த்தகம் நடத்தி வருகையில், பிரெஞ்சுக்காரர் என்போரும் இத்தேசத்திலே வாணிபம் நடத்தி வந்தனர். வங்காளத்திலே சந்திர நாகூர் என்னும் இடத்திலும், சென்னையிலே புதுச்சேரி நகரிலும் பிரெஞ்சுக்காரரின் பண்டசாலைகள் எழுந்தன. வியாபாரமும் ஓங்கி வந்தது. அத்துறையில் ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் ஆகிய இருவருக்கும் போட்டி மூண்டது. ஒருவரை ஒருவர் அமுக்கிவிடவே இருபக்கத்திலும் அரிய முயற்சிகள் நடவா நின்றன!

அந்நிலையில், ஹைதராபாத்தின் முதல் நிஜாம் மாண்டுபோனான். அவன் மகன் பட்டம் ஏறவே, மருமகன்

கன் அரசு தனக்கே உரியது என்று சண்டைக்கெழுந்தான். அம் மருமகனுக்கு ஆதரவாக நின்றனர் பிரெஞ்சுக்காரர். அவர்களின் தலைவன் டூப்ளே எனப்படுவான். பிரெஞ்சுக்காரரின் படைத்துணை கொண்டு அம்மருமகன் பட்டம் சூட, நிஜாமின் மகன் போரிலே பொன்றி வீழ்ந்தனன். விழவே, பிரெஞ்சுக்காரருக்கு அப்புதிய நிஜாம் சில பிரதேசங்களை மானியமாக அளித்தான். டூப்ளே என்பானுக்கு வெகுமதிகள் பல கொடுத்து மிக்க மரியாதைகளும் செய்தான்.

அச்சமயம் அன்வருதீன் என்பான் தமிழகத்தின் தலைவனாக, ஆர்க்காடு என்னும் நகரிலிருந்து ஆர்க்காட்டு நவாப் என்று விளங்கி நின்றான். அந்த ஆர்க்காட்டிலிருந்த சந்தா சாகிப் என்னும் பெருமகன் தனக்கே நவாப் பட்டம் உரியது என்று தோள் தட்டினான். அச்சந்தா சாகிபுக்கு பிரெஞ்சுக்காரர் துணையாக இருந்தனர். ஆம்பூரிலே நடந்த சண்டையில், அன்வருதீன் கொல்லப்பட்டுப் போனான். அந்த அன்வருதீன் மகனை முகம்மதலி என்பான் தானே ஆர்க்காட்டு நவாப் என்று கூறிக்கொண்டு, திருச்சியிலே திகைத்து நின்றான்.

பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கு ஓங்குவதைக் கண்டு, ஆங்கிலக் கும்பினியாரும் ஆசைமிகுந்து, அம் முகம்மதலிக்குத் துணை போயினர். திருச்சிக்கு அருகில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் பெருஞ் சண்டை மூண்டது. அதில் பிரெஞ்சுக்காரர் தோல்வி கொண்டனர்.

சுருங்கச் சொன்னால், முகம்மதலி ஆர்க்காட்டு நவாப் ஆனான். தனக்கு ஆபத்தில் தலைகொடுத்த ஆங்கில வர்த்தகரிடம் நெடுங்கால தோழமை பூண்டு அவர்களுக்கு உதவியெலாம் புரிந்துவந்தான். அதனால் தமிழகத்திலே ஆங்கிலேயரின் செல்வாக்கும் வர்த்தகமும் பெருகிவந்தன.

இது இப்படியிருக்க, வங்காளத்திலே ஆங்கிலேயரின் வர்த்தகம் வளர்ந்து வந்தது. ஆங்கிருந்த நவாப் சிராஜ் உத்தௌலா என்பவனை இலட்சியம் செய்யாமல் அவர்கள் வர்த்தகம் புரிந்து வந்தனர். அதுபற்றி அந் நவாபுக்கும் அவர்களுக்கும் சண்டை மூண்டது. அப்போது அங் கிருந்த வணிக மரபினரின் தலைவனும், சிற்றரசரும் அந் நவாபுக்குத் துணையாக நில்லாமல் ஆங்கிலேயரின் பக்கம் சேர்ந்துகொண்டனர்.

அதுசமயம் அவ்வங்காள நவாப்போ சந்திரநாகூரி லிருந்த பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினன். அவர் களின் உதவி கிட்டுமுன்னம், 1757-ம் வருடத்திலேபிளாசி என்னும் இடத்திலே சண்டை மூண்டது. அதில் நவாப் படுதோல்வி யடைந்தான். பிறகு அவனைப் பிடித்து மிகக் கொடுமையாகக் கொன்றுபோட்டனர்.

உடனே மீர்ஜாபர் என்னும் துரோக தளபதி வங்காள நவாபாக அமர்த்தப்பட்டான். அதனுல் இவன் களிப்பு மிகுந்து, ஆங்கில தளபதியான கிளேவ் என்பானுக்கு வேண்டுமளவு பணம் கொடுத்தான். கல்கத்தாவைச் சுற்றியுள்ள பிரதேசங்களை ஒரு ஜெமீன் ஆக்கி அதன் அரசுரிமையை ஆங்கிலேயருக்கு அளித்தான். முதன் முதல் இந்தியாவிலே அவ்விதம் ஆங்கிலேயர் அரசுரிமை அடைந்தனர். அத்தகைய சூதும் வாதும் கண்டு தேச மக்கள் அக்கும்பினியின் மீது ஆத்திரம் மிகுந்தனர்; வங்காளத்தின் புதிய நவாபின் மீதும் மக்களுக்கு வெறுப்பு மிகுந்தது.

அரசுரிமையுடன் நவாபின் நட்பும் கிட்டினதால், அவ்வங்கத்திலே ஆங்கிலேயர் தமது வர்த்தகத்தை நாளுக்கு நாள் வெகுவாகப் பெருக்கிக்கொண்டனர்.

அந்நாளில் துணி நெசவுக்கு வங்காளம் பேர்போனது; டாக்கா மஸ்லின் துணிக்கும் அதுவே தாயகமாம்; செல்வச் சிறப்பினுக்கும் உறைவிடமாம். இந்நிலையில் அவர்களின் துணி வர்த்தகம் அங்கே வானுற ஓங்கியது. செல்வாக்கும் கங்குகரையின்றி வளர்ந்து வந்தது. சிறிது நாள் சென்றதும் வேறொருவனை நவாபாக அமர்த்தி ஆங்கிலக் கும்பினியார் மேலும் பலப் பல உரிமையும் சலுகையும் எய்தினர்.

இந்த நவாபோ முடிவில் ஆங்கிலேயரின் தொல்லைக்கு அஞ்சி ஓடி, அயோத்தி நவாபிடம் சரண்புகுந்தான். ஆங்கிலக் கும்பினியின் சூழ்ச்சியும் மோசமும் கண்டு, அவ்விருவரும் டில்லியிலே பெயரளவில் பாதுஷாவாக இருந்த ஷாஆலம் என்பானது துணைகொண்டு, போருக்குப் புறப்பட்டார்கள். பக்சார் என்னும் இடத்திலே அவர்களுக்கும் கும்பினியாருக்கும் இடையே பெருஞ்சண்டை மூண்டது. அதில் அம் மூவரும் தோற்றுப்போயினர்.

அப்போது அம்மூவருக்கும் கும்பினிக்கும் இடையே ஓர் உடன்பாடு உண்டாயிற்று. அதன்படி வங்காளம், பீஹார், ஒரிசா ஆகிய மூன்று மாகாணங்களிலும் வரி வசூலிக்கும் உரிமையை ஆங்கிலக் கும்பினியாரிடம் பாதுஷா ஒப்படைத்தான். பாதுஷாவுக்கு ஆண்டு தோறும் இருபத்தாறு லட்சம் ரூபாய் கொடுத்துவர ஆங்கிலக் கும்பினியார் ஒப்புக்கொண்டனர். அயோத்தி நவாபோ தான் சண்டைக்கெழுந்த குற்றத்திற்காக அக்கும்பினியாருக்கு ஐந்துகோடி ரூபாய் கொடுக்க இசைந்தான். அத்துடன் யுத்தச் செலவையும் கும்பினியாருக்குக் கட்டித்தந்தான்.

அம்மூன்று மாகாணங்களின் வரிவசூல் உரிமை கிட்டிய பின்னர், வங்கத்திலே பெயரளவிலே நவாபாக

ஒருவன் இருந்து வந்தாலும், உண்மையில் அதிகார மெல்லாம் கும்பினியின் கைக்குள் அடங்கிவிட்டன. அயோத்தி நவாபும் கும்பினிக்கு உட்பட்டு நடக்க ஒப்பிய தனால், அங்கும் கும்பினியாரே கைமேலாயினர். திக்கற்ற டில்லி பாதுஷாவும் கும்பினியின் கைப்பொம்மை ஆகி விடவே, பஞ்சநதப் பிரதேசத்தைத் தவிர, வடஇந்தியா வில் கும்பினியாரின் வாக்கே ஓங்கி நிற்கலாயிற்று.

தமிழகத்திலே ஆர்க்காட்டு நவாப் அதிபனாக இருந்தும், அவன் நேர்மையுடன் நிர்வாகத்தை நடத்தி வரவில்லை. அச்சமயந் தமிழகத்திலே குட்டி அரசரே போல் ஏறக்குறைய எழுபது பாளையக்காரர் இருந்து வந்தனர். தனித்தனியே அவர்களுக்கு கோட்டையும் சேனையும் உண்டு. வருடந்தோறும் அவர்கள் ஆர்க்காட்டு நவாபுக்கு ஒரு சிறுதொகை செலுத்தவேண்டும். மற்றப் படி அவர்கள் தனிக்காட்டு இராஜாக்களே! அவர்களிடம் ஆர்க்காட்டு நவாப் சுமுகமாக நடந்துவந்தால் அவனுக்கு காணிக்கை இலகுவில் வந்துசேரும்.

ஆதியில் நவாபின் உறவினரில் இருவர் அக் காணிக் கையான கப்பத் தொகையை வசூலிக்கநியமனம் ஆயினர். அந்த உறவினரோ சரிவர அத் தொகையை வசூலிக்க வில்லை. வசூலான தொகையையும் நவாபுக்கு அனுப்பாமல் வைத்துக்கொண்டனர். அதனால் நவாபின் செலவுக்கு வேண்டிய பணம் கிடைக்கவில்லை. கடன்வாங்கி அவன் காலங்கழித்துவர நேர்ந்தது. அச்சமயம் பார்த்து அவனுக்கு ஆங்கில வர்த்தகர் அவ்வப்போது மிகுந்த கடன் கொடுத்து உதவினர். குறித்த கெடுவில் அதனைத் திருப்பித்தர அவனால் இயலவில்லை.

வஞ்சனையாக வங்கத்தைக் கட்டிக்கொண்டதுபோல் நமது தமிழகத்தையும் கட்டிக்கொள்ளவே கும்பினியார்

கருதிநின்றனர். நிற்கவே, வாங்கின கடனை உடனே கொடுத்துவிட வேண்டுமென்று அவர்கள் நிர்ப்பந்தம் செய்யத் தவறவில்லை. அதன்மேல் விதியின்றி இத் தமிழகத்தின் வரி வசூல் உரிமையைக் கும்பினியாரிடம் ஒப்படைத்தான். நவாப் ஒப்படைக்கவே, பெயரளவில் நவாப் என்று இருந்தாலும் அதிகாரமும், ஆண்மையும் கும்பினியின் கைக்கு வரலாயின எனல் வேண்டும். இவ் விதம் தமிழகமும் கும்பினியின் வசம் ஆயிற்று.

இனி, மைசூர் அரசு என்பது பன்னிரண்டாம் நூற்றாண்டு முதல் பதினெட்டாம் நூற்றாண்டு வரையில் வழிவழியாக ஹிந்து ராஜாக்களால் ஆளப்பெற்றுவந்தது. கடைசி வேந்தனிடம் தளபதி வேலை பார்த்துவந்த ஹைதர் அலி என்பான் தன் இஷ்டப்படி அந்த அரசை ஆட்டிப் படைக்க முற்பட்டான். நாளடைவில் தானே அரச கர்த்தாவாக ஆகிவிட்டான். தமிழகத்திலே ஆங்கிலக் கும்பினியார் ஆண்மை செலுத்துதல்கண்டு அவன் சகியாமல், போருக்கு எழுந்தான் படைகொண்டு.

அதனால் அவனுக்கும் கும்பினிக்கும் இடையே நெடு நாள் போர் நடந்தது. வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. முடிவில் ஹைதர்அலி அப்போரின் நடுவே இறந்துபோக அவன் மைந்தன் திப்புசுல்தான் என்பான் மைசூரின் அதிபனாக அமர்ந்தான். இவனும் அக்கும்பினி யாருடன் பன்முறை சண்டைபோட்டான். ஆங்கி லேயரை இங்கிருந்து துரத்திவிடவேண்டும் என்பதே இவனுக்கும் கருத்தாம். அப்போது ஹைதராபாத் நிஜாம், மராட்டியர் இவர்களின் துணைகொண்டு திப்புவை ஆங்கி லேயர் வென்றுவிட்டனர்.

அச்சமயம் போர் முனையிலே திப்புசுல்தான் மாண்டு மடிந்தான். உடனே அந்த அரசின் பெரும் பகுதியை

அம்மூவரும் பங்கிட்டுக்கொண்டு, எஞ்சியதை ஹிந்து வேந்தனது வம்சத்தைச் சேர்ந்த ஒருவனுக்கு அளித்தனர். அதனால் அந்த அரசன் கும்பினியாருக்கு உட்பட்டு அரசாண்டுவர நேர்ந்தது. அவ்விதம் மைசூர் ராஜ்யம் கும்பினியாரின் ஆதிக்கத்துக்குள் அடங்கலாயிற்று. பின்பு ஹைதராபாத் நிஜாமின் மீது கும்பினியாரின் கவனம் பாய்ந்தது.

நிஜாமைத் தொலைத்துவிட மராட்டியர் முனைந்து நின்றனர்; முதலில் நிஜாமுடன் நட்புரிமைகொண்டு, சாமதான உபாயங்களைக் கையாண்டு பார்த்தனர்; பிறகு தண்டோபாயத்தில் இறங்கினர். அப்போது ஆங்கிலேயரின் உதவியை நிஜாம் நாடி நின்றான். ‘கஞ்சிவரதப்பா என்றால், எங்கே வரதப்பா’ என்றிருந்த கும்பினியார் அந்நிஜாமுக்குத் துணைபோயினர். தனது அரசில் சில பகுதிகளை மராட்டியருக்கு அவன் கொடுக்க நேர்ந்தாலும், கும்பினியின் தயவினால் அவனது அரசு நிலைக்கலாயிற்று.

9. மாயத்துணையும் பிணையும்

ஆங்கிலக் கும்பினியாரின் ஆணவத்தைக் கண்டு, கொதிப்பு மிகக் கொண்டே மராட்டியர், திப்பு சுல்தான், ஹைதராபாத் நிஜாம் இவர்கள் தனித்தனியே கச்சை கட்டி எழுந்தனர். இத்தேசத்திலிருந்து அன்னிய அரசை அடியோடு அகற்றவேண்டும்; சுய அரசை நிலை நாட்டவேண்டும்; இதுவே மராட்டியரின் முக்கிய மனக்கோள் அல்லவா? அதுபற்றி அவர்கள் அச்சுல்தானையும் நிஜாமையும் ஒரொரு சமயம் துணைக்கு அழைத்தும், அவர்கள் அதற்கு இணங்கி வரவில்லை.

சுல்தானுக்கும் ஆங்கிலக் கும்பிணியைப் போக்கி விடவேண்டு மென்பதே கருத்தாம். நிஜாமுக்கோ தனது அரசு நிலைத்தால்போதும் என்பதே நினைவாகும். இந்த இருவரும் தனித்தனியே கும்பினியாருடன் போர் செய்தனரே யல்லாமல், சேர்ந்து நின்று சமர் செய்யவில்லை. தேச அரசுக்காகப் போர் புரியும் தலைவர்களிடையே ஒற்றுமை இல்லை என்று கும்பினிக்கு நன்கு புலப்பட்டது.

திப்புசுல்தான், நிஜாம், மராட்டியர் இவர்களின் சேனையிலே பிரெஞ்சுக்காரர் தனி வீரராகவும், தளபதிகளாகவும் சேவை செய்து வந்தனர். அதனால் அம்மூவரின் சேனையும் முனை முகத்தே சிறந்து நின்றது. அது கண்டு கும்பினியாருக்குத் திகில் உண்டாயிற்று. உண்டாகவே, "உன் அன்பர் என்னன்பர், உன் பகைவர் என் பகைவர்" என்று பசப்பி இத்தேச வேந்தர்களிடம் தனித்தனியாக நட்புரிமை கொள்ள, அக்கும்பினியார் மாயச் சூழ்ச்சி புரிந்து வந்தனர்.

மராட்டியரின் பெருமிதங்கண்டு, மங்கி மடிந்து நின்ற ஹைதராபாத் நிஜாம் விதியின்றி அக்கும்பினியுடன் தோழமை பூண்டான். அப்போது இருவருக்கும் இடையே ஓர் உடன்பாடு உதித்தது. அதற்கு இணங்க, ஆங்கிலப் படை வகுப்பு ஒன்றைத் தனது நாட்டில் காவல் சேனையாக வைத்துக் கொள்ள நிஜாம் இசைந்தான்; சேனைச் சேவகத்திலிருந்து பிரெஞ்சுக்காரரை நீக்கி விடவும் ஒப்பினான்; அவர்களுடன் யாதொரு தொடர்பும் கொள்வதில்லை எனவும் வாக்களித்தான்.

அவற்றிற்கு ஈடாக ஆபத்துக் காலத்தில் அவனுக்கு உதவிபுரிய அக்கும்பினியார் வாக்களித்தனர். அளிக்கவே

அவர்களுக்குத் தனது பிரதேசங்களில் சிலவற்றை இனு மாக அவன் கொடுக்கலானான். "காட்டுப் பசு நம்மை நக்கும்பொழுது, நமக்கு இன்பமே விளையும் ஆனாலும் முடிவிலோ நமக்கு நாசமே கிட்டும்" கும்பினியாரின் துணையும் பிணையும் அவ்வாறாகவே முடியும் என்பதை அந்நிஜாம் எண்ணிப் பார்க்கவில்லை. அவர்களின் கையாள் போலவே அவன் இருந்து வரலானான்.

அச்சூழ்ச்சியினை மராட்டியர் தமது மதி வலியால் கண்டு கொண்டனர். கொள்ளவே, மராட்டியரின் போர் முனைப்பு ஓங்கியது. வீர சிவாஜிக்குப் பின் வந்த அரசர்கள் தமது முதன் மந்திரிக்கே எல்லா அதிகாரமும் அளித்திருந்தனர். அம்முதல் மந்திரியை பேஷ்வா என்று அழைப்பர். பேஷ்வாக்கள் மகா பராக்கிரமசாலிகளாகவும் மதியூகிகளாவும் இருந்து வந்தார்கள். அதனால் இமயம் முதல் குமரி வரையில் மராட்டியர் சென்று வீரக்கொடி தூக்க முடிந்தது.

அம்மாராட்டியரின் மேம்பாடு கண்டதும் ஒரு பக்கம் முகம்மதியரும் ஒரு பக்கம் கும்பினியாரும் தம் கையைப் பிசைந்து நின்றனர். கும்பினியின் கைப் பொம்மைபோல் இருந்த, டில்லி பாதுஷாவை மராட்டியர் அச்சுறுத்தித் தம் பக்கம் இழுத்துக் கொள்ள எண்ணிய பொழுது, கும்பினியார் குறுக்கே நின்றனர். இங்கிலேயில் கும்பினியின்மீது அவர்களுக்கு மேலும் சீற்றம் பொங்கியது.

குடும்பத்திலே கலகம் உண்டு பண்ணுவதுபோல், மராட்டியருக்குள்ளே பிளவை உண்டுபண்ண அக்கும்பினியார் கையாண்ட உபாயங்கள் அனந்தமாம். முகலாய வல்லரசை ஆட்டிப் படைத்து வந்த மராட்டியர் மீது முகம்மதியருக்கு மனத்தூடே பகையும் வெறுப்பும்

பொங்கி நின்றன. அவ்வேளை, முகம்மதியரை மேலும் குத்திக் கிளப்ப ஆங்கில அதிகாரிகள் தந்திரமெல்லாம் கையாண்டனர்.

ஆனாலும் மராட்டிய சமூகத்தின் மன்னர் பெருமான், மாண்பு மிக்க முதல் மந்திரி என்றால் மராட்டியர் ஒவ்வொருவருக்கும் மட்டற்ற பக்தி விசுவாசம் உண்டு; அன்றியும் சுயவராஜ காண்பதில் உள்ள தீவிர சிரத்தைக்கும் ஒரு குறைவுமில்லை. அந்நிலையில் இங்குள்ள முகம்மதியரின் வேண்டுகோளை மதித்து, இத்தேசத்தின் வடமேற்கு எல்லைக்கு அப்பாலிருந்து அகமதுஷா என்பான் ஒரு பெரும் படையுடன் மராட்டியரின் மீது மண்டி எழுந்தான்.

அகமதுஷாவுக்கும் மராட்டியருக்கும் பாணிபதம் என்னும் இடத்தில் 1760 ஆண்டிலே ஒரு பெரும்போர் மூண்டது. இயற்கை வீரமெல்லாம் காட்டி மராட்டியர் இணையிலாப் போர் புரிந்தும், விதி வலியாலும் துரோக விளைவாலும் தோல்வியுற நேர்ந்தது. பதினாயிரக் கணக்கில் மராட்டியர் அப்போர் முனையிலே மாண்டு போயினர். ஆதலின், அச்சமூகம் மங்கி மடிந்துவிடும் என்று கும்பினியார் உள்படப் பலரும் எண்ணிக் கிடந்தனர்.

'வேலெறி வந்து தாக்கத் தாக்க, வேங்கையின் வீரம் ஓங்கும்' என்பதுபோல், அத்தோல்விக்குப் பின்னர், மராட்டியரின் வீர உணர்ச்சி வானுற வளர்ந்தது. ஆங்கிலேயரின் கைப்பொம்மையாகக் கிடந்த டில்லி பாதுஷாவையும் அவர்கள் வசம் செய்து, அரிய வெற்றி கொண்டார்கள். கும்பினிக்கு அது கண்டு கலக்கமும் கடுப்பும் வளர்ந்தன.

அதன் பின் இத்தேசத்திலே மராட்டியர் ஓங்குவதா, கும்பினியார் நிலைப்பதா? என்றே கேள்வி பிறந்தது.

இரு திறத்தாரும் பன்முறை ஓயாப் போர் புரிந்து வந்தனர். ஒரு முப்பது வருட காலம் அப்போர் நீடித்தது. அதில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்தன. இதற்குள்ளாக, ஆங்கிலக் கும்பினியாரின் வஞ்சகச் சூழ்ச்சி தலையெடுத்தது.

மராட்டியரிலே ஹோல்கார், சிந்தியா, கெய்க்வார் என்று பல தலைவர்கள் உண்டு. மன்னருக்கோ முதன் மந்திரிக்கோ அடங்கி வாழினும், தனியரசு கொண்டு விளங்கல் வேண்டும் என்று அத்தலைவர்களுக்குச் சிந்தனை பிறந்தது. அது சமயம் பிரித்தாளும் தந்திரத்தை ஆங்கில அதிகாரிகள் அற்புதமாகக் கையாண்டு வந்தனர்.

தேசத்தின் சாபத்தீடு, அம்மாய வலையில் அத்தலைவர்கள் ஒவ்வொருவராகச் சிக்கித் தனித்தனியாக அக்கும்பினியாருடன் தோழமை பூண்டனர். ஆங்கிலேயரின் துணை கொண்டவுடனே அவர்கள் கோலாகலம் கொள்ளவும் தலைப்பட்டனர். ஹைதராபாத் நிஜாமுடன் உடன்படிக்கை கொண்டதுபோல, அத்தலைவர்களுடனும் கும்பினியார் ஓர் உடன்பாடு கொண்டனர். அம்மாய உடன்பாடு அத் தலைவர்களுக்கும் இத்தேசத்தினுக்கும் தீம்பாய் முடிந்தது.

மராட்டியரின் கடைசி பேஷ்வாவான பாஜி ராவ் என்பானுடன் கும்பினியார் போருக்கு எழுந்தனர். நெடு நாள் அச்சண்டை நடந்து வந்தது. முடிவிலே பேஷ்வா தோற்றுப் போக அவனது நாடுகளை யெல்லாம் கும்பினியார் கட்டிக் கொண்டனர். அதற்கு ஈடாக அவனுக்கும் அவன் சந்திக்கும் ஆண்டுதோறும் ஒரு லட்சம் பவுன் கொடுக்க கும்பினியார் ஒப்புக்கொண்டனர். இவ்விதம் மேற்கு இந்தியாவிலே கும்பினியின் அரசுரிமை பரவியது.

பெயரளவில் மராட்டியரின் மன்னவனாக இருந்தவன் அதுகண்டு கும்பினியாருடன் விதியின்றி நட்புரிமை கொள்ளலானான். அவனது அரசில் தலையிடுவதில்லை என்று கும்பினியார் வாக்களித்து அவனுடன் உறவு பூண்டனர். அந்த உறவுகண்டு அவன் முதலிலே பூரிக் கொண்டான். வேறு என்ன செய்வான்! பேஷ்வாவோ மறைந்து விட்டான்; மராட்டியத் தலைவரும் பலரும் கும்பினிக்குக் கட்டுப்பட்டுக் கிடந்தனர்.

ஆதிமுதல் முடிவு வரையில் முகம்மதியருடன் மல் லுக்கு நின்ற மாண்பினரான இராஜபுத்திர ரென்பார் அக் கும்பினியின் சூழ்ச்சியும் ஆட்சியும் கண்டு சீறி எழவில்லை; மற்று அக் கும்பினியாருடன் நேசபான்மை காட்டிப், அவர்களின் மாயத்துணையும் பிணையும் பெற்று மகிழ்ந் திருக்கலாயினர்.

அந்நாளிலே பஞ்சநதப் பிரதேசத்திலே சீக்கிய மக் களின் பெருந் தலைவனாகத் தோன்றியவன் ரஞ்சித சிம்மன் எனப்படுவான். இவன் அக்கும்பினியின் ஆதிக்கம் கண்டு ஆத்திரம் மிகுந்து, சீக்கியரை எல்லாம் திரட்டி அப்பிர தேசத்திலே தனியரசு ஒன்று கொண்டான். முதலிலே இவனை எதிர்க்க ஆங்கிலக் கும்பினிக்கு ஆண்மை பிறக்க வில்லை. ஆயினும் சமயம் பார்த்து நின்று சூழ்ச்சி பலவும் புரிந்து வந்தனர் கும்பினியார். சீக்கியருக்குள்ளும் தனித் தனி தலைவர்கள் தோன்றினர்.

ரஞ்சித சிம்மன் உயிருடன் இருந்தவரையில் இவ னுக்கு அத்தலைவர்கள் அடங்கி இருந்தனர். இவன் கால மானதும் அவர்களுக்குள்ளே சுயநலம் தலையெடுத்தது. அதுவே தருணமென்று கும்பினியார் கருதி மாயவலை வீசினர்; என்றாலும் சீக்கிய சமூகம் சினந்தெழுந்து,

அருஞ்சமர் செய்தது. நீண்ட காலம் இருவருக்கும் இடையே பல சண்டைகள் நடந்து வந்தன.

முடிவிலே சீக்கியருக்குள் ஒற்றுமை குலைய, அவர்களை எளிதில் வென்றுவிட்டனர் கும்பினியார். பின்பு சீக்கியரை அவர்கள் நயவஞ்சகமாக முதுகிலே தட்டிக் கொடுத்து, இனிய உரையும் இச்சகமும் பேசி நின்றனர். அந்த உரைகளை மெய் என்று நம்பி, வீர சீக்கியர் அக் கும்பினிக்கு வசமாகிவிட்டனர். அத்துடன் கும்பினியின் சேனையில் சேர்ந்து சேவிக்கவும் சித்தம் கொண்டனர். சுருங்கச் சொன்னால், கும்பினியின் பரம பக்தர்களாக ஆகிவிட்டனர் அச் சீக்கியர்.

மராட்டியர் முனைப்பு மிகுந்து ஆங்கிலக் கும்பினியாருடன் அருஞ்சமர் செய்து வந்த காலத்தில், சீக்கியத் தலைவர்கள் அம் மராட்டியருக்குத் துணையாக நிற்கவில்லை. மற்று அக்கும்பினியின் தயவினால் தனியரசு கொண்டு தருக்கி நிற்கலாம் என்றெண்ணி, அம் மராட்டியருக்கு இடையூறும் விளைத்து வந்தனர். மராட்டியரின் ஆட்சி நிலைத்துவிட்டால், தங்களது அரசு அழிந்துபோம் எனவும் சீக்கியர் சிந்தித்து நின்றனர்.

10. பாளையப் போர்

தமிழகத்திலே திருச்சி, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி என்று பலபல சீமைகள் உண்டு. தஞ்சைச் சீமையை மராட்டிய மரபினர் ஆண்டு வந்தனர். அன்னவர் தனி அரசர். ஆதியில் அவர்கள் ஆர்க்காட்டு நவாபுக்கு உட்பட்டிருக்கவில்லை. ஆயினும் முடிவிலே அந்நவாபுக்கு அவர்கள் கப்பம் கட்டிவர நேர்ந்தது. அயல் அகமான மதுரைச் சீமையின் நாயக்க மன்னவருக்கும், அவர்களுக்கும் அடிக்கடி பூசல் நேருவது உண்டு.

தஞ்சைச் சீமையின்மீது நவாபின் ஆதிக்கம் வலுத்த வுடனே கப்பத் தொகையை அக் கொற்றவர் அவ்வப் போது செலுத்தி வந்தனர். கும்பினியின் செல்வாக்கு ஓங்கிய உடனே அக் கும்பினிக்கு அவர்கள் உட்பட்டு விட்டனர். அச் சீமையிலே ஆதிக்கம் அடைய பிரெஞ்சுக் காரர் முயன்றும், அது பலிக்காது போயிற்று.

மதுரைச் சீமையிலே நாயக்க மன்னவரின் ஆட்சி மறைந்ததும், அந்நவாபின் ஆதிக்கம் வரவர வலுத்து வந்தது. மதுரை, திருநெல்வேலி இந்த இரண்டு சீமை களிலும் ஏறக்குறைய எழுபது பாளையக்காரர் இருந்தனர். அவர்களுக்கு உட்பட்ட பிரதேசங்கள் போக எஞ்சியவை நேர்முகமாக நவாபுக்கு உட்பட்டனவாம். நவாபுக்கு உட்பட்ட பிரதேசங்களில் காவல் புரிதல் அங்கங்கே யுள்ள பாளையக்காரரின் கடமையாம். அதற்காக ஒரு சிறு தொகை வசூலித்துக் கொள்ள அவர்களுக்கு உரிமை உண்டு.

பாளையக்காரரிடமிருந்து கப்பத்தொகை வசூலித்தல் கஷ்டமான காரியம். வசூலுக்குப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் புத்திசாலிகளாக இருந்தால், கப்பத் தொகையை எளிதில் வசூலிக்கலாம். வரி வசூலுக்கு அமர்ந்த அதிகாரிகளோ புத்திமான்களாகவோ, திறமை சாலிகளாகவோ இருக்கவில்லை; சுயநலம மிகுந்தோ ராகவே விளங்கி வந்தனர். அதனால் நவாபுக்கு அக் கப்பத்தொகை சரிவரச் சேர்வது கிடையாது.

நவாபின் படைகள் சென்று, பாளையக்காரருடன் போர் புரிந்து, கப்பத்தை வசூலிக்க நேரும். அப்போதும் தொகை பூராவும் வசூல் ஆதல் அரிதாம். அதுபற்றி அக் கப்ப வசூல் உரிமையை ஒரு தனி நபரிடம் நவாப் ஒப்

படைக்க நேர்ந்தது. அந் நபரும் படைகளின் உதவியை நாட நேரும். இந்த ஏற்பாடும் இனிது நடைபெறவில்லை.

மதுரையிலே நாயக்கரின் அரசு நிலைநின்ற காலத்தில், அக் கப்ப வசூல் அம்மன்னவருக்கு ஒரு கஷ்டமாக இருந்ததில்லை. ஏனெனில் நாயக்க மன்னவர் அப் பாளையக்காரரை அன்புடன் நடத்தி ஏற்ற மரியாதையும் காட்டி இனிது நடத்தி வந்தனர். பிறருக்கு உட்பட்டிருக்கிறோம் என்னும் உணர்ச்சியும் பாளையக்காரரிடம் அப்போது தோன்றவில்லை. ஆர்க்காட்டு நவாபுக்கு உட்பட்ட உடனே பாளையக்காரரின் நிலைமை முற்றிலும் மாறலாயிற்று.

நவாபின் போக்கினைக் கண்டதும், பாளையக்காரரின் மனம் பதைத்தது. அன்னிய நவாபுக்கு அடங்கி வாழ்வதா என்றும் அவர்களின் மனம் குமுறியது. கப்ப வசூலில் நியதியும் நேர்மையும் இல்லாமை கண்டும், அவர்களின் மனத்தில் சுதந்திர உணர்ச்சி உதித்தது. சுயநலமும் கூடிக் கொண்டதெனல் வேண்டும்.

இந்நிலையில், ஹைதர் அலி என்பான் தனது படைகளுடன் திண்டுக்கல் வரையில் வந்து அட்டகாசம் செய்தான். நவாபையும் கும்பினியாரையும் அகற்றிவிட வேண்டும் என்பதே அவன் கருத்தாயிற்று. அதற்கு இணங்க, அவன் அப் பாளையக்காரரை ஒரு பக்கம் தூண்டி நின்றான். ஒரு பக்கம் அவர்களுக்கு அல்லல் இழைத்து வந்தான். வரவே, அவர்களின் மனம் எழுச்சி மிகக் கொண்டது.

திருநெல்வேலிச் சீமையின் தென் கீழ்க்கோடியிலே தூத்துக்குடி என்னும் துறைமுகம் ஒன்று இருக்கிறது. ஆதியில் அங்கே போர்த்துகல்காரர் ஆதிக்கம் கொண்டிருந்தனர். அப்பால் டச்சுக்காரர் தோன்றி அப்

போர்த்துகல்காரரை ஓட்டிவிட்டு, அந்நகரை வசம்செய்து கொண்டனர். அத்துறைமுக நகரும் அதனை அடுத்துள்ள சில பல இடங்களும் டச்சுக்காரரின் வசம் இருந்தன.

அந் நகரிலிருந்து டச்சுக்காரர் மிக்க வியாபாரம் நடத்தி வந்தனர். அங்கே நடைபெறும் முத்துக்குளி என்னும் தொழிலும் டச்சுக்காரருக்கு உட்பட்டதாம். தங்களது நலத்தை நாடி அயலேயுள்ள பாளையக்காரரிடம் அந்த டச்சுக்காரர் தொடர்பும் நட்பும் பூண்டிருந்தனர்.

திருநெல்வேலிச் சீமையிலே நவாபோ ஆங்கிலக் கும்பினியாரோ ஆதிக்கம் அடைவதில் டச்சுக்காரருக்கு விருப்பம் கிடையாது. ஆதலினால் சமயம் வாய்த்தபோ தெல்லாம் பாளையக்காரரை அவர்கள் கிளப்பிவிட்டனர். அத் திருநெல்வேலிச் சீமையின் பாளையக்காரரிலே பூலித் தேவர் என்னும் பெருவீரர் சுயேச்சையாக வாழ விருப்பம் உள்ளவராயிருந்தார்.

அதனால் நவாபுக்கும் ஆங்கிலக் கும்பினிக்கும் அவர் அடங்கவில்லை; ஆர்ப்பரித்து எழுந்தார். அவருடன் நவாபின் படைகள் பல சண்டைகள் போட்டன. கும்பி னியின் படையும் துணையாக நின்றது. ஆனாலும் பூலித் தேவரை வெற்றிகொள்ள முடியவில்லை. பாளையக்கார ரிலே பலர் அவருக்கு உடந்தையாக இருந்து வந்தனர். வரவே அவரிடமிருந்தோ பிற பாளையக்காரரிடமிருந்தோ கப்பத்தொகை எங்ஙனம் வசூல் ஆகும்?

இரண்டொரு பாளையக்காரர் தமது கப்பத் தொகையை அவ்வப்போது நவாபுக்குச் செலுத்துவது உண்டு; கடன் கொடுத்து உதவவும் தவறார். ஆனாலும் நவாபின் செலவுக்கோ ஏராளமான பணம் வேண்டி யிருந்தது. கப்பமோ வசூலாவதில்லை. அது சமயம்

பார்த்தே கும்பினியார் அந் நவாபுக்கு ஏராளமாகக் கடன் கொடுத்து உதவி வந்தனர். கடனுடன் வட்டியும் சேர்ந்து கொண்டது. கும்பினியோ கடனைத் திரும்பக் கொடு என்று வற்புறுத்திற்று. இந்நிலையில்தான், தமிழகத்தின் வரிவசூல் உரிமையை அந் நவாப் ஆங்கிலக் கும்பினியாரிடம் ஒப்படைத்தான்.

கும்பினியாரும் தங்களது அதிகாரிகளை அனுப்பி, அப்பாளையக்காரரிடமிருந்து திறைப் பணம் சேகரிக்க முயன்றனர். அன்னிய நவாபை அடுத்து, அன்னிய கும்பினியார் வந்துளரே என்று பாளையகாரருக்கு பதைப்பும் உதைப்பும் ஒருங்கே உண்டாயின. அவர்களில் பலரும் திறை செலுத்த மறுத்தனர். மறுக்கவே, கும்பினியாரும் ஒரு படை வகுப்பை அனுப்பிப் பகுதிப் பணம் தேட நேர்ந்தது. அதனால் கும்பினிக்கும் பாளையக் காரருக்கும் இடையே மனக் கசப்பு உதித்தது. பூசலும் புகுந்தது.

அப்போது, சிவகிரி பாளையக்காரனின் மைந்தன் தனது தந்தைக்கு விரோதமாக எழுந்து ஒரு படையும் திரட்டினன். அவன் பக்கத்தில் நியாயம் உண்டு என்று பாஞ்சாலங் குறிச்சியின் பாளையக்காரனை கட்டபொம்மு என்பான் உணர்ந்து கொண்டான்; உடனே அம்மைந்த னுக்கு உற்றதுணையும் புரிந்தான்; அம்மைந்தன் பாளை யத் தலைமை அடைதல் கண்டு, கும்பினியார் ஆத்திரம் கொண்டனர்.

கொள்ளவே, அத் தந்தைக்கு உரிய உதவியெல்லாம் கும்பினியார் செய்யலாயினர்; முடிவில் பதவியிலே அத் தந்தையை நிலைநிறுத்தி விட்டனர். இந் நிகழ்ச்சி குறித்து ஆங்கிலக் கும்பினியார்க்கும் கட்டபொம்மு வுக்கும் கடும் பகை மூண்டது. ஒருவரை ஒருவர் வீழ்த்த

முயற்சிகள் நடந்தன. கும்பினிக்குச் சொந்தமான கிராமங்களில் புகுந்து, கட்டபொம்மு கொள்ளை கொண்டான். உடனே கும்பினிப் படைகள் அவனது பாளையத்தைத் தாக்க எழுந்தன.

பாஞ்சாலங் குறிச்சி என்பது திருநெல்வேலி ஜில்லாவிலே கோயில்பட்டித் தாலுக்காவிலே ஒட்டப்பிடாரம் என்னும் ஊருக்கு வடக்கே விளங்கி நின்ற ஒரு நகராம். அந்த நகரைச் சுற்றி ஒரு கோட்டையுண்டு. அக் கோட்டை மண்ணால் ஆனது. அது ஐந்நூறு அடி நீளமும் முன்னூறு அடி அகலமும் வாய்ந்தது. அதன் உயரம் பன்னிரண்டு அடியாம். அடிப்பாகத்திலே மதில் சுவர் 15 அடி கனம் கொண்டது. உச்சியிலோ மூன்றே அடியாம்.

மதில் சுவர் இரட்டையாக அமைந்து அதன் நடுவிலே கம்பு, உமி, வரகு, வைக்கோல் முதலியன திணித்திருக்கும். எனவே, மதில் சுவரை இலகுவில் உடைத்தல் இயலாது. மதிலின் வெளிப்புறம் ஒரே செங்குத்தாக இருக்கும். உட்புறம் அதிகச் சரிவு உண்டு. போர் மூளும் காலத்திலே உள்ளிருப்போர் அச்சரிவின் உதவியினால் மதிலின் உச்சியில் ஏறமுடியும். கோட்டையிலே நான்கு மூலைகளிலும் கொத்தளங்கள் உண்டு. நடுவிலே அலங்கங்களும் இருந்தன.

அலங்கம் கிளிக்கூட்டு அலங்கம: சிறு சிறு துவாரங்கள் உடையது; உள்ளே இருப்பவர்கள் வெளியே பார்க்கவும், யுத்தகாலத்தில் துப்பாக்கியை நீட்டிச் சுடவும் அத்துவாரங்கள் பயன்படும். வெளியே இருப்போர் உள்ளே இருப்போரைக் காண முடியாது. மதிலின் உச்சியிலே வீரர் நடமாடும் வண்ணம், சுற்றிலும் சிறு பாதை உண்டு. கைப்பிடிச் சுவரும் இருந்தது.

கோட்டையைச் சுற்றி அகழி கிடையாது. ஆனாலும் நெடுக இலந்தை முள்வேலி இருந்தது. அந்த வெளிக் கோட்டையை அடுத்து உள்ளே சிறிய கோட்டை ஒன்றும் உண்டு. கோட்டைக்குள்ளே பாளையக்காரரும், அவரது குடும்பத்தாரும், அமைச்சரும், பிறரும் தங்கி இருக்க அழகிய மாடமாளிகைகள் இருந்தன. கோட்டையின் நடுவே குலதெய்வமான சக்கம்ம தேவியின்—ஜெகதம்பிகையின் ஆலயம் உண்டு.

இத்தகைய கோட்டையையே கும்பினிப் படைகள் எதிர்த்தன. பார்வைக்கு அந்தமாக இல்லாவிடினும், கோட்டையோ மிக்க வன்மை பொருந்தியது. மண்ணாலாகிய அக்கோட்டையை இடிப்பதற்கு ஏற்ற கருவிகளையும் அப்படைகள் கொண்டு சென்றன. குண்டுமேல் குண்டு பொழிந்தும் அக்கோட்டை சிறிதும் அசையவில்லை.

கோட்டைக்கு உள்ளே இருந்த வீரரோ துப்பாக்கி கொண்டு சுட்டனர்: கவண் கல் கொண்டு வீசினர். குண்டும் கல்லும் பட்டு கும்பினிப் படைகள் குப்புற வீழ்ந்தன; பலர் உயிரிழந்தனர். ஆழம் தெரியாமல் காலிட்டுக் கொண்டேனே என்று ஆங்கில தளகர்த்தன் அலறினான். பின்வாங்கி ஓடலாம் என்றாலோ, வெட்கம் வந்து தடுத்து நின்றது.

அப்போது திண்டுக்கல் வரையில் வந்திருந்த ஹைதர் அலி என்பான் மதுரையின் மீதும் மண்டிப் பாய்வானோ, என்று கும்பினியார் அஞ்சினர்; அஞ்சவே, உடனே திரும்பிவந்து விடுமாறு அத் தளகர்த்தனுக்கு ஆணையிட்டனர். தெய்வம் நம்மைக் காத்தது என்று கூறியவண்ணம் அத்தளகர்த்தன் பின்வாங்கிச் சென்றான்.

முன்னம் பூலித்தேவரிடமும் இப்போது கட்ட பொம்முவிடமும் தோல்வி கொள்ளவே, கும்பினியாரின் மதிப்புக் குறைந்து வந்தது. அவர்களது மண்ணாசையும் பண ஆசையும் கண்டு, மக்களுக்கு வெறுப்பு மிகுந்தது. கும்பினியின் தொல்லை எப்போது தொலையும் என்று பேசாதார் கிடையாது.

பாளையக்காரரிலே பலரும் தம்மனத்தூடே கும்பினி மீது வைரம் மிகுந்து நின்றனர் என்றாலும் எல்லாரு மாகச் சேர்ந்து, கும்பினியை எதிர்க்கத் துணிவு கொள்ள வில்லை. கட்டபொம்முவைப்போல் கட்டாண்மை நிரம் பிய சிலரே சீறி எழுந்தனர் போருக்கு. சிறுசிறு சண்டைகள் நடந்தாலும் சேதம் அதிகமாயிற்று. கொந் தளிப்பும் கொதிப்பும் நிரம்பிவந்தன.

அது காரணமாக, நம் தமிழகத்திலே பல கிராமங் களில் வேளாண்மை குன்றியது. வர்த்தகம் குறைந்தது. சிலசில இடங்களிலே பஞ்சமும் தலைகாட்டியது. நிம்மதி என்பது இன்றி மக்களிலே பலரும் மனம் புகைந்து நின்றனர். இத்தகைய குழப்பங்கள் ஐம்பது வருஷ காலம் நீடித்திருந்தது. இதனை, பாளையக்காரரின் பெரும் போர் என்று சரித்திர ஆசிரியர் சாற்றுவர்.

ஒவ்வொரு பாளையக்காரருக்கும் கோட்டை கொத் தளங்கள் உண்டு. ஒரு படை வகுப்பும் இருந்தது. ஆயுதங்களுக்கும் ஒரு குறைவில்லை. பாளையக்காரரை மடக்குவது என்றால், அவர்களின் கோட்டை கொத்த ளங்களை இடித்து, அவர்தம் படைகளையும் அழித்தாக வேண்டும். அங்ஙனம் செய்தாலன்றி தமது ஆட்சி தமிழகத்தில் நிலைக்காதென்று கும்பினியார் கண்டு கொண்டனர்.

இதற்கு இடையில் ஆர்க்காட்டு நவாப் இத் தமிழகத்தின் அரசியலையும், வரிவசூலையும் தானே ஏற்றுக் கொண்டான். அவனைத் தட்டிப்பேச கும்பினிக்குத் துணிவு இல்லை. ஆனாலும் ஆசையோ அவர்களை விடவில்லை. முதலிலே அவனிடம் இதமாகப்பேசிப் பார்த்தனர். அவன் மசியவில்லை. முடிவிலே அவர்கள் தமிழகத்தின் அரசியலில் ஆதிக்கம் கொள்ள முடிவு கட்டினர். வரிவசூலில் ஒரு பாகம் அவனுக்குத் தருவதாகவும், எஞ்சியதைக் கடனுக்கு ஈடு செய்துகொள்வதாகவும் இசைத்தனர்.

அவ்விதம் கும்பினியார் கருமம்புரியத் தொடங்கவே, தமிழ் மக்களிலே சிலர் திடுக்கிட்டனர்; சிலர் உணர்ச்சியிருந்தனர்; சிலர் நமக்கென்ன என்றிருந்தனர். பாஞ்சாலங்குறிச்சி மக்களோ பரபரப்பு எய்தினர். கட்டபொம்மு என்பான் கச்சைகட்டலானான்.

11. வீரபாண்டியன்

பாஞ்சாலங்குறிச்சிப் பாளையத்தின் தலைவர் அனைவருக்கும் பரம்பரையாக கட்டபொம்மு என்னும் பட்டப் பெயர் உண்டு. வீரபாண்டியன் என்பான் 1790-ம் வருடம் அப்பாளையத்தின் அரசன் ஆயினன். அதன் மீது முன்னதாகவே மூண்ட போரை மதித்து, உடனே வரிப்பணம் கட்டியாகவேண்டும் என்று கும்பினியார் கேட்டனர்.

நவாபுக்கு அப்பாளையம் கப்பம் கட்டியதே கிடையாது. தவிர, நவாபுடன் வீரபாண்டியன் தோழமை பூண்டு, சின்ன நவாபு என்னும் விருது பெற்றிருந்தான். அன்றியும், அன்னியருக்கு வரி செலுத்திக் கைகட்டி வாழ

வீரபாண்டியன்

அவன் விரும்பவில்லை. மேலும், கும்பினியை அடியோடு தொலைத்துவிடவேண்டும் என்பதே அவன் நினைவாம்.

இந்நிலையில் வீரபாண்டியன் கூறியதாக வழங்கும், நாட்டுப் பாடல்களில் சிலவற்றை இங்கே தருவோம்:—

வானம் பொழியுது, பூமி விளையுது
கும்பினிக்கு ஏது தீர்வைப்பணம்?
தானம் தெரியாமல் வந்து தலையிட்டால்
மானம் அழிந்து மடிந்திடுவீர்! 1

வங்காளம், டில்லி, வடகாசி எங்குமே
மங்காமலே திறை கொண்டாலும்,
இங்கு ஆளும் சிங்கம் ஒன்று உண்டுஎன எண்ணாமல்
ஏறிவரீரோ இடருகும்! 2

நாட்டில் சுதந்திரம் இல்லை என்றால் அது
கோட்டித்தனமான வாழ்க்கை அன்றோ?
வீட்டில் சுதந்திரம் இல்லாமல் வந்த நீர்
வேறே சுதந்திரம் வேண்டுகிறீர்! 3

கண்ணை இமைகாக்கும் காரியம் போலவே
மண்ணைநான் மன்னவன் காத்துவாரேன்
பெண்ணை இடைகேட்கும் பெயரைப் போலவே
பேராசைகொண்டு பிதற்றுகிறீர்! 4

வீரபாண்டியன் சிங்கநாதம் செய்து கிளம்பி, நாட்டு மக்களைத் தட்டி எழுப்பினான்; கும்பினியின் ஆட்சியினால் நேர்ந்த கொடுமைகளையெல்லாம் எடுத்துரைத்தான்; தேசத்தொழில்களையெல்லாம் அவர்கள் அழித்து விட்டதையும் விளங்க உரைத்தான்.

"நாம் குடிக்கும் புட்டிப்பால், உடுக்கும் மல்லாடை, எரிக்கும் விளக்கு, எழுதும் பேனா, ஏறும் வண்டி, படுக்கும் கட்டில், அணியும் கடிகாரம், தைக்கும் ஊசி, ஆடும் பந்து முதலியன பெற அவர்களிடம் நாம்கையேந்தி நிற்பதோ?" என்றும் அவன் சுட்டிச் சொன்னான். பலரும் அது கேட்டு அப்பாண்டியனுக்குத் துணையாக எழுந்தனர்.

கட்டபொம்முவும் கும்பினியாரும் ஒரு பத்து வருட காலம் போராட நேர்ந்தது. பல தடவைகளில் கும்பினிப் படைகள் குலைந்து ஓடின. பாஞ்சாலங்குறிச்சிக்கு அருகே யுள்ள எட்டையபுரம் பாளையக்காரனும் இன்னும் சிலரும் கும்பினிக்கு உதவியெல்லாம் புரிந்து வந்தனர்.

ஒரு சமயம் பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டை சில இடங்களில் தகர்ந்தது. வீரபாண்டியனது பக்கத்தி லும் பல வீரர் உயிரிழந்தனர். அந்நிலையில் வெளியே சென்று பக்கபலம் திரட்ட அப்பாண்டியன் ஒரு நாளிரவு கோட்டையைவிட்டு வெளிப்பட்டான். தம்பியர் இருவ ரும் வேறு நால்வரும் அவனுடன் சென்றனர்.

ஒருவரும் அறியாமல் கட்டபொம்மு கோட்டையை விட்டு வெளியேறியதை, அக்கும்பினியார் உணர்ந்து கொண்டனர். அவனைப்பிடிக்க நாற்புறமும் ஒற்றரையும் வீரரையும் ஏவினர். பிடித்துத் தருவோருக்குப் பத் தாயிரம் பூவராகன் பரிசு கிடைக்கும் என்றும் பறை சாற்றினர்.

எட்டையபுரத்தான் அம்முயற்சியில் புகுந்தான். அடுத்த பாளையம் அழிவதில் இவனுக்கு ஆவல் மிகுதி. தலைமீது ஆபத்து என்றறிந்தும், வீரபாண்டியன் தளர வில்லை. பழந்தோழனை புதுக்கோட்டைத் தொண்டை மானை நாடி அவன் செல்லலானான்.

பாண்டியனையும் துணைவரையும் தொண்டைமான் அன்புடன் வரவேற்று, ஆறு நாட்கள் தனது மாளிகையி லேயே வைத்து உபசரித்தான். ஏழாம் நாள் புதுக் கோட்டையான் மூலம் கும்பினியார் உளவறிந்தனர்; உடனே ஒரு படை வகுப்பை அனுப்பி அப்பாண்டியனைச் சிறைசெய்து கயத்தாற்றுக்கு ஒரு பல்லக்கிலே இட்டுச் சென்றனர்.

வஞ்சனையாக வீரபாண்டியன் பிடிபட்டது ஒன்று, மைசூரிலே கும்பினியார் வெற்றி கொள்வது இரண்டு, இவைகேட்டதும், பாளையக்காரரிலே பலருக்கும் கும்பினியைக்கண்டு அச்சம் உதித்துவிட்டது. கும்பினியார் அதனை அறிந்து, திருநெல்வேலிச் சீமையின் பாளையக்காரர் பலரையும் கயத்தாற்றுக்கு வருவித்தனர். அவர்களின் முன்னிலையில், வீரபாண்டியனை நிறுத்தி, விசாரணை நடத்தி, தூக்குத் தண்டனை விதித்தனர்.

அது கேட்டதும், வீரபாண்டியன் சிறிதும் கலங்கவில்லை. ஆண்சிங்கம் போல் அனைவரையும் வெறித்து நோக்கினான். நீங்களும் ஆண்மக்களா? என்பதே அந் நோக்கின் பொருளாம். நகருக்கு அப்பால் உள்ள கட்டைப் புளியமரத்தில் தூக்குப் போடுவதாக ஏற்பாடு ஆயிற்று.

வீரபாண்டியக் கட்டபொம்மு மனச்சோர்வு சிறிதும் இன்றி, மத்தகஜமேபோல் அந்த இடத்துக்கு நடந்து சென்றான்; தூக்குமேடையின் மீது தாவி ஏறினான். ஆவி போவதைப்பற்றி அவன் அஞ்சவில்லை. போர்முனையில் பொன்றவில்லையே என்று மிகவும் மாழ்கினான்.

அச்சமயம், அவனது முகவிலாசத்தைக் கண்டு, ஆங்கிலேயர் அனைவரும் ஆச்சர்யம் மிகுந்தனர்; இவனே சுத்தவீரன் என்று மனத்தூடே மெச்சினர். பல சொல்லி என்ன. கட்டைப்புளியமரம் இப்போது அங்கே இல்லை. ஆயினும் அந்த இடம் எல்லாருக்கும் தெரியும். அவ்வழியே செல்வோர் அனைவரும் அந்த இடத்தை நெருங்கியதும், கையெடுத்துக் கும்பிடுவர்; அவ்வீர சிங்கத்தையும் வாழ்த்துவர்.

கட்டபொம்முவை அங்ஙனம் வீழ்த்தியதும், அச் சீமையிலுள்ள பாளையம் பாளையமாக ஆங்கிலப்படைகள் சென்றன; அங்கங்கேயிருந்த கோட்டை கொத்தளங்களை எல்லாம் தரைமட்டம் ஆக்கின; பாளையக்காரரின் படைகளையெல்லாம் கலைத்தன; அவர்களின் ஆயுதங்கள் அனைத்தையும் ஒன்று விடாமல் பறித்தன.

பாஞ்சாலங்குறிச்சியின் கோட்டையும் அவ்விதமே மண்ணோடு மண் ஆயிற்று. வீரபாண்டியனுக்கு உதவி புரிந்தோரில் சிலர், தூக்கில் இடப்பட்டனர். சிலர் தீவாந்தர சிட்சைக்கு ஆளாயினர். கட்டபொம்முவுடன் சிறையான இருதம்பியரும், பிறரும் பாளையங்கோட்டைச் சிறையிலேயே பலநாள் அடைபட்டுக்கிடக்க நேர்ந்தது.

அத்தம்பியாரில் ஊமைத்துரை என்பான் உயர்வீரன். அவனையும் பிறரையும் மீட்க ஒருநாள் அப்பாளையத்தார் எழுந்தனர்; உடனே கோட்டைக்கதவுகள் பிளவுண்டன. சிறை கிடந்தோர் அனைவரும் வீரகர்ச்சனை புரிந்து வெளிப்பட்டனர். அவர்களை எதிர்க்க வந்த கும்பினிப் படை குப்புற வீழ்ந்தது.

ஊமைத்துரை தனது துணைவருடன் பாஞ்சாலங் குறிச்சி போய்ச்சேர்ந்தான். அவனது வருகை கேட்டு, அப்பக்கத்தில் உள்ளார் அனைவரும் திரண்டு வந்தனர். ஓர் இரண்டு நாட்களில் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டை புதிதாக எழும்பியது. போருக்கு உரிய தளவாடங்கள் எல்லாம் சேர்ந்தன. இந்த அதிசயம் கேட்டு, ஆங்கிலேயர் அறிவு இழந்தனர்.

ஆனாலும், கும்பினிப்படைகள், திரண்டு வந்து அக்கோட்டையைத் தாக்கின. நெடுநாள் கொடுமையான சண்டை நடந்தது. இருபக்கத்திலும் எண்ணிறந்தோர் இறந்துபோயினர். முடிவில் கோட்டையும் அழிந்தது.

எஞ்சிய வீரருடன் ஊமைத்துரை வெளியேறினன். கும்பினியாரைப் பழிவாங்க அவன் தவறவில்லை.

மக்களிலே பலரும் அவன் பக்கம் இருந்தனர். சிவ கங்கையின் பாளையக்காரரான மருது சோதரர் என்போர் பேராதரவு புரிந்தனர். கண்ட கண்ட இடங்களிலே ஆங்கிலேயரை அவர்கள் வெட்டிச் சாய்த்து வந்தனர். அதுகண்டு கும்பினியாருக்கு ஒரே நடுக்கம் எடுத்தது. இலங்கையிலிருந்தும் ஒரு படை தருவித்தனர்.

"இங்கு இருப்பான், அங்கு இருப்பான், எங்கும் இருப்பான்" என்பதுபோல் ஊமைத்துரை எங்கும் தோன்றி, அக்கும்பினியாரை எதிர்த்து அடித்து வந்தான். வஞ்சகத்தின் விளைவாக மருது சோதரரும் தூக்கிலே மாள நேர்ந்தது. அது கண்டு, மனம் உடைந்து மருகி னன் ஊமைத்துரை. ஆயினும் அவன் நடத்திய போரைக்கண்டு அஞ்சாநெஞ்சன், அசகாய சூரன் என்று கும்பெனியார் அவனைப் புகழ்ந்தனர்.

அவனைப்பிடிக்க ஆங்கிலேயரால் ஆகவில்லை. துரோ கம் தலைதூக்கி நிற்பதைக்கண்டு, அவன் சினந்து சின்னா ளில் கும்பினி கவிழும் என்று சாப உரை பகர்ந்து மலைச் சாரல் புகுந்து, தபயோகி ஆகிவிட்டான். பின்பே, கும்பினியாரை அச்சப்பேய் விட்டகன்றது. அகலவே அவர்கள் மனத்துணிவுகொண்டு பாஞ்சாலங்குறிச்சியை நோக்கிப் போயினர்.

வஞ்சினம் தீர்த்துக்கொள்ளவேண்டி பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை அவர்கள் இடித்துத் தள்ளினர்; அதன் அஸ்திவாரத்தைப் பெயர்த்து எறிந்தனர்; நகரைத் தரைமட்டம் ஆக்கினர்; வீடுகளையும் வாசல்களையும் மண்ணோடு மண் ஆக்கினர்; பூமியைக் கொத்திக் கிளறி

கழுதையைக் கட்டி உழுதனர்; உப்பை எங்கும் வாரி இறைத்தனர். காட்டாமணக்கு விதைகளையும் தூவினர்.

அந்த இடம் பூண்டற்றுப் போகவேண்டும் என்பதே அவர்களின் விருப்பம். ஆதிநாளில் காவிரிப்பூம்பட்டினத்தை அலைகடல் விழுங்கியது என்றால், பாஞ்சாலங் குறிச்சியையோ கும்பினியர் விழுங்கிவிட்டனர். வாள் வரிசையும், தோள்வரிசையும் காட்டிய வீரரின் ஊமை அவ்விதம் அழித்த பின்பே கும்பினியாரின் வைரம் தணிந்தது.

பின்பு, அக்கும்பினியாரோ ஊமைத்துரைக்கு உதவி புரிந்த பெருமக்கள், பாளையக்காரர் இவர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்தனர்; அவர்களை ஆங்காங்கே மரத்திலே தூக்கிட்டுத் தொலைத்தனர். சிலரைச் சிறைக்குள் தள்ளினர்; பலரை நாடு கடத்தினர். அவ்விதமெல்லாம் அட்டகாசம் செய்து மக்களின் மனத்திலே திகிலை ஊட்டினர்.

ஆனாலும் வீரமக்களிடம் மூண்டெழுந்த மனக் கொதிப்பு மறைந்து விடவில்லை; சுதந்திர உணர்ச்சியும் சாய்ந்து விடவில்லை; நீறு பூத்த நெருப்பே போல் அவ்விரண்டும் மக்களின் மனத்தகத்தே மறைந்து கிடந்தன. வீரபாண்டியன், ஊமைத்துரை போன்ற உயர் வீரர் தோன்றுவதை நாட்டு மக்கள் எதிர் பார்த்திருந்தனர்

12. வேலூரில் பூசல்

தமிழகத்தின் பாளையக்காரருடன் ஆங்கிலக் கும்பினியார் 1750-ம் ஆண்டுமுதல், பெரும் போர் நடத்தி வந்தனர். இதற்கு இடையிலே ஆர்க்காட்டு நவாப் முகம்மதலி என்பான் காலகதி ஆயினன். அவன் மூத்தமைந்தன் உடனே பட்டத்துக்கு வந்தனன்.

திப்புசுல்தானுடன் சண்டை நடக்கையில், ஸ்ரீரங்கப் பட்டணம் கும்பினியின் வசமாயிற்று. அப்போது திப்புவுக்கும் நவாபுக்கும் கடிதப் போக்குவரவு நடந்ததாக அக்கும்பினியார் கண்டுகொண்டனர். திப்புவுக்கு உடந்தையாக நவாப் இருந்தமை அறிந்து, தமிழகத்தின் அரசியலை அக்கும்பினியார் மேற்கொண்டனர்.

புதிய நவாபோ பெயரளவில் நவாபாக இருந்து, தன் செலவுக்கு வேண்டுமளவு கும்பினியிடம் பணம்பெற்று வாழ்ந்துவரலானான். தஞ்சைச் சீமையின் வேந்தன் சந்ததி இல்லாமல் போகவே, அந்த அரசையும் கும்பினியார் எடுத்துகொண்டு அரசவம்சத்தாரின் வாழ்வுக்குரிய பணத்தைக் கொடுத்துவந்தனர்.

நெடுங்காலம் சண்டை போட்டபின் திப்புசுல்தானும் போர் முனையில் மாள, அவனது அரசின் பெரும்பாகம் கும்பினியின் கைக்குள் அடங்கியது. எனவே கோதாவரி நதிக்குத் தெற்கே குமரிமுனை வரையிலும் உள்ள பிரதேசங்கள் எல்லாம் கும்பினியின் ஆளுகைக்கு உட்பட்டு விட்டன. தென் இந்தியா முழுவதிலுமே கும்பினியார் தங்குதடையின்றி ஆட்சி நடத்தலாயினர் என்று சொல்ல வேண்டும்.

பாளையப் போரிலே கும்பினியார் இழைத்த கொடுமைகளும் கொலைகளும் மக்களின் மனத்திலே வேரூன்றிக் கிடந்தன. பல்லிழந்த பாம்புபோல் பாளையக்காரர் வலியழிந்து கிடந்தும் என்ன? மகா ஜனங்களோ கனகடுப்பும் வெகு துடிப்பும் கொண்டு குமுறி நின்றனர்.

திப்புசுல்தான் வீரசுவர்க்கம் புகுந்த பின்னர், அவன் மைந்தரையும் சுற்றத்தாரையும் கும்பினியார் சிறை செய்து வேலூர்க் கோட்டையிலே காவலில் வைத்திருந்தனர். அங்கே காவல் புரிய ஐந்நூறு ஐரோப்பியரும்

ஆயிரத்து ஐந்நூறு இந்தியரும் இருந்துவந்தனர். இந்திய வீரரில் பலரும் முன்னம் திப்புசுல்தானிடமும் தஞ்சை வேந்தனிடமும் போர்ச் சேவகம் பார்த்தவர்கள். வேறு வகையில்லாது போனதனுல் கும்பினியின் சேவகத்தில் அமர்ந்திருந்தனர். ஆனுலும், தேசப்பற்றும் உயர் மானமும் அவ்வீரரைவிட்டு அகலவில்லை.

சுதேச அரசர்கள் ஒன்று ஒன்றாக மறைந்து வருதல் கண்டு, அவர்களில் மனம் புழுங்கி நின்றது. எரிகிற நெருப்பில் நெய்யை ஊற்றுவதுபோல், அவ்வீரர்க்குச் சில உத்தரவுகள் பிறந்தன. வீரரிலே முகம்மதியராவோர் நீண்ட தாடி கொள்ளக்கூடாது, ஹிந்துக்களோ நீண்ட மீசை வளர்த்தல் ஆகாது. பட்டாள மைதானத்திலே அணிவகுப்புக் காலத்தில் மதச்சின்னமோ, நெற்றியில் திலகமோ அவ்வீரர் தரித்தல் ஒண்ணுது.

மேலும், அன்றுவரை வீரர் அனைவரும் தலைப்பாகை தரித்து வந்திருக்க, இனிமேல் தொப்பி தரிக்கவேண்டும் என்றும் ஓர் ஆணை பிறந்தது. அவ்வீரரின் ஆங்கில தளபதிகளில் சிலர் ஏசு மத போதத்தை வெகு தந்திர மாகப் பரப்பிவந்தனர். ஆர்க்காட்டு நவாபின் அழிவு அவர்களின் கண் முன்னே நின்றது. திப்புவின் குமாரரை நோக்கநோக்க அவர்களினடயே ஆத்திரமும் பொங் கிற்று.

சொந்தநாடு பறி போகையிலும், சுதந்திரம் காற்றில் பறக்கையிலும், கும்பினியிடம் கைகட்டி வாழ்வதோ என்று நவாபின் மரபினரும், திப்புவின் உறவினரும் அவ்வீரரைத் தூண்டிவந்தனர். உணர்ச்சியைக் குத்திக் கிளப்புகையில் யாவரே வாளா இருக்க இயலும்! கையிலோ ஆயுதம் இருக்கிறது, கருத்திலோ உணர்ச்சி ததும்புகிறது.

இங்ஙனையிலே ஆயிரத்து எண்ணூற்று ஆறும் ஆண்டு அவ்வீரச் சிப்பாய்கள் கிளம்பினர் கொந்தளிப்புடன். கோட்டைக்குள்ளே குலவிநின்ற ஆங்கில வீரரோ அச் சிப்பாய்களைத் தாக்க தோள் தட்டி எழுந்தனர். அவ்வள வில் வேலூர்க்கோட்டை ஒரே இரணகளம் ஆயிற்று. ஆங்கிலேயரிலே பலரும் வாள் வீச்சுக்கோ, துப்பாக்கி வேட்டுக்கோ இரையாகிவிட்டனர்.

அக்கோட்டையின்மீது கம்பீரமாகப் பறந்து நின்ற கும்பினியின் கொடி மாயமாக மறைந்து போயிற்று. அந்த இடத்தில் மைசூர் அரசின் கொடி அந்தரமளாவத் துலங்கியது. கோட்டைக்கு உட்புறத்திலும் வெளிப்புறத் திலும் விளங்கிய கும்பினியின் தளங்கள் எல்லாம் தவிடு பொடியாயின. ஆர்க்காட்டு நவாபின் சுற்றத்தாரும் வேலூர் நகர மாந்தரும் அச்சிப்பாய்களுக்கு உற்ற துணை யாகி, உதவியெல்லாம் புரிந்தனர். அவ்வேலூர் நகரம் கும்பினியின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டது.

வேலூருக்கு அருகே சுமார் பத்து மைல் தூரத்தி லுள்ள ஆர்க்காடு என்னும் நகரில் காவல் புரிந்து நின்ற ஆங்கில தளபதிக்கு அச் செய்தி எட்டிற்று. உடனே அத் தளபதி ஆங்கிலப் பட்டாளத்துடன் இந்தியப் பட்டாளத் தையும் கடத்திக்கொண்டு, வேலூருக்கு விரைந்தான். விரைந்து வந்தவன் அக் கோட்டையை மீட்க அருஞ்சமர் செய்ய நேர்ந்தது.

அப்போது இரண்டு பக்கத்திலும் எண்ணிறந்தோர் உயிர் இழந்தனர். கோட்டைக்குள்ளே இருந்த இந்திய வீரர் தமது உயிரை ஒரு பொருட்படுத்தாமல் உறுத்து நின்றனர். ஆனாலும் சிப்பாய்களில் சிலரோ சுயநலம் மிகுந்து கும்பினியின் உளவாளராக ஆகிவிட்டனர். ஆகி

விடவே, வெளியே இருந்த ஆங்கில தளபதி இலகுவில் உள்ளே புகுந்துவிட்டான்.

நவாபின் மரபினரும் நகர மக்களும் திரண்டு வந்தும் ஆயுதம் இன்றி யாது செய்ய முடியும்? வாங்கும் சம்பளம் ஏற்கவேண்டும் என்று எண்ணி, ஆர்க்காட்டிலிருந்து வந்த சிப்பாய்களோ கும்பினியின் தாசர்களாகவே துலங்கினர். பக்க பலம் கிட்டாது போகவே, கோட்டைக்குள் உயிருடன் எஞ்சியிருந்த சிப்பாய்கள் கடைசி வரையில் கறுவுமிருந்து சண்டை போட்டனர். அக்கோரச்செயலை விரித்து உரைத்து என்ன பயன்?

தேசப்பற்றும், மதப்பற்றும் மிகுந்து நின்று போர் முறுக்கிய சிப்பாய்களில் சிலர் பீரங்கிக்கு இரையாயினர். சிலர் தூக்கு மேடையில் தொங்கினர். சிலர் நீண்ட காலச் சிறைவாசத்துக்கு ஆளாயினர். அவர்களின் சொத்து சுதந்திரங்கள் எல்லாம் பறிமுதல் ஆயின. அங்ஙனம் மனம் கொண்டமட்டும் வஞ்சினம் தீர்த்துக் கொண்டனர் கும்பினியார்.

அக்கொடுமைகளின் விவரங்கேட்டதும் நாட்டு மக்களிலே சிலருக்கு மனம் உடைந்து போயிற்று. சிலருக்கோ இரத்தத்துடிப்பே எடுத்தது. இல்லாவிடத்துப்பசியும், செல்லாவிடத்துக் கோபமும் என்ன பயன் படும் என்று மக்களில் பலரும் காலம், இடம் கருதிவாளா இருந்தனர். மக்களின் மனநிலை கண்டதும் திப்புவின் மைந்தரை அக்கோட்டையில் வைத்திருக்க ஆங்கிலேயர் துணிவுகொள்ளவில்லை. ஆதலின் கல்கத்தாவுக்கு அம் மைந்தரை அனுப்பிவிட்டனர்.

தலையில் இடித்த பின்பு குனிந்து போவதேபோல், மத விஷயத்தில் தலையிடும் பட்டாளவிதிகளை உடனே கும்பினியார் மாற்றினர்; ஏசுமதப்பிரசாரம் நடை

பெறாது என்று வாக்களித்தனர்; சென்னை மாகாணத்தின் சேனைத் தலைவனையும் கவர்னரையும் வேலையைவிட்டு அகற்றினர்; சிப்பாய்களிடம் நேசமாக நடந்துவர வேண்டும் என்று தளபதிகளுக்கெல்லாம் ஆணை இட்டனர்; மக்களின் நலத்தையே கருதி, ஆட்சி நடந்துவரும் என்றும் அறிக்கை இட்டனர்.

இனிக்கப் பேசுவதில் கும்பினியார் மிகவல்லவர்கள். ஆனாலும், அவர்களது மண்ணாசையும், மமதையும் குறையாமல் நிறைந்தே நின்றன. அதுகண்டு, நாட்டுமக்களின் மனம் புழுங்கா நின்றது. விரைவில் தேசம் எங்கும் கொந்தளிப்பு மூண்டு கொதிப்பு மிஞ்சியது.

வேலூரில் கொந்தளிப்பு மூண்ட சமயத்தில் நிஜாம் ராஜ்யத்தில் இருந்துவந்த சிப்பாய்ச் சேனையும் சீறி எழுந்தது. ஆங்கிருந்த ஆங்கில தளபதி மிக்க அறிவாளியாதலின், அடிபிடியில் இறங்காமல் சாந்தம் உண்டுபண்ணுவதிலேயே சித்தம் வைத்தான். ஹைதராபாத் நிஜாம் என்பவனும் தனது நலத்தையே மதித்து, ஆங்கிலக் கும்பினிக்கு உரிய துணை யெல்லாம் புரிந்து வந்தான். அதனால் அங்கே கொந்தளிப்பு முற்றவில்லை; உயிர்க்கொலையும் அவ்வளவாக நேரவில்லை.

வேலூரிலே சிப்பாய்களுக்கு நேர்ந்த கதி இத்தேசமெங்கும் பரவிற்று. ஆங்காங்கிருந்த சிப்பாய்ப் பட்டாளங்கள் சீற்றம் மிகுந்து சிந்தை திரிந்தன. இதனை ஆங்கில அதிகாரிகள் ஊடுருவி நோக்கவில்லை. ஜெயம் உள்ளவரையில் பயம் இல்லை என்பதே அவர்களின் கோட்பாடு ஆயிற்று. ஆங்காங்கு இருந்த கவர்னர்களும் தங்களது ஆட்சியை வளர்ப்பதிலும், தேச வளத்தைச் சுரண்டுவதிலும் கண்ணாக இருந்தனர். 'கேடு வரும் பின்னே மதி கெட்டு வரும் முன்னே' என்பது மூதுரை அல்லவா?

13. வேலுத் தம்பியின் விருப்பு

தமிழகத்தின் ஒரு பாகம் சேர வளநாடு. அவ் வள நாட்டின் சிறந்த பாகம் திருவாங்கூர்ச் சீமை. அச் சீமையிலே இயற்கை வனப்பு வெகு நேர்த்தியாக இருக்கும் அங்கே காடும் மலையும் அதிகமாம். காடு படு பொருளும், மலை படு பொருளும் ஏராளமாகக் கிடைக்கும். சுக்கும் மிளகும், வாசனைத் திரவியமும், யானைத் தந்தமும் அங்குத் தான் மிகுதி. நெசவுத் தொழிலும் நிரம்ப உண்டு.

அச் சீமையின் தலைநகரம் திருவனந்தபுரம் எனப் படும். அந் நகரிலுள்ள அனந்த பத்மநாப சுவாமிக்கே அச்சீமை சொந்தமாம். அதன் அரசரோ பத்மநாப தாசர் எனப்படுவர் நாள்தோறும் அவ்வரசர் ஆலயம் சென்று, ஆண்டவனை வழிபட்டு, அக் கடவுளிடம் கணக்கு வழக்கு ஒப்புவித்தல் வழக்கம். அன்றுடம் ஆலயத்திலே அந்தணர் பலர் ஜெபதபம் செய்வர்; இதிகாச புராண பாராயணம் பண்ணுவர்; பூஜையும் ஆராதனையும் பயபக்தியுடன் நடைபெறும்.

ஆதியிலே மேனாட்டு வர்த்தகர் பலரும் இப் பாரத பூமிக்கு வந்ததற்கு அச் சீமையில் விளையும் மிளகும் சுக்குமே முக்கிய காரணமாம். ஆங்கிலக் கும்பினியாருக்கு அங்கே அஞ்சதேங்கோ என்னும் இடத்தில் பண்டகசாலை ஒன்று இருந்தது. அவர்களின் வர்த்தகத்துக்குரிய வேறு பல வசதிகளும் அச் சீமையின் வேந்தர் தேடிக் கொடுத்தனர். அதுபற்றி அவ்விருவருக்கும் நட்புரிமை உண்டாயிற்று.

அக் கும்பினியாரை இத் தேசத்திலிருந்து துரத்தி விடவே, மைசூர் திப்பு சுல்தான் முனைந்து நின்றான் அன்றோ? திருவாங்கூரிலே அவர்கள் சலுகை பல

பெறுதல் கண்டு அச் சுல்தானுக்குப் பிடிக்கவில்லை. அன்றியும் அச் சீமையின் வளங்கள் பலவும் அவனது மண்ணாசையை வளர்த்தன. நாளடைவில், அவன் தனது படையுடன் அச் சீமையின்மீது பாய்ந்து, பெருஞ்சேதம் விளைத்தான். சுயநலம் கருதிய கும்பினியார் அச் சீமை வேந்தனுக்குத் துணை புரிந்தனர். அதற்கு ஈடாக அவர்களுக்குப் பத்து இலட்சம் பூவராகன் கிட்டியது.

தோல்வி கொண்டு திப்புசுல்தான் திரும்பிச் சென்றாலும், மீண்டும் திருவாங்கூரின்மீது பாயவே காலங்கருதி இருந்தான். அது அறிந்து காவல் சேனை ஒன்று தருவதாகவும், ஆபத்து காலத்தில் உதவுவதாகவும் கும்பினியார் வாக்களித்தனர் அவ் வேந்தனுக்கு. அக் காவல் சேனையின் செலவுக்காக ஆண்டுதோறும் நான்கு இலட்சம் வெள்ளிக்காசு தருமாறு கும்பினியார் கேட்டனர். அதற்கு அவன் இசைந்தான்.

அவ்வாறு இருவருக்கும் ஓர் உடன்படிக்கை ஏற்பட்ட பின்னர், அச் சுல்தான் படைகொண்டு புகுந்து திருவாங்கூரைத் தாக்கத் தொடங்கினான். அது சமயம் திப்புவுக்கு அஞ்சி நின்ற கும்பினியார் அச் சீமைக்கு உதவி செய்யவில்லை. ஆபத்தில் கைவிட்ட கும்பினியின் மீது அக் கொற்றவனுக்கு ஆத்திரம் மிக உண்டு. அந் நிலையில் காவல் சேனைக்கு உரிய செலவைக் கொடு என்று கும்பினியார் கேட்டனர்.

படை யெடுப்பினால் அச்சீமை சீர்குலைந்து நின்றது. அதன் அரசிலே பணவறட்சி உண்டாயிற்று. நிர்வாகச் செலவினுக்கே வருவாய் பற்றவில்லை அரசனுக்கோ மகுடாபிஷேகம் நடத்தல் வேண்டும். எனவே அரசனும் திவானும் திகைக்க நேர்ந்தது. அப்போது திப்பு இதோ

வருவான் என்று ஒரு வதந்தி எழுந்தது. அச்சமயத்தில் புதிய உடன்படிக்கை ஒன்றை அவ்வேந்தன்மீது கும்பினி யார் திணித்தனர்.

அதன்படி திப்புவின் படையெடுப்பை எதிர்த் தடிக்க, ஆங்கிலக் கும்பினியார் ஒப்புக்கொண்டனர். காவல் சேனையின் செலவை கூட்டித் தரவேண்டும் என்று விரும்பினர். அரசின் நலத்தைக் கருதி ரெசிடெண்ட் எனும் தானுதிபதி ஒருவனை அத் தலைநகரில் அமர்த் தினர். அத்தகைய மாயத்துணையும் பிணையும் கொள்ள அம்மன்னவன் வேறுவகையின்றி மனமொப்ப நேர்ந்தது. இதற்கு இடையில் காவல் சேனையின் செலவோ நான்கு இலட்சத்திலிருந்து எட்டு இலட்சமாக உயர்ந்தது.

அவ்விதம் துணையும் பிணையும் கொள்ள வேலுத் தம்பி என்னும் திவானுக்கு மனம் இல்லை. அரசனைத் தட்டிப் பேசவும் துணிவு இல்லை. இந்நிலையில் காவல் சேனைக்குரிய பணத்தைச் செலுத்துமாறு கும்பினியார் கட்டாயம் செய்தனர். இரண்டு மூன்று தவணைகளில் தந்து விடுவதாக அத்திவான் பதில் கொடுத்தான்; சொன்ன வண்ணம் பணத்தைச் சேகரிக்கவும் முயலாநின்றான்; செல்வச் சீமான்களையும் வேண்டிக் கொண்டான்.

அச் சீமான்களில் சிறந்த ஒருவன் மாத்து தரகன் என்பவன். இவன் ஏசு மதத்தினன்; தானுதிபதிக்கு உற்ற தோழன். இவனை அடுத்து வேலுத் தம்பி பண உதவி வேண்டுகையில், ஆங்கில தானுதிபதி குறுக் கிட்டான் கடுகடுத்து. அதனால் தானுதிபதிக்கும் வேலுத் தம்பிக்கும் இடையே மனக்கசப்பு முற்றியது. அக்கசப்பு பகைமை வடிவு கொண்டது. திருவாங்கூரை ஆட்டிப் படைக்க விரும்பிய அத்தானுதிபதியோ திவானை அவ

மதித்தான்; வீரம் மிகுந்த வேலுவைத் தொலைத்து விடவும் எண்ணினான்.

ஆதலினால் வேலுத் தம்பியை திவான்பதவியிலிருந்து அகற்றிவிட வேண்டும் என்று அரசனுக்கு அத்தானாதிபதி அறிவிக்கலானான். தகுதியும் திறமையும் வாய்ந்த வேலுவைக் கைவிட வேந்தனுக்கு மனமில்லை. இருதலைக் கொள்ளி எறும்புபோல் அவ்விறைவன் தத்தளிக்க நேர்ந்தது. அப்போது, ஆலயச் செலவையும், முடி சூட்டும் செலவையும் குறைத்து, அதில் மிச்சமாகும் பணத்தைக் கட்டித் தரலாகாதோ என்று தானாதிபதி சொல்லினன்.

ஆண்டவன்மீது கை வைக்கவும், அரசனது மதிப்பைக் குறைக்கவும் தானாதிபதி கருதுவதைக் கண்டு, வேலுத்தம்பி படபடத்தான். அது அறிந்த தானாதிபதியோ திவானைச் சிறை செய்து கோழிக்கோடு என்னும் நகருக்கு அனுப்பினான். தென்னிந்தியாவிலே சேர நாட்டைத் தவிர ஏனைய பிரதேசங்களையெல்லாம் கும்பினியார் கைக்கொண்டதையும், பெட்டிப் பாம்பு போல் தமிழகப் பாளையக்காரரை ஆக்கிவிட்ட ஆணவத்தையும், வேலுத் தம்பி எண்ணிப் பார்த்தனன்; விருப்பு விளைக்கவே முனைந்தனன்.

உடனே காவலில் இருந்து வேலுத் தம்பி தப்பி வந்து, திருவாங்கூர் மக்களுக்கு விளம்பரம் ஒன்று விடுத்தான். அதன் சாரம் இது:—"தானாதிபதி கூறும் வண்ணம் நாயர் பட்டாளத்தை நாம் கலைத்துவிட வேண்டுமாம்; அன்றுடம் அனந்த பத்மனுபருக்கு நடந்து வரும் முறை ஜெபம், பாராயணம், அபிஷேக ஆராதனை இவற்றைச் சுருக்க வேண்டுமாம்; அரசனது முடிசூட்டு விழாவை அற்பமாக நடத்த வேண்டுமாம். நமக்கோ

தெய்வம், தேசம், தர்மம் இவையே பிரதானம். இவற்றைச் சிதைக்கவே ஆங்கிலக் கும்பினியார் கருதி நிற்கின்றனர்; ஆதலின் அக்கும்பினியாருடன் சமர் செய்யத் துணிந்துள்ளேன்"

அவ்விதம் திவான் வேலுத்தம்பி விடுத்த விளம்பரத்தையும், ஆங்கிலக் கும்பினியின் அட்டகாசத்தையும், உய்த்து உணர்ந்த அச்சீமை மக்கள் சீறி எழுந்தனர். வேலுத் தம்பி சேனைத் தலைமை பூண்டு முதன் முதலாக அத்தானாதிபதியைத் தாக்கினான். அது சமயம் அத்தானாதிபதி சுரங்க அறைக்குள் மறைந்து கொள்ள, அவனது உயிர் தப்பியது. ஆயினும் அவனது மாளிகை தரை மட்டம் ஆயிற்று. பிறகு, கும்பினியின் பண்டகசாலை அழிந்துபோயிற்று. கும்பினிக்கு ஆதரவு காட்டி நின்ற மக்களில் பலரும் கொலையுண்டனர். கும்பினியின் கோலாகலமும் அச்சீமையில் மறையலாயிற்று.

சுரங்க அறையில் பதுங்கிக் கிடந்த தானாதிபதி வெளியே வந்து, சென்னைக் கவர்னருக்குச் செய்தி அனுப்பினான்; அங்கிருந்து துணைப்படை வருவதற்குள் காவல் சேனையின் உதவி கொண்டு சீமை மக்களை வதைக்கத் தொடங்கினான்; சீறிச் சினந்து நின்ற நாயர் மக்களை வெட்டிச் சாய்த்தான்; கிராமங்களில் புகுந்து கொள்ளையும் கொலையும் நடத்தினான். அவ்வாறு தானாதிபதி அக்கிரமம் செய்வதை வேலுத்தம்பி அறிய வந்தான். அவ்வளவுதான் தாமதம்.

அத்திவான் வஞ்சினம் பூண்டு, ஆங்காங்கே கண்ணில் கண்ட ஆங்கிலேயரை இருவர் இருவராகச் சேர்த்துக் கட்டிக் கடலிலே எறிந்தான்; கும்பினிக்குச் சொந்தமான தலங்களையெல்லாம் தவிடு பொடி செய்தான். அங்ஙனம் இருபக்கத்தாரும் கோரம் விளைத்து

வந்தனர். இதற்குள்ளாக, வெளியிடங்களிலிருந்து கும்பினிப் படைகள் வந்து, திருவாங்கூருக்குள் புக முயன்றன.

வேலுத் தம்பி அதுகண்டு, அப்படைகள் வரும் வழிகளில் எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அனேக அரண்களை அமைத்தான்; அந்த அரண்கள் தோறும் தனது உயர் வீரரை நிறுத்தினான்; பகைவரை வழிமறிப்பதற்கு ஏற்ற வகை துறைகளையெல்லாம் வகுத்தான். சண்டையோ மிகவும் கடுமையாக மூண்டது; உயிர்ச் சேதம் மிகுந்தது. போர் முனையிலே வேலுத் தம்பியை வெல்ல முடியாது என்று கும்பினியார் கண்டு கொண்டனர்.

அவ்வளவில், கும்பினியார் காசை வாரி வீசினர். பண வறட்சியினால் வாடி வதங்கி நின்ற மக்களிலே சிலர் அக்காசுக்கு ஆசைப்பட்டு, மானத்தையும் தேசத்தையும் விற்றுவிட முற்பட்டனர். முற்படவே, அத்துரோகியரோ வேலுத் தம்பியின் வீரருள் வீரராக வந்து புகுந்து, உளவெல்லாம் உணர்ந்து தானாதிபதிக்கு உரைத்து வந்தனர். வரவே வேலுவின் அரண் வரிசைகள் பிளவுண்டன.

வேலுத் தம்பியும் துணைவரும் அந்தரங்கமாக மந்தராலோசனை செய்யும் மாளிகையும், படைக்கலங்கள் சேமித்திருந்த சாலையும் பகைவரின் கையில் சிக்கி விட்டன. உளவினால் ஊர் அழிகிறதே என்று வேலு தம்பி மனம் உளைந்தான்; ஆனாலும் போரை மும்முரமாக நடத்துவதில் எள்ளளவும் தளர்வு காட்டவில்லை. இதற்கு இடையே, உளவரின் துணை கொண்டு பகைவரின் படை வகுப்பு ஒன்று திருவனந்தபுரம் சேர்ந்து, ஆங்குள்ள அரிய ஆலயத்தை அழித்து விடுவதாக அச்சுறுத்தியது.

அநந்த பத்மநாப தாசனான பாலராம வர்மன் என்னும் வேந்தன் அச்சூழ்நிலை கண்டு சிந்தை திரிந்து, கும்பினியாருடன் சமாதானம் பேச மனம் வைத்தான்.

வேலுத் தம்பிக்கு அது தெரிய வந்தது. அரசனும் கும்பினியும் சமரசம் கொள்ளினும், உயிர் உள்ள வரையில் போரை முறுக்கி அக்கும்பினியைக் குலைத்தே தீருவதாக அவன் அருஞ்சபதம் பூண்டான்; நாட்டினிடையே புகுந்து பக்க பலமெல்லாம் திரட்ட முனைந்தான்; சமயம் வாய்த்த போதெல்லாம் கும்பினிப்படைகளைத் தாக்கியே வந்தான்.

ஆற்றல் மிகப் படைத்த வேலுத் தம்பியை ஒழித்தால் அல்லாமல் சண்டை ஓயாது என்று தானாதிபதி உணர்ந்து கொண்டான்; ஆதலின் வேலுவின் தலைக்கு ஐம்பதாயிரம் வெள்ளிக்காசு என்று விலை பேசினான்; அவனைக் கொன்றோ வென்றோ கொணர்வோருக்கு அக் காசு கிட்டும் என்று பறையறைந்தான். தனது ஒற்றரின் மூலம் அவ்விலையை உணர்ந்த வேலுத் தம்பி புன்னகையே பூத்தான். அவனது வீராவேசமும், தேச பக்தியும், இம்மியளவும் குன்றவில்லை.

கும்பினி கவிழ்ந்தாலொழிய, நாட்டுக்கு நலம் விளையாது என்று அவ்வீர வேலு கருதியவனாய் ஊர் ஊராகச் சென்று, புதிய படைகள் சேர்த்து வந்தான். மனிதனை நிழல் தொடர்வதேபோல் காசாசை கொண்டவர் அவ் வேலுத் தம்பியைத் தொடர்ந்து வந்தனர். ஆயினும் அவனை அணுகவோ தாக்கவோ அவர்களுக்குத் துணிவு பிறக்கவில்லை. ஆண் சிங்கமேபோல் அவன் நடமாடி வந்தான்.

ஒரு நாள் இரவு தனது தமபியும் மெய்காவலனும் உடன் வர, வேலுத்தம்பி விரைந்து நடந்து சென்றான். வழியிலே பகவதியின் கோயிலொன்று தென்பட்டது. தொலைவிலே குதிரை வீரர் வருவது தெரிந்தது. தனது துணைவரே வருவதாக அவன் எண்ணினான்; அவர்களின்

துணைகொண்டு மறுதினம் போரில் குதிக்கலாம் என்று பூரித்தான். சிறிது நேரம் சென்றதும், வரும் வீரர் கும்பினியின் படைஞர் என்று புலப்பட்டது.

அப்படைஞர் கடுகி வந்து, வேலுத்தம்பியைச் சூழ்ந்து கொண்ட சமயம், அப்பகவதியின் சன்னதி சேர்ந்தான் திவான் ; 'தெய்வத்தையும் தர்மத்தையும் காக்க முனைந்த எனது சிரம் இத்தேவிக்கே அர்ப்பணம் ஆதல் வேண்டும்' என்று கூறி உடைவாள் கொண்டு தனது தலையை நறுக்கி பலியிட்டான். அவனது உடல் வேறு தலை வேறாகக் கிடந்தும், அந்த உடலை நெருங்க ஆங்கில தளகர்த்தன் அஞ்சி அழிந்தான். சுருங்கச் சொன்னால், அந்த உடலையும் சிரத்தையும் திருவாங்கூருக்கு ஆங்கிலப் படைஞர் எடுத்துச் சென்றனர்.

அதன் தலைநகரின் நடுவே அவர்கள் தூக்கு மேடை யொன்று அமைத்தனர் ; அனைவரும் காண அவன் உடலைச் சங்கிலிகொண்டு மரத்துடன் பிணைத்தனர் ; தலையை ஒரு கம்பில் செருகி அந்தரத்தே நிறுத்தினர் ; நகர மக்கள் பலரையும் அழைத்துக் காட்டினர் ; அத்துடன் நில்லாமல் வேலுவின் சோதரனை உயிருடன் பிடித்துக் கோயிலாண்டிக்குக் கொண்டுபோய், அங்கே தூக்கில் போட்டனர் ; பின்னர் வேலுவின் துணைவரையும் திருவனந்தபுரத்திலே தூக்குக் கயிற்றிலே தொங்க விட்டனர்.

வேலுத் தம்பியைக் காட்டிக் கொடுத்தவர்களுக்கு வாக்களித்த வண்ணம், ஐம்பதாயிரம் வெள்ளிக் காசுக் கொடுத்தனர். அத்துடன் கும்பினியாரின் வஞ்சம் தணியவில்லை. தளவாயின் வீடு வாசல்களை எல்லாம் இடித்துத் தரைமட்டம் ஆக்கினர் ; அவன் குடும்பத்தார் அனைவரையும் கப்பலேற்றி மால்டிவ் தீவுக்கு அனுப்பினர்

கலகத்தில் சம்பந்தப்பட்ட முக்கிய புருஷர் பலரையும் தூக்கில் போட்டனர்; இன்னும் பலரை நாடு கடத்தினர்.

அச்சமயம், கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு மிண்டோ என்பான் அக்கோரச் செயல் கேட்டு நெஞ்சங் குமுறினன். "வேலு இறந்தபின்பும் இப் பழிச்செயல் ஏன்? திவான் இறந்துபட்டது போதாதா? பழி வாங்கும் இயற்கை பேரனர்த்தங்களுக்கு இடந்தருமே" என்று மிகவும் வெதும்பினன்.

இதுபற்றி ஆங்கில சரித்திர ஆசிரியன் வில்சன் என்பான் எழுதியிருப்பதன் சாரம் இது:—

"இந்தியாவில் பிரிட்டிஷ் ஆதிக்கம் ஏற்பட்டதிலே அக்ரமங்கள் பல உண்டு. அவற்றில் சிலவற்றினுக்கு நாம் சமாதானம் கூறலாம். ஆனல் திருவாங்கூரைப் பொறுத்த மட்டில் சமாதானம் சொல்லவே இயலாது. நிலைமையின் காவலுக்கு வேண்டியதைவிட மிக அதிகமான சேனையை அங்கு நாம் இருத்தியது சரியன்று. அதன் செலவோ அந்த அரசைத் திணறும்படி செய்துவிட்டது. இந்நிலையில் பணத்தைத் தரச்சொல்லி நாம் கெடுபிடி செய்ததென்ன; அரசுக்கு இந்நிலை நேருவதா என மக்கள் மனக்கொதிப்பு கொள்கையில், அதுகண்டு நாம் பரிதாபம் அடையாமல் பழிக்குப்பழி வாங்கியதென்ன; ஆகிய இவை பிரிட்டிஷ் மக்களின் நியாயபுத்திக்கும் தாராள சிந்தைக்கும் நேர் மாறானவை."

வீரவேலுத்தம்பி மரித்தும் என்ன? அவன் குடும்பம் தேசப்பிரஷ்டம் ஆகியும் என்ன? பலரைத் தூக்கில் போட்டும் என்ன? மக்களின் மன எரிச்சல் அடங்கின பாடில்லை. நெடுநாள் கோயிலாண்டிப்பக்கம் கலவரம் தாண்டவமாடியது. சிறு சிறு சண்டைகளும் நடந்து வந்தன. பக்கபலம் இன்றி ஒரு சிலரால் யாது செய்ய இயலும்? எத்தனை நாள் போர் புரிய முடியும்?

14. சீக்கியரின் சிதைவு

வட இந்தியாவின் வீர மக்களில் ஒரு சாரார் சீக்கியர். சீக்கியர் என்றால் சிஷ்யர் அல்லது மெய்யான பக்தர் என்று பொருளாம். சீக்கியர் என்போர் தோன்று வதற்கு மூலபுருஷராக இருந்தவர் குருநானக் எனப்படு வார். அவர் 1469-ம் ஆண்டு பிறந்தவர். அவர் தெய்வ பக்தியில் சிறந்தவர். இந்தியாவில் உள்ள புண்ணியதலங் கள் பலவற்றையும் தரிசித்தவர். இந்தியாவுக்கு மேற்கே யுள்ள நாடுகளுக்கும் சென்று, அங்கெல்லாம் பரவி இருந்த முகம்மதிய மதத்தையும் நன்கு கண்டு கொண்டவர்.

முகம்மதியரின் ஆட்சி இங்கே முளைத்ததும், அடிபிடி கட்டாயமாக அம்மதம் பரப்பப்பெற்று வந்தது. ஆதி முதல் இங்கே பரவி இருந்த மதத்தை ஹிந்து மதம் என்பர். ஆலயங்களிலே ஆண்டவனுக்குச் சிலை அடித்து வைத்து வணங்குதல், ஹிந்து மதத்தின் ஒரு கோட் பாடாம். ஆனால் கடவுளுக்கு உருவமும் நாமமும் வேண்டா என்பதே அந்த ஹிந்து மதத்தின் உயரிய கொள்கையாகும். ஆயினும் பாமர மக்களின் நலத்தையும், பல காரணங்களையும் முன்னிட்டே ஆண்டவனுக்கு ஆலயமும், விக்ரகமும் அமைக்க ஹிந்து மதப் பெரியார் முற்பட்டனர்.

முகம்மதிய மதத்திலோ ஆண்டவனுக்கு உருவம் அமைத்தல் ஒண்ணாத காரியமாம். எனவே, ஹிந்துக் களின் விக்ரக வழிபாட்டைக் கண்டு, முகம்மதியருக்கு ஆவேசம் பிறந்தது. அதனால் ஆலயங்கள் பல இடி யுண்டன; ஹிந்துக்களில் பலர் அவதியுற்றனர். தவிர, எல்லாரும் ஆண்டவனது மக்கள், அனைவரிடமும் அன்பு

காட்டவேண்டும் என்னும் கொள்கை முகம்மதியரிலே பலரிடம் வேரூன்றவில்லை. ஆனதுபற்றி, அந்த நானக் என்பார் ஒரு புதிய சமரச மதங் காண முனைந்தார். அதுவே சீக்கிய மதம் எனப்பட்டது.

சீக்கியரின் ஆலயங்களிலே, விக்ரக வழிபாடு கிடையாது. ஆனால், ஆண்டவனை மெய்யன்புடன் வழுத்துதல் முக்கியமாம். புதிய சமரச மதத்தைத் தழுவினோரே சீக்கியர் என்னப்பட்டனர். அவர்களிடையே சாதி, வகுப்பு, பேதம் கிடையாது. ஹிந்து மதத்திலே பல வாறான தரத்தில் இருந்த மக்கள் அனைவரும் அச்சீக்கிய மதத்தில் சேரவே, பஞ்சநதப் பிரதேசத்தில் அம்மதம் பரவலாயிற்று. சமயச் சழக்கினை அடியோடு அகற்ற வேண்டும் என்றே குருநானக் பாடுபட்டு வந்தார். அவரை அடுத்துவந்த குருமார்களும் அத்துறையிலேயே நாட்டம் செலுத்திவந்தனர்.

சீக்கியரின் தொகை வளர்ந்து வருதல் கண்டு, அந் நாளில் முகம்மதியருக்குப் பிடிக்கவில்லை. ஆதலின் 1606-ம் ஆண்டிலே சீக்கியரின் மூன்றுவது குருவை அவர்கள் கொன்றுபோட்டனர். அதுபற்றி, சீக்கியர் ஆத்திரம் மிகுந்த நிற்க, நாலாவது குரு முகம்மதியரைப் பழிவாங்கத் தொடங்கினர். அதுமுதல் சீக்கியர், வெறும் பக்தர் என்பது மறந்து, வீரபக்தர் என்று ஆயினர். சீக்கியருக்கும் முகம்மதியருக்கும் அடிக்கடி சச்சரவுகள் நிகழ்ந்து வந்தன. வரவே, ஒன்பதாவது குருவும் கொலையுண்டார். அஃது உணர்ந்து அவர் மைந்தரான பத்தாவது குருவான கோவிந்தர் என்பவர் பதறி எழ நேர்ந்தது.

அதன் விளைவாக சீக்கியர் என்போருக்கு அவர் சிங் (சிம்மம்) என்று பட்டம் சூட்டினர். இராஜபுத்திர

ருக்கே அன்றளவும் சிங் என்னும் பட்டப் பெயர் உண்டு. குருகோவிந்தரின் விருப்பினால், சீக்கியரும் சிங்கம்போல் பெருந்தன்மையும், பேராண்மையும் கொள்ளலானார்கள். முகத்திலே தாடி மீசை வளர்த்து, தலைமயிரையும் சிரைக்காமல் வளரவிட்டு, இடுப்பிலே நீண்ட உடை வாள் பூண்டு, கையிலே இரும்புவளையம் தரித்து, சிரசிலே முண்டாசு கொண்டு விளங்கும் வண்ணம் சீக்கியரை அமைத்தவர் அவரே.

ஒருவரை யொருவர் சந்தித்தால், "குரு வாழ்க!" "குரு வெற்றி பெறுக!" என்று கூறி வணங்கும் வண்ணமும் சீக்கியருக்கு அவர் போதித்தார். ஐந்து சீக்கியர் ஓர் இடத்தில் சந்தித்தால், அது தெய்வக் கூட்டம்; அங்கே ஆன்ம வடிவில் குரு எழுந்தருளி யிருப்பார் என்றும் அவர் விதித்தார். ஐவர் கூடும் திருக் கூட்டம் "கால்ஸா" எனப்படும். பலவாறான வழியில் அவர் தமது சிஷ்யருக்குப் புத்துயிர் ஊட்டி, அவர்களை வீரப்படையினராக ஆக்கி, முகலாய அரசுடன் பன்முறை போர் நிகழ்த்தினர்.

அப்போரில் அவர் வீர சுவர்க்கம் சென்றார் என்பர் சிலர்; மற்று உலகை வெறுத்து மலைச்சாரலிலே தவம் புரியப் புகுந்தார் என்பர் வேறு சிலர். இது எவ்வாறாயினும் முகம்மதியருக்கும் சீக்கியருக்கும் வைரம் எனும் கடு நெருப்பு மூண்டது. குருகோவிந்தரின் குமாரரை முகம்மதியர்கள் வெட்டி எறிந்தார்கள். அதன்மேல் பந்தன் என்னும் சீடன் தோன்றி, அவ்வீரர் அனைவரையும் ஒன்று திரட்டி, முகம்மதியரை முறியடித்து, அப் பஞ்சநதப் பிரதேசத்திலே தனியரசு ஒன்று கண்டான்.

சீக்கியரின் தளகர்த்தரைச் சர்தார் என்பர். அச் சர்தார்கள் என்போர் பெருவீரர். சீக்கிய அரசிலே

அவர்கள் குட்டி ராஜாக்கள் போல் குலவி நின்றனர். சீக்கியர் தனியரசு கொண்டு சிங்க நாதம் செய்தல்கண்டு, முகலாயச் சேனை திரண்டு எழுந்து, அவர்களைப் பல இடங்களில் முறியடித்துவிட்டது. அதனால் வீர சீக்கியர் சிதறிப் போயினர். அப்போது இரஞ்சித சிம்மன் என்னும் பெரு வீரன் தோன்றி, அச் சீக்கியரை எல்லாம் திரட்டி, மீண்டும் சீக்கிய அரசை நிலைநாட்டினான்.

இதற்குள் முகலாய வல்லரசு முறிந்து போயிற்று. டில்லியிலே பாதுஷாவாக வந்தவர்களிடம் மாண்பும், பண்பும் காணப்படவில்லை. இதற்கு இடையிலே, ஆங்கிலக் கும்பினியார் இத்தேசத்திலே வெகுவாக மண் சேர்த்து வேந்தராக ஆகிவிட்டனர். இங்கே சுதந்திர அரசுகள் முளைப்பதில் அக் கும்பினியாருக்கு மனம் கிடையாது. அந்நிலையில் சீக்கிய சர்தார்களில் சிலர் அந்த இரஞ்சித சிம்மனுக்கு உட்பட்டு நடக்க ஒப்பவில்லை. ஆகவே கும்பினியாரின் உதவியை அவர்கள் நாடி நின்றார்கள்.

ஆப்கானியர் என்னும் சாதியாரையும் வென்றி கொண்டு, வீரக்கொடி தூக்கிநின்ற இரஞ்சித சிம்மனைப் பகைத்துக்கொள்ள ஆங்கிலக் கும்பனியாருக்கு நெஞ்சுரப்பு உதிக்கவில்லை. ஆதலினால், அவனுடன் கும்பினியார் நேச உடன்பாடு ஒன்று கொண்டனர்.

கொள்ளவே, அச் சர்தார்கள், அச்சம் மிகுந்து, இரஞ்சித சிம்மனுக்கு உட்பட்டு நடக்கலாயினர். இரஞ்சித சிம்மன் உயிருடன் இருக்கும் வரையில் சீக்கிய அரசிலே கும்பினியார் தலையிடவில்லை. ஆனாலும், அதனையும் கட்டிக்கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவர்களின் மனத்திலே ஊன்றிக் கிடந்தது.

அன்று சீக்கிய அரசின் தலைநகரம் லாகூர். காஷ்மீரம், ஜம்மு முதலிய நாடுகள் அந்த அரசின் அங்கங்களாக விளங்கின. இரஞ்சித சிம்மனது தோற்றத்தையும், தோள் வலியையும் கண்டு, "லாகூர்ச் சிங்கம்" என்று பலரும் பெருமையாக அழைத்து வந்தனர். 1839-ம் ஆண்டிலே அச் சிங்கம் மறைந்ததும், சீக்கிய அரசிலே குழப்பங்கள் தோன்றின. கும்பினியின் அதிகாரிகளோ, சர்தார்களைத் தூண்டிவிட்டு, வேடிக்கைபார்த்து நின்றனர்.

ஆனாலும் மகாராஜா இரஞ்சித சிம்மனது தேவியோ தக்க திறமைகாட்டி அக் குழப்பங்களை அடக்கி வந்தாள்; தனது பாலன் திலீபசிம்மனது பெயரால் அரசையும் நன்கு நடத்தி வந்தாள். கும்பினியாரின் சூழ்ச்சியை உணர்ந்ததும், சீக்கிய வீரர் அனைவரும் சீற்றம் மிகுந்தனர்; கும்பினியின் ஆட்சியைக் கவிழ்த்து விடவும் கங்கணம் பூண்டனர். பூணவே, சீக்கியச்சேனை சிங்கநாதத்துடன் கிழக்கு நோக்கிச்சென்று கும்பினியாரின் மீது பாய்ந்தது. ஓர் இலட்சம் வீரர் சீறி வருதல் கண்டு, கும்பினியாருக்குத் திகைப்பு உண்டாயிற்று.

வீர வெள்ளத்தை மறித்து நிறுத்த ஆங்கிலேயரால் ஆகவில்லை. ஆதலின் பலமுனைகளிலே கும்பினிப்படைகள் முறியுண்டு சிதைந்தன. அதுசமயம் சீக்கிய சர்தார்களின் சுயநலத்தை ஆங்கிலேயர் அதிதந்திரமாக வளர்த்து வந்தனர். குட்டி அரசுகள் கொள்ளத்துணைபுரிவதாகவும் அவர்களுக்கு வாக்களித்தனர். அத்துடன் சீக்கியரின் பரமவைரிகளான முகம்மதியரின் துணையையும் நாடி அடைந்தனர்.

சர்தார்களிலே சிலர் சிறுமை மிகுந்து நின்றமை கண்டும், முகம்மதியரின் துணைகொண்டும், கும்பினிப் படைகள் திடீரென்று அந்த அரசின் தலைநகரை எட்டிப்

பார்த்தன. பார்க்கவே, சீக்கிய அரசுக்கும் கும்பினி யாருக்கும் ஓர் உடன் படிக்கை உதிக்கலாயிற்று. அஃதோ முன்னம் சொல்லிய மாயத்துணையும் பிணையும் போன்றதே.

திலீபசிம்மனை சிக்கிய அரசின் வேந்தனுக ஆங்கிலக் கும்பினி ஒப்புக்கொண்டது. அந்த அரசுக்கு ஆலோசனை கூறி, உதவிபுரிய ஆங்கிலத் தானுதிபதியை நியமித்தது. முன்னம் நடந்த சண்டையின் செலவைக் கட்டித்தரும் படியும் கோரியது. வீர அரசி அதற்கெல்லாம் முதலில் ஒருவாறு இசைந்தனள். நாளடைவிலே கும்பினியின் நயவஞ்சகத்தை அவள் கண்டு கொண்டாள்; கொண்ட தும், சீக்கிய சமூகத்தை ஒருவாறு ஒருங்கு சேர்த்து, வெகுண்டு நின்றாள்.

இதனை அத்தானுதிபதி அறியலானுன்; உடனே சீக்கிய சர்தார்களின் சிலரை வசம் செய்துகொண்டு, அத் தேவியைச் சிறைசெய்து, காசிமாநகரிலே மாயக் காவலில் வைத்தான்: திலீபசிம்மனையோ இங்கிலாந்துக்கு அனுப்பி உபகாரச் சம்பளம் கொடுத்து அங்கேயே வாழ்ந்து வருமாறு பணித்தான். சுருங்கச் சொன்னல், வெகுதந்திரமாக அச்சீக்கிய அரசை ஆங்கிலக் கும்பினி யார் கட்டிக்கொண்டுவிட்டனர். வீரமரபினரான சீக்கியர் அடங்கி வாழார் என்று கும்பினிக்குத் தெரியும். அவர் களைக்கண்டு அச்சமும் மிக உண்டு.

ஆதலின், அரிய உபாயம் ஒன்றை அக் கும்பினியார் மேற்கொண்டனர். நகமும் பல்லும் போய்விட்டால் ஆண்சிங்கம் யாது செய்யும்? வீரருக்கு வாளாயுதமே ஆண்மைதரும் பூடணமாம். ஆதலின் சீக்கியர் எவரும் ஆயுதம் தரித்தல் ஆகாது என்று கும்பினியார் செங்கோல் பிறப்பித்தனர். அன்றளவும் வாள் வலியினுல் வாழ்ந்து

வந்த அம் மக்களில் பலருக்கும் நிலங்களை அளித்து, உழவுத் தொழிலில் அன்னவரை அமர்த்தினர். வேளாண் மைக்கு அவசியமான கால்வாய்களையும், நீர்நிலைகளையும் அமைத்து உதவவே அவ்வீரருக்கு மகிழ்ச்சி பொங்கியது. வாளாண்மைக்குப் பிறந்தோர் வேளாண்மையில் மூழ்கி விட்டனர்.

அப் பஞ்சநதப் பிரதேசத்தை ஆளுவதற்கு அமைந்த ஆங்கில அதிகாரிகள் மகா தந்திரிகள். அவர்கள் தங்களது வாக்கு நயத்தாலும், மலர்ந்த முகத்தாலும், சீரிய நெறியாலும் சீக்கியரின் மனத்தைக் கவர்ந்தனர். இனி, தமது பரந்த அரசைக் காவல் புரியவும், மேலும் போர்ச் சேவகம் பார்க்கவும், சீக்கியரை அன்புடன் அமர்த்தி வந்தனர் கும்பினியார். அதுகண்டு, சீக்கியரில் பலருக்கு குளிர்ந்துவிட்டது. நேற்று வரையில் கும்பினியாரை எதிர்த்து வந்த அவ்வீரர், அப்பாலோ கும்பினியின் கூலிப் படையில் சேர்ந்து சேவிக்கத் தவறவில்லை. இது நிற்க,

நாம் குடியரசு கொள்வதற்கு முன்னம் இங்கே நிலவி நின்ற ஆங்கில ஆட்சியிலே இந்தியச் சேனையில் சேவகம் புரிந்து வந்தோரில் பெரும்பாலார் சீக்கியரே. சுத்த வீரரான அன்னாரே இந்தியச் சேனையின் திலகமாகத் திகழ்ந்தனர். அன்றியும், ஆங்கிலேயருக்கு அதிவிசுவாசத் துடன் ஊழியமும் புரிந்து வந்தனர். கும்பினியின் ஆட்சியிலும், ஆங்கிலேயரின் நேர்முகமாக ஆட்சியிலும் எத்துணையோ சண்டைகள் நடந்தன. அவற்றில் ஆங்கி லேயருக்குத் தலைகொடுத்தோர் சீக்கியரேயாம். நமது கையைக்கொண்டே நமது கண்ணைக் குத்தும் ஆங்கிலேய ரின் இராஜதந்திர திறமையே திறமை!

15. நம்பிக்கை மோசம்

யானைப்பசிக்கு ஓர் அளவு கிடையாது. அவ்விதமே கும்பினியின் மண்ணாசைக்கும் ஓர் அளவு இருக்கவில்லை. இந்தியாவின் பெரும்பாகம் கும்பினிக்கு உட்பட்டு ஆக வேண்டும் என்று கவர்னர் ஜெனரலான லார்டு டெல் ஹௌசி என்பான் எண்ணினான். அந்த எண்ணம் கைகூட வேண்டி அவன் முயலா நிற்கையில், நீதி, நியதி, நேர்மை, வாக்குறுதி முதலியன எல்லாம் காற்றில் பறக்கலாயின.

வேறு விதி இல்லாமையாலோ, மதிப்பிசினாலோ, கும்பினியுடன் நேசம் கொள்ளாத சுதேச அரசுகள் கிடையா. ஆபத்துக் காலத்தில் அவற்றினுக்குத் தலை கொடுப்பதாகவே கும்பினியார் வாக்குறுதி கொடுத் திருந்தனர்; வாழையடி வாழையாக அரச பரம்பரை வளர்ந்து வருவதில் தலையிடுவதில்லை என்றும் சாற்றி யிருந்தனர். ஆசை வெட்கம் அறியாது என்பார். மண்ணாசை மேலிடவே, நம்பிக்கை மோசம் செய்யக் கும்பினியார் தயங்கவில்லை.

அந்நாளில் அயோத்தியை நவாபுகள் என்போர் ஆண்டுவந்தனர். கங்கைக் கரையிலே அது மிகவும் செழிப்பான பிரதேசம். அங்கே பலவகையான கைத் தொழில்களும் நிரம்பி யிருந்தன. வளமைமிக்க அப் பிரதேசத்தின் மீது லார்ட் டெல்ஹௌசியின் கவனம் பாய்ந்தது. அந் நவாபுகள் ஆங்கிலக் கும்பினியிடம் பரம விசுவாசிகளாக இருந்து வந்தனர். ஆப்கானியரோடும், சீக்கியரோடும் கும்பினியார் சண்டைக்குப் போனகாலத் திலே அவர்களுக்கு அந் நவாபுகள் பேருதவி செய் தார்கள்.

கடனாகவும் கொடையாகவும் அந் நவாபுகள் கொடுத்த பணத்திற்கு ஒரு கணக்கில்லை; தவிர, தமது

நாட்டு மக்களையும் போர்ச் சேவகத்துக்குச் அனுப்பி உதவினர். கும்பினியின் கறவைப் பசுவே போல் விளங்கிய நவாபின் கதி என்ன ஆயிற்று? நாட்டை நன்கு ஆண்டு வரவில்லை, நிர்வாகம் மகா மோசமாக இருக்கிறது என்று கும்பினியார் கூறி, அந்நாட்டைக் கட்டிக் கொண்டனர். கொள்ளுமுன் அயோத்தியை நோக்கி கும்பினியின் சேனை ஒன்று சென்றது. கும்பினியின் மனக்கோலை மதித்துணர்ந்த சிப்பாய்கள் முணுமுணுத்தனர். ஆயினும் படைத்தலைவன் பக்குவமாக நடந்து கொண்டதனால் துருப்புகளின் ஆத்திரம் அச்சமயம் தலை தூக்கவில்லை.

ஆபத்தில் தலைகொடுத்த அயோத்தியையும் கும்பினியார் கட்டிக்கொண்டனரே, நன்றியறிவு என்பது அன்னாரிடம் இம்மியளவும் இல்லையே என்று சிப்பாய்கள் சிந்தாகுலம் கொண்டார்கள். நிர்வாகம் நேர்மையாக இல்லை, என்று கூறிய கும்பினியாரின் நிர்வாகம் எவ்வாறு இருந்தது. ஓராண்டு தீர்ந்ததும், "போதுமே கும்பினி ஆட்சி, பழைய ஆட்சியே பெருமையுடையது," என்று எண்ணாத அயோத்தி மக்கள் கிடையாது.

அந்த அயோத்தி நாட்டிலே ஜெமீன்தார்கள், மிட்டாதார்கள், பெருமக்கள் இவர்கள் அதிகம். இவர்களுக்கு மிகவும் திரண்ட பூ சொத்து உண்டு. அச் சொத்து அனைத்தையும் கும்பினியார் பறிமுதல் செய்து எடுத்துக் கொண்டனர். கொள்ளவே, பெருங்காணி வளம்படைத்த பலரும் வறுமைக்கு ஆளாயினர். அரசிழந்த நவாபின் வம்சமும் அழுங்கியது. அதுகண்டு இந்தியாவில் உள்ள முகம்மதிய சமூகம் முழுவதுமே மனப்புண்கொண்டு, மண்டித்துடிக்க நேர்ந்தது. ஹிந்து சமூகத்தின் நிலை பார்ப்போம்.

பிள்ளைப்பேறு பெறாத தொண்டைமானும் சரி, தோட்டியும் சரி சுவீகாரம் செய்து கொள்ளுதல் சாஸ்திர விதியாம்; பரம்பரை பரம்பரையான வழக்கமுமாம். இதனை முன்னம் கும்பினியார் ஒப்புக்கொண்டும் என்ன? சுவீகாரம் செல்லாது என்றான் அந்த டெல்ஹௌஸி. தந்தையின் சொத்து சுவீகார மகனுக்கு உரியது என்பதையும் அப் புண்யவான் மறுத்தான். மகாராட்டிரரின் கடைசி பேஷ்வாவான பாஜிராவ் என்பான் தனது நாட்டினைத்தையும் கும்பினியிடம் கொடுத்து, அதற்கு ஈடாக ஆண்டு தோரும் இலட்சம் பவுன் பெற்று வந்தான் அல்லவா? அப் பாஜிராவ் 1853-ஆம் ஆண்டிலே பரகதி போயினன்.

உடனே பாஜிராவின் சுவீகாரப் புத்திரனான நானா சாஹிப் என்பான் தனது தந்தையின் சொத்துச் சுதந்திரமெல்லாம் தனக்குக் கிட்டவேண்டும் என்றான். அக் கவர்னர் ஜெனரலோ சுவீகாரம் செல்லாது என்று சொல்லிவிட்டான். அதனால், கும்பினியார் கொடுத்து வந்த உபகாரச் சம்பளம் நானாவுக்குக் கிட்டவில்லை. பட்டமும் பதவியும் இழந்து நின்றாலும், பேஷ்வா, பேஷ்வா என்றே மராட்டிய சமூகம் அப் பாஜிராவை மதித்து நின்றது. இங்ஙிலையில் நானாவுக்கு கிடைக்கவேண்டிய சொத்தும் சுதந்திரமும் கிட்டாது போகவே மராட்டிய சமூகம் மனக் கொதிப்புக் கொள்ளலாயிற்று.

மத்திய இந்தியாவிலே ஜான்சி என்பது ஒரு சிறு நாடு. அதன் அரசன் பிள்ளையின்றி மறைந்து போயினன். உடனே இராணி இலட்சுமிபாய் என்பாள் தாமோதரன் என்னும் சிசுவை மகவாகக் கொண்டனள் வேத விதிப்படி. அச் சுவீகாரத்தை ஏற்றுக்கொள்ள இயலாது என்று டெல்ஹௌஸி சாதித்தான். அடிபிடி கட்டாயமாக அந்

நாட்டையும் கட்டிக் கொண்டான். அதுபற்றி அந்நாட்டு மக்கள் ஆத்திரம் அடையலாயினர்.

இனி, மகாராஷ்டிர மன்னவன் சதாரா நகரிலிருந்து ஆட்சி செலுத்தி வந்தான். அவனுக்கும் கும்பினிக்கும் நெடுநாளாகவே ஓர் உடன்பாடு உண்டு. அந்த அரசியலில் தலையிடுவதில்லை யென்றும், ஆபத்தில் உதவுவதாகவும் கும்பினியார் கூறியிருந்தனர். 1848-ஆம் ஆண்டில் அந்த அரசன் புத்திரப்பேறில்லாமல் மேலுலகம் போயினன். அவனது அரசி ஒரு பிள்ளையை சுவீகாரம் செய்து கொண்டாள். அதனை டெல்ஹௌஸி ஒப்பவில்லை. சுருங் கச் சொன்னால், அந்நாட்டையும் அவன் கட்டிக்கொண் டான். அவ்வாறே நாகபுரி நாடும் மறைந்தது.

அக்காலத்தில் கும்பினியிலே பெரிய அதிகாரப் பதவி வகித்தவன் கர்னல் ஸ்லீமான் என்பான். இவன் இடித்துச் சொன்னது இது :—“ சுதேச சமஸ்தானங்களை ஒன்றன்பின் ஒன்ருக நாம் கட்டிக்கொண்டே வருகி றோம்; அது சரிதான் என்று பலரும் சொல்லுகின்றனர்; நல்லது, நமக்கு பாதுகாப்பாக இருப்பது இந்தியச் சேனைதான். அச்சேனையே ஒருநாள் நமக்கு எதிராகக் கிளம்பக்கூடும். அப்போது நமது நிலைமை ஆபத்தாக முடியும் என்று 1848-ஆம் ஆண்டிலேயே சொன்னேன். இப்போதும் (அதாவது 1853-ஆம் ஆண்டிலும்) சொல்லு கின்றேன். சுதேச சமஸ்தானங்களை நாம் கட்டிக் கொண்டே போதல் நமது ஆட்சிக்கும் தீமை பயக்கும். தேச மக்களுக்கும் கேடாய் முடியும். இந்தியச் சேனை மனம் பொங்கி ஒருநாள் கொதித்துக் கிளம்பும். இது திண்ணம்.”

காசிமாநகரிலே நீதிபதியாக இருந்தவன் வில்லியம் எட்வர்டன் என்பவன். ஜமீன்களும், மிட்டாக்களும் பறி

முதல் ஆதல் கண்டு இவன் எச்சரிக்கை செய்தது யாதெனில்:—"புராதனமான பெருங் குடும்பங்களை நாம் விரைவில் அழித்துவிடலாம். ஆயினும் அக் குடும்பங்கள் அழிந்துபோயினவே எனும் எண்ணத்தை மக்களின் மனத்திலிருந்து நாம் அழித்து விட முடியுமோ? அக் குடும்பத்தாருக்கும் ஏனைய மக்களுக்கும் உள்ள பாசத்தை யும் நாம் துடைத்துவிட முடியுமோ? நமக்கு எதிராக ஏதேனும் கலகம் கிளம்புமேயானால், அக் குடும்பத்தார் கச்சை கட்டிக் கிளம்புவரே. அவர்களுடன் மகாஜனங் களும் கூடிக் கொள்வரே."

லார்டு டெல்ஹௌசி என்பானுக்கு ஓர் உயர்தர அதிகாரி 1856-ம் ஆண்டில் எழுதியாவது:—" தற்சமயம் நமக்கு நெருக்கடியான நிலைமை நேர்ந்துளது. சுதேச அரசுகளை நாம் ஒன்றன்பின் ஒன்றாகக் கட்டிக்கொண்டு வருதல்கண்டு, ஏனைய சுதேச அரசரும் பெரு மக்களும் நம்மீது மன எரிச்சல் கொண்டுளர். இவ்வளவுதானோ! நம்மீது பரம வைரமும் பூண்டுளர். இதன் விளைவாக தேசத்திலே கொதிப்பு மூளும். அது எங்கும் பரவும். பரவினால் நமது ஆட்சிக்கே பேராபத்து விளையும்."

இனி, பாணிபத யுத்தத்தில் மகாராஷ்டிரர் தோல்வி கொண்டபின், டில்லிப்பாதுஷா என்பான் ஆங்கிலக் கும்பினியின் ஆதீனத்திலேயே இருந்து வந்தான். நாட்டைத்தையும் அவன் இழந்துவிட்ட போதிலும் டில்லி மாநகரம் அவனுக்கு உட்பட்டிருந்தது. ஒரு சிறு சேனை யும் அவனிடம் இருந்தது.

பெருங்காயம் இருந்த செப்பேபோல் அவன் விளங்கி வந்தான். தேச மக்களில் பலரும் பாதுஷா பாதுஷா என்று அவனிடம் பக்தி விசுவாசம் பூண்டிருந்தனர். கும்பினியார் அவனை மதித்து, அவ்வப்போது தமது

பிரதிநிதியை அனுப்பி, அவனுக்குக் காணிக்கை செலுத்துவது உண்டு.

1832-ஆம் ஆண்டுவரையில் அவ்விதம் பாதுஷாவுக்கு மரியாதை காட்டி வந்தனர் கும்பினியார். அப்பாலோ, அவர்களின் மனம் மாறிவிட்டது. பரம்பரையான டில்லி அரண்மனையில் அவன் வசித்து வருவதும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஆதலின், அவனை அந்த மாளிகையை விட்டு, வேறு ஓர் இடத்தில் வசிக்கும்படி வற்புறுத்தி வந்தனர். அவனுக்குக் கொடுத்துவந்த உபகார திரவியத்தையும் குறைத்துவிட்டனர். அதுகண்டு அவன் மனம் புழுங்கினான்.

அதன்மேல் அவன் தனது பிரதிநிதி ஒருவனை இங்கிலாந்துக்கு அனுப்பி, ஆங்குள்ள அரசனிடம் கும்பினியின் போக்கை எடுத்துரைத்து மன்றாடிப் பார்த்தான். நானாசாகிபும், அயோத்தி நவாபும், நாகபுரி அரசிகளும், தமது பிரதிநிதிகளை இங்கிலாந்துக்கு அனுப்பி அவ்வாறே மன்றாடிப் பார்த்தனர். ஒன்றும் பலிக்கவில்லை. கும்பினியின்மீது ஆதிக்கம் கொண்டுள்ள இங்கிலாந்தின் அரசும் அலட்சியமாய் இருப்பது கண்டு, அவர்கள் அனைவருக்கும் ஆங்கிலேயரின்மீது வைரம் வளரலாயிற்று. இது நிற்க,

சிப்பாய்களின் விஷயத்தில் கும்பினியார் நடந்து கொண்ட பான்மையைப் பார்ப்போம். 1664-ஆம் ஆண்டில் கும்பினியாரிடம் இருந்த காவல் சிப்பாய்கள் சுமார் 15 பேர். சுதந்திர மகாயுத்தம் மூண்ட 1857-ஆம் ஆண்டிலோ ஏறக்குறைய மூன்றரை லட்சம் பேர். கும்பினியின் நாடு பெருகப் பெருக, அவர்களின் சேனையும் பெருகிக் கொண்டே வந்தது. ஆதியிலே சிப்பாய்களின் மாதச் சம்பளம் ஆறே ரூபாய்தான்.

சிப்பாய்களுக்கு வருஷத்திலே ஒரு சட்டைதான் கிடைக்கும். வேண்டிய துணிமணிகளை அவர்களே வாங்கிக்கொள்ள வேண்டும். ஆங்கில சோல்ஜர்களுக்கோ சிப்பாய்களைவிட பதின்மடங்கு சம்பளம் அதிகம். பல வாறான சலுகைகளும் உண்டு. சிப்பாய்கள் தவறி நடந்தால் சவுக்கடி கொடுப்பர். ஆங்கில சோல்ஜர்களுக்கு அத்தண்டனை கிடையாது.

சிப்பாய்கள் மாகாணம்விட்டு மாகாணம் சென்று, சேவகம் புரியவேண்டும் என்ற நியதி கிடையாது. வெளி மாகாணம் சென்று சேவித்தால், இனும் கிடைக்கும் என்று ஆசைவார்த்தை சொல்லியே சிப்பாய்களை அழைத்துச் செல்வர். ஆனல் நடைமுறை எப்படி? 1839-ஆம் ஆண்டில் முதல் ஆப்கன் யுத்தம் மூண்டது. கண்காணுத் தேசம் புகுந்து, குளிரும் பனியும் தாங்கி அற்புதமாகச் சிப்பாய்கள் போர் புரிந்தனர். அதில் வெகு பலர் மாண்டு போயினர். 1843-ஆம் வருடம் சிந்து நாட்டை கும்பினி யார் கட்டிக் கொண்டனர். அந் நாட்டைக்காவல் புரிதல் வேண்டும். அன்று அந்நாடோ வாசத்துக்கு யோக்கிய மற்றதாயிருந்தது.

புதிய இடத்துக்குப் போனல் சிப்பாய்களுக்கு உபரி படிப்பணமும், போஜனப்படியும் கொடுப்பதாகச் சொல்லினர். சிந்துநாட்டினுக்குப் போய்ச் சேர்ந்த சிப்பாய்களுக்கு அந்த உபரிபடிப்பணம் கொடுக்க வில்லை. அவர்கள் பிணங்கினர்கள். அப்போது அவர் களின் மாதச் சம்பளம் பத்தே ரூபாய். புதிய இடத்தில் அந்த ரூபாய் கொண்டு காலந் தள்ளுவது எப்படி? ஊரிலுள்ள மனைவி மக்களைப் போஷிப்பதும் எங்ஙனம்? நம்பிக்கை மோசம் செய்து விட்டீர்களே என்று சிப்பாய் கள் சீறினர்கள். சேவகம் செய்யோம் என்றும் சொன்

ஞர்கள். அதுகண்டு, அப் பட்டாளத்தை அடியோடு கலைத்துவிட்டனர் கும்பினியார்; மற்றொரு பட்டாளத்தைச் சேர்ந்த பல சிப்பாய்களை மிகவும் குரூரமாகத் தண்டித்தனர்.

இனி, வங்காளச் சேனையிலே பற்பல பட்டாளங்கள் உண்டு. அவை வெளி தேசங்கள் சென்று சேவிக்க வேண்டும் என்ற விதி கிடையாது; ஒப்பந்தமும் கிடையாது. ஆயினும் கடல் கடந்து பர்மா தேசம் சென்று, போர் புரிய வேண்டும் என்று கும்பினியார் ஆணையிட்டனர் ஒரு பட்டாளத்துக்கு. அப்பட்டாளம் போக மறுத்தது. போகவேண்டும் என்றனர் கும்பினியார். உடனே அப்பட்டாளத்தில் கொதிப்பும், துடிப்பும், கர்ஜனையும் கிளம்பின. அதுகண்டு பல சிப்பாய்களை கொடுந் தண்டனைக்கு ஆளாக்கினர் கும்பினியார். இவ் விதம் நம்பிக்கை மோசம் செய்து, தண்டனைக்கும் ஆளாக்குதல் கண்டு சிப்பாய்களின் மனம் புகைந்து கொண்டே இருந்தது.

16. மான ஈனம்

அயோத்தியும், பிறநாடுகளும் கும்பினியின் கைவசமான உடனே ஆங்குள்ள நிலங்களின் நிலவரி நிர்ணயத்தில் கும்பினி அதிகாரிகள் முனைந்தனர்; பூசொத்துக்களுக்குரிய பட்டாக்கள் எங்கே என்று நாட்டு மக்களை வினவினர். மக்களின் பரம்பரை உரிமையை அதிகாரிகள் ஒப்புக்கொள்ளவில்லை.

ஆதலின், பலருடைய நிலங்கள் பறிமுதலாயின. இனும்களையும், மானியங்களையும் நெடுநாளாக ஆண்டு அனுபவித்து வந்தோரின் சுதந்திரங்களும் அத்தகைய விசாரணையில் பறிபோயின. அதனால் பல்லாயிரக்கணக்

கான குடும்பங்கள் ஒரு கணப்பொழுதில் சொத்துக்களை இழந்து, சோற்றுக்கும் திண்டாடின. மேலும் வரி வசூலில் மிக்க மிடுக்கே காணப்பட்டது.

அதுகண்டு ஆங்காங்கே மக்கள் மனத்தாங்கல் கொண்டனர். 'வாழ்வில்லாச் சங்கடத்தில் சாதலே நன்று' என்றாள் ஔவை. இராஜவமிசங்களும், அரசுகளும் அழிந்தமை கிடக்கட்டும். பொதுவாக மக்களின் வாழ்க்கை நிலை எப்படி? கும்பினியார் வந்த காலத்தில் இங்கே செல்வமும் செழுமையும், சுகவாழ்வும் நிம்மதியும் மிகுதி. அவர்களின் வருகைக்குப்பின்போ எல்லாம் மலையேறிவிட்டன. மதத்தொழில்கள் எல்லாம் நசுக்குண்டன; வியாபாரமும் கும்பினியாரின் கைக்குள் அடங்கிவிட்டது.

இந்திய அரசாங்கத்திலே பெரிய உத்தியோகம் வகித்து, இந்தியாவின் பொருளாதாரச் சரிதத்தை எழுதியுள்ள இராமேச சந்திரதத்தர் கூறுவது இது:—“ஆங்கில ஆட்சியின் விளைவாக இத்தேச செல்வ ஆதாய மூலங்கள் சுருங்கிவிட்டன. பதினெட்டாம் நூற்றாண்டிலே இந்தியாவில் தொழில் வகைகளும் முயற்சிகளும் அமோகமாக இருந்தன. விவசாயமும் தலைசிறந்து நின்றது.

“கைத்தறி நெசவுத்துணிகள் ஆசியா, ஐரோப்பா, ஆகிய இருகண்டங்களின் சந்தைகளிலெல்லாம் குவிந்து கிடந்தன. ஆயினும் என்ன? கும்பினியும், பிரிட்டிஷ் பார்லிமெண்டும் ஒன்றுகூடி, சுயநலமே கொண்டு, இங்கிலாந்தின் தொழில்களை வளர்க்கவும், இந்தியாவின் தொழில்களை நசுக்கவும் முயன்றன.

“அந்த இரண்டின் திட்டமான கொள்கை யாது? தொழில் முறைப் பண்டங்களுக்கெல்லாம் இங்கிலாந்

தையே இந்தியா எதிர்பார்த்துக் கிடக்கவேண்டும்; இங்கிலாந்தில் செய்யப் படும் சரக்குகளுக்கு வேண்டிய மூலப் பொருள்களை மட்டும் இந்தியா உற்பத்தி செய்தால் போதும் என்பதேயாம்.

"சிறிதும் தங்கு தடையின்றி அக்கொள்கை கையாளப்பட்டு வந்தது. அதனால் இந்திய நெசவாளரும், இதர தொழிலாளரும் தங்கள் கடைகளைக் கட்டிப்போட்டு விட்டு, கும்பினியின் தொழிற் சாலைகளிலே வேலைசெய்யும்படி கட்டாயம் பிறந்தது; அத்தொழிலாளரின் மீது சர்வாதிகாரம் செலுத்த கும்பினி ஆட்களுக்கு அதிகாரம் கிட்டியது.

"தாங்கமுடியாத ஏற்றுமதி வரிவிதித்து, இந்தியத் தொழில்கள் நசுக்கப்பட்டன; ஆங்கில சாமான்களோ இந்தியாவில் கொண்டுவந்து குவிக்கப்பட்டன. அதனால் கோடிக்கணக்கான இந்தியருக்குப் பிழைப்பும்போய் விட்டது. தொழில் முயற்சி எனும் மகத்தான வருவாய் மூலத்தை இந்தியர் இழந்துவிட்டனர்.

"தொழில்கள் நசுக்குண்டஉடனே மக்களுக்கு வேறு பிழைப்பு இல்லை. எல்லாரும் விவசாயத்தில் போய்க் குவியவேண்டும். அனைவருக்கும் விவசாயம் ஒன்றே போதுமா? அதில் எல்லாருக்கும் வாழ்வுக்கான வகை கிட்டுமா? கிட்டாது. இங்கிலையில் கும்பினியாரின் நில வரி வசூல் முறை எப்படி என்று பார்ப்போம். நிலவரியோ எனில் விஷம் போல் ஏறிவிட்டது.

"உதாரணமாக 1764-ஆம் ஆண்டிலே வங்காளத்தின் கடைசி நவாபு தன் பிரதேசங்களிலிருந்து பெற்ற நிலவரி 8 லட்சத்து 17 ஆயிரத்து 553 பவுன். அவனைப்போக்கி விட்டு, வங்காளத்தைக் கும்பினியார் கட்டிக்கொண்டு,

ஒரு முப்பது வருஷம் ஆனதும், (அதாவது 1800-ஆம் ஆண்டிலே) அந்தப் பிரதேசத்திலிருந்து கும்பினியார் இறுத்த நிலவரி 26 கோடியே 80 லட்சம் பவுன்! முப்பது வருஷத்திலே மூன்று மடங்கு உயர்வு! ஏழை விவசாய மக்களால் இந்த உயர்வைத் தாங்க முடியுமா?

"அயோத்தி நவாப் 1802-ஆம் ஆண்டிலே சில பிரதேசங்களைக் கும்பினியாருக்குக் கொடுத்தான். அப்போது அவன் அப்பிரதேசங்களிலிருந்து எதிர்பார்த்த நிலவரி 13 இலட்சம் 40 ஆயிரம் பவுன் தங்களிடம் வந்த மூன்று வருஷகாலத்திற்குள் கும்பினியார் கறந்த தொகை 16 லட்சத்து 88 ஆயிரம் பவுன்!

"இது நிற்க, பம்பாய் மாகாணத்திலே மகாராஷ்டிரரிடமிருந்து 1817-ஆம் வருடம் பல பிரதேசங்களைக் கும்பினியார் கைப்பற்றிக் கொண்டனர். கடைசியாக அப்பிரதேசங்களிலிருந்து மகாராஷ்டிரா பெற்ற நிலவரி 8 லட்சம் பவுன்; தங்கள் கைக்கு வந்த சிலவருடங்களுக்குள், கும்பினியார் நிலவரியாக அடைந்ததொகை 15 லட்சம் பவுன்.

இந்த நிலை கண்டு ஆங்கிலேயரிலும சிலருக்குப் பொறுக்கவில்லை. "அப்பப்பா! நம்மைப்போல் இவ்வளவு அதிகமாக எந்த இந்திய அரசனும் நிலவரிவாங்கியதில்லையே" என்று ஹீபர் என்னும் பாதிரியார் பதறிப் பேசியிருக்கிறார். கர்னல் பிரிக்கல் என்னும் மற்றோர் ஆங்கிலேயரின் கருத்து இது:

"இப்போது (அதாவது 1830-ஆம் ஆண்டில்) நாம் இந்தியாவில் வாங்கும் நிலவரியானது நிலச்சுவான்களை மொட்டையடிப்பதாகவே இருக்கிறது. நிலவருமானம் முழுவதையும் நிலவரியாக நாம் பறித்து விட்டால், பூ

சொத்துடையோருக்கு என்ன மிச்சம் இருக்கும்? ஒன்றும் கிடையாதே. இத்தகைய நிலவரி முறையானது ஆசியாவிலோ, ஐரோப்பாவிலோ எக்காலத்திலும் இருந்ததில்லை" என்று கூக்குரல் போட்டிருக்கிறார்.

இந்தியா நமது சொத்து, நமது கறவைப்பசு, எவ்வளவு கறக்கமுடியுமோ அவ்வளவும் கறந்து விடவேண்டும் என்று கும்பினியார் எண்ணிக் கிடந்தனரேயன்றி வேறன்று. கறவைப்பசு உயிருடன் இருக்க அதற்கு ஆகாரம் முக்கியமாயிற்றே, அப்போதுதானே அதனிடமிருந்து நாம் பாலைக்கறக்கமுடியும், என்ற விஷயத்தை மட்டும் அவர்கள் கருதவேயில்லை.

தொழில் போய்விட்டது; விவசாயமும் தத்தளிக்கின்றது; மக்கள் எங்ஙனம் வாழ்வது? கும்பினியிடம் வேலைசெய்து அதாவது அடிமைத்தொண்டு புரிந்து காலந்தள்ளலாம். இதற்காவது வகை உண்டா? 1786 ஆம் ஆண்டிலே காரன்வாலிஸ் என்பவன் இங்கே கவர்னர் ஜெனரலாக இருந்தான். அப்போது, "இந்தியர் அயோக்கியர், லஞ்சம் வாங்குபவர், ஆதலின் அவர்களுக்கு உத்தியோகங்கள் கிடையா" என்று செங்கோல் பிறப்பித்தான்.

"ஐரோப்பியருக்குத் தான் உத்தியோகங்களெல்லாம் என்றான். ஆனால், வெள்ளைக்காரனின் வீடுகளிலே ஏவலாளாக, இட்டவேலை செய்வோனாகச் சேவகம் புரியும் உத்தியோகங்களுக்கு ஐரோப்பியர்தான் என்று அவனால் கட்டளை பிறப்பிக்க முடியவில்லை. அக்கட்டளை நிலை நிற்கையில், தொழிலும், விவசாயமும் தெரியாமல், கூலி வேலைக்குப் போகவும் மனமில்லாமல், படிப்பும் பெருமையும் கொண்டுள்ள இந்தியர் எப்படிச் சாப்பிடுவது!

பொதுவாக இந்திய மகா ஜனங்களைக் குறித்து ஆங்கிலேயர் கொண்டிருந்த அபிப்ராயத்தைப் பார்ப்போம். தாங்களே அரசாளும் இனம், அறிவு நிறைந்த ஜாதி, தெய்வப் பிறப்பான மனிதர், எல்லாரையும் ஈடேற்ற வந்துள்ள கிறிஸ்தவர் என்பனவே ஆங்கிலேயரின் கருத்து! ஆதலின், அந்நாளில் இருந்த ஓர் ஆங்கிலேயர் கூறும் வண்ணம், இந்தியர் மிருகப் பிராயங்கள், புழு பூச்சியினும் கேவல மானவர்கள் என்பதே கும்பினியதிகாரிகளின் கருத்து. மேலும் அந்த ஆங்கிலேயர் கூறுவது இது :—

“ இந்தியாவிலே உத்தியோகம் பாக்கும் அல்லது வேறு தொழில் புரியும் ஆங்கில வாலிபனே, இந்தியாவையும் இந்திய மக்களையும் இந்தியாவைப் பற்றின எதையும் துச்சமாகவே எண்ணுகின்றான் ; நாற்ற மெடுத்த கறுப்பர், அசங்கியமான ஈனர், அழுக்குப் பிடித்த ஜந்துக்கள், கறுப்பு மிருகங்கள் என்று இந்தியரைச் சொல்லுதல் சர்வ சாதாரணம்.

ஆங்கிலக் குழந்தைகளும், தமது பெற்றோரைப் பின்பற்றி, இந்தியரை ஏசும்! ஐந்து வயதுள்ள ஆங்கிலப் பையனொருவன் தன்னைத் தோளில் தூக்கிச் சென்று பாராட்டும் இந்தியனைக் ‘ கறுப்பு மிருகம் ’ என்று சொன்னதை நான் அறிவேன். பொதுவாக எல்லாருமே இந்தியரை அலட்சியமாகவும் அவமரியாதை யாகவும் பேசுதல் இயற்கை. அதிலும் இளைஞராயுள்ளோர் மண்டைக் கிறுக்கினால், இந்தியரை ஏளனஞ் செய்தல் இயற்கை.”

கல்கத்தாவிலே ரூபலால் மல்லிகர் என்பவர் பிரபல வியாஷி. அவர் வீட்டில் அடிக்கடி நாட்டியக் கச்சேரி நடக்கும். அதற்கு அவர் ஆங்கிலேயர்களை அழைப்பார் ;

அவர்களுக்கு விருந்தும் நடத்துவார். 1830-ஆம் ஆண்டில் ஒரு விருந்து நடந்தது. அதற்குப் பல ஆங்கிலேயர் போயிருந்தனர். அன்னவரில் ஒருத்தி பெண்டன் எனும் ஆங்கில மாது.

விருந்துண்டு நாட்டியமும் பார்த்துத் திரும்பியபின், அம்மாது சொன்னது இது:—"ஆங்கிலேயரை விருந்தினராகக் கொள்வது பெரும் பாக்கியமென 'நேடிவ்கள்' நினைக்கிறார்கள். வருட முழுதும் அரிசியும் நெய்யும் உண்டு ஜீவிக்கும் அந்த அல்ப மிருகம் (நபலால். மல்லிக்) பாயில் தான் படுக்கிறது. கட்டில் மெத்தை கொள்வதில்லை. ஆயினும் ஆடம்பரமாக ஆங்கிலேயருக்கு விருந்தளிப்பதில் ஆனந்தம் அடைகிறது!"

கவர்னர் ஜெனரலாக இருந்த லார்டு ஹேஸ்டிங்ஸ் என்பான் 1813-ஆம் ஆண்டில் குறித்து வைத்தது ஈதாகும்:—"ஹிந்துவை மிருகம் என்றே சொல்லலாம். மிருகத்தைப்போலவே அவன் உண்டு உறங்குகிறான். சிற்சில வேலைகளே அவனுக்குத் தெரியும்; அவற்றில் தான் தேர்ச்சியும் சாமர்த்தியமும் உண்டு.

"நாய், யானை, குரங்கு இவற்றைவிட அதிக புத்தி இந்துக்களுக்குக் கிடையாது. இந்த நிலையிலுள்ள இந்துக்கள் முன்னம் ஒரு நாளும் முன்னேற்றம் என்பது கொண்டிருக்க முடியாது. வங்காளத்திலோ அவர்கள் சிசுவைப்போல்தான். சுய மூளை என்பது கிடையாது."

தங்களிடம் வேலை செய்த இந்தியரை ஆங்கிலேயர் எங்ஙனம் நடத்தினர் என்று பார்ப்போம். ஜான்சன், ரிச்சர்டு என்னும் இரு தோட்டக்காரர் இருந்தனர். இருவரும் ஆங்கிலேயர். தங்கள் வேலையாளரை அவர்கள் நடத்திய விவரம்:—"போலா என்பவனைக் கைவிலங்கிட்டுத் தொழுவத்தில் போட்டனர்; பின்பு சவுக்கால்

அடித்தனர்; அதன் பின் அவனைக் கழுதையின்மீது ஏற்றி வைத்து, கொட்டு முழக்குடன் ஊர் ஊராக ஊர்வலம் செய்வித்தனர்.'' அவ்விதம் ஆங்கிலேயர் செய்தனர் என்று சொல்லவும் அக் கிராமத்தார் துணிவு கொள்ளவில்லை. அவ்வளவு பயம் ஆங்கிலேயர் என்றால்!

பரம்பரையான அரசைப் பறித்துக் கொண்டனரே என்று அரச வமிசத்தாரின் ஆத்திரம் ஒரு புறம்; நம் பிழைப்பு போய்விட்டதே என்ற அவர்களை அண்டி நின்றோரின் அழுகை ஒரு புறம்; சொத்து, சுதந்திரம் போய் விட்டதேயென்று ஜமீன்தார்களின் மனத்தீ ஒரு புறம்; நிலவரி தாங்க முடியவில்லையே என்று மிராசுதார் களின் திகைப்பு ஒரு புறம்; மானியங்கள் மறைந்தனவே என்று இனாம்தார்களின் ஓலம் ஒரு புறம்; தர்ம சொத் துக்கள் பறி முதலாவதா என்று பலரின் பிரலாபம் ஒரு புறம்; தொழில்கள் நசுக்கப்பட்டுப் போயினவே என்று தொழிலாளரின் துடிப்பு ஒரு புறம்; உத்தி யோகம் பார்க்க வகையில்லையே என்று அறிவாளிகளின் ஏக்கம் ஒரு புறம்; மத விஷயத்தில் தலையிடுகின்றனரே என்று பிராமணரும், மௌல்விகளும் மனப்புண் கொண்டது ஒரு புறம்; நம்பிக்கைமோசமாக நடக் கின்றனரோ என்று சிப்பாய் மறுகுவதுஒரு புறம்; எல்லாரையும் கறுப்பர், கறுப்பர் என ஏசு கின்றனரே யென்று பொதுமக்கள் சினம் பூத்தது ஒரு புறம்; இங்ஙனமிருக்க, அனைவருக்குமே மனம் புகைந்து கொண்டிருந்தது.

17. போர் முயற்சி

சிதம்பர ரகசியம், சிதம்பர ரகசியம் என்பர். 1857-ஆம் ஆண்டிலே தோன்றிய, சுதந்திர மகா யுத்தத்திற்கு உரிய முயற்சியும் அத்தன்மைத்தான். பாரத மக்களிலே ஆண், பெண், குழந்தை, குஞ்சு அடங்கலும் அம்முயற்சியில் மாயமாக முளைத்து நின்றும், கும்பினி அதிகாரிகள் கடைசி வரையில் அதனை உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஏககாலத்திலே எங்கும் கொந்தளிப்பு என்றால், அதற்கு நெடு நாள் முன்னதாகவே முயற்சி நடந்திருக்கவேண்டும் என்பது வெளிப்படை.

அம்மகாயுத்தத்தை மூட்டிவிட்ட புருஷர் பலராவர். அவர்களிலே நால்வர் முக்கிய புருஷராம். அந்நால்வரும்:- (1) மகாராஷ்டிர பேஷ்வா நானா சாகிப், (2) டில்லி பாதுஷா முகம்மதுஷா, (3) ஜான்சி நாட்டு ராணி இலட்சுமி பாய், (4) அயோத்தி நவாபின் பிரதானி அலி நஹீகான் ஆவர். அன்னவரின் இருப்பிடங்களோ முறையே பிரம வர்த்தம், டில்லி, ஜான்சி, காளி கட்டம் ஆகும். அந்நால்வரும் தாம் இருந்த இடம் விட்டுப் பெயர்ந்தது கிடையாது.

நானாசாகிபோ கும்பினி அதிகாரிகளுக்கு விருந்து அளிப்பதில் இம்மியும் குறைய வில்லை. 80 வயது ஆகி விட்ட பகதூர் ஷா தனது பஞ்சணையை விட்டு நகர்ந்தது கிடையாது. ஜான்சி ராணியோ தலைநகரில் மாளிகையிலே தனியறையில் இருந்தனள். அலிநஹீகான் என்பான் தனது ஒய்யார வாழ்விலும், உல்லாசப் போக்கிலும் மூழ்கிக் கிடந்தான். ஆயினும் அன்னவரின் உள்ளக் கருத்தை ஆயிரக்கணக்கான மாயாவிகள் எட்டுத் திக்கிலும் பரம இரகசியமாகப் பரப்பி வந்தனர்.

அம் மகாயுத்தம் மூளுவதற்குமுன், மூன்று வருட காலமாகவே நாஜசாகிபின் தூதுவர் இப் பாரத பூமியில் உள்ள சமஸ்தான மன்னரின் மாளிகைக்குப் போக்கு வரத்தாய் இருந்தனர். புகை நுழையாத இடம் கிடையாது என்றால், நாஜுவின் தூதுவர் புகாத மாளிகையும் கிடையாது. அன்னவரின் கையில் கடிதம் இருக்கும். கருத்திலே காரியம் இருக்கும். பிறர் அவற்றை அறிய முடியாது; அறியவேண்டி ஒரு சமயம் ஆளைப் பிடித்துப் பார்த்தாலோ, கையிலுள்ள கடிதம் மாயமாக மறைந்து விடும்.

சமஸ்தான மன்னர்கள் பல ஜாதி, பலமதம், பல வகுப்பு. ஆகவே, அவ்வவர்க்கு உகந்த ஜாதி, மத, வகுப்பினரான தூதுவரே செல்வர். அவ்வவர்க்குரிய தாய் மொழியிலேயே கடித வாசகமும் காணப்படும். அவ்வாசகத்தினை பிறர் உணர முடியாது. எல்லாம் மூடுமந்திரமான வாசகமே. வடக்கே இமயத்திலிருந்து தெற்கே குமரி வரையில் நாஜுவின் தூதர் வந்து போயினர்.

அலிநஹீகானின் கைவரிசையே கைவரிசை! வங்காளச்சேனை வட இந்தியாவில் கிழக்கே கல்கத்தாவிலிருந்து மேற்கே புருஷபுரம் வரையில் பற்பல இடங்களில் தங்கியிருந்தது. அச்சேனை சமுத்திரத்தின் சுபேதார், மேஜர்கள், சுபேதார்கள், ஜமேதார்கள் இவர்களுக்கு மாயக் கடிதங்கள் வரும். அவற்றைப் பிரித்து வாசித்தவுடன், அவர்களின் கண்களிலே நீர்த்ததும்பும் "வயிறு பெரிது, வாழ்வோ மாயம், மானமே பெரிது, சுதந்திரமே தேவை, இனி கணநேரமும் காலதாமதம் கூடாது" என்னும் ஆவேசமே அவர்களிடம் உதிக்கும்.

பக்கிரிகளும் ஆண்டிகளும் பட்டாளம் பட்டாளமாகச் செல்வர்; சிப்பாய்களுக்குச் சீரிய போதம் புரிவர்.

அம்மாயபோதமோ சுதந்திரமாகத் திகழும். அவ்வளவு தான் தாமதம். ஹிந்து சிப்பாய், புண்ணிய கங்கைமீது ஆணை யென்பான்; வேதத்தின்மீது சபதம் என்பான்; கும்பினி ஆட்சியைக் குலேத்தே தீருவேன், என்று கங்கணம் பூணுவான்! முஸ்லிம் சிப்பாயோ, "ஆண்டவன் அல்லாவே சாட்சி; திருக்குர்ஆன்மீது ஆணை; தேச விடுதலேக்கு முயலுவேன்; அன்னிய ஆட்சியை அகற்றி எறிவேன்," என்று வஞ்சினம் பேசுவான். கல்கத்தாவி லுள்ள கும்பினியின் கோட்டைச் சிப்பாய்களும், அவ் விதமே சபதம் செய்து தருவர்.

பக்கிரிகளும் ஆண்டிகளும் சிப்பாய்களுக்குப் பார மார்த்திக போதம் புரிவதாகவே, ஆங்கில தளகர்த்தர் எண்ணிக்கிடப்பர். அப்பக்கிரிகளும் துறவியரும் இராஜீய, தேசிய, சுதந்திர யுத்தப் பக்கிரிகளும், துறவியருமே யாவர்! உள்ளங்கவர் கள்வன் என்று ஆண்டவனே ஒரு பக்தர் வர்ணித்தார். அவ்விதமே சிப்பாய்களின் உள்ளங்கவரும் கள்வராகத் துலங்கினர் அப்பக்கிரிமாரும் துறவியரும்.

ஆயிரக்கணக்கான பக்கிரிகளும், துறவிகளும் தேச மெங்கும் செல்லா நிற்க, அவர்களிலே சிலபலர் ஆடம்பர மாக யானேமீது செல்வர்; அல்லது படாடோபமாகப் பல்லக்கிலே போவர். பரிவாரங்களும் அவர்களேச் சூழ்ந்து செல்லும். பரிவார தேவதைகளிடம் அவசிய மான ஆயுதங்களுக்கு ஒரு குறைவும் இராது. "பெரிய மடாதிபதி யாத்திரை போகிருர், மகிமை வாய்ந்த மௌல்வி தேச சஞ்சாரம் செய்கிருர்," என்றே மகா ஜனங்கள் மனத்துட் கொள்வர். ஆங்கிலேயரும் அவ் விதமே நினேத்து நிற்பர். அவ்வளவு ஆடம்பரத்துக்கும் பணம் வேண்டுமே. பிரமவர்த்தம், டில்லி இந்தப் பொக்

ஷிஷ்யர்கள் இருக்கும்பொழுது, பணத்துக்கு என்ன குறைவு? காரியத்தைக் காண், தர்மத்தை நோக்கு என்பதே அம்மதப் பெரியார்களின் ஞானபோதமாகும். அக் குருக்களோ தமது சீடர்களுக்குப் பரிசு கொடுப்பர்.

பணமூட்டை தாங்கிய அப் பெரியார்கள் கிடக்கட்டும். நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும், தெருக்களிலே இரவும் பகலும், தேசத்தொண்டர்களான பிச்சைக்காரர் காணப்படுவர். அன்னார் அன்னப்பிச்சை கேளார்; ஆடைப்பிச்சையும் வேண்டார்; தியாகப் பிச்சையே கேட்பர்! வீரப்பிச்சையே வேண்டுவர்; சுதந்திரப் பாடலே பாடுவர்; வீர வாசகமே விளம்புவர்; தேசாபிமானப் பேச்சை பேசுவர்; சொந்த நாட்டில் பிறர்க்கடிமை செய்து துஞ்சுவதோ என்பர்; துச்ச நிலைமையைத் தூ என்று தள்ளி எழுக என்பர். அன்னாரின் பேச்சும் செயலும் இருவகை அர்த்தம் கொள்ளும். ஆதலின் கும்பினி அதிகாரிகள், அவற்றின் உண்மையை உணர முடியாது போயிற்று.

அத் தொண்டர்கள் வந்து போனதும், ஜனங்களின் உள்ளத்திலே ஒரு கிளர்ச்சி தோன்றும்; ஓர் உணர்ச்சி உதிக்கும். ஒருவரோடு ஒருவர் காதோடு காது வைத்துப் பேசிக் கொள்வர். ஆங்கிலேயரின் வீடுகளில் வேலை பார்க்கும் "ஆயா" வும் ஆவேசம் அடைவாள்; பட்லர் என்பானும் பெருமிதமாக நடப்பான்; "சோக்ராப் பையனும்" கம்பீரமாக உலாவுவான். ஈதென்ன அதிசயம், என்று இரண்டொரு ஆங்கிலேயர் அச்சமயம் எண்ணுவர். அப்பால் அந்நினைப்போ பறந்துபோம். பட்டாளங்கள் உள்ள இடங்களில்தான் அத்தொண்டர்களுக்குத் திருஷ்டியதிகம். பிச்சைக்காரர்களின் பாட்டையும் பேச்சையும் கேட்கக்கேட்க, இந்தியச் சிப்பாய்களுக்

குப் பரவசம் பிறக்கும்; உடனே பலரும் தங்களை யறியாமல் மீசையை முறுக்கி விடுவர்.

அத்தகைய படாடோபப் பக்கிரியொருவன்மீது ஆங்கிலேயருக்குச் சந்தேகம் பிறந்தது. "இந்த ஊரை விட்டுப்போ" என்று ஆங்கிலேயர் அவனுக்கு ஆணை யிட்டனர். "புத்தி" என்று சொல்லி, அவன் வேறு ஊர் சென்றான்; தான் ஏறி வந்த யானைமீது புதிய ஊர் சென்றதும், சிப்பாய்களின் வீட்டிலேயே தங்கினான் அப்பக்கிரி. அங்கிருந்தும் அவனைக் கிளப்பினர் ஆங்கிலேயர். முடிவிலே, அவன் இலட்சுமணபுரி சேர்ந்தான்; அங்கே பல்லாயிரக் கணக்கான மக்களின் கூட்டத்திலே வீரம் பேசினான்; கும்பினியாட்சியை வேரறுத்தாலல்லாமல், தேச மக்களுக்கு வாழ்வு கிட்டாது என்றான். உடனே இராஜத்துவேஷம் பேசினானென அவனை ஆங்கிலேயர் சிறை செய்தனர்; தூக்குத் தண்டனை விதிக்கவும் தீர்ப்பளித்தனர் அவன் பெயர் மௌல்வி அகமது ஷா. அவன் நமது சென்னை மாகாணத்தில் பிறந்தவன்; சுதந்திர யுத்தம் மூண்டதும் வெளிக்கிளம்பிப் போர் புரிந்தான் அவன்.

ஒவ்வொரு சேனையிலும் சிப்பாய்களுக்கு மதபோதம் புரிய ஒரு மௌல்வியும், ஒரு சாஸ்திரியும் கும்பினியின் சம்பளத்தில் அமர்ந்திருப்பர். சமயம் வாய்க்கும் போதெல்லாம், தனது ஆட்களை அப்பதவியில் அமருவதற்கு வகைதேட, நானாசாகிப் தவறுவதில்லை விதை மூட்டைக்குள் பெருச்சாளியை வைத்துக் கட்டினால் எப்படி? இதனை ஆங்கிலேயரால் கடைசி வரையில் கண்டு கொள்ள முடியவில்லை. நானாவின் தந்திரம் இம்மட்டோடு நின்றதோ? பாமரர் என்போருக்கு விழிப்பு ஊட்ட வேண்டுமே. தேர், திருநாள் என்றால், பண்டிகை பெரு

நாள் என்றால், வித்தையாடிகளும், விகடகவிஞரும், லாவணியும், ஜாவளியும் பாடுவோரும் புறப்பட்டுப் போவர்; பொம்மலாட்டக் காரரும் போய்ச் சேருவர்.

வித்தையும் விகடமும், பாட்டும் ஆட்டமும் விநோத மாகவே இருக்கும். ஆனால், புராண, இதிகாச சம்பவங் களை விளக்குவதேபோல் பாசாங்கு பண்ணி, பரம்பரை இராஜ வம்சங்கள் அழியும் வித்தை காட்டப்படும்; புராதனமான பிரபுக்கள் சோற்றுக்குத் திண்டாடும் விகடம் நடக்கும்; பழைய நிலைமை என்ன? இப்போ துள்ள நிலைமை யாது? என்று பாடல்கள் புகலும். பொம்மலாட்டமும் அத்தன்மைத் தாகவே துலங்கும்.

தேசத்தின் உயர்வையும் தாழ்வையும் விரித்துரைக் கும் வகையில், டில்லி பாதுஷாவின் ஆஸ்தான கவிஞர் கட்டித் தந்த பாட்டைக் கேட்கும் பொழுது, கண்ணீர் வடியாதார் இரார்; கதறுவாரும் காணப்படுவர்; கொதிப் புக் கொள்வாரும் தென்படுவர்: பாட்டோ கல் மனத் தையும் கரைத்துவிடும்: அம்மாதிரியான பாடல்கள் அனந்தமாம்.

ஆடவரின் மனத்தைக் கரைக்க அந்த உபாயங்கள் சாலும். வீடுகளிலுள்ள பெண்மணிகளின் உள்ளங்களைக் கவர வேண்டுமல்லவா? சோதிடமும் குறியும் சொல்லும் குறத்தியர் கிளம்புவர்; கை ரேகை பார்த்து பலாபலன் சொல்லும் காரிகையர் புறப்படுவர்; வனமூலிகையும் மருந்தும் விற்கும் வனிதையர் பயணமாவர். அம்மூவகை மாதரும் தனித்தனி ஊர் ஊராகச் செல்லுவர். குறிகாரி, குறத்தி என்றால் வீட்டுப் பெண்டிருக்கு ஆனந்தம் உதிக்கும்; ஆவல் ஓங்கும். குறிகாரிகள் கைரேகை பார்ப்பர்; சுவடியில் கணக்கு எடுப்பர்; பானை பிடித்த வளின் பாக்கியம் என்பர்; பாரதத் தாயின் பாடுபார்

என்பர்; பாதுஷாவின் தேவியரும் நவாபின் நங்கையரும் இராஜாக்களின் மகிஷியரும் நலிகின்றனரே என்று நவில்வர்; மாதர் அனைவரையும் அவ்விதம் தட்டி எழுப்புவர். பெண்களுக்குத் தூபம் போட்டுவிட்டால் கேட்க வேண்டுமா?

அவ்விதமெல்லாம் தேசமெங்கும் பரமதந்திர முயற்சிகள் நடந்து வந்தன. தேவாலயங்களிலே, திவ்ய தீர்த்தங்களிலே, தேர் திருநாட்களிலே, புண்ணிய க்ஷேத்திரங்களிலே, பெரிய பண்டிகைகளிலே, இராஜபாட்டைகளிலே, பட்டி தொட்டிகளிலே, வீடு வாசல்களிலே பிரசாரம். நாடகங்களிலோ சொல்லவேண்டியதில்லை. அதனால் அடிமை வாழ்வில் அனைவருக்கும் ஒரே வெறுப்பு! சுதந்திர வாழ்விலே ஒரு தாகம். பலரும், "என் மதம் அழிகிறது; என் தேசம் திண்டாடுகிறது; மக்கள் மருகுகின்றனர்; நாயினும் கேடுகெட்ட நிலைமை சகிக்க முடியாது," என்று துடி துடிக்கத் தொடங்குவர். தோட்டி முதல் தொண்டைமான் வரையில் எல்லாருக்கும் ஒரே சுதந்திரத் துடிப்புத்தான்; வீரத் துடிப்புத் தான்.

கிழமானாலும் சிங்கம் சிங்கமே. பேரரசு இல்லாவிடினும் பாதுஷா பாதுஷாதானே. முகலாயப் பேரரசின் வீழ்ச்சியைக் குறித்து ஆஸ்தான வித்வான் கட்டிய பாட்டை, முகம்மதியர் அனைவரும் தொழுகை நேரத்தில் ஓதி, ஆண்டவன் அல்லாவை வேண்டிக்கொள்ளவேண்டுமென்பது பாதுஷாவின் ஆணை. அதனால் முகம்மதிய சமூகம் ஒரு முகம் கொண்டுவிட்டது.

மக்களுக்கு மனக் கிளர்ச்சியூட்ட மற்றொரு நிகழ்ச்சியாதெனில், பரங்கியரின் ஆட்சி நூறாவது ஆண்டினில் நொறுங்கிப்போம் எனும் ஜோசியமாகும். சோதிடத்

திலே நம்மவருக்கு நம்பிக்கை மிகுதி. ஆதலின், பலரும் அதனை நம்பி, நல்லூக்கம் கொண்டனர். 1757-ஆம் ஆண்டில் நிகழ்ந்த பிளாசி யுத்தமே ஆங்கிலேயரின் ஆட்சிக்கு ஆரம்பம். 1857-ஆம் ஆண்டிலே நூறாவது ஆண்டு நிரம்பும் அப்போது அந்த ஆட்சி சாயும். இவ்விதம் சோதிடம் சொன்னது யார் எனில், பஞ்சாங்கத்தில் உளது என்றனர் சிலர்; நாடிக்கிரந்தத்தில் காணலாம் என்றனர் இன்னும் சிலர்: பெரியாரொருவர் பகர்ந்தாரென்பர் வேறு சிலர்; எனவே, அச்சோதிடம் பொய்க்கா வண்ணம் நாமும் முயலவேண்டுமென எல்லாரும் திடசித்தம் கொண்டனர்.

கருத்தில்கொண்ட காரியத்தைக் கண்டெடுக்க, ஆங்காங்கே இரகசிய சங்கங்கள் முளைத்தன. சங்கத்தின் நடு நாயகமான ஸ்தலம் பிரமவர்த்தமே; தட்சிணத்திலே இரகசிய சங்கங்களின் தலைவன் அரங்கபாபு எனும் மராட்டியப் பெருமான். ஐக்கிய மாகாணத்திலே தலைவனாகத் திகழ்ந்தவன் ராணு குமாரசிம்மன். கல்கத்தாவில் அலி நஹீ கானே தலைவன்.

நிஜாம் ராஜ்ஜியத்திலும் முகம்மதியர் இரகசிய சங்கங்கள் ஏற்படுத்தினார்கள். நமது சென்னை மாகாணத்திலும் அச்சங்கங்கள் கிளைத்தன. அங்காங்குள்ள சங்கங்களையும் தலைவர்களையும் இணைத்து, ஏகோபித்த காரியம் செய்ய அசகாய தூதுவர்கள் தோன்றினர். சிற்சில சமயங்களில் கடித மூலமும் செய்தி பறக்கும். தப்பித் தவறி அன்னியரிடம் அக்கடிதங்கள் சிக்கிக் கொள்ளின், அவற்றிலே புள்ளிகளும் இரண்டு மூன்று எண்களுமே காணப்படும். வேறு விஷயம் எதுவும் இராது.

இத்தகைய நிலைமையில்தான் கொழுப்புக் கலந்த தோட்டாக்கள் தோன்றின. பன்றிக் கொழுப்பா என்று

முகம்மதிய சிப்பாய்கள் பதைத்தார்கள்; பசுவின் கொழுப்பா என்று ஹிந்து சிப்பாய்கள் கொதித்தார்கள். உடனே சிப்பாய்களுக்குள் கடிதப் போக்குவரவு ஏற்பட்டது. கடிதங்கள் ஆயிரம் பதினாயிரம் எனும் கணக்காம். இவ்வளவு ஏராளமான கடிதங்கள் புறப்படுவதேன் என்று சிலர் சந்தேகங் கொண்டனர். பஞ்சாபின் சர்வாதிகாரிபோல் விளங்கிய ஸர். ஜான் லாரன்ஸ் என்பான் அக்கடிதங்களை உடைத்துப் பார்த்தான். "சிப்பாய்கள் ஒரு முகமாகத்திரளின், ஆங்கிலேயர் பெருங்கடலிலே ஒரு சிறு துளி போல் அல்லவா?" என்று ஒரு கடிதம் பேசியது. மற்றொரு கடிதமோ, "சோதர சிப்பாய்களே! நம் கையைக் கொண்டே, நம் கண்ணைக் குத்துகின்றனர் பரங்கியர்," என்று இசைத்தது.

சிப்பாய்களும் ஆங்காங்கே இரவில் கூடிப் பேசுவர். அவர்களுக்குள்ளும் இரகசிய சங்கங்கள் ஏற்பட்டன. பொறுக்கான மனிதர்களே அச்சங்கத்தின் அங்கத்தினர். பரம இரகசியமான கூட்டத்துக்கு அங்கத்தினர் வரும் பொழுது, அவர்களை அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. எல்லாரும் மாறு வேஷத்திலேயே தோன்றுவர். கண் ஒன்றைத் தவிர மற்றைய அவயவங்கள் யாருக்கும் தெரியா. மகா முக்கியமான தீர்மானங்கள் செய்யப்படும் அந்த இரகசிய கூட்டத்திலே. அங்கத்தினரிலே யார் மீதாவது சந்தேகம் ஏற்படுமானால், உடனே அவனுயிரை மற்றையோர் வாங்கிவிடுவர்.

பட்டாளங்களுக்குள்ளே பரஸ்பரம் அபிமானம் ஏற்படவேண்டி, ஒரு பட்டாளத்தாரை மற்றொரு பட்டாளத்தார் விருந்துக்கு அழைப்பர். பொறுக்கி யெடுத்த சிப்பாய்கள் தங்கள் சுபேதாரின் ஜாகையில் கூடி, ஆணைகளை அறிந்து கொள்வர். பட்டாளங்கள் அனைத்தும்

1857-ஆம் ஆண்டு மேமாதம் 31-ந்தேதி ஞாயிற்றுக் கிழமையன்று ஏக காலத்தில் எங்கும் திடீரெனக் கிளம்ப வேண்டும் என்பதே முடிவு.

கும்பினியாரிடம் வேலைபார்க்கும் பலவாறான இந்திய அதிகாரிகளும் (வில்லைச் சேவகன் உட்பட) இரகசிய சங்கத்தின் அங்கத்தினரே! வெளித் தோற்றத்திற்கு அன்னார் அனைவரும் கும்பினியின் பரமவிசுவாசிக ளாகவே காணப்படுவர். ஆங்கில ஆட்சி ஒழிந்து, சுய ஆட்சி ஏற்பட்டதும், பரமதேசபக்தர்களாய், விசுவாசிக ளாய் உழைக்க அவர்கள் சபதம் செய்து கொடுத்தார் கள். நானா, பாதுஷா, நவாப் இவர்கள் மட்டுமே பண உதவி செய்தனர் என்பதில்லை. அயோத்தியிலும் பிற இடங்களிலும் உள்ள சௌகார்களும், சீமான்களும் பணத்தை அள்ளியள்ளிக்கொடுத்தனர், சுதந்திர யுத்தச் செலவுக்கு! தேசமெங்கும் ஏற்பட்ட இரகசிய சங்கங்களின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் சோதிக்க, மூவகை உபாயங்கள் கையாளப்பட்டன. அவை இவை :—

தூதனொருவன் தாமரைமலரொன்று கொணர்ந்து, பட்டாளத்தலைவனிடம் கொடுப்பான். உடனே அத்தலை வன் அதை ஒரு சிப்பாயிடம நீட்டுவான். இவ்விதம் பட்டாளத்திலுள்ள ஆயிரம் சிப்பாய்களின் கைகளைத் தாண்டிச் செல்லும் அத்தாமரைமலர். முடிவில், அத் தூதன் அம்மலரை ஏந்தி, மற்றொரு பட்டாளத்துக்குப் போவான். அத்தூதன் வாய்திறவான்; அம்பு போல் பாய்ந்து செல்லுவான்.

ஜனங்களின் இரகசிய சங்கத்தின் கட்டுப்பாட்டை அறிந்துகொண்ட உபாயம் யாதெனில், தூதுவனொருவன் ஏழெட்டு கோதுமை அடைகள் கொணர்ந்து, கிராமத் தலையாரியிடம் கொடுப்பான். பிரசாதமென எண்ணி,

அவற்றை வாங்கித் தான் ஒரு சிறிது புசித்துவிட்டு, மற்றைக் கிராமவாசிகளுக்கு வினியோகம் செய்வான் அத்தலையாரி. முடிவில் அக்கிராமத்தார் ஏழெட்டு அடைகள் புதிதாகத்தட்டி, அத்தூதனிடம் கொடுப்பர். உடனே அத்தூதன் வேறு கிராமம் செல்லுவான். இவ்விதம் கிராமந்தோறும் கோதுமை அடைகள் பறக்கும்.

தாமரை மலரும், கோதுமை அடையும் புறப்பட்டமை கண்டு, ஆங்கில அதிகாரிகள் பலரும் "கிராம தேவதையின் பிரசாதம் போலும்" என்று நினைத்திருந்தனர். ஓர் ஆங்கிலேயனுக்கு மட்டும் சமுசயம் உதித்தது. கோதுமை அடைகளை அவன் வாங்கிப்பார்த்தான்; திருப்பித் திருப்பி அதனை நோக்கினான். சிறிது பிட்டு வாயில் போட்டு மென்று சுவைத்துப் பார்த்தான்; பின்பு கல்மீது வைத்து நசுக்கிப் பார்த்தான். அடை பேசுமா? அலறுமா? பாம்பின்காலைப் பாம்பு அறிய முடியுமே ஒழிய, மற்றையோர் அறிய முடியுமோ? ஒன்றும் விளங்கவில்லையே என்று அவன் சும்மா இருந்துவிட்டான். "பாரதத்தாய் துடிக்கிறாள்; மக்கள் போருக்கு ஆயத்தந்தானா? என்பதே அடையின் சங்கேதம்.

மூன்றாவது உபாயம் யாதெனில்:—1857-ஆம் ஆண்டு மார்ச்சு, ஏப்ரல் மாதங்களில் இராணுவ ஸ்தலங்களில் திடீர், திடீரென்று தீப்பற்றிக்கொண்டது; தீ வைத்தது யாரென அறிய ஆங்கில அதிகாரிகள் பகீரதப்பிரயத்தனம் செய்து பார்த்தும், புலன் விளங்கவில்லை. துரோக சிந்தையுள்ள சிப்பாயின்வீடே பற்றிக்கொள்ளும். கெடுபிடியாக நடக்கும் ஆங்கில அதிகாரியின் மாளிகையே நெருப்பினால் சாம்பலாகும். அங்கே தீ, இங்கே தீ, எங்கும் தீ என்றே எவ்விடமும் ஒரேபேச்சு, வேறு விஷயம் எது

வும் புலப்படாது. நமனை அறியாமலா உயிர்போகும்? அதுவே போல் சிப்பாய்களை அறியாமலா தீ கிளம்பும்? சிப்பாய்களை வினவினால், எவனும் தனக்குத் தெரியாது என்பான்.

முக்கிய நகரங்களின் சுவர்களிலே விளம்பரங்கள் தோன்றலாயின. அவற்றின் வாசகசாரம் இது:—
"தேச மக்களே! மதாபிமானிகளே? அனைவரும் ஒரு மனம் கொண்டு கிளம்புங்கள்; அன்னியப்பரங்கியரை ஊரை விட்டு ஓட்ட வேண்டும். அன்னவரின் ஆட்சியிலே நியாயம் ஏது? நமது அரசை, சுய அரசை அன்னார் பறித்துக் கொண்டுவிட்டனர். தேசத்தைத் தவிடுபொடி செய்யவும் அவர்கள் துணிந்துளர். இத்தீமை யெல்லாம் அகல, ஒரே ஒரு வழிதான் உண்டு. பரங்கியரின் கையிலிருந்து இந்தியாவை விடுவிக்கவேண்டும். இதற்கு இரத்தக்களறியான போர் புரிதலே வழியாம். இது சுதந்திர மகாயுத்தம்; தர்ம மகாயுத்தம், மதப் பாதுகாப்புக்கான யுத்தம். இப்போரில் சாவோருக்கு மேலுலகம் நிச்சயம். வீரத்தியாக மூர்த்திகளுக்கு சுவர்க்க வாசல் விரியத் திறந்துளது. கோழைகள், தேசத்துரோகிகள், மதத் துரோகிகள், இவர்களுக்குக் கொடிய நரகமே கிட்டும்! தேசமக்களே! சுவர்க்கத்தில் ஆசையா? நரகத்தில் ஆசையா? முடிவு செய்து கொள்ளுங்கள்!"

1857-ஆம் ஆண்டு மே மாதம் 31-ந்தேதி போர் முரசு கொட்ட, மேலே கண்டவாறெல்லாம் ஏற்பாடுகள் நடந்தன. மார்ச்சுமாதக் கடைசியிலே ஆக்ரா நகரின் ஜட்ஜியான ஜான் மோரல் என்பான் நானா சாகிபைக் காணவந்தான். உடனே அவனுக்கு ராஜோபசாரம் நடத்தினன் நானா. அது கண்டு மோரல் சொக்கிப் போய்விட்டான். அடுத்தமாதத்திலே ஆங்கிலேயரை

எவ்விதம் நானு உபசரிக்கப்போகிறுன் என்று மோரு லுக்கு எப்படித்தெரியும்! ஏப்ரல் 18-ந்தேதி இலட்சு மணபுரிக்குச் சென்றுன் நானு சாகிப். இவனை ஏற்ற மரியாதைகளுடன் வரவேற்றனர் அந்நகர ஆங்கில அதி காரிகள். பலரும் பார்த்து வியக்கும் வண்ணம், மகா ஆடம்பரத்துடன் நகரில் பவனி வந்தான் நானு சாகிப். "இப்புருஷனே சுதந்தர யுத்தத்தலைவன்" என்று ஜனங் கள் உள்ளூர எண்ணி உவந்து நின்றனர். சாணக்கிய சாகஸம் என்பர், நானுவின் சாகஸம் பாருங்கள்!

18. முதல் தியாகி

அந்நாளிலே வங்காளச் சேனையில் பலபட்டாளங் கள் இருந்தன. மங்கள பாண்டே என்னும் வீரன் சேவித் தது 19-வது பட்டாளம். சுதந்திர மகாயுத்தம் என்று முரசு கொட்டினர் நானுவும் அகமதுஷாவும்; அதற்கு உரிய தேதியும் குறித்தனர். மங்களனுக்கோ ஆத்திரம் பொறுக்கவில்லை. குறித்த தேதியை அவன் விரல் விட்டு எண்ணிக் கொண்டிருந்தான். எரியும் நெருப்பில் எண் ணெயை ஊற்றிஞல் எப்படி? அதுபோல், கும்பினியார் கொழுப்புக் கலந்த தோட்டாக்கள் கொடுத்தனர், உள்ளங் குமுறிக் கொண்டிருந்தது அச்சிப்பாய்களுக்கு!

கொழுப்பிலே இருவகை. ஒன்று பன்றிக் கொழுப்பு, மற்றொன்று பசுவின் கொழுப்பு. துப்பாக்கியில் தோட்டாபோட்டுக் கெட்டிக்குமுன், தோட்டாப் பொட்டணத்தைப் பல்லால் கடித்துப் பிரிக்க வேண்டும்; பன்றிக் கொழுப்பு என்றுல் முகம்மதியர் சகியார். பசுவின் கொழுப்பு என்றுல் இந்துக்கள் பதறுவர்! இருவகைக் கொழுப்பும் கலந்த தோட்டா என்றுல், சிப்பாய்களின் மனநிலையைக் கேட்கவேண்டுமோ? அத்

தகைய தோட்டாக்கள் கண்டான் மங்கல பாண்டே; மனம் பதைத்தான். ஒருமாதம் கழித்தே போர் தொடங்க வேண்டிய தினம். எல்லாம் மறந்தான் அம் மறையவன்.

தேச நினைப்பு அவன் முன்னே நின்றது; சுதந்திர தாகம் தலைமிஞ்சிக் கிடந்தது: தோட்டாவைக் கண்ட துடிப்பும் பொங்கிப் பரந்தது. "தேசம், மதம், தர்மம் இம்மூன்றும் கெடுவதா? அந்நியர் ஆதிக்கம் கொள்வதா? பாரத புத்திரர் கைகட்டிக் கிடப்பதா?" என்று அவன் எண்ணினான்; உடனே தனது உடைவாளை உருவினான்; "சோதரர்களே, எழுங்கள், கிளம்புங்கள்," என்று ஏனைய சிப்பாய்களை நோக்கிக் கூவினான்; தனது பட்டாக் கத்தியை நாற்புறமும் வீசிக் காட்டினான்; பட்டாள மைதானத்தில் இங்கு மங்கும் எடுப்பாகத் திரிந்தான்; பரவசங் கொண்டான்! அவனைப் பார்த்தோர் பிரமித் தனர்.

அப்பட்டாளத்திலே சார்ஜண்டு மேஜர் பதவி வகித் தவன் ஹியூசன் எனப்படுவான் இவன் ஆங்கிலேயன். (அந்நாளிலே பாரத பூமியில் வெள்ளைக்காரருக்குப் பிரபல மான பெயர் "பறங்கியர்" என்பதாம்.) "மங்களனைப் பின் கட்டுமுறையாகக் கட்டிப் போடு!" என்று ஹியூசன் ஆணையிட்டான். அதுகேட்டும், சிப்பாய்கள் அனைவரும் சும்மா இருந்தனர்; ஒருவரும் முன்வரவில்லை. அனைவ ரையும் ஏற இறங்கப் பார்த்தான் ஹியூசன். அவ்வளவு தான் தாமதம். துப்பாக்கி ரவை ஒன்று பறந்து வந்தது.

பலசொல்லி என்ன? அப் பறங்கியின் உடலம் பூமியில் புரண்டது. ரவை பாய்ச்சியவன் மங்கள பாண்டே. இங்கிலையில் லெப்டினண்டு என்று பட்டம்

வகித்த பா என்பான், தனது குதிரைமீது அங்கே தோன்றினான். பாண்டே அதுகண்டு, தனது துப்பாக்கியை நிமிர்த்தினான். அதிலிருந்து வேட்டொன்று கிளம்பியது. கிளம்பவே, அப்பரிமா குப்புற வீழ்ந்தது பூமியில்! பரி வீரனும் பதைத்து வீழ்ந்தான். வீழ்ந்த 'பறங்கி' வீரன் தனது கைத்துப்பாக்கியை எடுத்தான்; பாண்டேயைக் குறி பார்த்தான். ஆனால் குறிதப்பிவிட்டது.

பா என்பான் வாளா இருப்பனோ? தனது வாளை உருவினான் இடுப்பிலிருந்து. இதற்குள் பாண்டேயின் வாள் வீச்சு விரைந்து வந்தது. பா என்பான் பொத்தென்று கீழே விழுந்தான். பாசறையில் இருந்த மற்றோர் ஆங்கிலேயன் கடுகி வந்தான். வந்ததும் அவன் கைத்துப்பாக்கி மங்களனது மண்டையை நோக்கிற்று இதற்குள் சிப்பாய் ஒருவன் அங்கே தோன்றி, அந்த ஆங்கிலேயனைத் தரையில் வீழ்த்தினன் பின்பு 'பறங்கி'யரில் சிலர் தோன்றி, மங்களனை வளைந்து கொள்ள முயன்றனர். பட்டாள சிப்பாய்கள் அத்தனை பெயரும், "பரம பக்தன் பாண்டேயைத் தொடாதீர்கள், நெருங்காதீர்கள்!" என்று கூச்சல் போட்டனர்.

உடனே, கர்னல் வீலர் என்பான் அங்கே வந்தான்: தனது இனத்தார் இருவர் இரத்தத்தில் புரண்டு மாண்டு கிடப்பதைக் கண்டான்; சிப்பாய்களின் ஆவேசத்தையும் நோக்கினான். அவனுக்கு உள்ளூர உதைப்புத்தான். ஆயினும், "மங்களனைப் பிடி, சிறை செய்" என்று அவன் கூச்சல் போட்டான் சிப்பாய்களை நோக்கி. சிப்பாய்களோ சிம்மகர்ஜனை செய்தனர். அதுகேட்டு, வீலர் வெலவெலத்துப் போனான்; உடனே பாசறை சேர்ந்து, ஜெனரல் எனும் பட்டம் பெற்ற படைத்தலைவனிடம் பரபரப்புடன் சென்றான். மங்கள பாண்

டேயோ மைதானத்தில் இருந்துகொண்டே சிங்கநாதம் செய்யாநின்றனன்.

ஜெனரல் ஹர்சி என்பான் வந்து, மங்களன்மீது சிப்பாய்களை ஏவினன். "மங்கள பாண்டே பரமவீரன். மகா பக்தன். மகிமையான வேதியன். அவனை நெருங்கோம், தீண்டவுடம் செய்யோம்" என்று அச்சிப்பாய்கள் சாற்றினர். அதன்மேல், ஆங்கில சோல்ஜர்கள் விரைந்து வந்தனர். பார்த்தான் பாண்டே "பறங்கியரிடம் சிறைபடுவதா? பரிதாபம்! பரிதாபம்!" என்று எண்ணித் தனது கைத்துப்பாக்கி கொண்டு, தன்னையே சுட்டுக் கொண்டான். கொண்டதும், அவனது உடல் அவனியில் சாய்ந்தது. அதன்மேல் சோல்ஜர்கள் தைரியங் கொண்டு நெருங்கி வந்து மங்களனைச் சிறை செய்தனர். இது நடந்தது 1857-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் 29-ந் தேதி

மங்களன் படுகாயம் அடையவில்லை. ஆதலின் காயம் விரைவில் ஆறியது. உடனே அவன்மீது ராணுவ விசாரணை நடந்தது. காசிக்குப் போனான் காவடி கொணர்ந்தான் என்பது போலவே விசாரணையின் போக்கும் தீர்ப்பும் இருந்தன ஈசன் வாக்கினுக்கு எதிர் வாக்கு ஏது? ராணுவக் கோர்ட்டின் தீர்ப்பும் அப்படித் தான். கலகக்காரன், கொலையாளி, அடங்காப் பிடாரி என்று கும்பினியார் குற்றம் சாற்றினர் மங்களன்மீது. "ஆம்" என்றான் அந்தப்பாண்டே! "தூக்குத் தண்டனை" என்றனர் கோர்ட்டார். "நல்லது" என்றான் மங்களன். அவனது உயிர்பிழைக்க ஒருவழி கூறினர் அதிகாரிகள்.

"இக்கலகத்தில் உன் துணைவர் யார்? சொல்லிவிடு. உயிர்ப்பிச்சைக் கிட்டும்" என்பதே அன்னார் சொல்லிய வழி. மூல புருஷர் யார் யார் என்று மங்களனுக்குத்

தெரியும். "சொல்லேன்" என்றான் அச்சூரன். அந்தோ! இளைஞன் நீ! இன்றளவும் உலகில் என்ன இன்பம் கண்டாய்? வீணே உயிரைப் பறி கொடாதே. தோழரைக் கூறி விடு. தொல்லை நீங்கும்" என்று நயந்து கேட்டனர் அதிகாரிகள். "என்வாழ்வு கிடக்கட்டும்; தேச வாழ்வே பெரிது" என்றான் மங்கள பாண்டே. மேலும் அவன் மொழிந்தது இது :—

"பறங்கியரைச் சுட்டேன்; அவர்களின் உயிர் போய் விட்டது. அன்னார் மீது எனக்குக் கோபம் கிடையாது. விதியின்றியே கொன்றேன். என் தேசம், என் மதம், எங்கள் தர்மம் கெட அவர்கள் துணை புரிந் தனர். ஆதலின், அவர்களது உயிரைக் கவர்ந்தேன். தேசம், தெய்வம், தர்மம் இம்மூன்றும் கருதியே வாளை உருவினேன். வேறில்லை. வெற்றியோ தோல்வியோ எது நேரினும் சரி, கடமையே புரிந்தேன். பகவத்கீதை யின் வாக்கியத்தைக் கடைப்பிடித்தேன். என் தேசம் சிறிதும் சீர்கெடச் சகியேன்; என் மதம் மாசுற மன மொப்பேன். இரண்டினுக்கும் எனது உயிர் நிவேதனம். "இந்த மங்களன் ஒருவனா? எத்துணையோ மங்களர் காத் துளர். வருவது வருக!"

மங்களனுக்கு விதித்த தூக்குத் தண்டனை மேல் அதிகாரிகளால் உறுதியாகிவிட்டது. 1857-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ந் தேதி அவனைத்தூக்கில் போட வேண்டும். தூக்குக் கயற்றை மங்களன் கழுத்தில் மாட்டு வோர் யார்? அக்கயிற்றை மாட்டுவதற்கென்று சிலர் உண்டு. வழக்கமாக தூக்குக் கயிற்றைமாட்டும் அச் சிலரும் மறுத்தனர்: பெரும் பரிசும் வேண்டாம் என்றனர். பாரக்பூரிலே வேறு ஒருவரும் அகப்படவில்லை. இந்திய சமூகத்திலே மகாபதிதன், கீழ்மகன் என்போ

ரையும் ராணுவ அதிகாரிகள் வேண்டிக் கேட்டனர். "மங்கள பாண்டேயின் கொலைக்குப் பாத்திரமாகோம்" என்றனர் எல்லாரும் அதிகாரிகள் அப்பால் கல்கத்தாவுக்கு ஆள் அனுப்பி, நால்வரை வரவழைத்தனர்.

ஏப்ரல் எட்டாந் தேதி அதிகாலை மங்கள பாண்டேயைத் தூக்கில் போடவேண்டும். சிறைவாயிலிலிருந்து, தூக்குமேடைவரையில் இருபக்கமும் ஆங்கில சோல்ஜர்கள். அவர்களிடத்தே ஒரு பக்கம் பள பள என மின்னும் பட்டாக்கத்தி. ஒரு பக்கம் கூரிய ஈட்டி. இடை இடையே துப்பாக்கி. தூக்கு மேடையைச் சுற்றிலும் இத்தகைய முஸ்தீப்பு. எங்கும் ஆங்கில சோல்ஜர்கள்தான். பாண்டேயைப் பின்கட்டு முறையாகக்கட்டி அழைத்துச் சென்றனர் மதகளிறேபோல் நடந்து சென்றான் அவ்விளங்காளை; சிங்கமே போல் யாரையும் நோக்கி நடந்தான்.

தூக்குமேடையில் ஏறும்பொழுது, அவன் முகத்தில் சிறிதும் விசனக்குறி தோன்றவில்லை; மலர்ந்தே நின்றது முகம். புன்சிரிப்பும் தவழ்ந்ததென்னலாம். அவன் கழுத்தில் கயிற்றைமாட்டும் சமயம், "துணைவர் யார்? கூறிவிடு. கொலை நீங்கும். உயிர் தப்பும்" என்றனர் அதிகாரிகள். "மாட்டேன்" என்றான் மங்களன் கம்பீரமாக! கழுத்திலே கொலைக் கயிற்றை மாட்டினர் கொலைஞர். அப்போது, "அன்னாய்! பாரத தேவியே! அடியேன் உன் அடைக்கலம். உனது சீர்பாதம் சேர்கின்றேன். தாய்க்குரிய கடமையே செய்தேன்" என்றான். அவன் கழுத்தில் கயிறு இறுகியது. அவன் குரல் வளை நெருக்குண்டது. அவனது ஆவியும்பறந்தது.

சுதந்திரப் போரிலே முதலில் களப்பலி ஆனான் மங்கள பாண்டே. அப்பால், அப்போரிலே மார்தட்டிக்

குதித்தோர் அனைவருக்கும் "பாண்டே" என்று பட்டப் பெயர் உண்டு. மங்களன் சேவித்த பட்டாளத்தின் ஜமேதார் ஒரு முகம்மதியன். இவனுக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. மங்களனை அடக்கி வைக்க வில்லை. மற்று வேடிக்கை பார்த்து நின்றான் என்பதே இவன்மீது சுமத்தப்பட்ட குற்றம்.

பின்பு, அப்பட்டாளத்தையே கலைத்து, சிப்பாய்கள் அனைவருக்கும் சம்பளத்தைக் கொடுத்து வீட்டுக்கு அனுப்பினர் இராணுவ அதிகாரிகள். "அடிமைச் சேவகம் தீர்ந்தது," என்று கூறி, மரியாதைப்படி தளகர்த்தனை வாழ்த்தி, வீடு சேர்ந்தனர் அந்தனை சிப்பாய்களும். பின்னர் அன்னோர் வாளா இருக்கவில்லை. பாரதத்தாயின் சேவகத்தில் முனைந்தனர்.

19. யுத்த மூட்டம்

போர் மூளுவதற்குரிய முகூர்த்த தினம் 1857-ஆம் வருடம், மே மாதம் 31ந் தேதி அத்தேதியில் கலக மாய்க் கிளம்ப வங்கத்திலுள்ள இரு பட்டாளங்கள் கருதி யிருந்தன. இதற்கு ஆதாரமான கடிதங்களும் அதிகாரி களிடம் சிக்கின. உடனே அவ்விரு பட்டாளங்களையும் அதிகாரிகள் கலைத்துவிட்டார்கள்.

"சிப்பாய்களை வயிற்றில் அடித்துவிட்டோம்: வாடி வதங்கித் தவிப்பார்கள்" என்பதே அதிகாரிகளின் நினைப்பு! சிப்பாய்களுக்கோ இருவகையில் ஆனந்தம். அடிமைச் சேவகம் தொலைந்தது என்பது ஒருவகை! எங்கும் சென்று சுதந்திரநாதம் எழுப்பலாம் என்பது இன்னொருவகை!

சேனைச் சேவகம் இல்லையென்றதும், சிப்பாய்கள் தங்கள் இராணுவ உடுப்புக்களை கழற்றி எறிந்தனர்;

ஆயுதங்களையும் வீசி எறிந்தனர்; அருகே இருந்த ஆற்றங் கரை சென்று அடிமைத் தீட்டகலுமாறு நீராடினர்

சிப்பாய்களின் உடுப்புக்களிலே தொப்பிமட்டும் அவர்களுக்குச் சொந்தம்; ஏனென்றால் அவை அவர் களே விலைகொடுத்து வாங்கியவை. ஆதலின், "தொப்பி களை நீங்கள் எடுத்துச் செல்லலாம்," என்றனர் அதிகாரி கள் சிப்பாய்களுக்கோ அவற்றை எடுத்துக் செல்ல மனமில்லை.

"அடிமைத் தீட்டு அகலவே நீராடினோம், அடிமை வாழ்வில் அணிந்திருந்த தொப்பிகள் நமக்கேன்? அடிமை யடையாளம் கூடாது", என்று அச் சிப்பாய் கள் தீர்மானம் கொண்டார்கள். உடனே, அத்தொப்பி களை ஆகாயத்திலே, தூக்கி எறிந்தார்கள். அவை கீழே வந்து பூமியில் விழுந்தன. "புனிதமான பாரத பூமியிலே, அத்தொப்பிகளின் தீட்டு படுவதா?" என்று அவர் களுக்கு ஆத்திரம் மிகுந்தது.

உடனே, சிப்பாய்கள் அவற்றைக் காலால் மிதித்துத்துவைத்தனர்; இராணுவ மைதானத்தில் ஒரு குப்பை மேடு செய்தனர். இதனைப் பார்த்து நின்ற பட்டாளத் தலைவர்களுக்குச் சினம் பூத்தது. பக்கத்திலே பாதுகாப்புக்காக ஆங்கிலப் படைகள் இருந்தன ஆயினும், அத் தலைவர்கள் வாளா இருந்தனர் மேற்கண்ட சம்பவங்கள் தேசமெங்கும் பறந்தன.

அன்று ஆங்கிலச் சேனையின் முக்கிய இராணுவ ஸ்தலம் அம்பாலா நகரம். அதுவே சேனாதிபதியின் வாச ஸ்தலமுமாம். அங்குள்ள இந்திய சிப்பாய்கள் இச்செய்தி அறிந்து பரபரப்புக கொண்டார்கள். தினம் இரவில் கூட்டம் கூடி அவர்கள் ஆலோசனை செய்வது வழக்கம்.

எல்லாம் அந்தரங்கமாகவே இருக்கும்; என்றாலும், துரோகியான சிலர் சென்று, அதிகாரிகளிடம் உளவு உரைத்தல் உண்டு. அது கேட்டு, அதிகாரிகள் அட்டகாசமாகப் பேசுவார்கள்.

இவர்களுக்குப் பாடம் புகட்ட வேண்டுமென்று சிப்பாய்களுக்குத் தோன்றியது. உடனே, உளவாளிகள் வீடுகள் தீப்பற்றி எரிந்தன. அதிகாரிகளின் மாளிகைகளும் அக்கதிக்கே ஆளாயின. தீக்கடவுளும் இரகசிய சங்கத்தில் சேர்ந்து கொண்டாரோ என்று பலரும் சந்தேகித்தனர். நாள் தவறினாலும் தவறும்; தீவிபத்து நேர்வது தவறாது.

அதுகண்டு, சேனாதிபதி சீற்றங்கொண்டான். தீ மூட்டுவோரைக் கண்டுபிடிக்க அரிய முயற்சி செய்தான். உளவு கூறுவோருக்குப் பரிசும், பதவியும் அளிப்பதாக வாக்களித்தான். அப்பொழுதும் புலன் துலங்கவில்லை. எல்லாம் மாயமாயுளதே என்று மனங் கலங்கினான் அச் சேனாதிபதி. கவர்னர் ஜெனரலான லார்டு கானிங் என்பானும் கருத்தழிந்தான்.

அம்பாலா நகரில் மட்டுமன்று; தேசமெங்கும் உள்ள இராணுவ ஸ்தலங்களிலெல்லாம் அவ்விதம் தீக் கடவுளின் தாண்டவந்தான்! யாவரும் பின்னே, மணியோசைவரும் முன்னேயல்லவா? யுத்த மூல புருஷரில் முதல்வன் நானாசாகிப். யுத்த முகூர்த்த தேதி குறித்தபின், முக்கிய இடங்களுக்கெல்லாம் அந்த நானா போய்வந்தான்.

அவ்விதம் போய்வந்த இடங்களில் இலட்சுமண புரியும் ஒன்று. ஆங்குள்ள படை வகுப்புக்களிலும் பதை பதைப்பு மிகுந்தது. ஒரு பட்டாளத்தின் நான்கு சிப்பாய்கள் எழுந்து அதன் தலைவனை மேக்கம் என்பவனை

துப்பாக்கிக்கு இலக்கு ஆக்கினர். "நான் என்ன பாவம் செய்தேன்" என்றலறினன் அத்தலைவன். "மங்கள பாண்டே மடிந்தான்: சுபேதாரும் உயிரிழந்தான்; நீயோ ஒரு பறங்கி, உன்னைப் பழிவாங்க வேண்டும்" என்று சிப்பாய்கள் சீறினர்கள் என்ன செய்வான் அத் தலைவன்!

"வீரர்களே! அவர்களின் அழிவுக்கு நானா காரணம்? என் மீது யாது குற்றம்? உங்கள் இஷ்டப்படி நீங்கள் என்னைக் கொன்று போடலாம்; நான் போனால் இன்னொரு தலைவன் வருவான். குற்றம் எனதன்று, ஆட்சிமுறைதான் காரணம்" என்றான் மேக்கம். உடனே சிப்பாய்கள் கோபம் தணிந்து, "நல்லது, ஆட்சி முறையை அடியோடு தொலைக்க முயலுவோம்" என்று சொல்லிப் போயினர்.

அயோத்தியின் தலைவனை ஹென்றி லாரன்ஸ் என்பானுக்கு இத்தகவல் எட்டியது. எட்டியதும், அந்நால் வருடன் இன்னும் சிலரையும் பிடித்து அவன் சிறையில் போட்டான்; அப்பட்டாளத்தைக் காவலில் வைத்தான்; இதர பட்டாளத்தின் சுபேதார், ஜமேதார்களை வர வழைத்து, ஆடையும், ஆயுதமும், பட்டமும், விருதும் வழங்கினன். அது நிமிஷம் அயோத்தியிலே அமைதி நிலவியது எனலாம்.

கல்கத்தா, அம்பாலா, அயோத்தி ஆகிய இடங்களிலே ஏப்ரல் மாதக் கடைசியில் அவ்விதமெல்லாம் நிகழ்ந்தது மீரத் நகரிலோ வேறுவிதம்! சிப்பாய்களின் கொந்தளிப்புக்கு மூலகாரணம் யாது? கொழுப்புக் கலந்த தோட்டாக்களே என்பது அதிகாரிகளின் கருத்து. அது உண்மைதானா என்று பரிட்சை பார்க்க மீரத் நகரின் ராணுவ அதிகாரிகள் கருதினர்கள்.

அந்த அதிகாரிகளில் ஒருவன் கர்னல் ஸ்மித் என்பவன். அவன் மிகவும் கெட்டிக்காரன்; சிப்பாய்களின் மனக் கொதிப்பு அவனுக்குத் தெரியும். கலகம் கிளம்பக் கூடும் என்பதாக அவ்வப்போது பத்திரிகைகளுக்கு அவன் எழுதுவான். ஆனாலும் அவன், அரசாளும் இனம் என்னும் அகம்பாவம் பிடித்தவன். அவன் தனது குதிரைப் படையினருக்கு அத்தோட்டாக்களை மே மாதம் 6-ந் தேதி வழங்கி விஷப் பரிட்சை செய்தான்.

பட்டாள மைதானத்திலே தொண்ணூறு குதிரை வீரர் வந்து குழுவினர். அவர்கள் அனைவருக்கும் தோட்டாக்கள் வழங்கப்பட்டன. ஐவரே வாங்கிக் கொண்டனர், ஏனையோர் மறுத்துவிட்டனர். மீண்டுமொரு முறை தோட்டாக்களை வழங்கச் சொன்னான் ஸ்மித். அச்சமயத்திலும் மறுத்தனர் அந்த 85 பேரும். உடனே அவர்களைச் சிறை செய்தான் அந்த ஸ்மித். அது கேட்ட மேலதிகாரி, "அந்தோ! என்ன வேலை செய்தாய்? விஷப் பரிட்சை பார்ப்பதா? என்ன செய்வேன். தலைக்குக் கொள்ளி தேடி விட்டாயே!" என்று வருந்தியுரைத்தான். சிப்பாய்களின் அடங்காத்தனத்துக்குத் தண்டனை விதிக்க வேண்டுமே!

இராணுவ விசாரணை சபை ஏற்பட்டது. அந்த 85 பேருக்கும் பத்து வருஷம் கடுங்காவல் தண்டனை என்பதே தீர்ப்பு. மே மாதம் 8-ந் தேதி அத் தண்டனையை நிறைவேற்றும் தினம். அன்று பொழுது புலர்ந்தது. பட்டாள மைதானத்திலே ஆங்கில சோல்ஜர்படை, ஆங்கில பீரங்கிப்படை, ஆங்கில வாள்படை முதலியன வந்து குவிந்தன. சிப்பாய்களே நிரம்பிய இரண்டு இந்தியப் படைகளும் வந்து நின்றன.

போர்க்கோலத்துடன் எல்லாரும் காணப்பட்டனர். சிறையில் கிடந்த 85 பேரையும் அப்படைகளின் மத்தியிலே கொண்டுவந்து நிறுத்தினார்கள்; பத்து வருஷம் கடுங்காவல் என்றார்கள். பிறகு, அச் சிப்பாய்களின் ராணுவ உடைகளைக் கழற்றினார்கள்; பலவந்தமாக ஆயுதங்களையும் பறித்தார்கள்; காலுக்கு விலங்கும் போட்டார்கள்.

கவர்னர் ஜெனரல் கானிங் என்பான் அதுகேட்டு, "என்ன இது! பட்டாள மைதானத்திலே படை வகுப்புக்களையெல்லாம் நிறுத்தி வைத்து, அவர்களின் முன்னிலையிலே 85 பேருக்குமாகக் காலை முதல் மாலை வரையில் காலில் விலங்கிட்டு, ஆணி போட்டுக் கெட்டித்த காட்சி, பிற சிப்பாய்களின் மனத்தைப் புண்படுத்தியிருக்குமன்றோ; பார்த்து நின்ற சிப்பாய்களும் தோட்டாக்களைப் பற்றி மனம் புழுங்கியவரன்றோ? இந்நிலையில் பரம வைபவமாகத் தண்டனையை நிறைவேற்றியது படுமோசமே" என்று கூறியுள்ளான். கால் விலங்கு மாட்டிய கொல்லருக்கும் கண்களில் நீர் மல்கியது. இதர சிப்பாய்களுக்கோ குலைநடுக்கது. ஆங்கிலேயரினும் சிலர் அக் கோரக்காட்சிகண்டு முகம் சுளித்தனர்.

எண்பத்தைந்து பேரும்காலில்விலங்குடன்சிறைக்குச் செல்லுகையில், பிறசிப்பாய்களை நோக்கினர். பரஸ்பரம் நயன பாஷை நடந்தது. அப்பாஷை ஆங்கில அதிகாரிகளுக்கு விளங்கவில்லை. "இனிமேல் சிப்பாய்கள் பெட்டிப் பாம்புபோல் அடங்கிக் கிடப்பர்" என்பதே ஆங்கிலேயரின் சிந்தனை.

"கொழுப்புக் கலந்த தோட்டாக்களைத் தொடமறுத்தது குற்றமாம்; இதற்குப் பத்து வருடம் கடுங்காவல் தண்டனையாம். நல்ல அடிமை வாழ்வு இது. உங்கள்

கால் விலங்கு மாட்டுமா? பாரத மாதாவின் அடிமை விலங்கையும் வெட்டி எறிவோம்; அக்காலம் நெருங்கி விட்டது," என்பதே இதர சிப்பாய்களின் நயன பாஷை யாகும். உருகி, உடல் கருகி, உள்ளீரல் பற்றி எரிய, அச் சிப்பாய்கள் தங்கள் இடஞ் சேர்ந்தனர். அன்று *சனிக்கிழமை.

மாலை நேரத்திலே மீரத் நகரத் தலைவனும் அவன் மனைவியும், இதர அதிகாரிகளுடன் தீனி தின்று கொண் டிருந்தனர். அவ்வேலை ஒரு பணியாளன் வந்து, "ஐயா! நகரின் சுவர்களிலே கலக விளம்பரங்கள் காணப்படு கின்றன நகர மாந்தர் அனைவரும் கலகமாய்க் கிளம்பி, பறங்கியர் அனைவரையும் வெட்டிச் சாய்க்க வேண்டுமாம்; விளம்பரம் அவ்விதம் பேசுகிறது" என்றான். அதனை வீண்புரளி என்று ஆங்கிலேயர் எண்ணிவிட்டனர். இது நிற்க, சிப்பாய்களிற் பலரும் அன்று மாலை கடை வீதிக் குச் சென்றனர், சாமான்கள் வாங்க. அவர்களைக் கண்ட தும் ஆங்கிருந்த மாதருக்கு மனம் பொறுக்கவில்லை அம்மாதர் அவர்களை நோக்கிப் பேசியது இது :—

"சிப்பாய்களே! நீங்கள் சிப்பாய்களா? நீங்கள் ஆண் பிள்ளைகளா? ஆயுதந் தாங்கிய வீரர்களா? உங்க ளுடைய சோதரர் 85 பேர் சிறையில் கிடக்கின்றனரே, கால் காபபுடன் தெரியவில்லையா? சிறையில் போட்டவர் யாவர்? பறங்கியர் அச்சிப்பாய்கள் என்ன தவறு செய்தனர்? மதக் கொள்கையைக் கைவிட இஷ்டப்பட வில்லை. இது தப்பா? தப்போ சரியோ, பத்து வருடம் கடுங்காவல்! நீங்கள் கோழைகளா? சேனைச் சேவகம் போய்விடுமே என்னும் பயமா? நீங்கள் ஆண் பிள்ளை களானால், உடனே கிளம்புங்கள்; அவ்வீர சோதரரை சிறையிலிருந்து விடுவியுங்கள்; அப்போதுதான் உங்கள்

சமர்த்தும், ஆண்மைத் தன்மையும் புலப்படும். நாங்களும் மெச்சுவோம், உலகமும் உங்களை ஏத்தும் !"

அச்சடு சொல்லும், பரிகாச வசனமும் சிப்பாய் களின் நெஞ்சத்தை ஊடுருவின. இரவிலே அவர்கள் எல்லோரும் கூடி ஆலோசனை செய்தனர். மறுதினமே கிளம்பிச் சோதரரின் விலங்கையும் தேச விலங்கையும் அறுத்தெறிவதென அவர்கள் தீர்மானித்தார்கள். மே மாதம் 10-ந் தேதி ஞாயிறன்று சூரியோதயம் ஆயிற்று. அன்று, ஆங்கிலேயரின் வீடுகளிலே வேலை பார்க்கும் இந்தியர் பலரும் வேலைக்குப் போகவில்லை.

சிப்பாய்களின் விடுதிகளிலோ, ரகசியமான பேச்சு நடக்கிறது. எல்லா ஆங்கிலேயரையும் கொன்று குவிப்பதா, வேண்டாமா? என்பதே பேச்சு: மாலையிலே மணி 4½ ஆயிற்று; ஆங்கிலேயர் தமது மாதா கோயில் சென்றனர். அக்கோயிலில் மணியோசை கிளம்பியது. இதற்குள் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து, கம்பும் கழியும் கையிலே தாங்கி, ஆயிரக்கணக்கான மக்கள் வந்து குவிந்தனர். நகர மாந்தரும் கலகத்துக்கு ஆயத்த மாயினர். இவ்வளவு நடந்தும், ஆங்கிலேயருக்கு ஒரு விஷயமும் தெரியாது.

மாலையில் மணி ஐந்து அடித்தது. "மறு தினம் டில்லி வந்து சேருவோம், எல்லாம் ஆயத்தமாக இருக் கட்டும்," என்று கூற டில்லிக்குத் தூதர் விரைந்தனர். உடனே ஹரஹர மகா தேவா ! தீன் ! தீன் ! பறங்கியைக் கொல்லு ! வெட்டு" என்னும் கோஷத்துடன் சிப்பாய் கள் கிளம்பினார்கள்.

குதிரை வீரரோ நேரே சிறைக் கூடம் சென்றனர். சிறையதிகாரியும் காவலரும் சிப்பாய்களுடன் சேர்ந்து

கொண்டனர். கணப்பொழுதில் சிறைக்கூடம் தவிடு பொடியாயிற்று. கொல்லர் சிலர் வலுவில் வந்து, வீரர்களின் கால் விலங்குகளை வெட்டி எறிந்தனர் போட்டி போட்டுக்கொண்டு. உடனே, சிறை விடுபெற்ற வீரரும் பிறரும் ஒருவரை ஒருவர் கட்டித் தழுவினர்.

இதற்குள் காலாட்படை யொன்று கொதித்தெழுந்தது. அதன் தலைவன் பின்னிஸ் என்பவன் சிப்பாய்களை அதட்டிப் பார்த்தான். அவ்வளவில் சிப்பாய்கள் அவன் மீது பாய்ந்தனர். ஒருவன் தன் கைத்துப்பாக்கி கொண்டு குறி பார்த்தான். அவ்வளவு தான் பின்னிஸ் செத்துவிழ, அவன் குதிரையும் மாண்டது. சிப்பாய்கள், இந்து—முகம்மதியர் என்னும் வேற்றுமையின்றி, இரத்த வெறி கொண்டு விட்டனர். நகரின் கடைத் தெருவுக்கு அச் செய்தி யெட்டியது. மாந்தரும் ஈட்டி, வேல், வாள், கழி, கம்பு, உலக்கை, கடப்பாறை இவை சகிதம் எழுந்தனர். உடனே ஒரே அல்லோலகல்லோலந்தான்.

பறங்கியரின் தொடர்பு வாய்ந்த வீடுகள், மாளிகைகள், கடைகள், கச்சேரிகள், சாலைகள் எல்லாம் தீப்பற்றிக் கொண்டன. ஆகாய மெங்கும் ஒரே புகைப்படலம்; கட்டடங்களின் மீதோ அக்கினி ஜ்வாலை. எங்கும் ஒரே ஆரவாரம்! விழும் சத்தம்; குத்து, கொல்லு, பரங்கியரின் நாற்றமே கூடாது என்னும் ஆவேசம் எங்கும் காணப் பட்டது. முன்யோசனையாகத் தந்திக் கம்பிகள் அறுக்கப் பட்டன. ரயில் பாதைகள் தடுக்கப்பட்டன. இதற்கிடையில் இருள் சூழ்ந்து கொண்டது. இறந்துபோன பறங்கியரோ பலர். இறவாதவரின் பாடு சொல்லி முடியாது.

சிலரோ குதிரை லாயங்களில் பதுங்கிக் கொண்டனர்; சிலரோ மரக்கிளைகளில் ஏறி ஒளிந்து கொண்டனர்; சிலரோ பள்ளங்களில் மறைந்து கொண்டனர்; சிலரோ

தூர்ந்த அகழியின் அடியே படுத்துக்கொண்டனர்; சிலரோ செடி மறைவில் குந்திக் கொண்டனர்; சிலரோ வீட்டின் மூன்றாவது மாடியில் ஏறிக்கொண்டனர்; சிலரோ மாறுவேஷம் பூண்டு மாயமாய் மறைந்தனர். சிலர் பட்லரின் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினர்! வாள் வீச்சினுக்கும், ஈட்டிக் குத்தினுக்கும், தடியடிக்கும், கல்லெறிக்கும் ஆளாகிக் காயமடைந்தோரும் பலராவர். இரவு புகுந்ததும் சிப்பாய்கள் டில்லி நோக்கிப் புறப்பட்டு விட்டார்கள். பழி வாங்கியதும், வஞ்சம் தீர்த்ததும், படுகொலை புரிந்ததும் ஜனங்களேயாம்.

மீரத் நகரத் தலைவனது வீடு தீப்பற்றிக் கொண்டது. அவனோ ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்தான். ஜனங்கள் திரளாக வந்து அவன் மாளிகையை வளைத்துக்கொண்டனர். உயிர் தப்ப வேறு வழியில்லை. பட்லரின் காலில் விழுந்து தனக்கும் தன் குடும்பத்தாருக்கும் உயிர்ப் பிச்சை வேண்டினான் அத்தலைவன். பட்லர் பரிவு மிகக் கொண்டு அவர்களுக்கு மாறுவேஷம் புனைவித்து, அனைவரையும் வெகு தந்திரமாக அப்புறப் படுத்தினான். உடனே அம்மாளிகை இடிந்து நொறுங்கியது. பகட்டமாகப் பேசிய பறங்கி மாதொருத்தியை ஜனங்கள் வாளுக்கு இரையாக்கினர். ஒரு தளகர்த்தன் தன் மனைவிக்கும் மக்களுக்கும் குதிரைப் போர்வையை உடுத்தி ஒரு பாழடைந்த கோயிலில் வைத்து, இரவு முழுதும் காத்து நின்றான்.

தப்பியோட முயன்ற பறங்கியரை ஜனங்கள் துரத்திச் சென்று, தொலைத்தனர். பறங்கியரின் இரத்தம் பெருகப் பெருக, ஜனங்களின் வெறியும் தணியத் தலைப்பட்டது. எங்கும் இரத்த வெள்ளம், துர்க்கந்தம். இக் கோரங்கண்டு இரண்டோர் இந்தியருக்கும் நெஞ்சம்

இளகியது. அதுகண்டு பலரோ, "பேதாய்! என்ன பரிவு! பிழைக்க வந்த பேர்வழிகள் பேரரசு கொண்டு விட்டனர்; நமக்கோ சொத்து போயிற்று, சுதந்திரம் போயிற்று. சோற்றுக்கோ வழி இல்லை; மதத்துக்கும் ஆபத்து. குதிரை வீரர்களின் கால் விலங்கினை மறந்தனையோ? பழிக்குப் பழி வாங்க வேண்டாமா?" என்று கொதித்தனர்.

முகூர்த்த தினம் 31-ந் தேதிதான். மேலும் கடைசியாகத்தான் மீரத் நகரம் கிளம்ப வேண்டும் என்பது ஏற்பாடு. ஏனென்றால் மீரத் நகரிலே இந்தியப் பட்டாளங்கள் மூன்றே மூன்றுதான். ஆங்கிலப் பட்டாளங்களோ அதிகம். பிரமாதமான பீரங்கிப்படை இருப்பதும் மீரத்தில்தான். முக்கிய ராணுவ ஸ்தலங்களில் மீரத்தும் ஒன்றும். ஆங்கிலப் படை கிளம்பியிருக்குமானால், இந்தியப் படையைச் சித்திரவதைச் செய்திருக்கலாம். ஆயினும், ஆங்கிலேயரோ கோழைத்தனம் கொண்டு விட்டனர்; திகிலும் அவர்களைப் பிடித்தாட்டியது. ஆதியிலேயே அலட்சியமும் அஜாக்கிரதையும் அன்னாரை அடிமை கொண்டுவிட்டன. படைத் தலைவர்களோ தொடை நடுக்கம் கொண்டு விட்டார்கள்.

தோட்டாக்களைக் கொடுத்து விஷப் பரிட்சை செய்த, ஸ்மித் என்பானே, கலகம் என்றதும் உயிருக்கு அஞ்சி ஓட்டம் பிடித்தனன். அவனுக்கு மேலதிகாரியான படைத் தலைவர்களும் பதைப்புக் கொண்டு பதுங்கப் பார்த்தனரேயன்றி வேறன்று. கிரெய்க் என்பானே தன் படை வகுப்பை அணி வகுப்புக்கு அழைத்தானாயினும், தலைக்குமேல் ஆபத்து என அபாய அறிவிப்புக் கொடுக்கவில்லை. பீரங்கிப் படைத்தலைவன் சற்றே சுறு சுறுப்பு காட்டினும், குண்டு தோட்டா வழங்காமல் காலதாமதம்

செய்தான். பீரங்கிப்படை திரளுவதற்குள், கலகக்காரர் பயணமாகி விட்டனர். அவர் எத்திசை நோக்கிப் போயினரென்று ஆங்கிலேயருக்குத் தெரியாது. பாட்டைகளின் வழியே சென்று, சிப்பாய்களின், செல்லிடம் அறியவும் ஆங்கிலேயர் அக்கறை கொள்ளவில்லை.

மீரத் நகரம் முனைந்து எழுந்தவுடன், திகைப்புண்டை மிதித்தவர்போல் ஆங்கிலேயர் அறிவழிந்து விட்டனர். அமளி கிளம்பியதேன், அதன் காரணம் யாது? என்று அவர்களுக்குப் புலப்படவில்லை. பலரும் உயிர் தப்பினால் போதும் என்றே எண்ணிவிட்டனர். சிலரோ தம் மனைவி மக்களையும் மறந்து, செடி மறைவும், மரக்கிளையும் பாழ் வீடும் தேடியலைந்தனர். சிப்பாய்களோ தக்க முன் யோசனையுடன் முதலில் சிறையாளரை விடுவித்து, உடனே தந்திக் கம்பிகளை அறுத்தெறிந்து, டில்லிக்குத் தகவல் கொடுத்து, குறிப்பான கொடிய அதிகாரிகளை மட்டும் கொலைகண்டு, பலிகொண்டு நகரைத் துறந்து போயினர்.

20 டில்லியில் கொடியேற்றம்

சிறைக்கூடத்தைத் தரைமட்டம் பண்ணி, சோதரரையும் பிறரையும் விடுவித்த பின்னர், மூன்றாவது குதிரைப் படை வீரர்கள் கணநேரமும் மீரத் நகரில் தாமதிக்கவில்லை; டில்லிமாநகரை நோக்கிக் குதிரைகளைத் தட்டி விட்டார்கள்! மீரத்துக்கும் டில்லிக்கும் 32 மைல் தூரம். குதிரைகளும் கனைத்துக் குளம்படித்துக் கனவேகமாகக் கிளம்பின.

வீராவேசத்துடன் சிப்பாய்கள் வருகிறார்கள், வழி நடைக் களைப்பை மாற்றுதல் வேண்டும் எனக் கருதியே

போலும், மந்த மாருதம் அந்தமாக வீசத் தொடங்கியது. குளிர்ந்த கிரணங்களை எங்கும் பரப்பிக்கொண்டு, வான வீதியிலே சந்திரனும் உதயமானான். தண்மதியின் வெண்ணிலவிலே வீரரின் ஆடைகள் மினுமினுவென ஒளி வீசின : பட்டாக்கத்திகள் பளபள என்று பிரகாசித்தன : வேல்கம்புகளின் கதிர்முனைகள் தகதக என ஜொலித்தன; கடிவாளங்களிளோ ஒலியும், ஒளியும் ஒருங்கே எழும்பின. பரிகளின் களைப்பும், வீரர்களின் ஆர்ப்பரிப்பும், சுதந்திர எழுச்சியினுக்குக் கட்டியங்கூறி முன்னே சென்றன.

செல்லன் சொல்லுக்கு அஞ்சான், விரகன் நடைக்கு அஞ்சான் என்பர் : வீரரும் போருக்கு அஞ்சார் அன்றோ? ஓட்டமும் நடையுமாகக் குதிரை வீரர் டில்லி நோக்கிச் செல்லுகின்றனர். வழியிலே ஓரிடத்தும் அன்னார் நிற்கவில்லை. நூற்றுக்கணக்கான கண்கள் டில்லியை உற்று நோக்குகின்றன : தொலைவிலே டில்லி அரண்மனையின் சிகரங்களும், மசூதியின் ஸ்தூபிகளும் தென்படுகின்றன உடனே, ஹர ஹர மகாதேவ, தீன், தீன் ! என்னும் வீர கோஷங்கள் கிளம்புகின்றன. பாதுஷா வாழ்க ! சுதந்திரம் ஓங்குக ! அடிமை வாழ்வு மடிந்தொழிக ! எனும் ஆர்ப்பொலியும் செவிடுபடுகின்றது.

கடை யாமத்திலே இருள் பிரிய, அருணோதயம உண்டாகிறது : புண்ணிய யமுனைநதி கண்ணில் தென்படுகிறது ! உடனே வீரர் அனைவரும், 'ஜே ஜமுனா ! ஜே ஜமுனா !' என்று ஆரவாரம் செய்கின்றனர் ; பொன் கோழிகளும், பட்சி ஜாலங்களும் சிப்பாய்களுடன் சேர்ந்து கொண்டு குரல் எழுப்புகின்றன. யமுனையைக் கண்டதும், சவாரிக் களைப்பை வீரர் மறக்கின்றனர் : ஓட்டத்தின் அலுப்பை அசுவங்களும் மறக்கின்றன. ஜில்லென்று

நீர்க்காற்றுவீசி யமுனை தேவியும் வரவேற்கிறாள் அவ் வீரர்களை களங்கமில்லாது காரியம் கைகூடும் என்று காட்டுவதே போல், ஆகாய வீதியும் நிர்மலமாகத் துலங்குகின்றது.

அப்பால், கதிரவனும் தனது கிரணங்களை விரித்துக் கொண்டு கிளம்பினான். காலை சுமார் எட்டுமணியிருக்கும். திங்கட்கிழமை யல்லவா? அப்போதும் கொழுத்த இராகு காலம்! படகுப் பாலத்தின் மூலம் யமுனையைத் தாண்டி, டில்லிமா நகரிலே குதிரைகள் காலடி வைத்தன. ஆங்கிலேயன் ஒருவன் அவ்வேளை எதிர்ப்பட்டான். "அதோ ஒரு பறங்கி; உயிரை வாங்கு; கணப்போதில் கொல்லு!' என்று கூவினர் சிலர். உடனே அந்த அன்னியனது உடலம் வெட்டுண்டு வீழ்ந்தது; உதிரமும் காளிந்தி நதியில் சொட்டிக் கலந்தது. இரத்தத்துளி கண்டதும், சிப்பாய்களின் ஆவேசம் சொல்லி முடியாது! "தீன், தீன், மாரோ மாரோ!" என்று ஒரே கூக்குரல்தான்! இந்நிலையில், அம்மாநகரின் மதில் சுவரை நெருங்கினர் அக்குதிரை வீரர்.

டில்லிமா நகரம் யமுனை நதியின்மேல் கரையில் உள்ளது. நகரைச்சுற்றி நாற்புறமும் மதில் சுவர்கள். கோட்டை வாயில்களோ பல. அதன் பரப்பு பத்துமைல். ஜனத்தொகை சுமார் இரண்டு லட்சம் நகரின் நடுவே மேடான பூமியில் பாதுஷாவின் அரண்மனை; மாளிகையைச் சுற்றிமதில்கள். அகழியும் உண்டு. இராஜ வீதிகள் மிகவும் விசாலமாகவும், பளிச்சென்று இருக்கும். தெருக்களும் அவ்விதமே. ஜும்மா மசூதி கண்ணைக் கவரும். சக்கரவர்த்தி ஹுமாயூனது கல்லறையோ கருத்தைப்பறிக்கும். குதுப்மினார் எனும் ஸ்தூபி வானை யளாந்து நிற்கும். ஷாஜஹான் சக்கரவர்த்தி கட்டிய மாளிகைக்கு ஈடுஜோடி இக்

காசினியில் எங்கும் கிடையாது. இம்மன்னன் சமைத்த பூங்காவனம் தாவர வகைகளின் தாயகமாம்.

பதினாறு கோடிக்குமேல் செலவிட்டு, ஆங்கிலேயர் கட்டிய புதியடில்லி கிடக்கட்டும். நடுநாயகமான மேட்டு நிலத்திலிருந்து பழைய டில்லியை நோக்கினால், நாற்றிசையிலும் இடிந்து கிடக்கும் மாளிகைகளுக்கும், அழிந்து கிடக்கும் அரண்மனைகளுக்கும், பாழ்பட்டுக் கிடக்கும் கூட கோபுரங்களுக்கும் ஒரு கணக்கு இரா. அவற்றை நோக்கும் தேசபக்தன் இரத்தக்கண்ணீர் வடிப்பான்; சிற்பியோ துக்கமும் வெட்கமும் ஒருங்கே கொள்ளுவான்; சுத்தவீரனோ துடிதுடித்துச் சீறுவான்; பரமஞானியோ காலத்தின் கோலத்தைக் கருதிச் சிலைவடிவாக அசைவற்று நிற்பான். இதுவரையில் எத்தனையோ வல்லரசுகளையும், சாம்ராஜ்யங்களையும் வாரி விழுங்கி ஏப்பமிட்ட குருக்ஷேத்திரமல்லவா? இது நிற்க.

மங்கள பாண்டே களப்பலியானான் அல்லவா? அது செய்தி எட்டியதுதான் தாமதம்; டில்லி அரண்மனை வீரரும், ஆங்கிலேயரிடம் சேவித்து நின்ற சிப்பாய்களும், சினவெறியும், பகைவெறியும் பூத்துவிட்டனர். பாதுஷா பகதூர் ஷாவும், பாதுஷாவின் இளைய மனையாள் ஸினத் மஹால் என்பாளும் அன்புரை கூறி, ஆறுதல் வசனம் சொல்லி, அன்னாரை அடக்கிவைத்தல் பிரம்மப் பிரயத்தனமாகிவிட்டது. மீரத் சிப்பாய்கள் 'நாளை வருகிறோம்' என்று சொல்லி யனுப்பியதும், டில்லி வீரருக்கு ஒரு கணம் ஒரு யுகமாகவே கழியா நின்றது. மதிலருகே மீரத் நேசர் வந்தடைந்த செய்தி கேட்டதுமே, டில்லி மாளிகைக்குள்ளே ஒரே ஆனந்தக் கொந்தளிப்புத்தான்.

மீரத் வீரரின் வருகையை உளவனுமூலம் அறிந்த ஆங்கிலேயர் திடுக்கிட்டனர். அவ்வீரர் வருவதைத் தூர

திருஷ்டிக் கண்ணாடிமூலம் பார்த்தறிந்த ஜென்னிங்ஸ் எனும் பாதிரி தன் அன்பர்களின் காதிலே அதனை ஓதினான். அதனைச் செவியுற்ற ஆங்கில இராணுவ அதிகாரிகள் தங்கள் படைவகுப்பின் சிப்பாய்களை மைதானத்தில் வந்து குவியச் செய்தனர்; உண்ட வீட்டிற்கு இரண்டகம் பண்ணக்கூடாது என்றனர்; எஜமானத்துரோகம் அடுக்காது என்று போதம் புகன்றனர்; பசப்பு வார்த்தைகள் பேசிப் பரவசப் படுத்தவும் பார்த்தனர். மீரத் சிப்பாய்களை எதிர்த்து முறியடிக்க வேண்டும் என்றான் கர்னல் ரிப்ளி என்பான். "மீரத் சிப்பாய்களா? காட்டு அவர்களை, அப்பால் பார், எங்கள் கைவரிசையை!" என்றனர் அந்த ரிப்ளியின் படைவீரர். உடனே அவனுக்கு உச்சிகுளிர்ந்துவிட்டது.

பெருமிதமாகப் புறப்பட்டான் ரிப்ளி! அவன் வீரரும் தொடர்ந்து வந்தனர் யுத்த சன்னத்தமாக. "அதோ மீரத் சிப்பாய்கள்" என்றான் அத்தலைவன். இரு பக்கத்துப் படைகளும் நேருக்கு நேராகச் சந்தித்தன. ஒன்றுக்கு ஒன்று வாளைக்காட்டி வணக்கம் இட்டன. போர்மூளப் போகிறது என்று ரிப்ளி என்பான் மகிழ்ந்து நின்றான். மீரத் சிப்பாய்களோ, "பரங்கியின் ஆட்சி வீழ்க! பாதுஷாவின் ஆட்சி ஓங்குக!" என்று கர்ஜனை புரிந்தார்கள். டில்லிவீரர் அதுகேட்டு, "ஆம், ஆம்? அப்படியே ஆகுக!" என்று எதிரொலி எழுப்பினர். உடனே பறங்கியைக் "கொல்லு, வெட்டு" என்னும் கூச்சல்கள் கிளம்பின. "என்ன இது!" என்று திகைத்துப்போனான் ரிப்ளி! அவ்வளவில், துப்பாக்கி ரவைகள் ஒன்றன்பின் ஒன்றாக வந்து அவன் உடம்பைச் சல்லடைக் கண்ணாக ஆக்கிவிட்டன.

மீரத் குதிரை வீரர் அக்கணமே குதிரையை விட்டிறங்கினர்; டில்லி வீரரைக் கட்டித் தழுவி, "சபாஷ்!

பறங்கியின் உயிரை வாங்கி, அவன் இரத்தத்தைச் சிந்தி, பூமிக்குத் திலகமிட்டனர்கள். அச்சா ! தேசாபிமானம் ! ஆண்டவன் அருள் ! அன்னையின் கருணை !" என்று கூறி ஆனந்தம் அடைந்தனர். இதற்கு இடையில் டில்லிக் கோட்டையின் காஷ்மீர வாயில் கதவு படீரென்று திறந்தது. சுதந்திரவீரர் சிங்க நாதத்துடன் கோட்டையுள் புகுந்தனர் வரிசை வரிசையாக ! "மீரத் நகரிலிருந்து குதிரை வீரர் வந்துவிட்டனர், காலாட்படையும், பீரங்கிப் படையும் வரவில்லையே" என்று சிலர் ஏங்கினர். காவலாளரும், பீரங்கி வீரரும் குதிரை வீரரைப் போல் கடுகி வர இயலுமோ ? முப்பத்திரண்டு மைலும் நடந்துதானே வர வேண்டும் ?

பகலவன் தலைக்கு நேரே வந்தான். மீரத் காலாளரும் பீரங்கிப் படையினரும் டில்லி சேர்ந்தனர். சேர்ந்ததும், மற்றொரு வாயிலின் வழியே புக முயன்றனர். கதவோ அடைபட்டுக் கிடந்தது. உள்ளேயிருந்த ஆங்கில அதிகாரிகள் தாளிட்டு விட்டார்கள். சிப்பாய்களுக்குச் சினம் பொங்கியது. உடனே, கதவுகள் தூளாகி விழுந்தன. வாயில் காவலரும் அச்சிப்பாய்களுடன் சேர்ந்துகொண்டு "தீன் தீன்" என்று கோஷம் செய்தனர். டில்லி நகரிலே ஒரு பாகம் துரைக்கஞ்சு. அதாவது துரைமாரான ஆங்கிலேயர் வசிக்குமிடம். துரைக்கஞ்சை நோக்கினர் அச்சிப்பாய்கள் ! அவ்வளவில், பங்களாக்களும், கச்சேரிகளும், கடை வீதிகளும் தீப்பற்றி எரியலாயின.

தீயில் சிக்கிக்கொண்டு பறங்கியரில் பலர் கரிந்து சாம்பலாயினர் ; தப்பியோட முயன்றவர்களோ வாள் வீச்சுக்கு இரையானார்கள். சிலரோ அருகே இருந்த வைத்திய சாலைக்குள் புகுந்து பதுங்கிக் கொண்டனர். அங்கும் வாள் வீச்சு சீறி வந்தது. சுருங்கச் சொன்னால்,

துரைமாரின் வாசஸ்தலங்கள் பலவும் தீக்கடவுளுக்கு நிவேதனம் ஆயின; எஞ்சிய வீடுகளும், கட்டடங்களுமோ தரை மட்டம் கொண்டன. பின்பு பறங்கியர் எங்கெங்கே யுளர் என்று கையில் கத்தி ஈகிதம் சிப்பாய்கள் நகரின் சந்தும் பொந்தும், துருவித் துருவி தேடினர்.

பாதுஷாவின் மாளிகைக்குள்ளோ, நகர மாந்தரும், பிறரும் கூடிநின்று, "பாதுஷாவுக்கு மங்களம்; பகதூர் ஷாவுக்கு வாகை மாலை" என்று கூறி கோலாகலத்துடன் நிற்கலானார்கள். பாதுஷாவுக்குக் காவலாக இருந்த வீரர் களின் தலைவன் டக்ளஸ் என்பவன். சிப்பாய்களின் சின வெழுச்சிகண்டு, அவன் சீறி எழுந்து, கீழே சென்று, வாள் வரிசை காட்ட நினைத்தான். எண்பது வயதுக்கு மேற்பட்ட பாதுஷாவோ, 'அப்பனே! வேண்டாம்! கடல் கொதித்தால் விளாவ நீர் எங்கே? என் பக்கம் விட்டு அகலாதே, அகன்றால் உன் உயிர் போய்விடும். உனது தோழர்களின் மனைவியரையும், மக்களையும் காக்க எண்ணுவையோ, பல்லக்குகள் தருகிறேன்; மாளிகையின் பின்புறமாகச் சென்று அவர்களை இட்டுவா; அவர்கள் இங்கே பத்திரமாக இருக்கலாம்" என்றான்; பல்லக்கு களும் திட்டம் செய்து கொடுத்தான். அதற்கு டக்ளஸ் செவி சாய்க்கவில்லை.

டில்லியின் பிரதம அதிகாரி பிரேஸர் என்பவன் தெரு விலே காயமுண்டு, பாதுஷாவின் மாளிகைக்குள் நுழைய லானன் பதுங்கிக் கொள்ள! வாயில்காப்போனாகிய ஒரு முகம்மதியன் ஈட்டி கொண்டு குத்தவே ப்ரேஸரின் தாடை கிழிந்து போயிற்று. சிப்பாய்கள் வீறுகொண்டு அரண்மனைக்குள்ளே வசிக்கும் பறங்கியரைத் தாக்கக் கருதினர். உடனே ஒருவன் உள்ளேயிருந்துக் கதவைத் தாளிட்டான். துப்பாக்கிக் கட்டைகளின் குத்துப்படவே

அக் கதவு பிளந்து வீழ்ந்தது. உள்ளே இருந்த பலரும் வாள் வெட்டினால், உடல் வேறு தலை வேறு ஆயினர். பாதுஷாவின் வார்த்தையைக் கேளாத டக்ளஸ் என்பானும் வெட்டுண்டு வீழ்ந்தான். அக் கோரங் கண்ட கலெக்டர் அங்குமிங்கும் ஓடினான் உயிருக்கஞ்சி! அவனும் ஆவி இழந்தான்.

இரவு முதல் சவாரி வந்த களைப்பு, காலை முதல் பகல் வரையில் பழிக்குப் பழி வாங்கிய அலுப்பு, மீரத் குதிரை வீரர் அனைவரும் அத் தரணி மண்டபத்தில் சற்றே தங்கி இளைப்பாறலாயினர். அரண்மனை அச் சுதந்திர வீரரின் வசமாயிற்று. பின்பு, பாதுஷா, பாதுஷாவின் தேவி, சிப்பாய்களின் தலைவர்கள் முதலியோர் மந்திராலோசனை செய்தனர். அதன் மேல் சுதந்திரப் போருக்குத் தலைமை பூண்டு, மேற்கொண்டு காரியம் நடத்த, அப் பாதுஷா தீர்மானிக்கும் தருணம் மீரத் பீரங்கிப்படை அவ்வரண்மனைக்குள் புகுந்தது. உடனே இருபத்தோரு குண்டு வெடிகள் கிளம்பின.

பறங்கியரின் இரத்தக்கறை படிந்துள்ள பட்டாக்கத்திகளை எடுத்துக்காட்டி, வீரர்கள் விளம்பியது இது:—"மீரத் நகரிலே பறங்கியரைப் பொசுக்கி விட்டோம்; டில்லிமா நகரும் நமது வசத்தில் இருக்கிறது. மேற்குக் கோடியிலே புருஷபுரம் முதல் கிழக்குக் கோடியிலே கல்கத்தா வரையில் உள்ள சிப்பாய்கள் அனைவரும், பாதுஷாவின் ஆணையை எதிர்நோக்கி நிற்கின்றனர். பறங்கியர் பூட்டியுள்ள அடிமைச் சங்கிலியை அறுத்தெறியவும், வீர சுதந்திரக் கொடி தூக்கவும் நமது இந்துஸ்தானம் முழுவதும் திரண்டு நிற்கிறது. பல வருஷமாகச் சுயராஜ்யமின்றிக் கிடக்கின்றோம். மீண்டும் அதனை அடைதல் வேண்டாமா? இதுவே தருணம், வேறு சமயம் வாய்ப்பது

அரிது. தலைமை தாங்கிப் போரை நடத்துங்கள்; பறங்கியரை ஒன்று கடலில் ஆழ்த்துவோம் அல்லது கழுகுக்கு ஆகாரம் ஆக்குவோம்.''

வீரர்களின் ஆவேச வசனம் செவியில் பட்டதும், பாதுஷா அச் சிப்பாய்களை நோக்கி, "வீரர்காள்! பெருஞ் சேனைக்குச் சம்பளம் தர என்னிடம் வகையில்லையே! என் செய்வது!'' என்று வருந்தி உரைத்தார். "சம்பளத்தை நாங்கள் மதிக்கவில்லை; சுதந்திரத்தையே மதித்து வீடு வாசலையும், மனைவி மக்களையும் துறந்து வந்துள்ளோம்'' என்று சிப்பாய்கள் ஒரு முகமாக உரைத்தனர். "நல்லது'' என்றான் பாதுஷா. உடனே, வானம் செவிடுபட அவ்வீரர் ஆனந்த ஆரவாரம் செய்தனர்.

அரண்மனைக்குள்ளே அவ்விதம் நடைபெற, நகரினூடே நடந்ததைப் பார்ப்போம். நகர மாந்தர் அனைவரும் கையில் கிடைத்த ஆயுதங்களைத் தாங்கிக் கொண்டு, சிப்பாய்களுடன் சேர்ந்து கொண்டனர். எங்கும் ஒரே இரைச்சல், ஒரே குழப்பம். கண்ணில் கண்ட பறங்கியரையெல்லாம் நகர மக்கள் வெட்டிச் சாய்த்தனர்; டில்லி பாங்கைக் கொள்ளையிட்டனர்; கட்டடத்தையும் இடித்துத் தள்ளினர். பின்பு, ஜனக் கூட்டம் டில்லி கெஜட் எனும் ஆங்கிலப் பத்திரிகாலயத்தை நோக்கியது. 'மீரத்தில் கலகம்' என்று கூறி அப் பத்திரிகை வெளியாகும் சமயம் தீன் தீன் என்று கூவிக்கொண்டு, ஜனங்கள் உள்ளே நுழைந்தார்கள். அச்சு யந்திரம் தவிடு பொடியாயிற்று. அச்செழுத்துக்களெல்லாம் தெருவில் பறந்தன.

அமளி குமளி சொல்ல முடியாது. மாதா கோயில் மண்ணோடு மண்ணாயிற்று. அக் கோயில் மணிகளெல்லாம் கீழே விழுந்து உடையுண்டன; கட்டடங்களெல்லாம்

இடியுண்டன; இடியுறாத கட்டடங்களெல்லாம் தீக்கிரையாயின. காளியும் கூளியும் நர்த்தனம் புரிவதுபோல், ஜனத்திரள் தாண்டவம் ஆடியது. அப்பால், அரண்மனை மீது பாதுஷாவின் பச்சைப் பிறைக்கொடி அந்தரமளாவப் பறவா நின்றது!

21. இரத்தம் பேசுதல்

மீரத் சிப்பாய்களின் சிங்க நாதமும், டில்லி மக்களின் எழுச்சியும், காட்டுத்தீ போல் தேசமெங்கும் பரவின. அச்செய்தி கேட்டு, இந்தியாவிலே ஆங்காங்குள்ள ஆங்கிலேயர் அனைவரும் குலை நடுக்கங் கொண்டனர். ஆயினும், அலிகார் என்னும் நகரிலுள்ள ஆங்கிலேயர் அனைவரும் சிறிதும் நடுக்கங் கொள்ளவில்லை.

“ எல்லா இந்தியரும் பகைத்தெழுந்தாலும் சரி, ஒன்பதாவது பட்டாளம் நமக்குப் பணிந்தே கிடக்கும். நாம் சொன்னபடி கேட்கும், ஆபத்திலும் தலைகொடுக்கும் ”; என்பதே ஆங்கிலேயரின் திடமான முடிவு! ஆயினும், வீர சுதந்திர தூதுவர் ராணுவஸ்தலமெங்குஞ் சென்று, கலக முயற்சியில் முனைந்தது போல், அலிகர் பட்டாளத்தையும் கிளப்பிவிட முயலாநின்றனர். தக்க பக்கபலம் தேடிக் கொணர டில்லியிலிருந்து பயணமானோர் பலராவர். அன்னாரில் ஒருவன் வேதிய குலத்தவன். அலிகர் நகரம் நோக்கி அவன் விரைந்து சென்றான்.

1857-ஆம் ஆண்டு மே மாதம் 15-ந் தேதி போலண்டு என்னும் நகரஞ் சேர்ந்தான் அவ் வேதியன். நகர மக்களும், வீர சிப்பாய்களும் அம் மறைவனை மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பறங்கியரின் ஆதிக்கத்தைப் படுசூரணம் பண்ணுவதில் அனைவரும் சரி சரி என்றனர். போலண்டு நகர சிப்பாய்களில் மூவர் ஆங்கிலேயரின்

உளவாளிகளாயினர். உடனே அவ் வேதியன் சிறையானான். இன்னும் சிலரும் சிறைப் பட்டனர். பின்பு அம்மறையவனை மட்டும் அலிகர் நகருக்கு இட்டுச் சென்றார்கள் காலிலும் கையிலும் விலங்கு பூட்டி!

இராணுவ விசாரணை சபையொன்று ஏற்பட்டது. அவனைத் தூக்கிலிட வேண்டுமென்று அதிகாரிகள் தீர்ப்புச் செய்தார்கள் இதற்கு இடையில், போலண்டு நகரிலே அம்மூன்று சிப்பாய்களும் வெளியே தலை காட்ட முடியவில்லை. ஏனெனில், நகர மக்கள் அனைவரும் அம் மூவரையும் காறித் துப்பினார்கள். ஏனைய சிப்பாய்களுக்கோ அங்கிருக்க மனமில்லை. அதிகாரிகளின் உத்திரவின்றி அனைவரும் அலிகர் நகருக்கு புறப்பட்டு விட்டனர்.

1857-ஆம் ஆண்டு மே மாதம் 20-ந் தேதி (புதன் கிழமை) மாலை அவ்வேதியனைத் தூக்கிலிட ஏற்பாடுகள் நடந்தன. கொலைக் களத்திலே சிப்பாய்கள் அனைவரும் வந்து நின்று, அக்காட்சியைக் காண வேண்டுமென்பது அதிகாரிகளின் ஆணை. அங்ஙனமே வந்து நின்றனர் அத்தனை சிப்பாய்களும். தூக்குமேடையிலேயே அவ் வேதியனை நிறுத்தி, அவன் கழுத்தில் கயிற்றை மாட்டிச் சுருக்கிட்டு, ஊசலாட விட்டனர் உடலை. கயிறு இறுக இறுக, அவன் கழுத்தும் குரல் வளையும் நெறிந்தன; கால்கள் உதைத்துக் கொண்டன; இரத்தத்துளி சொட்டா நின்றது. பார்த்து நின்றனர் அத்தனைபெயரும். அவர்களில் ஒருவன் ஆவேசம் கொண்டு விட்டான்.

உடனே, அவன் ஏனைய சிப்பாய்களை நோக்கி, "அன்பர்களே! பார்த்தீர்களா? பரம தேச பக்தனை வேதியனின் உடலமோ கயிற்றில் ஊசலாடுகின்றது.

இதிலிருந்து என்ன படிப்பினை கொள்வீர்கள்? இரத்தம் சொட்டுகிறதே. அதன் கருத்து யாது? வாய்திறந்து அவ் வேதியன் பேசான்; அவனது இரத்தத்துளியே பேசுகிறது. உருவுங்கள் உடைவாளை! ஒடுங்கிக் கிடந்தது போதும்; உன்மத்தங்கொள்வோம். காலந்தாழ்க்க வேண்டாம்," என்று சீறினன். வெடி மருந்துச் சாலையில் தீப்பொறி பட்டால் எப்படி? அப்படியே சிப்பாய்களின் மனம் வெடித்தது.

உடனே, அனைவரும் தத்தம் உடைவாளை உருவி, அந்தரத்தே நீட்டி, "பறங்கியரின் ஆட்சிக்குச் சாவு மணி தான்! பாதுஷாவின் பக்கம் நாம் போய்ச்சேர வேண்டியதுதான்!" என்று ஒரே குரலாக உரைத்தனர். அது கண்டு, ஆங்கில அதிகாரிகளுக்குத் திகைப்பு மேலிட்டு விட்டது. சிப்பாய்கள் அதை யறிந்து, "அச்சம் வேண்டாம்; உங்களை உயிர் வாங்கப் போவதில்லை. ஆனால், நீங்கள் அனைவரும் உடனே அலிகர் நகரை விட்டுப் போய் விடவேண்டும். அன்னியரில் ஒருவரும் இங்கிருத்தல் ஆகாது" என்றனர்.

ஆங்கிலேயர் அச் சிப்பாய்களின் கருணையை வியந்து ஆண்டவனையும் வாழ்த்தி, மனைவி மக்களுடன் நகரை விட்டு புறப்பட்டு விட்டனர். அன்று நள்ளிரவுக்குப் பின் ஆங்கிலேயரில் ஒருவர் கூட அலிகர் நகரில் காணப் படவில்லை. சிப்பாய்களோ, கஜானாவைக் கொள்ளையாடி, அங்கிருந்த எழுபதாயிரம் பவுனையும் கைப்பற்றிக்கொண்டு, சிறைச்சாலையை திறந்துவிட்டு, அனைவருக்கும் விடுதலை அளித்து, டில்லி நோக்கிப் போய் விட்டார்கள். வேதியனது இரத்தத்தை ஆங்கிலேயர் சிந்தியும், ஆங்கிலேயரின் இரத்தத்தை ஒரு துளி கூட இந்திய வீரர் சிந்தாமல், அலிகர் நகருக்கு விடுதலை தேடி வைத்தனர்.

அலிகரை அடுத்த இடாவா நகரச் சிப்பாய்களுக்கு உள்ளூர சுதந்திர ஆவேசம் மிகுதி! ஆயினும், அதனை அவர்கள் வெளிக் காட்டவில்லை. சமயம் பார்த்து நின்றனர் என்றே சொல்ல வேண்டும். அந் நகரின் கலெக்டர் ஆலன் ஆக்டவோ ஹியூம் என்பான் மீரத் எழுச்சியைக் கேள்வியுற்றதும், நகரைச் சுற்றியுள்ள ரஸ்தாக்களில் காவல் படைகளை நிறுத்தி வைத்தான். மீரத் நகரிலிருந்து கிளம்பிய சிப்பாய்களில் சிலர் மே மாதம் 19-ந் தேதி இடாவா நகரம் குறுகினர். உடனே, அச் சிப்பாய்களை மேற்சொல்லிய காவல் படை வழி மறித்தது.

மீரத் வீரர் உடனே பணிந்து விட்டனர் அக் காவல் படைக்கு. அதுகண்டு அப்படைக்கு ஆனந்தம் பிறந்தது. சமயம் பார்த்து வீரர் கிளம்பி, காவல் படையை வெட்டி வீழ்த்தி, அருகே இருந்த ஆலயமொன்றில் தங்கி இருக்கலாயினர். கலெக்டர் ஹியூமுக்கு அச் செய்தி எட்டியது. உடனே அவன் சில படைகளுடன் புறப்பட்டு, அந்த ஆலயத்தை அணுகினன். ஆலயமோ ஒரு கோட்டை போல் இருந்தது. அன்றியும் அப் பிரதேச மக்களும் மீரத் வீரருக்குப் பக்கபலமாக நின்றார்கள். எனினும் அவர்களைத் தாக்க முயன்றன் ஹியூம்.

அவ்வளவில் மீரத் வீரனின் குண்டு வந்து ஹியூமின் துணைவனை ஓர் ஆங்கில அதிகாரியைத் தரையில் வீழ்த்தியது. கூட வந்த படைஞரோ ஹியூமுக்கு ஆதரவு தராமல் வாளா நின்றனர். இந்நிலையில் ஹியூம் என்ன செய்வான்? காயமுண்ட துணைவனைத் தூக்கிக் கொண்டு, வந்த வழியே திரும்பி விட்டான்.

வேதியனைத் தூக்கில் போட்டதென்ன? அலிகரின் சம்பவமென்ன, இவை இரண்டும் எட்டவே, 23-ந்

தேதியன்று இடவா சிப்பாய்கள் அனைவரும் சீறி எழுந்தனர். சீறிக் கிளம்பிய காலையிலே, அவர்களின் ஒரு கையில் பட்டாக்கத்தி; மற்றொரு கையிலே தீவட்டி! அவர்களும் பறங்கியரைக் கொல்லவில்லை. "மனைவி மக்களுடன் ஓடி விடுங்கள், இல்லையேல் உயிருக்கு ஆபத்து நேரும்" என்றே எச்சரிக்கை செய்தனர். உடனே பறங்கியர் அனைவரும் மனைவி மக்களை அழைத்துக் கொண்டு ஓட்டம பிடித்தார்கள். ஹியூம் என்னும் கலெக்டரோ இந்திய மாதேபோல் வேடம் பூண்டு தப்பி யோடினன்.

அந்த ஹியூம் என்பானே, பின்னுளில் அதாவது 1885-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபையைக் கண்டவன் என்பர். அம் மகாசபைக்கு ஓர் இருபத்தைந்து வருடகாலம் இடைவிடாமல் பொதுக் காரியதரிசியாக இருந்தவன் ஆதலின், அவனைக் "காங்கிரஸ் மகாசபையின் பிதா" என்று பரிவுடன் சிலர் அழைத்து வந்தனர். கலெக்டர் ஓடியவுடனே, இடாவா நகரில் சுதந்திர முரசு முழங்கியது. சிப்பாய்களோ பொக்கிஷத்தைக் கொள்ளை கொண்டு, சிறைச்சாலைகளையும் உடைத்தெறிந்து, பறங்கியரின் வீடுகளையும் கொளுத்திவிட்டு டில்லிக்குப் போயினர்.

இராணுவ வாத்தியங்கள் கோஷிக்க, ஆயிரக்கணக்கான சிப்பாய்கள் அணிவகுத்து, ஆர்ப்பாட்டமாக டில்லிக்குச் செல்ல, வழியிலே ஆங்காங்குள்ள கிராமத்தார் அப்படைஞரை வரவேற்று, அடிமை வாழ்வு அகன்றதென ஆனந்தமடைந்தனர். அங்ஙனம் பற்பல இடங்களிலிருந்தும் சிப்பாய்கள் டில்லி சென்ற காட்சி அனைவரையும் பரவசப் படுத்தியது. ஏனைய இடங்களிலிருந்தும் சிப்பாய்கள் கிளம்பி டில்லி நோக்கினர்.

22 டில்லியில் சண்டை

கும்பினியின் ஆட்சி ஒழிந்தது, பாரத பூமி சுதந்திரம் எய்திவிட்டது என்று 1857-ஆம் வருடம் மே மாதம் 11-ந் தேதி டில்லிமா நகரிலே இந்திய வீரர் கொடி தூக்கினர். முகம்மதியரின் பச்சைப் பிறைக்கொடியும் மராட்டியரின் காவிக்கொடியும் ஆகாயம் அளாவப் பறந்தன. பாதுஷா பகதூர்ஷாவே பாரத பூமியின் வேந்தன் என்று கூறி, அவனை டில்லி அரண்மனையிலே அரியாசனத்தில் அமர்த்தினர் வீரரும் மாந்தரும் சேர்ந்து.

பழைய முகலாய அரசை மீண்டும் வீரர் அங்கே நிலை நாட்டவில்லை. சுதந்திர இந்தியாவின் வேந்தன் என்றே அவனை தூக்கி வைத்தனரே யன்றி, வேறன்று. சுதந்திரக் கொடி தூக்கினாலும், அதனை நிலை நாட்ட வேண்டி, நெடுக யுத்தம் புரிந்தாக வேண்டும். அதுபற்றி, யுத்த தளவாடங்களைச் சேகரிக்க முயற்சி உதித்தது. பீரங்கிகள், துப்பாக்கிகள், இதர ஆயுதங்கள் இவற்றை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் ஏற்பட்டன.

நகர மாந்தரில் பலரும் வந்து குவிந்து, இரவு பகலாக அத்தொழிற்சாலைகளில் வேலை செய்யலாயினர். இதற்கு இடையில் நாலுபக்கங்களிலிருந்து பட்டாளங்கள் வந்து குவிந்து, சுதந்திரக் கொடிக்கு வணக்கம் புரிந்தன. தம்தம் இடங்களில் இருந்த கும்பினியின் கஜானாக்களில் கொள்ளையாடிய பணத்தையும் பகதூர் ஷாவுக்குக் காணிக் கையாகச் செலுத்தினர்.

பின்பு, பகதூர்ஷா இத்தேச மக்களுக்கு ஓர் அறிக்கை வெளியிட்டான். "மதமும் பிரிவும் எவ்வாறாயி னும் எல்லாரும் இந்திய மக்கள். ஹிந்துக்கள்—முகம் மதியர் என்னும் வேற்றுமை கிடையாது. எல்லாரும்

சேர்ந்து, தேச நலத்தையே மதித்துத் தியாகம் புரிதல் வேண்டும். அன்னியப் பறங்கியர் இத்தேசத்தைவிட்டுப் போகும் வரையில், சுதந்திர யுத்தம் நடந்தே தீர வேண்டும்" இவையே அந்த அறிக்கையின் சாரமாம்.

அந்த, அறிக்கையின் நகல்கள் இத்தேசத்தின் முக்கிய நகரங்களெங்கும் பரவின. தென் கோடியிலும் அவை திகழ்ந்தன. அது கண்டு, ஆங்காங்குள்ள சிப்பாய்களும் ஜனங்களும் சுதந்திர நாட்டம் மிகுந்தனர். ஆங்காங்கே தலைவர்களும் தோன்றி, சுதந்திர யுத்தத்தை நன்கு நடத்த முற்பட்டனர். பசுவதை கூடாது என்று பகதூர்ஷா விடுத்த ஒரு விளம்பரம் பலரையும் பரவசப் படுத்திற்று.

டில்லியிலே சுதந்திரக் கொடி உயர்ந்தது கண்டும், சிப்பாய்கள் அங்கே சென்று குவிதல் கேட்டும், கும்பினி யாருக்குக் கவலை மிகுந்தது. புராதனமான டில்லி நகரை முதலில் மீட்டாகவேண்டும் என்று அக் கும்பினி யார் முனைந்தனர். பல்வேறு இடங்களில் இருந்தும் கும்பினிச் சேனைகள் சென்று, அந்நகரை அணுகின. ஏறக்குறைய 6000 கும்பினி வீரர் அந் நகரைச் சூழ்ந்து நிற்கலாயினர். அவர்களில் ஆங்கில வீரர் மூன்றில் ஒரு பங்கு ஆவர். ஏனையோர் இந்தியரேயாம்.

சீக்கிய சிற்றரசர்களான நாபா என்னும் நாட்டின் நரபதி, பாடியாலா என்னும் பிரதேசத்தின் தலைவன், ஜெண்ட் சமஸ்தான வேந்தன் ஆகியோர் டில்லிச் சண்டை யிலே கும்பினியாருக்குப் பின்பலமாக இருந்தனர். கூர்க்கர் என்போரும் கும்பினியுடன் கூடிக்கொண்டனர். இராஜபுதன நாடுகளின் அரசர்களோ சுதந்திரத்தில் சிந்தை குவிந்தாலும், எப்பக்கத்திலும் சேராமல் விலகி நின்றனர்.

டில்லி நகருக்குள் கூடி இருந்த சிப்பாய்களின் தொகை சுமார் இருபதாயிரம் இருக்கும். ஆயினும், ஒரே நாளில் அல்லது மூன்றே தினங்களில் டில்லியைப் பிடித்து விடுவதாக ஆங்கில தளகர்த்தர் விருது கூறி நின்றனர். அது குறித்து அத்தளகர்த்தர் தினம் அந்தரங்கமாக ஆலோசனை நடத்துவர். அது மறு கணமே சுதந்திர வீரருக்கு எட்டி விடும். அதனால் அத்தளகர்த்தரின் ஆயத்தங்கள் பலவும் மண்ணைக் கவ்வும்.

இதோ டில்லி விழுந்துவிடும் என்று ஏனைய இடங்களிலிருந்த ஆங்கிலேயர் படபடப்புடன் டில்லியை நோக்கிய வண்ணம் இருந்தனர். சுதந்திர வீரரோ பறங்கியரின் சேனையைஅழித்தே போடவேண்டும்என்னும் துடிப்புடன் சண்டை போட்டனர். தனக்குத் தெரிந்த சமர்த்தெல்லாம் காட்டி அணி வகுப்புச் செய்து போர் நடத்தினன் ஆங்கில தளபதி.

டில்லி வீரரின் துப்பாக்கி ரவையும், பீரங்கி வெட்டும் அத் தளபதியை அலறச் செய்தன. முடிவில் அத் தளபதியும் மாண்டுபோனன். பின்பு வேருெரு தளபதி வந்து, விருப்புடன், போர் முருக்கினன். இவனும் போர் முகத்தே பொன்றி விழநேர்ந்தது. மூன்ருவதாக ஒரு தளபதி வந்து, மொய்ம்புடன் சமர் செய்தான். இவனும் படுகாய மடைந்து, படைத் தலைமையை விடுத்தான்.

தற்காப்பில் இருக்க வேண்டிய சுதந்திர வீரர் முன்னேறிச் சென்று, கும்பினிப்படைகளைத் தாக்கி வந்தனர். அத்தாக்குதல்களின் விளைவாக ஆங்கில வீரரில் பலர் ஆவி இழக்க நேர்ந்தது. ஒரு சமயம் மரக்கிளைகளிலும், புதர்களிலும் சுதந்திர வீரர் மறைந்திருந்து, கும்பினிப் படைகளின் பின்னே சென்று, திடீரென்று

தாக்கத் தொடங்கினர். முன்னிருந்தும் டில்லி வீரர் ஆவேசத்துடன் தாக்கலாயினர்.

அந்நிலையில் இருதலைக் கொள்ளி எறும்புபோல் அகப்பட்டுக்கொண்ட ஆங்கில வீரர் முன்னும் போக முடியாமல், பின்னும் செல்ல முடியாமல் திகைத்துத் தவித்தனர். அதுகண்டு, ஆங்கில தளபதி அஞ்சினான்; அறிவு அழிந்தான்: டில்லியை மீட்பது எப்படி? என்று தேம்பினான். முடிவில் அவன் பழிவாங்கும் எண்ணத்துடன் மறுதினம் தனது படைகளை அழகாக அணி வகுத்துப் போர் தொடுத்தான்.

அவன் பக்கத்தில் இருந்துப் பாக்கி ரவைகளும், கை வெடிகளும் கன வேகமாக வந்து, டில்லி வீரரைத் தாக்கின; மிக்க உயிர்ச்சேதம் விளைத்தன. அது சமயம், ஆங்கிலேயரது பக்கத்தில் நின்று சமர் செய்த குதிரைப் படையொன்று தனது இனத்தாரின் கதி கண்டு கலங்கிற்று. அவ்வளவில், குதிரை வீரர் முன்னேறித் தாக்குவது போல் நடித்து, டில்லி வீரருடன் சேர்ந்து கொண்டனர்.

அதனால் ஆங்கிலேய தளபதி பின் வாங்க நேர்ந்தது. அத்துடன் அவனுக்கு ஆத்திரமும் வெட்கமும் மிகுந்தன. அதுபற்றி அவன் தன் பக்கம் ஏவல் வேலை பார்த்து இருந்த இந்தியரில் சிலரைக் கொன்று குவித்து, ஆறுதல் அடைந்தான். இதற்கு இடையிலே பிளாசி யுத்தத்தின் நூறாவது ஆண்டு தினம் (1857-ஆம் ஆண்டு, ஜூன் மாதம் 23-ந் தேதி) வந்து சேர்ந்தது. அன்று யுத்தம் மிக்க கடுமை கொண்டது. ஆங்கில தளபதி நடுங்கவும் நேர்ந்தது.

அத் தினத்தில் கும்பினி வீரரை வெட்டிக் குவித்து, வீறுகாட்ட வேண்டும் என்று டில்லி வீரரிடம் ஆவேசம் ஓங்கியது. இதனை முன்னறிந்தே ஆங்கில தளபதி தனது பீரங்கிப் படையை மறைவான இடங்களில் வைத்திருந்

தான். ஹர ஹரமகாதேவ ! தீன்தீன் ! என்று கோஷமிட்டுக்கொண்டு சுதந்திர வீரர் முன்னேறி வருகையில் அப் பீரங்கிப்படையோ அவர்களில் பலரையும் அழியா நின்றது.

அதுகண்ட டில்லி வீரர் தமது உயிரை ஒரு பொருட்டாக எண்ணுமல், பீரங்கிகளையே நோக்கிப் பாய்ந்து அவைகளை வசஞ்செய்து கொண்டனர். அதன்மேல் கும்பினிப் படைகள் திறமையுடன் போர் புரிய இயலவில்லை. இன்று உயிர் தப்பினுல் போதும் என்று ஆங்கில தளபதி கருதித் தனது படையுடன் பின் வாங்கிச் சென்றான்.

மாதம் இரண்டு ஆகியும் டில்லி விழவில்லையே? என்று ஆங்கில சேனுதிபதி ஆலோசனைசெய்து, பிரம்மாண்டமான பீரங்கிக் கொண்டு மதில் சுவரை இடித்தாக வேண்டும் என்று திட்டம் வகுத்தான். அம்பாலா நகரிலிருந்து நூறு யானைகள் அப்பீரங்கியை இழுத்துச் சென்று, டில்லியைக் குறுகின. இதற்குள்ளாக டில்லி நகருக்குள்ளே வஞ்சம் விளைக்கவும் அச்சேனுதிபதி ஏற்பாடுகள் செய்தான். அவ்விதம் இருமுனைகளிலும் முனைந்தாலன்றி, டில்லியை வீழ்த்தமுடியாது என்று கவர்னர் ஜெனரலான லார்டு கானிங் என்பானும் முடிவு கட்டினன்.

டில்லி வீரரிடம் பெரிய பீரங்கிகள் கிடையா. சிறு சிறு பீரங்கிகள் கொண்டு, பகைப்படையில் பெருஞ் சேதம் விளைக்க அவர்களால் ஆகவில்லை. இந்நிலையில் கும்பினியின் பெரிய பீரங்கி அக்கோட்டை மதிலைக் குறிக் குண்டு மேல் குண்டு பொழியத்தலைப்பட்டது. தலைப் படவே, டில்லிக்கோட்டை சில இடங்களில் தகர்ந்தது. தகர்ந்த இடத்தை நெருங்கினர் கும்பினி வீரர்.

அவ்வளவில், தீன் தீன் ! என்று டில்லி வீரர் கூவிக் கொண்டு அப்பகைஞரை வாட்டி வதைத்துத் தாமும் வெட்டுண்டு வீழ்ந்தனர். பின்பு கோட்டைமீது நூலேணி வீசி, மேலே ஏற முயன்றனர் ஆங்கில வீரர். அது அறிந்ததும், மதில் உச்சியிலிருந்து பாறைகளையும், பெரிய மரங்களையும் சுதந்திர வீரர் உருட்டிவிடவே, நூலேணியும் அதன் மீது இருந்த ஆங்கில வீரரும் நசுக்குண்டு நானிலத்தில் வீழ்ந்தனர்.

இதற்கு இடையில் பகதூர்ஷாவின் உறவினரில் சிலர் பண ஆசை மேலிட்டு ஆங்கிலேயரின் உளவாளிகளாகி, மர்மமான இடங்களை எல்லாம் கும்பினியின் பீரங்கி வீரருக்கு உணர்த்தி வந்தனர். அரையில் கட்டிய ஆடையே அரவமாக மாறினால், அனர்த்தம் விளைவதற்குக் கேட்கவேண்டுமோ ? சுருங்கச் சொன்னால், டில்லிக் கோட்டை பற்பல இடங்களில் நாலரை மாதங்களுக்குப் பின் தகர்ந்தது. அவற்றின் வழியே கும்பினி வீரர் உள்ளே நுழைந்தனர். உளவாளரும் உடனிருந்து உதவியெல்லாம் புரிந்து வந்தனர்.

கோட்டைச் சுவரின் சிதைவு கண்டதும், சுதந்திர வீரரின் சேனாதிபதியான பக்த்கான் என்பான் பெருமதி கொண்டு, தனது படைஞரில் பலரையும் வெகு தந்திரமாக வேறுவழியே வெளியே அனுப்பி விட்டான். நகரில் நின்று நெடுகச் சண்டை போடுதல் இயலாதகாரியம். ஆதலின் வேற்றிடம் சென்று, விருப்புடன் போரை நடத்துவதற்குரிய திட்டங்களும் வகுத்தான் அப்பெரு வீரன்.

இதற்குள் நகருக்குள்ளே புகுந்த ஆங்கில வீரர் அடி அடியாகச் சண்டை செய்து கொண்டே வீதிகளில் புகநேர்ந்தது. பகதூர்ஷா எங்கே ? என்று அவர்கள்

மூலைமுடுக்குகளிலெல்லாம் தேடித்திருவினார்கள். சுமார் பதினைந்து மைல் பரப்புள்ள அந்நகரினூடே எங்கும் சென்று பார்த்தல் இயலாத காரியம் அல்லவா? அன்றியும், ஆன்ற அறிவு படைத்த பக்தகான் என்பான் பல இடங்களிலும் படுகுழி வைத்திருப்பான் என்பதும் கும்பினி வீரரின் கவலையாயிற்று.

நகரினூடே ஆங்கிலேயர் புகுந்து விட்டதை பகதூர்ஷா உணரலானான். அதுசமயம் இலாஹிபக்ஷ் என்பான் விரைந்துவந்து, பகதூர்ஷாவை அடைந்து, "பாதுஷாவே! வயதோ எண்பத்து இரண்டுக்கு மேல் ஆகிவிட்டது. உமது அங்கங்களெல்லாம் நடுங்குகின்றன. நமது சுதந்திர வீரரின் வாள் வரிசை மங்கி விட்டது. பறங்கியரிடம் பணிவதே மேல்" என்று ஓதினான் காதோடு.

அதற்கு, "அப்பனே! தள்ளாத வயதுதான். ஆயினும் எனது உள்ளமோ இம்மியும் தளரவில்லை. சுதந்திர வீரரின் வாள்வரிசையும் மங்கிவிடாது! இந்தியரின் உள்ளத்திலே தேசபக்தி என்பது இம்மியளவேனும் இருக்கும் வரையில், இந்தியாவின் வாள் வரிசை மங்காது! மங்காது!! அன்றியும், இந்தியரின் வாள்வரிசை ஒரு நாள் லண்டன்மா நகரின் வீதியிலும் மிளிரும்!" என்று பகதூர்ஷா பதில் கொடுத்தான்.

அந்நகரில் எத்தனையோ அரண்மனைகள், எத்தனையோ மசூதிகள். எத்தனையோ பூங்காவனங்கள் இவ்வளவு ஏற்றம் வாய்ந்த நகரிலே பகதூர்ஷாவை எங்கே காண்பது? என்று ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தி ஏழாம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை, ஆங்கிலவீரரும், ஆங்கிலதளபதியும் தேடினின்றனர்.

23. துரோக சூழ்ச்சி

டில்லிமா நகரினுள்ளே புகுந்த ஆங்கிலவீரர் நடுக்கம் மிகுந்து, பல இடங்களிலும் பகதூர்ஷாவை தேடிநின்ற சமயத்தில் சுதந்திர வீரரின் சேனாதிபதியான பக்த்கான் என்பான் பாதுஷாவை அடைந்தான். அடைந்ததும், "அரசே ஒரு கோரிக்கை. அந்நகர் போனது பற்றிச் சிறிதும் கவலைப்பட வேண்டாம். தாங்கள் என்னுடன் இருந்தால்போதும். தங்களை முன்னிட்டு நெடுகப்போரை நடத்தி வெற்றிமாலை தேடித்தர முயலுவேன். நம் தேசத்தின் சுதந்திரம் டில்லியில் நிர்ணயம் ஆகப்போவதில்லை. பற்பல இடங்களிலுள்ள போர்முனைகளில் நிர்ணயம் ஆதல் வேண்டும். நமது சேனையை வெளியே அனுப்பிவிட்டேன் தங்களை அழைத்துச் செல்லவே வந்துள்ளேன்" என்றான்.

சேனாதிபதியின் வார்த்தையைக் கேட்டதும், பாதுஷா "அப்படியே ஆகட்டும் என்றான். அப்பாதுஷாவின் தேவியும், "போரே சிறந்தது! ஒரு சமயம் பொன்றிவிழ நேரினும், சுதந்திரதேச அரசன் என்னும் பதவிக்கு ஏற்ப நாம் பொன்றி வீழ்வோம்! வாழினும் சுதந்திர தேச அரசன் என்னும் பதவிக்கு ஏற்ப வாழ்வோம். நம் சேனாதிபதியின் பேச்சே சிறந்தது!" என்று இசைத்தனள். மறுதினம் பாதுஷாவும் பிறரும், நகரைத்துறந்து பகைவர் அறியாத வண்ணம் புறப்படுவதாக ஏற்பாடு ஆயிற்று. அதற்குரிய ஆயத்தங்கள் பலவும் புரியச்சென்றான் பக்த்கான்.

அத்தறுவாயில் பாதுஷாவுடன் இருந்தவன் இலாஹி பக்ஷ் என்பவன். இவன் பாதுஷாவின் நண்பர்களில் ஒருவன்; மேலும் பாதுஷாவின், மூத்த மகனுக்குப்

பெண் கொடுத்த புண்ணியனும் ஆவான். சேனாதிபதியின் பேச்சையும், தேவியின் ஒப்புரவையும் இவன் உணர்ந்தான். உடன் பிறந்தே கொல்லும் வியாதி என்பர். பாதுஷாவை விட்டு பக்த்கான் மறைந்தது தான் தாமதம். பாதுஷாவிடம் பின் வருமாறு இவன் மீண்டும் ஓதத் தொடங்கினான்.

"அரசே இன்னுமா யுத்தத்தில் நாட்டம்? ஆங்கிலேயரை நம்மால் வெல்ல முடியுமா? எத்தனை பெயரை இன்றளவும் போரில் நாம் பலி கொடுத்தோம்! அதனால் யாது பயன் கண்டோம். டில்லியைவிட்டு வெளியே சென்று நாம் என்ன செய்வது? இங்கிலாந்திலிருந்து வெள்ளைவீரர் வந்து குவிகின்றனர். பக்த்கான் அது அறியாது பேசுகின்றான். தள்ளாத வயதில் தாங்கள் எங்கே போவீர்கள்? வேண்டாம், வேண்டாம், போர் வேண்டாம். ஆங்கிலேயரின் உறவை நாடுவோம். தங்களது உயிருக்கு ஓர் ஆபத்தும் நேராது."

அவ்வார்த்தைகளைக் கேள்வியுற்றதும், பகதூர்ஷா மனம் ஊசலாடத் தொடங்கியது. "கரைத்தால் கல்லும் கரையும்" என்பர். மனவலிபடைத்த பாதுஷாவும் சற்றே திகைத்தான். பகைவரிடம் பணிய அவனுக்கு மனமில்லை; அன்னாரின் தயவை நாடவும் அனது உள்ளம் ஒப்பவில்லை; பக்த்கானுக்குக் கொடுத்த வாக்கை மீறி நடக்கவும் விருப்பமில்லை. மறுதினம் பக்த்கான் வந்து, பாதுஷாவை அழைத்தான். பாதுஷா அச்சமயம் வாய்திறக்கவில்லை.

நகரைத் துறந்து சென்ற சேனையையும், துவக்கிய சுதந்திரப் போரையும், இடை நடுவில் கைவிட பக்த்கானுக்கு இஷ்டமில்லை. பாதுஷா மவுனம் சாதிப்பதைப் பார்த்ததும், "பாதுஷாவைக் கைவிட எனக்கு மன

மில்லை. பாதுஷாவே தேசத்தைக் கைவிட — தேசமானத்தைக் கைவிட—நினைப்பினும், நான் மனம் ஒப்பேன். துரோகியான இலாஹியே! கூட இருந்து குடியைக் கெடுக்கின்றாய். எல்லாம் உன் வஞ்சனையே! பாதுஷாவே! சலாம். போய் வருகிறேன். பாவிகளின் கையில் சிக்கித் தாங்கள் பதறுவதை என் கண் கொண்டு பாரேன். அனைத்தும் ஆண்டவன் அல்லாவுக்கு அர்ப்பிதம்!" என்று வருந்தி மொழிந்து சென்றான் பக்த்கான்.

பக்த்கானைப் பிரித்தாகிவிட்டது. பாதுஷாவையும் நிறுத்தியாகி விட்டது. பாதுஷாவைப் பறங்கியரிடம் காட்டிக் கொடுப்பதே பாக்கி. இது இலகுவாகத் தோன்றவில்லை இலாஹிபக்ஷிக்கு. பாதகனாகிய இலாஹிபக்ஷுடன் சேர்ந்து, ஆங்கிலேயர் அமர்த்தியிருந்த உளவாளிகளில் ஒருவன் முன்ஷி ரஜப் அலி என்பவன். இவனுடன் இலாஹி அந்தரங்கமாக ஆலோசனை செய்தான் "காட்டிக் கொடுத்தால் எம்மாத்திரம்! இம்மியளவும் கவலை வேண்டாம். பக்த்கானும் அவன் துணைவரும் நகரை விட்டுப்போக இன்னும் இருபத்து நான்கு மணி நேரம் பிடிக்கும். அது வரையில் பாதுஷாவைப் பார்த்துக் கொள். பக்த்கான் வெளியே போனதும், ஆங்கிலேயரைக் கூட்டி வருகிறேன்; அன்றிடம் பாதுஷாவை ஒப்படைக்கலாம்" என்றான் முன்ஷி ரஜப் அலி

உடனே, ரஜப் அலி ஓட்டமும் நடையுமாகச் சென்று, ஆங்கில தளகர்த்தனை ஹாட்சன் என்பானைக் கண்டு, நடந்தன எல்லாம் நவின்றான். அத் தளகர்த்தன் தனது தலைவன் ஜெனரல் வில்சனுடன் கலந்து பேசினான். "பாதுஷாவை உடனே கொன்று போடவேண்டும்" என்றான் வில்சன். "பகதூர்ஷா பணிந்துவிடின் உயிரை வாங்கக் கூடாது" என்றான் ஹாட்சன். முடிவில் "சரி" என்றான்

வில்சன். மறுதினம் பொறுக்கான வீரருடன் ஹாட்சன் புறப்பட்டான்.

இதற்கிடையில், இலாஹி பக்ஷின் சூழ்ச்சியை உணர்ந்தான் பகதூர்ஷா; மாய வலையில் பட்டது பற்றிப் பதைத்தான். வீருத் மஹாலுக்கோபோரைநெடுகநடத்தி, வீரச்சாவே கொள்ள ஆசை. ஆயினும் கணவனைக் கை விட்டுச் செல்ல அவளுக்கு மனம் இல்லை. தனது காந்தனுக்கு நேரப்போகும் கதி கேட்டு அவள் கதறி அழுதாள். "பறங்கியரிடம் பணிவதா?" என்று பொருமினாள். "பணிவதாயின் இவ்வளவு உயிர்களைப் பலி கொடுத்ததேன்?" என்று தலையில் அடித்துக் கொண்டாள். "நமது முன்னோரிடம் மண்டியிட்டுச் சலாம் செய்து; தங்கியிருக்க இடம் பெற்ற, ஆங்கிலேயரிடமா நாம் பணிவது?" என்று ஏங்கினாள்.

"ஆதிமுதல் இலாஹிபக்ஷ் அனுகூல சத்ருவாக அல்லவா இருந்தான். பூனையை மடியில் கட்டிக்கொண்டு சகுனம் பார்க்கப் போனதுபோல் இலாஹியை உடன் வைத்துக்கொண்டு, ஆலோசனை செய்து, போரை நடத்திய மடமையை என்னென்று சொல்லுவேன்?" என்று அத்தேவி தேம்பினாள். அவளுடைய இளமகன் இருபதே வயதுள்ளவன், அவனும் விம்மினான். "சுயேச்சையாகக் கானகத்தில் அலைந்து திரியலாமே, அன்னியரிடம் பணிந்தா வாழவேண்டும்?" என்று அவ்விளவனும் பேசினான். "இலாஹி பக்ஷ் எங்கே?" என்று சீறினான் பாதுஷா.

அப்போது இலாஹி பக்ஷும், முன்ஷி ரஜப் அலியும் வழி காட்டிவர, ஹாட்சன் என்பான் இருபது குதிரை வீரருடன் வரலானான் பாதுஷா இருந்த இடம் நோக்கி. அது சமயம், ஹாட்சனுக்கும் மனம் மாறுகிறது.

"பாதுஷாவைக் கொன்று, அவன் சவத்தையே எடுத்துச் செல்லலாமா" என்று எண்ணினன். 'ஹுமாயூன் கல்லறை' என்னும் மாளிகையில் பாதுஷா தங்கி இருந்தான் அதனுள்ளே செல்ல ஆங்கில வீரருக்குத் துணிவு இல்லை "உள்ளே வெடிகுண்டுச் சுரங்கம் இருக்குமோ? ஒரு சமயம பக்தகான் பதுங்கி இருப்பானே? இரண்டும் இல்லையெனில் பரிவாரம் சூழ்ந்திருக்கப் பாதுஷாவைச் சிறை செய்தல் எங்ஙனம்?" என்பதே ஹாட்சன் கொண்ட நடுக்கம்!

இரண்டு மணி நேரம் வரை ஹாட்சனும் உள்ளே போகத் தயங்கினன்; பாதுஷாவும் தயங்கினன் வெளியே வந்து பணிய. நயவஞ்சகன் இலாஹி பக்ஷ் என்பானே, "பாதுஷாவே! இனிமேல் தயங்கி என்ன பயன்? பணிந்து விடுவதாயின், உனது உயிர் பிழைக்கும்" என்ருன். பல சொல்லி என்ன? பல்லக்கில் பாதுஷா புறப்பட்டு, மாளிகையின் வாயில் வந்து சேர்ந்தான். உடைவாளையும், குத்தீட்டியையும் கழற்றிக் கொடுக்கும் வரையில், பாதுஷாவை ஹாட்சன் அணுகவில்லை. பின்பு, பாதுஷாவையும், அவன் மனைவி மக்களையும் சிறைசெய்து சென்ருன் அந்த ஹாட்சன்.

மறுநாள் அந்த ஹாட்சன் புறப்பட்டுச் சென்று, பாதுஷாவின் வேறு இரு பிள்ளைகளைச் சிறை செய்து, வெள்ளி வீதி என்னும் பெருவீதியில் அவர்களை அம்மணமாக நிறுத்திச் சுட்டு வீழ்த்தினன். பாதுஷாவும் அவன் மனைவியும் சிலமாத காலம் சிறையிலேயே கிடந்தனர். அப்பால், 1858-ஆம் வருடம் ஜனவரி மாதம் 27-ந் தேதி இராணுவ விசாரணை சபை ஏற்பட்டது.

பாதுஷாவை நாடு கடத்த வேண்டும் என்று அச் சபையார் தீர்ப்பு அளித்தனர். அவ்வாறே பகதூர்ஷா

இரங்கூன் நகரம் சென்று, அங்கே காவலில் வாழ நேர்ந்தது. சிறிது நாளைக்கெல்லாம் அச் சீரிய புருஷன் இம் மண்ணுலகைத் துறந்து சென்றான். இனி இலட்சுமண புரியிலே நானா சாகிப் போர் புரிந்ததை உரைப்போம்.

24. கான்பூரில் கொந்தளிப்பு

கும்பினியின் மண்ணாசை காரணமாக, நானாசாகிப் தாயபாகம் இழந்தான். சிங்கம் போன்றவனைச் சிறு நரி போலாக்கினர் கும்பினியார். சுவீகாரத் தந்தை பாஜி ராவ் வைத்துப்போன ஆஸ்திக்கும் அபாதி நேரலாயிற்று. பாஜிராவின் வமிசத்தாரொருவன் அந்த ஆஸ்தியில் தனக்கும் பங்குண்டு என்று வாதாடவே, கும்பினியைச் சேர்ந்த சிலர் அவ்வழக்கினை வளர்த்து வந்தனர்.

ஆயினும், ஆங்கிலேயரைக் கண்டால், நானாசாகிபுக்கு அன்பு சொட்டும்; அபிமான வாசகங்கள் ததும்பும். அந்நாளில் நானாவின் மாளிகையிலே விருந்தாளியாக வாழாத ஆங்கிலேயர் கிடையாது. கான்பூர் நகரிலிருந்த ஆங்கிலேயருக்கும், அந்நகரின் சேனைத் தலைவனான ஸர். ஹியூ வீலருக்கும் நானாவிடம் பெருமதிப்பு உண்டு. மீரத் நகரில் கலகந் தோன்றியதும், கான்பூரிலும் கலக ஏற்பாட்டம் தோன்றியது.

கும்பினியின் கஜானாவுக்கு ஆபத்து நேருமெனக் கண்டதும், நானாவின் உதவியை நாடினான் வீலர். உடனே நானாவின் வீரர் முந்நூற்றுவர் இரண்டு பீரங்கிகளுடன் புறப்பட்டுச் சென்றனர் அபயமளிக்க. நானாவும் பிரம வர்த்தம் விடுத்து, கான்பூர் சேர்ந்து ஆங்கிலேயரின் மத்தியில் வசிக்கலானான்.

கான்பூரிலுள்ள பட்டாளங்கள் கொதித்துக் கிளம்பினால் நானாவிடமே தங்களது மாதரையும், குழந்தை

களையும் ஒப்படைக்க ஆங்கிலேயர் ஆவல் கொண்டிருந் தனர். சிப்பாய்களின் மனநிலை கண்டஞ்சிய வீலரோ, ஆங்கிலேயரைக் காக்க எண்ணி, நகரின் ஒரு பாகத்திலே கோட்டை போன்ற அரணொன்று அமைத்தான்; அங்கே ஆயிரம் பேருக்கு வேண்டிய உணவுப் பொருள்களையும் சேகரித்து வைத்தான். அதனைக் கவலை மாளிகை என்னலாம்.

1857-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந்தேதி வெள்ளிக் கிழமை பிறந்தது. குதிரைப் படையினர் தங்கள் வாளா யுதங்களைத் தீட்டி, அவசியமான தோட்டாக்களையும் எடுத்துக் கொண்டனர்; தங்கள் மனைவி மக்களைச் சொந்த ஊருக்கு அனுப்பினர். அன்று இரவிலே குதிரை வீரரின் மைதானத்தில் துப்பாக்கி வேட்டொன்று கிளம்பியது. அதனை அடுத்து இரண்டு வேட்டுக்கள் கிளம்பின. சுபேதார் தேஜசிம்மன் சிங்க நாதஞ்செய்து கிளம்பினான். வீரர் அனைவரும் அவனைப் பின்பற்றினர். குதிரை வீரர் கிளம்பியதைக் கேள்வியுற்ற காலாளர் அத்தனை பெயரும் கிளம்பினார்கள்.

பின்பு, கான்பூரிலுள்ள எல்லா இந்தியப் பட்டாளங் களும் கிளம்பிவிட்டன. அவர்கள் சுமார் மூவாயிரம் பேர். அன்னவரில் ஓர் எண்பது பேர் மட்டும் ஆங்கிலேயரை அண்டி நின்றனர். மூவாயிரம் சிப்பாய்களும் நானாவின் மாளிகை குறுகி, "மகா ராஜாவே! எங்களுடன் சேர்ந் தால், உங்கள் காலடியில் கிடக்கிறது அரசுரிமை. எங்கள் எதிரிகளான ஆங்கிலேயருடன் சேர்ந்தால், உங்கள் தலைக்கு மேலே காத்து நிற்கிறது மரணம்," என்று உரைத்தனர்.

நானா அதுகேட்டு, "நானே உங்கள் மனிதன்" என்றான். "நல்லது! வாருங்கள் டில்லிக்குப் போகலாம்;

எங்களை முன்னின்று நடத்திச் செல்லுங்கள்" என்றனர் சிப்பாய்கள். "நாளை புறப்படலாம்" என்றான் நானா. இதற்கிடையில் சிப்பாய்களில் சிலரோ, கஜானாவை நோக்கிச் சென்று, அதிலிருந்த 15 இலட்சம் வெள்ளிக் காசையும் கைப்பற்றிக் கொண்டனர்.

வேறு சிலர், சிறைச்சாலையை உடைத்து, உள்ளே வாடிக் கிடந்த மக்களை விடுவித்தனர்; மற்றுஞ்சிலரோ யானையின்மீது சுதந்திரக் கொடியை ஏற்றுவித்து, நகர் வலம் வந்தனர். பின்னர் எல்லாரும் டில்லியை நோக்கிய வண்ணம், கலியாணபுரம் என்னும் இடஞ்சென்று தங்கினர். மதியூகியான அஸிமுல்லாகான் அங்கே தோன்றி பேசியது இது:—

"நாம் இப்போது டில்லி சென்று என்ன பயன்? கான்பூரைச் சுற்றியிருக்கும் பிரதேசங்களைக் கைப்பற்றிக் கொள்ளவேண்டும். டில்லிக்கும் பஞ்சாபுக்கும் ஆங்கிலத் துருப்புகள் செல்லவேண்டின், கான்பூர் வழியே தான் போகவேண்டும். கான்பூர் நம கைவசம் இருப்பின், கங்கைப் பிரதேசத்தில் நாம் புகுதல் சுலபம். மேலும், பிளாசி யுத்தத்தின் நூறுவது வருஷ தினம் வருகிறது. அன்று நமது வீரத்தைக் கும்பினிக்குக் காட்ட வேண்டும்."

இதைச் செவியுற்ற நானா "சரி" என்றான், சிப்பாய்களும் சிரக்கம்பம் செய்தார்கள். உடனே எல்லாச் சிப்பாய்களும் சேர்ந்து, நானாவுக்கு முடி சூட்டி, அரசனென வணங்கி, ஆயுதங்களை எடுத்துக் காட்டி, ஆர்ப்பரித்தானர். சுபேதர் தேஜஸிம்மன் சேனாபதியானான்; பற்பல படைத் தலைவர்களும் நியமனம் ஆயினர். ஜூன் மாதம் ஆறும் தேதி காலையிலே சிப்பாய்கள் அனைவரும்

அணிவகுத்து, நகர் வலம் வந்து, "மகாராஜா நாஞு சாகிபே மன்னவன்; அவரது ஆணைப்படி அனைவரும் நடத்தல் வேண்டும்" என்று பறை சாற்றினர். இவ் விஷயம் வீலருக்கு எட்டியது.

அதற்குள் நாஞு சாகிபும் வீலருக்கு ஒரு கடிதம் விடுத்தான். அதன் சாரம் இது:—"தளகர்த்த! இன்றளவும் நான் சொன்ன சொல்லை மீறி நடக்கவில்லை. உங்களுக்கும் கஜாஞுவுக்கும் அபயம் அளித்து நின்றேன். சிப்பாய்களுக்கோ உங்களிடம் அடங்கி வாழ இஷ்டமில்லை. நான் அவர்கள் ஆணையை மீறி நடத்தல் எங்ஙனம்? கான்பூர் சுதந்திரக் கொடி தூக்கிவிட்டது. உங்களை வென்றொழிக்க வேண்டுமென்றே சிப்பாய்கள் சீறி நிற்கிறார்கள். முன்னெச்சரிக்கை இன்றிப் போர் புரிய எனக்கு இஷ்டமில்லை. மறுதினம் போர்தொடங்கும். ஜாக்கிரதை!"

நாஞுவின் கடிதங்கள் கண்டான் வீலர். ஆயிரம் பேரை அவன் காத்தாக வேண்டும்; அவர்களில் 465 பேர் ஆடவர்; அவர்களின் மனைவியரும் வயது சென்ற குமரியருமாக 280 பேர் மாதர்; எஞ்சியோர் குழந்தை குஞ்சுகள். ஆடவர் அனைவருக்கும் ஆயுதங் கொடுத்தான் வீலர்; அவர்களை இருபது இருபது பேராகப் பிரித்துத் தளகர்த்தர்களையும் நியமித்தான். மறுதினம் பொழுது புலர்ந்தது; கலியாணபுரஞ் சேர்ந்த சிப்பாய்கள் கவலை மாளிகை குறுகினர்.

"பதுங்கியிருந்து பழி வாங்கும் பறங்கியரும் இருக்கக் கூடும்; நம்மவரிலும் உளவறிந்து ஆங்கிலேயருக்கு உரைப்போர் இருத்தல் கூடும்; ஆதலின் அன்னாரைத் தேடிப் பார்த்து, அந்தகனுலகு அனுப்ப வேண்டும்" என்று சொல்லிய வண்ணம் குதிரை வீரரில் சிலர் புறப்

பட்டனர் நகரினூடே. வீரரின் வருகையைக் கண்டதும், பதுங்கியிருந்த நான்கு ஆங்லேயர் ஓட்டம் பிடித்தனர். கும்பினியிடம் வேலை பார்த்து, உளவுரைத்து நின்ற நான்கு கிறிஸ்தவ குமாஸ்தாக்கள், குத்துண்டு வீழ்ந் தனர்.

பறங்கியருக்கோ சட்டைக்காரருக்கோ கிறிஸ்தவ ருக்கோ அபயமளிக்கும் இந்தியரின் வீடுகளை முதலில் சூறையாடிச் சுட்டெரிக்க வேண்டும் என்று கட்டளை இட்டான் தேஜஸிம்மன். பத்ரீநாத் என்பவன் கும்பினி யின் கண்ட்ராக்டராக இருந்து வெகு பணம் சேர்த்தவன். வீலரின் மனைவிக்கும் மக்களுக்கும் அவன் அபயமளித் தான். அவன் சொத்தனைத்தும் கணப் பொழுதில் கொள்ளை போயிற்று. ஆங்கிலேயருக்கு உளவுரைத்த ஒரு ஹிந்து வியாபாரி நாற்பதாயிரம் கொடுத்து உயிர்ப் பிச்சை பெற்றான்.

நகரை அங்ஙனம் சலித்துப் பார்த்தபின், கவலை மாளிகையைக் குறிக்கொண்டனர் அக்குதிரை வீரர். இதற்கிடையில் அம்மாளிகையிலிருந்து 25 பேர் புறப் பட்டு வெளியே வந்தனர் வேவு பார்க்க. தொலைவிலே சிப்பாய்களைக் கண்டதும், அவர்கள் ஓட்டம் எடுத்தனர் வந்த வழி நோக்கி. துப்பாக்கி ரவைகள் அவர்களைத் துரத்திச் சென்றன. அவர்களில் ஒரு சிலரே மாளிகைக் குள் உயிருடன் புகமுடிந்தது. உடனே சிப்பாய்களின் பீரங்கிகளிலிருந்து ஒரு குண்டு சென்று தாக்க, அம்மா ளிகையின் புறமதில் சுவர் இடிந்து வீழ்ந்தது.

நகர மாந்தரும் எழுந்தமைகண்டு, மாக்னிபாஷ் என்பானும், அவன் குடும்பத்தாரும் இந்திய உடைபூண்டு உடம்பில் கொஞ்சம் கரியும் பூசிக்கொண்டு, உயிருக்கஞ்சி ஓரிடத்தே பதுங்கிக் கிடந்தனர். வியாபாரத்திலே

கொள்ளை லாபம் வைத்து, வெகு பணம் திரட்டி இருந்த கிரீன் வே என்பானையும் அவன் குடும்பத்தாரையும் அம் மாந்தர் சிறை செய்து, கொள்ளைகொண்ட பொருளைக் கொட்டச் செய்தனர்.

இதற்கிடையில் கவலை மாளிகையின் மீது நானாவின் பீரங்கிகள நல்ல வேலை செய்யலாயின. குண்டுமாரியை ஆங்கிலேயரால் தாஙக முடியவில்லை. பீரங்கிப் பிரயோகத்தை அன்றளவும் கண்டறியாத ஆங்கில மாதரும் குழந்தைகளும் அலறி அழுதனர். சிப்பாய்களின் சீற்றமும் முற்றுகைத் திறமும் கண்டு, ஆங்கில தளகர்த்தர் அதிசயித்தனர். இரண்டு மூன்று வாரம் முற்றுகை மும்மரமாக நடந்தது.

சுதந்திர யுத்தம் ஆரம்பமான பருவம் கடுங்கோடை காலம். வெய்யிலை அக்கினி ஜ்வாலை என்றே சொல்ல வேண்டும். கவலை மாளிகை முழுவதிலும் கொல்லனது உலைக்களத்தைப்போல் ஒரே தீக்காற்றுத்தான். அத்தகைய கோட்டையில் மலையுச்சிக்குச் சென்று இந்திரபோக வாழ்வு கொள்ளும் ஆங்கிலேயர், கவலை மாளிகையில், ஆண் பெண் எனும் வேற்றுமையின்றி ஒண்டிக்கிடக்க நேர்ந்தது. ஆங்கிலேயரை அச்சுறுத்திப் பணியச்செய்ய வேண்டும் என்பதே நானாவின் கருத்து. அவர்களை அழிப்பது அன்று. இருபதுநாள் முற்றுகைக்குப் பிறகும் ஆங்கிலேயர் பணிய ஒருப்படவில்லை.

அன்னார் பணியவில்லை எனக் கண்டதும், பீரங்கிப் பிரயோகம் பிரமாதமாக முற்றியது. முற்றவே, கவலை மாளிகை உண்மையில் கவலை மாளிகையாகவே மாறியது.

இதற்குள் பிளாசி யுத்தத்தின் நூறாவது ஆண்டு தினம் வந்தது. அன்று பொழுது புலர்ந்ததும், சுதந்திர

வீரர் அனைவரும் அணிவகுத்துக் கிளம்பி, கவலை மாளிகையை நான்குபுறமும் சூழ்ந்துகொண்டு, நூறு ஆண்டுகளுக்கு முன்னே எங்கள் தேசத்திலே வங்கத்தை வஞ்சனையாக அடிமைப்படுத்தினீர்களே; இன்று உங்கள் வாழ்வை எண்ணிப்பாருங்கள்" என்று எக்காளம் போட்டனர்.

மறுதினம் கவலை மாளிகையிலே ஆகாரப் பஞ்சம் ஏற்பட்டது. இன்னதைத்தான் தின்பது என்றில்லை. இறைச்சி தின்னும் ஆசையோ தாங்கவில்லை. அதற்காக ஒரு நாயை அடித்துப் புசித்தனர் பலரும். கிழக்குதிரை ஒன்று வெட்டிப் புதைக்கத்தான் தரும, அதன் இறைச்சி பெரு விருந்தாயிற்று. தற்செயலாக ஒரு காளைமாட்டைக் கண்ட பலர் ஓடி அதனைப் பிடித்துவந்து, தீயில் பொசுக்கிப் பட்சணம் பண்ணினர். குடி தண்ணீருக்கும் கூட பஞ்சம் ஏற்பட்டது.

இந்நிலையில், கான்பூர் நகரினுள்ளே வசித்த இரண்டு மூன்று இந்தியர் அக் கவலை மாளிகையின் வாசிகளுக்கு உணவனுப்ப முயன்றனர். உதாரணமாக, முஸ்லீமொருவன் ஒரு கூடை நிரம்ப ரொட்டி அனுப்ப முயன்றான். நானாவின் வீரர் அதனைக் கண்டுபிடித்தனர்; அஸிமுல்லா கான் விசாரணை நடத்தினான். அந்த முஸ்லிமுக்கு உடனே சிரச்சேதம் கிட்டியது. மற்றொருவன் நள்ளிரவிலே முட்டையும் வெண்ணையும் அனுப்பினான் அம்மாளிகைக்கு. அவற்றை இரண்டு மாதரும் பண்ணிரண்டு ஆடவரும் திருட்டுத்தனமாகச் சுமந்து சென்றனர்.

அப்பதினைன்கு பேரையும் நானாவின் சேவகரர் சிறைசெய்தனர். முடிவில் அப்பதினைன்கு பேரும் பீரங்கி வாயில் வைத்துச் சுடப்பட்டனர் வெளியே இருந்து மாளிகைக்கு எதும் போக இடமில்லை. வேறு இடங்களி

லிருந்து துணைப்படை எதுவும் வரவில்லை. இந்நிலையில், நானாவிடம் பணிவதைவிட வேறு வழியில்லை எனக்கண்டு கொண்டனர் ஆங்கிலேயர்.

நாள் கணக்காகச் சண்டை நடந்துவந்தும், நகர பரிபாலனத்தை நானாசாகிப் மறக்கவில்லை. நகராண்மைக் கழகமொன்று நிறுவினான் நானா; நகரப் பிரமுகர் பலரையும் வரவழைத்துத் தேர்தல் நடத்தினான்; பெரும் பாலான மக்களால் ஹோலாசிங் என்பான் நகரத் தலைவனா கத் தேர்ந்தெடுக்கப்பட்டான். நகர மக்களைப் பாது காத்தல் ஹோலாசிங்கின் கடமை.

போர் புரியும் சிப்பாய்களுக்கு உணவுப் பொருள் கள் வேண்டும் அல்லவா? இதற்கு முல்லா என்னும் கனவான் திட்டமானான். சிவில், கிரிமினல் வழக்குகளை விசாரிக்க நியாயஸ்தலமொன்றும் ஏற்பட்டது. சுவாலைப் பிரசாத், அஸிமுல்லாகான் முதலியோர் நீதிபதிகளாக அமர்ந்தனர். பாபாசாகிப் பிரதம நீதிபதியானான். நகர மக்கள் நிம்மதியுடன் வாழ எல்லா ஏற்பாடுகளும் செவ்வனே நடைபெற்றன. கொடுங்குற்றம் புரிந்த ஒருவன் வலது கையை இழந்தான்; பசுவை வதைத்த ஒருவனுக்கு அத் தண்டனை கிட்டியது. போக்கிரி களைப் பிடித்துக் கழுதையின்மீது வைத்து, நகர்வலம் செய்வித்து நடுக்கம் ஊட்டப்பட்டது.

ஈதிங்ஙனமிருக்க, காசியிலே கொதித்துக் கிளம்பிய சிப்பாய்களில் பலரும் கான்பூர் சேர்ந்தனர். அங்கே நீலனும் பிற ஆங்கிலேயரும் இழைத்த கொடுமைகள் பலவற்றையும் அவர்கள் நானாவிடம் சொல்லி முறையிட் டனர். இதற்கிடையில், மீர்நவாப் எனும் பிரபல சிற்றரச னொருவன், தனது ஆயிரம் வீரருடன் துணைவருவதாகச் நானாவுக்கு சொல்லி அனுப்பினான். அதன்மேல் ஆடம்

பரமாகச்சென்று, மீர்நவாபை வரவேற்முன் அலிமுல் லாகான்.

மூன்று வாரமாகச் சண்டை நடப்பது கண்ட நாளு சலித்துப்போய், அலிமுல்லாவை அழைத்து, மறுதினம் அக்கவலை மாளிகையைத் தரைமட்டம் ஆக்கவேண்டும் என்முன். அங்ஙனமே ஏற்பாடுகள் பலவும் செய்தான் அலிமுல்லா. மறுதினம் கவலை மாளிகையின் மீது வெள்ளைக்கொடி பறந்தது. அக்கொடிக்கு அடையாளம் சண்டையை நிறுத்திச் சமரசம் பேசச் சம்மதம் என் பதாம். வெள்ளைக் கொடியைக் கண்டதும், போரை நிறுத்தச் சொன்னுன் நாளு. டெல்ஹௌசியின் கொள் கையில் சம்பந்தமில்லை என்போரும், ஆயுதங்களைக் கீழே வைத்துவிடுவோரும் பத்திரமாக அலகாபாத்துக்கு அனுப்பப்படுவர் என்று விலருக்கு அறிவிக்கப்பட்டது.

அப்போது இரு திறத்தாருக்கும் இடையே ஏற் பட்ட ஒப்பந்தத்தின் சாரம் இது :—“கவலை மாளிகை, அதனுள்ளே இருக்கும் தளவாடங்கள், இதர சாமான் கள், பொக்கிஷம் அனைத்தையும் நாளுவிடம் ஆங்கிலேயர் ஒப்படைக்கவேண்டும். ஆங்கில ஆண், பெண், குழந்தை அடங்கலும் நாளு வண்டிகொடுத்து, ஆற்றங்கரை கொண்டு சேர்க்கவேண்டும். அங்கே அவர்களைப் படகு களில் ஏற்றி, இடைநடுவே அவர்களுக்கு வேண்டிய ஆகாரமும் நாளு தேடிவைக்கவேண்டும்.” இவையே ஒப்பந்தத்தின் சாரம்.

கவலை மாளிகையில் எஞ்சிநின்றோர் சுமார் ஐந்நூறு பேர். அவர்கள் சென்று படகு ஏறவேண்டிய தூரம் சுமார் ஒரு மைல். ஆங்கில மாதரும் குழந்தைகளும் ஏறிச்செல்ல பல்லக்குகள் ஆயத்தமாயின. ஆடவர் ஏறிச்செல்ல யானைகள் கிட்டின. சாமான்களை ஏற்றிச்

செல்ல கட்டை வண்டிகள் தயாராயின. அவர்கள் அனை வரையும் மிக்க மரியாதையுடன் அழைத்துச் சென்றனர் நானாவின் வீரர்.

எல்லாரும் சதிசௌராகட்டம் என்னும் இடத்தைச் சேர்ந்தனர். அங்கே படகுகள் ஆயத்தமாக இருந்தன. அனைவரும் அவற்றில் ஏறிக்கொண்டனர். படகுகள் புறப்படும் சமயம், நான்கு பக்கங்களிலிருந்தும் துப்பாக்கி வேட்டுக்கள் கிளம்பின; ஒரே படுகொலை நிகழலாயிற்று. சகல சௌகரியங்களும் நானாதேடிக் கொடுத்திருக்க, அங்ஙனம் படுகொலை நிகழ்ந்தது ஏன்?

ஆயுதபாணியாக விளங்கிய ஓர் ஆங்கில தளகர்த் தனைக்கண்டு, "ஐயா! உங்கள் ஆயுதங்களை எல்லாம் எங்கள் இறைவன் நானாவிடம் ஒப்படைக்க வேண்டுமே ஒப்பந்தப்படி? உங்கள் ஒவ்வொருவரிடமும் மறைவாக ஆயுதங்கள் இருப்பதேன்? மரியாதையாகக் கொடுத்து விடுங்கள்"? என்று ஒரு சிப்பாய் கேட்டான். "துப்பாக் கிக் கட்டையா வேண்டும்? துப்பாக்கி கட்டையைத் தர மாட்டேன். ஆனால் அதற்குள்ளிருக்கும் தோட்டாக்களை மட்டும் வெடிக்கிளப்பி, உன் உடம்பில் பாய்ச்சுவேன்" என்று எடுப்பாகப் பேசினான் அத்தளகர்த்தன். ஆயுத பாணிகளாக ஆங்கிலேயர் பலரும் விளங்குதல் கண்டு, சிப்பாய்களுக்குச் சந்தேகம் பிறந்துவிட்டது.

இந்நிலையில், காசியிலும் அலகாபாத்திலும், ஆங்கி லேயர் இழைத்த அக்கிரமங்களைக் கண்டு சகியாமல், கான்பூருக்கு ஓடிவந்த மக்களின் நிலையைப் பார்ப்போம். நீலனது கொடுமையால் கணவனையோ, புத்திரனையோ இழந்து புலம்பிவந்த மாதர் பலர்; நீலனால் மரக்கிளையில் தூக்கிலிடப்பட்டுக் குடும்பத் தலைவனைப் பறிகொடுத்து வந்தோர் சிலர்; ஆங்கில சோல்ஜர்களால் கொளுத்தப்

பட்ட கிராமங்களில் மனைவி மக்களை இழந்து மறுகி வந்தோர் சிலர்; வீடுகள் தீப்பற்றிக்கொள்ள, அதனால் தலைமயிரும் ஆடையும் பொசுக்கப்பட்டு அருமைக் குழந்தைகளை இழந்து அலறிவந்தோர் சிலர். இவ்விதம் நூற்றுக்கணக்கான மக்கள் அயல் இடங்களிலிருந்து வந்து, கங்கைக் கரையில் நின்று, ஆங்கிலேயர் அனைவரும் ஆபத்தின்றி அகல்வதை நோக்கினர். அம் மக்களுக்கும் சரி, சிப்பாய்களுக்கும் சரி, ஆத்திரம் பொங்கியது. பழிக்குப்பழி வாங்கவேண்டும் எனும் வைரம் மிகுந்தது.

மிகவே, படகுகள் புறப்படலாம் என்பதற்கு அறிகுறியாக ஊதுகுழலொலி கிளம்பிற்று. இதற்குள் இரண்டோர் ஆங்கிலேயர் தங்கள் கைத் துப்பாக்கியை எடுத்துக் கரையில் குழுமி இருந்த மக்கள்மீது சுட்டனர். ஏற்கெனவே மனம் பொங்கிக் குமுறிக்கொண்டிருந்த மக்கள் கூட்டம் அதுகண்டு, கடுங்கோபம் கொண்டு விட்டது. சிப்பாய்களிலும் சில பலர் கறுவுகொண்டு, தமது துப்பாக்கிகளை நிமிர்த்தனர் அப்படகுகளை நோக்கி. அவ்வளவில் சரமாரியாகக் குண்டுகள் புறப்பட்டு அப் படகுகளைத் தாக்கின.

கங்கையின் எதிர்க்கரையிலும் ஜனக்கும்பல் கூடி நின்று, பீரங்கி கொண்டு படகுகளை அழித்தனர். அவற்றில் நான்கே படகுகள் குண்டுக்குத் தப்பின. இதற் கிடையில், சிப்பாயொருவன் ஓடிச்சென்று, நடந்தன அனைத்தையும் நானாவிடம் நவின்றான். அது கேட்டதும், நானா பதைபதைத்து, "மாதரையும் குழந்தைகளையும் கொல்லுதல் ஒண்ணாது, உடனே சென்று அவர்களைப் பாதுகாத்து இங்கே கொண்டுவருக," என்று கூறினான்.

அச் சிப்பாய் ஆற்றங்கரை சேர்ந்து, நானாவின் ஆணையை அறிவித்ததும், படுகொலை நின்றது. நூற்

றிருபத்தைந்து மாதரும், குழந்தைகளும் பத்திரமாக நானாவின் மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பெற்றனர். சொந்த வீட்டிலும் கிடையாத அளவு வசதிகளும், சலுகைகளும் அவர்களுக்குக் கிட்டின. நானாவின் மாளிகையில் அவர்கள் நிம்மதியாகத் தங்கி இருந்தனர்.

ஆங்கில வீரரும் பிறரும் நகரைவிட்டு அகன்ற உடனே சுயஅரசு அங்கே முளைத்தது. சிறப்பாக அந் நகரை ஆண்டுவந்தான் நானா. அத்துடன் பிற இடங் களிலே சுதந்திர யுத்தம் நன்கு நடைபெறுவதற்கு உரிய திட்டங்களையும் வகுத்து, ஆங்காங்கே தூதுவரை அனுப்பி, அங்கங்கே நடப்பன அனைத்தையும் கவனித்து வரலானான்.

25. நீலனது நரவேட்டை

மீரத் நகரின் எழுச்சியும், டில்லிமாநகரின் ஆவேசமும், கான்பூரின் கர்ஜனையும் கேள்வியுற்ற உடனே, இந்தியாவின் பற்பல பாகங்களிலிருந்தும் துணைப் படை தருவித்தனர் கும்பினியார். அவ்விதம் சென்னையிலிருந்தும் ஒரு சேனை வடக்கு நோக்கி விரைந்தது. அச் சேனையின் தலைவன் **கர்னல்நீல்** எனப்படுவான்.

அவனிடம் சாதிச் செருக்கும், இறுமாப்பான வெறியும் மிகுந்து நின்றன. எங்கும் பயங்கரமே விளைத்து, இந்தியரை ஒழித்துக்கட்ட வேண்டும் என்று அவன் முடிவு செய்தான்; சென்னையிலிருந்து நேரே கல்கத்தா சென்று அங்கிருந்து அலகாபாத், காசி என்னும் நகரங் களை நோக்கிச் சென்றான்.

“ கல்லுளி மங்கன் போனவழி, காடுமேடெல்லாம் தவிடு பொடி ” என்னும் பழமொழி அவனைக் குறித்தே

எழுந்தது போலும். வழியிலே கண்ணில்கண்ட இந்தியரை எல்லாம் மாதர் என்றும் குழந்தைகள் என்றும் பாராமல் அவன் சுட்டுக்கொன்முன் அல்லது சாலை எங்கும் மரக் கிளைகளிலே தொங்க விட்டுத் தூக்குப் போட்டான். அக்கொடுமைகளில் ஒரு சிறிது உரைப்போம்.

அந் நீலனது படையைச் சேர்ந்த ஓர் ஆங்கில வீரன் கூறுவது இது :—"அலகாபாத் கோட்டையைவிட்டு நாங்கள் வெளியே கிளம்பினேம். கண்கண்ட இடத்தில் இந்தியரை வெட்டிச் சாய்ப்பதே எங்கள் வேலை. அது மிகவும் ஆனந்தமயமான வேலையாம். பீரங்கியை ஏற்றிக் கொண்டு கங்கையிலே கப்பலில் புறப்பட்டோம்.

"இங்கும், அங்கும், எங்கும் நாங்கள் பீரங்கிப் பிரயோகம் செய்தோம். வீடுகளெல்லாம் தீப்பற்றிக் கொண்டன. கலகக்காரர் இருந்துள்ள இடம் சேர்ந்ததும், நாங்கள் கப்பலைவிட்டு இறங்கினேம். துப்பாக்கிகொண்டு குண்டு மழை பொழிந்தோம். எண்ணிறந்த இந்தியரைக் கொன்று குவித்தோம். மனம் கொண்ட மட்டும் சுட்டுத் தள்ளிப் பழிவாங்கினேம்.

"கிராமங்களில் தீ மூட்டினேம்; அனல் கொழுந்து ஆகாயத்தை அளாவியது. காற்றும் கூடிக்கொள்ளவே, அத் தீ எங்கும் பரவிற்று. தினந்தினம் இதே வேலையில் முனைந்தோம். தீயிலிருந்து தப்பியோட முயலும் இந்தியரை ஒன்று சுட்டுத் தள்ளுவோம் அல்லது அந் நெருப்பிலேயே தூக்கி யெறிவோம். ஒருவரையும் நாங்கள் உயிரோடுவிட்டதில்லை. சில இடங்களில் விசாரணை நடத்துவோம்.

"தூக்குத் தண்டனை தான் எங்கள் தீர்ப்பாகும். குற்றவாளியின் கழுத்திலே கயிற்றைச் சுருக்கிடுவோம்; அவனை வண்டியின் உச்சியில் ஏற்றி ஒரு மரத்தண்டை

கொண்டுபோவோம்; உடனே மரக்கிளையில் சுருக்குக் கயிற்றை மாட்டிவிட்டு, வண்டியை இழுத்து விடுவோம்; அக் கிளையிலே அவன் ஊசலாடுவான்; கணப்பொழுதில் அவனது உயிர்போய்விடும். அதுகண்டு நாங்கள் கை கொட்டி நகைப்போம்.”

மற்றோர் ஆங்கில வீரன் விளம்புவது:—“எங்கள் அனைவரையும் கோட்டைக்கு வெளியே காவலுக்கு அமர்த்தினான் கர்னல் நீலன். கறுப்பர் அனைவரையும் சுட்டுத்தள்ள வேண்டும் என்பதே எங்களுக்கு இடப்பட்ட கட்டளை. எங்களில் சிலரை அயலே உள்ள கிராமங்களுக்கு அனுப்பினான் அந் நீலன். கிராமங்களை எல்லாம் சுட்டெரித்தலே எங்களது தொழிலாம். முன்னம் கண்ணைப் பறிக்கும் வனப்பு வாய்ந்த கிராமங்களாக இருந்தன எல்லாம், எங்களால் வெறும் குட்டிச் சுவர்கள் ஆயின.

“எங்கள் கையில் சிக்கிய கறுப்பரை எல்லாம் ஆங்காங்குள்ள மரக்கிளைகளில் தூக்குப் போடுவதே எங்களது இனிய பொழுதுபோக்கு ஆயிற்று. எண்ணிறந்த இந்தியரை நாங்கள் தூக்கிலிட்டுக் களிப்பு மிகுந்தோம். பழிவாங்கினோம் என்று பரவசமும் அடைந்தோம். சாலை ஓரங்களிலே மரக்கிளைகள் பழுத்துக் குலுங்குவதுபோல் இந்தியரின் பிணங்கள் தொங்கிக் கொண்டிருக்கும்.”

அவ்விதமெல்லாம் கர்னல் நீலன் அக்கிரமங்கள் புரிகையில், எல்லா இந்தியரும் மாண்டுபோயினர் அல்லது பதுங்கி மறைந்தனர் என்பதில்லை. லியாகத் அலி என்னும் மௌல்வி ஒருவன் தோன்றி, டில்லி பாதுஷாவின் பிரதிநிதியாகி ஆங்கிலேயருடன் அரும் போர் தொடுத்தான். அவர்களிடமிருந்து ஆயிரத்துக்கு மேற்பட்ட காளைமாடு

களைக் கைப்பற்றிக்கொண்டான். கோதுமையோ இதர தானியங்களோ, குடிநீரோ அவர்களுக்குக் கிடைக்கா வண்ணம் உபாயம் புரிந்தான்.

கிராமங்களிலும் ஆண், பெண், குழந்தை, கிழம் ஆகிய அனைவரும் கையில் கிடைத்த ஆயுதங்களுடன் எழுந்து, கிராமங்களைச் சுற்றி அரண்கள் அமைத்து, ஆங்கில வீரருடன் போர் தொடுத்தனர். அந்த மௌல்வி யின் மருமகனொருவன் மக்களுக்குத் தலைமை பூண்டு, ஆங்கில வீரருக்கு அச்சம் ஊட்டினான். துரோகிகளின் உதவிகொண்டு அவனை ஆங்கிலேயர் சிறை செய்தனர்.

பின்கட்டுமுறையாகக்கட்டியிருந்தும், அவ்விளைஞன், தனது மூச்சையடக்கி உடனே அதனை வெளியே வாங்கி, உடம்பைச் சிலிர்க்கவே கட்டுக்களெல்லாம் அறுந்து போயின. அவனைக் காவல் புரிந்து வந்த சிக்கியனது உடைவாளை அவன் பிடுங்கிக்கொண்டு, ஆங்கிலேயரில் பலரை வெட்டி வீழ்த்தினான்.

அதுகண்டு, ஏனைய ஆங்கில வீரர் கும்பலாக வந்து, அவனைக் கட்டிப் பிடித்துக் கீழே தள்ளித் தலையை நசுக்கி, மூளையைச் சிதறச் செய்தனர்.

சிப்பாய்க் கலகம் என்று பெயரிட்டு அரிய சரித்தி ரம் எழுதியுள்ள கே எனும் ஆங்கிலேயன் எழுதுவது யாதெனில்:—

“நம்மவருக்கோ இரத்தவெறி மிஞ்சிவிட்டது. தொண்டு கிழவர், அறுதைப் பெண்கள், பச்சைக் குழந் தைகள் இவர்களையும் நம்மவர் வதைத்தனர். கிராமவாசி களைத் தீயில் போட்டுச் சாம்பல் ஆக்கினர். ஒரொரு சமயம் கிராம மக்களை நம்மவர் சுட்டுக் கொல்வதும் உண்டு. ஒருவரையும் உயிரோடு விடுவதில்லை. கறுப்பரைக்

கொன்று குவித்தோம் என்று நம்மவர் பெருமை யடித்துக் கொண்டதும் உண்டு.

"அடுக்கடுக்காகச் சவங்களைச் சுமந்து செல்லும் வண்டிகள் கணக்கின்றி ஒவ்வொரு நாளும் காலைமுதல் மாலை வரையில் சென்று கொண்டே இருக்கும். இவ்விதம் மூன்று மாதகாலம் ஓயாமல் ஒழியாமல் வண்டிகள் போய் வந்தாலும், முச்சந்தி என்ன, சந்தைகள் என்ன, சாலைகள் என்ன இவற்றில் தொங்கிக் கிடந்த சவங்கள் அகன்ற பாடில்லை."

அலகாபாத், காசி இந்த இடங்களில் அவ்வாறு கொடுமைகள் நடந்த சமயத்தில் ஆங்கிலேயருக்கு ஏவல் வேலை செய்ய எந்த இந்தியனும் கிடைக்கவில்லை; தெருக்களைக் கூட்டவும் ஆட்கள் இல்லை; எங்கே பார்த்தாலும் ஒரே குப்பை கூளம்; தாங்க முடியாத துர்க்கந்தம்; சாக்கடைகளில் எல்லாம் புழுமயம். இந்த நிலைக்கு ஆளாகி ஆங்கிலேயர் தவித்தது கொஞ்ச நஞ்சம் அன்று.

சுதந்திர சரிதம் எழுதிய சாவர்க்கார் சொல்லும் வண்ணம் கர்னல் நீலனே, "கிழம் பழங்களைக் கொன்றான்; நடுத்தர வயதுடையோரைக் கொன்றான்; இளைஞரைக் கொன்றான்; குழந்தைகளைக் கொன்றான்; சிசுக்களைக் கொன்றான்; தாயினிடம் பால் குடித்திருந்த பச்சைக் குழந்தைகளைக் கொன்றான்; தவிர, ஆயிரக் கணக்கான மாதர், மங்கையர், குழந்தைகள் இவர்களைத் தீயிலிட்டும் பொசுக்கினான்; அவர்கள் என்ன பாபம் செய்தார்கள்? தேசாபிமானம் என்னும் பாபமே பண்ணினர். வேறில்லை."

சிறிது காலம் சென்றதும் கான்பூர் நகரை ஆங்கிலேயர் தாக்குகின்றனர். கொடுஞ்சண்டை நடக்கின்றது.

விதியின்றி டில்லியிலிருந்து பக்தகான் விலகியது போலவே, நானு சாகிபும் சுதந்திர வீரரும், அக்கான்பூர் நகரைவிட்டு வெளியேறுகின்றனர். அப்போது கர்னல் நீலன் ஆங்குள்ள ஸாபர் அலி என்னும் குதிரை வீரனைச் சிறைசெய்து, தூக்குதண்டனை விதிக்கிறான்; சேனுபதியான வீலரைச் சுட்டுக் கொன்றதாகவும், குற்றம் சாட்டுகிறான்.

அக்குற்றச்சாட்டு சுத்தப்பொய் என்று ஸாபர் அலி பிரமாணம் செய்தும் அதனை நீலன் நம்பவில்லை. தூக்கிலிடு முன் தோட்டிகளின் கையிலே சவுக்குக் கொடுத்து, ஸாபர் அலியை அடிக்கச் செய்கிறான் அந்நீலன். சாபர் அலியின் உடம்பிலிருந்து இரத்தம் சிந்துகிறது. தரையில் சிந்தின உதிரத்தை நக்கி நக்கிச் சுத்தம் செய்யவேண்டும் என்றும் அந்நீலன் ஆணையிடுகிறான். விதியின்றி ஸாபர் அலி அவ்வாறே செய்ய நேர்ந்தது. தூக்கு மேடையிலிருந்து ஸாபர் சொன்னது :—

“நபிகள் நாயகமே! அடியேன் ஆண்டவன் அடிமை. நானே நிரபராதி. இது சத்தியம். எனக்கு இத்தண்டனை விதித்தவன் நீலன். என் மகன் இப்போது பச்சைப் பாலனுயிருக்கிறான். வயது வந்ததும், நீலனையோ அவன் சந்ததியையோ என் குமாரன் பழி வாங்க வேண்டும். நபிகள் நாயகமே! இதுவே என் பிரார்த்தனை”

அருகே இருந்த சிலர் ஓடிச்சென்று ஸாபர் அலியின் குடும்பத்தாருக்கு அச்செய்தியை உரைத்தனர். நாட்கள் பல பறந்தன. அச்சாபர் அலியின் மைந்தன் மாஜர் அலி என்பான் தனது இளவயதில் ஆங்கிலச் சேனையில் சேர்ந்தான். அப்படையின் தலைவனுன மேஜர் நீலனை (அதாவது கர்னல் நீலனது மைந்தனை)ச் சுட்டு வீழ்த்திப் பழி தீர்த்துக் கொண்டான்.

நர வேட்டையாடிய அந்நீலனுக்கு நம் சென்னைமா நகரிலே மௌண்ட் ரோடில் சிலை ஒன்று அடித்து வைத்தனர் கும்பினியார். வீர இளைஞர் அச்சிலை கண்டு சகிக்கவில்லை. காந்தி மகானது சத்தியாக் கிரக இயக்கம் நடந்துவந்த காலத்திலே, தமிழ் இளைஞர் அச்சிலை அகல வேண்டும் என்று சத்தியாக் கிரகம் செய்தனர்.

அப்போதிருந்த சென்னைத் தலைவர்கள் அதற்கு ஆதரவு தரவில்லை; ஆனால் காந்தி மகான் ஆசி கூறினார். அதன்மேல் இளைஞர் விடாது சத்தியாக்கிரகம் நடத்தி வந்தனர். அச்சமயம் நூறு இளைஞர் சிறை புக நேர்ந்தது. சத்தியாக் கிரகத்துக்கு மகா ஜனங்களின் ஆதரவு இருந் தும், ஆங்கில அதிகார வர்க்கம் ஒரே பிடிவாதமாக இருந்தது. அச்சிலையும் அகலவில்லை.

இளைஞரின் தியாகம் வீண்போகுமோ? 1936-ஆம் ஆண்டு முதன் முதல் காங்கிரஸ் ஆட்சி இத்தேசம் எங்கும் ஏற்பட்டது. அப்போது சென்னையின் முதன் மந்திரியாக இருந்த நமது ஸ்ரீ ஸ்ரீ ஒரு நாள் இரவோடு இரவாக ஒரு வரும் அறியாவண்ணம், அச்சிலையை அப்புறப்படுத்தினார். நகரின் கண் காட்சிச் சாலையிலே அச் சிலையை இன்றும் பார்க்கலாம்.

26. ஜான்ஸி ராணி

நாடு போயின பின், ஜீவனாம்சமாக ஆண்டுதோறும் ஜான்சி ராணிக்கு ஆறுயிரம் பவுன் தருவதாக ஆங்கிலே யர் சொல்லினர். நாய் உணவு தர, நற்சிங்கம் ஏற்குமோ என்பதுபோல், "நாட்டை இழந்து, உங்களிடம் கை நீட்டி வாழ விரும்பேன்" என்று அவ்வீர மாது விளம்பி விட்டனள்! அரசியின் பதில் கண்டு, ஆங்கில அதிகாரி களில் சிலருக்கு ஆத்திரம் மூண்டது. ஆனதுபற்றி "உன்

புருஷன் கங்காதர ராவ் பட்டகடன் அதிகம்! அரசின் வருவாயிலிருந்து அதனைத் தீர்க்க வழியில்லை. ஆதலின் அக்கடனை நீயே கட்டித் தரவேண்டும்" என்று கும்பினி யார் கேட்டனர். குதிரை தூக்கிப் போட்டது மல்லா மல், குழியும் பறிக்கிறதே என்று கனன்றாள் அப்பெண் ணரசி.

அங்ஙனமிருக்க, மக்களின் மனப்புண்ணில் கோலிடு வதேபோல், ஜான்சி நாட்டைக் கட்டியாளும் ஆங்கில அதிகாரிகளுக்கு மாமிச உணவு வேண்டும். ஆதலின் ஆவினங்களையும், காளை மாடுகளையும் அன்னார் பகிரங்க மாகக் கொன்று வந்தனர். அதன் பலனாக நாட்டிலே கால் நடைச் செல்வம் குறைந்தது. உழுதொழிலும் குன்றியது. கங்காதரராவின் மூதாதையர் இந்து ஆலயங் களுக்கு எத்தனையோ மானியங்கள் விட்டிருந்தனர். அவற்றை யெல்லாம் கும்பினியார் கட்டிக் கொண்டார் கள். இதனை அறிந்த மக்கள் தண்டோபாயத்தின் மூலம் கும்பினிக்குப் புத்தி புகட்ட முடிவு செய்தனர்.

ஜான்சி ராணியின் மந்திரியான இலட்சுமணராவும் சேனாதிபதியான காலாகான் என்பானும் வாளாவிருக்க வில்லை. ஜான்சி நகரிலே ஆங்கிலேயருக்குப் பாதுகாவலாக விளங்கிய பட்டாளங்களுடன் அவர்கள் அந்தரங்கமாகப் பேச்சு வார்த்தை நடத்தினர். குறித்த காலத்தில் சிங்க நாதஞ் செய்து கிளம்ப ஏற்ற ஏற்பாடுகளும் செய்து வந்தனர். மந்திரியும் இராணியும் நடத்திய பேச்சு வார்த்தையின் விளைவாக, எந்நேரத்தில் வேண்டுமாயினும் கிளம்பத் தயார் என்றனர் அந்த ஆயிரம் சிப்பாய்களும். கான்பூர் நகரிலே நானாசாகிப் கிளம்பியதும், ஜான்சி கிளம்ப வேண்டும் என்பதே இலட்சுமிபாய் கருத்து.

ஜான்ஸி நகரைச் சுற்றி நாற்புறமும் மதில் சுவர்கள் உண்டு. நகரின் நடுவேயுள்ள கல்கோட்டை மிகவும் உயரமான தாகும். கோட்டைக்கு வெளியே பட்டாள மைதானம் இருந்தது. மைதானத்தின் அருகே ஒரு சிறிய கோட்டை உண்டு. இதில் தான் கும்பினியாரின் பொக்கிஷமும் பீரங்கிகளும் இருந்தன. இதனை நக்ஷத்திரக் கோட்டை என்று அழைப்பர்.

மீரத் நகரின் எழுச்சி கேட்டதும், ஜான்ஸி நாட்டின் பிரதம ஆங்கில அதிகாரியான ஸ்கீன் என்பான் இராணிக்கு ஓர் ஆள் அனுப்பிக் கேட்டான். "மீரத் எழுந்தால் என்ன? வீணே அச்சம் கொள்வது ஏன்?" என்று அத்தேவி பதிலளித்தாள். எனினும், தன் தற்காப்பினுக்குப் படைவேண்டும் என்று அவள் கேட்டனள். "நீயே வேண்டுமளவு படை திரட்டிக் கொள்ளலாம்" என்றான் அந்த அதிகாரி. உடனே அத்தேவி ஓராயிரம் வீரரைச் சேர்த்து, பூமியில் புதைத்து வைத்திருந்த பீரங்கிகளை வெளியே எடுத்துப் பழுது பார்த்தாள்.

இராணியின் உள்ளக் கிடக்கை, நாட்டு மக்களின் மனப்போக்கு இவற்றை அந்த அதிகாரியால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆதலின் ஜான்ஸியிலே சந்தடி ஒன்றும் நேராதென அவன் நிம்மதியாக இருந்தான். சிப்பாய்களின் மனநிலையைக் குறித்தும் அவன் ஐயப்பாடு கொள்ளவில்லை. எனினும் பிள்ளையார் வேஷம்போல் ஆங்கிலேயரின் பங்களாக்களில் திடீரென்று தீப்பிடித்தது. தற்செயலாக நேர்ந்த விபத்தெனவே பலரும் அதனை எண்ணிவிட்டனர். ஆதலின் ஜான்ஸியிலே ஆபத்து ஏதும் நேராதென மேலதிகாரிகளுக்கு அக்கீன் என்பான் தெரிவித்தான்.

1857-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4-ந் தேதி பிறந்தது; மாலையிலே மணி நான்கு இருக்கும். காலாள் பட்டாள மொன்று கம்பீரமாகப் புறப்பட்டது. பீரங்கிப் படையைச் சேர்ந்தோர் "ஹர ஹர மகா தேவ" என்று கோஷித்தனர். அக் காலாளர் சென்று, நக்ஷத்திரக் கோட்டையில் புகுந்து கொக்கரித்தனர். உடனே பீரங்கி வீரரும் கிளம்பினர். காலாள் படை கிளம்பிய பின்னர், குதிரைப் படையின் பிரதம தலைவனை ஆங்கில தளகர்த்தன் பட்டாள மைதானத்துக்கு ஓடினன். குதிரை வீரருடன் பேசினன்; அவர்களின் விசுவாசங் கண்டு அந்த ஆங்கிலதளகர்த்தன் சொக்கிப் போனன்.

அந் நிலையில் முகம்மதியப் பெரியா ரொருவர் முஸ்லீம் மக்களை தொழுகைக்கு அழைத்தார். அந்த அழைப்பே ஜான்ஸியில் போர் முரசு கொட்டுவதற்கு அடையாளம்! அவ்வளவில் எல்லாப் படைகளும் சேர்ந்து கிளம்பின! துப்பாக்கியும் பட்டாக்கத்தியும் தாங்கிய வீரர் நாற்றிசையும் சென்றனர். அதுகண்டு நடுக்கங் கொண்ட ஆங்கிலேயர் அனைவரும், கல் கோட்டைக்குள் சென்று பதுங்கிக் கொண்டனர். இதற்குள் அரசியின் படைகளும் எழுந்தன. கல் கோட்டையின் மீது ராணியின் பீரங்கிகள் குண்டு மழை பொழியத் தலைப்பட்டன.

இரண்டு நாள் கோட்டைக்குள் அடைபட்டுக் கிடந்த பின்பு, ஆங்கிலேயர் அனைவரும் சரண் அடைந்தனர். பின்பே பீரங்கிப் பிரயோகம் நின்றது. சேனைபதியான காலாகான் என்பான் ஆங்கில அதிகாரிகள் அனைவரையும் விலங்கிட்டு வீதி வழியே அழைத்துச் சென்றான் எல்லாருங்காண. அன்னோர் ஒரு பூங்கா குறுகியதும் அவர்களை என்ன செய்வது? என்று சிப்பாய்கள் ராணியைக் கேட்

டனர். "சேனைத் தலைவனைக் கேளுங்கள்" என்றாள் ராணி.

அரசியின் நாட்டை அக்கிரமமாகக் கட்டிக்கொண்ட அங்கிலேயரைத் தலை வாங்க வேண்டும் என்றான் காலாகான். அவர்களின் மாதரும் குழந்தைகளும் உளரே என்றான் ஒருவன். "அபகரித்துக் கொண்ட அரசில் தானே அம்மாதரும் குழந்தைகளும் இத்தனை நாள் சுகமே உண்டு வந்தனர்" என்றான் இன்னொருவன். அரசி அதனை உணர்ந்து, "மாதரையும் குழந்தைகளையும் கொன்று குவிக்க வேண்டாம். நமது மாதரையும் குழந்தைகளையும் அன்னார் கொன்று போட்டாலும், நாம் கருணையே கொண்டு நிற்போம்" என்றாள். ஆதலின் மாதரும் குழந்தைகளும் உயிர் தப்பினர். மற்றையோர் வாள் முனையில் உயிரிழக்க நேர்ந்தது.

ஜான்சியை மீட்டதுடன் லட்சுமிபாய் நிற்கவில்லை. நானாசாகிபுக்கும் பகதூர்ஷாவுக்கும் உதவி புரியும் வகையை ஆராயலானாள்; பதினாறு ஆயிரம் வீரரைச் சேர்த்தாள்; கோட்டைகளைப் பழுது பார்த்தாள்; மூவாண்டாகச் சீர் குலைந்து கிடந்த அரசைப் பண்படுத்தினாள்; தகுதியும் திறமையும், வீரமும் தீரமும் வாய்ந்த அப் பெண்மணியைப் போல் எங்கும் காண முடியாது என்று கே எனும் ஆங்கில சரித்திர ஆசிரியன் புகழ்ந்து பேசியுள்ளான். அவளது நுண்ணறிவு கண்டு, பண்பட்ட அமைச்சரும் பரவசங் கொண்டனர். இனிய சொல்லும் ஈகைச் செயலும் நல்வினை நாட்டமும் விழுமிய வினையும் வெற்றி நினைப்பும் அத்தேவியின் பிறவிக் குணங்களாம்.

அத்தேவியை வஞ்சனையால் மாய்க்க சூழ்ச்சி ஒன்று நடந்தது. அவளது தளகர்த்தரில் ஒருவனான நதீகான் என்பவன் ஆங்கில மாதரிடமிருந்து பெரும் பணம்

பெற்றுச் சமயம் பார்த்து நின்றான் சதிச்செயல் புரிய! அரண்மனைக்குள்ளே போய்வர அவனுக்கு அனுமதி உண்டு. ஒரு நாள் பூஜையிலே அத்தேவி அமர்ந்திருக்கும் சமயம், அவ்வேளை வாளையுருவி அவளை வெட்டிச் சாய்க்க விரும்பினான் நதிகான். வாளை உருவியதுதான் தாமதம், அவன் உடம்பு வெலவெலத்தது; கையோ நடுங்கியது; உடனே உடைவாள் கீழே விழுந்து விட்டது. உடைவாள் கீழே விழுவதும், தேவியின் பூஜை முடிவதும் ஒன்றாயின. உடனே திரும்பிப் பார்த்தாள் தேவி இலட்சுமிபாய்.

நதிகானே அடியற்ற மரம்போல் கீழே வீழ்ந்து, அவள் பாதத்தைப் பற்றிக் கிடந்து மன்னிப்பு வேண்டினான். இதற்குள் அரண்மனைச் சேவகர் ஓடிவந்து, அவனை இரு துண்டாக்க எண்ணினர். அவர்களைக் கண்டதும் கையமர்த்தினாள் அத்தேவி! நதிகானை எழுந்திருக்கச் சொன்னாள். காசுக்கு ஆசைப்பட்டுக் கொலை புரிய வந்தனையே, என்ன சிறுமதி உனக்கு என்று போதம் புகட்டினாள். நதிகான் அறிவு வரப்பெற்று, அரசியை நோக்கி,

“என்தாயே! நினது உயிரைவாங்கவே வந்தேன். நானே இப்போது உன்னிடம் உயிர்ப்பிச்சை பெற்றேன்! ஓரளவு காசினுக்காக என்னை விற்றேன்: இழிவே கொண்டேன்; தேசத்தையும் சமூகத்தையும் மறந்தேன்; இத் தீவினைக்கு யாது பரிகாரம்? நானே என்னை மாய்த்துக் கொள்வேன்” என்று கூறி உடைவாளை எடுத்தான்.

அதுகண்ட அரசி, “பேதை மதி பறந்து விட்டதனால் உனக்கு மன்னிப்பு அளித்தேன். இனிப் பெருமையுடன் வாழ்வாயாக” என்று கூறி யனுப்பினாள். அரசியின் கருணை கண்டு நதிகான் வாயார வாழ்த்தி, அன்று

முதல் உண்மை ஊழியனைத் துலங்கினன். இலட்சுமி பாயும் பலரும் புகழ, ஆட்சியைச் செவ்வனே நடத்தி வரலானள். அதுகண்டு நாட்டாரனைவரும் அவளைப் புகழ்ந்து வாழ்த்தினர். அங்ஙனமிருக்க,

படுகளத்தே பறிபோன பிரதேசங்களை மறுபடியும் கைப்பற்ற, அக் கும்பினியார் பகீரதப் பிரத்தனஞ் செய்தனர். அப்போது அவர்களுக்கு குவாலியர் சமஸ்தான அதிபன் சிந்தியாவும், சீக்கிய வீரரும், ஹைதரா பாத்—போபால் ஆகிய சமஸ்தானங்களின் தலைவர்களும் உதவியராக இருந்தனர். ஜான்சிநாட்டின் மீது கும்பினி யார் பாய்ந்து, பத்து மாதங்கள் அதனை முற்றுகை இட்டு நின்றும் காரியம் கைகூடவில்லை. அந்த யுத்தத்தில் இலட்சுமிபாயே முன்னணியில் நின்ற வீரர்களை ஊக்கு வித்தாள்.

ஜான்சியின் முரசங்கள் ஒலிக்கின்றன; பீரங்கிகள் குமறுகின்றன; துப்பாக்கிகள் சுடுகின்றன; கோட்டை யைத் தாக்கி நிற்கும் ஆங்கிலேயர்கள், சூறுவளிக் காற்றில் காய்கள் உதிர்வன போல் குண்டு பட்டுக் குப்புறச் சாய்கிறார்கள். இதற்குள் நாந்தியாதோபி எனும் மகா ராஷ்டிர வீரன் இருபதாயிரம் படைஞருடன் ஜான்சியை நெருங்குகிறன். பின்பக்க மிருந்து, ஆங்கிலேயரைத் தாக்கி, ஜான்சி முற்றுகையை நீக்குவதே அவன் நோக்கம். பேஷ்வா நானசாகிபின் ஆணையும் அஃதே.

தாந்தியாவின் வருகையைக் கேட்டதும், ஆங்கில தளகர்த்தன் திகைத்துப் போனன்; தாந்தியாவின் தாக்குதலை கேட்டதுமே உள்ளம் உடைந்து விட்டான்; தோல்வி கொண்டு வாடிய முகத்துடன் வந்த வழிநோக்க வேணும் வகை இருக்குமோ என்றும் ஏக்கங் கொள்ள லானன். முன்புறமிருந்து ஜான்சி வீரர் குண்டு பொழி

கின்றனர்; பின்புறமிருந்தோ தாந்தியா தனிச்சமர் செய்கிறன் எண்ணிக்கையில் பெருத்து நின்றும் ஆங்கிலச் சேனை அலறுகிறது. ஒரு முகூர்த்த நேரம் போனல் ஜான்சி ராணி வாகை மாலை சூட வேண்டும்! தாந்தியாவும் வந்த காரியம் கைகூடியதென்று களிப்புக் கொள்ள வேண்டும். ஆனல் கைக்கு எட்டியது வாய்க்கு எட்ட வில்லை

1858-ஆம ஆண்டு ஏப்ரல் மாதம் பிறந்தது. தாந்தியாவின் சேனையிலே துரோகம் விளைந்தது. ஆங்கிலேயரின் வஞ்சனையும், சிந்தியாவின் உடந்தையுமே அதற்குக் காரணம். தாந்தியாவின் சேனை திக்பிரமை கொண்டு சிதறத் தொடங்கியது. தாந்தியா தோபியின் படை சிதறியது கண்டு அந்த ராணி சிறிதும் சிந்தாகுலம் கொள்ளவில்லை; மாருக முன்னிலும் முனைந்து நின்று சமர் செய்யலானுள்.

ஜான்சிக் கோட்டையிலிருந்து போர் முரசங்கள் முழங்கா நின்றன. பெரும் பீரங்கிகள் பெருமிதமாக அலறின. வெற்றி இன்றேல் வீரச்சாவு! எனும் வாசகங்கள் வானைப் பிளந்தன. ஏப்ரல் மாதம் 3-ந் தேதி சூரியன் உதித்தான் எங்கும் கிரணங்களை வீசிக்கொண்டு. அங்ஙனமே ஜான்சிக் கோட்டையை நாற்புறமும் சூழ்ந்து கொண்டனர் ஆங்கிலேயர். தனக்குத் துணை தானே என நிற்கிருள் அத்தேவி! புற்றீசல் போல் மதில்சுவர்களை ஆங்கிலேயர் மொய்த்துக்கொண்டனர்.

ஜான்சிராணி கோட்டையின் மேலேறி வீரரை உற்சாகப்படுத்தினுள். ஜான்சி வீரரும் கனகடுமையுடன் போர்புரிந்தனர். சண்டையின் காட்சியைக் கண்ணுல் கண்ட ஆங்கிலேயர் ஒருவர் எழுதி இருப்பது இது:—

"ஜான்சிக் கோட்டையின் வாயிலை நம் (ஆங்கில) துருப்புகள் நோக்கியதுதான் தாமதம். கோட்டையிலிருந்து ஊதுகுழல் சத்தம் கேட்டது. உடனே நம் வீரர்மீது ஒரே நெருப்பு மழைதான்! கோட்டையின் நாலு பாகங்களிலிருந்தும் நம்மீது ஒன்றின்பின் ஒன்றாக எண்ணிறந்த குண்டுகள் வந்து விழலாயின. உண்மையிலேயே ஒரு நாழிகை நேரம் நம் வீரரின் தலைக்குமேலே ஒரே நெருப்புப் பந்தல்! அப்பந்தலைத் துளைத்துக் கொண்டு எத்தனை துப்பாக்கி ரவைகள், எத்தனை புதை வேட்டுக்கள், எத்தனை எரிகொள்ளிகள், எத்தனை கொள்ளிப் பாணங்கள், எவ்வளவு உருக்கு ஈய நீர்கள்! அப்பப்பா! சொல்லி முடியாது!

"நம்மைப் பிடி சாம்பலாக்குவதே ஜான்சி வீரரின் கருத்து. அந்நெருப்பு மழை சற்றேறு தணிந்ததோ? இல்லவே இல்லை! பீரங்கி முழக்கமும், துப்பாக்கி வேட்டும், குண்டு வெடிப்பும், வெடி மருந்தும், எரிச்சலும் பேரந்தரமன்று! இம்மட்டோ? கல்பாறைகள் என்ன, மரக்கிளைகள் என்ன, மண்மூட்டைகள் என்ன, மணல்கூடைகள் என்ன, ஆகிய இவைகளும் ஏராளமாக வந்து வீழ்ந்தன நம்மவர் தலைமீது! பஞ்சபூதங்களுமே நம்மீது பதைத்து எழுந்தனவோ என்றே நம்மவர் நினைக்க நேர்ந்தது!"

கோட்டையின் பிரதம வாசலிலே பிரமாதமான தற்காப்பு ஏற்பாடுகள் இருந்தன. தெற்குக் கோட்டை வாசலிலே பலமான பாதுகாப்பு இருந்தும் என்ன! தெற்கு வாசலை ஆங்கிலேயர் பிடித்துக்கொண்டனர். அதன்மூலம் கோட்டையினுள்ளே அவர்கள் கும்பல் கும்பலாகப் புகத் தலைப்பட்டனர். பின்னர், நகரிலே ஒவ்வொரு பாகமாகக் கைக்கொண்டனர். இதற்கும்

எத்தனையோ வீரர்களை அவர்கள் பலிகொடுக்க நேர்ந்தது.

முடிவிலே ராணியின் மாளிகையைக் கும்பினியார் கைப்பற்றிக்கொண்டனர். கொண்டதும், கஜானாவைக் கொள்ளை யாடினர்; காவலாளரைக் கொலை புரிந்தனர்; அழகிய கட்டிடங்களைப் பெயர்த்துத் தள்ளினர். கோட்டைமீதிருந்த வண்ணம் நகரை நோக்கினாள் ராணி. உடனே அவள் கண்களில் கனல்கடவுள் ஜொலிக்கலானான்; கோட்டை கொத்தளங்களின் மீது எஞ்சி நின்ற வீரருடன் கீழே இறங்கினாள்: தெற்கு வாசல் வழியே மேலும் மேலும் ஆங்கிலேயர் புகுதல்கண்டு, பாய் புலிபோல் அவ்விடம் நோக்கிப் பாய்ந்தாள்.

அவ்வளவில் வெள்ளையரின் கால்கள் முறிந்தன; கைகள் வெட்டுண்டு வீழ்ந்தன: தலைகள் கீழே உருண்டன; முண்டங்கள் கூத்தாடின. அன்னாருக்குத் துணையாக வந்த கறுப்பு சிப்பாய்களோ கதிகலங்கி உயிரிழந்தனர். ராணியின் கோப வெறியைத் தாங்காத ஆங்கிலேயரோ, சந்திலும் பொந்திலும் சாலகத்திலும் மறைந்து கொண்டனர். மகாகாளியே மிகு கோபத்துடன் வந்துவிட்டனளோ என்று பேசாதார் கிடையாது.

இதற்குள் ஏனைய ஆங்கில வீரர் அந்நகரைப் பாழ்படுத்தினர். கையில் சிக்கிய அனைவரையும்—ஐந்து வயதுக்குழந்தை முதல் எண்பது வயதுக்கிழவர் வரையில் கொன்று குவித்தனர். நகரிலே எங்கும் தீவைத்தனர். காயமுண்டோரின் துடிப்பும், சாவோரின் ஓலமும் எங்கும் செவிடுபட்டன. பாங்கான பட்டணம் பெரும் பாழாகத் துலங்கியது.

நகரை மறுமுறை நோக்கினாள் ராணி; நகரின்மீது அடிமைக்கொடி பறந்துகொண்டிருந்தது; சுதந்திரக்

கொடியோ தலைசாய்ந்துவிட்டது. என்ன சொன்னாள் ராணி. "உடலிலே ஒரு சொட்டு இரத்தம் இருக்கும் வரையில் உறுத்துப் போர்புரிவேன்; ஒன்னலரை மாய்ப் பேன்; பறங்கியரைச் சாய்ப்பேன்; ஒன்று நான் ஆண்மை யுடன் அரியாசனத்தில் அமர வேண்டும், இன்றேல் வீரச்சாவெய்தி இடுகாட்டில் எறியப்பட வேண்டும்" என்றே வஞ்சினம் பேசினாள்.

பெரும்படை திரட்டிவந்து மீண்டும் போர்புரிய வேண்டும் என்று எண்ணியவளாய், நகரைத் துறந்து ஆயிரம் வீரருடன் பயணமானாள். ஜான்சி நகரின் எல்லை யைத் தாண்டும்வரையில் துணைவர் ஆயிரவரும வந்தனர் பின்னர், பதின்மரின் துணையுடன் புறப்பட்டாள் அப் பெண்பால். எல்லையைத் தாண்டிய பின்னரே ராணி நழுவி விட்டாள் என்று ஆங்கிலேயருக்குத் தெரியவந்தது உடனே அவளைக்கொன்று அல்லது வென்று வருவதாக ஓர் ஆங்கில தளகர்த்தன் புறப்பட்டான் ஐம்பது வீரருடன்.

அவ்விதமே சிறிதுதூரம் சென்றதும் மற்றொரு படைத்தலைவன் புறப்பட்டான் ஐம்பதின்மருடன்; மறுபடி வேறொருவன் அவ்வாறே பயணமானான்; அப் பால் இன்னொருவன் எழுந்தான். அங்ஙனம் நான்கு தளகர்த்தர் பல வீரருடன் அவளைப் பின்தொடர்கின்ற னர் ஒருவர் பின்னொருவராக. அருணன் உதிக்குஞ்சமயம், ராணியின் பின்னே குதிரையின் காலடிச்சத்தம்கேட்கவே திரும்பிப்பார்த்தாள் அத்தேவி.

ஆங்கில தளகர்த்தனொருவன், அவனுடன் ஐம்பது பரிவீரர். ஆனால் ராணியிடமோ பதின்மரே உளர்; முது கிலே பச்சைப்பாலகன் தாமோதரன். பல சொல்லி என்ன? தளகர்த்தனைக் கண்ட ராணி வாளை உருவி

வேகமாக வீசினாள், அவ்வளவில் ஆங்கில தளகர்த்தன் "ஐயகோ" என்றலறிக்கொண்டு கீழே விழுந்தான். அவ் விதமே, பரிவீரர் பதின்மரும் அந்த ஐம்பதின்மரை நமனுலகுக்கு அனுப்பினர்.

ஒருமைல் தூரம்தான் அவள் சென்றிருப்பாள். அதற்குள் மற்றோர் ஆங்கில தளகர்த்தன் அவளை நெருங்கினான். முன்னம் உருவிய வாளை அவள் உறையில் இடவுமில்லை, இரத்தக் கறையைத் துடைக்கவுமில்லை. அவ்வாளை எடுத்து வீசினாள் அத்தேவி. அத்தளகர்த்தனும தலையறுபட்டுத் தரணியில் சாய்ந்தான். அவனுடன் வந்த வீரரும் தம் தலைவனைப் பின்பற்றி மாய்ந்தனர். சிறிது தூரம் சென்றதும், மூன்றாவது ஆங்கில தளகர்த்தன் அவளை நெருங்கினான். ராணியின் வாளாயுதம் அவனது உயிரைப் பருகிப் பரிமளித்தது. அப்பால் நாலாவது தளகர்த்தன் அவளை அணுகி, மற்றைய மூவரின் அடிச்சுவட்டைப் பின்பற்றினான்.

அன்று பகல் பன்னிரெண்டுமணி, கல்பி எனும் நாடு சேர்ந்தாள் அச்சீமாட்டி. அங்கே நானா சாகிப் அவளை வரவேற்றான். பரியை விட்டு அவள் கீழே இறங்கினாள். இனி அரசிக்கு ஆபத்தில்லையெனக் கண்டதும் அக்குதிரை கீழேவீழ்ந்து, உயிர்துறந்தது அவள் காலடியில். ஒரே மூச்சில் நூற்றிருபத்தேழு மைல் தூரம் சுமந்து வந்த அசுவத்தின் மகிமை அறிந்து, அதனை ஆடம்பரமாக அடக்கஞ் செய்தாள் அத்தேவி. வழியில் நடந்த விவரம் அனைத்தையும் நானா சாகிப் கேட்க, அவ்வீரமங்கை லட்சுமிபாய் உற்றது முற்றும் உரைத்தாள்.

பின்பு, இருவரும் குவாலியர் சமஸ்தானம் சென்று, ஆங்கிருந்த சிப்பாய்களின் துணைகொண்டு, போரை நடத்தினர். ஆங்கிலேயரின் சேனை திரண்டுவந்தது.

குவாலியர் கோட்டையை நெடுநாள் முற்றுகை இட்டு நின்றது. அச்சண்டையிலே இராணி லட்சுமிபாய் வீரசுவர்க்கம் புகுந்தாள். நானாவோ படை தேடிவரப் பயணமானான்.

அப்பால் நானாவைப் பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை. ராணியும் நானாவும் அவ்விதம் மறைந்த பின்னர், வெற்றி பெற்றுவிட்டதாக ஆங்கிலேயர் அகங்களித்தனர்.

27. அயோத்தியில் அமளி

டில்லிமா நகரம் வீழ்ந்ததும், ஏனைய இடங்களிலே சுதந்திர வீரர் சோர்ந்து மறைந்து போவர் என்று, ஆங்கிலேயர் மனப்பால் குடித்தனர். நானாவின் வசப்பட்ட கான்பூர் நகரை மீட்க அன்னார் அரும்பாடுபட நேர்ந்தது; மாதக்கணக்கில் சண்டை போடவும் வேண்டி இருந்தது. அவ்விதம் கான்பூர் நகரை மீட்டும், அடுத்தடுத்து நானாவின் வீரர் அதனைக் கைப்பற்றிக் கொண்டனர். முடிவிலே ஒருவாறு அந்நகரம் வீழ்ந்தது.

மீரத் எழுச்சியும், டில்லியின் ஆவேசமும் கேட்டவுடனே, அயோத்திநாடு முழுவதும் பொங்கி எழுந்தது. ஆங்காங்கு இருந்த ஆங்கில வீரரையும் அதிகாரிகளையும் சுதந்திர வீரர் வெருட்டி ஓட்டி விட்டனர். சில நாளைக்குள் அயோத்தியிலே ஆங்கிலேயரின் காற்று அடியோடு வீசாது போயிற்று. ஆனாலும் ஆங்கிலச்சேனை திரண்டு வந்து, அயோத்தியை மீட்க முயலும் என்று மக்களுக்குத் தெரியும். ஆனதுபற்றி, அச்சேனையை எதிர்த்து அடிப்பதற்குரிய ஏற்பாடுகளெல்லாம் திறம்பட நடந்து வந்தன.

அந்நிலையில் அயோத்தியை மீட்க, ஆங்கிலச்சேனை நாலு பக்கங்களிலிருந்தும் கிளம்பி வரலாயிற்று. சீக்கி

யரும், சிந்தியாவும் துணைபுரிந்தது ஒரு புறம் இருக்க, நேபாளநாட்டின் தளபதியும் மூவாயிரம் கூர்க்கத்துருப்புகளுடன் துணைபுரியவந்தான். ஒவ்வொரு சிறிய கிராமத்தையும் சரி, நகரத்தையும் சரி, கடுஞ்சண்டைபோட்டு, மக்களை அழித்தபின்பே ஆங்கிலேயர் கைப்பற்ற முடிந்தது. தோட்டிமுதல் தொண்டைமான் வரையில் அனைவரும் சுதந்திர வீரராக விளங்கியது கண்டு, ஆங்கிலேயர் பிரமித்தனர்.

அயோத்தியின் முக்கிய நகரம் இலட்சுமணபுரி எனப்படும். பிறநகரங்களை மீட்டாலும் இலட்சுமணபுரியை மீட்டால் தான் அயோத்தியை மீட்டது போலாகும். ஆதலின் ஆங்கில சேனாதிபதியான ஸர். காலின் என்பான் நேரில் வந்து, யுத்தத்தை நடத்தலானான். அந்நகரமக்களிலே எண்பதாயிரம்பேர் ஆயுதபாணிகளாக நின்று, ஆங்கிலச்சேனையை எதிர்த்துப் போர்புரிந்தனர். அதுகண்டு, அச்சேனாதிபதி சிந்தை திரிந்தான்; முடிவு யாதாகுமோ? என்றும் அஞ்சினான்.

இலட்சுமணபுரிச் சண்டையின் கோரமும் கொடுமையும் சொல்லி முடியா! ஒருபக்கம் சுதந்திர ஆவேசமும், மற்றொரு பக்கம் ஆங்கிலேயரின் மண்ணாசையும் மண்டிமாறுபட்டு நின்றன. உடலிலே உயிர் இருந்த வரையில், சுதந்திரவீரர் சிங்க நாதத்துடன் சமர்செய்தனர். பழி வாங்கும் பான்மைமிகுந்து, ஆங்கில வீரர் போர் புரிந்தனர் மூர்க்கத்துடன். அயோத்தி நவாபின் தாயாரோ சுதந்திர வீரர் அனைவருக்கும் உற்சாகம் ஊட்டி உறுத்து நின்றது கண்டு, ஆங்கிலேயரில் பலரும் வியக்க நேர்ந்தது.

பல சொல்லி என்ன? அடிக்கு அடி அனேகரைப் பறிகொடுத்தும், பகைவரைப் பலி கொண்டுமே இலட்சுமணபுரி நகரை ஆங்கிலேயர் சிறிது சிறிதாக மீட்டனர்.

நகரமாந்தரின் சுதந்திரதாகம் அறிந்து, ஆங்கில வீரர் அதிசயிக்காமல் ஆத்திரமே மிகுந்து, வஞ்சம் தீர்க்க முற்பட்டனர். ஆடவர், மாதர், குழந்தைகள், குஞ்சுகள், கிழங்கள் நோயாளிகள் என்று அவ்வீரர் பார்க்கவில்லை. வெறியே மிகுந்து எல்லாரையும் சிவித்தள்ளி அல்லது சுட்டுத்தள்ளி வந்தனர். இதற்கு ஓர் உதாரணம் தருவோம்.

இலண்டன் டைம்ஸ் பத்திரிகையின் பிரதிநிதியாக இங்கே அப்போது வந்திருந்த ரஸ்ஸல் என்பான் கூறும் வண்ணம் :—“இட்சுமணபுரி அரண்மனையிலே ஆங்கில வீரர் புகுந்து, கொலை விழாக்கொண்டனர். அது கண்டு அஞ்சிய ஒருபையன்—ஏழெட்டு வயதே உள்ளவன்—தனது பாட்டனை இட்டுக்கொண்டு தெருவிலே ஓடிவந்தான். அங்கே ஓர் ஆங்கில அதிகாரியைக் கண்டதும், அக்கிழவன் தரையில் விழுந்து கும்பிட்டு, “எங்கள் இருவரையும் சுட்டுக்கொல்லாது உயிருடன் விட வேண்டும்” என்று வேண்டிக் கொண்டான்.

“அதற்கு அந்த அதிகாரி யாது செய்தான்? தனது கைத்துப்பாக்கியை எடுத்து அக்கிழவனது நெற்றியில் சுட்டு வீழ்த்தினான்; பின்பு அப்பையனையும் சுடத் தனது கைத்துப்பாக்கியின் விசையை அழுத்தினான். ஒருமுறை, இருமுறை, மும்முறை குறிதவறி விட்டது. ஒரு பாவமும் அறியாத பையன் தப்பினானோ? வீரம் மிகுந்த அவ்வதிகாரி நாலாவது முறை சுடவே அப்பையன் மாண்டுபோக, அவனது உதிரம் அந்த அதிகாரியின் காலணியை ஒடியது. அயலிலே இருந்த வேறு ஆங்கிலேயரும் அதனைப்பார்த்தும் வாளாநின்றனர்.”

சார்லஸ் பால் என்னும் ஆங்கில ஆசிரியன் வரைந்துள்ள வண்ணம் :—“வெற்றிக்களிப்புடன் ஆங்கில

சேனாதிபதி அந்த இலட்சுமணபுரி நகருக்குள்ளே நுழைந்தான். உடனே, கண்ணில் கண்ட இந்தியரை எல்லாம் ஆங்கிலேயர் படுகொலைபுரியாநின்றனர். அதுகேட்டதும் சுதந்திர வீரரிலே சிலர், விரைந்து சென்று, அயோத்தி நவாபின் தாயாரை அடைந்து ஏட்டிக்குப் போட்டி செய்யவேண்டும். சிறையில் கிடக்கும் ஆங்கிலேயரை எங்களிடம் ஒப்படை'' என்று கர்ஜனைசெய்தனர்.

"நவாபின் தாயார் அதற்கு இணங்கினள். ஆறு அல்லது ஏழு ஆங்கில தளகர்த்தரை அச்சுதந்திர வீரர் கொன்று போட்டனர். பின்பு சிறையில் கிடக்கும் ஆங்கில மாதரையும், குழந்தைகளையும் எங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று அவ்வீரர் மன்றாடினர். அவளோ "அது அடாது" என்று கூறி, சிறையில் கிடந்த ஆங்கில மாதரையும் குழந்தைகளையும் தன் அந்தப்புரத்துக்கு அன்புடன் அழைத்துச் சென்று, அங்கே பத்திரமாக வைத்துக்காப்பாற்றினாள்."

ரஸ்ஸல் என்பான் மீண்டும் வரைந்து வைத்திருக்கும் வண்ணம்: இலட்சுமணபுரி நகருக்குள்ளே சுதந்திர சிப்பாய்களில் சிலர் உயிருடன் இருந்தனர். அவர்களை ஆங்கில வீரர் கண்டதும், சிறிதும் கருணையில்லாமல் கொன்று போட்டனர். அச்சிப்பாய்களில் ஒருவனை அவ்வீரர் வெளியே இழுத்து வந்தனர். காலைப்பிடித்துப் பின்பு, அவனைக் கீழேதள்ளி அவனது முகம், உடம்பு எங்கும் ஈட்டிகொண்டு குத்திக்குத்திக் களித்தனர்.

"இதற்கு இடையில், அவ்வீரரில் சிலர், அங்கே கிடந்த தழை, குச்சி இவற்றைப் பொறுக்கி ஒரு சிதை அடுக்கி அதன் மீது அவனைப்போட்டுத் தீ மூட்டினர். உயிருடன் அவனை வறுத்தனர் என்றே சொல்லவேண்டும். அச்சிப்பாயோ பாதி வெந்ததும் வேகாமலும் இருக்கும்

நிலையில், தனது உடம்பிலிருந்து கரிந்த சதை தொங்க எழுந்து ஓடினன். அவனை அவர்கள் பிடித்து வந்து மீண்டும் தீயிலே போட்டுப் பொசுக்கினர். அவன் எழுந்திராவண்ணம் ஈட்டியைக்காட்டியும் பயமூட்டி நின்றனர். அவன் வெந்து சாம்பலான பின்பே, அவர்கள் அவ்விடம் விட்டு அகன்றனர்.

டில்லி, கான்பூர், இலட்சுமணபுரி ஆகிய முக்கிய நகரங்கள் வீழ்ந்தும், சுதந்திர யுத்தம நின்றபாடில்லை. மேலும மேலும வலுத்தது என்றே சொல்லவேண்டும். சுதந்திர யுக்தத்தில் சேராது விலகிக்கொண்டால் உயிர் பிழைக்கும், சொத்து சுதந்திரமும் நிலைக்கும என்று கவனர்னர் ஜெனரலான லார்டு கானிங் என்பான் கருணை விளம்பரமொன்று விடுத்து, அதனை எங்கும பறைசாற்றியும என்ன ?

மக்களையும், சிப்பாய்களையும் சுதந்திர ஆவேசம் விடவில்லை. சிற்றரசர், குட்டி அரசர், பட்டவர்த்தனர், மகுடவர்த்தனர், மண்டலீசர், பணக்காரர், ஏழைகள், கிழவர்கள், இளைஞர்கள் ஆகிய பலரும் ஒன்று சுதந்திரம், அன்றேல் வீரச்சாவு என்றே துணிந்து நின்றனர். சீக்கிய அரசரும், இராஜபுதன வேந்தரும் சிந்தியா என்னும் மன்னனும் ஹைதராபாத் நிஜாமும், போபால் சமஸ்தானத் தலைவனும் நேபாள வேந்தனும்ஆங்கிலேயருக்குத் துணை புரிகையில், எடுத்தகாரியம் ஈடேறாது என்று அச்சுதந்திர அபிமானிகளுக்குத் தெரியும்.

ஆனாலும், அந்நிய ஆங்கிலேயருக்குக் கைகட்டி வாழ்வதா ? சுயராஜ்ய வாழ்வே கொள்ளுதல் வேண்டும் என்னும் துடிப்பும் கொதிப்பும் அச்சுதந்திர வீரரிடமிருந்து ஒரு சிறிதும் அகலவில்லை. அவர்கள் ஆங்காங்கு கூட்டம் கூட்டமாகச் சேர்ந்து ஆங்கில வீரரை எதிர்த்து

அழிப்பார்கள், அல்லது அம்முயற்சியில் முனைந்துமரித்து மடிவார்கள். அதுகேட்டு லார்டு கானிங் என்பான் பயம்மிகுந்து பதைபதைத்தான்; இது வெறும் சிப்பாய்க் கலகம் அன்று, மற்று ஜனக்கலகமே என்று தனது இனத்தாருக்கும் இங்கிலாந்துக்கும் அறிவுறுத்தினன்.

இந்திய ஜனக்கலகம் என்று தலைப்பெயரிட்டு ஒரு நூல் எழுதிய டப் எனும் ஆங்கிலேயன் சாற்றும்வண்ணம், "ஓரிடத்தில் சுதந்திர சிப்பாய்களை நாம் சந்தித்து, முறியடித்துவிடலாம். உடனே மற்றோர் இடத்தில் பீரங்கியும் துப்பாக்கியும் கொண்டு, பெருந் தொகையுடன் அவர்கள் தோன்றி, நம்மை எதிர்க்க முற்படுவர். ஒரு நகரை நாம் ஜெயித்துப் பிடித்து அவர்களை வெருட்டிஓட்டலாம்; மற்றொரு நகரிலே அவர்கள் மதர்த்து நிற்பார்கள்

"ஒரு ஜில்லாவிலிருந்து சுதந்திர வீரரை நாம ஓட்டிவிட்டவுடனே, மற்றொரு ஜில்லாவில் அவர்கள் திரண்டு நின்று, நம்மைச் சண்டைக்கு அழைப்பார்கள். நமது சேனை புறப்பட்டு ஒரு பெரிய ராஜபாட்டையிலிருந்து சுதந்திர வீரரை அப்புறப்படுத்திச் சென்றால், அச்சேனைக்குப் பின்னே மீண்டும் சுதந்திர சிப்பாய்கள் தோன்றிச் சிங்கநாதம் செய்வர் இங்கும், அங்கும், எங்கும் சுதந்திர சிப்பாய்கள் தோன்றித் தோன்றி கர்ஜனை செய்வதைப் பார்த்தால், ஒன்று நம்மவர் அடியோடு அழியவேண்டும், அல்லது இந்தியர் பூண்டற்றுப்போக வேண்டும், இரண்டிலொன்று நடவாவிடின், இந்த யுத்தம் அடங்காது."

இராம இராவண யுத்தத்திலே இந்திரஜித்தன் பல வகை மாயங்கள் புரிந்து போர் செய்தான் என்று பலரும் கேட்டிருப்பர். மௌல்வி அகமதுஷா என்பானும், தந்தியா

என்னும் மராட்டிய வீரனும் அவ்விதமே மாயப்போர் செய்ததைப் பலரும் நம்பார். ஆனாலும் அவ்விருவரும் ஆங்கில சேனாதிபதி உள்பட அனைவரையும் மயக்கி, மகா தந்திரத்துடன் போர் புரிகின்றனர். ஐரோப்பாவின் போர்முனைகளிலே ஆங்கிலச் சேனையை நடத்திச்சென்று, அரும்புகழ் பெற்ற ஜெனரல் விண்ட்ஹாம் என்பான், தத்தயாவின் போர்த்திறம்கண்டு அலறுகிறான் : ஆங்கில சேனாதிபதியும் திகைத்துத் தவிக்கிறான்.

மீரத் எழுச்சிக்குப்பின், வடஇந்தியாவில் உள்ள நகரங்கள் பலவும் ஏக காலத்தில் அல்லது அடுத்தடுத்து எழுந்து, கும்பினி ஆட்சியைக் குலைத்தன. அதே சமயத்தில் மத்திய இந்தியாவிலும், தட்சணத்திலும் சுதந்திர வீரர் கிளம்பாமல் காலதாமதம் செய்கின்றனர். அதனால் வட இந்தியாவிலே யுத்தத்தை ஓரளவு வெற்றியுடன் முடித்துக்கொண்டு, பிற இடங்களுக்கு ஆங்கிலச் சேனை பாய முடிந்தது. அன்று இந்தியா எங்கும் கும்பினிக்கு இருந்த இராணுவஸ்தலங்கள் நூற்றுமுப்பத்துமூன்று.

அவற்றிலே நூறு ஸ்தலங்களில் இருந்த சிப்பாய்கள் அனைவரும் சீறிக்கிளம்பினர். சென்னை மாகாணத்திலே ஸ்ரீபெரும்புதூர், பாளையங்கோட்டை, வாலாஜா இவற்றில் இருந்த சிப்பாய்களும் துள்ளி எழுந்தார்கள். சிந்தியா, நிஜாம் இவர்கள் ஆங்கிலக் கும்பினிக்குப் பக்கபலமாக நின்றாலும், அவர்களின் சேனைகளோ கொந்தளிப்பே கொண்டு குமுறின. பீஹார். மாகாணத்திலே குமார சிம்மன், அமரசிம்மன் என்னும் வீரத் தலைவர் வெகுண்டு எழுந்து, கும்பினி ஆட்சியைக் கலக்கினர்.

ஆங்காங்கே சுதந்திர வீரரில் பலரையும் கும்பினியார் கைதுசெய்து, தோழர்களை அம்பலப்படுத்தும் வண்ணம்

நயந்து கேட்டும், அச்சுறுத்தியும் பார்த்தார்கள் தோழமை அம்பலப்படுத்துவதினும், பீரங்கி வாயில் புகுவோம், தூக்குமேடையில் தாவி ஏறுவோம் என்றே அவ்வீரர் துணிவுகொண்டனர். ஆதலினால் திரைக்குப் பின்னிருந்து கலகத்தை மூட்டியோர், யார் யார்? என்று ஆங்கிலேயர் அறிய முடியவில்லை.

உயிருக்கு அஞ்சி இங்குள்ள ஆங்கிலேயர் பலரும் தொடை நடுக்கம் மிகுந்து. சந்திலும் பொந்திலும் புகுந்து, மாறுவேடத்திலும் மறைந்தது கிடந்தது ஒருபுறம் இருக்க, இங்கிலாந்திலுள்ள ஆங்கில சமூகமும் உள்ளத்திலே உதைப்புக் கொண்டது. இந்திய மக்களின் மனம் அமைதிகொண்டால் அல்லாமல், இந்தியாவிலே ஆங்கிலேயர் வாழமுடியாது, இந்தியாவிலிருந்து நலமும் பலமும் எய்த இயலாது என்று, இங்கிலாந்தின் மந்திரிகள் அறிவு கொண்டார்கள்

சுதந்திர மகாயுத்தம் ஒருவாறு அடங்கிய பின்பு, இங்கிருந்த ஆங்கிலேயர் பழிவாங்கும் பான்மை மிகுந்து, படபடத்தார்கள். ஆயினும், லார்டு கானிங் என்பானோ மதியூகம் மிகுந்து கருணையுள்ளத்துடன் நடத்தல் வேண்டும் என்று தன் இனத்தாருக்கு இடித்துக்கூறினான். இல்லையேல், இந்தியாவை இழந்துவிடவேண்டும் என்றும அறிவுறுத்த அவன் தவறவில்லை. கவர்னர் ஜெனரல் என்னும் தன்மையில் பெருந் தன்மையாக அவன் நடந்து, இந்தியரின் மனக்கசப்பைக் குறைக்கப் பெரிதும் முயன்று வந்தான்.

1857-ம் ஆண்டு மே மாதம் தோன்றிய அம்மகா யுத்தம் அடுத்த ஆண்டின் பிற்பாதி வரையில் ஓயாமல் நடந்து வந்தது. யுத்தத்தின் மூலபுருஷரான மேதைகள் மறைந்த பின்பே, அந்த யுத்தம் ஒருவாறு ஓய்ந்தது,

எனல் வேண்டும். யுத்தம் ஓய்ந்தாலும் இருட்டிலே காட்டுவழியில் கைகிரம்பக்காசுடன் நடக்கும் மனிதனைப் போலவே, ஆங்கில சமூகம் இங்கே வாழ்ந்து வர நேர்ந்தது.

28 இராஜீயப் பிரளயம்

பூ மண்டலம் ஆண்டவன் படைப்பு. அவனருள் வாய்ந்தோர் தெய்வ புருஷர். அன்னாரின் நல்லுரைகளே வேத சாஸ்திர விதி முறைகளாம். அவையே ஈசனுக்கு ஒப்பிய சட்டதிட்டங்கள். அவற்றை மதித்து நடப்பின், மனித சமூகம் மகிமை கொள்ளும்.

ஒரொரு சமயம், தனி மனிதர் தருக்கி எழுவர்; அல்லது ஒரு சிலர் உன்மத்தங்கொண்டு கிளம்புவர்: தாங்கள் இட்டதே சட்டம் என்பர். அப்போது. அவ்விதி முறைகள் தலைகீழாக மாறும்; மாறவே, மனித சமூகம் மங்கி மடிய நேரும்; அது கண்டு, ஆண்டவன் சகியான். உடனே. திவ்ய புருஷர் தோன்றி, அத்தீயோரைத் தொலைப்பர். இன்றேல், ஈசனே அவதரித்து, அவனியை அழிப்பான். இதனையே பிரளயம் என்பர் பெரியோர்.

பிரளயம் தீர்ந்தபின், மீண்டும் சிருஷ்டி நடக்கும். உயிர்கள் உதிக்கும்; எல்லாம் இனிமையாக இருக்கும். அவ்விதம் இனிமை நிலவ, முன்னோர் வேத, சாஸ்திர விதி முறைகள் அவசியம். அவற்றைத் தழுவியே, தேசிய இராஜீய, சமூக பொருளாதார ஒழுங்கு முறைகளை யெல்லாம் வல்லவர் வகுப்பர். அந்த ஒழுங்கு முறைகளே மானிடர் செய்யும் சட்டதிட்டங்களாம்; தெய்வ விதி முறைக்கு மனித விதிமுறைகள் மாறுபடின், பூமிதேவி சினந்து சீறுவாள்.

ஆயிரத்து எண்ணூற்று ஐம்பத்தேழாம் ஆண்டிலே, பாரத தேவி அவ்விதம் சீறியெழுந்தாள். அப்போது, இத்தேசமெங்கும் ஒரே கொதிப்பு; அனைவருக்கும் இரத்தத் துடிப்பு; அன்னியர் என்றால் இந்தியருக்குப் பரம வெறுப்பு: அடிமை வாழ்வு கண்டும் கனகடுப்பு! எத்திசையினும் மக்களிடையே தேசவிசுவாசம்: அதன் விளைவாக வீராவேசம். பல இடங்களிலே இரத்தக்களறி. நகரங்களிலே பிணக்காடு; கிராமங்களிலே தீமூட்டம்; இராஜ பாட்டைகளிலே நிணச்சேறு; மரக்கிளைகளிலே சவங்களின் பந்தி. இம்மட்டோ?

மாட மாளிகைகள் மண்ணோடு மண்ணாயின; கூட கோபுரங்கள் தவிடு பொடி பட்டன: இலட்சோப லட்சம் மக்கள் மாண்டு மடிந்தனர்: செல்வச் சீமான்கள் பிச்சைக்காரராக ஆயினர். பஞ்சமும் பசியும் தாண்டவமாடின. கொள்ளை நோய்களும் கொக்கரித்தன. அன்று வாள் முனையில் தான் வரிசை! துப்பாக்கி வேட்டில்தான் தீரம்! பீரங்கிப் பிரயோகத்தில் தான் பேராண்மை! வடக்கே இமயம் முதல் தெற்கே குமரி வரையில் அதே நிலைமைதான்!!

அது மகத்தான இராஜீயப் பிரளயம்; பிரமாதமான தேசியக் கொந்தளிப்பு. இங்ஙனம் இருக்க அதனை வெறும் "சிப்பாய்க் கலகம்" என்பர் சிலர்; "நன்றி கெட்ட இந்தியரின் துரோகச் செயல்" என்பர் இன்னும் சிலர்; "காட்டுமிராண்டிகளான கறுப்பரின் கொடுமை" என்பர் வேறு சிலர் அங்ஙனம் கூறும் அனைவரும் ஆங்கிலேயரே. அவ்விதமே எழுந்த நூல்களும் அனந்தமாம். அக் கூற்றையும் அந்நூலையும் நம்பிக் கிடந்த நம்மவரும் இலட்சோப லட்சம்!

ஒரு கூடைச் செங்கலுமா பிடாரியாக இருக்கும்? அந்த ஆங்கிலேயரில் ஓரளவு உண்மையை உரைத்தோரும் உண்டு. அத்தகையோரில் ஒருவன் ரஸ்ஸல் என்பான். அவன், லண்டன் டைம்ஸ் பத்திரிகையின் விசேஷ நிருபன்; சிப்பாய்க் கலக சமயத்தில், ஆங்கிருந்து இங்கு வந்து, கோரச் செயல்களை நேரிற் கண்டவன்: அவ்வப்போது, எல்லா விஷயங்களையும் லண்டனுக்கு எழுதி அனுப்பியவன். ஒரு சந்தர்ப்பத்தில் அவன் சொல்லுவது இது.—

"சிப்பாய்க் கலகம் என்பது அடிமைகள் போட்ட யுத்தமா? அன்று! அன்று! அது மத சம்பந்தமான யுத்தம்; ஜாதிப் பகையான யுத்தம்; வஞ்சம் தீர்க்கவே, விளைந்த யுத்தம்; அன்னியர் பூட்டிய விலங்கை உடைத்தெறியும் தேசிய யுத்தம்; தேச மக்களின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தும் யுத்தம். கறுப்பு ஜனங்களான அடிமை மக்கள் என்போர் அட்ட காசத்துடன் தங்களைக் குனிய வைத்துக் குதிரை ஏறிய ஆங்கிலேயரைக் கொன்று குவித்தது ஆச்சரியந்தான்."

நேரில் கண்ட ரஸ்ஸல் அங்ஙனம பேசினன். ஆறுயிரம் மைலுக்கு அப்பாலிருந்தும், அறிவுக்கண் கொண்டு, உண்மையைக் கண்ட டிஸ்ரேலி என்பான் பேசியது பார்ப்போம். 1857-ஆம் ஆண்டு ஜூலை மாதம் இலண்டன் மாநகரிலே "காமன்ஸ்" சபையில் விவாதம எழுந்தது. அப்போது டிஸ்ரேலி பேசியது ஈதாகும் :—

"இந்தியாவில் கிளம்பியிருப்பது சிப்பாய்க் கலகமாம்! மூட நம்பிக்கையினால் மூண்ட மனக் கொதிப்பாம்! நல்லது! அது சிப்பாய்க் கலகமா? அல்லது தேசியக் கொந்தளிப்பா? சற்றே ஆராய்வோம். நமது ஆட்சிகண்டு, இந்தியாவிலே எல்லா வகுப்பாருக்கும்

மனக் கசப்பே உண்டு. அக்கசப்பின் காரணங்கள் மூன்று. முதலாவதாக, அங்கே சுதேச மன்னரின் ஆட்சியை நாம் பறித்தது ; இரண்டாவதாக, இந்திய மக்களின் சொத்துரிமையைக் கெடுத்தது ; மூன்றாவதாக, அம்மக்களின் மத விஷயங்களில் தலையிட்டது. இன்னும் சற்றே விளங்கச் சொன்னால்

"பிள்ளை இல்லாதார் சுவீகாரம் செய்து கொள்வது சாஸ்திர சம்பிரதாயம். ஆயினும் என்ன? பிள்ளை இல்லையென்று, பற்பல மன்னர்களின் ராஜ்யங்களை நாம் கட்டிக் கொண்டோம். அதனால், இராஜ வமிசங்களும், பெருங் குடும்பங்களும் நம்மீது சந்தேகங் கொண்டன ; அடங்கா ஆத்திரமும் அடைந்தன. பிள்ளை இல்லை என்னும் சாக்கைக் கொண்டு, ஜாகீர்தார்கள், ஜமீன்தார்கள், இனாம் தார்கள் இவர்களின் சொத்துக்களையும் நாம் கவர்ந்து கொண்டோம். பாதிரி மார்கள் மீது இந்தியருக்கு வெறுப்பில்லை. என்றாலும் அன்னாரின் மதப் பிரசாரத்துக்கு நமது ஆட்சி பக்க பலமாயிருத்தல் கண்டு, இந்தியர் சகியாது போயினர்.

"கொழுப்புக் கலந்த தோட்டாக்களை வழங்கினோம் ; அதனால் சிப்பாய்கள் கொதிப்புக் கொண்டனர் என்பது கட்டுக் கதை. எனவே, காரண காரியங்களை ஆராயின், இந்தியாவில் கிளம்பியிருப்பது தேசீய யுத்தமே என்று சொல்லவேண்டும். அந்த யுத்தத்தை அடக்க, இங்கிலாந்திலிருந்து படைகளை அனுப்ப வேண்டியதுதான். என்றாலும், வருங்காலத்திலே நல்வாழ்வுக்கு வகை யுண்டென இந்திய மக்களுக்கு நாம் உணர்த்தவேண்டும். அம்மக்களின் மனக்குறையை மதித்தறிய விக்டோரியா ராணி ஒரு பஞ்சாயத்தை நியமிக்கவேண்டும்."

ஜஸ்டின் மகார்த்தி என்பான் இங்ஙனம் கூறியுள்ளான் :—“உள்ள விஷயம் யாது? உண்மையும் என்ன? இந்திய மக்கள் ஆங்லேயருக்கு விரோதமாகக் கிளம்பினர்; இது வெறும் சிப்பாய்க் கலகம் அன்று! ஏனெனில், சிப்பாய்கள் மட்டுமா கிளம்பினர்? தேச மகா ஜனங்களும் சேர்ந்து கிளம்பினார்கள். இந்தியாவை அன்னிய ஆங்கிலேயர் கட்டிக்கொள்வதா? என்று ஆத்திரமடையாதார் இல்லை. சிப்பாய்களின் மனக்குறை என்ன; தேசமக்களின் வெறுப்பென்ன; மதவைராக்கியமென்ன; இம்மூன்றும் சேர்ந்து கொள்ளவே, பெரும் போர் மூண்டது. இந்தியரிலே ஆண்டிமுதல் அரசன் வரையில் அனைவரும் போரில் குதித்தனர்.”

சிப்பாய்க் கலகம் எனும் விரிந்த நூலொன்று எழுதியவன் ஜார்லஸ் பால் என்பவன். ஓரிடத்தில் அவன் உரைத்திருப்பது இது :—

“கரை புரண்டு ஓடிவந்த யுத்த வெள்ளம் எங்கும் அணைகளை உடைத்துக்கொண்டு, இந்தியா முழுதும் பொங்கிப் பரந்தது. அவ்வெள்ளப் பெருக்கில் கிளம்பிய அலைகளோ ஆங்கிலப் பூண்டையே அடியோடு போக்கி விடும் என்றே பலரும் எண்ணினர். மேலும் அரசாளும் இனத்தினரான அன்னியரை அகற்றியபின், பரிபூரண சுயராஜ்யத்தை நிலைநாட்டும் சுதேச மன்னனைக் கண்டதும், அக்கலகவெள்ளம் ஒரு கட்டுக் கடங்கும் என்றும் அநேகர் நினைத்தனர். தேசமக்கள் அனைவரையும் ஒரு சேரக்கொண்ட சுதந்திர மகாயுத்தம் என்றே அதனைச் சொல்லுதல் வேண்டும்!”

தெய்வம், தேசம், தர்மம் இம்மூன்றையுங் கருதி, டில்லி மலையுச்சியில் அன்று சுதந்திரக் கொடி தூக்கிய பாதுஷா பகதூர்ஷா, “பாரத பூமியின் புத்திர, புத்திரிகளே!

மனங்கொண்டு முனைந்தால், மாற்றானை இமைப் பொழுதில் மாய்த்து விடலாம். உயிரினும் சிறந்தது தேசமே! நம் தேசத்தின் அடிமைத் தளை தொலைதல் வேண்டும். ஆதலின் சீறிக்கிளம்புங்கள்! போர் முனையில் குதியுங்கள்!" என்று ஆணையிட்டான்.

சுதர்மம், சுயராஜ்யம் இவ்விரண்டையும் எண்ணியே வாளுருவினர் இந்து—முகம்மதிய வீரர்! டில்லிமா நகரில் கிளம்பிய வீரச்சிங்கநாதம் குமரிவரையில் செவிடுபட்டது. அடிவயிற்றில் இடிவிழுந்ததே போல் அன்னியர் அலமந் தழிந்தனர் என்று சொல்லவும் வேண்டுமோ! பொங்கி எழுந்த பாரத மக்கள் தமது ஆருயிரைப் பணயம் வைத்தே சுதந்திரப் போரில் குதித்தனர். சீக்கியர், சிந்தியர், கூர்க்கர் முதலியோர் அச் சுதந்திர வீரருக்குத் துணைபுரியாமல் சுய நலத்தினால் துரோகமே விளைத்தனர். சுதந்திர மகாயுத்தம் தவறிப்போனதற்கு அத்துரோகமே காரணமாம்.

29 ஆங்கில ஆட்சி

சூதும் வாதும் செய்து, கள்ளக் கைச் சாத்தும் நாட்டி, 1757-ஆம் ஆண்டிலே, கும்பினியின் ஆட்சியை இங்கே முளைக்க வைத்தான் கிளைவ் என்பான். பொய்யும் புரட்டும் கொண்டு கிளம்பிய அந்த அரசு ஒரு நூறு ஆண்டினுக்குள் மறைந்து போம் என்று அப்போதே சோதிடம் எழுந்தது. அதன் படியே, 1858-ஆம் ஆண்டின் கடைசியிலே கும்பினியின் ஆட்சி இங்கே குப்புற வீழ்ந்தது.

அக் காலத்திலே சிறிது சிறிதாக அக் கும்பினியின் மீது ஆதிக்கம் கொண்ட இங்கிலாந்தோ, இந்தியாவை இழந்துவிட ஒப்பவில்லை. அந்த ஆட்சியின் காலத்திலே

இங்கிருந்து ஏராளமான பலன் அடைந்ததல்லவா இங்கிலாந்து? கறவைப் பசுவை இழந்து விட்டால் இங்கிலாந்தின் வாழ்வும் வரிசையும் பாழாகிப்போம். ஆதலின் ஆங்கிலேயரின் நேர்முகமான ஆட்சி இங்கே உதிக்கலாயிற்று.

சுதந்திர யுத்த காலத்திலே இந்தியரின் மனத்தில் வேரோடிவிட்ட பகை உணர்ச்சியை அவித்து, இந்தியரை அணைத்து ஆதரிக்க எண்ணினாள் இங்கிலாந்தின் அரசியான விக்டோரியா ராணி. அதுபற்றியே காதுக்கு இனிமை தரும் அரச விளம்பர மொன்று அவள் விடுத்தனள். அதன் முக்கிய சாரம் யாதெனில் :—

"இனிமேல் இந்தியாவிலே நாடு பிடிக்கும் ஆசை நமக்குக் கிடையாது. இந்திய மன்னரின் உரிமை, மதிப்பு, முதலிய வற்றில் நாம் தலையிடோம். மக்களின் மதவிஷயத்திலும் தலையிட நமக்கு உத்தேசம் இல்லை. தகுதி, திறமை இவற்றை மதித்து, ஜாதி, மதபேதமின்றி இந்தியர் அனைவருக்கும் அரசிலே எந்த உத்தியோகமும் கிட்டும். இந்தியக் கைத்தொழில்களுக்கு ஆதரவெல்லாம் அளித்து, ஜன நன்மைக்கான வேலைகளை விருத்தி செய்வோம். மக்களின்



விக்டோரியா மகாராணி.

நலத்தைத்தழுவியே அரசு முறை நடந்து வரும். மக்களின் மனத்திருப்தியே நமக்குப் பாதுகாப்பாம்."

அதனை மகத்தான அரச விளம்பரம் என்பர் பலரும். 1858-ஆம் வருஷம் நவமபர் மாதம் முதல் தேதி அலகாபாத் நகரிலே தேச மன்னர் அனைவரையும் கூட்டிவைத்து, அவ்விளம்பரத்தை லார்டு கானிங் வாசித்துக் காட்டினன். பிள்ளைப் பேறுபெருத அரசர் சுவீகாரம் செய்து கொள்ளலாம் என்றும் அவன் அறிவித்தான். பின்பு அவ்விளம்பரம் இந்தியா எங்கும் அறிவிக்கப் பெற்றது. அப்போது ஆங்கிலத் துரைத்தனம் இங்கே அமைந்த விதம் இது :—

இங்கிலாந்தின் அரசுக்கு உட்பட்டே இந்தியாவின் துரைத்தனம் நடந்துவரும். இங்கிலாந்தின் அமைச்சசரில் ஒருவர் இந்தியா மந்திரி என்று பெயர் தாங்கி, இந்தியாவின் அரசு முறையைக் கண்காணித்து வருவார். அந்த மந்திரியின் ஆலோசனையை முன்னிட்டே கவர்னர் ஜெனரல் என்பவர் இங்கே ஆட்சி நடத்துவார். இவருக்கு அரசப் பிரதிநிதி என்னும் பெயரும் ஏற்படும். மாகாண கவர்னர்கள் அந்த அரசப்பிரதிநிதிக்கு உட்பட்டு மாகாணங்களை ஆட்சி செய்வர்.

அவ்வாறு இந்திய துரைத்தனம் அமைந்த பின்பு, சென்னை, பம்பாய், கல்கத்தா இந்த இடங்களில் சர்வ கலாசாலைகள் ஏற்பட்டன. உயர்தர நீதி மன்றங்களும் உதித்தன. ஆங்கிலப் படிப்பை இங்கே பிரபலம் செய்ய முயற்சிகளும் நடந்தன. லார்டு கானிங் என்பாரே முதலாவது அரசப்பிரதிநிதியாக விளங்கினர். அவருக்குப்பின் ஐந்தாண்டுக்கு ஒரு முறை அரசப் பிரதிநிதிகள் இங்கு வந்து ஆட்சி நடத்திப் போவர்.

இந்தியாவைக் கட்டி ஆளுவதற்கு இங்கே சிவில் சர்விஸ் என்னும் அதிகார வர்க்கம் உதித்தது. அரசப் பிரதிநிதி முதல் அந்த அதிகார வர்க்கம் வரையில்

அனைவரையும் நியமிப்பது இந்தியா மந்திரிதான். அந்த உத்தியோக வர்க்கத்தில் சேரவேண்டுமானால், நமது இளைஞர் இங்கிலாந்து சென்று, அங்கே பரிட்சை கொடுத்துத் தேறவேண்டும். அது மிகவும் கஷ்டநஷ்டமான காரியமாம். அந்த வர்க்கத்தாரே ஜில்லாவின் கலெக்டர்களாக அமர்ந்து, நிர்வாகத்தை நடத்துவர்.

இத்தேசத்தை முன் பின் அறியாதவரும், இத்தேச நடையுடைபாவனைகளை நன்கு உணராதவருமான, ஆங்கில இளைஞரே ஜில்லாக்களின் தலைமைப் பதவி வகித்தனர். சிறுசிறு உத்தியோகங்கள் நம்மவருக்குக் கிட்டின என்பது உண்மைதான். ஆனாலும் பணப்பெட்டியின் சாவியை வைத்திருப்போராகவே அந்த அதிகார வர்க்கம் துலங்கியது. இடுகிறவன் தன்னவனாய் இருந்தால் தலைப் பந்தியில் இருந்தால் என்ன, கடைப் பந்தியில் இருந்தால் என்ன என்பார்கள். இடுகிறவன் அயலவனாயிருந்தால் பந்தியிலே எங்கு இருந்தாலும் அவன் இடுவதுதானே கிட்டும்? அந்த அயலவன் அன்பற்றவனாயின் கேட்க வேண்டுமோ?

விக்டோரியா ராணிக்குப்பின் பட்டமேறிய அவள் மைந்தனும், பேரனும் அவ் விளம்பரத்தை உறுதிப்படுத்தி மக்களின் மனத்தைக் கவர எண்ணினர். ஏட்டளவில் அவ் விளம்பரம் இனிமையாக இருந்தாலும், செயலளவில் பயன் தரவில்லை. இங்கிலாந்தின் நன்மையை மதித்தே, இந்தியாவின் ஆட்சி நடைபெற்று வந்தது. அதன் ஆதிக்கத்தை வலுப்படுத்தவே, அவ் வர்க்கத்தார் முயலாநின்றனர். அத்துடன் அரசாளும் இனம் என்னும் இறுமாப்பு அவ் வர்க்கத்தை மூடிக் கொண்டது.

இனத்தை இனம் காக்கும் என்பதுபோல், தங்களது இனத்தாரான ஆங்கில வர்த்தகருக்கும், பிறருக்கும் அவ்

வர்க்கத்தார் நன்மை எல்லாம் தேடித்தந்தனர். அவ்விரு வருக்கும் இந்தியரைக் கண்டால் ஆளப்படும் மக்கள் தாமே என்னும் உதாசீனமும் உண்டு. சுதந்திர யுத்தத் தின் கோர நிகழ்ச்சிகளை அவ்விருவரும் கருதியே நின்ற னர். இந்நிலையில், தலைவலி போகத் திருகுவலி நேர்ந்ததே என்று நம்மவர் ஏங்கிக் கிடக்க நேர்ந்தது.

ஆனாலும், இத் தேசத்திலே பத்திரிகைகள் தோன்றி அரசு முறையையும், அதிகாரிகளின் போக்கையும் கண் டித்து எழுதி வந்தன. அதுகண்டு அரசப் பிரதிநிதியாக இருந்த லார்டு லிட்டன் என்பான் அப் பத்திரிகைகளுக்கு வாய்ப் பூட்டுச் சட்டம் ஒன்று போட்டான். இதற்கிடை, யில், பர்மா தேசம் முழுவதையும் ஆங்கிலேயர் கட்டிக் கொண்டனர்; வடமேற்கு எல்லையிலே சுதந்திரத்துடன் வசித்து வந்த மலைநாட்டினரை மடக்கப் பார்த்தனர்; ஆப்கானிஸ்தானத்தின்மீதும் படைகொண்டு பாய்ந்தனர்.

இந்தியாவும் பர்மாவும் சேரவே இங்கிலாந்து ஒரு பெரிய சாம்ராஜ்யமாக ஆகிவிட்டதே என்று ஐரோப்பிய அரசுகள் அசூயை கொண்டன. அந்த அசூயைக்கு ஆளான ருஷ்யா தேசம் இந்தியாவின்மீது படையெடுத்து வருமோ என்று ஆங்கிலேயர் அஞ்சிக் கிடந்தனர். ஆனது பற்றி இங்கே சேனையைப் பெரிதும் பெருக்கி, வடமேற்கு எல்லை நெடுகிலும் வரிசையாக நிறுத்தி வைத்தனர். இதில் ஏராளமான பணம் செலவாயிற்று. ஜன நன்மைக்கான வேலைகள் நடைபெறவில்லை. ஆங்கில ஆளுகையின் நற் பலனும் புலப்படவில்லை.

ஆங்கிலேயரின் நேர்முகமான ஆட்சி ஏற்பட்டபின், விக்டோரியா ராணி இந்தியாவின் சக்கரவர்த்தினி என்று பட்டம் பூண்டாள். அவளுக்குப் பின் வந்தோரும் சக்கர

வர்த்திகள் என்று நாமம் கொண்டனர். பிரிட்டிஷ் மகுடத்தின் மாமணி என்றும், இந்தியாவைக் கருதி நின்றனர். மணியினால் மகுடத்திற்கு மகிமை; மணிக்கு என்ன மகிமை என்று நம்மவரில் சிலர் சிந்திக்க நேர்ந்தது. அந்நிலையில், லார்டு ரிப்பன் என்பார் இங்கே அரசப் பிரதிநிதியாக வந்தார்.

தேச மக்களுக்கு நலம் புரிய வேண்டும் என்று அந்த ரிப்பனுக்கு ஆவல் மிகுந்தது. முதலாவதாக அவ்வாய்ப்பூட்டுச் சட்டத்தை அவர் போக்கினர். இங்குள்ள ஐரோப்பியர் தவறு புரியின் அன்னாரை ஐரோப்பிய நீதிபதியே விசாரிக்க வேண்டும் என்றிருந்தது. அவ் வேற்றுமை கண்டு மனம் பொறாத அந்த ரிப்பன் சீர்திருத்தம் செய்ய எண்ணினர். அதற்கு ஒரு மசோதாவும் கொண்டு வந்தார். அது இல்பர்ட் மசோதா எனப்படும்.

லார்டு ரிப்பன்

ஆளும் இனத்தாராகிய நம்மை, ஆளப்படும் இனத்தாரான இந்தியருக்குச் சரிநிகர் சமானமாகக் கருதுதல் அடுக்குமோ என்று இங்கிருந்த ஆங்கிலேயர் அனைவரும் தருக்கித் துள்ளி எழுந்தனர்; இந்தியரை ஏளனமாகப் பேசினர்; ரிப்பனைச் சிறைசெய்து, கப்பலில் ஏற்றி இங்கிலாந்துக்கு அனுப்பிவிடவும் ஆயத்தங்கள் பண்ணினர். அது கண்டதும் இந்தியருக்கு விழிப்பு ஏற்பட்டது. ஆங்கிலேயரின் சாதி இறுமாப்பும் நன்கு புலப்பட்டது.

சொந்த நாட்டிலே என்ன சிறுமை என்று இந்தியரில் பலரும் பெருங் கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சியின் வேகங்கண்டு, மனத்தகத்தே ஆங்கிலேயர் அஞ்சினர். வாய்ப் பதட்டமாகப் பேசுவதையும் ஓரளவு அடக்கிக் கொண்டனர். அதன்மேல் ஒன்று கூடிக் கிளர்ச்சி செய்தால் பலன் கிட்டாமற் போகாது, என்று இந்திய சமூகம் நல்லறிவு கொண்டது.

வங்காள வாசியான சுரேந்திரநாத பானர்ஜி என்பார் இங்கிலாந்து சென்று, சிவில் சர்வீஸ் பரீட்சையில் தேறினும், அவருக்கு அதிகார வர்க்கத்தில் இடங் கிடைக்கவில்லை. அதுவும் ஒரு நன்மைக்கே என்று அவர் கருதி வட இந்தியாவின் முக்கிய நகரங்களுக்கெல்லாம் சென்று, ஆட்சி முறையை நாம் கவனித்து வந்து, அவ்வப்போது குணதோஷம் கூறவேண்டும் என்று பிரசாரம் செய்தார். ஆங்கிலத்திலே அவருக்கு வாக்கு வன்மை அதிகம். அவ்வன்மை கண்டும், உள்ள நிலைமை உணர்ந்தும், தேச மக்களுக்கு அரசு முறையில் மிக்க அக்கறை பிறந்தது.

இது இங்ஙனமிருக்க, சுதந்திர மகாயுத்தம் அடங்கின ஐந்தாண்டினுக்குள் பஞ்சநதப் பிரதேசத்திலே மிகப் பெரிய சதி கிளர்ச்சி ஒன்று தோன்றியது. அச் சதி நிகழ்ச்சிக்கான கிளைகள் ஆங்காங்கே ஏற்பட்டன; ஆட்களும் சேர்ந்தார்கள். ஆங்கில ஆட்சியை இங்கிருந்து அகற்றிவிட வேண்டும் என்பதே அச் சதியின் அடிப்படை நோக்கமாம். அதனை மிகவும் சிரமப்பட்டு ஆங்கிலேயர் அழிக்க நேர்ந்தது.

இனி, அரசு முறையில் அக்கறை காட்டும் நோக்கத்துடன் சென்னை, பம்பாய், பூனா, கல்கத்தா இந்த இடங்களில் சங்கங்கள் முளைத்தன. பிரமுகரும் படித்த வகுப்பாரும் அச் சங்கங்களில் அங்கம் வகித்து, அவ்வப்போது

ஆட்சி முறையில் குணதோஷம் கூறி வந்தனர். இவ்விதம் தேசத்திலே கிளர்ச்சி வலுத்து வரலாயிற்று.

சுதந்திர யுத்தத்துக்குப்பின், ஆயுதம் தரிக்கக் கூடாது என்று ஆங்கிலேயர் நம்மவருக்கு ஆணை இட்டிருந்தனர். சுதந்திர யுத்தத்தில் கலந்து கொண்ட வகுப்பாரை இந்தியச் சேனையிலே சேர்த்துக் கொள்ளவில்லை. யுத்த சமயத்தில் தங்களுக்கு உதவியாக இருந்த சீக்கியரையே பெரும்பாலும் சேனைச் சேவகத்துக்கு அழைத்துக் கொண்டனர்.

இவற்றையும், சுதந்திர யுத்தக் கொடுமைகளையும் மறவாதிருந்த நம்மவரில் சிலருக்கு ஆங்கில அரசு முறையில் அருவருப்பும், வெறுப்பும் மிகுந்தன. ஆதலின் அந்தரங்கமாக ஆயுதங்களைச் சேர்த்து, மீண்டும் சமயம் பார்த்துக் கிளம்ப வேண்டும் என்று அச்சிலர் அற்புதமான ஆயத்தங்கள் பண்ணி வந்தனர்.

அரசு முறையின் போக்கையும், மக்களின் மன எழுச்சியையும், அந்தரங்கமான சதியையும் தனது மதியூகத்தினால் உணர்ந்து கொண்டான் ஹியூம் என்பான். சுதந்திர யுத்தம் நேர்ந்தபொழுது இடாவா நகரிலே கலெக்டராயிருந்து, உயிருக்கு அஞ்சி மாதர் வேடத்தில் மறைந்து தப்பியவன் அவன். இதனை வாசகர் அறிவர்.

அது முதல் அவனும் இந்தியரின் நலத்தில் சிரத்தை கொண்டான்; சமூகத்தைப்பற்றிய திருத்தங்களில் இந்தியர் கவனம் வைக்கவேண்டும் என்று வற்புறுத்தி வந்தான்; தனது சொல்லாலும் செயலாலும் இந்தியரிடம் பேரபிமானம் காட்டி வந்தான். மன எழுச்சி கொண்டுள்ள இந்தியரை ஒரு போக்கில் திருப்பி அமைதியுடன் அவர்களை வாழச் செய்தால் ஆங்கில அரசுக்கு இங்கே ஆபத்து நேராது என்று அறிந்து கொண்டவன் அவன்.

அரசியல் விஷயத்தில் இந்தியர் துடிப்புக் கொள்ளுவதில் அந்த ஹியூமுக்கு அவ்வளவாக விருப்பம் கிடையாது. ஆனாலும் அப்போது அரசப் பிரதிநிதியாக இருந்த லார்டு டப்ரின் என்பாரோ, ஹியூமுக்கு நேர் மாறான கருத்து கொண்டவர்; தன்னைத் தனிமையில் காணும் இந்தியருக்கு அரசியல் விஷயத்தில் ஊக்கம் ஊட்டி வந்தார்; அவ்வப்போது இந்தியர் குணதோஷம் கூறி வந்தால்தான் அரசு முறை சீர்படும் என்றும் சொல்லி வந்தார்.

தேசம் அனைத்தினுக்கும் பொதுவாக இராஜிய சபை ஒன்று ஏற்படுதல் வேண்டும்: தேச நலத்தை அது அவ்வப்போது கவனித்து வருதல் அவசியம். அங்ஙனமாயின் அதிகார வர்க்கம் ஒரு கட்டுக்குள் அடங்கும். தேச மக்களும் நலம் பல பெறுவர் என்று, அந்த அரசப் பிரதிநிதி கூறி வந்ததை, இந்தியப் பிரமுகர் பலரும் கேட்டு, தைரியம் கொண்டனர். அதற்கான வகை துறைகளை ஆராய்ந்தும் நின்றனர்.

சென்னைமாநகரிலே பிரம்மஞான சங்கம் என்று ஒன்று உளது. அதன் கிளைகளோ உலகின் பல தேசங்களிலும் இந்தியாவின் பலபாகங்களிலும் இருந்தன. வருஷத்திற்கு ஒருதரம் அச் சபையின் பிரதிநிதிகள் சென்னையில் கூடுவது வழக்கம். 1884-ஆம் ஆண்டு அவ்விதம் பல பிரதிநிதிகள் கூடினர். "மத விஷயத்தில் கவனம் செலுத்த ஆண்டு தோறும் கூடுவதே போல், அரசியல் விஷயத்திலும் கவனம் செலுத்த ஆண்டு தோறும் கூடுதல் வேண்டும். அதற்கென்று தனியே ஒருசபை முளைத்தலும் வேண்டும்" என்று அப்பிரதிநிதிகளில் சிலர் தீர்மானித்தார்கள்.

அவர்களில் முக்கிய புருஷர் நமது சென்னை நகர வாசிகளாம். சென்னையில் அவ்விதம் தீர்மானம் ஏற்படவே, கல்கத்தா, பம்பாய் இந்த இடங்களிலிருந்த இந்தியப் பிரமுகர்களும் அவ்வாறே கருதினர். அத்தகைய சபை ஒன்று ஏற்படின், கலகச் சதி நிகழ்ச்சி வலுவற்றுப் போம் என்று ஹியூம் என்பான் நினைத்து அதற்கு ஆதரவாய் இருந்தான்.

சுருங்கச் சொன்னால் இந்தியாவின் பற்பல பாகங்களி லிருந்தும் சுமார் 80 பிரதிநிதிகள் 1885-ஆம் ஆண்டின் இறுதியிலே பம்பாயில் கூடி அரசியல் விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்தனர். அக் கூட்டமே தேசீய காங்கிரஸ் மகா சபையின் முதல் கூட்டம் எனப்படும். வங்காள வாசியான உமேச சந்திர பானர்ஜி என்பார் தலைமை வகித்து, அரசியலில் நம்மவருக்கு அதிகாரமும் செல்வாக்கும் அவசியம் வேண்டும் என்று வலியுறுத்திச் சொன்னார்.

தேச மக்களான இந்தியரைக் கலந்து கொள்ளாமல், அரசியலை நடத்துவது அடாது என்று அம் மகாசபை யிலே ஒரு தீர்மானம் ஏற்பட்டது. இங்கே அதிகார வர்க்கத்தில் வேலை பார்த்து விலகிக்கொண்ட ஆங்கிலே யரில் ஒரு சிலரும், ஹியூம் என்பாரும் அச் சபைக்கு ஆசிகூறி ஆதரவு அளித்தனர். அப்பால் ஹியூம் என்பார் அச் சபையின் பொதுக் காரியதரிசியாக இருபத்தைந்து வருடகாலம் இருந்து வந்தார்.

மூன்றாவது வருடம் காங்கிரஸ் மகாசபை கூடிய பொழுது பாமர மக்களுடன் தொடர்பு கொண்டு, அவர் களைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று தீர்மானம் ஆயிற்று. அவ்வாறே காரியம் நடத்தல் கண்டு, அதிகார

வர்க்கம் சிறியது. அதன்மேல் பாமரரைத் தட்டி எழுப்பும் முயற்சி கைவிடப்பட்டது.

ஆதியிலே அம் மகாசபையில் சேர்ந்து கிளர்ச்சி செய்த இந்தியரிலே பொறுக்கான சிலருக்கு உத்தியோகமும், பட்டமும் பதவியும் அளித்து, அவர்களை அதிகார வர்க்கம் தன் பக்கம் இழுந்துக் கொண்டது. கொள்ளவே, படித்த இந்தியரில் பலரும் அரசிலே பெரும்பதவி பெறுவதை ஒரு பாக்கியமாக எண்ணினர். தெய்வ அருளால் ஆங்கில ஆட்சி இங்கே ஏற்பட்டுளது என்றும் எண்ணினின்றனர். மேலும் ஆங்கில ஆட்சியிடம் பரம விசுவாசம் பூண்டிருப்பதாகவும், ஆண்டு தோறும் கூட்டத்திலே முதலாவதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றியும் வந்தனர்.

30. தீவிர முயற்சி

இராஜவிசுவாசம் என்றால், அரசனிடம் மக்கள் விசுவாசம் பூண்டிருத்தலாம். அத்துடன் அரசனும் மக்களிடம் விசுவாசம் பூண்டிருத்தல் வேண்டும். அரசனது பெயரைச் சொல்லி ஆட்சியை நடத்தும் ஆங்கில அதிகார வர்க்கம் நம்மிடம் விசுவாசம் காட்டவில்லையே. அந்நிலையில், நாம் மட்டும் விசுவாசம் பூண்டிருப்பதாக ஆண்டு தோறும் பறையறைதல் பழிப்புக்கு இடமாகும் என்று படித்த இந்தியரில் சிலர் நினைத்தனர்.

மேலும், அரசிலே உத்தியோகம் வேண்டும் என்று கையேந்தி நிற்பதும் அழகோ. நாடு நமதாயிருக்க, அதனை நாமே ஆளுதல் வேண்டுமெனக் கேட்பதே ஆண்மையாம். பிழைக்க வந்தோரிடம் பிச்சை வேண்டி நிற்க வேண்டாம், என்றும் அச்சிலர் சாற்றினர். அச் சமயம் காங்கிரஸ் மகா சபையை முன் நின்று நடத்திவந்தோ

ருக்கு அது பிடிக்கவில்லை. அச்சிலரை அவர்கள் தீவிர வாதிகள் என்று ஏளனமாக அழைக்கலானார்கள்.

அதுமுதல் நம் மகா சபையிலே மிதவாதிகள், தீவிர வாதிகள் என்னும் பாகுபாடு ஏற்பட்டது. தீவிரவாதிகளின் தொகையோ சொஞ்சம். ஆதலின், மிதவாதிகளை முதுகில் தட்டிக் கொடுத்து, ஆதரித்து வந்தனர் அதிகார வர்க்கத்தார். தீவிரவாதிகளைக் கண்டோ கடுப்பும் வெறுப்புமே காட்டி வந்தனர். சுயவரசு வேண்டும், சுயராஜ்யமே சிறப்பளிக்கும், சொந்த நாட்டிலே பிறர்க் கடிமை செய்து துஞ்சவேண்டாம் என்று தீவிரவாதிகள் சொல்லிப் பார்த்தார்கள்.

மிதவாதிகள் அதனை ஏற்கவில்லை. அதன்மேல், தீவிரவாதிகள் தேசத்தினிடையே சென்று, மகாஜனங்களிடையே பிரமாதமாகப் பிரசாரம் செய்து வந்தனர். பிரசாரம் செய்தோரில் வங்காளிகளை முதன்மையாகச் சொல்ல வேண்டும். வங்காளிகளுக்கு இயற்கையிலேயே மன எழுச்சியும் துடிதுடிப்பும் அதிகமாம். மராட்டியப் பெருமகனை பால கங்காதர திலகர் என்பார், "சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதனை அடைந்தே தீருவேன்," என்று கர்ஜனை புரிந்தார்.

அக்கர்ஜனை தேசமெங்கும் ஓர் எழுச்சியை உண்டாக்கியது. வங்காளியர் அதில் ஈடுபாடு மிகுந்தனர். அன்றளவும் காங்கிரஸ் மகாசபையிலே முகம்மதியரில் பலரும் சேரவில்லை. ஒரு சிலரே சேர்ந்திருந்தனர். வங்காளத்திலோ முகம்மதியர் அதிகம். ஆதலின், வங்காளியருக்குள்ளே வேற்றுமை விளைக்க அரசப் பிரதிநிதியான லார்டு கர்ஸன் கருதினார். முகம்மதியர் மிகுந்த பாகத்தைத் தனி மாகாணமாக ஆக்கினார். முகமன் பேசி, முகம்மதியரைத் தூண்டி விட்டார்.

அந்த வங்காளப் பிரிவினை கண்டு, வங்காளியர் அனைவரும் வெகுண்டெழுந்தனர்; பிரிவினை கூடாது என்று பெருங்கிளர்ச்சி செய்தனர். இதில் முகம்மதியரும் முதலிலே பெருவாரியாகக் கலந்து கொண்டார்கள். ஒரு நாள் ஆண், பெண், குஞ்சு குழந்தை உட்பட எல்லாரும் சேர்ந்து, உண்ணா நோன்பு கொண்டு, கங்கை சென்று நீராடி, அப் பிரிவினைக்குப் பரிகாரமாகச் சுதேசிய விரதம் பூண்டனர் தெய்வ சாட்சியாக.

ஆங்கிலேயருக்கு இங்கே உயிர்நாடி போன்றது வர்த்தகமே. அதில் அவர்கள் கோடிக்கணக்காகப் பொருள் சேர்த்து வந்தனர். வரவே, ஆங்கில ஜவுளி, ஆங்கில சோப்பு சீப்பு முதலியவற்றை விடுத்து, இங்கே கிடைக்கும் துணி மணிகளையே கையாளுதல் என்பதே சுதேசிய விரதத்தின் நோக்கம். எரிகிறதைப் பிடுங்கினால், கொதிப்பது அடங்கும் என்பது பழமொழி. சுதேசிய விரதத்திலே ஆங்கிலப் பொருள்களை ஒழித்தல் முக்கிய அம்சம் அல்லவா?

அது பகிஷ்காரம் அல்லது விலக்கு எனப்படும். ஆங்கிலக் கல்வி முறையையும் விடுத்து, நாட்டுக்கு ஏற்ற தேசியக்கல்வி முறையும் கைக்கொள்ளவேண்டும் என்றும் ஒரு தீர்மானம் பிறந்தது. அம் மூன்றும் கைகூடக் கைகூட, சுயராஜ்யம் என்பதும் கிட்ட நெருங்கும் என்பதே தீவிரவாதத் தலைவர்களின் கருத்தாம். எனவே சுதேசியம், பகிஷ்காரம், தேசீயக் கல்வி, சுயராஜ்யம் இவையே காங்கிரசின் இலட்சியங்கள் என்று 1906-ஆம் ஆண்டிலே கல்கத்தாவில் கூடிய காங்கிரஸில் தீர்மானங்கள் பிறந்தன.

மக்களின் மனத்தைக் கவர, தேசிய நாமாவளி வேண்டும். பங்கிம சந்திர சட்டர்ஜி எனும் வங்காள மேதை

பாடியிருந்த வந்தேமாதர கீதம் பிரபலம் ஆயிற்று. அக் கீதத்தை முற்றிலும் சொல்ல முடியாதோர் வந்தே மாதரம் என்பதை தேசிய நாமாவளியாகக் கொண்டனர்; ஒருவரை யொருவர் சந்திக்கும் பொழுதும், பொதுக் கூட்டங்கள் கூடும்பொழுதும், வந்தேமாதரம் என்னும் கோஷம் வானை முட்டும்

வந்தேமாதரம் என்றால், தாயே உன்னை வணங்கு கிறேன் என்பதே பொருளாம் அது தேச பக்தவாசக மாகவும் வீரகோஷமாகவும் விளங்கத் தலைப்பட்டவுடனே, அதிகார வர்க்கம் வெருளத் தலைபபட்டது. அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேயாகத்தானே தென் படும். தேசிய விரதத்தை எங்கும் பரப்பவேண்டி, நாடெங்கும் கூட்டங்கள் நடந்தன. அதற்கு முன்னம் ஆங்கில அதிகாரியைக்கண்டு, அஞ்சி நின்ற நம்மவரில் பலரும் அதன்பின் தலைநிமிர்ந்து நடக்கத் தலைபபட்டனர்.

அதுகண்டு, பொதுக்கூட்டங்களைக் கலைக்கவும், மக்களுக்கு அச்சம் ஊட்டவும் துருப்புகள் தருவிக்கப் பட்டன; தடியடிப் பிரயோகம் தாராளமாக நடந்தது. ஆட்சிமுறையும் கனமிடுக்காக மாறிற்று. அடக்குமுறைச் சட்டங்கள் பல எழுந்தன. போலீஸாரும் துருப்புகளும் சில இடங்களிலே மாதரிடம அவமரியாதையாக நடந்து கொண்டனர். கொள்ளவே, அடி உதவுவதுபோல், அண்ணன் தம்பி உதவார் என்று இளைஞர் எண்ணினர்.

காங்கிரஸ் தலைவர்களில் சிறந்த சுரேந்திரநாத பானர்ஜி என்பார் தமது ஞாபகக் குறிப்பில் எழுதி யிருப்பது இது:—ஒருநாள் என்னைக் காண இரண்டு இளை ஞர் வந்தனர்; இருவரும் கலாசாலை மாணவர். கிழக்கு வங்காள கவர்னரான ஸர், புல்லர் என்பாரைச் சுட்டுப்

போட எண்ணியுள்ளோம். நமது மாதரை அவரது துருப்புகள் மானபங்கம் செய்கின்றன. இனி எங்களால் சகிக்க முடியாது. இதோ போகிறோம். தங்களிடம் கூறிச் செல்லவே வந்தோம்.

சுவரின் மீது கல்லையோ பந்தையோ வீசினால் அது வீசினவரிடமே வந்துவிழும் அல்லவா? இனி தேசிய இயக்கம் வங்கத்திலே வலுத்ததற்கு ஓர் உதாரணம். சீமைத் துணியை விற்பதில்லை என்று எல்லா இந்திய வியாபாரிகளும் முடிவு செய்துவிட்டனர். ஒரு ஜில்லாவிலே ஆங்கில கலெக்டர் நேரில் வந்து, சீமைத்துணி ஒரு முழம்வேண்டும் என்றான். கடைக்காரர் அனைவரும் மறுத்தனர். பின்பு அவன் சீமை உப்பு சிறிதளவு வாங்கப்பார்த்தான். அதுவும் கிட்டவில்லை.

வங்கத்தில் தோன்றிய தேசியக் கிளர்ச்சி, தெற்கே குமரிவரையில் பரந்தது. தூத்துக்குடியிலே வ. உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவம் முதலியோர் அக்கிளர்ச்சியை நம் தமிழகமெங்கும் பரப்பினார், சுதேசியக் கப்பல் ஓட்டவும் முனைந்தனர். தேசிய கவிஞரான சுப்பிரமணிய பாரதியார் வங்க மொழியில் இருந்த அந்த வந்தே மாதர கீதத்தை நமது தமிழ் மொழியிலே


வ. உ. சிதம்பரம்பிள்ளை

பாடிவைத்தார்; மக்களின் எழுச்சியை ஓங்கவைக்க வேறு பல பாடல்களும் பாடினார்.

விபின சந்திர பாலர் என்பார் தென்கோடிவரையில் வந்து, தமது வாக்குவன்மை மூலம் மக்களைத் தட்டி எழுப்பினார். மகாராஷ்டிரத்திலோ திலகர் என்பார் எங்கும் சுதந்திரத் தீ மூட்டினார். சீமை ஜவுளிகளும் சாமான்களும் எங்கும் மலைபோல் குவிக்கப்பட்டு, தீக்கடவுளுக்கு ஆகாரம் ஆயின. நாட்டுத் தொழில்களும் பொருள்களும் கொழிக்கலாயின. ஆங்கிலேயரின் வர்த்தகம் பெரிதும் குன்றியது.

நமது வரிப் பணத்தைக்கொண்டு சம்பளம் வாங்கிக் காலந்தள்ளும் அரசப் பிரதிநிதிமுதல் கிராம வெட்டியான் வரையில் அனைவரும் பொதுஜன சேவகராயிருக்க, அவர்களைக் கண்டு நாம் வீணே அஞ்சி அழிவதேன்? எனும் எண்ணம் மக்களின் மனத்திலே வேரூன்றியது. மிதவாதிகள் என்போர் அந்நிலைகண்டு உள்ளூர அச்சம் எய்தினர். சட்டசபையில் அவர்களின் உதவிகொண்டு கனமிடுக்கான சட்டதிட்டங்கள் செய்து வந்தனர் அதிகார வர்க்கத்தார்.

இவ்வளவு மிடுக்கும் துடுக்குமான சட்டதிட்டம் கூடாதென்றும் அம் மிதவாதிகளும் மன்றாடிப்பார்த்தும், அதிகாரவர்க்கம் கேட்கவில்லை. தீவிரவாதிகளின் தலைவர்களிலே பலரை நாடுகடத்தினர் அதிகாரிகள்; சிலரைச் சிறைக்குள் தள்ளினர். பாலகங்காதர திலகரைச் சிறை செய்து, அவர்மீது வழக்கு நடத்தி அவருக்கு ஆறு வருட தீவாந்தர சிட்சை விதித்து, இரவோடு இரவாக எவருக்கும் தெரியாமல் எங்கேயோ கொண்டுபோயினர்.

மறுதினம் பொழுது புலர்ந்ததும், பம்பாய் நகரிலே அமளிகுமளி ஏற்பட்டது. துருப்புகள் தோன்றித்

துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். நூற்றுக்கணக்கான மக்கள் காயமுண்டு வைத்திய சாலையில் கிடந்தனர். மூன்றுநாள் பம்பாய் நகரம் அமைதி கொள்ளவில்லை. கவர்னர் அது அறிந்து நேரில் சென்று, காயமுண்டோரைப் பார்வையிட்டு, மக்களுக்குச் சாந்தம் ஊட்ட நேர்ந்தது. பின்பே நகரம் ஓரளவு அமைதி கொள்ளலாயிற்று.

பஞ்சாப் மாகாணத்திலும் லாலா லஜபதிராய், அஜீத் சிம்மன் இவர்களை நாடு கடத்தியது அரசாங்கம். அடிமேல் அடி யடித்தால் அம்மியும் நகரும் என்று அதிகார வர்க்கம் எண்ணிவிட்டது. அதனால் அடக்குமுறை கரைகடந்து போயிற்று. குத்திக் கிளப்பின், மாநாகம் சீறிப்படமெடுக்கும் அன்றோ? இதனை அதிகாரிகள் உணர்ந்து கொள்ளவில்லை.

அக்காலத்திலே ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக ருஷியாவில் சுதந்திர புருஷர் துப்பாக்கியும் வெடிகுண்டும் கையாண்டு கருமம்புரிந்து வந்தார்கள் அதனைப் படித்து, நமது இளைஞரும் மேனாடுகளிலிருந்து கள்ளத்தனமாக ஆயிரக்கணக்கில் துப்பாக்கிகள் தருவித்தார்கள். நண் குத்திப் பாம்புபோல, அதிகாரவர்க்கம் எவ்வளவோ தடைசெய்து பார்த்தும், துப்பாக்கிகளின் இரகசிய இறக்குமதி குன்றவில்லை.

சீமையிலே பாரிஸ்டர் பட்டம் பெறச் சென்றிருந்த விநாயக் தாமோதர ஸாவர்க்கார் என்பார் அங்கே வெடிகுண்டு தயாரிக்கும் முறையை அறிந்து, அதனை ஏட்டில் எழுதி வெகு தந்திரமாக இங்குள்ள இளைஞருக்கு அனுப்பினார். உடனே வெடிகுண்டுகள், இங்கே ஏராளமாகத் தயார் செய்யப்பட்டன. வெடிகுண்டுக் கிடங்குகள் பெருகின. இளைஞரிலே பலர் அந்தரங்கமாக வெடிகுண்டு

பண்ணவும், துப்பாக்கி கொண்டு சுடவும் பயின்று வந்தனர். குளிக்கப்போய்ச் சேற்றைப் பூசிக்கொண்டது போல் அதிகாரிகளின் முயற்சி முடிந்தது.

வெகுண்டெழுந்து விட்ட இளைஞரையும் ஜனங்களையும் அடக்க முடியாமல், அதிகார வர்க்கம் விழிக்கலாயிற்று. அதிகார அடக்கு முறைகளைக் கண்டியாமலும் சுயராஜ்ய முயற்சியில் முனையாமலும் நடந்துவரும் காங்கிரஸ் மகாசபை எதற்கு என்று சிலர் நினைத்து, 1907-ஆம் ஆண்டு சூரத் நகரிலே அச்சபையை முறித்துப் போட்டனர். மித வாதிகளின் பாடு வெகு திண்டாட்டமாகி விட்டது. தேச மக்களைப் பார்ப்பதா? அதிகார வர்க்கத்திடம் அண்டிநிற்பதா?

மிதவாதிகளையேனும் வசம் செய்து கொள்ள வேண்டும் என்று 1909 ஆம் ஆண்டிலே அரசு முறையில் ஓரளவு திருத்தம் செய்தனர் இங்கிலாந்தின் மந்திரிகள். அது, கண்ணைத் துடைக்கும் உபாயமாகவே இருந்தது. கிடைத்தது கொண்டு, திருப்தி அடைவோம் என்று மிதவாதிகள் நினைத்தாலும், தேசமோ ஒப்பவில்லை. வீறிட்டெழுந்த இளைஞரும் அடங்கின பாடில்லை.

31 கலகச் சதிகள்

அன்னிய அதிகார வர்க்கத்தை ஒழித்துக் கட்ட வேண்டும் என்று தேச இளைஞரில் பலரும் தீவிரமடைந்தனர். அதனால் ஆங்காங்கே இளைஞரின் இரகசிய சங்கங்கள் முளைத்தன. தேசத்திலே புதிய புதிய பத்திரிகைகள் தோன்றி, இளைஞருக்கு ஊக்கமும் உத்சாகமும் ஊட்டி வரலாயின. அவற்றில் ஒன்று "யுகாந்தரம்" எனப்படும்.

சீமை சென்று, சிவில் சர்விஸ் பரிட்சையில் தேறியும் உத்தியோகம் கிட்டப் பெறாத பாபு அரவிந்தகோஷ்

என்பார் மாதம் ஆயிரத்துக்குமேல் ஊதியம் கொடுத்து வந்த பேராசிரியர் பதவியை விடுத்து, "யுகாந்தரம்," "வந்தேமாதரம்" என்னும் பத்திரிகைகளின் ஆசிரியராக அமர்ந்தார். அவரது பேனா முனை உடைவாளினும் கூர்மை உடையது. ஆதலின் அவரது எழுத்துக்கள் இளைஞரின் நெஞ்சத்தை அள்ளின.

கடமையை ஆற்றுங் காலையில், உற்றார் என்றும் உறவினர் என்றும், ஆசிரியர் என்றும் அன்பர் என்றும் பாராமல், பணி புரிய வேண்டும் என்னும் கீதா வாக்கியத்தை அவர் அற்புதமாக விளக்கி உரைத்தார்: தேச மக்களிடையே சுதந்திர தாகத்தை எழுப்பினார். அது கண்ட இளைஞர் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச சேவையில் அர்ப்பணம் செய்யத் தலைப்பட்டனர்.

தேசத் தலைவர்களையும், பிறரையும் கொடிய தண்டனைக்கு ஆளாக்கும் அதிகாரிகளைச் சுட்டுத் தள்ள அந்த இளைஞர் எழுந்தனர். மக்களின் வெறுப்புக்கு ஆளான கல்கத்தா மாஜிஸ்ட்ரேட் என்னும் அதிகாரியின்மீது குதிராம்போஸ் என்னும் வங்க வாலிபன் வெடிகுண்டு ஒன்று வீச, அது தவறி இரண்டு ஆங்கில மாதரைக் கொன்று விட்டது. அவனைச் சிறை செய்து வழக்கு நடத்தவே, அந்த அதிகாரியைக் கொல்லவே துணிந்தேன் என்று அவன் துணிந்து வாக்கு மூலம் கொடுத்தான்.

முடிவில் அவனுக்குத் தூக்குத் தண்டனை கிட்டியது. பத்தொன்பது வயது வாலிபன் பரம களிப்புடன் தூக்கு மேடையிலே தனது ஆவியை விடுத்தான். அவனது உடலத்தை மயானத்துக்கு எடுத்துச் சென்று தீ மூட்டி அடக்கம் செய்தனர். வீர வாலிபனது உடலம் வெந்து சாம்பலாக, ஆயிரக் கணக்கான மக்கள் சென்று, அச்

சாம்பலைத் திருநீறுபோல் மதித்துத் திலகம் இட்டுக் கொண்டனர்.

இளைஞரில் சிலரோ அக் குதிராம்போல் செயலாற்ற முனைந்தனர். அவர்களை நம்மவரான சிலர் காட்டிக் கொடுத்தனர். நம்மவரான போலீசாரும் அன்னவரைத் துரத்திச் சிறை செய்தனர். செய்யவே, அவர்களையும் சுட்டுத்தள்ள வாலிபர் தயங்கவில்லை. அத்தகைய வாலிபரில் ஒருவன் கன்னையாலால் தத்தன் எனப்படுவான். இவனும் புன் சிரிப்புடன் தூக்கு மேடையில் தாவி ஏறினான்.

வெளி நாடுகளிலிருந்து துப்பாக்கிகள் தருவிப்பதில் கஷ்ட நஷ்டம் நேர்தல் கண்டு இங்கேயே ஆயுதங்கள் தயாரிக்கும் சாலைகள் பல அந்தரங்கமாக அமைந்தன வெடிகுண்டு செய்யும் தொழிற்சாலைகளும் பெருகின அதிகார வர்க்கம் அடக்குமுறை ராஜ்யம் நடத்தியது என்றால், வாலிபரோ வெடிகுண்டு ராஜ்யம் நடத்தி வந்தனர். அது அறிந்த அதிகாரிகளுக்கு அச்சம் பிறந்தது.

வங்காளத்தில் மட்டும அல்லாமல், பம்பாய் மாகாணத்திலும் இளைஞரின் பயங்கரச் செயல்கள் பரவின. ஆங்கில அதிகாரிகளில் சிலர் கொல்லப்பட்டுப் போயினர். அக்கொலையாளரைப் பிடித்துக் கொடிய தண்டனைக்கு ஆளாக்கியும், பயங்கரச் செயல்கள் தணியவில்லை. பஞ்சாபகம், பீஹார், குவாலியர் இந்த இடங்களிலும் அச் செயல்கள் நடந்து வந்தன.

சுயநலத்தைச் சிறிதும் கருதாமல், தேச நலத்தையே கருதிக் கொலை புரிதல் புண்ணியமே, பெருமையும் ஆகும் என்னும் எண்ணம் இளைஞரின் மனத்தில் பதிந்துவிட்டது. அன்னை பணியில் ஆவி துறத்தல் அரிய

பேரும் என்று ஆயிரக் கணக்கில் வாலிபர் முன் வந்ததைக் கண்டு, தேசம் திடுக்கிட்டது. சுதந்திர மகாயுத்த சபயத்திலே சிப்பாய்களும், பிறரும் பகிரங்கமாக வாளுருவி ஆங்கிலேயரை அன்று எதிர்த்தனர் என்றால், வாலிபரோ இன்று அந்தரங்கமாக மர்மப் போர் புரிந்து வந்தனர்.

அத்தகைய வாலிபரையும் அவர்களது மறைவிடத்தையும் அந்தரங்கமான ஆயுதசாலைகளையும் கண்டறிய, அதிகாரவர்க்கத்தினால் ஆகவில்லை. துரோகிகள் தோன்றி, அதிகாரிகளுக்கு உதவி புரியின், அவர்களின் ஆவி மறுசணத்தில் பறந்துபோம். எனவே துரோகம் விளைக்கப் பலரும் தயங்கி அஞ்சியே கிடந்தனர்.

அன்று இந்தியாவின் ஜனத்தொகை 30 அல்லது 33 கோடி ஆகும். அரசப் பிரதிநிதி முதல் கடைசி அதிகாரி வரையில் உள்ள ஆங்கிலேயர் ஏறக்குறைய இரண்டாயிரம் பேராவர். வர்த்தகத்திலும், தொழிலிலும் ஈடுபட்டுள்ள இதர ஆங்கிலேயரும் இரண்டு அல்லது மூன்று ஆயிரத்துக்குமேல் இல்லை. ஒரு சிலர், வெகு பலரைக் கட்டி ஆளுதல் ஆச்சரியம் அல்லவா ?

அந்த ஆங்கிலேயருக்குப் பாதுகாப்பாகப் போலீசாரும், சேனையும் இருந்தாலும், அவ்விரண்டிலும் இந்தியரே மிக மிக அதிகம். அரசிலே பலவாறான சில்லரை உத்தியோகமும் ஊழியமும் பார்க்கும் இந்தியரும் இலட்சக் கணக்காம். நமது கையைக் கொண்டே நமது கண்ணை ஆங்கிலேயர் குத்துகின்றனர் என்று அந்த இளைஞர் கண்டு, நம்மவரை நயத்தாலும், பயத்தாலும் வசஞ் செய்ய முயன்று வந்தனர்.

வறுமையும், வாழ்வில்லாச சஙகடமும சூழநது நிற்கையில் நம்மவரில் பலரும் வெளிப்படையாக அவ்

வாலிபரை ஆதரிக்கவில்லை; மற்று அதிகாரிகள் மெச்சும் வண்ணம், பகிரங்கத்தில் கண்டித்தும் வந்தனர். மிதவாதிகள் என்போரும் அவ்வாலிபரின் செயலை வெறுப்பதாக விளம்பரம் செய்து வந்தனர். ஆனாலும் ஆங்கிலேயருக்கோ மனத்தகத்தே மிக்க அச்சந்தான்.

அரசப் பிரதிநிதியான லார்டு மிண்டோ என்பார் தமது மனைவியுடன் ஒரு சமயம் ஆமதாபாத் நகரைக் காணச் சென்றார். அவ்வமயம் பிரமாதமான பந்தோபஸ்து ஏற்பாடுகள் இருந்தன. முன்னும் பின்னும், வலப்பக்கமும் இடப்பக்கமும் அரசப் பிரதிநிதியைச் சுற்றி ஆயுதபாணிகளான சிப்பாய்கள் சென்றனர். அப்பொழுதும் அவரது வண்டியை நோக்கி இரண்டு தேங்காய்கள் வீசப் பெற்றன. தேங்காய்தானே என்று எடுத்துப் பார்க்கையில், அவற்றில் ஒன்று வெடிகுண்டாக இருந்து, திடீரென்று வெடித்து, எடுத்துப் பார்த்தவனது கையைப் போசுக்கிவிட்டது.

நாவன்மையில் தனிசிறந்த விபின சந்திர பாலர் என்பார் கல்கத்தாவிலே ஓர் இடத்தில் பேசுகையில் சொன்னது இது:—"நாமெல்லாம் காளி பூஜை செய்கிறோம். காளியே நமக்கெல்லாம் குலதெய்வம். காளியே நம்மை இரட்சிப்பவள். அவளுக்கு நாம் கரிய நிற ஆடுகளைப் பலியிடுதல் சரியன்று. வெள்ளை நிற ஆடுகளையே (அதாவது வெள்ளையரையே) பலியிடுதல் வேண்டும். அங்ஙனமாயின் காரிய சித்தியான சுயராஜ்ய சித்தி எய்துவோம்."

சுதேசியக் கிளர்ச்சியின் காலத்திலே அவர் சென்னை மாநகருக்கு வந்தார். வழியிலே இராஜமகேந்திர புரத்தில் தங்கி, ஒரு கூட்டத்தில் பேசினார். ஆங்கில ஆட்சியைக் கண்டு வெறுப்பதாக அந்நகரின் அரசாங்கக் கலாசாலை

மாணவர் அனைவரும் கலாசாலைக்குப் போகாமல், நகரின் தெருக்களிலே ஊர்வலம் வந்து, சுயராஜ்ய கோஷங்கள் எழுப்பினர்.

பெயர்பெற்ற அப் பேச்சாளர் சென்னைக்கு வந்து கடற்கரையிலே நான்கைந்து நாள் அரிய சொற்பொழிவுகள் ஆற்றினர். அப்போது ஆங்கிலத் துணிமணிகளும் பொருள்களும கடற்கரையிலே குன்றுபோல் குவிக்கப் பெற்று, எரியூட்டப்படவே தீக்கொழுந்து ஆகாயத்தை நோக்கிற்று. மாணவரும் நகர மக்களும் என்றுமில்லாத எழுச்சி கொண்டனர்.

விபினசந்திர பாலர் வந்துபோனதும், திருநெல்வேலியிலே வ. உ. சிதம்பரம் பிள்ளையும், சுப்பிரமணிய சிவாவும் காரசாரமான சொற்பொழிவுகள் நிகழ்த்தினர் ஆங்கில ஆட்சிமுறையை ஒழித்தே தீர வேண்டும். இதற்கு சுதேசிய விரதமே சஞ்சீவியாம். அவ்விரதத்தை எல்லாரும் மேற்கொண்டு நடந்து வந்தால், மூன்றே மாதத்தில் சுயராஜ்யம் அடைந்து விடலாம் என்று அவ்விருவரும் பேசினர்.

அவர்களின் பேச்சோ மக்களிடையே ஊக்கத்தை ஊட்டி, மனக்கிளர்ச்சியை வானுற வளர்த்தது. அது கண்டு, அதிகாரிகள் அஞ்சிப் போயினர். இருவரையும சிறை செய்யப் போன சமயம், ஏராளமான போலீசார் பக்கத்தில் இருந்தும், அவர்களை நெருங்க மனம் துணியவில்லை. முடிவில் ஒருவாறு இருவரையும் சிறை செய்தனர். அவ்வளவுதான் தாமதம்.

திருநெல்வேலி மக்கள் திரண்டெழுந்து, வெகுளி கொண்டு அரசாங்கக் கட்டிடங்களை எல்லாம் தாக்கித் தகர்த்தனர். கச்சேரியில் இருந்த கடிதங்களை எல்லாம்

தீயிலிட்டுக் கொளுத்தினர். ஒன்று இரண்டு நாள் மக்களின் அல்லோலகல்லோலம் தணியவில்லை. அதிகாரிகளின் ஆணவமும் தலை தூக்கவில்லை. யாது விளையுமோ? உயிர்தான் போகுமோ? என்று நடுங்காத அதிகாரி கிடையாது.

இரு தலைவர்களையும் சிறை செய்த உடனே, கிருஷ்ண நகரில் பிரசுரமான "சுயராஜ்யா" என்னும் தெலுங்கு வாரப்பத்திரிகை இவ்வாறு எழுதியது:—"பறங்கியே! கொடிய புலியே! காரணமின்றி மூன்று இந்தியத் தலைவர்களை விழுங்கிவிட்டாய். நீ செய்த சட்டத்தை நீயே புறக்கணித்து விட்டாய். அச்சப்பேய்க்கு ஆளான ஆசாமியே! இந்தியரிடையே தேசீய எழுச்சி கண்டதும், நீ வெலவெலத்துப் போனாய். என்னே! உனது இழிநிலை."

கிருஷ்ணசாமி சர்மா என்னும் பதினைந்து வயதுப் பாலன் கருரிலே ஒரு கூட்டம் போட்டு, "மக்களே! தூத்துக்குடியில் சுதேசீயம் ஓங்கியதும், பரதேசியின் கோர்ட்டுகளும், கச்சேரிகளும் பாழாகிவிட்டன. நீங்களும் அவ்விதம் செய்தால் என்ன? இம்மாகாணத்தில் உள்ள பட்டாளம் கூலிப்பட்டாளந்தானே. வயிற்றுக்கு இல்லாமலேயே நமது சிப்பாய்கள் அப்பட்டாளத்தில் சேர்ந்துளர். நமது பாரதத்தாய் விடுதலை பெற அப்பட்டாளம் உதவி புரியக் கூடாதோ?" என்று பேசினான். இது நிற்க,

நமது சென்னை மாகாணத்திலே பெரிய சதிக் கூட்டம் ஒன்று அந்தரங்கமாக இருந்து வந்தது. அக் கூட்டத்தினரின் தொகை மூவாயிரம் ஆகும். ஆங்கில ஆட்சியை அறவே ஒழிப்பதே அதன் நோக்கம். அக் கூட்டத்தார் தினம் கைத்துப்பாக்கிகொண்டு சுட்டுப்

பழகுவர். காலஞ்சென்ற வ. வே. சு. ஐயர் என்பார் அத் துப்பாக்கிப் பயிற்சியின் ஆசிரியராக விளங்கியவர்.

சமயம் வாய்த்தபோது கல்லோ, கம்போ, கத்தியோ, துப்பாக்கியோ கொண்டு வெள்ளையரை அழிப்பதே அவர்களின் விரதமாம். அவர்களில் ஒருவர் வாஞ்சி ஐயர் என்னும் இளைஞர். அப்போது திருநெல்வேலியில் கலெக்டராக இருந்த ஆஷ் என்னும் ஆங்கிலேயன் மிகவும் துடுக்காக ஆட்சி நடத்தி வந்தான்.

தூத்துக்குடியிலிருந்து அக் கலெக்டர் ரயில் வண்டியிலே முதல் வகுப்பில் பிரயாணம் செய்தான். வாஞ்சி ஐயரும் ஒரு பிரயாணிபோல் அவ் வண்டியில் இருந்தார். மணியாச்சி என்னும் ரயிலடியை அவ்வண்டி கிட்டியது. உடனே வாஞ்சி ஐயர் முதல் வகுப்பில் புகுந்தார் தனது கைத்துப்பாக்கியை எடுத்து அவனைச் சுட்டுக் கொன்றார். பிறகு தன்னையும் சுட்டுக்கொண்டு செத்துப்போனார்.

வ. வே. சு. ஐயர் என்பவர் சீமையிலே சாவர்காரின் சகாவாக இருந்தவர். பிறகு பிரான்சு தேசம் சென்று, அங்கிருந்த சாமாஜி கிருஷ்ணவர்மா, மாதா காமா என்னும் இருவருடன் நெருங்கிப் பழகியவர். அந்த இருவரும் தமது திரண்ட சொத்தைக்கொண்டு ஏராளமான துப்பாக்கிகள் வாங்கி, இந்தியாவுக்கு இரகசியமாக அனுப்பி வந்தவர்கள். அவ்விருவரின் நடமாட்டம் கண்டு, இங்கிலாந்திலிருந்த ஆங்கிலேயர் பலரும் அச்சம் கொண்டு கிடந்தனரென்றால் வர்மாவின் சதிவன்மையும், காமாவின் மதி நலமும் சொல்லப்போமோ ?

ஆங்கில ஆட்சியை ஒழிக்க வேண்டி அன்னியரையும் அன்னாரைச் சார்ந்து நிற்கும் இந்தியரையும் சுட்டுத் தள்ள வேண்டும் என்னும் சதி முயற்சி வடக்கே பனிவரை முதல் தெற்கே குமரி முனை வரையில் பரந்திருந்தது.

ஆங்கில அதிகாரியைக்கண்டு, வெறுப்புக்கொள்ளாத இந்திய இளைஞரே இல்லை என்னலாம். சென்னை மாகாணச் சதிகாரரில் ஒருவரான நீலகண்ட பிரும்மசாரி என்பவர் தமது உடைமறைப்பில் கைத்துப்பாக்கி இல்லாமல் வெளியே கிளம்புவது கிடையாது தனிப்பட்ட போலீஸ் அதிகாரி தூரத்திலே அவரைக் கண்டால், அஞ்சியோடிப் பதுங்கிக்கொள்வான். அவரைச் சிறை செய்ய, அன்று இருந்த போலீசார் மாதக் கணக்காக முயன்றும் பலிக்க வில்லை.

குப்புற வீழ்ந்தாலும், மீசையில் மண் ஒட்டவில்லை என்பர். அதுபோல் அதிகார வர்க்கம் நடந்து வந்தாலும், வங்காளப் பிரிவினையை ரத்து செய்துவிடவேண்டும் என்று இந்தியா மந்திரிக்கு வற்புறுத்தி வந்தது. அது தீர்ந்து போன விஷயம், இனி அதைப்பற்றிப் பேசிப் பயனில்லை என்று அம்மந்திரி பல முறை பிடிகொடுக்காது பதிலளித்தும் என்ன? கொள்ளிக் கட்டைகொண்டு, தலையைச் சொரிந்து கொள்வதுபோல் வங்காளப் பிரிவினையை மேற்கொண்டோமே என்று அம் மந்திரி மிகவும் வருந்தி நின்றார்.

அதிகாரிகளின் அடக்குமுறை ஒரு பக்கமும், இளைஞரின் பயங்கரச் செயல் ஒரு புறமும் முட்டிக் கொண்டு நிற்கையில், அரசப் பிரதிநிதியான லார்டு மிண்டோ என்பார் திகைத்தார். அதிகார வர்க்கமும் திகைத்தது என்பதில் தடையில்லை. அதன்மேல் லார்டு மிண்டோ இங்கிலாந்தில் உள்ள இந்தியா மந்திரியுடன் கடிதப்போக்கு வரவு நடத்தினார் அதன் விளைவாக மிண்டோ-மார்லி திருத்தங்கள் ஏற்பட்டன. வெடிகுண்டு வீச்சே அத் திருத்தங்களுக்குக் காரணம் என்று மிண்டோ பிரபு ஒப்புக் கொண்டுள்ளார்.

32. ஜெர்மன் உதவி

ஐரோப்பாவிலே இங்கிலாந்து ஒரு சிறிய தீவே. பரப்பிலும் ஜனத் தொகையிலும் நமது சென்னை ராஜ்யத்துக்கு அது ஈடாகாது. ஆயினும் அதனிடம் மிகப் பெரிய கப்பற்படை உண்டு. அப்படை பெரு வன்மை வாய்ந்தது. அத்தகைய படை வேறு எத்தேசத்தினுக்கும் அன்று கிடையாது. ஆதலின் "கடலரசி" என்று அதனை அழைத்து வந்தனர் அனைவரும்.

மேலும் உலகின் எல்லாப் பாகங்களிலும் இங்கிலாந்துக்குச் சொந்தமான நாடுகள் பல இருந்தன. அதன் வர்த்தகமும் தொழில்களும் மிக அதிகமாம். இராஜதந்திரத்திலே அது தலை சிறந்து நின்றது. அந்நாளில் உலக வல்லரசுகளில் அதுவே முதன்மையானது. இதர வல்லரசுகளுக்கு அதனைக்கண்டு ஒரு பக்கம் பகைமையும், ஒரு பக்கம் வெறுப்பும் விளைந்திருந்தன.

மிகப் பரந்த நமது பாரத பூமி அதற்கு உட்பட்டிருந்ததே அதன் பெருமைக்கு முக்கிய காரணமாம். ஆகவே இந்தியாவை ஆண்டு அனுபவிக்க வேண்டும் என்று ஏனைய வல்லரசுகளுக்கு நீண்ட நாளாக ஆசை மிகுந்திருந்தது. அது பற்றியே, ருஷியப் படையெடுப்பு நேருமோ என்று அது இத் தேசத்திலே மிகவும் ஜாக்கிரதையாக இருந்து வரலாயிற்று.

வல்லரசாக வளர்ந்து வந்த ஜெர்மனிக்கு அந்த இங்கிலாந்தின் மீது பொறாமை அதிகம் உண்டு. அதன் பலத்தைக் குறைக்கவும் ஜெர்மனி சமயம் பார்த்து நின்றது. முதல் உலக மகா யுத்தத்தினுக்கு அப் பொறாமையே காரணம் என்னலாம். இங்கே இங்கிலாந்து கையாண்டு வந்த மிடுக்கான ஆட்சியினையும், அதற்கு எதிராக இந்திய

இளைஞர் பரப்பி வந்த பயங்கரச் செயல்களையும் ஜெர்மானியர் கூர்ந்து கவனித்து வந்தனர்.

பயங்கரக் குழுவைச் சேர்ந்த லாலா ஹரிதயால் என்னும் இளைஞன் அமெரிக்கா சென்று, ஆங்கிருந்த நம்மவரிடம் இராஜத்துவேஷத்தை மிகவும் பரப்பி வந்தான். அங்கிருந்து இந்தியாவுக்கு ஆயுதங்கள் அனுப்பவும் முயன்று நின்றான். அமெரிக்காவின் அரசு அவனைக் கண்காணித்து வந்தது. இதற்குள் உலக மகா யுத்தம் ஏற்படும் என்று அவனுக்குத் தோன்றிற்று.

ஆதலின் இங்கிலாந்தின் விரோதியான ஜெர்மனிக்கு அவன் சென்றுவிட்டான்; ஆங்கிருந்து இங்கிலாந்துக்கு எதிராகப் பிரசாரம் செய்து வந்தான்; இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஜெர்மன் அதிகாரிகளின் ஆதரவையும் நாடி நின்றான். அச் சமயத்தில் திருவாங்கூர் வாசியான ஷண்பகராமப் பிள்ளை என்னும் இளைஞனும் ஜெர்மனியின் ஆதரவை அடைய ஸ்விட்சர்லாந்து தேசம் சேர்ந்தான். ஆங்குள்ள ஜெர்மன் அதிகாரியின் உதவியையும் நாடி அடைந்தான்.

முதல் உலக மகா யுத்தம் மூண்டதும் அப்பிள்ளையும் ஜெர்மனி சேர்ந்து ஹரிதயாளுடன் கூடி வேலை செய்து வந்தான். யுத்த சமயத்திலே இந்தியாவில் கலகத்தை மூட்டிவிட்டு, அதற்குரிய ஆயுதங்களை எல்லாம் அனுப்பி வைப்பதே அவ்விரு இளைஞரின் நோக்கமாம். யுத்தத்திலே ஜெர்மனியிடம் சிக்குண்ட இந்திய சிப்பாய்களை அவ்விருவரும் கண்டுபேசி, இங்கிலாந்துக்கு உதவி புரிதல் அடாது என்று அறிவுறுத்தி வந்தனர்.

அந்த யுத்தத்தின்போது இந்தியாவிலிருந்து பதினாயிரக் கணக்கான சிப்பாய்கள் சென்று, ஐரோப்பாவின் போர் முனைகளிலே இங்கிலாந்துக்குத் தலை கொடுத்து

கின்றனர். இங்குள்ள இந்தியரும், பணமும் பிறவும் பெரு வாரியாகக் கொடுத்து இங்கிலாந்துக்கு உதவி வந்தனர். அந்த உதவியைத் தடுக்க வேண்டின் இந்தியாவில் சுதந் திரக் கலகம் மூளவேண்டும் என்பதே, இந்திய இளைஞரின் முனைப்பாம். இதற்கு ஆயுதங்கள் ஏராளமாக வேண்டும்.

பயங்கரக் குழுவைச் சேர்ந்தோர் ஜெர்மனியில் மட்டு மல்லாமல் சீனு, ஜப்பான், பர்மா, சயாம், மலாய்த் தீவுகள் இவற்றின் முக்கிய நகரங்களிலும் இருந்து வந்தனர். அவர்கள் ஆங்காங்குள்ள ஜெர்மன் தானுதிபதிகளுடன் தொடர்பு கொண்டு, விரும்பிய உதவி பெற முயலாநின் றனர். இந்திய இளைஞருக்கு இயன்ற உதவியெல்லாம் புரிய வேண்டும் என்று ஜெர்மனியிலிருந்து அத் தானுதி பதிகளுக்கு அந்தரங்கமாகத் தாக்கீது போயிற்று.

அத் தாக்கீதை அறிந்ததும நரேந்திரன், பிங்கலன் ஆகிய இருவரும் தந்திரமாக ஐரோப்பாவிலிருந்து இந்தி யாவுக்கு வந்து சேர்ந்தனர். சேர்ந்ததும, இங்குள்ள பயங் கரக் குழுவினரைக் கண்டு, ஜெர்மனியின் உதவி கிட்டு மென்று கூறினர்; சயாம், மலாய் ஆகிய நாடுகளுக்குத் தூது அனுப்பினுல் ஆயுதங்கள் கிடைக்கும் மார்க்கம் புலப்படும் என்றும் புகன்றனர். பின்பு பிங்கலன் பஞ்சாப் சென்றான் கலகம் மூட்ட.

அப்பால் நரேந்திர பட்டாச்சாரி என்னும் இளைஞன் கல்கத்தாவிலிருந்து பயணமாகி சயாம் (இப்போது தாய் லாந்து எனப்படும்) நாட்டின் தலைநகரான பாங்காக் போய்ச் சேர்ந்தான்; அங்குள்ள இந்திய இளைஞருடன் கலந்து பேசினுன்; மார்டின் என்னும் புனைப் பெயர் பூண் டான்; அங்குள்ள ஜெர்மன் தானுதிபதியைக்கண்டு பேசி யதும், "வர்த்தகம் சரிவர நடக்கும். கவலை வேண்டாம்"

என்று கல்கத்தாவில் இருந்த ஹாரி அண்டு சன்ஸ் என்னும் கம்பெனிக்குத் தந்தி பேசினான்.

ஆங்கில அதிகார வர்க்கத்தின் கண்ணில் மண்ணைத் தூவவேண்டும் என்னும் கருத்துடனேயே கல்கத்தாவில் ஆங்கில நாமம் படைத்த அம் மாயக்கம்பெனி இருந்து வந்தது. மார்டின் என்று பட்டாச்சாரி புனைபெயர் பூண்டதும் அக் காரணம் பற்றியேயாம். மார்டின் கொடுக்த தந்தியின் வண்ணம் ஏராளமான ஆயுதங்கள் இங்கேவந்து சேரும். வந்ததும் அவற்றையெல்லாம் ஓரிடத்தில் பத்திரமாகப் பாதுகாத்து வைக்க ஓர் இந்திய வியாபாரி ஒப்புக்கொண்டான். அப் பிரபல வர்த்தகன் கல்கத்தா வாசி.

கள்ளத்தனமாகக் கப்பலில் வரும் ஆயுதங்களை இரவோடு இரவாக இறக்கி வைப்பதற்குரிய ஆட்களை எல்லாம் தருவதாக ஒரு பிரபல ஜெமீன்தாரன் இசைந்தான். அமெரிக்காவை அடுத்த நாடுகளில் ஆயுதங்களை ஏராளமாக வாங்கி வைத்துக்கொண்டு அங்கே நடுக்கடலில் ஒரு பகுதி காத்திருக்க, அமெரிக்காவிலிருந்து புறப்பட்டு வரும் ஒரு கப்பல் வழியிலே அப்படைகை சந்தித்து ஆயுதங்களை எல்லாம் ஏற்றிக்கொண்டு, சிங்கப்பூர், ஜப்பான், சீனா, சயாம், பர்மா மார்க்கமாக இந்தியாவுக்கு வரும்.

வருகையில் ஆங்காங்குள்ள முக்கிய துறைமுகங்களில் காத்திருக்கும் இந்திய இளைஞரையும், ஆயுதங்களையும் ஏற்றிக்கொண்டு, கல்கத்தாவுக்கு அருகேயுள்ள கடற்கரைக்கு அக் கப்பல் வந்துசேரும்; இன்னும் இரண்டு அல்லது மூன்று இந்தியத் துறைமுகங்களை அடுத்த கடற்கரை சேர்ந்ததும் கள்ளத்தனமாக ஆயுதங்களை இறக்கும். அங்கெல்லாம் இளைஞர் காத்திருந்து ஆவன செய்வார்.

அம்மாயக் கப்பலிலே இலட்சக் கணக்கில் துப்பாக்கிகளும், தோட்டாக்களும், ஏராளமான வெடி மருந்தும்

வந்து சேரும். சேர்ந்ததும் அந்த ஆயுதங்களை அந்தரங்கமாக இளைஞருக்கு வழங்கி, ஒரு நாள் திடீரென்று கிளம்பி கல்கத்தாவிலுள்ள ஆயுத சாலையைத் தாக்கி, அங்குள்ள கஜானாவையும் கொள்ளையாடி, அப்பால் ஆங்கிலப் படைகளை எதிர்க்க இளைஞர் திட்டம் போட்டிருந்தனர். இம்மட்டோ அத் திட்டம்?

கல்கத்தாவிலுள்ள கோட்டையைத் தாக்கிப் பிடிக்க வேண்டும்; நகரையும் வசஞ்செய்து கொள்ள வேண்டும். அவ்விதமெல்லாம் செய்கையில், பிற இடங்களிலிருந்து கல்கத்தாவுக்கு ஆங்கிலத் துருப்புகள் வரலாம். அதனை முன்னிட்டு, கல்கத்தாவுக்கு வரும் முக்கியமான ரயில் பாதைகளில் உள்ள வாராவதிகளை இடித்துத் தள்ளவேண்டும். தள்ளின், துருப்புகள் வர முடியா. இவையும் அத் திட்டத்தில் அடங்கும். இன்னின்ன பாலங்களை இன்னின்னார் இப்படி யிப்படி உடைத்தெறிய வேண்டும் என்றும் குறிப்பான நபர்கள் திட்டமாயினர்.

ஈது இங்ஙனமிருக்க, சயாம் நாட்டிலிருந்து ஓர் இளைஞன் கல்கத்தா சேர்ந்து, பாங்காக் நகரிலுள்ள ஜெர்மன் தானாதிபதி தனது தனித்தன்மையில் ஐயாயிரம் துப்பாக்கிகளும், ஏராளமான வெடி மருந்தும், எட்டு இலட்சம் ரூபாயும் இன்ன தேதியில் அனுப்புவான் என்று ஆத்மாராமன் என்பான் சொன்னதாக அறிவித்தான்.

ஜெர்மன் கப்பலில் வந்திறங்கும் ஆயுதங்களை ஒப்புக்கொள்ள கோஷ் என்பான் ரவிமங்கலம் என்னும் கடலோரம் சென்று காத்திருந்தான். 1915-ஆம் ஆண்டு ஜூன் மாதத்திலேயே அவை வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஒருவாரம் காத்திருந்தும் கப்பல் வந்து சேரவில்லை. காத்திருந்த இளைஞன் வெறுங்கையுடன் திரும்ப நேர்ந்தது. இதற்கு இடையில் மார்டின் என்

பான் பாங்காக் நகரிலிருந்து இரண்டு மூன்று தவணைகளில் பதினைபிரக்கணக்கான ரூபாய் அனுப்ப, அது ஹாரி அண்டு சன்ஸ் என்னும் மாயக் கம்பெனிக்கு வந்து சேர்ந்தது.

கடைசித் தவணையில் பணம் வந்து சேரும்பொழுது போலீசார் சந்தேகங்கொண்டு அம்மாயக் கம்பெனியைச் சோதனைபோட்டு இரண்டொருவரைச் சிறை செய்தனர். அக்கம்பெனியின் கிளை ஒன்று பாலசுரம் என்னும் நகரில் இருந்தது. அங்கும் போலீசார் சோதனை போடுகையில் அவர்களுக்கும் இளைஞருக்கும் சண்டை மூண்டது. அதில் இருபக்கத்தாரிலும் சிலர் இறந்து போயினர்.

இனி, நெடுநாள் வரையில் ஆயுதக்கப்பல் வராது போகவே 1915-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இரண்டு இளைஞர் கோவா நகரம் சென்று மார்டினுக்குத் தந்தி கொடுத்தனர். போர்த்துகல்காரருக்குச் சொந்தமான அக்கோவா நகரினும் போலீஸ் உளவாளிகள் இருந்தார்கள். அத் தந்தியின் வாசகம் கண்டு, சந்தேகங்கொண்டு இரு வங்காளியரை அங்கே அதிகாரிகள் சிறைசெய்தார்கள். அவர்களில் ஒருவனே காவல் கூடத்தில் தற்கொலை செய்து கொண்டான்.

அம்மாயக் கம்பெனியைச் சோதனை இட்டதிலும், கோவா நகரில் புலன் அறிந்ததிலும் போலீஸ் அதிகாரிகளுக்கு மிக்க சந்தேகம் பிறந்தது. அவர்கள் வெகு தந்திரமாக எங்கும் புலன் விசாரித்து வந்தனர். அச்சமயத்தில் மார்டின் என்பானுடன் இருந்த தோழன் சீனாவிலுள்ள ஷாங்காய் நகரம் சேர்ந்து, அங்குள்ள ஜெர்மன் தானாதிபதியுடன் பேசவிரும்பினான். இதற்குள் அவன் சிறைபட்டுப் போயினான்.

இனி ஹேரம்பலால் குப்தா என்பான் அமெரிக்காவி லுள்ள சிகாகோ நகரில் இருந்த ஜெர்மன் தானாதிபதி யுடன் கலந்து பேசி, இந்தியாவுக்கு இரகசியமாக ஆயுதங் கள் அனுப்ப முயன்று வந்தனன். அப்போது இங்கி லாந்தினுடன் நட்புரிமை பூண்டிருந்த அமெரிக்கா தேசம் அந்த ஹேரம்பலாலைச் சிறைசெய்து, வழக்கு நடத்தித் தண்டித்து விட்டது.

ஷாங்காய் நகரிலே சீனாக்காரர் இருவரின் மூலம் துப்பாக்கிகளை இந்தியாவுக்கு அனுப்ப அந்நகரிலுள்ள இந்திய இளைஞர் முயன்றனர். சீனாக்காரரிடம் நூற்றைம் பது கைத்துப்பாக்கிகளும்; இருபதாயிரம் தோட்டாக் களும் கொடுக்கப்பட்டன. அவற்றை கல்கத்தாவிலுள்ள அமரேந்திரனிடம் அச்சீனாக்காரர் சேர்ப்பிக்க வேண்டும். ஆனால் அச்சீனாக்காரர் இருவரும் சிறையாகி விட்டனர்.

கல்கத்தாவிலிருந்து தலைநகரை டில்லிக்கு மாற்றிய உடனே, அரசப்பிரதிநிதி என்ற பான்மையில் 1912-ஆம் ஆண்டு டில்லிமா நகருக்குள் லார்டு ஹார்டிஞ்ஜ் என்பார் ஆடம்பரத்துடன் பட்டணப்பிரவேசம் செய்கையில், அவர் மீது வெடிகுண்டொன்று எறியப் பட்டது. அத னல் அவருக்குப் பெரும் காயம் உண்டாக, அவரது சேவகன் ஒருவன் கொல்லப்பட்டுப் போனான். அவ்விதம் வெடிகுண்டெறிந்த பேர்வழி யாரென்று அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஐந்துமாத காலம் அந்நகரிலேயே இருந்தான் அக் குண்டு வீசியவன். அவனே ராஷ் பிஹாரி கோஷ் என்பவன். அவன் ஜப்பான் தேசம் சேர்ந்து அங்கிருந்து வெகு தந்திரமாக இந்தியாவுக்கு ஆயுதங்கள் அனுப்பி வந்தான். ஜெர்மன் உதவி கலகக்காரருக்கு கிடைக்கும் வண்ணம் முயன்றவர்களில் அவனும் ஒருவன்.

ஷாங்காய் நகரிலிருந்தும் இந்திய இளைஞர் எண்ணிறந்த ஆயுதங்கள் அனுப்பிவந்தனர். இவற்றையெல்லாம் உளவாளரின் மூலம் உணர்ந்து கொண்ட ஆங்கில அதிகாரிகள் அதிசமர்த்துடன் சதி நிகழ்ச்சியை ஒடுக்கி விட்டனர். இல்லையேல், குறித்த வண்ணம் ஜெர்மன் ஆயுதங்கள் ஏராளமாக வந்து இங்கே குவிந்திருக்கும்.

33 பட்டாளங்களைக் கிளப்பு

உள்ளூர் ஆனை அசலூரில் பூனை என்பது ஒருவசனம். உள்ளூரில் சண்டெலியாக இருந்தால் அயலூர்களில் நேரும் சிறுமைக்குக் கேட்க வேண்டுமோ? பாலும் தேனும் வழிந்தோடிய பாரத பூமியிலே பிழைக்க வழியில்லை. விளைந்த நாட்டினுக்குப் பறந்த குருவிபோல் நம்மவரிலே பலர் பிழைப்பை நாடி அயலகங்களுக்குப் போக நேர்ந்தது.

அமெரிக்கா, கானடா, தென் ஆப்பிரிக்கா, பிஜித்தீவு, மோரிசுத்தீவு, மலாய்த்தீவுகள் முதலிய பற்பல இடங்களுக்கு நம்மவர் கூலி வேலை செய்யப்போயினர். அங்கெல்லாம், இந்தியக்கூலி, கறுப்புக்கூலி என்றே நம்மவரை பிறர் ஏளனமாக அழைத்து வந்தனர். அதுகேட்டுப் பலரும் வாய்மூடிக்கிடந்தனர் என்றாலும், சிலரோ சீறி எழுந்தனர் எனல் வேண்டும்.

இந்தியாவிலே ஆங்கில அதிகாரவர்க்கம் கையாண்ட அடக்கு முறையின் கொடுமைகளும், இந்திய இளைஞரின் பயங்கரச்செயல்களும் அயலகத்தே யுள்ள நம்மவருக்கு எட்டின. பொறுமைக்கும், சகிப்புத் தன்மைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா. இங்கிருந்து லாலாஹரிதயால், பாய் பரமானந்தர் போன்ற வீர இளைஞர் அமெரிக்காவுக்கும், கானடாவுக்கும் சென்று அங்குள்ள நம்மவரின்

பக்கபலம் தேடமுயன்றனர். அங்கே 'காதர்' என்னும் பத்திரிகையும் பிரசுரித்தனர்.

சொந்த நாட்டில் சுய அரசு இருந்தால் அர்சிறுமைகள் நேரா என்று அங்குள்ள நம்மவருக்குத் துலங்கியது; இந்தியாவுக்குத் திரும்பி சுதந்திரப் போரில் கலந்து கொள்ளவேண்டும் என்னும் உணர்ச்சியும் உதித்தது. அந்நிலையில் கானடாவுக்குள்ளே மேலும் மேலும் இந்தியர் வந்து புகுவதை அந்த அரசாங்கம் தடுத்தது. இந்திய அரசாங்கமும், இங்கிலாந்தின் அரசும் அது கண்டு வாளா இருந்தனர்.

கானடா நாடு அப்போது இங்கிலாந்துக்குஉட்பட்டு நடந்து வந்த நாடாம். அவ்விரு அரசுகளும் வாளா இருந்தமை கண்டு நம்மவர் மனம் பொறுக்கவில்லை. இங்கிருந்து நேரே கனடாவுக்குச் சென்ற இந்தியரை, அங்கே இறங்க அனுமதிக்கவில்லை. ஆதலின் நூற்றுக் கணக்கான இந்தியர் தாம் வந்த கப்பலிலேயே திரும்பிச் செல்ல நேர்ந்தது. அவர்களில் பலரும் சீக்கியர்.

திரும்பிச் செல்லுகையில் சிங்கப்பூர், ஹாங்காங், ரங்கூன் முதலிய துறைமுகங்களில் அக் கப்பல் தங்கியது. இதற்குள் முதல் ஐரோப்பிய மகா யுத்தம் மூண்டு விட்டது. சிங்கப்பூர், ஹாங்காங் முதலிய இடங்களிலே இந்தியப் பட்டாளங்கள் இருந்தன. அவை ஐரோப்பிய போர் முனைக்குப் போதல் வேண்டும். அப் பட்டாளங்களிடம் தங்களது குறைகளைக் கூறிக்கொண்டனர் நம்மவர்.

அது கேட்டதும், சிங்கப்பூரில் இருந்த இந்தியப் பட்டாளம் சினந்து எழுந்தது. அதனை அடக்க ஆங்கிலேயர் முயன்றனர். அப்போது இரத்தக் களறி உண்டாயிற்று. நமது சிப்பாய்களிலும் ஆங்கிலேயரிலும் பலர்

கொலையுண்டு போயினர். முடிவில் அப்பட்டாளத்தையே கலைத்து விட்டார்கள் ஆங்கில அதிகாரிகள். அவ்விதமே ஹாங்காங், இரங்கூன் இந்த இடங்களிலிருந்த இந்தியப் பட்டாளங்களும் பதைப்புக் கொண்டன. மிக்க உயிர்ச் சேதம்நேர்ந்த பின்பு அக் கொந்தளிப்பு ஒருவாறு அடங்கியது.

முடிவிலே நம்மவர் கல்கத்தா நகரம் வந்து சேர்ந் தனர். வழியில் நடந்த அமளிகுமளியை அறிந்த அதிகாரவர்க்கமோ அவர்களை நகருக்குள் புக விடவில்லை; நேரே ரயிலேறி பஞ்சநதம் செல்லுங்கள் என்று ஆணை இட்டனர். அதன் விளைவாகக் கலகம் மூண்டது. அதனை அடக்க வந்த பட்டாளத்தாரில் பலர் கொலையுண்டனர். சீக்கியரிலும் சிலர் உயிரிழந்தனர்; பலர் காயமடைந் தனர். வேறு சிலரோ நகரினுள் புகுந்து மாறுவேடம் புனைந்து அதிகாரிகளுக்குத் தெரியாமல் நடமாடி, முடிவில் பஞ்சநதம் போய்ச் சேர்ந்தனர்.

இந்தியச் சேனையின் திலகம்போல் விளங்கியோரும், சுதந்திர மகா யுத்தத்திலே ஆங்கிலேயருக்கு உதவி புரிந்தோருமான சீக்கியர் இப்போது பரம வைரிகளாக மாறி விட்டனர். பஞ்சநதம் சேர்ந்ததும், அவர்கள் சும்மா இருக்கவில்லை. ஆங்காங்குள்ள இராணுவஸ்தலங் களுக்குச் சென்று, பட்டாளத்தாரைக் கண்டு உற்றது முற்றும் சொல்லி, அந்தரங்கமாகப் போதித்து வந்தனர்.

குறிப்பிட்ட நாளிலே அரசாங்க ஆயுத தலங்களைத் தாக்கி, அங்கிருந்து ஆயுதங்களைக் கவர்ந்து; பொக்கிஷங் களையும் கொள்ளையாடுதல் அவர்களின் வேலைத் திட்டத் தில் ஓர் அம்சம் ஆகும். அல்லாமலும் பட்டாளங்கள் எல்லாம் ஏககாலத்தில் எழுந்து, ஆங்கிலேயரைத் தாக்க வேண்டும் என்பதும் மற்றோர் அம்சமாகும். அச் சதி

வேலையில் ஒருவர் முனைந்தனர் என்பதில்லை. பற்பலர் முயலாநின்றனர்.

இதற்கு இடையிலே அமெரிக்காவிலிருந்தும், கனடாவிலிருந்தும் இன்னும் சிலர் அந்நோக்குடன் வந்து பஞ்சநதத்திலே பற்பல இடங்களில் மர்மமாகச் சூழ்ச்சி செய்து வந்தனர். அவர்களில் கர்த்த சிம்மன் என்னும் சீக்கிய இளைஞனும் பிங்கலன் என்னும் வங்க வாலிபனும் குறிப்பிடத் தக்கவர்கள். இருவருக்கும் வயது இருபதுகூட நிரம்பவில்லை. வங்காளத்திலிருந்த சதிக் கூட்டத்தாருக்கும் அவ்விருவருக்கும் தொடர்பு உண்டு. அதனால் வங்கத்திலும் அம் முயற்சி பரவிற்று.

கர்த்த சிம்மன் என்னும் இளைஞன் புனை வேடமும், பெயரும் தாங்கி ஊர் ஊராகச் செல்லுவான்; பட்டாளத்தாரையும் போலீசாரையும் தன்வசம் இழுத்துக்கொள்ள முயலுவான். போலீசார் அதனை அறிந்து அவனைப் பிடிக்க எங்கும் தேடினர். தனது தோழனது வீட்டுக்கு அவன் சென்றிருப்பதாக அவர்களுக்குச் செய்தி கிடைத்தது. உடனே அத் தோழனது வீட்டுக்கு அவர்கள் விரைந்து சென்று அங்கே சோதனை செய்து நின்றனர்.

அச்சமயம் அவன் அவ்வீடு சேர்ந்தான்; போலீசார் சோதனை போடுவதைக் கண்டான்; சிறிதும் நடுக்கம் கொள்ளவில்லை; அவ் வீட்டினுள்ளே சென்றான்; என்ன இங்கே சந்தடி என்றான். வீட்டார் வந்து அவனுக்குத் தேயிலைப்பானம் கொடுத்தனர். "எனக்கு வேண்டாம். வேசாரி நிற்கும் போலீஸ் அதிகாரிக்குக் கொடுங்கள்" என்று சொன்னான். அதிகாரியும் அப் பானத்தை வாங்கிப் பரிவுடன் பருகினான். பிறகு கணப் பொழுதில் மறைந்து போனான் அக் கர்த்த சிம்மன்.

அவ்வாறு அதிகாரிகளை அவன் பலமுறை ஏமாற்றி யுள்ளான். கை தேர்ந்த அதிகாரிகளும் அது அறிந்து வெட்கிப் போயினர். உளவன் இல்லாமல் ஊர் அழி யாது என்பர். உளவர் தோன்றி அக் கர்த்த சிம்மனைத் தொடர்ந்தனர். ஒருநாள் மாலைப்பொழுதிலே மீயான்மீர் என்னும் பட்டாளத்தலத்தை அவன் அடைந்தான். அப் பட்டாளத் தலைவர் வந்து அவனிடம் பேசுமுன்னம், உளவாளரின் துணைகொண்டு அவனைச் சிறை செய்தனர் அதிகாரிகள்.

காலுக்கும் கைக்கும் விலங்கிட்டு அவனை லாகூர் நக ருக்கு அழைத்துச் சென்றனர். நெடு நாளாகப் பிடிபடாத பேர்வழி பிடிபட்டதைக் கண்டு, போலீஸ் உத்தியோகஸ் தர் பலரும் அவனைக் காண வந்தனர். ஆங்கில உத்தியோ கஸ்தனைக் கண்டதும், "என்ன இது காலை முதல் எனக்கு ஆகாரமே கொடுக்கவில்லை" என்று கம்பீரமாக வின விஞன். அந்த அதிகாரி அது கேட்டு வியந்து, உடனே உணவு தருவித்தான். அன்று தேயிலைப் பானம் பருகிய போலீஸ் அதிகாரியோ "மகா சமர்த்தன் நீ" என்று கர்த்தனை நோக்கிக் கூறிக்களித்தான்.

சுருங்கச் சொன்னால், நூறு பேர்மீது லாகூர் சதி வழக்கு என்பது ஏற்பட்டது. அவர்களில் இருபதின்மர் விடுதலை அடைந்தனர். முப்பது பெயருக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது. எஞ்சியுள்ளோர் தீவாந்திர சிட்சைக்கு இலக்கு ஆயினர். தூக்குமேடையில் உயிரி ழக்க நேர்ந்த அத்தனை பெயரும் மனமலர்ச்சியுடன் காணப்பட்டனர். கர்த்த சிம்மனோ, "இவ்வளவு தானே தண்டனை, வந்தனம் ஐயா!" என்று நீதிபதியை நோக் கிச் சொன்னான்.

விசாரணை நடக்கும் காலத்திலே தமது சதி வேலை அனைத்தையும் ஒளியாமல் அக்கர்த்தசிம்மன் உரைக்கலானான்; ஆங்கில ஆட்சியை அடியோடு அழித்துப் போடுவதே தனது நோக்கம் என்றான். அவ்வாறு சொன்னால் தண்டனை கடுமையாகும் என்று அன்பரும் பிறரும் கூறியும் அவன் செவி சாய்க்கவில்லை. "சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் எம்மட்டு? தியாகம் விளைக்காமல் சுயராஜ்யம் கிட்டுமோ?" என்று அவன் பதிலுரைத்தான். பலரும் திடுக்கிட்டுப் போயினர்.

தீவாந்தர சிட்சைக்கு ஆளானோரில் பலரும், எங்களுக்கும் தூக்குத் தண்டனை கொடுத்திருக்கலாமே என்று நீதிபதியை நோக்கிச் சொல்லினர். கர்த்தசிம்மனைக் காட்டிக் கொடுத்த உளவாளியின் கதி யாதாயிற்று? கர்த்தன் சிறை செய்யப்பட்ட மறுதினமே அந்த உளவாளி கண்டங் கண்டமாக வெட்டி எறியப்பட்டான்.

பிங்கலன், பாய்பரமானந்தர் இவர்களைக் காட்டிக் கொடுத்த துரோகிக்கு ஆயிரக் கணக்கில் பணமும், ஐந்தாறு காணி நிலமும் பறிதானமாகக் கிடைத்தன. அவை கொண்டு அவன் நிம்மதியாக வாழ எண்ணினன். அவ்வழக்கு முடிவதற்குள், அவன் வீடு தீக்கிரையாயிற்று. அவனது உயிரையோ வாளாயுதம் வந்துகவர்ந்து கொண்டது.

லாகூர் சதிவழக்கு என்பதாக இரண்டாவது முறை மற்றொரு வழக்கு ஏற்பட்டது. அதிலும் எதிரிகள் பலராவர். எதிரிகளிலே சிலருக்கு மரண தண்டனை, சிலருக்கு தீவாந்தர சிட்சை, சிலருக்கு இருபது வருடம் கடுங்காவல் இவ்வாறு தண்டனைகள் ஏற்பட்டன. அவை கண்டு அவர்கள் அஞ்சிப் போகவில்லை. தேசத்துக்கு உழைத்தோம், தியாகம் செய்தோம், தண்டனை கொண்

டோம். என்னும் துணிவும் மகிழ்வும் கொண்டே துலங்கினர். இரண்டாவது வழக்கிலும் உளவாளிகளாக இருந்தோர் நெடுநாள் வாழ முடியவில்லை. இதோ! அதோ! உயிர்போய்விடும் என்றே எண்ணி நின்றனர்.

அந்த உளவாளிகளும் சரி, இளைஞருக்கு விரோதமாக சாட்சி சொன்னோரும் சரி ஒன்று மக்களின் பழிப்புக்கு இடமாயினர், அல்லது வாளின் கூர்மையை உணரலாயினர். வழக்கை நடத்திய அதிகாரிகளுக்கும் தொடை நடுக்கந்தான். நீதிபதிகளும் விதியின்றித் தண்டனை விதித்தனரே யன்றி வேறன்று. பரந்த அளவில் சதிச் செயல்கள் நடக்கையில் ஏராளமான பணம் வேண்டும் அல்லவா?

அதிகாரிகளுக்குத் துணையாக இருக்கும் தனவந்தரும், தர்மம் புரியாத செல்வவான்களும், பாவ வழியில் பணம் சேர்த்த தனிகரும், கொள்ளையடிக்கப்பட்டனர், கொள்ளையாடுமுன் தேசச் செலவுக்குப் பணம் வேண்டும், அதுபற்றியே கொள்ளையாடப் போகிறோம் என்று அவ்விளைஞர் எச்சரிக்கை கொடுப்பர்; பின்பே வருவர். கொள்ளையாட வருகையில், அவர்களை இன்னர் என்று அடையாளம் கண்டுபிடிக்க இயலாது.

எண்ணித் துணிக கருமம் என்பர் பெரியோர். அவ்வீர இளைஞர் ஆவன அனைத்தையும் எண்ணிப் பார்த்த பின்பே வினைபுரிய முனைந்தனர். நோய்கொண்டு மரிப்பதினும் நற்செயல் புரிந்து நானிலம் மெச்சச்சாதலே நன்மைதரும் என்று துள்ளி எழுந்த இளைஞர் பல்லாயிரக் கணக்கு ஆவர். தூக்குமேடையிலே உயிர்துறந்தோர் ஆயிரக்கணக்காம். கடைசிவரையில் பிடிபடாமல் கருமம் புரிந்த இளைஞரின் வீரதீரம் கண்டு, சுத்த வீரரான ஆங்கிலேயர் புகழ்ந்து பேசியுள்ளர்.

34. கலக வேள்வி

வேள்வி புரிவோர் விரதம் பூணுதல் வழக்கம். சுதந்திரத்தில் நாட்டம் மிகுந்து, கலக வேள்வி புரிந்தோரும் கடுமையான விரதம் அல்லது சபதம் பூண்டனர். சபதம் செய்கையில், மகாகாளியின் சிலையொன்று எதிரே இருக்கும். அச்சிலையின் அடியிலே கைத்துப்பாக்கி, உடைவாள் இவை தென்படும். பகவத் கீதை என்னும் பெருநூலும் அங்கே காணப்படும். முதலில் தேவியின் பூஜை நடக்கும்.

அப்பால், "மகாகாளியே! உனது முன்னிலையில் சபதம் கொள்கின்றேன். சங்கத்தைவிட்டு நான் என்றும் அகலேன். சங்கத்தின் நோக்கம் ஈடேற, எனது உடல், பொருள், ஆவி மூன்றையும் சுதந்திர வேள்வித் தீயில் ஆகுதி செய்வேன். சங்கத்தின் வேலையிலே முயலுகையில் தாய், தந்தை, உற்றார், உறவினர் இவர்களை எண்ணேன். வீடுவாசல், ஆஸ்திபாஸ்தி இவற்றையும் மதியேன்.

"சங்கத்தினுக்கு எதிராக எவரேனும் உழைத்தால். அவர்களை ஒழித்துக்கட்டுவேன்; சங்கத்தின் இரகசியங்களை எவருக்கும் உரையேன்; சங்கத் தலைவன் சொல்லும் வண்ணமே செயல் ஆற்றுவேன்; தேசநலமே எனது நோக்கமாகும். சுதந்திர சித்தியே எனது கோட்பாடாம்; அன்னிய ஆட்சியை வேரறுக்களைவதில் முனைந்து நிற்பேன்; அதற்கு வேண்டியதெல்லாம் செய்வேன்; ஒழுக்க உயர்வுடன் நடப்பேன்.

"ஆகாயவாணியும், பூமாதேவியும் அறிய நான் பூணும் இச்சபதத்தில் எள்ளளவேனும் தவறினால், தெய்வ கோபமும், பிராம்மண சாபமும், தேவதைகளின் சீற்றமும் என்னைச் சூழ்ந்துகொண்டு சாம்பலாக்கட்டும்.

தெய்வமும் தேசமுமே எல்லோருக்கும் கதியளிக்கும். தேசத்தை மறப்போர் கடுநரகு எய்துவர். ஓம் வந்தே மாதரம்!'' என்று சொல்லி சபதம் செய்வர்.

விவாகம் ஆகாத இளைஞரையே அச்சங்கத்தில் சேர்த்துக்கொண்டனர். அச்சங்கங்கள் தேசமெங்கும், கிராமங்கள்தோறும் முளைத்தன. சங்கத்தினுக்கு நடு நாயகமான நிர்வாகசபை ஒன்றுண்டு. நகரங்கள், ஜில்லாக்கள், தாலுக்காக்கள், கிராமங்கள் இவற்றிலுள்ள கிளைகளுக்கு அந் நிர்வாகசபை அடிக்கடி ஆணை அனுப்பும். ஆங்காங்குள்ள சங்கத் தலைவரின்மூலம் அங்கத்தினருக்கு அந்த ஆணை அறிவிக்கப்பெறும்.

அவை எல்லாம் அந்தரங்கமாக நடந்துவந்த சங்கங்களே. ஒரு சங்கத்தின் அங்கத்தினர் ஏனைய சங்கங்களின் அங்கத்தினரை அறியார். சங்கங்களின் உயிர்நாடிபோன்ற அங்கத்தினரை ஏனையோர் அறிய முடியாது. சங்கத்தின் விதிகளுக்கும் மேற்கொண்ட சபதத்தினுக்கும் மாறாக நடக்கும் அங்கத்தினர் தமது உயிரை உடனே இழக்க நேரும். அவ்விதம் உயிரிழத்தல் மர்மமாகவே இருக்கும்.

சங்கத்தின் வேலை நன்கு நடைபெற வேண்டின் ஏராளமான பணம் அவசியம். தனவந்தருக்கு அச் சங்கத்தார் ரகசியமாக வரி விதிப்பர். தனவந்தர் தாராது போனால், கொள்ளையடிப்பர். கொள்ளையில் கிடைக்கும் பணம் தர்ம சொத்தேபோல் பாவிக்கப்படும். அதில் ஒருதம்பிடிகூட அங்கத்தினர் எவரும் எடுத்துக் கொள்ளார். கொள்ளின், உயிர் இரவல்தான். அன்றியும் அங்கத்தினர் பெண்மோகம் கொள்ளக்கூடாது. கொண்டால், ஆவி அகன்றுவிடும்.

சுயராஜ்ய சித்திக்கு விரோதமாக இருக்கும் அதிகாரிகளும், பிறரும் ஆபத்துக்கு உள்ளாவர். ஆபத்து

விளைவிப்போரை யாரேனும் காட்டிக் கொடுத்தால், அவர்களின் உயிர் நிலைக்காது. இளைஞரைப் பிடித்துச் சிறை செய்து வழக்கு நடத்தும் அதிகாரிக்கும், சாட்சி கொடுக்கும் நபருக்கும் அக்கதிதான். தேச விரோதிகளின் நெஞ்சில் உதைப்பை ஊட்டுவதே இளைஞரின் கடமை. அக்கடமையில் முனைந்தோர் அனேகர்.

அக்கடமையை ஆற்றுவதில் தூக்குமேடையில் உயிர்கொடுத்த பக்தர் நூற்றுக்கணக்காவர். விதியில்லாமல் தற்கொலை செய்துகொண்டோரும் அவ்வளவு பேராம். நெடுங்காலச் சிறைத் தண்டனைக்கு ஆளானோர் ஆயிரக் கணக்கு எனல் வேண்டும். அவ்விதம் தியாகம் செய்ய நேர்கையில் ஒரு சிலர் ஓடிப்போனாலும், மேலும் மேலும் அங்கத்தினர் சேர்ந்து வந்தனர்.

கொள்ளையடிக்கும் வேலையும், விரோதிகளைச் சுட்டுத் தள்ளும் முயற்சியும் மும்மரமாக நடந்து வந்தமையால் போலீசாரில் பலருக்கும் பயம் பிடித்தாட்டியது. மக்களில் பலருக்கும் அப்படித்தான். கோழைத்தனம் கொண்டு இரகசியத்திலேயே இளைஞர் வேலைசெய்து வந்தனர் என்பதில்லை. பக்கபலமும், ஆயுதங்களும் திரண்ட உடனே, பகிரங்கமாக எழுந்து போர்புரிவதே அவர்களின் நோக்கம்.

ஆங்கில அதிகார வர்க்கத்திலுக்கு ஆணிவேர் போன்ற போலீஸ் படையையும், இராணுவத்தையும் சிறிதுசிறிதாக வசம்செய்து கொள்வதில் எத்தனையோ இளைஞர் முயலாநின்றனர். வயிறே பெரிதென்று இருந்தோர்போக, மற்றையோர் தம் மனத்தூடே அந்த இளைஞரின் முயற்சியில் அபிமானம் வைத்தனர்.

ஆங்கில தாசர்களாகவும், பரம இராஜ விசுவாசிகளாகவும் விளங்கினோரில் பலருக்கும் அதிகார வர்க்கத்

தின் அடக்குமுறை கண்டும், அதற்கு மாறாக இளைஞரின் பயங்கரச் செயல்கண்டும் மனப்பான்மை மாறி வரலாயிற்று. மக்களின் மனப்போக்கையும், பான்மையையும் எத்தனை நாள் அதிகாரிகள் அலட்சியம் செய்ய முடியும்? மக்களின் பக்கபலம் குறையின், ஆட்சியிலே அல்லல் பல நேரும்; அவதிகளும் உதிக்கும்.

வங்காளப் பிரிவினை காரணமாக மூண்டெழுந்த தேசபக்தியை மடக்க முயன்றதில், முதன்முதலாக வங்கத்திலே இளைஞரின் பயங்கர இரகசிய சங்கங்கள் முளைத்தன. அதற்குச் சற்று முன்பின்னதாக மகாராஷ்டிரத்திலே அத்தகைய சங்கங்கள் கிளம்பின. அவ்விரு இடங்களிலும் இத்தேசத்தின் பற்பல மாகாணங்களிலும் இளைஞர் வீறிட்டு எழுந்தனர். வெறுங்கைகொண்டு முழம் போட முடியாது என்பர்.

ஆதலின் இரகசிய சங்கங்களின் வளர்ச்சிக்குரிய உபாயங்களை ஆராயவும், அச்சங்கங்களுக்கு அவசியமான ஆயுதங்களைத் தேடி அனுப்பவும், வாலிபரிலே பலர் உலகின் பல பாகங்களுக்கும் சென்று முயன்று வந்தனர்; ஆங்கில ஆட்சியின் அலங்கோலத்தையும், அக்ரமத்தையும் அங்கங்கே பலவழிகளிலும் பரப்பி வந்தனர். அதனால் ஆங்கிலேயரின் சாயம் மங்கலாயிற்று.

உலக வல்லரசுகளில் உன்னதம் வாய்ந்திருந்த இங்கிலாந்து தேசமோ எல்லாவற்றையும் எண்ணிப்பார்த்தது. வெடிகுண்டு வீச்சின் விளைவாகவே மிண்டோ—மார்லி திருத்தங்கள் ஏற்பட்டன. அதுகண்டு மிதவாதிகளுக்கும் திருப்தி பிறக்கவில்லை. இரகசிய சங்கங்களின் சதிச் செயல்களோ நாளுக்குநாள் வளர்ந்துகொண்டே போயின. லார்டு மிண்டோவின் மீதும் குண்டு வீசப்பட்டது அல்லவா?

மிண்டோவுக்குப்பின் லார்டு ஹார்டிஞ் என்பார் அரசப் பிரதிநிதியாக இங்கே வந்தார்; தேசமக்களிடம் அபிமானம் காட்டிப் பேசினார். வழி வழியாக இராஜ பக்தியில் சிறந்த இந்தியரின் மனத்தைக் கவர வேண்டி, ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியை 1911-ம் வருடக் கடைசியில் அதிகார வர்க்கத்தார் இங்கே வருவித்து, டில்லியிலே தர்பார் நடத்தினர். அச்சக்கரவர்த்தியும் இனிமை ததும்ப உரையொன்று நிகழ்த்தினார்.

அப்போது வங்காளப் பிரிவினையை மாற்றிவிட்டதாக ஓர் அறிக்கை பிறந்தது. அப்பிரிவினைதானே இவ்வளவு தொல்லைக்கும் காரணம்! அதனை மாற்றிவிட்டால் தேசம் சாந்திகொள்ளும் என்று அதிகார வர்க்கம் கனவு கண்டது. தலைமிஞ்சிவிட்ட சுதந்திர தாகத்தினுக்கு அம் மாற்று மருந்து பலனளிக்கவில்லை.

1912-ம் ஆண்டிலே இந்தியாவின் தலைநகரை டில்லியாக மாற்றினர். அந்நகருக்குள் ஆடம்பரமாக வீதிவலம் வந்த அரசப்பிரதிநிதியான லார்டு ஹார்டிஞ்ஜின் மீது ஒரு வெடிகுண்டு வீசப்பெற்றது. அதில் அப்பிரதிநிதி பலத்த காயம் அடைய, அயலே இருந்த சேவகன் ஒருவன் கொல்லப்பட்டுப்போனான். அக்குண்டு வீசிய இளைஞனை பிடித்துத் தருவோருக்கு ஏராளமான வெகுமதியளிப்பதாக அதிகாரிகள் பறையறைந்தனர்; சந்தேக ஆசாமியின் சாயாபடத்தையும் பிரசுரித்து, இவனாகத்தான் இருக்கவேண்டும் என்றும் அறிவித்தனர்.

குண்டு வீசிய இளைஞன் ராஷ்பிஹாரி கோஷ் என்பவன். இவன் அந் நிகழ்ச்சிக்குப் பின்னும் பல மாதகாலம் டில்லியிலும் அதனைச் சுற்றிய இடங்களிலுமே வசித்து வந்தான். ஆனாலும் இவனைக் கண்டுபிடிக்க அதிகார வர்க்கத்தினால் ஆகவில்லை. ஆறுமாதம் ஆனதும் லாகூரிலே வெடி

குண்டு வீச்சொன்று நிகழ்ந்தது. அதில் உயிர்ச்சேதமும் உண்டாயிற்று. அதனை விசாரிக்க ஆங்கில அதிகாரிகள் முயன்றார்கள்.

அதிகாரவர்க்கத்தினிடம் உபகாரச் சம்பளம்பெற்று, இங்கிலாந்துக்குப் படிக்கப்போன ஹரிதயால் என்னும் வாலிபன் அச்சம்பளத்தை வீசி எறிந்து, லாகூர் நகருக்குத் திரும்பி வந்து இங்குள்ள அன்னிய ஆட்சியைப் போக்க வேண்டுமானால், "அதனுடன் எவ்விதமான தொடர்பும் கொள்ளாமல் நம்மவர் விலகி நிற்கவேண்டும்; அத்துடன் போரும் புரிதல் வேண்டும்" என்று பிரசாரம் செய்து வந்தான்.

இதனை அதிகாரிகள் அறிந்து ஹரிதயாலைச் சிறை செய்ய முயலுகையில், பறவை எங்கேயோ போய்விட்டது. ஆனாலும் பஞ்சநதப் பிரதேசத்திலே லாகூர், அமிர்தசரஸ், ராவல்பிண்டி முதலிய இடங்களிலுள்ள பட்டாளங்கள் கலகமாய்க் கிளம்புவதற்கான ஏற்பாடுகள் பலவும் இவன் செய்திருந்தான். அதற்குப் பிங்கலன் என்பான் பக்க பலமாக இருந்தனன்.

இளைஞர்களின் தலைவர்களான ராஷ்பீஹாரி கோஷ், லாலா ஹரிதயால் போன்றவர்களைக் கண்டுபிடிக்க இயலாமல், போலீஸ் அதிகாரிகள் தலைகுனிய நேர்ந்தது. பின்பு கலகக் குழுவினரில் சிலரை அவர்கள் சிறைசெய்து சித்திரவதை பண்ணிப் பார்த்தனர். இரண்டொருவரே உள்ளதை உரைத்தனர். உரைத்த அன்னார் சிறிது நாளைக்கெல்லாம் அக்குழுவினரால் சுடப்பட்டு மாண்டனர். உளவு கூறினோரும் அவ்விதம் உயிரிழக்க நேர்ந்தது.

பின்பு ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினாலாம் ஆண்டிலே இங்கிலாந்துக்கும் ஜெர்மனிக்கும் போர்

மூண்டது. இங்கிலாந்தின் நிலைமை ஆபத்துக்கு இடமா யிற்று. ஆகவே ஆங்கில மந்திரிகள் இங்குள்ள சட்ட சபைகளின் சம்மதம் பெறுமலேயே இந்தியத் துருப்பு களை எல்லாம் ஐரோப்பாவுக்குத் தருவித்துக் கொண் டனர். பணக்காரரும் பிறரும் வேண்டுமளவு உதவி புரிந்தனர்.

அதனால் இங்கிலாந்தின் ஆபத்து சற்றே தணிந்தது. அப்போது ஆங்கில மந்திரிகள் தேன் சொட்டப்பேசி நம்மவரை மயக்கினர். எல்லாம் வெளிமயக்கே, ஆங்கி லேயரை நம்பி மோசம் போகவேண்டாம் என்று வீர இளைஞர் இடித்துக் கூறியும், நமது தலைவர்கள் என்போர் செவிசாய்க்கவில்லை; மேலும் மேலும் உதவி வந்தனர் அந்த யுத்தத்துக்கு.

பயங்கரவாதிகளோ இங்கிலாந்தின் ஆபத்தை அறிந்து, அதுவே தக்க சமயம் எனக்கொண்டு, இங்கே எங்கும் கலகத்தை மூட்டிவிட முனைந்தனர்; இங்கிருந்த துருப்புகளையும் கலைத்தனர். பற்பல இடங்களிலே கொந் தளிப்பும், கலகமும் தலைகாட்டின. அவற்றின் விவரங்களை மக்கள் அறியாவண்ணம் அதிகாரிகள் தடுத்து விட்டார் கள். பிறநாடுகளிலிருந்த இந்திய இளைஞர் இங்கே குழப்பம் நேருவதற்கான வகைதுறைகளை உணர்த்தி, ஏற்ற உதவியும் செய்து வந்தனர்.

ஜெர்மானியரின் துணைகொண்டு அபரிமிதமாக ஆயு தங்களை வருவித்து, இங்கே பெருங்கலகம் மூட்டிவிட இங்குள்ள இளைஞர் மாயமான சூழ்ச்சிகள் பலவும் புரிந்து வந்தனர். வெண்ணெய் திரண்டுவரும் நேரத்தில் தாழி உடைந்ததுபோல் இளைஞரின் பெரு முயற்சிகள் சிதறி விட்டன. என்றாலும் மீண்டும் மீண்டும் அவர்கள் முனைந்தே நின்றார்கள்.

யுத்த சமயத்தை முன்னிட்டு அதிகாரவர்க்கத்தார் தேசப் பாதுகாப்புச் சட்டம் என்பதை இயற்றினர். அதனை ஆள் தூக்கிச் சட்டம் என்று சொல்லவேண்டும். யாரையும் திடீரெனப் பிடித்துச் சிறையிலே விசாரணையில்லாமல் நெடுநாள் போட்டுவைக்க அச்சட்டம் இடம் கொடுக்கும். அதுபற்றி வங்கத்திலே ஆயிரக் கணக்கான இளைஞரைப் பிடித்துப் பிடித்துச் சிறையில் போட்டு வந்தனர் அதிகாரிகள். அமெரிக்கா, கானடா முதலிய இடங்களிலிருந்து கலக நோக்குடன் இங்குவந்த சீக்கியரில் மூவாயிரவர் அவ்விதமே சிறையில் வாடிக்கிடக்க நேர்ந்தது.

என்றாலும், இளைஞரின் பயங்கர இயக்கத்தை அதிகாரவர்க்கம் நசுக்கிவிட முடியவில்லை. ஆனதுபற்றியே படிப்படியாக இந்தியாவுக்குச் சுயராஜ்யம் அளிக்க உத்தேசம் என்று அப்போது இந்தியா மந்திரியாக இருந்த மாண்டேகு என்பார் ஓர் அறிக்கை வெளியிட்டார். அத்துடன் நில்லாமல் அம்மந்திரி இந்தியாவுக்கு வந்து பற்பல தலைவர்களையும் கண்டு பேசிப் பாங்கான முறையில் அரசியலை வகுப்பதாகவும் வாக்களித்தார். அவ்வாறே இங்கு வந்தார்.

ஆதிமுதல் அந்த இளைஞர் வெளியிட்டுவந்த துண்டுப் பிரசுரங்கள் கணக்கில. அவற்றில் அனல் பொறிபறக்கும்; இரத்த வெறி ததும்பும். எனவே அவற்றை வாசிக்கும் இந்திய மகன் எவனும் துள்ளி எழுவான். அவ்வப்போது இலட்சக் கணக்கில் அப்பிரசுரங்கள் வெளியாகி வந்தன. அவற்றைத் தடுக்க அதிகாரிகள் எவ்வளவோ முயன்றும் வெற்றிபெறவில்லை. அந்த மந்திரி இங்கே வந்த சமயம் வெளியான பிரசுரத்தின் ஒரு பாகம் இது:—

"நாம் இப்போது செய்ய வேண்டியது யாது? இந்தியா மந்திரி இங்கே வந்தால் என்ன, வராமல் இருந்

தால் என்ன? அதில் நமக்கு அக்கறை இல்லை. சாவதானமாக இங்கே வந்து போகலாம் என்று அவன் எண்ணியிருக்கிறான். நாமோ எப்போதும்போல் பயங்கரமே விளைத்தாக வேண்டும். இந்த அநீதமான அரசு நடவாவண்ணம் முறித்துப் போடுதலே நமது கடமை.

"மாயமாக நாம் மறைந்து நின்று, அன்னிய அதிகாரவர்க்கத்தை மாய்த்துவிட வேண்டும். நமது சோதரர் எத்துணையோபேர் சிறையிலே வாடி வதங்குகிறார்கள். தங்களது வீட்டிலேயே காவலில் கிடந்து உழலுகிறார்கள். அவர்களை எண்ணிப் பாருங்கள்! இன்றளவும் சுதந்திர வேள்வித்தீயில் தமது உயிரை ஆகுதி செய்த இளைஞரையும் மறந்துவிடாதீர்கள்! நெஞ்சு பொறுக்கவில்லையே, எத்தனை நாள் பொறுப்போம் என்று மனமொடிந்து போன வாலிபரின் தொகையையும் நோக்குங்கள்!

"உஷார்! ஆங்கில இராஜ தந்திரங்கண்டு மயங்கிப் போக வேண்டாம். எடுத்த காரியத்தை இடைநடுவே நாம் கைவிட வேண்டாம். கண நேரமும் தளராமல் கண் குத்திப் பாம்புபோல் இருந்து, காரியத்தைச் சாதிக்க வேண்டும். சோதரர்களே! தேசத்தின் பெயரால் உங்களை அழைக்கின்றோம். ஆண்டவனது நாமத்தைக் கூறியும் உரைக்கின்றோம். மக்காள்! நீங்கள் கிழவராயினும் குமரராயினும், ஆடவராயினும், பெண்டிராயினும், இந்துக்களாயினும், முகம்மதியராயினும், தோட்டியாயினும், தொண்டைமானாயினும் சுதந்திர மகாயுத்தத்தில் சேருங்கள்.

"சோதர சோதரிகளே! அன்னை பாரததேவி உங்களை ஆர்வமுடன் அழைக்கின்றாள்; அன்புடன் கூப்பிடுகின்றாள். சுதந்திர வேள்வியில் எல்லாரும் சேர்ந்து கொள்ளுங்கள். பணத்தையும் இரத்தத்தையும் அவ்

வேள்வியின் நிமித்தம் அப்போது கொட்டுங்கள். பாரதத் தாய் மனங்களிப்பாள். சுதந்திரத்தினும் அரிய பூஷணம் ஒன்று உண்டோ? வேறு என்ன விளம்புவது? இது தான் வழி. வேறுமார்க்கம் கிடையாது. இச்சமயம் தப்பினுல் மறுசமயம் வாய்க்குமோ? மக்காள்! மதித்துணருங்கள்; எண்ணிப்பாருங்கள்; துள்ளி எழும்புங்கள்."

அறிக்கையின் ஒருபாகமே இது; கலகச் சங்கத்தின் நிர்வாக சபையார் வெளியிட்டது. இதனை ஏராளமாக வைத்துக்கொண்டு கைத்துப்பாக்கியும் தாங்கி நின்ற இளைஞன் ஒருவன் சிறையானுன். இன்னும் சிலரும் சிறையாயினர் இந்த அறிக்கை காட்டுத்தீபோல் எங்கும் பரவியது. பலரின் கையிலும் இருந்தது.

அரக்கரின் உதிரம் கீழே சிந்தினுல், அதனின்று ஆயிரக்கணக்கான அரக்கர் தோன்றுவர் என்று புராணங்கள் பேசும். ஒரு சங்கமோ அதன் அங்கத்தினரோ அடக்கப்பட்டால், உடனே பற்பல சங்கங்கள் முளைக்கும். இனி, அதிகாரிகளின் உளவாளர்போல் சங்க அங்கத்தினரில் சிலர் நடித்து, அதிகாரிகளின் அந்தரங்கத்தை அறிந்து கொண்டதும் மறைந்து விடுவர்.

இரகசிய சங்கங்களின் வேலைத்திறனையும், விழுமிய நோக்கத்தையும் உணர்ந்த பிரமுகரில் சிலர் இரகசியமாக இலட்சக்கணக்கில் பண உதவி செய்தனர் என்பது திண்ணம். சமஸ்தான மன்னரில் சிலரும் தாராளமாக உதவி வந்தார்கள். வெளிக்கு அன்னுர் அந்த இரகசிய சங்கங்களின் செயலைக் கண்டிப்பர்; மனத்தூடோ ஆசி எல்லாம் புகல்வர்.

அச்சங்க இளைஞர் எழுப்பிய சுதந்திரத்தீ தேசம் எங்கும் கொழுந்து விட்டது.

35. தேசம் திரளல்

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஏழாம் ஆண்டின் இறுதியிலே சூரத் நகரில் காங்கிரஸ் மகாசபை முறிந்தது அல்லவா? உடனே பாலகங்காதர திலகர் கல்கத்தா நகரம் சேர்ந்து தீவிரவாதிகளின் நிலையை விளக்கி ஓர் அரிய உரை நிகழ்த்தினார். "நாம் சுயராஜ்யம் எய்த வேண்டுமானால் வாளுருவிப் போர் புரிதல் வேண்டும் அல்லது அதிகாரவர்க்கத்தினுக்கு யாதொரு உதவியும் தாராமல், எல்லாரும் விலகி நின்று, ஆட்சியை அலரச் செய்தல் வேண்டும்" என்று அப்பெருமான் குறிப்பிட்டார்.

அதிகாரவர்க்கத்தினுக்கு யாதொரு உதவியும் தாராமல் விலகி நிற்பது என்றால் (1) அதிகாரிகள் வழங்கும் பட்டம், பதவிகளைத் துறத்தல் வேண்டும். (2) மாணவர் கலாசாலைகளைவிட்டகலுதல் அவசியம். (3) வக்கீல்கள் நீதிமன்றங்களுக்குப் போதல் கூடாது. (4) அரசாங்க உத்தியோகங்களை விட்டொழிக்க வேண்டும். (5) முடிவில் வரிகள் கொடாமலும் இருத்தல் அவசியம்.

அந்த இரு வழிகளில், முன்னது இப்போது ஒவ்வாது; எனவே பின்னதையே நாம் கடைப்பிடித்தல் வேண்டும். இதற்கு தேசம் ஆயத்தமாக இருக்கிறதா? தெரிய வேண்டும்; என்றும் திலகர் விரிவாகப் பேசினார். இத்திட்டமே பின்னாளில் காந்திமகானது ஒத்துழையாப் போரின் திட்டத்திற்கு முன்னறிக்கை என்பதை அரசியல் வாதிகள் அறிந்திருப்பர்.

காங்கிரஸ் மகாசபை முறிந்ததும், மிதவாதிகள் என்போர் அச்சபையை தமதாக்கிக் கொண்டனர்; தீவிர வாதிகளை எட்ட விலக்கிவிட்டனர்; ஆங்கிலக் குடை

கிழுக்கு உட்பட்ட சுயஆட்சி எய்துவதே நோக்கம் என்றும் அறிவித்தனர். மலைக்கும் மடுவுக்கும் உள்ளது போன்ற வேற்றுமை பெருகிவிட்டதனால் தீவிரவாதிகள் அச்சபையில் சேராமல், தேசமக்களைத் திரட்டுவதிலேயே நாட்டம் வைத்தனர்.

மிதவாதிகளின் பான்மை கண்டதும் தீவிர வாதிகளை அடக்கி ஒடுக்க அதிகாரவர்க்கம் பல வழிகளிலும் முனைந்தது. முனையவே தேசத்தில் அமைதியின்மை உண்டாயிற்று. ஏழெட்டு வருடம் வரையில் காங்கிரஸ் மகாசபையில் வீரியம் என்பதே காணப்படவில்லை. அதிகாரிகள் விரும்பிய வண்ணம் அச்சபை நடந்து வந்தது என்னலாம்.

கோபால கிருஷ்ண கோகலே சர். பிரோசி ஷா மேத்தா, சுரேந்திரநாத பானர்ஜி முதலியோர் முன் நின்று அச்சபையை நடத்தி வந்தனர். அன்னார் பரம தேச பக்தராயினும் தியாகத்திற்கோ, போராட்டத்திற்கோ அவர்களின் மனம் ஒப்பவில்லை. தேச மக்களுக்கும் அச்சபையினிடம் பக்தி விசுவாசம் பெருகவில்லை.

ஆறு வருடம் தண்டனை அனுபவித்த பின்னர் பாலகங்காதர திலகர் விடுதலை பெற்றார். தேசநிலையை நோக்கிய உடனே அவரது மனம் இழந்துபோயிற்று. தீவிர வாதிகள் சிதறுண்டு கிடப்பதும் அவரது மனதைப் புண்படுத்திற்று. இதற்குள்ளாக முதல் ஐரோப்பிய மகா யுத்தம் மூண்டுவிடவே, இந்தியாவின் நலபலம் அனைத்தையும் இங்கிலாந்து அடைந்து நின்று, அந்த யுத்தத்தில் தலைசாயாது இருக்க வழி கோலிற்று. ஆனாலும், வேண்டிய படைப் பலம் கிட்டவில்லை. இங்கே படை திரட்ட அது முயன்றது.

மகாராஷ்டிரத்திலிருந்து 6,000 பேர் படையில் சேர வேண்டும் என்று அதிகாரிகள் விரும்பினார்கள்; சமயத்தில் செய்யும் உதவியை மறவோம் என்றும் உறுதி கூறினார்கள். "ஆறு ஆயிரமா? ஆறு இலட்சம், இது போதாதானால் அறுபது இலட்சம் பேரை படையில் சேர்த்துத்தர நான் முயலுவேன். ஆனால் யுத்தம் முடிந்ததும் நாங்கள் சுயராஜ்யம் எய்தல் வேண்டும். இதற்கு நீங்கள் இசைவீர்களா?" என்று திலகர் பந்தயம் கூறினார்; தாமும் சேனையில் சேர்ந்து போர்முனை போகத் தயார் என்று கர்ஜித்தார். அப்போது அவருக்கு வயது சுமார் அறுபது.

ஆதிமுதல் ஆங்கில அரசுடன் மன்றாடி நின்றவர் இப்போது மண்டியிடுகிறாரே என்று சிலர் அறியாது பேசினர். திலகரின் உட்கருத்தை அவர்கள் உணரவில்லை. சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு நடத்தலே மகாராஷ்டிரரின் இராஜ தந்திரமாம். முன்கை நீண்டால், முழங்கை நீளும் என்பது போல் அதிகாரிகள் வழிக்கு வந்தால் ஆதரவெல்லாம் தரலாம் என்பதே அவரது கோட்பாடு. அன்றியும் இங்கிலாந்தின் பெருமைக்கு அடிப்படையான உன்னத நோக்கில் அவருக்குப் பிடித்தம் உண்டு

தேச மக்களைத் திரட்டினால் அல்லாமல் தக்க பக்க பலம் கிட்டாது என்று திலகருக்குத் தெரியும். மக்களைத் திரட்ட ஒரு சபையும், இலட்சியமும் வேண்டும். சுயராஜ்யம் எனது பிறப்புரிமை என்று முன்னம் அவர் கர்ஜித்ததும், சுயராஜ்யம் என்ற பெயரைச் சொல்லவும் மிதவாதிகள் அஞ்சிக் கிடந்தார்கள். ஆதலினால் ஆங்கில இராஜிய வாதகத்தில் பிரபலமான "ஹோம் ரூல்" (அதாவது சுய அரசு) என்னும் பெயர் சூட்டி ஹோம் ரூல்

சபை என்பதை 1916-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறு வினர். ஆங்கில அரசுக்கு உட்பட்ட ஹோம் ரூலா, வெளிப்பட்ட ஹோம் ரூலா என்று அவர் விளக்கவில்லை.

ஹோம் ரூல் சபையின் நோக்கம் கண்டதும் பலர் அச்சபையில் சேர்ந்தனர். பம்பாய் மாகாணமெங்கும் அச்சபையின் கிளைகள் தோன்றின. இலட்சக் கணக் கான மக்கள் அச்சபையில் சேர்ந்தனர். சேரவே அரசி யல் கிளர்ச்சி வலுத்தது. எங்கே பார்த்தாலும் மக்களி டையே ஹோம் ரூல் என்ற கோஷந்தான். அது அரசியல் மந்திரமாக ஆகிவிட்டது. தீவிர வாதிகளை ஒன்று சேர்க் கவும் அது பயன்பட்டது.

அப்போது சென்னையிலுள்ள பிரமஞான சங்கத்தின் தலைவியாக திகழ்ந்தாள் அன்னி பெஸண்ட் அம்மை. அவள் ஆன்ற அறிவும், சான்ற குணமும் வாய்ந்தவள். ஏழைக்கு இரங்கும் இனிய மனத்தினள். அவளுக்கு வாக்கு வன்மை மிக அதிகம். உலகெங்கும் கிளைகளைக் கொண்ட பிரம ஞான சங்கத்தின் தலைவி என்ற தன்மையில் உலகறிந்த மாதாவள் அவள்.

ஆதியில் சமய ஆராய்ச்சியிலும், இந்திய நாகரிக நேர்மையிலுமே அவளுக்கு ஈடுபாடு மிகுந்திருந்தது. பல்லாண்டு பல்லாண்டாக பாரெங்கும் வியக்கும் வண்ணம் நாகரிகம் படைத்திருந்த பாரதபூமியின் அரசியல் நிலை கண்டு, அவள் மனம் பதறியது. உடனே அரசியலில் அவள் புகுந்தாள் மிதவாத காங்கிரஸில் சேர அவள் மனம் ஒப்பவில்லை. தீவிரவாதிகளின் திக்கற்ற நிலை கண்டும் அவள் தேம்பினாள்.

உடனே சென்னையில் ஹோம் ரூல் சபை கண்டாள். திலகர் கண்ட ஹோம் ரூல் சபையின் நோக்கத்தை

அவள் பின்பற்றினாள். இம்மாகாணம் எங்கும் அதற்கு கிளைகள் ஏற்படுத்தினாள். ஊர்தோறும் உள்ள பிரம ஞான சங்கத்தினர் அச்சபையில் அக்கறை காட்டி அதனை வலுப்படுத்தினர். அச்சபையின் மூலம் அவள் அதிக அற்புதமாகக் கிளர்ச்சி செய்து வந்தாள். குஞ்சுகளும் குழந்தைகளும் ஹோம் ரூல், ஹோம் ரூல் என்று கோஷம்போடத் தொடங்கின; குதூகலமும் எய்தின.

பிறப்பால் அவள் ஆங்கில மாது; நடையிலும் உடையிலுமோ இந்திய மாதாக விளங்கினாள். உலகறிந்த அந்த அம்மை கிளர்ச்சியில் புகுந்த உடனே அதிகாரிகளுக்கு நடுக்கம் எடுத்தது. இலண்டன் மாநகரிலும் ஹோம் ரூல் சபையின் கிளையொன்று அவள் தோற்றுவித்தாள். மிதவாதிகளையும், தீவிர வாதிகளையும் ஒருமைப் படுத்தி, காங்கிரஸ் மகா சபையை வலுப்படுத்தவே, அவளுக்கு ஆர்வம் பெருகிற்று.

அதுபற்றி அந்த அம்மை பெரிதும் முயன்றாள். கோகலேயும், மேத்தாவும் திலகரை அச்சபையில் சேர்ப்பதா என்று திகைத்தனர். நாள் சில சென்றதும், முன் சொன்ன இரு தலைவர்களும் இந்த உலகைத் துறந்து போயினர். மிதவாத காங்கிரஸ் மகா சபை நாதனற்றுப் போயிற்று. அந்நிலையில் தேசத் தலைமை வகிப்பதற்கு திலகரே தகுதி வாய்ந்தவராகத் துலங்கினார். ஆனாலும் பல இடையூறுகளினால் அப்பதவி அவருக்குக் கிட்டவில்லை. அவரும் அதற்கு ஆசைப்படவில்லை.

யுத்த சமயத்தில் இந்தியா பேருதவி புரிய அதற்கு கைம்மாறாக இங்கிலாந்து தேசம் நமக்கு அரசியல் திருத்தம் வழங்கவேண்டும் என்று பானர்ஜி போன்றவர்கள் கருதி நின்றார்கள். சுயராஜ்யம் என்பது ஒருவர் மற்றவருக்கு அளிக்கும் வெகுமதி அன்று. அது நமது பிறப்

புரிமை என்று திலகரும், அன்னிபெஸண்ட் அம்மையும் சேர்ந்து கிளர்ச்சி செய்தல் கண்டு அதிகாரிகளுக்குப் பிடிக்கவில்லை. ஆதலினால் பிறமாகாணங்களுக்குத் திலகர் சென்று பிரசாரம் செய்வதை அவர்கள் தடுத்தார்கள். பெஸண்ட் அம்மைக்கும் அவ்விதம் தடை ஏற்பட்டது.

அங்கிலேயில் மிதவாதிகளுக்கும், தீவிர வாதிகளுக்கும் ஒருவித உடன்பாடு ஏற்பட, 1916-ம் வருடம் இலட்சுமணபுரியில் நடந்த காங்கிரஸ் மகா சபைக்கு திலகர் தமது கோஷ்டியுடன் சென்றார். அங்கே அவருக்கு பிரமாதமான வரவேற்பு நடந்தது. அச்சமயம் "நாம் சுயராஜ்யம் எய்தியாக வேண்டும். இந்து முகம்மதியர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேற்றுமை எதற்கு? தாழ்ந்தோர் என்போரிடம் சுயராஜ்யத்தை ஆங்கிலேயர் அளிப்பின், அத் தாழ்ந்தோருக்கு உட்பட்டு வாழ நான் தயார். ஆனால் அன்னியருக்கு உட்பட்டு வாழேன்" என்று அவர் சிங்கநாதம் செய்தார்.

இத் தேசத்திலுள்ள முகம்மதியரில் சிலர் தமக்கென்று முஸ்லீம் லீக் என்பதாக ஒரு மகா சபை கண்டிருந்தனர். காங்கிரஸ் மகா சபையைப்போல் அச்சபையும் ஓரிடத்திலே ஆண்டுதோறும் கூடி, அரசியலில் ஓரளவு அக்கரை செலுத்தி வந்தது. ஆயினும் இனத்தாரின் நன்மையையே அச்சபை பெரிதும் கருதி நின்றது. இரு மகா சபைகளும் ஒருமித்து சுயராஜ்ய திட்டமொன்று வகுக்கவேண்டும் என்று பலரும் முடிவு செய்தனர். இதற்கிடையிலே டில்லி சட்டசபையில் இருந்த பத்தொன்பது ஜனப்பிரதிநிதிகள் சேர்ந்து, அரசியல் திட்டமொன்று வகுத்து அரசாங்கத்துக்கு அனுப்பினர்.

இரு மகா சபைகளும் சேர்ந்து ஒருமிக்க சுயராஜ்ய திட்டம் வகுக்கவேண்டும் என்னும் தீர்மானம் இடிமுழக்

கம்போல் அதிகார வர்க்கத்தின் காதில் விழுந்தது. தேசத்தைத் திரட்டவே திலகரும், அம்மையும் முயலு வதும் அதிகார வர்க்கத்துக்கு அடிவயிற்றில் நெருப்பைக் கட்டினதுபோல் ஆயிற்று. இருவரின் கிளர்ச்சியும் ஓங்கி உயர்ந்து வந்தன.

திலகரின் அறுபதாவது ஆண்டுவிழா வந்தது. மக்கள் மனமகிழ்ந்து அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் காணிக்கை செலுத்தினர். திலகரின் பெருமை பெருகுதல் கண்ட உடனே நன்னடக்கை ஜாமீன் கட்டவேண்டும் என்று அதிகார வர்க்கம் செங்கோல் பிறப்பித்தது. கீழ்க்கோர்ட்டார் அதனை உறுதிப்படுத்தினும், பம்பாய் உயர்தர நீதிமன்றம் அது அடாது என்று தீர்ப்பளித்தது. முகத்தில் கரியைப் பூசிக்கொண்ட அவ்வர்க்கம் முணு முணுத்து நின்றது.

பெஸண்ட் அம்மையின் மீதும் அதிகார வர்க்கம் பாணம் தொடுத்தது. அம்மையும், அவளது சகாக்களான வாடியா, அருண்டேல் என்போரும் உதக மண்டலத்திலே காவலில் கிடக்கலாயினர். மூவரையும் பிடித்துப் போட்டு விட்டால் ஹோம் ரூல் கிளர்ச்சி அடங்கிவிடும் என்று சென்னை கவர்னரான லார்டு பெண்ட்லண்ட் என்பார் எண்ணினர். ஆனால் அம்மூவரும் காவலில் கிடக்க கிடக்க, நம் தேசத்தின் மூலை முடுக்குகளிலும், சந்து பொந்துகளிலும் ஹோம்ரூல் கோஷம் பொங்கிப் பறந் தது. அதுகண்டு கவர்னர் பிரமித்தார்.

அச் சமயம் சென்னையிலே உயர்நீதிபதியாக இருந்த வரும், காங்கிரஸ் மகா சபையை ஆதியில் கண்டவரில் ஒருவரும், பழுத்த கிழவருமான ஜஸ்டிஸ் மணி அய்யர் என்பார் இங்கே நடக்கும் ஆங்கில ஆட்சியின் அவகேடு களை யெல்லாம் விரித்து அமெரிக்காவின் ஜனாதிபதியான

வில்சன் என்பாருக்கு ஒரு கடிதம் விடுத்தார்; தமக்கு அரசாங்கம் அளித்திருந்த பட்டம் பதவிகளை வீசி எறிந்தார்; திலகர் கூறிய வழியில் அரசாங்கத்தை எதிர்க்கும் முதல் புருஷராக முன்வந்தார்.

அது வரையில் அரசியலில் தலையிடாது, "ஹிந்து" பத்திரிகையை வெகு திறம்பட நடத்திவந்த கஸ்தூரி ரங்க அய்யங்கார் என்பாரும் அரசாங்கத்தை எதிர்க்கும் இரண்டாவது புருஷர் தாமே என்று அறிக்கையிட்டார். இன்னும் பலரும் அந்த எதிர்ப்புக் கோஷ்டியில் வந்து குவிந்தனர். நாளுக்கு நாள் கிளர்ச்சி வலுத்தது. அரசை எதிர்ப்பதற்கான வழி முறைகள் ஆராயப்பெற்றன.

அப்போது யுத்தத்தில் இங்கிலாந்துக்கு பேருதவி புரிந்துவந்த அமெரிக்கா தேசமோ, இந்தியாவிலே இங்கிலாந்தின் ஆட்சிமுறை கண்டு அதிசயித்தது; ஜன நாயகத்தினைக் காக்கவே போரில் குதித்ததாக அறிவித்த இங்கிலாந்து தேசம், இப்படியா ஆட்சி நடத்தும் என்று உலகிலே பல தேசத்தாரும் பேசலாயினர். ஜெர்மனியோ இந்தியாவின் அவல ஆட்சிமுறையை உலகெங்கும் அம்பலப்படுத்தி, ஏளனம் செய்தது; எக்களிப்பும் கொண்டது.

பயங்கரவாதிகள் அது உணர்ந்து, "சட்ட சம்மதமான வழியில் கிளர்ச்சி செய்வதின் பலனைப் பாருங்கள். மயிலே, மயிலே என்றால் இறகு கொடுக்குமா? இழுத்து வைத்துப் பிடுங்கினால்தான் கொடுக்கும். எனவே பயங்கரவாதிகள் என்று எங்களைக்கண்டு வெறுப்பதேன். உதைப்பானுக்கு வெளுப்பான் சாதி வண்ணான்" என்று கூறி விளம்பரங்கள் விடுத்தனர்; வீறிட்டும் செயல் ஆற்றினர்.

பெஸண்ட் அம்மையை அதிகாரவர்க்கம் காவலில் வைத்ததைக் கண்டிப்பாக பாடம் புகட்ட வேண்டுமாயின்

1917-ம் வருடத்திய காங்கிரஸ் மகாசபைக்கு அந்த அம்மையே தலைமை தாங்கும் வண்ணம் மக்கள் தேர்ந் தெடுக்கவேண்டும் என்று பாலகங்காதர திலகர் அறிவித் தார். அவ்விதமே தேசம் அந்த அம்மையையே காங்கிரஸ் தலைமைப் பதவிக்குத் தேர்ந்தெடுத்தது. சிறிது காலம் ஆனதும் அரசாங்கத்தார் அந்த அம்மையையும், அவளது சகாக்கள் இருவரையும் விடுவித்தனர் விதியின்றி. உடனே கிளர்ச்சி இன்னும் பெருகியது.

குறைந்த அளவு இன்னின்ன சீர்திருத்தங்கள் உடனே செய்தாக வேண்டும் என்று தேசத்தின் இரு மகாசபைகளும் சேர்ந்து ஒரு திட்டத்தை வெளியிட் டன. அவ்விதம் தேச மக்கள் ஒருமனம் கொள்வதை அறிந்ததும், அதிகார வர்க்கம் ஆணவமாகப் பேசிற்று; பல்லை நறநற என்று கடித்தது. ஆனாலும் தேசத்தின் முனைப்பை மதித்தும், பயங்கரவாதிகளுக்கு அஞ்சியுமே ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் வருடம் ஆகஸ்டு மாதம் இந்தியா மந்திரியான மாண்டேகு முன்னே சொல்லிய அறிக்கையை வெளியிட நேர்ந்தது.

36. குட்டிப் போர்

பம்பாய் மாகாண வாசியான மோகனதாஸ் கரம்சந்த் காந்தி என்பார் சீமை சென்று, பாரிஸ்டர் பட்டம் பெற்று, இந்தியாவுக்குத் திரும்பியதும், பம்பாயில் வக்கீல் தொழில் நடத்த எண்ணினார். அப்போது ஒரு பெரிய வர்த்தகரின் வழக்கை ஒட்டி, அவர் தென் ஆப்பிரிக்கா செல்ல நேர்ந்தது.

இங்கே பிழைக்க வழியில்லாமல், நம்மவரில் பலர் தென் ஆப்பிரிக்கா சென்று, பற்பல வேலைகளில் அமர்ந்

திருந்தனர். அங்குள்ள ஐரோப்பியர் நம்மவரை மிருகத்தினும் கேவலமாக நடத்தி வந்ததை மோகனதாஸ் அறிந்தார்; நம்மவரின் சொல்ல ஒண்ணுத கஷ்ட நஷ்டங்களையும் நேரில் பார்த்தார்.

அதன்பின் மோகனதாஸ் அங்கேயே தங்கி, நம்மவருக்காக மிகவும் பாடுபட்டார்; அங்கே சத்தியப் போர் நடத்தி, நம்மவருக்கு ஆறுதல் தேடி வைத்தார். அப்போரின் வலிமை கண்டு, அங்குள்ள அரசாங்கம் வழிக்கு வந்தது. பின்பு அவர் இந்தியாவுக்கு வந்தார். அவர் சத்தியத்தின் வடிவம்; அகிம்சையின் அவதாரம்.

இங்கே அதிகாரிகளின் கட்டுக் கடங்காத அடக்கு முறைகளைக் கண்டதும், அவர் மனம் பதறியது. அதற்குப் போட்டியாக பயங்கரவாதிகள் நடத்தி வந்த வெடிகுண்டு வீச்சும், அவர் மனத்தைக் கலக்கியது. தென் ஆப்ரிக்காவிலே கையாண்டு கைமேல்பலன் கண்ட சத்தியத்தையும், அகிம்சையையும் இங்கே நிலை நாட்ட அவருக்கு ஆவல் பிறந்தது. அதற்கு அவர் காலங்கருதி இருந்தார்.

பிஹார் மாகாணத்திலே முன்னம் அவுரித் தோட்டங்கள் அதிகம். அவை பலவும் ஐரோப்பியருக்கு உட்பட்டவை. தோட்ட விவசாயிகள் அனைவரும் ஏழை இந்தியர். தாங்கள் பயிரிடும் நிலங்களிலே ஒரு பகுதியில் அவுரியை அந்த உழவர் பயிர் செய்தாக வேண்டும். அப்பயிரை அப்படியே ஐரோப்பியருக்குக் கொடுத்து விடவும் வேண்டும். ஓர் ஏகர் நிலத்தில் விளையும் அவுரிப் பயிருக்கு ஏறக்குறைய பத்து ரூபாயே உழவர்களுக்குக் கிடைக்கும்.

ஜெர்மன் சாயச்சரக்கு வருமுன் நமது தேச அவுரிச்சாயம் உலகப் பிரசித்தி பெற்றது. அதில் அந்த

ஐரோப்பியருக்கு அபரிமிதமான இலாபம் கிடைக்கும். உழுது பயிரிட்டவனுக்கோ ஒன்றும் கிடையாது என்னலாம். மேலும் ஆடு மாடுகளைப் போல் அந்த உழவரை ஐரோப்பியர் நடத்தி வந்தனர். அதுபற்றி அடிக்கடி அங்கே கலகம் நிகழும். ஏழை உழவரின் பேச்சு அம்பலம் ஏறாது. அன்று ஐரோப்பியருக்கு அவ்வளவு ஆதிக்கம் இருந்தது.

சம்பாரண்யம் என்பது பீஹாரில் ஒரு பாகம். முன்னம் ஆங்கிருந்துதான் ஜனக மகாராஜன் ஆட்சி செலுத்தி வந்தான். அவுரிப்பயிர் அச்சம்பாரண்யத்தில் தான் மிக ஏராளம். அங்குள்ள உழவர் கேள்வி முறை கிடையாதா என்று ஏங்கி நின்றனர். அதனை மோகன தாஸ் அறிய வந்தார்; உடனே உள்ள நிலையை நேரில் கண்டு அறிவதற்கே அவ்விடம் சென்றார்; பலரையும் கண்டு பேசினார்.

அங்கே போகுமுன்னம் அவர் தமது கருத்தை ஐரோப்பிய தோட்டக்காரருக்கு அறிவித்தார்; அதிகாரிகளுக்கும் தெரிவிக்கத் தவறவில்லை. ஆங்குள்ள பிரமுகரின் துணைகொண்டு, உழவரை வருவித்து, வாக்குமூலம் வாங்கினார். உழவர் கூட்டமாக வந்து வாக்குமூலம் கொடுப்பதைக் கேட்டு, ஐரோப்பியத் தோட்டக்காரருக்குக் கோபம் பொங்கியது. இவன் யார் இங்கு வந்து வாக்கு மூலம் வாங்குவது என்று அவர்கள் சீறினார்கள்.

அந்நாளில் ஐரோப்பிய முதலாளிகள், தோட்டக்காரர் இவர்களுக்கே ஆதரவாய் நின்றது ஆங்கில அதிகார வர்க்கம். மோகனதாஸ் காந்தி என்பவர் வந்து குழப்பம் விளைக்கிறார் என்று அந்த ஐரோப்பியர் கூச்சல் போட்டனர். போடவே, "உமது செயலினால் இங்கே

அமைதி கெடுகிறது. உயிர்ச்சேதமும் உண்டாகும் என்று தோன்றுகிறது. ஆதலின் இந்த ஜில்லாவை விட்டு உடனே நீர் போய்விட வேண்டும்" என்று காந்திக்கு ஆணையிட்டான் சம்பாரண்ய கலெக்டர்.

1917-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10-ந் தேதி அந்த ஆணையை மோகனதாஸ் அறிந்தார். உடனே, "நான் அமைதியைக் கெடுக்க வரவில்லை. ஏழைகளின் உண்மை நிலையினை உணரவே வந்துள்ளேன். இது மிகவும் முக்கியமான கடமை. ஆதலின் நான் இந்த ஜில்லாவை விட்டுப் போகமுடியாது" என்று காந்தி மகான் பதில் கொடுத்தார்.

அதிகார வர்க்கத்தின் வாக்கினுக்கு எதிர் வாக்கா? என்று அந்த அதிகாரி இடியேறுண்ட நாகம்போல் கலங்கினன். ஆனாலும் அவரை வரவழைத்து விசாரணை நடத்தினன். அவரோ, "நான் இந்த ஊரை விட்டுப் போகேன். என்ன தண்டனை கொடுத்தாலும் சரி" என்று கூறினர். அன்றளவும் அவ்விதம் அதிகாரியின் முன்னிலையிலே பேசியவர் கிடையாது. அவனுக்கோ என்ன செய்வது என்று தோன்றவில்லை. அவரைத் தண்டிக்கவும் துணிவில்லை. ஆதலின் மாகாண கவர்னருக்கு அவன் எழுதினன்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டதே என்று கவர்னரும் சிந்தனை செய்ய நேர்ந்தது. முடிவில் அவர் மீது உள்ள வழக்கை அக்கவர்னர் நிறுத்திக் கொண்டார்; உழவரின் நிலையை விசாரித்தறிய ஒரு பஞ்சாயத்தை நியமித்தார்; அப்பஞ்சாயத்தில் மோகனதாஸே பிரதம புருஷர். முடிவிலே உழவரின் கஷ்டநஷ்டங்கள் வெகுவாகத் தீர்ந்தன. ஒரு நூறு வருடகாலமாக ஒடுங்கிக் கிடந்த உழவர் தக்க ஆறுதல்

அடைந்தனர். தோட்டக்காரரும் தருக்கு விடுத்துப் பணிய நேர்ந்தது.

இனி, பம்பாய் மாகாணத்திலே கெய்ரா என்பது ஒரு ஜில்லா. 1918-ம் ஆண்டிலே அங்கே பருவ மழை தவறியது. அதனால் வேளாண்மை குன்றியது; மகசூலும் மிகவும் குறைந்து போயிற்று. உழவுக்குரிய ஊதியமே இல்லாமல், ஏழை விவசாயிகள் வருந்தினார்கள். அன்றாட வாழ்வினுக்கும் அவர்களுக்கு வகையில்லை. இந்நிலையில், நிலவரியைக் கட்டியாக வேண்டும் என்று அதிகாரிகள் கட்டாயம் செய்தார்கள்.

நிலவரியை எங்ஙனம் கட்டுவது? உழவு மாட்டையோ, தட்டுமுட்டுச் சாமான்களையோ, வாழும் குடிசைகளையோ விற்றால் தான் வரி கட்ட முடியும். அவற்றை விற்றுவிட்டால் ஏழைகள் என்ன செய்வர். அதிகாரிகளிடம் அவர்கள் மன்றாடிப் பார்த்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. காந்தி மகான் அதனை அறியவந்தார். அவரும் அதிகாரிகளிடம் முறையிட்டுக் கொண்டார். அதிகாரிகளின் காதில் ஒன்றும் ஏறவில்லை.

அதன்மேல் அவர் கிராமங்கள்தோறும் சென்றார்; ஆங்காங்குள்ள உழவரைக் கூட்டி வைத்துப் பேசினார்; வரிகொடாமல் இருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்று விளக்கினார்; வரிகொடாமல் இருந்தால், ஆடுமாடுகளும், வீடு வாசல்களும் ஜப்தி செய்யப்படும் என்றார்; அப்போது சத்தியத்தையே கடைப்பிடித்து, அமைதியும் சாந்தமுமே கொண்டு, நடக்க வேண்டும் என்றார். எல்லாரும் சரி என்றனர்.

உடனே உழவர் அனைவரும் வரி கொடாமல் வாளா இருந்துவிட்டனர். அதிகாரிகள் சும்மா இருப்பார்களோ! உழவரின் வீடு வாசல்களையும், தட்டு முட்டுச் சாமான்

களையும், அவர்கள் ஜப்தி செய்து ஏலம் போட்டார்கள். ஜில்லா முழுவதும் ஒற்றுமை ஓங்கி நின்றதனால் ஜப்தியான சாமான்களை ஏலம் கேட்க எவரும் வரவில்லை. அந்நிலையில், என்ன செய்வது என்று அதிகாரிகளுக்கும் தோன்றவில்லை.

மாகாண அரசாங்கம் அந்நிலையை உணர்ந்தது; அதிகாரிகளின் தவற்றையும் கண்டு கொண்டது. போரை வளர்க்க அது விரும்பவில்லை. ஆதலின், "வரி கட்டக் கூடியவர்கள் கட்டுங்கள். மற்றையோர் கட்டவேண்டாம்" என்று உத்தரவு பிறப்பித்தது. சத்தியமும் சாந்தமும் கைகொடுத்தன என்று உழவர் உணர்ந்து, காந்தி மகானைப் போற்றினர். அதிகாரிகளுக்கும் அவரிடம் மதிப்பு உண்டாயிற்று.

அம்மாகாணத்திலுள்ள ஆமதாபாத் நகரிலே நெசவாலைகள் அதிகம். அவற்றில் ஆயிரக்கணக்கான தொழிலாளர் வேலை பார்த்து வந்தனர். ஒரு சமயம் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் தகராறு ஏற்பட்டது. அதன் விளைவாகத் தொழிலாளர் வேலைக்குப் போகாமல் நின்றுவிட்டனர். ஐம்பது அறுபது ஆயிரம் பேர் சோம்பிக் கிடந்தால், அமைதியின்மை ஏற்படும் அல்லவா? தொழிலாளர் தடுமாறத் தொடங்கினர்.

காந்திமகான் அதுகண்டு, தொழிலாளரை எல்லாம் திரட்டி, அவர்களுக்கு நல் உபதேசம் செய்தார்; சாந்தமான வழியையே மேற்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்தினார். அவரது போதம் கேட்டு, ஏழைத் தொழிலாளர் நேர்மையும் ஒற்றுமையும் கொண்டு நடந்து வந்தனர். அதே சமயத்தில் முதலாளிகளுக்கும் அவர் நல் வார்த்தை கூறினார். அதற்கு முதலாளிகள் செவி சாய்க்கவில்லை.

ஏழைகளின் வயிறு காய்ந்தால், அவர்கள் வேலைக்குத் திரும்புவார்கள் என்று முதலாளிகள் எண்ணி நின்றனர். தொழிலாளரோ வேலைக்குத் திரும்புவதாக இல்லை. நெடுநாள் ஆலைகள் மூடுண்டு கிடந்தமையால், முதலாளிகளுக்கு மிக்க நஷ்டம் ஏற்பட்டது. அதனால் தொழிலாளரின் ஒற்றுமையைக் குலைக்க அவர்கள் பல வழிகளிலும் முயன்றார்கள்.

பணம் பத்தும் செய்யும் அல்லவா? மறைமுகமாக முதலாளிகள் பணத்தை வாரி வீசி, அத் தொழிலாளரின் ஒற்றுமையைக் குலைக்க முற்பட்டனர். அது கண்ட காந்திமகான் உண்ணா நோன்பு கொண்டார். பிறருக்காகப் பட்டினி கிடந்து அவர் வாடுவதைப் பார்த்து, முதலாளிகளுக்கு நற்புத்தி பிறந்தது. பிறக்கவே சமரசம் உதித்தது.

தொழிலாளரின் ஒற்றுமையும் குன்றவில்லை, முதலாளிகளின் பிடிவாதமும் தளர்ந்தது. மோகனதாஸின் சாதனை கண்டு அதிகாரிகளும் ஜனங்களும் ஆச்சரியம் அடைந்தார்கள். சத்தியத்தின் வலியையும், சாந்தத்தின் பெருமையையும் அறிந்துகொண்டனர் அனைவரும். அவரது சத்திய ஆற்றலும், நேர்மைத் திறனும் தேசமெங்கும் பரவி வந்தன.

அச்சமயத்தில் முதல் உலக மகாயுத்தத்திலே இங்கிலாந்தே வெற்றிபெறும் என்று எல்லாரும் எண்ணினர். வெற்றி கண்ணுக்கு எட்டியதும், ஆங்கில மந்திரிகளின் போக்கும், அதிகாரவர்க்கத்தின் செயலும் மாறிவிட்டன. மிடுக்கும் துடுக்கும் காட்டி, மந்திரிகளும் அதிகாரிகளும் பேசத் தலைப்பட்டனர். அதுகண்டதும் தேசத்திலே சிலருக்கு ஏக்கமும், சிலருக்கு ஏமாற்றமும், சிலருக்கு

ஆத்திரமும் உண்டாயின. தேசத்தில் கொந்தளிப்பு மூளும்போல் இருந்தது.

அப்போது, தேசத்தின் முன்னே தோன்றி ஊழியம் புரியவேண்டும் என்று பலரும் காந்திமகானுக்குச் சொல்லினர். திலகரும், அன்னிபெஸண்ட் அம்மையும் தலைமை தாங்கி மக்களை நடத்தி வருகையில், தேச சேவையில் ஈடுபட அவர் தயங்கினர். ஆனாலும் சத்தியம், அகிம்சை இரண்டையுமே கொண்டு அரசியல் போரை நடத்த வேண்டும் என்று அவருக்கு ஆவல் மிகுதி.

ஆதலின் பற்பலருடனும் அவர் கலந்து பேசினர்; தாமும் சிந்தனை செய்து நின்றார்.

37. சத்தியாக்கிரகம்

ஜனநாயகத்தைக் காக்கவும், அந்தந்த நாட்டு மக்கள் தாம்தாம் விரும்பிய வகையில் அரசியலை வகுத்துக்கொள்ளவுமே யுத்தத்தில் இறங்கியுள்ளோம் என்று ஆங்கில மந்திரிகள் உலகறியக் கூறியதை நம்பியே, நமது தேசம் பேருதவி புரிந்தது. உதாரணமாக நம்மவரில் 15 இலட்சம்பேர் போர்ச் சேவகத்துக்குப் போயினர். பணமாகவும், பொருளாகவும் நாம் இரண்டாயிரம் கோடி ரூபாய் கொடுத்தோம். இரண்டு இலட்சம் ஆடும், மாடும், குதிரைகளும் அனுப்பினோம்.

ஆபத்துக் காலத்திலே இங்கிலாந்துக்குத் தலைகொடுத்ததனால் நமது அடிமை வாழ்வு அகலும், ஆங்கில ஏகாதிபத்தியத்திலே சரிசமமான பங்காளிகளாக நாம் வாழலாம் என்று இந்தியர் அனைவரும் எண்ணினின்றனர். 1918-ஆம் வருடத்துவக்கத்திலே யுத்தநெருக்கடி கண்டு இங்கிலாந்து நடுக்கம் கொண்டது. கொள்ளவே இந்தியாவெங்கும்

யுத்த உதவி மகாநாடுகள் கூட்டி, இன்னும் வேண்டிய உதவி செய்ய நம்மவர் வாக்களித்தனர். டில்லியிலே அரசப்பிரதிநிதி கூட்டிய யுத்த மகாநாட்டினுக்குக் காந்தி மகான் சென்று, இராஜ விசுவாசத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினுர்.

சில மாதங்கள் ஆனதும், யுத்த நெருக்கடி தீர்ந்தது. யுத்த நிறுத்த உடன்படிக்கை ஏற்பட்டது. இதற்கு இடையில், தேசப் பாதுகாப்புச் சட்டத்தின்படி காவலில் கிடந்தோரை அதிகாரவர்க்கம் குரூரமாக நடத்தியது கண்டு, இங்கிலாந்தின் மனத்தூய்மையில் இந்தியருக்கு ஐயப்பாடு உண்டாயிற்று. காரியம் ஆகும்வரையில் கெஞ்சி நிற்கும். ஆங்கிலேயர், அக்காரியம் தீர்ந்ததும் ஆணவம் கொண்டு விடுவார்கள் என்று மதியூகிகள் மதித்தனர்.

யுத்தம் தீர்ந்ததும் தேசப் பாதுகாப்புச் சட்டம் மறைய வேண்டும். அதனை முன்னிட்டு அதனினும் கொடிய ரௌலட் சட்டம் என்பதை இயற்ற அதிகார வர்க்கம் முன் வந்தது. எவனும் தனது வீட்டிலே இனிது வாழ முடியாத வண்ணம் தடுக்கவல்லது அந்த ரௌலட் சட்டம். அது கண்டு தேசம் திடுக்கிட்டு, ஒருமுகமாக அச்சட்டத்தைக் கண்டித்தது. டில்லி சட்ட சபையில் இருந்த இந்தியர் அனைவரும் அதனை எதிர்த்தே பேசினர்.

ஆயினும், அதிகாரிகளோ தேசத்தின் மனக் கொதிப்பை அலட்சியம் செய்து, அச்சட்டத்தை நிறைவேற்றிவிட்டனர். உடனே இந்திய அங்கத்தினரில் மூவர் அச்சபையில் வகித்திருந்த பதவியை வீசி எறிந்து வெளியே வந்தனர். மாண்டேகு செம்ஸ்போர்ட் சீர்திருத்தத்தின்படி மேலும் சீர்திருத்தம் வழங்கும் காலத்தை வரையறுக்கும் அதிகாரம் ஆங்கில மந்திரிகளின் கைக்குள் அடங்கியதாம். எனவே அவரவர் தம்தம் இஷ்டப்படி

அரசியலை வகுத்துக் கொள்ளும் சுய-நிர்ணய லட்சியம் என்பது காற்றில் பறக்கலாயிற்று.

இவற்றை யெல்லாம் தேசமக்கள் எண்ணிப் பார்த்து மனம் புண்ணுயினர். பலருக்கோ ஆத்திரம் தலைமிஞ்சி விட்டது. விடவே, பயங்கரவாதம் தலைதூக்கிவிடுமோ என்று காந்தி மகான் அச்சம் மிகக் கொண்டார். தேசத்திலே இரத்தக்களறி தோன்றக்கூடாது; சத்தியமும் சாந்தமுமே நிலைநிற்க வேண்டும்; அவ்விரண்டையும் துணை கொண்டு அதிகார வர்க்கத்தின் மனத்தையும் மாற்ற வேண்டும் என்று மகாத்மா காந்தி முடிவு செய்தார்.

உடனே சத்தியாக்கிரக இயக்கம் என்பதை அவர் தோற்றுவித்தார். சத்தியாக்கிரகம் என்றால் சத்தியத்தையே மேற்கொண்டு நடத்தல் என்பதாம். ரௌலட் சட்டத்தையும் அவசியமானால் இன்னும் இதர சட்டங்களையும் சத்திய மார்க்கத்தில் எதிர்த்து நிற்றல் அந்த இயக்கத்தின் முக்கிய அம்சம் ஆகும். சட்டங்களை எதிர்ப்பது என்றால், எவ்வளவோ தியாகம் செய்ய நேரும். சுருங்கச் சொன்னால் உடல், பொருள், ஆவி மூன்றையும் பணயம் வைத்தே சட்ட மறுப்பில் இறங்குதல் வேண்டும்.

தன்னைத் தானே தூய்மை செய்துகொள்ளுவதும், தவம் பூணுவதும் சத்தியாக்கிரகத்தின் அடிப்படையாகும். பிறருக்கு யாதொரு துன்பமும் செய்யாமல், துன்பம் அனைத்தையும் தானே அனுபவித்து, அரசியல் குறைகளை அகற்றுதல் சத்தியாக்கிரகியின் கடமையாம். அது பற்றி சத்தியாக்கிரகி ஒரு நாள் முழுவதும் உண்ணு நோன்பு கொள்ளுதல் வேண்டும். நோன்பு கொள்ளும் தினத்தன்று அதிகாலையில் எழுந்து, நன்னீராடித் தூய மனத்துடன் ஆண்டவனது சன்னிதானம் சென்று

"ஐயனே! இந்த அநீதிச் சட்டம் தொலைதல் வேண்டும்" என்று துதித்தல் அவசியம்.

மேலும் அன்று முழுவதும் எவ்வித அலுவலும் பாராமல் ஓய்வு கொண்டு, சதா தெய்வ சிந்தனையுடன் இருத்தல் கடமையாம். அன்று மாலையிலே எல்லாரும் ஓர் இடத்திலே கூடி, சத்தியாக்கிரக விரதம் பூணுவதாக அறிவித்து, ஆண்டவனை வழுத்துதல் வேண்டும். பொதுக் கூட்டத்திலே சத்தியமும், சாந்தமும் அகிம்சையுமே ஓங்கி நிற்றல் உயர்கடனும். தவிர, எல்லாரும் ஓர் குலம், எல்லாருமோர் இனம், எல்லாரும் இந்திய மக்கள் என்னும் உணர்ச்சி ததும்புதல் வேண்டும்.

ஹிந்துக்கள் முகம்மதியர், படித்தோர் படியாதோர், மேலோர் கீழோர், ஆடவர் பெண்டிர், பணக்காரர் ஏழைகள், கிழவர் குமரர் இவ்விதம் எல்லாரும் வேற்றுமையின்றி மன ஒருமை கொண்டு கூடி நிற்கையில் புதிய உணர்ச்சியும், சக்தியும் தோன்றும். தோன்றவே மக்களிடம் சத்திய வன்மை தலை சிறக்கும். சிறக்கவே, எத்தகைய தீய சக்தியும் எதிர் நிற்க இயலாது. அநீதங்கள் எல்லாம் அகன்றுபோம்.

அவ்விதம் தேசமக்கள் விரதம் கொள்வதைத் தவிர வேறு வகையில்லை என்று மகாத்மா காந்திகூறி, இத்தேசமெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்து, ஆங்காங்கே பொதுக் கூட்டங்களில் சத்தியாக்கிரக இலட்சியத்தை விரித்து உரைத்தார். ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறும் தேதி அவ் விரதம் கொள்ளுதல் வேண்டும் என்று அவர் அறிவித்தார். அதுமுதல் ஒருவாரம் சத்தியாக்கிரக வாரமாகும் என்றும் திட்டம் செய்தார்.

அந்த புதிய இயக்கத்தைத் துவக்கும் முன்பு, அதன் வரலாறு அனைத்தையும் அவர் வகுத்தும் தொகுத்தும் கூறி, அரசாங்கத்துக்கும் எழுதினார். போர் துவக்கு முன்னம் எதிரிக்கு அறிவித்தலே தர்ம யுத்தத்தின் இலக்கணம் ஆகும். பயங்கரவாதிகளும் அந்த இயக்கத்தின் தத்துவத்தையும், பலனையும் அறிந்து வெடிகுண்டு வீச்சைக் கைவிடுதல் வேண்டும் என்பது அவரது ஆசையாம். அது அறிந்த பயங்கரவாதிகளும் "பார்க்கலாம்" என்றிருந்தனர்; அசத்தியமே கொண்டு நடப்பவனிடம் சத்தியத்தைக் கொண்டு வெற்றிபெற முடியுமா? என்றும் வினவினர்.

தேசமோ அவரது புதிய வழி முறையில் பற்றுமிருந்தது. அதனைக் கையாண்டு பார்க்கவும் திரண்டது. குறித்த ஏப்ரல் ஆறும் தேதியன்று வடகோடியிலிருந்து, தென்கோடி வரையில் மக்கள் அனைவரும் காலையில் எழுந்து, நீராடி, ஆண்டவனைத் துதித்து, மாலையிலே கூட்டம் கூடி, ஆகாயவாணி அறிய அவ்விரதத்தை மேற்கொண்டனர். நமது சென்னைமா நகரிலே ஆலயம், மசூதி, மாதா கோயில் இவற்றினுக்கு மக்கள் தம் குடும்ப சகிதம் சென்று கடவுளைத் தொழுதனர். எல்லாரும் தம் அலுவலை நிறுத்தினர். கடை, கண்ணிகள் எல்லாம் மூடப்பட்டன. அன்று முழுவதும் வீதியிலே வாகனம் எதுவும் தென்படவில்லை. அனைவரும் கால் நடையாகவே திருவல்லிக்கேணி கடற்கரைக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

அந்நாளில் சென்னை மாநகரின் ஜனத்தொகை ஏழு அல்லது எட்டு இலட்சமே. ஏறக்குறைய ஆறு இலட்சம் ஜனங்கள் கடற்கரையில் கூடி இருந்தார்கள். அப்போது ஒலி பெருக்கி கிடையாது. ஆதலின் எட்டு மேடைகள் போடப்பட்டன. எட்டிலும் ஒவ்வொரு தலைவர் நின்று

சத்தியாக்கிரக விரத வாசகத்தை வாசித்துவர, அதனை அப்படியே மேற்கொள்வதாக மக்கள் அனைவரும் மன, மொழி, மெய்களால் கூறினர். அக்காட்சியைக் கண்ணால் கண்ட அதிகாரிகள் அனைவரும் புதிய உலகம் தோன்றி விட்டது என்று ஒரு பக்கம் பூரிப்பும், ஒரு பக்கம் உதைப்பும் கொண்டார்கள்.

தேசத்தின் மூலைமுடுக்குகளிலும் பட்டிக்காடுகளிலும் அவ்விதம் அமைதியுடன் கூட்டங்கள் நடைபெற்றன. சந்தடி, சச்சரவு என்பன மருந்தினுக்கும் கிடையா. ஒரு சிறிய மனிதர் (காந்தி மகான்) இப்படி தேசத்தை ஒன்றாகத் திரட்டி விட்டாரே என்று அரசப் பிரதிநிதியும் பிரமித்தார்; சத்தியாக்கிரக இயக்கத்தின் பான்மை கண்டு பூரித்தார். எத்தகைய அடக்குமுறைச் சட்டம் ஏற்படினும் இந்தியாவை நெடுநாள் கட்டியாளுதல் முடியாது என்று கண்டு கொண்டார். ஒரு நாள் இந்தியாவை விட்டு ஆங்கிலேயர் அகலவேண்டும் என்றும் தமக்குள் எண்ணினார்.

இனி, டில்லி மாநகர வாசிகள் தவறுதலாக மார்ச் 20-ந் தேதியன்றே சத்தியாக்கிரக விரதம் பூண்டனர். சுவாமி சிரத்தானந்தர் என்பார் அங்கே ஓர் ஊர்வலத்தை நடத்திச் சென்றார் பொதுக் கூட்டத்தினுக்கு. வழியிலே காவல் புரிந்து நின்ற கூர்க்க வீரர் அக்கூட்டத்தினைத் தாக்கத் தமது துப்பாக்கியைச் சற்றே சாய்த்தனர். உடனே அவர் தமது சட்டைப் பொத்தானைக் கழற்றி, மார்பைக் காட்டினார் சுடு என்று. அவரைத் தொடர்ந்து வந்த கூட்டத்தாரும் அப்படியே நின்று, வருவது வருக என்றிருந்தனர்; சிறிதும் கலவரம் அடையவில்லை.

சுட்டுத்தள்ள விரும்பித் துப்பாக்கியைச் சாய்த்த வீரரோ வெல வெலத்து வெட்கிப் போயினர். சத்தியத்

தின் முன்னே அசத்தியம் தலைசாயும் அன்றோ? அதனை டில்லி மக்கள் கண்கூடாக அறிந்து கொண்டனர். தேசத்தின் சத்திய முனைப்பைக் கண்டதும், ரௌலட் சட்டம் பெயரளவில்தான் அல்லது ஏட்டளவில்தான், செயலளவில் இராது என்று அதிகார வர்க்கம் தனக்குள் முடிவு கட்டிவிட்டது.

அப்போது பஞ்சாப் மாகாணத்தின் கவர்னராக இருந்தவர் சர். மைக்கேல் ஓட்வியர் என்பவர். அவர் அகம்பாவத்தின் மறுபிறப்பு. அதிகாரி வீட்டுக் கோழி முட்டை, குடித்தனக்காரன் வீட்டு அம்மியை உடைக்க வேண்டும் என்பது அவர் கோட்பாடு. அரசியல் திருத்தம் வேண்டும் என்று வாதாடும் படித்த இந்தியரைக் கண்டால், அவருக்குப் பரம வெறுப்பு உண்டு. மக்களை கசக்கிப் பிழிய வேண்டும் என்றே அவர் துடித்து நின்றார்; சத்தியாக் கிரகமாவது மண்ணாவது என்று சீற்றம் மிகுந்தார்.

அவர் வேண்டுமென்றே அங்குள்ள மக்களைக் குத்திக் கிளப்பினார்; அதனால் "பஞ்சாப் படுகொலை" என்பதற்கு விதை தூவினார். ஜெனரல் டயர் என்பான் அவருக்குப் பக்க பலமாக இருந்தான். அங்கே இரத்த ஆறு ஓடியது. அரக்கரின் ஆட்சி தாண்டவம் கொண்டது. அது கண்டு அந்த ஓட்வியர் களித்தார். அவனும் மகிழ்ந்தான். இதன் விவரத்தை அடுத்த அதிகாரத்தில் உரைப்போம்.

38 பஞ்சாப் படுகொலை

பஞ்சாப் மாகாணத்திலும் சத்தியாக்கிரக வாரம் சாந்தமாக ஆரம்பமாயிற்று. எல்லா மக்களும் அவ்விரதம் பூண்டனர். மனமொத்து அதுகண்டு, ஆங்காங்குள்ள

அதிகாரிகள் சகிக்கவில்லை. ஆகவே ஜனங்களை நையாண்டி செய்து நின்றனர். அதனால் மக்களிலே பலருக்கும் மனக் கசப்பு உண்டாயிற்று. காந்தி மகானை வருவித்து, மக் களுக்கு நற்போதம் புகட்ட வேண்டும் என்று தலைவர் கள் கருதினார்கள்.

மாகாணத்தின் சிறந்த தலைவர்களான டாக்டர் சத்திய பாலர், டாக்டர் கிச்சுலு இருவரையும் கவர்னர் நாடு கடத்தினார். அவ்விருவரும் சிறையான உடனே அமிர் தசரஸ் நகர மக்கள் திரண்டு, அவர்களின் விடுதலையை நாடி போலீஸ் அதிகாரியைக் காணச் சென்றனர். சாந்த மாகச் சென்ற அம்மக்கள் மீது போலீசார் துப்பாக்கி கொண்டு சுட்டனர். அதனால் நாலைந்து பேர் மாண்டு போயினர்.

அதுகண்டு கோபம் கொண்ட மக்களிலே சிலர் ஆங்கிருந்த அரசாங்க அலுவலகங்களைத் தாக்கினர்; பாங்கிகளைக் கொள்ளையாடினர்; தபால் ஆபீசுக்குத் தீ வைத்தனர். உடனே ஜனரல் டயர் என்பான் தனது படையுடன் வந்து, ஏப்ரல் 10-ந் தேதி அந்நகரில் தங்கி னான். பஞ்சாப்பின் கொந்தளிப்பைக் கேள்வியுற்றதும், அங்கே அமைதியை நிலைநாட்டக் கருதி, மகாத்மா காந்தி பயணமானார்.

அம்மாகாண கவர்னரோ அவரை வழி மறித்து, நிறுத்தி, பம்பாய்க்கு அனுப்பினான். இது செய்தி பஞ்சா புக்கு எட்ட, மக்களின் மனக்கசப்பு பொங்கியது. ஆங் காங்கே சிறு குழப்பங்கள் தோன்றின. பதின்மூன்றாம் தேதியன்று மாலையில் அமிர்தசரஸ் நகரிலே இருபதா யிரம் மக்கள் கூடினர். கூடிய இடம் ஜாலியன் வாலாபாக் என்னும் தோட்டம். அதைச் சுற்றி நான்கு புறமும் சுவர்

கள். உள்ளே புகுவதற்கு ஒரு சிறிய வழியே உண்டு. தாராளமாக ஒரு வண்டி கூட அவ்வழியே போக முடியாது.

ஜனரல் டயர் தனது துருப்புகளுடன் அத்தோட்டத்தின் வாயிலிலே வந்து நின்றான்; எல்லாரும் கலைந்து விடுங்கள் என்றுசொன்னான்; சொல்லிய மறுகணமே ஜனக்கூட்டத்தின்மீது சுட ஆரம்பித்து விட்டான். ஆயிரத்து அறுநூறு தோட்டாக்கள் சுடப்பட்டன. மேலும் சுட அவர்களிடம் தோட்டாக்கள் இல்லை. அதனால் சுடுவதை நிறுத்தினான் ஜனரல் டயர்.

குஞ்சு குழந்தை உட்பட அங்கே கூடியிருந்த இருபதாயிரம் மக்களில் சுமார் ஐந்நூறு பேர் கொல்லப்பட்டுப் போயினர். இரண்டாயிரம் மூவாயிரம் பேர் காயமடைந்தனர். செத்தோருக்கும், காயமுண்டோருக்கும் யாதொரு வகை துறையும் செய்யாமல், ஜெனரல் டயர் போய்விட்டான் பரம களிப்புடன். மறுதினம் அந்நகரிலே இராணுவ ஆட்சி ஏற்பட்டு விட்டது.

இன்னும் லாகூர், காஸூர், குஜரன்வாலா முதலிய இடங்களிலும் இராணுவ ஆட்சிதான். அந்நகரங்களிலிருந்த பெரிய, பெரிய மனிதர்களை யெல்லாம் சிறை செய்து, தெரு வழியே இழுத்துச் சென்று, உடனே விசாரணை நடத்தி, எட்டு வருடம், பத்து வருடம் என்று தண்டனை விதித்தனர். சிலருக்குத் தீவாந்திர சிட்சையும் கொடுத்தனர்.

பெரியோர் சிறியோர், படித்தவர் படியாதவர் என்று பாராமல், பலரையும் முச்சந்தியில் நிறுத்திச் சவுக்கடி கொடுத்தனர்; அடிக்கையில் இரத்தம் பீறிட்டது. அது கண்டு அதிகாரிகள் சிரித்தனர்; மாதரை வரிசையாக

வீதியிலே நிறுத்தி, மானபங்கம் செய்தனர்; தாய்ப்பால் குடித்து நின்ற குழந்தைகளை ஈட்டியினால் குத்தி எக்களிப்புக் கொண்டனர்: மாணவரை தினம் இருபது மைல் வெய்யிலிலே நடக்க வைத்தனர்.

ஜனத் தலைவர்களில் சிலருக்கு உடம்பு முழுவதும் சுண்ணாம்பு அடித்து வீதியில் விரட்டினர்; சிலரையோ தெருவில் ஊர்ந்து செல்லும் வண்ணம் கட்டாயப்படுத்தினர். யாரேனும் ஆட்சேபித்தால், துப்பாக்கி ரவை வந்து உயிரை வாங்கிவிடும். ஈதென்ன ஆட்சி என்று ஓலமிட்ட மக்களின்மீது விமானங்கள் வெடிகுண்டு வீசின.

எங்கே பார்த்தாலும் துப்பாக்கிப் பிரயோகம்; சோல்ஜர்களின் அட்டகாசம்: சத்தியாக்கிரகமா என்ற கேலிப்பேச்சு ஆங்கில ஆட்சிக்கு முன்னே ஆர்ப்பாட்டமா என்னும் ஆணவ வார்த்தை; பஞ்சாபிலே கிளர்ச்சி என்பது கூடாது என்னும் துடுக்கான சொல். அரசியல் கிளர்ச்சியிலே தொடர்புகொண்ட அனைவரையும் இராணுவத்தார் அவ்விதம் படாதபாடு படுத்தினர்.

அப்படுகொலையை விரித்துரைக்க மனமில்லை. பஞ்சாபிலே என்ன நடக்கிறது என்று வெளியிடங்களுக்குத் தெரியாவண்ணம் தடுத்துவிட்டனர். கொடிய இராட்சஸ ஆட்சியின் விவரங்களைச் சிறிது நாள் சென்றதும் ஊகித்தறிந்து, டில்லி சட்ட சபையிலே பண்டித மாளவியா 99 கேள்விகள் கேட்டார். அக்கேள்விகளைக் கண்ட பின்பே கொடுமையின் தன்மையை ஓரளவு உலகம் அறிந்து, திடுக்கிட்டது.

இனி, யுத்தத்திலே இங்கிலாந்துக்கு விரோதமாக இருந்தது துருக்கி தேசம். அன்று துருக்கியின் அரசரே முகம்மதிய மதத்தின் குருபீடம். இந்நிலையில் துருக்கிக்கு

உதவுவதா, இங்கிலாந்துக்கு உதவிபுரிவதா? என்று இந்திய முகம்மதியர் திகைத்து நின்றனர். அன்றியும் முகம்மதியரின் புண்ணிய தலங்களான மக்கா, மதீனு முதலிய நகரங்களும் துருக்கிக்கு உட்பட்டு இருந்தன. அவற்றினுக்கு ஆபத்து நேருமோ என்றும் அவர்கள் அஞ்சி நின்றார்கள்.

அப்போது, "துருக்கியைத் தீண்டமாட்டோம். மத பீடத்தில் உள்ள துருக்கி சுல்தானுகிய "கலீபா"வுக்கு யாதொரு பாதகமும் நேராது. புண்ணிய தலங்களும் காக்கப்படும்" என்று முகம்மதியருக்கு ஆங்கில மந்திரிகள் வாக்குறுதி கொடுத்தனர். யுத்தம் நின்றதும் அவ்வாக்குறுதிகள் காற்றில் பறந்தன. அது அறிந்த முகம்மதியர் துடிதுடிப்பும், படபடப்பும் கொண்டனர்.

சிலரோ இந்தியாவிலே ஆங்கில ஆட்சியின்கீழ் வசிக்க மனமில்லாமல், தமது வீடு வாசல்களைத் துறந்து, மனைவி மக்களுடன் ஆப்கானிஸ்தானம் போயினர். முகம்மதியரின் தத்தளிப்பைக் கண்டதும் மகாத்மா காந்தி மன மிளகி; "நாட்டைவிட்டுப்போக வேண்டாம். சாந்தமான முறையில் போராட்டம் நடத்துவோம். அரசாங்கத்துக்கு எவ்வித ஒத்துழைப்பும் தாராமல் விலகி நிற்போம்" என்று ஓர் உபாயமும் ஆறுதலும் கூறினர்.

முகம்மதிய சமூகம் அது கேட்டு மனச் சோர்வு விடுத்து மகாத்மா காந்தியின் வழியைப் பின்பற்ற இசைந்தது. இதற்குள் யுத்த காலத்திலே காவலில் கிடந்த முகம்மதலி, ஷவுகத்அலி என்னும் சோதரர்கள் வெளிவந்து காந்திக்குப் பக்கபலம் ஆனர்கள். அம்மூவரும் பின்பு ஆங்காங்குள்ள முகம்மதியரைக் கண்டு பேசி, அச்சத்தியப்போருக்கு ஆயத்தமெல்லாம் செய்து வந்தனர்.

பஞ்சாப் படுகொலை விவரங்கள் வெளியான உடனே இந்தியர் அனைவரும் ஆத்திரம் மிகுந்து, விசாரணை நடத்த வேண்டும் என்றனர். அவ்வாறே விசாரணை நடத்த ஒரு பஞ்சாயத்தை அரசாங்கம் நியமித்தது. அதன் முன்பு ஜனரல் டயர் தோன்றி, "ஆம் சுட்டுத் தள்ளினேன். இந்தியருக்குப் பாடம் புகட்ட இதுவே வழி. என்னிடம் தோட்டாக்கள் இருந்திருந்தால் இன்னும் சுட்டிருப்பேன்" என்று அகம்பாவமாகப் பேசினன்.

ஜனரல் டயரைப்போல் மனித வேட்டையாடிய கர்னல் ஜான்சன் என்பவனும் இன்னும் சிலரும் அவ்விதமே ஆணவத்துடன் ராட்சியம் கொடுத்தனர். அக் கொடுமைகளை எண்ணிப்பார்த்தால் அந்த அதிகாரிகளின் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களுக்குத் தக்க தண்டனை விதிக்க வேண்டும்.

இதனை அறிந்த அரசாங்கமோ அந்த அக்கிரமக்காரர் களுக்கு பாதுகாப்பு அளிக்கும் சட்டமொன்று இயற்றியது. இங்குள்ள ஐரோப்பியரோ அந்த ஜனரல் டயரின் படுகொலையைப் பாராட்டி, அவனுக்கு ஒரு பட்டாக்கத்தியும், பணமுடிப்பும் பரிசளிக்கப் பணஞ்சேர்த்து வந்தனர். குதிரை தூக்கிப் போட்டதுமல்லாமல், குழியும் பறித்த கதை ஆயிற்றே என்று பஞ்சாப் மக்கள் ஒடுங்கிக் கிடக்கலாயினர்.

அது அறிந்து, 1919-ஆம் ஆண்டின் கடைசியில் காங்கிரஸ் மகா சபை அமிர்தசரஸ் நகரிலேயே கூட்ட ஏற்பாடுகள் ஆயின. அங்கே சபை கூடின் மக்களுக்கு ஓரளவு ஆறுதல் பிறக்கும் என்று நமது தலைவர்கள் எண்ணினார்கள். அச்சபை அங்கே கூடுவதற்குள் மாண்டேகு-செம்ஸ்போர்ட் திருத்தங்கள் வெளியாயின.

அவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்றனர் காந்தியும், பிறரும். திலகரோ கிடைத்ததை ஏற்றுக் கொண்டு, மேற்கொண்டு போராடுவதே இராஜ தந்திரம் என்று வாதாடினர். அதிருப்திதரும் திருத்தங்களை ஏற்றுக்கொள்ள வேண்டாம் என்று அச்சபை முடிவு செய்தது; பஞ்சாப் படுகொலைக்குப் பரிகாரம் வேண்டும் என்றும் வலியுறுத்திற்று.

ஆனாலும் அரசாங்கத்தின் போக்கிலும், ஐரோப்பியரின் பான்மையிலும் மாறுதல் காணப்படவில்லை. யுத்தத்தில் கொண்ட வெற்றி இங்கிலாந்தின் மந்திரிகளையும் மயங்கச் செய்துவிட்டது. முகம்மதியரும், ஹிந்துக்களும் மனம் புழுங்கி நிற்பதை அவர்கள் சட்டை செய்யவில்லை என்றே சொல்ல வேண்டும். கலீபாவின் நிலை ஆபத்துக்கு இடமாயிற்று.

ஆதலின், கிலாபத் அநீதிக்கும் பஞ்சாப் படுகொலைக்கும் பரிகாரம் செய்யாமல், மதர்த்துநிற்கும் அதிகார வர்க்கத்தை அகற்றியாக வேண்டும், சுயராஜ்யத்தை அமைக்கவும் வழி தேடவேண்டும்; இதற்கு ஒத்துழையாப் போர் தொடுத்தலே அவசியமும், கடமையும் ஆகும் என்று காந்திமகான் கருதினர். அதுபற்றி நம் தேசத்தை தட்டிப் பார்க்க அவர் விரும்பினர்.

காங்கிரஸ் மகாசபையும் ஒத்துழையாப்போர் புரிந்தாக வேண்டும் என்று ஒப்புக்கொண்டது. அதற்காக அவர் தேசமெங்கும் சுற்றி வந்தார்; போருக்கு மக்கள் துடிப்புடன் இருந்ததை அறிந்தார். திலகரோ கிடைத்த அரசியல் சீர்திருத்தத்தை வீசி எறிவதில் பிடித்தமில்லாமல் இருந்தார். திலகரின் ஆதரவை நாடி அடைய அவர் பெரிதும் முயலாநின்றர். இதற்குள்ளாக அத்திலகர் இம் மண்ணுலகைக் துறந்து போய்விட்டார்.

அங்கிலேயில், தேசத் தலைமை பூண்டு, போரை நடத்த மகாத்மா காந்தியைத் தவிர எவரும் இல்லாது போயினர். நெடுநாளாக அரும்பாடுபட்டு இத் தேசத்தினுக்கு விழிப்பு ஊட்டிய திலகரின் பெயரை முன்னிட்டே போரைநடத்த மகாத்மாகாந்தி முற்பட்டார். அப்போரின் திட்டத்தை வகுத்தும் தொகுத்தும் உரைக்க வேண்டும் அல்லவா? உரைத்தால்தானே தேசம் பின்பற்றும்.

39. ஒத்துழையாமை

எந்த மனிதனும் தனித்து நின்று இயங்கமுடியாது. மனைவி மக்கள், உற்றார் பெற்றார், அண்டை அயலார் இவர்களுடன் தொடர்புகொண்டு நடத்தல் வேண்டும். அத் தொடர்பு இன்றேல் எவனுக்கும் ஊணும் உறக்கமும் இனிது கிட்டா. பெரிய தேசத்தைக் கட்டியாளும் அரசாங்கமும் மக்களின் தொடர்பு இன்றேல், நன்கு நடைபெறமுடியாது.

கலாசாலைகள், நீதிமன்றங்கள், சட்டசபைகள் முதலியன எந்த அரசாங்கத்தினுக்கும் செல்வாக்கும் சிறப்பும் தருவனவாம். அரசாங்கம் அமைதியுடன் நடைபெறவே பலவகையான உத்தியோகங்களும் போலீஸும் சேனையும் இருக்கின்றன. அவற்றில் நாட்டு மக்களே நிரம்பிநின்று ஊழியம் புரிந்து வருவர்.

இறக்கையை ஒன்று ஒன்றாக அகற்றி விட்டால், பறவை பறக்க முடியாது. அங்ஙனம் அரசின் அங்கங்களை ஒன்று ஒன்றாகக் குலைத்துவிடின், அரசியல் நடப்பது எங்ஙனம்? அரசாங்கத்துடன் மக்கள் ஒத்துழையாமல் விலகிநிற்றல் என்பது அது பற்றியேயாம். ஒத்துழையாமையின் அம்சங்களை உற்று நோக்கின் அந்த உண்மை புலப்படும்.

பட்டமும், பதவியும் அளித்து, மக்களில் சிலரை அரசாங்கம் பிணைத்துக்கொள்ளும். ஆதலின்தேச மக்களில் பட்டம் பதவி பெற்ரோர் அவற்றை வீசி எறிய வேண்டும் என்பது ஒத்துழையாமையின் முதல் அம்சமாம். அங்ஙனமே காந்தி மகான் தாம் பெற்றிருந்த கவுரவப் பதக்கத்தை வேண்டாமென்று கூறி, அரசாங்கத்துக்கு அனுப்பிவிட்டார்.

குழந்தைகளும், மாணவரும் படித்துப் பரீட்சையில் தேற எங்கும் பாடசாலைகளும் கலாசாலைகளும் உண்டு. அவை அரசாங்கத்தினரால் நடத்தப்படும்; அல்லது அரசாங்கத்தின் உதவி பெற்று நடைபெறும். அவற்றில் படித்துத் தேறின், அதற்கு அடையாளமாக ஒரு பத்திரம் வழங்கப்படும். பாடசாலைகளிலும், கலாசாலைகளிலும் சேர்ந்து படியாமல் விலகிக்கொள்ள வேண்டும் என்பது அத்திட்டத்தின் இரண்டாவது அம்சம்.

குழந்தைகளும், மாணவரும் படித்தாக வேண்டுமே. ஆதலின் அரசாங்கத்தின் தொடர்பு சிறிதும் இல்லாமல் ஆங்காங்கே தேசீய சர்வகலாசாலைகளும், கலாசாலைகளும் பாடசாலைகளும் ஏற்பட்டன. அவற்றிலே நாட்டினுக்கும், மாணவருக்கும் ஏற்றதான கல்வியே போதிக்க வகை செய்யப் பெற்றது. பரீட்சை நடத்தி பத்திரங்கள் வழங்கவும் வகை செய்தனர்கள் நம் தலைவர்கள்.

இனி மக்களிலே ஒருவருக் கொருவர் சொத்து சுதந்திரம் குறித்து வழக்கிடுதல் உண்டு. நீதிமன்றங்களில் புகுந்து வழக்காடுகையில், வாதி பிரதிவாதி இருவருக்கும் வக்கீல்கள் இருந்து உதவி புரிவர். முடிவில் நீதிமன்றம் தீர்ப்பு அளிக்க அது உபயவாதிகளையும் கட்டுப்படுத்தும். வழக்கறிஞர் அந்நீதி மன்றங்களுக்குப் போகாமல் நின்றுவிடவேண்டும் என்பது மூன்ருவது அம்சமாகும்.

நீதிமன்றங்களுக்குப் போகாவிடின் வழக்குகள் தீர்தல் எங்ஙனம்? ஆங்காங்கே பஞ்சாயத்து சபைகளை ஏற்படுத்தி, அவற்றின் முன் வழக்குகளை உரைத்து, ஒரு முடிவு காணுதல் அவசியம். அந்த முடிவை மக்கள் ஏற்றுக்கொள்ளுதல் கடமையாம். அவ்விதம் மக்களின் நீதி மன்றங்கள் பல இடங்களிலும் உதித்தன.

அரசாங்கத்தின் நீதி மன்றங்களில் வழக்கிடுவதாயின் முத்திரைக் கடிதங்கள் ஏராளமாக வாதிப்பிரதிவாதிகள் வாங்குதல் வேண்டும். அதன் மூலம் அரசாங்கத்துக்கு மிக்க வருமானம் உண்டு. மக்களின் நீதிமன்றங்களில் முத்திரைக் கடுதாசி வாங்கும் அவசியம் இராது. எனவே பின்னாளில் அரசாங்கத்தின் முத்திரைக் கடித வருமானம் மிகவும் குறைந்து போயிற்று.

சட்ட சபைகளில் நமது பிரதிநிதிகள் இருந்தாலும், அவர்களின் தொகை கொஞ்சமே. அதிகாரிகளும், அதிகார தாசர்களுமே அதிகம். ஆதலின் நமது பிரதிநிதிகளின் வாக்கு அரசசபைகளில் ஓங்காது இந்நிலையில் தான், வரிவிதித்தும் சட்டங்கள் இயற்றியும் வந்தது அதிகாரவர்க்கம்.

அத்தகைய சட்டசபைகளுக்கு நம்மவர் அபேட்சகராக நிற்கவேண்டாம். யாரேனும மீறி நின்றால் அவர்களுக்கு மக்கள் ஓட்டுதரக்கூடாது. பெரும்பாலான வாக்காளர் ஓட்டுசெய்யாவிடினும் ஒரு சிலர் ஓட்டளிக்க அது கொண்டு சிலர் சட்டசபையில் புகுந்து விடுவர். அன்னாருடன் மக்கள் தொடர்பு கொள்ளவேண்டாம் இது அத்திட்டத்தின் நான்காவது அம்சமாகும்.

உண்மையில் மக்களிடம் அபிமானம் உள்ளோர் அச் சபையில் சேராவிடின் சபைக்கு மதிப்பு ஏது? அத்தகைய சபையைக் கொண்டு வரி விதிப்பதும் சட்டம்

செய்வதும் சரியாகுமோ. சட்டசபைக்குரிய மதிப்பைப் போக்கிவிட்டால், அரசுக்கே மதிப்பு என்பது இல்லாது போகும். இதனையே சட்டசபை பகிஷ்காரம் என்பர்.

ஆங்கில ஆட்சிக்கு இங்கே மூலபலமாக இருந்தது அவர்களின் வர்த்தகமேயாம். அந்த ஆட்சியின் ஆதரவிலே இங்கிலாந்திலிருந்து ஏராளமான சாமான்கள் இங்கே வந்திறங்கின. அவ்வர்த்தகத்தை வெகுவாக ஆங்கிலேயரே நடத்தி வந்தனர். ஆங்கில சாமான்களை வருவிக்காமலும், கையாளாமலும் இருந்தல் அத்திட்டத்தின் ஐந்தாவது அம்சமாம்.

ஆங்கிலப் பொருள்களில் அமோகமாக இங்கே வந்து இறங்கியது ஜவுளியேயாம். அந்த ஜவுளி வாராது போயின், ஆடைத்தட்டு இங்கே ஏற்படலாம். ஆதலினால் தொன்று தொட்டு நம் தேசத்தின் எங்கும் பரவியிருந்த கைராட்டினத்தை உயிர்ப்பித்து, அதில் நூல்நூற்று வேண்டிய ஆடைகளைக் கைத்தறிகளில் நெசவு செய்து கொள்ளவேண்டும் இத்தகைய ஆடை கதர் எனப்படும்.

கதர் ஆடையை எல்லாரும் தரித்தல் ஆறாவது அம்சமாகும். வருடத்திலே ஆறுமாத காலம் யாதொரு வேலையுமின்றி வீடுகளிலே சோம்பிக்கிடந்து; வயிறு வாடும் ஏழைகளுக்கு அக்கதராடையின் உற்பத்தி ஓரளவு உணவு அளிக்கும். அத்துடன் கோடிக்கணக்காக இங்கிருந்து சீமை ஜவுளிக்காகப் போகும் பணம் இங்கேயே தங்கிவிடும்.

மக்களிலே ஹிந்துக்கள் என்றும் முகம்மதியர் என்றும், உயர்ந்தோர் என்றும், தாழ்ந்தோர் என்றும், பிராமணர் என்றும் பிராமணரல்லாதார் என்றும்

வேற்றுமையிருப்பின், அதனை அறவே கைவிட்டு எல்லாரும் மன ஒருமை கொள்ளுதல் வேண்டும். கொண்டால் தான் சமூகம் சிறக்கும் என்பதுடன் ஒத்துழையாமைத் திட்டத்தையும் நன்கு கையாள முடியும். இது ஏழாவது அம்சமாம்.

இனி, அரசாங்கத்தில் பலவாறான ஊழியம் புரிவோரில் ஒரு சிலரைத் தவிர, வெகு பலரான மற்றையோர் நம்மவர். தோட்டி முதல் இந்திய மந்திரி வரையில் உள்ள அனைவரும் நமது வரிப்பணத்திலிருந்து சம்பளம் வாங்கிக் காலந்தள்ளுகின்றனர். அவர்கள் பொதுஜன சேவகரே. பொது ஜனங்களை வெருட்டி உருட்டுதல் அவர்களின் கடமையன்று. மற்று அன்பு கொண்டு, ஆதரவெல்லாம் அளித்தலே கடமையாம்.

ஆதலின் அரசாங்க ஊழியரான நம்மவர் அனைவரும் ஒத்துழையாத் திட்டத்திலே மனமாரப் பற்றுக் கொள்ளுதல் வேண்டும். அவசியமானால் பண உதவி புரிதலும் கடமையாம். கிளர்ச்சியிலே அவர்கள் கலந்து கொள்ளக் கூடாது என்றாலும், பொதுக்கூட்டங்களுக்கு அவர்கள் வந்திருந்து நடப்பதை அறிந்து, அக்கறை காட்டுதல் வேண்டும். இவ்வாறெல்லாம் மக்கள் நடந்து வருதல் வேண்டும் என்று காங்கிரஸ் கேட்டுக் கொண்டது.

கிலாபத் அநீதி பஞ்சாப் படுகொலை இவற்றை யெல்லாம் கண்டவுடனே சேனையிலும், போலீசிலும் சேவிக்கும் நம்மவருக்கும் மனம் இளகிற்று. நம்மவருடன் அவர்கள் நெருங்கி நேசமுடன் நடக்கத் தலைப்பட்டனர். அதுகண்டு, அவர்களை நமது காங்கிரஸ் மகாசபை பெரிதும் பாராட்டியது. போலீசையும், சேனையையும் கொண்டு தானே அரசாங்கம் நம்மீது சீற வேண்டும்.

ஆரம்பத்திலே ஒத்துழையாமையிலே மேற்கண்ட அம்சங்களே குறிக்கப் பெற்றன. அவசியமானல் ஒத்துழையாமையை இன்னும் பெருக்கி, அந்த அம்சங்களை மேலும் வளர்ப்பதே காந்தியின் நோக்கம். ஒத்துழையாமை கொண்டு சுய ராஜ்யத்தை அமைப்பதும் அவர் கருத்தாம். திகைத்துநின்ற தேச மக்கள் அந்த ஒத்துழையாமையை மனமார ஏற்று அதன்படி நடப்பதாக வாக்குறுதி கூறினர்.

அத்தகைய போர்முறை உலகினுக்கே ஒரு புதியதாம். படை பலமாம் மிருக பலத்தையே நம்பிக் கிடந்த அதிகார வர்க்கம், ஆன்ம பலமான ஒத்துழையாமையின் தத்துவத்தை உணர்ந்து கொள்ளமுடியவில்லை. ஆதலினுல் "இது என்ன ? முட்டாள் தனத்திலும் முட்டாள் தனம்" என்று அரசப் பிரதிநிதி அலட்சியமாகப் பேச நேர்ந்தது. அதிகார வர்க்கமும் ஒன்றும் விளங்காமல் திகைப்புக் கொண்டது.

எதிரிக்கு அறிவியாமல் எக்காரியமும் செய்யார் காந்தி மகான். ஒத்துழையாமை உதிக்கும் என்று அரசப் பிரதிநிதிக்கு முன்னதாகவே அவர் அறிவித்தார். முகம்மதியரும் பிறரும் அப்பிரதிநிதியிடமும் இங்கிலாந்தின் மந்திரிகளிடமும் தூது சென்று தமது குறைகள் தீர மன்றாடினர். தேசத்தின் தீவிரக் கொதிப்பையும் அந்த அதிகாரிகள் மதிக்கவில்லை.

அதன்மேல் ஒத்துழையாமையை வரவர விரித்துப் போரிலே இறங்கவேண்டும் என்று காங்கிரஸ் மகாசபை தீர்மானம் கொண்டது. போரை நடத்த வீரராம் தொண்டர் வேண்டுமே, தொண்டர் படை திரட்டப் பெற்றதும் பதினயிரக் கணக்கான தொண்டர் அப்படையில் வந்து குவிந்தனர். அவர்கள் மேற்கொண்ட விரதம் இது :—

"ஆண்டவனே சாட்சி, தேசியத் தொண்டர் படையில் சேர்ந்து சேவிக்க முற்படுகிறேன். சொல்லிலும் செயலிலும் அஹிம்சையையே மேற்கொள்வேன். சிந்தையிலும் அஹிம்சையே கொள்ள முயலுவேன். ஹிந்துக்கள், முகம்மதியர், பார்ஸியர், சிக்கியர், கிறிஸ்தவர் ஆகிய அனைவரும் ஒரு மனங் கொள்ளவே பாடுபடுவேன்.

"ஹிந்து என்ற முறையில் தீண்டாமை என்பது அகன்று, மதம் புனித மெய்துமாறு முனைவேன். தேச சேவை செய்கையில், அரசாங்கம் என்னைச் சிறைக்குள் தள்ளினாலும், என்னை அடித்துத் துன்புறுத்தினாலும், அவற்றினுக்கு உட்படுவேன். அவசியமானால் எனது உயிரை இழக்கவும் ஒருப்படுவேன். எந்நிலையினும் அஹிம்சையைக் கைவிடேன். படையின் மேலதிகாரிகள் அவ்வப்போது இடும் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பேன்."

அவ்விதம் தொண்டர் படை திரண்டதும், தேசத்தின் மூலை முடுக்குகளி லெல்லாம், ஒத்துழையாமைக் கோஷம் செவிடுபட்டது. பீஹார், காசி, மகாராஷ்டிரம், வங்காளம், கூர்ஜரம் இந்த இடங்களிலே தேசிய பல்கலைக் கழகங்கள் ஏற்பட்டன. அவற்றைச் சார்ந்து, கலாசாலைகளும் பாடசாலைகளும் கிளம்பின. அரசாங்கக் கல்லூரிகளை ஆயிரக் கணக்கான மாணவர் துறந்து, தேசிய கலாசாலைகளில் சேர்ந்து கொண்டனர்.

பெரிய பெரிய வக்கீல்கள் உட்படப் பலரும் கோர்ட்டுகளை விட்டொழித்தனர்; தேசிய நீதி மன்றங்களை நிறுவினர். பலரும் பட்டங்களை விட்டெறிந்தனர். விட்டெறியாதாரை மக்கள் மதிக்கவில்லை. மாண்டேகு-செம்ஸ்போர்டு திருத்தத்தின்படி சட்டசபைகளுக்கு உரிய தேர்தல்கள் நடந்தன. காங்கிரஸ்காரர் எவரும்

தேர்தலுக்கு நிற்கவில்லை. சட்டசபை பகிஷ்காரக் கிளர்ச்சி மிக வலுத்தது.

வலுக்கவே, வங்காளத்தில் 100-க்கு 75 பேர் வாக்கு அளிக்கவில்லை அதிகார தாஸர்களே அச்சபைகளில் புகுந்தனர். அச்சபைகளைத் திறந்துவைக்க இங்கிலாந்திலிருந்து கானாட்டுக் கோமகன் என்பார் இங்கே வந்தார். அவரது வருகையைக் காண எவரும் போகக் கூடாது என்று காங்கிரஸ் ஆணையிட்டது. பொது மக்களில் யாரும் போகவில்லை அதிகாரிகள் மட்டுமே வரவேற்றனர்.

அந்நிலை கண்டு அக்கோமகன் மனம மறுகினார். "போனதை யெல்லாம் மறந்து விடுவோம், நடந்ததையும் மன்னித்து விடுவோம்" என்று மக்களை நோக்கி அவர் வேண்டிக் கொண்டார். புரையோடிவிட்ட மனப் புண்ணினுக்கு அவ்வேண்டுகோள் பயன்படவில்லை. இந்தியரின் மனம் அடியோடு மாறிவிட்டதைக் கண்டு, எண்ணாததெல்லாம் எண்ணிக்கொண்டு அவர் திரும்பிச் சென்றார்.

ஒத்துழையாமையின் வேகத்தையும் விறுவிறுப்பையும் கண்ணால் கண்ட பின்பே, "எனக்கு ஒன்றுமே விளங்கவில்லை, ஏதும் புரியவில்லை, திகைப்பே கொண்டுள்ளேன்" என்று அரசப்பிரதிநிதி வாய்விட்டு வருந்தியுரைக்க நேர்ந்தது. பல மாத காலம் தம்பித்துக் கிடந்த அதிகாரவர்க்கம், பின்பு ஒரே மூச்சாக அடக்கு முறையை மேற்கொள்ளத் தொடங்கிற்று.

எங்கும் அஹிம்ஸையே நிலவக்கண்ட மகாத்மா நிம்மதி கொண்டார். குருத்துவாரத்திலே தம் இனத்தார் வெட்டித் தள்ளப்பெற்றும், வீர சீக்கியர் அஹிம்ஸையே பூண்டு நின்றனர். வெருட்டி யடிக்கப்பெற்ற ஆயிர

கணக்கான தொழிலாளரும் அஹிம்ஸை வழியில் நின்றமைகண்டு, அதிகாரிகளும் முதலாளிகளும் ஆச்சரியமே பூண்டனர்.

40. சட்ட மறுப்பு

ஒத்துழையாமையை மேற்கொண்ட பக்தர்களில் சிலரோ ஏழைகளின் நலத்தை நாடி, மதுபானக் கடைகளை மறியல் செய்தனர். அதனால் அரசாங்கத்தின் கலால் வருமானம் பெரிதும் குறைந்தது. குறையவே, அரசாங்கம் விழிப்புக்கொண்டு, "இதுவரையில் வாளா இருந்தோம். இனி நடவடிக்கை எடுத்துக் கொள்வோம்" என்று அறிவித்தது.

எங்கும் அகிம்சையே ஓங்கி நின்றாலும், இரண்டோர் இடங்களில் அவ்வளவாக அகிம்சை இல்லை என்று அதிகாரிகள் கூறி மதுவிலக்குத் தொண்டரைச் சிறை செய்தனர்; எங்கும் கூட்டம் போட்டே தொண்டர் ஊழியம் புரிந்து வந்ததனால் கூட்டமே கூடாது என்றும் தடுத்தனர். ஆயினும் பலர் அதனை மீறிக் கூட்டம் போட்டனர்.

போட்டவர்களை அதிகாரிகள் சிறை செய்து நன்னடக்கை ஜாமீன் கேட்டார்கள். ஜாமீன் கொடுக்க ஒருவரும் இசையவில்லை. அதனால் அத்தொண்டர்கள் சிறை புக நேர்ந்தது. இந்நிலையை மதித்து, வரப்போகும் பெரும் போருக்கு ஆயத்தமாக, ஒருகோடி அங்கத்தினர் காங்கிரசில் சேரவேண்டும், ஒரு கோடி ரூபாய் திலகர் சுயராஜ்ய நிதிக்குச் சேர்க்கவேண்டும்: குறைந்தது இருபதாயிரம் கைராட்டைகள் ஓட வேண்டும். இவ்வளவும் மூன்று மாதத்தினுக்குள் நிறைவேற வேண்டும் என்று 1921-ஆண்டு மார்ச்சு மாதம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி தீர்மானம் செய்தது.

குறித்த கெடுவினுக்குள் அவை நிறைவேறின. காந்தி மகானும் தேசம் எங்கும் சென்று, மக்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் ஊட்டிவந்தார். அவரைக் கண்கண்ட தெய்வம் என்று மக்கள் கருதலாயினர். இதற்கு இடையில் லார்டு ரீடிங் என்பார் அரசப் பிரதிநிதியாக வந்தார். சட்ட மறுப்புப் போருக்கு வேண்டிய பணமும், பலமும் நிரம்பியமை கண்டு அவருக்குத் திகைப்பு உண்டாயிற்று.

பண்டித மதன மோகன மாளவியாவின் முயற்சியினால் அரசப் பிரதிநிதியும், மகாத்மா காந்தியும் சந்தித்துப் பேசினர். மாகாண சுய ஆட்சி தந்து விட்டால் ஒத்துழையாப் போர் நிற்குமா? என்று அரசப் பிரதிநிதி வினவினார். சுயராஜ்யம் கிட்டினால் அல்லாமல் போர் நில்லாது என்றார் காந்திமகான்.

அப்பால், அகிம்சையை மறந்து சிலர் பேசியும் நடந்தும் வருகின்றனரே என்று அரசப்பிரதிநிதி புகார் கூறினார். என்றும், எங்கும் அகிம்சை நிலவும் வண்ணம் முயலுதல் தமது கடமை என்று காந்திமகான் பதில் சொன்னார். பின்பு, கராச்சி நகரிலே கிலாபத் மகாநாடு நடந்தது. முஸ்லீம் மதத்தினுக்கு விரோதமாக நடக்கும் அரசிலே சேனையிலோ, போலீசிலோ முகம்மதியர் சேரக் கூடாது என்று அம் மகாநாட்டில் ஒரு தீர்மானம் பிறந்தது.

அந்நிலையில், சக்கரவர்த்தியின் குமாரரான வேல்ஸ் இளவரசரை இங்கே வருவித்து, மக்களை மயக்கி ஒத்துழையாமையை ஒடுக்கலாம் என்று அதிகாரவர்க்கம் கருதிற்று. இளவரசர் பம்பாயில் வந்திறங்கும் தினத்திலே தேசமெங்கும் வேலை நிறுத்தமும், கடையடைப்பும் நடத்தல் வேண்டும் என்று தலைவர்கள் ஆணையிட்டார்கள். அவ்வாறே தேசம் செய்து காட்டியது.

பம்பாய் நகரில் மட்டும் அத்தினத்திலே கலவரம் உண்டாயிற்று. பொது மக்களில் எவரும் இளவரசரை வரவேற்கும் வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை. அதில் கலந்து கொண்டு திரும்பிய சிலரை ஏசிப் பேசியதே கலவரத்திற்குக் காரணமாம். உடனே போலீசார் தோன்றி கெடுபிடி செய்தனர். கலகம் முற்றியது. அது அறிந்த காந்தி அவ்விடத்துக்கு விரைந்து சென்று அதனை ஒருவாறு அடக்கிவிட்டார்.

அந்த இளவரசர் எங்கே போனாலும் சரி, அங்கெல்லாம் வேலைநிறுத்தமும் கடை யடைப்புமே நேரும். விஜய வைபவத்தில் கலந்து கொண்டால் காசுகிடைக்கும் என்று அதிகாரிகள் ஆசை வார்த்தை காட்டியும், ஏழை மக்கள் அதற்கு இணங்கவில்லை அதுகண்டு, அதிகாரிகளின் மனமும் பொறுக்கவில்லை. அடக்கு முறையில் மேலும்மேலும் இறங்கவே அவ்வர்க்கம் முனைந்து நின்றது.

இதற்குள்ளாக முகம்மதலி, ஷவுகத் அலி என்னும் சோதரர் இருவரையும் அதிகாரிகள் சிறை செய்து இரண்டு வருட தண்டனைக்கு ஆளாக்கினர். சேனையில் சேரக்கூடாது என்று அவ்விருவரும் பேசியதும் அவ்வாறே தீர்மானம் செய்ததுமே குற்றமாகும் என்று தீர்ப்பு ஏற்பட்டது. அதுகேட்டு முகம்மதிய தலைவர்கள் சும்மா இருந்துவிடவில்லை.

எந்தப் பேச்சும் தீர்மானமும் குற்றம் என்று கோர்ட்டார் கூறினரோ, அதே பேச்சையும் தீர்மானத்தையும் தேசமெங்கும் கூட்டங்கள் போட்டு ஆமோதிக்க வேண்டும் என்று முகம்மதியத் தலைவர்கள் பணித்தனர். உடனே தேசமுழுவதும் நூற்றுக் கணக்கான கூட்டங்கள் நடந்தன. அப்பேச்சும், தீர்மானமும் அவற்றில் ஆதரிக்கப்பெற்றன.

அதனை அடுத்து மகாத்மா காந்தியும், வேறு ஐம்பது தலைவர்களும் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டனர். "சேனையிலோ, போலீசிலோ சேராதே என்று சொல்ல எங்களுக்கு உரிமையுண்டு. எங்களது உணர்ச்சியையும் உரிமையையும் மதியாமல், மதோன்மத்தமாக நடந்து வரும் அரசிலே யாரும் வேலை பார்க்கக்கூடாது என்று சொல்லவும் எங்களுக்கு உரிமை உண்டு. இதனை எந்த அடக்குமுறையும் தடுக்க முடியாது." இதுவே அந்த அறிக்கையின் கருத்தாம்

அடக்கு முறையின் போக்கை மதிக்கையில், பெரு வாரியான அளவிலே சட்ட மறுப்புப் போரை நடத்தியாக வேண்டும் என்று தேசம் துடித்து நின்றது. வரி கொடாமல் இருப்பதும் சட்ட மறுப்புப் போரின் கடைசி அம்சமாம். பெருவாரியான மக்கள் விரும்பினால் சட்ட மறுப்புப் போரை ஆரம்பிக்கலாம் என்று மாகாணங்களுக்கு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அறிவித்தது.

இது இப்படி இருக்க 1921-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பம்பாயில் இளவரசர் வந்திறங்கிய தினத்தன்று எங்கும் வேலை நிறுத்தமும் கடையடைப்பும் நேர்ந்தமை கண்டு, ஐரோப்பிய சமூகத்தார் ஆத்திரம் மிகுந்து, உடனே காங்கிரஸ் சபையின்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானம் செய்தனர். அவ்வாறே தேசிய தொண்டர்படை சட்ட விரோதமானது. கிலாபத் தொண்டர் படையும் அப்படியே என்று அதிகார வர்க்கம் செங்கோல் பிறப்பித்தது.

அது அறிந்ததும் தேசத்தின் பெருந் தலைவர்களான பண்டித மோதிலால் நேரு, தேசபந்துதாஸ், லாலா லஜபதி ராய், மௌலானா அபுல்கலாம் ஆசாத் முதலிய தலைவர்களும் அப்படையில் சேர்ந்தனர். சேரவே அவர்களுடன் ஆயிரக்

கணக்கான தொண்டர்கள் சிறையாயினர். சுமார் நாற்ப தாயிரம் பேருக்குமேல் சிறை புகுந்தனர் என்று சொல்ல வேண்டும். இன்னாரைத்தான் சிறை செய்வது, இன்னாரைச் சிறை செய்யாமல் இருப்பது என்று அதிகாரிகள் எண்ணிப் பார்க்கவில்லை.

சென்னை மாகாணத்திலே குண்டூரில் வரிகொடா இயக்கம் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இன்னும் சில இடங்களிலும் அவ்விதமே ஏற்பாடுகள் உதித்தன. பெருவாரியான அளவில் வரிகொடா இயக்கத்தை நடத்த மகாத்மா காந்தி முயலாநின்றார். பம்பாயிலே பார்டோலி என்னும் இடமே அதற்கென்று குறிக்கப்பட்டது. மகாத்மா அங்கே சென்று மக்களை ஊக்கிவந்தார்.

ஒத்துழையா இயக்கத்தின் அம்சங்களை நன்கு நிறை வேற்றினால், ஓர் ஆண்டினுக்குள் சுயராஜ்யம் வந்துவிடும் என்று மகாத்மா சொல்லியதனால், தேச மக்கள் சுயராஜ்ய ஆவல் மிகுந்து, அந்த அம்சங்களை எல்லாம் நன்கு நிறை வேற்றி வந்தனர். தேச மக்களின் மனநிலையையும், அதி காரிகளின் அடக்கு முறையையும் கண்டு சேனையும், போலீசும் கலகலத்து நின்றன. அதிகார வர்க்கமும் தனது முடிவுநாள் கிட்டி விட்டதெனவே எண்ணி நின்றது.

பார்டோலியிலே வரிகொடா இயக்கம் நடக்கும். அது வெற்றியுடன் முடியும், உடனே சுயராஜ்யம் வந்து விடும் என்று மக்கள் அனைவரும் எதிர்பார்த்திருந்தனர். பிற தேசங்களும் அந்த ஒத்துழையாப் போரை ஊன்றிக் கவனித்து வந்தன அப்போரில் அஹிம்சை எங்கும் நிலவுவதே மிக அவசியம் என்று காந்திமகான் அடிக்கடி வற்புறுத்தி வந்தார். எனவே அகிம்சை எங்கேனும்

குலையாதா என்று அதிகார வர்க்கம் ஆண்டவனை வேண்டி நின்றது.

அவ்வர்க்கத்தின் கையாட்களோ ஆங்காங்கு மக்களைக் குத்திக் கிளப்பிவிடத் தவறவில்லை. அந் நேரத்திலும் மக்கள் அகிம்சையைக் கைவிடாது உறுதியாக இருந்து வந்தனர். ஐக்கிய மாகாணத்திலே சௌரி சாரா என்று ஓர் இடம் உண்டு. அங்கே ஒரு பொதுக்கூட்டம் நடந்தது. போலீசாரின் கையாட்கள் அங்கே இருந்து மக்களைக் குத்திக் கிளப்பினர். உடனே கலவரம் நேர்ந்தது. போலீசார் குறுக்கிட்டுத் துப்பாக்கி கொண்டு சுட்டனர்.

அதனால் மக்களிலே சிலர் செத்துப் போயினர். ஏனையோர் அதுகண்டு அப் போலீசாரைப் பிடித்துத் தீயில் போட்டுவிட்டனர். ஆயிரத்துத் தொளாயிரத்து இருபத்திரண்டாம் ஆண்டு பிப்ரவரி மாதம் பார்தோலியிலே வரிகொடா இயக்கம் தொடங்கவேண்டும். அவ்விதம் தொடங்கப் போவதாக அரசப் பிரதிநிதிக்கு மகாத்மா காந்தி கடிதமும் எழுதிவிட்டார்.

இந்நிலையில், சௌரிசாரா சம்பவம் அவருக்கு எட்டியது. எட்டியதும், வரிகொடா இயக்கத்தை நிறுத்திவிட்டதாக அவர் அறிவித்தார். அது வரையில் அவரைக்கண்டு அரசாங்கம் அஞ்சியே கிடந்தது; அப்பாலோ, மார்ச்சு மாதத்தில் அவரைக் கைதுசெய்து, அராஜகம் பேசினார் என்று ஆறு வருட தண்டனை விதித்தது. மகாத்மா அவ்விதம் அகன்ற உடனே ஆகாங்காங்குள்ள காங்கிரஸ் கமிட்டிகள் நிர்மாண வேலையில் ஊக்கம் செலுத்தி வந்தன.

திடீரென்று சட்ட மறுப்புப் போரை அவர் நிறுத்தியது கேட்டு, மக்களில் பலரும் மனம் உடைந்து போயி

னர். அதிகாரிகளோ ஆனந்தம் மிகக் கொண்டார்கள். வெகு வேகமாக ஓடிக்கொண்டிருந்த குதிரையை திடீரென நிறுத்தினால் அது திகைத்துத் தேம்பும் அல்லவா? தேசமும் அவ்வாறான நிலைக்கு ஆளாயிற்று.

ஒத்துழையா இயக்கம் தோன்றுமுன்னம், 'ஆங்கிலேயர் தெய்வப்பிறவி. ஆண்டவனது அருளால் அன்னாரின் ஆட்சி நமக்குக்கிட்டியது' என்று தேசத்தார் கொண்டிருந்த எண்ணம் அடியோடு அகன்றது. ஆங்கிலேயரைக் கண்டால் கையெடுத்துக் கும்பிட்டு, எட்ட நின்று பேசும் பான்மையும் மக்களைவிட்டு ஒழிந்தது. ஆங்கிலேயரிடம் எத்தகைய படைபலம் இருப்பினும், ஆன்ம பலம் கொண்டு அதனை மடக்கிவிடலாம் என்ற உறுதியும் பிறந்தது. சுருங்கச் சொன்னால், நம்மவருக்குப் புத்துயிர் பிறந்தது என்னலாம்.

41. சிங்கத்தின் குகையில்

ஓர் ஆண்டினுக்குள் சுயராஜ்யம் கிட்டுமென்று கருதியே செல்வச் சீமான்களும், சுகவாச புருஷரும் உயர்குல மாதரும் உட்பட நாற்பதாயிரம் பேர் சிறைச் சாலையைத் தவச்சாலையாகக் கொண்டனர். மகாத்மா காந்தி சிறை புகுந்த பின்பு தேசமும் ஒத்துழையாப் போரில் சற்றே தளர்வு காட்டியது. புதிய திருத்தத்தின் படி காங்கிரஸ்காரர் சட்டசபை விலக்கு மேற்கொண்டனர் அல்லவா?

தன்மானமும், தேசமானமும் இல்லாதார் அச் சட்ட சபைகளில் புகுந்து, அதிகாரவர்க்கத்துக்கு ஆதரவெல்லாம் தந்து, தேசநலத்துக்கு எதிராகவே நடந்துவந்தனர். சிறையிலிருந்து விடுதலையடைந்த பண்டித மோதிலால் நேரு, சித்தரஞ்சனதாஸர் ஆகிய இருபெருந் தலைவர்

களும் உள்ளநிலையை உற்று நோக்கினர்; அதிகார தாசர்களை அச்சபைகளிலிருந்து வெருட்ட எண்ணினர்; தேசத்தின் தளர்வையும் அகற்ற ஆசை மிகுந்தனர்; புதிய வழி முறை ஒன்றும் தோன்றவில்லை.

ஒத்துழையாமையின் இலட்சியத்தை நழுவ விடாமல், சட்டசபைகளில் புகுந்து, அதிகாரவர்க்க ஆட்சிக்கு முட்டுக்கட்டை போடுவதே புதிய உபாயமாம். அது பற்றி அவ்விருவரும் சுயராஜ்யக் கட்சி என்பது கண்டனர். காங்கிரஸ்காரரிலே பலர் அக் கட்சியில் சேர்ந்து கொண்டார்கள். வேறு பலரோ எதிரிடையாகவே இருந்து வந்தனர்

அதிகார வர்க்கத்தின் கற்கோட்டைகள் போல் இருப்பன சட்ட சபைகள், ஜில்லா போர்டுகள், நகராண்மைக் கழகங்கள் முதலியனவாம். அவற்றில் எல்லாம் புகுந்து, நேருக்கு நேராக அதிகார வர்க்கத்தின் அநீதிகளை எடுத்துக்கூறி, அழுத்தமாகக் கண்டித்து வந்தால், அவ் வர்க்கம் நடுங்கும் என்பதே அவ்விருவரின் கொள்கை.

அது குறித்தே சுயராஜ்யக் கட்சியார் அச்சபைகளில் புகுந்தனர். அதிகாரிகளின் செயல் அனைத்தையும் தடுத்தனர்; இயற்றும் சட்டங்களை எல்லாம் எதிர்த்தனர். அன்றளவும் அச்சபைகளிலே அதிகாரிகளைத் தட்டிப் பேசியவர்கள் கிடையாது. சுயராஜ்யக் கட்சியாரின் சுடு சொற்களை அதிகாரவர்க்கம் தாங்க முடியவில்லை; மனத் துயரோடே மிகவும் மறுகியது. ஆயினும் வெளிக்கு மட்டும் தைரிய புருஷர்போல் நடித்து வந்தது.

ஒத்துழையா இயக்கத்தினால் அதிகாரிகளின் மதிப்பு மிகவும் குறைந்தது என்றால், சுயராஜ்யக் கட்சியின் சொல்லம்பு தாக்கத்தாக்க அம்மதிப்பு அடியோடு மங்கத்

தொடங்கியது. தளர்ந்து நின்ற தேசமோ மீண்டும் தலை தூக்கிற்று. டில்லி சட்டசபையிலே அக்கட்சியார் புகுந்ததும் சபைத் தலைவரின் ஸ்தானத்துக்குப் போட்டி ஏற்பட்டது. அதிகாரவர்க்கம் தனக்கு உகந்த ஓர் ஆளை நிறுத்திற்று.

சுயராஜ்யக் கட்சியாரோ விட்டல்பாய் படேல் என்பவரை நிறுத்தினர். தனது முழுபலமும் கொண்டு அவரைத் தோற்கடிக்க அதிகாரவர்க்கம் முனைந்து முயன்றது. ஆயினும் இரண்டு அதிகப்படி வாக்குகளால் விட்டல்பாய் வெற்றி கொண்டார். கொள்ளவே, அவ்வர்க்கம் கலங்கிப் போயிற்று. சிங்கத்தின் குகைக்குள் புகுந்து அதன் பிடரிமயிரைப் பிடித்து உலுக்குவதே போல் சுயராஜ்யக் கட்சியார் போர்புரிந்து வருதலைக் கண்டு அப்போதிருந்த இந்தியா மந்திரியும் அயர்ந்து போனார்.

விட்டல்பாய் அப்பதவியில் அமருமுன்னம், ஒரு சமயம் பொக்கிஷ மந்திரி பேசுகையில், "அரசாங்கத்தின் நல்லெண்ணத்தை ஒருவரும் சந்தேகிக்க வில்லை," என்று பெருமிதமாகச் சொன்னார். உடனே விட்டல்பாய் எழுந்து, "காங்கிரஸ் மகாசபை சந்தேகித்தே வருகிறதே," என்று பதில் கொடுத்தார். பொக்கிஷ மந்திரியோ "இச்சபையின் அங்கத்தினரில் எவரும் ஐயப்பாடு கொள்ளவில்லை," என்று கூறியதாக உரைத்தார்.

விட்டல்பாய், "அப்படியா! இதோ நான் சந்தேகம் தெரிவிக்கிறேன். அரசாங்கம் எங்களை நம்பவில்லை. நாங்களும் அரசாங்கத்தை நம்பவில்லை," என்று சூடு கொடுத்ததும் சபையோர் சிரித்தனர். அவ்விதமெல்லாம் விட்டல்பாயும், வேறு பலரும் வெடுக்கென்று பதில்

கொடுக்கவே தொண்டு செய்யும் அடிமை இந்தியருக்கு மனவலி மிஞ்சிவிட்டதே என்று அவ்வர்க்கம் மாழ்கியது.

இந்தியா முழுவதுக்கும் ஏற்ற சட்டதிட்டம் செய்தல் டில்லி சட்டசபையின் கடமையாம். அச்சபையில் அதிகார வர்க்கம் சொன்னதே தீர்ப்பாக இருந்தது. ஜனப்பிரதிநிதிகளுக்கு அவ்வளவு செல்வாக்குக் கிடையாது. விட்டல்பாய் தலைவராக வந்த உடனே அதிகார ஆணவம் அடங்கத் தலைப்பட்டது. பிரதிநிதிகளுக்கோ உரிமைகளும் சலுகைகளும் பெருகின.

1926-ஆம் ஆண்டு மார்ச்சுமாதம் தேசத்தின் வரவு செலவுத் திட்டம் அச்சபையில் ஆலோசனைக்கு வந்தது. ஜனப்பிரதிநிதிகளின் கருத்தை மதியாமல் அரசாங்கம் அலட்சியமாக இருந்ததுகண்டு, அக்கட்சியின் தலைவரான பண்டித மோதிலால் நேரு தமது சகாக்களுடன் அச்சபையிலிருந்து வெளியேறி விட்டார். அது சமயம் பார்த்து, அரசாங்கமும் தான் கருதிய வண்ணம் கருமம் புரிய எண்ணியது.

சபையின் தலைவரான பின்பு, எக்கட்சியையும் சார்ந்து நில்லாமல் நேர்மையாக நடத்தலே விட்டல்பாயின் கடமை. அந்நிலையில் அரசாங்கத்தின் உட்கருத்தை இவர் அறிந்ததும், "சபையிலே பெரும்பான்மைக் கட்சியான சுயராஜ்யக் கட்சி வெளியேறி விட்டதால், சபையின் தன்மை குறைந்து விட்டது. ஆகவே, விவாதத்துக்கு இடமான விஷயங்களை ஆலோசனைக்குக் கொண்டுவரக் கூடாது," என்று அவர் கூறி அச்சபையையே ஒத்திவைத்து விட்டார்.

அதனால், தானநினைந்த வண்ணம அரசாங்கம கருமம் புரியமுடியவில்லை. அத்துடன் ஏமாற்றமும், அச்ச

மும் அதனைப்பிடித்துக் கொண்டன. எனினும், " சுயராஜ் கட்சி வெளியேறி விட்டால் என்ன ? வேறு கட்சிகள் இருக்க, அச்சபையின் தன்மை குறைந்து விட்டது என்று கூறுதல் அழகு அன்று. பிறகட்சிகளுக்கு அது அவமானமும் ஆகும்," என்று அதிகாரிகள் கூறிப் பிறரைத் தூண்டிவிடப் பார்த்தனர். அது பலிக்கவில்லை.

டில்லிசட்டசபையில் மட்டுமல்லாமல் பிறசபைகளி லும் சுயராஜ்யக் கட்சியார் முட்டுக்கட்டைப் போட்டு அதிகாரவர்க்கத்தை அலற வைத்தனர். அவ்வர்க்கம் இயற்றிய சட்ட திட்டங்களைக் கொண்டே அவ்வர்க்கத்தை நமது சுயராஜ்யக் கட்சி சாய்த்து வருகையில், அதிகாரிகள் யாது செய்வர் ? அக்கட்சியினரைப் பிடித்துச் சிறையில் போட முடியுமா ? அதற்கு இடம் இல்லை.

முள்ளை முள் கொண்டே எடுப்பது வழக்கம். அவ்வாறே அதிகாரிகளின் ஆணவத்திற்கு மாறாக இரு மடங்கு ஆணவங் காட்டிப் பேசினர் சுயராஜ்யக் கட்சி யினர் ; இடித்து இடித்துக் கூறி ஏளனமும் செய்தனர். முகத்துக்கு எதிராக மிடுக்குடன் அக்கட்சியார் பேசுதல் கண்டு அதிகார வர்க்கம் பொறுக்கவில்லை. அக்கட்சி எப்போது தொலையும் என்றே அவ்வர்க்கம் ஆண்டவனை வேண்டி நின்றது.

இங்கிலையில், மீண்டும் தேர்தல்கள் வந்தன. சுய ராஜ்யக் கட்சியார் அத்தேர்தலிலும் வெற்றி பெற்று அச் சபைக்குள் புகுந்தனர். சுயராஜ்யத்தை உடனே அமைக்கவேண்டும் என்று வாதாடினர் ; அதிகாரிகள் கொணர்ந்த தீர்மானங்களையெல்லாம் புரட்டி எறிந் தனர் ; சுருங்கச் சொன்னால், அவ்வர்க்கத்தை ஒரு காரிய மும் செய்யா வண்ணம் தடுத்து நின்று சண்டித்தனம் செய்து வந்தனர் ; வரவு செலவு திட்டத்தை நிராகரித்

தனர். அவ்வல்லடி வழக்குக் கண்டு அரசாங்கம் மிகவும் திணறியது.

டில்லி சட்ட சபைக்கு மீண்டும் விட்டல்பாய் தலைவரானார்; சுய ராஜ்யக் கட்சியின் முனைப்பை மடக்க அரசாங்கம் முயன்ற போதெல்லாம் அவர் தமது நேர்மையும், சட்ட நுணுக்கமும் கொண்டு அதனைத் தடுத்து வந்தார். உதாரணமாக, வடக்கே சீனா தேசத்தில் கொந்தளிப்பு உண்டானதை மதித்து, அரசாங்கம் நமது துருப்புகளை அங்கே அனுப்பியது. அது கூடாது என்று விவாதிக்க விரும்பிய சுயராஜ்யக் கட்சியின் தலைவர் சென்னை சீனிவாச ஐயங்கார் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார்.

அது அயல் நாட்டுக் கொள்கையைக் குறித்ததாதலின் அதனை விவாதிக்க இச்சபைக்கு உரிமை கிடையாது என்று அரசாங்கத்தின் மூத்த அதிகாரி மொழிந்தார். அதற்கு, "நமது துருப்புகளை அனுப்புவதைக் குறித்தே வாதம் நடக்கும். அயல் நாட்டுக் கொள்கையைக் குறித்த வாதம் எழாது. ஆகவே தீர்மானத்தை விவாதிக்கலாம்," என்று விட்டல்பாய் தீர்ப்பளித்தார்.

அத்தீர்ப்பினைக்கண்டு அதிகாரிகள் திடுக்கிட்டுப் போயினர். வாதம் நடந்தால் பற்பல உண்மைகள் அம்பலமாகும். ஆதலின் அவர்கள் அரசப் பிரதிநிதியை அடைந்து, விவாதத்தைத் தடுக்குமாறு வேண்டினர். தலை போகும் சமயத்திலேயே விசேஷ அதிகாரத்தைக் கையாள அரசப் பிரதிநிதிக்கு அதிகாரம் உண்டு. அதிகாரிகளின் அபயக் குரலை மதித்து, தமது விசேஷ அதிகாரம் கொண்டு அவ்வாதத்தைத் தடுத்து விட்டார் அரசப் பிரதிநிதி.

1928-ஆம் ஆண்டிலே பொது உடமைக் கட்சியினரை அடக்குவதற்காக ஒரு விசேஷ சட்டம் இயற்ற அரசாங்கம் எண்ணியது. ஆனால், தேசத்தில் தோன்றியுள்ள அரசியல் கிளர்ச்சியையும் அடித்துப் போடவே அச்சட்டம் தோன்றுவதாக சுயராஜ்யக் கட்சியார் எடுத்துக் காட்டினர் உடனே அச்சட்ட ஆலோசனை நின்றுவிட்டது. சிறிது காலம் கழித்து அதே சட்டம் பல திருத்தங்களுடன் அச்சபையின் ஆலோசனைக்கு வந்தது. சட்ட மேதையான பண்டித மோதிலால் நேரு பல காரணங்களை எடுத்துக் காட்டி அச்சட்டத்தை விவாதிக்கக் கூடாது என்றார்.

அப்போது மீரத்நகரில் பொது உடமைக் கட்சியினர் மீது வழக்கு நடந்து வந்தது. அது முடியும் வரையில் விசேஷச் சட்டம் ஆலோசனைக்கு வரக்கூடாது என்று விட்டல்பாய் தீர்ப்பளித்தார். அதனால் அதிகாரிகள் கருத்தும், முயற்சியும் தலை கவிழ்ந்தன. அவர்களுக்குச் சீற்றமே பிறந்தது. அவர்கள் அரசப் பிரதிநிதியிடம் சென்று முறையிட்டுக் கொண்டனர். தர்ம சங்கடமான நிலையில் அவர் யாது செய்வார்?

ஒரு சமயம் டில்லி சட்டசபையிலே இராணுவ விஷயம் விவாதத்துக்கு வந்தது. சேனாதிபதி எழுந்து அரசாங்கத்தின் கட்சியை விளக்கி உரைத்தார். இதற்குள் இடை வேளை உண்டிக்காக அச்சபை கலைந்தது. மீண்டும் சபை கூடியதும் சுயராஜ்யக் கட்சியார் பேசத் தொடங்கினர். சேனாதிபதியின் வாதங்களுக்கெல்லாம் பதில் வாதம் உரைத்தனர். அப்போது சேனாதிபதி அச்சபையில் இல்லை.

நாங்கள் பதில் வாதம் கூறுகையில் சேனாதிபதி இங்கிருத்தல் வேண்டும். இல்லாதிருத்தலோ சபையை

அவமதிப்பதாகும் என்று ஓர் அங்கத்தினர் சுட்டிச் சொன்னார். ஆம் என்றார் சபைத் தலைவர். 'சேனாதிபதியை இலேசாகப் பேசலாமோ?' என்று சிலர் முணு முணுத்தனர். அவர் சபைக்கு வராமல் இருத்தல் தவறேயாகும் என்று தலைவர் கூறவே, மறுதினம் சேனாதிபதி அச்சபையில் தோன்றி வருத்தம் தெரிவித்து மன்னிப்பும் கோரினார்.

சிறையிலிருந்து விடுதலை ஆனதும் மகாத்மா காந்தி அச்சுயராஜ்யக் கட்சியின் சேவைகண்டு, அதனைப் பாராட்டி ஆக்கமெல்லாம் அளித்து வந்தார். மான்டேகு-செம்ஸ்போர்ட் திருத்தத்தை அகற்றி, சுயராஜ்யத்தை அமைக்க வேண்டும் என்று அக்கட்சியார் அடிக்கடி வற்புறுத்தி வந்ததை அரசாங்கம் அசட்டை செய்ய முடியவில்லை. அதன் பலனாக சைமன் கமிஷன் என்பது ஏற்பட்டது.

அக்கமிஷனில் உள்ள அங்கத்தினர் அனைவரும் ஐரோப்பியரே. அவர்கள் தேசமெங்கும் சுற்றி அனைவரையும் கலந்து பேசி அரசியலைத் திருத்த ஆலோசனை கூறுவர் என்று அதிகார வர்க்கம் சொல்லியது. நமது அரசியலை அன்னியரா வகுப்பது? இது நமக்குப் பெரிய 'அவமதிப்பே' என்றதும் சுயராஜ்யக் கட்சியாரும் தேசத்தாரும் ஒரு முகமாக உரைத்தும் அரசாங்கம் செவி சாய்க்கவில்லை.

ஆதலின் தேசத்தைத் திரட்டி வேறு வகையில் போர் தொடுக்க வேண்டும் என்று அக்கட்சியார் கூறி சட்ட சபைகளை விட்டு வெளியே வந்தனர். இதற்குள் வெடிகுண்டு வீச்சொன்று நடந்தது. "டில்லி சட்ட சபையில் வெறும் பேச்சு நடக்கிறது. அதிகாரிகள் ஙங்குவதாக இல்லை. ஆதலின் அவர்களுக்கு விழிப்பு

ஊட்டவேண்டும்” என்று சர்தார் பகத்சிங் என்னும் இளைஞனும் வேறு சிலரும் சேர்ந்து அச் சபையிலே வெடி குண்டொன்று வீசினர்.

யாரையும் கொல்ல வேண்டும் என்பது அந்த இளைஞரின் கருத்து அன்று; ஆதலினால் மிகவும் சாதாரணமான குண்டையே வீசினர்; அதனால் இரண்டொருவருக்குச் சிறிது சாயம் உண்டாயிற்று; வேறில்லை. அங்ஙனம் இளைஞர் ஒரு பக்கம் துடிப்புடன் நிற்கையில் சைமன் கமிஷனை யாரும் சட்டைசெய்யக்கூடாது என்று காங்கிரஸ் மகாசபை தீர்மானித்தது. அக்கமிஷன் எங்கே சென்றாலும் “சைமனே திரும்பிப்போ” என்னும் கோஷங்கள் எழும்பின.

அதிகாரிகள் ஆத்திரம் மிகுந்து தடியடியில் இறங்கினார்கள். அப்போதும தேசம் சளைக்கவில்லை. காணட்டுக் கோமகன், வேல்ஸ் இளவரசர் இவர்களின் விஜயத்தைச் சிறிதும் மதியாமல் விலக்கியது போலவே, சைமன் கமிஷனையும் மக்கள் விலக்கினர்; வெறுத்தனர். “திரும்பிப்போ,” “இங்கே வரவேண்டாம்” என்று கூறி கருப்புக்கொடி பிடித்த கூட்டத்தின்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தபோது, லாலா லஜபதிராயும் தமது மார்பிலே அடியுண்டார். அதன் காரணமாகவே அவர் இறந்துபோக நேர்ந்தது.

சுயராஜ்யக் கட்சியாரின் காலத்திலே ஸ்தல சுய ஆட்சி சபைகளான ஜில்லா போர்டுகள், நகராண்மைக் கழகங்கள் இவை உண்மையில் ஸ்தல சுய ஆட்சி சபைகளாகவே விளங்கின. அச்சபைகளில் அதிகாரிகளின் செல்வாக்கு அடியோடு மறைய, ஜனப்பிரதிநிதிகளுக்கே செல்வாக்கு மிகுந்தது. அவற்றால் என்றுமில்லாத நன்மைகள் மக்களுக்குக் கிட்டின. சுருங்கச் சொன்னால்

அதிகாரவர்க்கத்தின் கற்கோட்டைகள் தகர்ந்தன என்றே சொல்லவேண்டும்.

இனி, அப்போது இந்தியா மந்திரியாக இருந்த லார்டு பிர்கன் ஹெட் என்பார் சுயராஜ்யக் கட்சியின் சூரத்தனம் கண்டு தமக்குள் மகிழ்ந்தாராளுலும், அவர்களைப் பரிகசிக்க எண்ணி, “ அழிவு வேலையே செய்து வருகிறீர்கள். ஆக்க வேலை செய்ய உங்களால் ஆகுமா ? பார்க்கலாம். இந்தியாவிலுள்ள ராஜீயக் கட்சியினர் அனைவரும் சேர்ந்து ஒரு மனதாக அரசியல் திட்டமொன்று வகுத்து அனுப்புங்கள். அதனை ஆராய்ந்து பார்த்து, ஆவன செய்வேன்,” என்று அறிவித்தார்.

நெல்லிக்காய் மூட்டை போன்ற இந்தியர் ஒரு மனம் கொள்ளார் என்பதே அம்மந்திரியின் உட்கருத்தாம். ஆதிமுதல் இந்தியரிலே ஹிந்துக்கள் முகம்மதியர், படித்தோர் பாமரர், முதலாளிகள் தொழிலாளிகள், உயர் குலத்தார் கீழ் குலத்தார், சமஸ்தான மன்னர் சாதாரண மக்கள் என்று பலவாருன பிரிவினைகளுக்கு விதை தூவினவர் ஆங்கில அதிகார வர்க்கத்தாரேயாம்.

அன்றியும், மிதவாதிகள் தீவிர வாதிகள், வைதிக காங்கிரஸ்காரர் சுயராஜ்யக் கட்சிக்காரர், காந்தி தாசர் திலகதாசர், பயங்கரவாதிகள் பரம சாதுக்கள் என்று பலவாருன பகுப்பார் இருப்பதனுல் அவர்கள் அரசியலில் ஒருமனம் கொள்ளார் என்பதே அதிகாரிகளின் கருத்து. அறைகூவி அழைப்பது போல் இந்தியா மந்திரி சொன்னதை அக்கட்சியார் ஏற்றுக் கொண்டனர்.

இந்திய ஜனசமூகம் திரண்டு நிற்பதை அவருக்கும் உலகத்தினுக்கும் அறிவிப்பதற்காகவே, அக்கட்சியார் 1929-ஆம் ஆண்டிலே சர்வ கட்சியாரையும் ஒன்றுகூட்டி

ஒரு மனதான அரசியல் திட்டம் ஒன்று வகுத்து, "இதனை ஏற்றுக்கொள்வீரா?" என்று அந்த இந்திய மந்திரிக்கு அறை கூவினர். மக்களுக்குப் பொறுப்பான ஆட்சி எனப்படும் குடியேற்ற நாட்டு அந்தஸ்து வழங்க வேண்டும் என்று அத்திட்டம் கூறியது.

அத்திட்டத்தினையும் ஆங்கில அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாமல் புறக்கணித்து விட்டது. எனவே கடும் போர் புரிந்து காரியத்தைக் கண்டெடுக்க வேண்டு மென்று சுயராஜ்யக் கட்சியாரும் பிறரும் முடிவுகட்டினர். அதற்கான ஆயத்தங்களும் செய்யத் தவறவில்லை.

42. வரிகொடாமை

பம்பாய் மாகாணத்தைச் சேர்ந்த சூரத் ஜில்லாவி லுள்ள பார்தோலி தாலுக்காவில் 1922-ஆம் ஆண்டி லேயே உழவரின் வரிகொடா இயக்கம் நடந்திருக்க வேண்டும். அது தவறிவிட்டது. வரிகொடா இயக்கத் தின் வேகத்தையும், தங்களது அதிகார பலத்தையும் அளவிட்டறிய அதிகார வர்க்கத்தார் கருதினர் போலும். 1927-ஆம் ஆண்டிலே கூர்ஜரத்தில் பெருவெள்ளம் புரண் டது. அதிலிருந்து மக்கள் தலைதூக்கு முன்னம் உழவ ரின் நிலவரிச் சுமையை 1928-ஆம் ஆண்டு அரசாங்கம் உயர்த்தியது.

அன்றியும் பத்துநாளைக்குள் தீர்வை முழுவதையும் கட்டாவிடின் நூற்றுக்கு இருபத்தைந்து வீதம் அபரா தம் விதிக்கப்படும் என்றும் அதிகாரிகள் அச்சுறுத்தினார் கள். சர்தார் படேல் அது அறிந்து, "நிலவரி உயர்வு அதிகம். இதனை அரசாங்கம் ஆராய வேண்டும். அன் றேல் வரிகொடா இயக்கம் துவங்கப்படும்," என்று

அதிகாரிகளுக்கு அறிவித்தார். அதிகாரிகள் அவ் வார்த்தையை மதியாமல், மூர்க்கர்களாக நடக்கத் தலைப் பட்டனர்.

அதன்மேல் உழவர் அனைவரையும் அவர் கூட்டி வைத்து, வரிகொடா இயக்கத்தினால் நேரக்கூடிய கஷ்ட நஷ்டங்கள் அனைத்தையும் எடுத்துரைத்தார். வரி உயர்வு அநீதம் என்பதுடன் கொடுக்கவும் வகையில்லை என்று உழவர் கூறி, வருவது வருக என்று உறுதி பூண்டு, ஆண்டவன் அறிய அகிம்சை முறையில் வரிகொடாப் போரில் குதிக்க ஒப்புக் கொண்டனர் போர் முரசு கொட்டியாகி விட்டது.

இரும்பு பிடித்தவன் கையும், துரும்பு பிடித்தவன் கையும் சும்மா இரா. அதிகார ஆணை தாங்கியவன் கையும் அப்படித்தான். கிராம தலையாரி ஒருவனோ ஓர் ஏழை உழவனை அடித்து, வரியைக் கட்டு என்று வதைத்தான். மற்றொரு கிராமத்திலே இரு உழவரை அதிகாரிகள் பிடித்து ஓர் இடத்திலே அடைத்து வைத் தார்கள். சில்லறை அதிகார தேவதைகள் அங்ஙன மெல்லாம் மக்களை வாட்டி வந்தனர்.

உதவி கலெக்டர் என்னும் பெரிய அதிகாரியோ முக்கியமான உழவரை வரவழைத்து நிலவரியைக் கொஞ்ச மேனும் கொடுத்துவிடுங்கள் என்று கோரினான். உழவர் அதற்கு இணங்கவில்லை. அதன்மேல், “நான் கேட்டுக் கொள்கிறேன். எனக்காகவாவது ஒரு ரூபாயேனும் கொடுங்கள்,” என்று பணிவுடன் புகன்றான். தெய்வ சாட்சியாகத் தாங்கள் கொண்ட சபதத்திலிருந்து தவற அவர்கள் விரும்பவில்லை.

பின்பு, “உங்களைப் பிடித்துச் சிறையில் போடுவேன்,” என்று அவன் பயமூட்டினான். அப்போதும் அவர்கள்

இசையவில்லை. அப்பால், கயவரையும் காலிகளையும் ஏவி, மாதரை மானபங்கம் செய்ய முயற்சிகள் நடந்தன. அதற்கும் உழவர் மசியவில்லை. பெரிய கலெக்டர் நேரில் வந்து ஓர் உழவனை வருவித்து, நயமும் பயமும் காட்டினார். அதன் விவரம் வருமாறு :—

கலெக்டர் :—நீ ஏன் இன்னும் வரி கொடுக்கவில்லை ?

உழவன் :—வரி உயர்வைக் குறையுங்கள். அப்பால் தீர்வை கொடுப்பேன்.

கலெக்டர் :—வரி உயர்வு கொஞ்சந்தானே.

உழவன் :—அக்கொஞ்சமும் என்னால் தாங்க முடியாது. வெறும் கூழே குடிக்கிறேன். அக் கூழையும் நீங்கள் பறிப்பது அழகோ ?

கலெக்டர் :—தீர்வை செலுத்தா விட்டால் உன் நிலம் போய்விடும். ஜாக்கிரதை !

உழவன் :—எங்கள் பூமியை வேறு யார் அனுபவிக்க முடியும் ?

கலெக்டர் அது கேட்டுத் திகைத்துப் போனார். அப்பால் நிலங்களைப் பறிமுதல் செய்ய அதிகாரிகள் முயன்றார்கள். பத்து ரூபாய்க்கும் பதினைந்து ரூபாய்க்குமாக ஆயிரத்துக்கு மேலும் விலை போகும் நிலங்கள் பறிமுதல் ஆயின. ஓர் உழவன் செலுத்தவேண்டிய நூற்றுஅறுபது ரூபாய்க்கு இரண்டாயிரம் ரூபாய் விலையுள்ள சாமான்களை எடுத்துக் கொண்டு போயினர். அப்போது கலெக்டரை நோக்கி ஓர் உழவன் கூறியது இது :—

" ஐயா, தாலுக்கா முழுவதையும் நீங்கள் பறிமுதல் செய்தாலும், ஒருவரும் பணியப் போவதில்லை. நீர் அரசாங்கத்தின் உண்மை ஊழியரா ? அப்படியானால் உமது கடமை என்ன ? உள்ள நிலையையும், எங்கள் கஷ்டத்

தையும் அரசாங்கத்துக்கு எடுத்துக்கூறி, எங்களுக்கு ஆறுதல் தேடித் தரவேண்டும். ஜனங்களைத் துன்புறுத்த நேரும் அநீத வேலையை விரைவில் விட்டொழியும். எங்கள் நிலங்களைப் பறிமுதல் செய்வதைவிட, உமது உத்தியோகத்தை விட்டொழித்தலே மேலாம்.”

நிலங்கள் பறிமுதல் ஆதல் கண்டு சிலர் ஆத்திரங் கொண்டார்கள். அதுகண்ட காந்திமகான், “யாரும் பரபரப்புக்கொள்ள வேண்டாம். அரசாங்கமும் சரி, பறிமுதல் நிலத்தை வாங்கவரும் துரோகியும் சரி, நிலத்தை விழுங்கிவிடமுடியாது. உண்டவரை விஷம் கொல்லுவது போல், பறிமுதல் நிலத்தை வாங்கும் துரோகியும் வீழ்ந்து போவான். நிலமா ஒரு பெரிது. சொன்ன சொல்லும், சுயமதிப்பும், சத்தியமுமே பெரியன,” என்று போதம் புகட்டினர்.

இனி, பல நிலங்கள் பறிமுதல் ஆகியும் அவற்றை வாங்க எவரும் முன் வரவில்லை. இரண்டொருவர் அந் நிலங்களை வாங்கினும் அவற்றில் வேளாண்மை செய்ய இயலவில்லை. பம்பாய் நகரிலிருந்து பட்டாணியரும், சோதாக்களும் அத்தாலுக்காவுக்கு வந்து, அட்டகாசம் செய்தும் ஜனங்கள் அஞ்சிவிடவில்லை. ஒருமுறை பெரிய கலெக்டர் பார்தோலிக்குப் போனர். உடனே கடைகள் எல்லாம் மூடப்பட்டன.

ஆதலினல் அவருக்கு அங்கே ஒரு சாமானும் கிடைக்கவில்லை. வேருெரு ஊருக்கு அவர் போக நினைத்தார். வண்டியெதுவும் கிடைக்கவில்லை; வாடகை மோட்டார் வண்டிக்காரரைக் கூப்பிட்டு, வண்டி தராவிட்டால் லைசென்சு போய்விடும் என்று பயமுறுத்தினர். அதற்கும் வண்டிக்காரன் அஞ்சவில்லை. இரவிலே வெகுநேரம் சென்று மற்ருெர் ஊருக்கு அவர் போனர்.

அது அறிந்ததும், குழந்தைகள் தண்டோரா போட்டன. உடனே வீடுகள் யாவும் மூடப்பட்டுப்போயின. கிராம மணியக்காரனை அவர் வரவழைத்து ஏன் வரி செலுத்தவில்லை என்று வினவினார். தன்னால் செலுத்த முடியாது என்று அவன் பதில் கொடுத்தான். இவ்விதம் எந்த ஊரிலும் கலெக்டரை மதிப்பாரில்லை. விதியின்றி வெகுளிகொண்டு, வந்தவழியே அவர் திரும்பிப் போனார்.

வரிகொடா இயக்கம் வலுத்துவருவதையும், அடக்கு முறை ஓங்கி நிற்பதையும் கண்டு, பாரத பூமி அனைத்தும் பார்தோலிக்குப் பக்கபலமாக நின்றது. தேசத்தின் நாலு பாகங்களிலிருந்தும் சத்தியாக்கிரக நிதிக்குப் பணம் வந்து குவிந்தது. இன்னும் பல இடங்களிலும் வரி கொடா இயக்கத்தை மேற்கொள்ள மக்கள் துடித்து நின்றனர்.

வெகு ஜன வாக்கு ஒரு முகமாக ஓங்கி நின்றது கண்டு, பம்பாய் அரசாங்கம் விதியின்றி முடிவில் இணங்கி வரநேர்ந்தது. சத்தியாக்கிரக இயக்கம் நிற்க வேண்டுமானால், சிறையில்போட்ட அனைவரையும் நிபந்தனையின்றி விடுவிக்கவேண்டும். பறிமுதலான நிலங்களைத் திரும்பக் கொடுத்தாக வேண்டும் என்று சர்தார் படேல் சொன்னார். அரசாங்கம் சரி என்றது. உடனே சத்தியாக்கிரகம் நிற்கலாயிற்று.

அதற்கு முன்னதாக சர்தார் படேலின் பெயர் அவ்வளவாக வெளியிடங்களில் பிரபலம் ஆகவில்லை. அகிம்சையை அடிப்படையாகக் கொண்டு வரிகொடா இயக்கத்தை நடத்தி, அரசாங்கத்தின் மிருக பலத்தை ஒரே யடியில் சர்தார் படேல் அடித்துப்போட்டார்; ஆன்ம பலத்தின் வல்லமையையும் புலப்படுத்தினார்.

அர்ச்சுனன் தனது திறத்தால் துரோணரின் மகிமையைப் புலப்படுத்தினன். சர்தார் படேலோ தமது சேவையினுல் காந்தியின் மகிமையை உலகறியச் செய்தார்; அகிம்சையின் அபாரசக்தியையும் கை நெல்லிக்கனிபோல் காட்டினர். ஜனங்கள் அது கண்டு மகிழ்ந்து அவரைப் பாராட்ட விரும்பினர். அக்கூட்டத்தினுக்கு மகாத்மா தலைமை தாங்கி, வல்லபாய் படேலுக்கு சர்தார் என்னும் பட்டம் வழங்கினர். சர்தார் என்ருல் தலைவன் என்றே அர்த்தம்.

ஏழை உழவர், எட்டும் இரண்டும் தெரியாத உழவர், இவர்கள் எம்மாத்திரம்? குட்டி அதிகாரிகளை ஏவி, காலிகளைத் தூண்டிவிட்டு, போலீசாரையும் காட்டி அச்சுறுத்தி, நிலங்களைப் பறிமுதல் செய்து, ஏலம்போட்டால் அடங்கி ஒடுங்கிவிடுவர் என்று அதிகாரவர்க்கம் எண்ணி நின்று, தன்னுல் ஆனமட்டும் பார்த்தது. எதுபோனுலும் கொண்ட விரதத்தைக் கைவிடோம் என்று ஏழை உழவர் உறுதிபூண்டு நின்றனர்.

அங்ஙனம் அவர்களை ஆக்கிப்படைத்த பெருமை வல்லபாய் படேலையே சாரும். இந்திரஜித்து மாண்டு வீழ்ந்ததும், தம்பியுள்ளான் படைக்கு அஞ்சான் என்று இராமபிரான் களிப்பு மிகுந்தான் என்று கம்பர் கூறுவார். அவ்வாறே சுயராஜ்யப் போரில் வலது கைபோல் விளங்குவார் வல்லபாய் என்று காந்திமகான் கண்டு கொண்டார். அது முதல் அப் பெரியார் நமது சர்தாரை முன்னிட்டு எப்போதும் போரைத் துவக்குதல் வழக்கமாகிவிட்டது.

தேசம் முழுவதும் பார்தோலி உழவருக்கு உபபலமாய் நின்றதை அதிகாரவர்க்கம் அறிந்தும் என்ன? எதிராறு நீந்தமுடியாது என்பதை அவ்வர்க்கம் உணர்ந்து

கொள்ளவில்லை. படை பலம் கொண்டு பாரத பூமியை என்றும் மடக்கி நிற்கலாம் என்றே எண்ணிக் கிடந்தது. இதனை அடுத்து வரும் அதிகாரங்களில் காணலாம்.

43. ஆட்சி ஒரு சாபம்

ஆங்கிலேயரின் தொடர்பு அறவே ஒழிய வேண்டு மென்று ஆதிமுதலே இத்தேசத்தில் பலர் துடித்து நின்றனர். ஆனாலும், நம்மவருக்கு அரசிலே அதிக உத்தியோகங்கள் வேண்டுமென்றே காங்கிரஸ் மகாசபை முதலில் விரும்பி நின்றது. தீவிரவாதிகள் அச் சபை யிலே தலை எடுத்த பின்பு 1906-ஆம் ஆண்டில்தான் சுய ராஜ்யமே இலட்சியம் என்னும் தீர்மானம் உதித்தது.

எனினும், சுயராஜ்யம் என்று வாயினால் சொல்லவும் சிலர் தயங்கினர். மிதவாதிகளோ, தீவிரவாதிகளின் போக்கையும் நோக்கையும் ஏற்கவில்லை. அதுபற்றியே, 1907-ஆம் ஆண்டில் சூரத் நகரிலே தீவிரவாதிகளின் எடுப்பினால் அம் மகாசபை முறிந்தது. அதன் பின், தீவிரவாதிகளை விலக்கி மிதவாதிகள் அச்சபையை நடத்தி வந்தனர். அப்போது, இங்கிலாந்தின் குடியேற்ற நாடு களில் இருப்பது போன்ற ஆட்சிமுறை தேவை என்று மிதவாதிகள் விதியின்றி விளம்பத் தொடங்கினர்.

தீவிரவாதிகளை விலக்கி விட்டதனால், சுவையற்ற உணவே போல் அம் மகாசபை திகழ்ந்து வந்தது. அது சமயம் அதிகார வர்க்கம் அடக்கு முறைகளை மேற் கொள்ளவே, ஆங்கிலேயரின் தொடர்பு அடியோடு அகல வேண்டும் என்று விருது கூறிய வண்ணம் இளைஞரான பயங்கரவாதிகள் படபடப்புடன் கிளம்பினர். அதிகார வர்க்கத்தினுக்கும், அதன தாசானுகளுக்கும சுயராஜ்யம்

எனும் சொல் நாராசம் போல் விளங்கியதால், தீவிரவாதி களான திலகரும், பெசன்ட் அம்மையும் 'ஹோம் ரூல்' என்னும் பெயருடன் தேசமெங்கும் சபைகளை ஏற் படுத்தி, எடுப்பான கிளர்ச்சி செய்து வந்தனர்.

இனி, ஹோம் ரூல் என்னும் பதமும் சிலருக்கு அச்சம் ஊட்டியது. ஆதலின் பொறுப்பு வாய்ந்த அர சாட்சி போதுமென்று சிலர் சொல்லலாயினர். முதல் உலக மகாயுத்தத்தின் விளைவாக, இங்கே பொறுப்பு வாய்ந்த அரசாட்சி படிப்படியாக ஏற்படும் என்று இந்தியா மந்திரி 1917-ஆம் ஆண்டில் ஓர் அறிக்கை வெளியிட்டார். அதற்கிணங்க மாண்டேகு-செம்ஸ் போர்டு என்னும் அரசியல் சீர்திருத்தங்கள் உதித்தன.

இதற்கு இடையில், கிளாபத் அநீதியும், பஞ்சாப் படுகொலையும் நிகழ்ந்தன இந்த இரண்டு அக்கிரமங் களுக்கும் பரிகாரம் சுயராஜ்யமே என்று காந்திமகான் கூறினார். ஒத்துழையாப் போர் தொடங்கியதும், சுய ராஜ்யமே இலட்சியம் என்று காங்கிரஸ் மகாசபை தீர்மா னித்தது. அப்போதே, பிரிட்டிஷ் குடை நிழலுக்குட் பட்ட சுயராஜ்யமா, அல்லது அதற்கு வெளிப்பட்ட சுய ராஜ்யமா என்று சிலர் கேட்டனர்.

அதனை அப்பால் முடிவு செய்யலாம். ஆங்கிலேயர் கண்ணியமாக நடந்தால், அவர்களுடன் நட்புரிமை உள்ள சுயராஜ்யம் கொள்வோம் என்று மகாத்மாகாந்தி பதிலுரைக்க நேர்ந்தது. ஒத்துழையாப் போராட்டம் நடந்த காலையிலே, பரிபூரண சுயராஜ்யமே வேண்டும் என்னும் கிளர்ச்சி இந்நாட்டிலே ஓங்கிற்று. அதனை மகாத்மா காந்தி அப்போது அடக்கினார்.

காந்திமகானும், ஆயிரக்கணக்கான தேசபக்தரும் சிறையில் கிடந்து வாடியபோது, சுயராஜ்யக் கட்சியார்

என்போர் தோன்றி, அரசாங்கத்துடன் சட்டசபை களிலே பெரும்போர் விளைத்தனர். அச்சமயத்தில் ஆங்கிலேயரின் தொடர்பே இல்லாத பரிபூரண சுயராஜ்யம் வேண்டும் என்னும் கிளர்ச்சி வானுற வலுத்தது. வலுக்கவே, 1927-ஆம் ஆண்டிலே சென்னையில் நடந்த காங்கிரஸ் மகாசபையில் அவ்விதமே ஒரு தீர்மானம் நிறைவேறியது.

அதே சமயத்தில், சென்னையிலே குடியரசு மகாநாடு என்பது நடைபெற்றது. அதற்கு ஜவாஹர்லால் நேரு தலைமை தாங்கினார். குடி அரசே தேசத்தின் இலட்சியமாக வேண்டும் என்று அம் மகாநாடு வற்புறுத்தியது. பொறுப்பு வாய்ந்த ஆட்சி படிப்படியாக ஏற்படும் என்னும் அறிக்கையைத் தழுவி, இந்திய அரசியலை ஆராய 1929-ஆம் ஆண்டில் வெள்ளையரே அடங்கிய சைமன் கமிஷன் என்னும் கோஷ்டி இங்கே வந்தது. அதனை நம்மவர் அனைவரும் சேர்ந்து பகிஷ்கரித்தனர்.

அந்நிலையில் தான், “நீங்களே ஏகமனதாக ஓர் அரசியல் திட்டம் வகுத்து அனுப்புங்கள்” என்று நம்மவரை இந்தியா மந்திரி அறைகூவி அழைத்தார். அதன் விளைவாகவே, குடியேற்ற நாட்டு அந்தஸ்துள்ள அரசியல் திட்டமொன்றை நம்மவர் வகுத்தனர். அஃது “நேரு திட்டம்” எனப்படும். அத் திட்டத்தினையும் இங்கிலாந்தின் அரசாங்கம் ஏற்கவில்லை.

அதன்மேல் ஓராண்டும் பொறுத்துப் பார்ப்போம், அத்திட்டத்தை இங்கிலாந்து ஏற்றுக் கொள்ளாவிடின், பரிபூரண சுயராஜ்ய இலட்சியம் கொள்ளுவோம் என்று 1928-ஆம் ஆண்டின் இறுதியில் காங்கிரஸ் மகாசபை தீர்மானம் ஒன்று கொண்டது. அடுத்து 1929-ஆம்

ஆண்டின் கடைசியில் லாகூர் நகரிலே, காங்கிரஸ் மகா சபை கூடிற்று.

இந்தியாவின் அரசியலைக் குறித்து ஆங்கில மந்திரிகள் மவுனமே சாதித்தனர். ஆனால், ஆண்டின் இறுதியிலே லண்டன் மாநகரில் வட்டமேஜை மகாநாடு நடக்கும்; அதற்கு இந்தியாவிலுள்ள பலவாறான அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் அழைக்கப் பெறுவர். மேலும், நானாவிதமான சாதி, மத, வகுப்புவாதிகளும் வருவார்கள். அம் மகா நாட்டில் இந்தியாவின் அரசியலை வகுத்துக் கொள்ளலாம் என்று பொருள்படும் வண்ணம் அரசப் பிரதிநிதி அறிவித்தார்.

இந்தியாவுக்குக் குடியேற்ற நாட்டு அந்தஸ்துள்ள அரசியல் வழங்க, ஆங்கில மந்திரிகளுக்கு எண்ணமுண்டா என்று நம் தலைவர்கள் வினவினார்கள். அதற்கு அரசப் பிரதிநிதி சரியான பதில் கொடுக்கவில்லை. எனவே அத்தகைய வட்டமேஜை மகாநாட்டில் கலந்து கொள்வதால் யாதொரு பயனும் நேராது என்று காங்கிரஸ் கருதிற்று.

அன்றியும், பரிபூரண சுயராஜ்யமே இலட்சியம் என்று உறுதி செய்தது. செய்யவே, சட்டசபையிலிருந்த காங்கிரஸ்காரர் அனைவரும் வெளியே வந்தனர். வரி கொடாமை உள்பட பெருவாரியான அளவில் சட்ட மறுப்புப் போரைத் துவக்க ஏற்பாடுகள் எல்லாம நடைபெற்றன. அத்துடன் காங்கிரசின் ஆணையை மதித்து 1930-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி பரிபூரண சுயராஜ்ய இலட்சிய தினம் என்று அத்தினத்தை தேச மக்கள் கொண்டாடினர்.

மேலும், அன்னிய ஆடைகளையும், பொருள்களையும் அறவே கைவிட நம்மவர் எல்லாரும் ஒருமிக்க முயற்சி

செய்தனர். அதனால், அன்னிய ஆடைகள் மலைபோல் குவிந்து தீக்கு இரையாயின. எத்துறையில் சட்டமறுப்புப் போரைத் துவக்கலாம் என்று காந்தி மகான் சிந்தனை செய்யலானார். பரிபூரண சுயராஜ்ய இலட்சியம் கருதித் தீயில் குதிக்கவும் மக்கள் தயாராக இருந்தார்கள். அப்போது உப்புச் சட்டத்தை மீறுவதாக முடிவு கட்டிய மகாத்மா காந்தியோ, அரசப் பிரதிநிதிக்கு ஓர் இறுதிக் கடிதம் விடுத்தார். அதன் கருத்து வருமாறு:—

"ஆங்கில ஆட்சி ஒரு சாபம். அது இந்தியரின் ஆண்மையைக் குலைத்துவிட்டது. இந்திய மக்களை மகா தரித்திரராக ஆக்கிவிட்டது. இந்திய மக்களின் விவசாய வரிப்பளுவோ மிக அதிகம். ஏழை இந்தியர் உப்புக்கும் வரி கொடுக்கின்றனர். இங்கிலாந்தின் நன்மையை மதித்தே இந்தியா ஆளப்படுகிறது.

"வரிதான் மிகமிக அதிகம் என்றால் செலவும் மிகமிக ஏராளமாக இருக்கிறது. உதாரணமாக, அரசப் பிரதிநிதி யாகிய உமக்கு மாதச் சம்பளம் 21 ஆயிரம் ரூபாய், தவிர மறைமுகமான வேறு வருவாய்களும் உண்டு. இங்கிலாந்தின் முதன் மந்திரிக்கோ மாதச் சம்பளம் சுமார் ஐயாயிரம் ரூபாய். இங்கே மக்களின் சராசரி தின வருமானம் இரண்டணாவுக்கும் குறைவு என்றால், உமது தினச் சம்பளம் 700 ரூபாய் ஆகும். ஆங்கில மக்களின் தினசரி வருமானம் ரூபாய் இரண்டு என்றால், அங்கே முதன் மந்திரியின் தினச் சம்பளம் ரூ. 180 தான்.

"எங்கள் நாடு சுகம் அடைய வேண்டுமானால், சாபத் தீடான ஆங்கில ஆட்சி ஒழிய வேண்டும். இதற்குச் சட்ட மறுப்பே தக்க ஆயுதம். அச்சட்ட மறுப்புக்கு அடிப்படை அகிம்சையும், சத்தியமுமே. அகிம்சை-

வெல்லும் என்று நான் கண்கூடாகக் காட்டாவிட்டால், இங்கே பயங்கர வாதிகள் கை மேலாகிப் பலவாறான காரியம் புரிவார்கள். அதிகார வர்க்கமும் எட்டிக்குப் போட்டியாகக் கொடுமை விளைக்கும். இந்த இரண்டு பயங் கரத்தையும் தடுக்கவே, நான் சட்ட மறுப்புப் போர் தொடங்கப் போகின்றேன்."

அவ்விதம் 1930-ஆம் ஆண்டு மார்ச்மாதம் இரண்டாந் தேதி காந்தி மகான் கடிதம் விடுத்தார். ஆமதாபாத் நகரிலே சபர்மதி நதிக்கரையில் தாம் வசித்து வந்த சத்தி யாக்கிரக ஆசிரமத்தில் பல தொண்டர்களை, அகிம்சை யிலும், சத்தியத்திலும் பழக்கி வந்தார். சாந்தமான நிலையிலேயே போர் நடத்தல் வேண்டும் என்று தேச மக்களுக்கு ஆணையிட்டார்.

சட்ட மறுப்புப் போர் தொடுக்கு முன்னம், அரசப் பிரதிநிதியைக் கண்டு பேசுதல் அவரது விருப்பமாம். கண்டு பேசுவதின் விளைவாக ஒரு சமரசம் காண வேண் டும் என்பதே அவரது அவா. ஆகவே கண்டு பேச அனுமதி வேண்டும் என்று அரசப் பிரதிநிதியை அவர் கேட்டுக் கொண்டார். அப்பிரதிநிதியோ அதற்கு ஒப்ப வில்லை. உடனே போருக்குரிய ஆயத்தங்கள் எல்லாம் நடக்கலாயின.

காந்தி மகான் போர் தொடுக்கப் போகும் செய்தி உலகெங்கும் பரவிற்று. சத்தியின்றி, இரத்தமின்றி அமைதியும், சாந்தமுமான முறையில் நடக்கும் போர் ஆதலின் அதனைக் காண உலகம் ஒருங்கே விரும்பியது. ஆதலின் உலகின் நானு தேசங்களிலிருந்தும் பத்திரிகைப் பிரதிநிதிகள் இந்தியாவுக்கு வந்து, சபர்மதி ஆசிரமத்தின் நடவடிக்கைகளைக் காணக் கண்ணும் கருத்துமாய் இருந் தனர்.

44. வெற்றி அல்லது சாவு

‘உப்பில்லாப் பண்டம் குப்பையிலே’ என்பது ஒரு பழமொழி. மாந்தரின் உணவுக்கு உப்பு மிக அவசியம். உப்பு விளைவோ ஆங்கில அரசாங்கத்தின் ஏக போக உரிமையாக இருந்தது. அதனால் கூழ் குடிக்கும் ஏழை இந்திய மக்கள் உப்புக்கும் வரி கொடுத்து வந்தனர். இந்த அநீதி அடாது என்று காந்தி மகான் கண்டார்; உடனே உப்புச் சட்டத்தை மீறியாக வேண்டும் என்று தீர்மானித்தார்.

கடலோரத்திலும், உப்பங்கழிகளிலும், ஏனைய இடங்களிலும் நீரைக் காய்ச்சி உப்பை எடுத்தல் வழக்கம். எல்லாரும் அவ்விதம் உப்பை இலகுவில் எடுக்கலாம். எடுத்தால், அச்செயல் உப்புச் சட்டத்தை மீறியதாகும். பெருவாரியான சட்ட மறுப்புப் போருக்கு, உப்புச் சட்டத்தை மீறுதலே இலகுவான உபாயமாகும்.

ஆனதுபற்றியே, தேச மக்கள் அச்சட்டத்தை மீற வேண்டும் என்று அவர் விதித்தார். அதற்கு முன்னதாகத் தாமே அச்சட்டத்தை மீறி, மக்களுக்கு வழி காட்ட அவர் எண்ணினார்: ஆதலின் 1930-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ந் தேதி தமது ஆசிரமத்திலிருந்து 70 தொண்டர்களுடன் புறப்பட்டார்.

தண்டி என்னும் இடத்தில் உப்பை எடுப்பதே அவரது ஏற்பாடு. அந்த இடத்துக்கும், அவரது ஆசிரமத்துக்கும் ஏறக்குறைய 100 மைல் இருக்கும். தினம் ஆறு அல்லது ஏழு மைல் தூரம் கால் நடையாகவே சென்று, வழியிலுள்ள கிராம மக்களுக்கு உப்புச் சண்டையின் உட்பொருளை உரைப்பதே அவர் கருத்து.

பரிபூரண சுயராஜ்யப் போருக்கு உரிய யாத்திரை ஆதலின், காந்திமகானும், தொண்டர்களும் செல்லும்

வழிநெடுக ஆயிரக்கணக்கில் மக்கள் கூடி நின்று, அந்த யாத்திரைக்கு ஆசி அளித்தனர். அன்றியும் அப்போரிலே அவருக்குப் பக்கபலமாய் நிற்பதாகவும் வாக்களித்தனர்.

ஓர் எழுபது தொண்டர்களுடன் புறப்பட்டுச் சென்று இவர் என்ன போர் செய்யப்போகிறார் என்று ஏனைய தேச பத்திரிகைப் பிரதிநிதிகள் வியந்து நின்றனர். நம்மவரிலும் பலரோ, சர்வ வல்லமையும் படைத்த ஆங்கில அரசாங்கத்தை, உப்புச்சட்டத்தை மீறியா வெல்லமுடியும் என்று இலேசாக எண்ணிக் கிடந்தனர்.

வழியிலே தங்கும் இடங்களில் எல்லாம் காந்தி மகான் பேசுவார். உடனே பணம் வந்து குவியும். தொண்டர்களும் திரளுவர். தவிர, ஆங்காங்குள்ள கிராம மணியக்காரரும் தமது உத்தியோகத்தை வீசி எறிவர். காங்கிரஸ் மகாசபை போர் தொடுத்து நிற்கையில், ஆங்கில அரசில் வேலை பார்த்தல் பாவம் என்பதே அம்மணியக்காரனின் கருத்தாம்.

நாள் தோறும் எட்டு அல்லது பத்துமைல் தூரம் நடந்தபின், ஓர் இடத்திலே காந்தியும் தொண்டரும் தங்குவர். அங்கெல்லாம் ஆயிரக் கணக்கான மக்கள் கூடி, அம்மகானைத் தரிசனம் செய்து, அவரது வாக்கை வேதவாக்கெனக் கொள்வர். உடன்வரும் போலீசார் ஜனக் கூட்டத்தை ஒழுங்கு செய்ய முயலுவர். வேறெதுவும் செய்யார்.

ஏப்ரல் மாதம் 5-ஆம் தேதி, காந்தியும் தொண்டர்களும் தண்டி எனும் இடம் சேர்ந்தனர். அடுத்த நாள் தேசிய வாரத் துவக்கம் ஆதலின், அன்று அவரும் தொண்டர்களும் அதிகாலையில் எழுந்து நீராடி, ஆண்ட

வனைத் தொழுது, உப்பை அள்ளப்புறப்பட்டனர். முதலில் காந்தி மகானே மிக்க அடக்க ஒடுக்கத்துடன் ஒருகை உப்பை அள்ளினார். அவரைத் தொடர்ந்து தொண்டர்களும் அள்ளினார்கள்.

தண்டி நகர் சேரு முன்னம், "ஒன்று நான் வெற்றியுடன் திரும்புதல் வேண்டும். அன்றேல் எனது சவ உடலம் அரபிக்கடலில் மிதத்தல் வேண்டும்," என்று அவர் சபதம் செய்தார் உப்பை அள்ளினதும், தேச மக்கள் எல்லாரும் இவ்விதம் உப்பை அள்ளி, அமைதியான வழியில் சுயராஜ்யப் போரை நடத்துதல் வேண்டும். தலைவர்கள் சிறையாகி விட்டால், புதிய புதிய தலைவர்கள் முன்வந்து போரை நடத்துதல் கடமை என்று ஓர் அறிக்கை விடுத்தார்.

அந்த அறிக்கை கண்டதும், தேசத்தின் ஒவ்வொரு நகரத்திலும், கிராமத்திலும் மக்கள் திரண்டு உப்புப் போராட்டத்தில் குதித்தனர். வடகோடி முதல் தென் கோடி வரையில் எங்கும் உப்புச் சட்டம் தேச மக்களால் மீறப்பட்டது. தேசத்தின் முனைப்பைக் கண்டதும் அதிகாரவர்க்கத்தார் அச்சம் மிகுந்து, அடக்கு முறையில் இறங்கினர்.

1930-ஆம் ஆண்டு மேமாதம் 4-ந் தேதி காந்தி மகானை அதிகாரிகள் சிறைசெய்து, எர்ரவாடா என்னும் நகரிலுள்ள காவற் கூடத்தில் கொண்டுபோய் வைத்தனர். காந்திமகான் சிறையானதைக் கேள்வியுற்றதும், தேசம் துடிப்புக் கொண்டது. தேசமெங்கும் கடை அடைப்பும், வேலை நிறுத்தமும் ஏற்பட்டன.

அதன்மேல் உப்புச்சண்டை எங்கும் மிக உக்கிரமாயிற்று. தர்சனு என்னும் இடத்தில் உள்ள உப்பளத்தில்

தொண்டர்கள் புகுந்து உப்பை அள்ள எண்ணினர். அவர்களை எல்லாம் போலீசார் தடுத்து நிறுத்தி உப்பளத்துக்கு வெளியே கொண்டுபோய் விட்டனர். விட்டதும், தலையிலும், காலிலும், மார்பிலும், வயிற்றிலும், விலாவிலும் தடிகொண்டு அவர்களை அடித்தனர்.

அதனால் தொண்டர்களிலே பலரும் பலத்த காயம் அடைந்தனர். அவர்களைக் கயிற்றுக் கட்டிலில் தூக்கிப் போட்டு, வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்று சிகிச்சை செய்ய நேர்ந்தது. தொண்டர்களின் சத்தியப் போரைப் பார்க்க அங்கே கூடி இருந்த மக்கள் கூட்டத்தையும் போலீஸ் குதிரை வீரர் துரத்தித் துரத்தித் தடியால் தாக்கினர்.

மேலும் தொண்டர்கள் தங்கியிருந்த கிராமங்களிலும் அக் குதிரை வீரர் புகுந்து, கண்ணில் கண்டவர்களை எல்லாம் மாதர், குழந்தை என்ற வேற்றுமையின்றித் தடிகொண்டு சாடினர். கொடுமைகள் பல இழைத்து, மிக்க பயங்கரம் ஊட்டி, மக்களின் உணர்ச்சியை நசுக்கிவிட வேண்டும் என்பதே அதிகாரிகளின் கோட்பாடாயிற்று.

நமது சென்னைமா நகரிலே, ஆந்திர கேசரியான பிரகாசம் என்பார் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் உப்புக் காய்ச்சி அச் சட்டத்தை மீறினார். ஆயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் இன்னும் பலரும் அவரைப் பின் பற்றினர். அப்பால் நடந்த பொதுக் கூட்டத்தை போலீசார் தடிகொண்டு தாக்கினர். குதிரை வீரரும் மக்களை விரட்டி விரட்டி அடித்தனர்.

குதிரை வீரர் விரட்டுகையில் தடுமாறிக் கீழே விழுந்து குதிரையினால் மிதியுண்டனர் சிலர்; உயிரிழந்தனர் இரண்டொருவர். இவ்விதம் குதிரை வீரரின் அட்ட

காசம் பற்பல இடங்களிலும் தாண்டவம் ஆடியது. குதிரைக் குளம்பினால் மிதியுண்டோருக்கும், காயம் அடைந்தோருக்கும் ஒரு கணக்கில்லை. உயிரிழந்தோரும் பலராவர்.

தமிழகத்திலே வேதாரண்யம் என்னும் இடத்திலே, இராஜாஜியின் தலைமையில் உப்புச் சண்டை நடந்தது. அப்போது தொண்டரையும் மக்கள் கூட்டத்தையும் போலீசார் புளியங் கொம்பினால் பலங்கொண்ட மட்டும் புடைத்தனர். அதனால் சிலருக்கு இரத்தம் பீறிட்டது. அடித்தும் உதைத்தும், வாட்டியும் வதைத்தும் மக்களை அச்சுறுத்த வேண்டும் என்றே அதிகாரிகள் எங்கும் முனைந்தார்கள்.

அதுகண்டு, ஜனங்கள் அஞ்சிவிடவில்லை. அதன் மேல், அதிகாரிகள் சில பல இடங்களில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இது கண்டும் ஜனங்களின் மன வலி மடங்கி விடவில்லை தேசமெங்கும் உப்புச் சண்டை ஓங்கியே நின்றது. தேசத்திலே தலைவர்கள் என்ற அனைவரும், தொண்டர்களுமாக ஒரு இலட்சம் பேர் சிறை புகுந்தனர். உப்புச் சண்டையுடன் மதுபானக் கடைகளின் முன்னும், சீமை ஜவுளிக் கடைகளின் முன்னும் மறியல்கள் நடந்தன. இத்துறையிலும் எண்ணிறந்த தொண்டர் சிறைப்பட்டனர்.

மறியலின் வேகத்தைக் கண்டதும், மதுபானக் கடைகள் பலவும் மூடப்பட்டுப் போயின. சீமை ஜவுளி விற்பனையாளர்களோ, தங்களிடமுள்ள அன்னிய ஜவுளிகளைக் கட்டிப்போட்டு, காங்கிரசின் கட்டுப்பாட்டுக்கு அடங்கி நடக்க முற்பட்டனர். பம்பாய் நகரம் அத்துறையிலே முன்னணியில் நின்றது. பம்பாய் வர்த்தகர்கள் பலரும் அந்த இயக்கத்துக்குப் பேருதவி புரிந்தனர்.

அவ்விதம் இந்தியாவிலே உப்புச்சண்டை ஓங்கி நிற்கையில், இலண்டன்மா நகரிலே 1930-ஆம் ஆண்டு நவம்பர் 12-ந் தேதி வட்டமேஜை மகாநாடு நடந்தது. அதில் கலந்து கொண்ட இந்தியரோ தம் தம் கட்சி அல்லது வகுப்பு நலத்தையே பெரிதும் வற்புறுத்தினர். தேச நலத்திலே அவர்களுக்குள் ஒற்றுமை தென்பட வில்லை. காங்கிரஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளாவிட்டால், வட்டமேஜை மகாநாடு உருப்படாது என்று இங்கிலாந்தின் மந்திரிகளுக்குத் தெள்ளென விளங்கிற்று.

இதற்கிடையிலே இந்தியாவில் சத்தியப் போர் நடக்கும் விவரமும், அதில் அதிகாரிகளின் மிருகத்தனம் தாண்டவம் ஆடுவதும், உலகெங்கும் பத்திரிகைகளின் மூலம் பறைசாற்றப் பெற்றன. அது கண்டு, ஆங்கில மந்திரிகள் தலை குனிய நேர்ந்தது. அதன்மேல் காங்கிரசுடன் சமரசம் கொள்ள வேண்டும், காங்கிரஸ் பிரதிநிதிகளை மாநாட்டினுக்கு வருவிக்க வேண்டும் என்று ஆங்கில மந்திரிகள் அறிவு கொண்டனர்.

இங்கே சர். தேஜ் பகதூர் சாப்ரு என்பவரும், கனம் ஜெயகார் என்பவரும் அரசப் பிரதிநிதிக்கும் காந்திக்கும் இடையே தூது நடந்து, சமரசம் உண்டு பண்ண மிகவும் முயன்றனர். அதன் முடிவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் சார்பாக அரசப் பிரதிநிதியான லார்டு இர்வின் என்பவரும், காங்கிரஸ் மகாசபையின் பிரதிநிதியாக காந்தி மகானும் சரிசமமான நிலையில் கலந்து பேச ஏற்பாடு ஆயிற்று.

இர்வின் பிரபுவும் காந்திமகானும் அவ்வாறு கலந்து பேசினர். அந்த இருவருக்கும் இடையே ஓர் உடன்பாடு ஏற்பட்டது. அது காந்தி-இர்வின் ஒப்பந்தம் எனப்படும்.

சிறையில் கிடக்கும் தலைவர்களையும், தொண்டர்களையும் விடுவிக்க அப்பிரபு ஒப்புக்கொண்டார். தவிர, ஏழை மக்கள் தங்கள் குடும்பத்திற்கு வேண்டிய உப்பைத் தடையின்றி காய்ச்சி எடுத்துக்கொள்ளும் உரிமை வழங்கவும் ஒருப்பட்டார்.

காந்திமகானே சட்ட மறுப்பை நிறுத்திவைக்க மனம் ஒப்பினார். மேலும், காங்கிரசின் பிரதிநிதியாக வட்டமேஜை மகாநாட்டுக்குச் செல்லவும் சம்மதம் தெரிவித்தார். இந்த ஒப்பந்தம் கண்டு, தேச மக்களிலே பெரும்பாலார்க்கு ஆறுதல் பிறந்தது. அல்லாமலும் சர்வ வல்லமையுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் தனது மிருகபலம் பலியாமல், ஆன்ம பலத்தைக்கண்டு, காங்கிரசுடன் உடன்பாட்டுக்கு வந்தது கேட்டு அனைவரும் களித்தனர்.

மகாத்மா காந்தி தாம் சொல்லிய வண்ணம் சட்ட மறுப்பை நிறுத்தினார். இங்கிலாந்துக்குப் போகவேண்டி காங்கிரசின் அனுமதியை நாடினார். 1931-ஆம் ஆண்டு மார்ச்மாதம் கராச்சி நகரிலே விசேடக் காங்கிரஸ் கூடியது. இதற்கு இடையில் அதிகாரவர்க்கமோ காந்தி இர்வின் ஒப்பந்தத்தைக் கண்டு மனம் ஒப்பாமல் முட்டுக்கட்டை போட வெகு தந்திரமாக முயலாநின்றது.

தொண்டர்களில் பலர் சிறையிலிருந்து விடுபடவில்லை. ஏழை மக்கள் உப்புக் காய்ச்சி எடுப்பதிலும் பல இடையூறுகள் ஏற்பட்டன. சுவாமி வரம் கொடுத்தாலும் பூசாரி இசையவில்லை என்பார்கள். அதிகார வர்க்கத்தினரான பூசாரிகளின் போக்கைக் கண்டு, காந்திக்கும் இர்வினுக்கும் இடையே கடிதப் போக்குவரவு நடக்கலாயிற்று.

வட்டமேஜை மகாநாட்டிறுக்கு மகாத்மாகாந்தி போவாரா, போகமாட்டாரா என்று பலரும் சிந்தித்தனர். மறுபடியும் சட்டமறுப்புப் போர் மூளுமோ; ஏற்பட்ட சமரசம் முறியுமோ என்று பலரும் அஞ்சினர். ஆனாலும் காந்தியும், அரசாங்க அதிகாரிகளும் சந்தித்துப் பேசியதின் விளைவாக அதிகாரிகளின் முட்டுக்கட்டை சற்றே தளர்ந்தது. ஏகப் பிரதிநிதியாக காந்தியை அனுப்பக் காங்கிரசும் இசைந்தது.

1931-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29-ஆம் தேதி பம்பாயிலே மகாத்மாகாந்தி கப்பல் ஏறினார். பம்பாய் நகரம் ஒருங்கே திரண்டு நல்லாசி கூறி அவரை வழி அனுப்பியது. கப்பலில் காலடி வைத்ததும் காந்தி மகான் கூறியதின் சாரம் இது:—

“ராஜீய அடிவானத்தைப் பார்த்தால் எனக்கு நம்பிக்கை எதுவும் பிறக்கவில்லை. ஆயினும் ஆண்டவனை நம்பி இலண்டன் நகருக்கு நான் பிரயாணமாகிறேன். ஆண்டவன் ஆட்டிவைத்தபடி நான் ஆடுதல் வேண்டும். மானிடவர்க்கத்திறுக்கு நலம் புரிதலே எனது நோக்கம். அதற்கு ஆண்டவன் என்னை ஒரு கருவியாகக் கொண்டுள்ளார்.

“காங்கிரஸ் மகாசபையினிடம் ஒரு சாராருக்கு அபிப்ராயபேதம் இருக்கலாம். எல்லாரும் இன்புற்றிருக்க வேண்டும் என்பதே காங்கிரசின் கொள்கை. தேசத்தின் பொது நலத்துக்குக் குந்தகம் இல்லாத நிலையில் எல்லா வகுப்பாரின் நலத்தையும் காங்கிரஸ் கவனிக்கும். அத்தகைய காங்கிரசின் பிரதிநிதியாகவே நான் போகின்றேன்.”

45. தடியடி தர்பார்

ஆங்கில மந்திரிகள் விரும்பிய வண்ணமே, வட்ட மேஜை மகா நாட்டினுக்கு மகாத்மா காந்தி சென்ருர். தமது தனிப்பட்ட தன்மையில் அவர் செல்லவில்லை. காங்கிரஸ் மகா சபையினல் தேர்ந்தெடுக்கப் பெற்று, அதன் ஏகப் பிரதிநிதியாகவே அவர் சென்ருர்.

அம் மகா நாட்டினுக்கு இங்கிருந்து சென்றிருந்த பிரதிநிதிகளிற் பலரும் தம் தம் சாதி, மத, வகுப்புச் சபைகளால் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தாலும், அனேகமாக அதிகாரவர்க்கத்தின் அன்புக்குரிய ஆட்களாகவே இருந்தார்கள். தத்தமது சமூக அல்லது வகுப்பு நலத்தைக் குறித்தே அன்ஞர் வாதாடினர். தேச நலமே முக்கியமாம் என்று அவர்கள் கருதவில்லை.

காந்தி மகானே காங்கிரஸ் மகா சபையின் இலட்சியமான தேச நலத்தையே குறிக்கொண்டு அம் மகா நாட்டில் வாது புரிந்தார். இன்னும் இந்தியாவைக் கட்டியாண்டு பலன் அடைய வேண்டும் என்னும் ஆசையை ஆங்கில மந்திரிகள் கைவிடவில்லை. அத்துடன் பிரித்தாளும் உபாயத்தையும் கையாண்டே பேசினர்.

"பரிபூரண சுயராஜ்யமே இந்தியாவுக்கு வேண்டும்; இஷ்டப்பட்டால் அது இங்கிலாந்துடன் இணைந்து வாழும். ஆங்கிலேயரின் ஆதிக்கம் அடியோடு அகன்ருலொழிய, ஏழு இலட்சம் கிராமங்களிலுள்ள ஏழை இந்தியர் எத்துறையிலும் தலைதூக்க முடியாது," என்று காந்திமகான் கூறினர். இதனை அம்மந்திரிகளும், தந்திரிகளும் ஏற்கவில்லை.

இதற்கு இடையிலே, இந்தியாவிலோ காந்தி-இர்வின் ஒப்பந்தத்தை மீறி அதிகார வர்க்கம் கருமம் புரிந்து

வந்தது. வங்கத்திலே விசாரணை இல்லாமல் நெடு நாளாகக் காவலில் கிடந்த எண்ணிறந்த இளைஞர் துப்பாக்கி வேட்டுக்கும், சொல்லரியக் கொடுமைகளுக்கும் ஆளாயினர். அவர்களை மேலும் கசக்கிப் பிழிய ஓர் அவசரச் சட்டம் பிறந்தது.

இப்போது உத்தரப் பிரதேசம் என வழங்கும் ஐக்கிய மாகாணத்திலே ஏழை உழவர் கால வேறுபாட்டினால் பகுதிப்பணம் கட்டவகையின்றி வாடி நின்றனர். அந் நிலையில் குத்தகைப் பணத்தைக் கொடு என்று அவர்களை ஜமீன்தார்கள் வதைத்து வந்தார்கள்; சில இடங்களில் மாதரை மானபங்கமும் செய்தனர். இவற்றை எல்லாம் அதிகாரிகள் பார்த்து நின்றும், பரிகாரம் தேடித் தராமல் வாளா இருந்தார்கள்.

புருஷபுரம் எனப்படும் பெஷாவர் நகரிலே செஞ்சட்டையினர் என்னும் தொண்டர்களின் தலைவரான எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கான் என்பவரை அதிகாரிகள் சிறை செய்தனர். அது கேட்டுத் திகைத்து நின்ற அத் தொண்டர் கூட்டத்தின் மீது பீரங்கி தாங்கிய மோட்டார் வண்டியை வேகமாக ஓட்டவே, பலர் நசுக்குண்டு மாண்டனர். அது கண்டதும், மக்கள் கொதிப்புக்கொள்ள அவர்களின் மீது உடனே துப்பாக்கிப் பிரயோகம் நடந்தது.

அதில் காயமுண்டோருக்கு ஒரு கணக்கு இல்லை. அத்துடன் அதிகாரிகளின் வெறியினால் சொல்லொணாக் கொடுமைகளுக்கும் பற்பலர் இலக்காக நேர்ந்தது. இவை எல்லாம் லண்டன் மாநகருக்கு எட்டின. காந்திமகான் அதுகேட்டு மிகவும் வருந்தி, மீண்டும் போரே கதி போலும் என்று மனம் மருகினார்.

அவை எல்லாவற்றையும் மனத்துள்கொண்டு, வட்ட மேஜை மகா நாட்டிலே ஒரு சமயம் காந்திமகான் கூறியது இது :—"இந்தியாவில் சுதந்திரமோ, பொறுப்பு வாய்ந்த ஆட்சியோ வளருவதற்கு இடம் இல்லாதிருக்கையில், காங்கிரஸ் மகாசபை மறுபடியும் போராடியே தீரவேண்டும். அப்போராட்டம் எத்தனை நாள் நீடித்தாலும் என்ன? அக்கறை இல்லை."

அம் மகா நாட்டிலே நவம்பர் 27-ஆந் தேதி அவர் பேசியதின் முக்கிய சாரம் இது :—"இங்கே அரிய காலம் வீண் போகின்றது. இதனால் பயன் ஒன்றும் இராது. இது குறித்து என் மனம் புண்ணுகின்றது. இந்தியாவிலே மீண்டும் அதிகார வர்க்கத்தின் அடக்குமுறை தான் தோன்றும். அந்த அடக்குமுறை கண்டு நான் அஞ்சேன்; மக்களும் அஞ்சார். இங்கிலாந்துடன் நேசம் கொள்ள முடியுமா என்று பார்க்கவே இங்கு வந்தேன். ஆனால் நேசத்துக்கோ இடம் இல்லை.

"மீண்டும் சட்ட மறுப்புப் போரில் பாய வேண்டும் என்பதே கதி போலும். எத்தனை விமானங்கள் எங்கள் தலைக்கு மேல் பறந்தாலும் சரி, கவசம் பூண்ட மோட்டார் வண்டிகள் எத்தனை வந்து எங்களைத் தாக்கினாலும் சரி, இந்தியக் குழந்தைகளும் அவை கண்டு அச்சம் கொள்ளா. தங்களைச் சுற்றித் துப்பாக்கி ரவைகள் பறந்து வரும் காலையில், களிப்புடன் நடனமாடும் படியே குழந்தைகளை நாங்கள் பழக்கியுள்ளோம். தேச சுதந்திரம் கருதி தியாகம் புரிய வேண்டும் என்றும் அவர்களுக்குப் புகட்டி இருக்கிறோம். எனவே அப் போரைக் குறித்து எனக்கு அதைரியம் கிடையாது."

இறுதியிலே வெறும் கையுடன் மகாத்மாகாந்தி இந்தியாவுக்குத் திரும்பினார். அப்படி இருந்தும் பம்பாய்

நகர மக்கள் இலட்சக் கணக்கில் திரண்டு வந்து, அவருக்கு அரிய வரவேற்பளித்தனர். மூன்று நாள் வரையில் அவர் பம்பாய் நகரில் தங்கி இருந்து, மாகாணங் களில் தோன்றியுள்ள நிலைமைகளைத்தையும் கேட்டு அறிந் தார். அவசரச் சட்டங்கள் அரசப் பிரதிநிதியின் புது வருடப் பரிசு போலும் என்று சொன்னார். பின்பு, உள்ள நிலையை உணர்ந்துகொள்ள பேட்டிதரவேண்டும் என்று அரசப் பிரதிநிதியான லார்டு வில்லிங்டனுக்குத் தந்தி கொடுத்தார். அவரோ பேட்டி தரமுடியாது என்று பதில் கொடுத்து விட்டார்.

காங்கிரசுடன் போர் தொடுக்க வேண்டும் என்று அதிகார வர்க்கம் ஆவல் கொண்டிருந்தது போலும். அதனால், முன்னதாகவே பண்டித நேருவையும் அவ்வர்க் கம் சிறை செய்து விட்டது. பெருமிதத்துடன் போரை நடத்த காங்கிரஸ் வகை துறைகளை வகுத்து வருகையில் (1932-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 4-ஆந் தேதி) மகாத்மா காந்தியும் சர்தார் படேலும் சிறை செய்யப்பட்டனர்.

சட்டபூர்வமான ஆட்சியைக் கைவிட்டு, அவசரச் சட்டங்களின் மூலம் ஆட்சி புரிய அதிகாரவர்க்கம் முனைந்து விட்டது. அவசரச் சட்டத்தின் மூலம் ஆட்சி நடக்கையில், நீதி மன்றங்களிலே மக்கள் புகுந்து வாதா டவோ, ஏன் என்று எவரேனும் கேட்கவோ இயலாது. அதிகாரிகள் இட்டதே சட்டமாம், செய்ததே தீர்ப்பாம்.

தேசத்திலே உள்ள காங்கிரஸ் மகாசபை, அதன் கிளை கள், அதனைச் சார்ந்து நிற்கும் ஆச்ரமங்கள் முதலியன எல்லாம் சட்ட விரோதம் என்று செங்கோல் பிறந்தது. அவற்றின் சொத்து சுதந்திரங்களை எல்லாம் அதிகாரி கள் கைப்பற்றிக் கொண்டார்கள். தேசமெங்கும் உள்ள தலைவர்களும், தொண்டர்களும் சிறையாயினர்.

ஆயுதம் ஏதும் இல்லாமல், அகிம்சை ஒன்றையே ஆதாரமாகக் கொண்டுள்ள இந்திய மக்களோ, சகல வல்லமைகளும் படைத்துள்ள அரசாங்கத்துடன் கடும் போர் தொடுக்கத் தயங்கவில்லை. பொது மக்கள் ஒருமித்துப் போரை நடத்தவே, தடியடி, துப்பாக்கிப் பிரயோகம், சித்திரவதை இவற்றை எல்லாம் அதிகார வர்க்கம் தங்கு தடையின்றி மேற்கொண்டது.

போரில் குதித்த மக்களைச் சிறை செய்ததோடு, அதிகாரிகள் நில்லாமல் அவர்களுக்கு ஆயிரம், பதினாயிரம் என்று அபராதமும் விதித்தனர். ஆங்காங்கே ரிசர்வ் போலீஸ் படைகளை நிறுத்தி, அவற்றிற்குரிய செலவுகளை மக்களிடமிருந்து அடிபிடி கட்டாயமாக வசூல் செய்தார்கள். அபராதம் கொடுக்க மறுத்த மக்களின் வீட்டையோ, நிலத்தையோ, சாமான்களையோ தெருவில் ஏலம் போட்டார்கள்.

காங்கிரசை அடியோடு நசுக்கிவிடவேண்டும் என்பதே அதிகாரிகளின் கொள்கை. அவசரச் சட்ட ஆட்சியில் அடுக்கு அடுக்காக அக்கிரமங்கள் நிகழ்ந்தன. அக்கிரமமான ஊரில் கொதிக்கிற மீனும் சிரிக்கும் என்பார்கள். அவ்வாறே அதிகார வர்க்கத்தின் அக்கிரமம் கண்டு கொதிக்கிற மீனும் சிரித்தது.

அதிகாரவர்க்கம் அங்ஙனமெல்லாம் செய்துவர, எட்டிக்குப் போட்டியாக, ஆங்கில ஜவுளி, ஆங்கில பாங்க், ஆங்கில மருந்து, ஆங்கிலக் கம்பெனிகள் இவற்றையெல்லாம் அடியோடு பகிஷ்கரித்தனர் இந்திய மக்கள். அதனால் இங்கே ஆங்கிலேயரின் வியாபாரமும், தொழில்களும், ஏனைய முயற்சிகளும் அடியோடு நின்று போயின.

காங்கிரஸ் மகாசபையையும், அதன் கிளைகளையும் சட்ட விரோதம் என்று அதிகாரிகள் விதித்திருந்தும் என்ன? வழக்கம்போல் ஆண்டு தோறும் காங்கிரஸ் மகா சபை ஓரிடத்தில் கூடவேண்டுமல்லவா? அதுபற்றி இந்தியாவின் நாலு பாகங்களிலிருந்தும் காங்கிரஸ் பிரதிநிதிகள் புறப்பட்டு வந்து, 1932, 1933 இந்த ஆண்டுகளில் முறையே டில்லியிலும், கல்கத்தாவிலும் காங்கிரஸ் மகா சபையை நடத்தினர்.

அச்சபையின் பிரதிநிதிகளாய் வருவோருக்கு ரயிலில் டிக்கட் கொடுக்கவே கூடாது, போஜன சாலைகளிலே சாப்பாடு போடக் கூடாது, தர்ம சத்திரங்களில் தங்கவிடக் கூடாது, உற்றார் உறவினரும் இடமோ உணவோ அளிக்கக் கூடாது என்றெல்லாம் அதிகாரிகள் ஆணையிட்டு இருந்தும் என்ன? டில்லியிலும், கல்கத்தாவிலும் நூற்றுக் கணக்கான பிரதிநிதிகள் கூடினார்கள். அவர்கள் கூடும் இடம் முன்னதாகவே பகிரங்கமாக அறிவிக்கப்படவில்லை.

ஆனாலும் அந்தரங்கமாகக் குறித்த இடத்திலே நூற்றுக் கணக்கான பிரதிநிதிகள் பகிரங்கமாய்க் கூடியது கண்டு, அரசாங்கம் வெட்கித் தலைகுனிய நேர்ந்தது. கூடியபின்பு, அப்பிரதிநிதிகளைச் சிறை செய்தும் என்ன? பரிபூரண சுயராஜ்யமே இலட்சியம், சட்ட மறுப்புப் போர் சிறிதும் தளராது, அகிம்சையும் சத்தியமுமே ஆயுதங்கள் என்றெல்லாம் அச் சபையிலே தீர்மானங்கள் நிறைவேறின.

அந்த இரண்டு ஆண்டுகளிலே, இரண்டு இலட்சத்துக்கு மேற்பட்ட தேசபக்தர் ஆணும், பெண்ணுமாகச் சிறை புகுந்தனர். வானரசேனை என்னும் பெயருடன் குஞ்சுகளும், குழந்தைகளும் காங்கிரஸ் கொடி தாங்கி

வீதிகளிலே சுயராஜ்ய கோஷங்கள் எழுப்பி, அப்போரில் கலந்து கொண்டன. தடி அடியையும், பூட்ஸ் உதையையும், துப்பாக்கி வேட்டையையும், சித்திரவதையையும் தேச மக்கள் சிறிதும் இலட்சியம் செய்யவில்லை.

தேசத்தின் எல்லையில்லா எழுச்சிகண்டு, அதிகார வர்க்கம் அயர்ந்து போயிற்று. எவ்வாறாக வாட்டி வதைத்தாலும், காங்கிரஸ் மகாசபை சிதையவில்லை. அச்சபைக்குப் பொது மக்கள் தரும் பக்க பலத்தைப் பார்த்து, ஆங்கில மந்திரிகளும் அச்சமே கொண்டனர். ஆதலின் மாகாண சுயாட்சி அளிப்பதாகக் கூறி, 1935-ஆம் ஆண்டிலே அரசியல் திருத்தச் சட்டம் ஒன்று பிறந்தது.

அதற்கு முன்னதாகவே காந்திமகான் சட்ட மறுப்புப் போரை நிறுத்தி இருந்தார். அந்த அரசியல் திருத்தம் கண்டு, அதனை அழித்தே தீரவேண்டும் என்று, காங்கிரஸ்காரர் அருஞ்சபதம் கொண்டனர்.

46. பலப் பரிட்சை

சூரபதுமன் என்பான் அமரர் அனைவரையும் சிறை செய்து, உரைக்க ஒண்ணாத கஷ்ட நஷ்டங்களுக்கும், கொடுமைகளுக்கும் அவர்களை ஆளாக்கினான். புராண இதிகாசங்களிலேயே இதனை வாசித்திருக்கின்றோம். லார்டு வில்லிங்டன் அரசப்பிரதிநிதியாக இருந்த காலத்தில் அவசரச் சட்டங்களின் ஆட்சியிலே, அச்சூரபதுமனைவிட மிகக் குரூரமான கொடுமைகளையும், வதைகளையும் நம் தேசம் அனுபவிக்க நேர்ந்தது.

அவ்விதம் ஆங்கில அதிகார வர்க்கத்தினுக்கும், காங்கிரஸ் மகாசபைக்கும் எத்தனையோ முறை பலப் பரிட்சை நடந்துள்ளது. ஒவ்வொரு சமயத்திலும் அரசாங்கத்தின்

மிருக பலம் அடியோடு தலைசாய்ந்து மண்ணைக் கவ்வும். மக்களின் ஆன்ம பலமே மங்காது தலை தூக்கி விளங்கியது என்னலாம்.

காங்கிரஸ் மகாசபையைப் பொசுக்கிவிட்டோம் என்று அதிகாரிகள் மனப்பால் குடித்து நின்றார்கள்; இறகவே, 1935-ஆம் ஆண்டு அரசியல் சட்டத் திருத்தத்தின்படி மாகாண சட்ட சபைகளுக்குரிய தேர்தல்களை நடத்தினார்கள். அப்போது காங்கிரஸ்காரர் அத்தேர்தலிலே போட்டியிட்டனர்.

ஒன்பது மாகாணங்களில், காங்கிரஸ்காரருக்கே பெருமித வெற்றிகிட்டியது. கிட்டவே காங்கிரசின் செல்வாக்கைக் கண்டு, ஆங்கில மந்திரிகள் திகைத்துத் தேம்பினார்கள். இங்குள்ள அதிகாரவர்க்கமோ பெருங் கலக்கமே கொண்டது.

தேசமக்களின் அபிமானத்துக்குப் பாத்திரமாகி, தேர்தலிலே வெற்றிபெற்ற காங்கிரஸ்காரர் அனைவரையும், பண்டித ஜவாஹர்லால் நேரு 1936-ஆம் ஆண்டின் துவக்கத்தில் அலகாபாத் நகரில் கூட்டி வைத்தார். அப்போது அவர்கள் அனைவரும் ஆண்டவனும், உலகமும் அறிய ஒரு பிரமாணம் கொண்டனர். அதன் கருத்து பின் வருமாறு :—

"ஆங்கிலேயர் செய்துள்ள அரசியல் திருத்தத்தை நாங்கள் ஏற்கமாட்டோம். எங்கள் தேச அரசியலை வகுக்க ஆங்கிலேயருக்கு உரிமை கிடையாது. இத் தேச அரசியலை, மக்களே தங்களுக்கு உகந்தவாறு அமைத்துக்கொள்ளுதல் வேண்டும். பரிபூரணமான சுயராஜ்யத்தை நிறுவவே, நாங்கள் முனைவோம்."

அந்த அரசியல் சட்டம் அமுலுக்கு வரும் நாள் 1936-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆந் தேதி. அத்தினத்தில் அனைவரும் தமது அலுவல்களை நிறுத்தி எங்கும் கடையடைப்புச் செய்யவேண்டும் என்று காங்கிரஸ் மகா சபை ஆணையிட்டது. அவ்வாறே இந்தியாவெங்கும் அத்தினத்தில் மக்கள் தமது வேலைகளை எல்லாம் நிறுத்தி, மாலையிலே பொதுக் கூட்டங்கள் நடத்தி, இச் சட்டம் எங்களுக்கு வேண்டாம் என்று ஒரு மனதாகத் தீர்மானம் செய்தார்கள். அதன் மூலம் காங்கிரசின் செல்வாக்கை அறிந்த அதிகாரவர்க்கம் திகைத்துப் போயிற்று.

மேற்கண்ட பிரமாணத்தை அறிந்ததும், ஆங்கில மந்திரிகளுக்கும், அதிகார வர்க்கத்துக்கும் பெரும் அதிர்ச்சி உண்டாயிற்று. அந்த அரசியல் திருத்த சட்டத்தின்படி மந்திரி சபைகள் மாகாணங்களில் ஏற்படவேண்டும். தேர்தலில் பெருமித வெற்றி அடைந்துள்ள காங்கிரஸ்காரரே அம்மந்திரி சபைகளை அமைத்தல் அவசியமாம்.

காங்கிரஸ்காரரோ அச்சட்டத்தைக் கிழித்தெறிய வேண்டும் என்று கர்ஜனை செய்து வருகின்றனர். இந் நிலையில் மந்திரி சபைகளை அமைப்பது எப்படி? அச்சபைகளை அமைக்காமல் இருந்தால் அது சட்ட விரோதமாகும். கொஞ்சநாள் மாகாண கவர்னர்களே ஆட்சியை நடத்தி வர நேர்ந்தது.

அத்தகைய நிலைமை உலகோரின் முன்னிலையில் அவமானத்துக்கும், சிரிப்புக்கும் இடமாம். அதுகண்டு, அதிகாரவர்க்கம் கையைப் பிசைந்துகொண்டு நின்றது. முடிவில் விதியின்றி அவ்வர்க்கம், மந்திரி சபைகளை அமைக்கு மாறு காங்கிரஸ்காரரை வேண்டிக்கொண்டது. அந்த அரசியல் சட்டத்தின்படி மாகாண கவர்னர்களுக்கு

விசேஷ அதிகாரம் உண்டு. மந்திரிகளின் ஆட்சியில் அவர்கள் எப்போதும் தலையிடலாம். தவிர மந்திரிகளின் காரியங்களையும் விசேஷ அதிகாரம் கொண்டு தடுத்து விடலாம். எனவே சர்வாதிகாரம படைத்த கவர்னர்களின் கை பொம்மையேபோல் இருக்க காங்கிரஸ்காரர் ஒப்புவரோ?

மேலும் அரசியல் சட்டத்தைக் கிழித்தெறிய வேண்டும் என்று சாற்றி வரும் காங்கிரஸ்காரர் அச்சட்டத்தின் படி மந்திரிசபைகளை அமைத்தல் எவ்வாறு? முன்னுக்குப் பின் முரணாக நடப்பதோ? எனவே அதிகாரவர்க்கத்தின் அழைப்பை ஏற்றுக்கொள்ள காங்கிரஸ்காரர் முன்வரவில்லை. முடிவில் மந்திரிகளின் ஆட்சியிலே கவர்னர்கள் தலையிடார், விசேஷ அதிகாரத்தையும் கையாளார் என்று அரசப்பிரதிநிதி வாக்களித்து, மந்திரிசபைகளை அமைக்குமாறு காங்கிரஸ் மகாசபையை வேண்டிக் கொண்டார். காங்கிரஸ்காரர் அதற்கு இணங்கினர்.

ஆங்கிலேயர் செய்துள்ள அரசியல் சட்டத்தை ஏற்பதில்லை என்று காங்கிரஸ்காரர் பிரமாணம் செய்திருக்கையில், அச்சட்டத்தின்படி அவர்கள் மந்திரிகளாக அமர்தல் பொருந்துமா என்னும் கேள்வி எழும். ஆங்கிலேயரின் சட்டம் ஒருபுறம் இருக்க, அதனை மதியாமல் தேச நலத்தையே மதித்து, ஆட்சியை நடாத்தி வருவோம் என்று அம்மகாசபை கூறி, மந்திரிசபைகளை அமைக்க முற்பட்டது.

அவ்விதம் ஒன்பது மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரி சபைகள் ஏற்பட்டன. மந்திரிகள் தாம் கருதிய வண்ணம் அரசியலை நடத்தி வந்தனர். கவர்னர்கள் தலையிடாமல் வாளா இருந்தனர். ஆயினும் இரண்டொரு மாகாணங்களிலே கவர்னர்கள் தலையிடப் பார்த்தனர்.

இத்தனை நாளாக இஷ்டப்படி நடந்துவந்த கவர்னர்களில் சிலருக்கு ஆத்திரம் உண்டாவது இயற்கைதானே.

கவர்னரின் தலையீட்டை அறிந்ததும், மந்திரிகள் தமது பதவியை விட்டெறிந்து வெளியேவர எண்ணினர். அரசப் பிரதிநிதி அது கண்டு அறிவுகொண்டு, கவர்னரின் தலையீட்டைத் தவிர்த்தார். விட்டுப் போக விரும்பிய மந்திரிகள் அதன்மேல் பதவியிலிருந்து, மக்களின் நலத்தையே கருதி ஆட்சியை நடத்தி வந்தனர்.

அழிவு வேலைதான் காங்கிரஸ்காரருக்குத் தெரியும், ஆக்க வேலை தெரியாது என்று அன்றளவும் அதிகாரவர்க்கம் கருதிக் கிடந்தது. ஆயினும காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சியின் மேன்மையைக் கண்டு, கவர்னர்கள் மனமாரப் புகழ்ந்து பேசினர். அதிகார வர்க்கமும் மகிழ்ச்சி மிகக் கொண்டது.

ஏறக்குறைய மூன்று ஆண்டு காலம் பல மாகாணங்களிலே காங்கிரஸ் ஆட்சி கம்பீரமாக நடந்து வந்தது. அது அறிந்து உலகமும் வியந்து புகழ்ந்தது. காங்கிரஸ் மந்திரிகளின் செல்வாக்கைக் கண்டு, அதிகாரிகளிலே சிலருக்கு அசூயை பிறந்தது. பிறக்கவே வெகு தந்திரமாக விபரீதம் விளைக்க அன்னார் முற்பட்டனர்.

இச்சந்தர்ப்பத்தில் முகம்மதியரைக் குறித்து ஒரு சிறிது சொல்லவேண்டும். ஆதியிலே படையெடுப்பின் நிமித்தம் முகம்மதியரில் சிலர் இங்கு வந்து அரசு கொண்டனர். கொண்ட பின் தேச மக்களிலே சில பலரை இஸ்லாம் மதத்தில் சேர்த்தனர். அவ்விதம் முகம்மதியரின் தொகை இங்கே பெருகிற்று.

முகலாய வல்லரசின் காலத்திலே அந்த அரசைப் போக்கி, இங்கே சுயஅரசை நிலைநாட்ட மராட்டியர் பெரு

முயற்சி செய்தனர். வர்த்தகம் புரிய இங்கே வந்திருந்த ஆங்கிலக் கும்பினியார் பலவாறான சூழ்ச்சிகள் செய்து இத் தேசத்தைக் கட்டிக் கொண்டனர். கும்பினியின் ஆட்சியைக் கண்டு ஜனங்கள் பொறுக்கவில்லை.

அதனால், 1857-ஆம் ஆண்டிலே முதல் சுதந்திர மகா யுத்தம் மூண்டது. அதில் முகம்மதியர்களும், இந்துக் களும் சோதரரைப்போல் சேர்ந்து நின்று, கும்பினியுடன் சண்டை போட்டனர். அதன் முடிவில் கும்பினியின் ஆட்சி தொலைந்து, ஆங்கிலேயரின் நேர்முகமான ஆட்சி இங்கே முளைத்தது.

ஆங்கில ஆட்சியின் தீமைகளை அகற்றவே 1885-ஆம் ஆண்டில் காங்கிரஸ் மகாசபை உதித்தது. முற்போக்கே கொண்ட முகம்மதியர் அன்றுமுதல் இன்றளவும் காங் கிரஸ் சபையில் சேர்ந்து உழைக்கத் தவறவில்லை. ஆயினும் முகம்மதியரிலே பெரும்பாலார் தங்களுக்கு என்று 1906-ஆம் ஆண்டிலே முஸ்லிம் லீக் என்னும் சபை ஒன்று கண்டனர்.

முகம்மதியர் அவ்விதம் தனிச்சபை கொள்வதற்கு ஆங்கில அதிகாரிகளின் சிலரின் சூழ்ச்சியே காரணம். இந்துக்களும் முகம்மதியரும் ஒரு மனம் கொண்டுவிட் டால் ஆங்கில ஆட்சிக்கு அனர்த்தம் விளையும் என்பதே அதிகாரவர்க்கத்தின் கருத்தாம். ஆதலின் சமயம் வாய்த்த போதெல்லாம் முகம்மதியரை முதுகில் தட்டிக்கொடுத்து, அவர்களுக்கு விசேஷ சலுகைகள் காட்டிவந்தனர்.

ஆனாலும், முஸ்லீம் லீக் என்னும் சபையோ சிற்சில சமயங்களில் காங்கிரஸ் சபையுடன் ஒத்துழைத்து வந்தது. அது கண்டு அதிகார வர்க்கம் பொறாமல், அவர்களைப் பிரித்து வைக்க முயலா நின்றது. சட்ட சபைக்குரிய

முகம்மதிய பிரதிநிதிகளை முகம்மதியரே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்று விதித்தது.

தனியே பிரதிநிதித்துவம்பெற்ற முகம்மதியர் பெரும்பாலும் வகுப்பு நலத்தையே மதித்து நடந்து வந்தனர். மத விஷயத்தில் முகம்மதியருக்கும் இந்துக்களுக்கும் வேற்றுமை மூளும் பொழுது, கலகத்தை மூட்டிவிடவும் அதிகாரிகளில் சிலர் தவறவில்லை. இந்த உண்மையை அறிந்து, மதியூகம் வாய்ந்த ஒரு சில முகம்மதியர் எப்போதும் காங்கிரசின் பக்கமே இருந்து வந்தனர்.

முதல் உலக மகா யுத்தத்தின் முடிவில் கிலாபத் அநீதி ஏற்பட்டவுடனே காந்திமகான் பரிவு மிகுந்து, முகம்மதியருக்கு ஆதரவெல்லாம் செய்து வந்தார். ஒத்துழையா இயக்கம் உதிப்பதற்குக் கிலாபத் அநீதியும் ஒரு காரணம். ஒத்துழையாப் போரிலே முகம்மதியர் முதலில் பங்குகொண்டனர்: அப்பாலோ மாறிவிட்டனர்.

ஆனாலும் காங்கிரஸ் மகாசபை நடத்தி வந்த போர்களில் எல்லாம், ஒரு சில முகம்மதியர் பற்பல தியாகங்கள் செய்யத்தவறவில்லை. பிரித்தாளும் தந்திரத்தில் கைவந்த ஆங்கில அதிகார வர்க்கம் சூதும், வாதும் செய்து முகம்மதியரைப் பிரித்து வைத்தது.

ஒரு சமயம் காங்கிரஸ் மகா சபையில் தீவிரவாதியாக விளங்கிய ஜனாப் ஜின்னா என்பார் முஸ்லிம்லீக் தலைவராகி, காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சியைக் குறித்து புகார் பல செய்தார். தேசிய நோக்குடைய முகம்மதியருக்கு மட்டும் காங்கிரஸ் மந்திரி சபையில் இடம் கிடைத்தது. மற்றைய முகம்மதியருக்கு இடம் கிடைக்கவில்லை. அது பற்றி மனம் புழுங்கியே ஜனாப் ஜின்னா புகார் செய்ய நேர்ந்தது.

அவரது குற்றச்சாட்டை தப்பு என்று தக்க ஆதாரம் காட்டி, காங்கிரஸ் மகாசபை ஓர் அறிக்கை யிட்டது. அரசாங்கமும் அக்குற்றச்சாட்டினுக்கு ஆதாரமே இல்லை என்று கூற நேர்ந்தது.

47. இங்கிலாந்தின் இறுமாப்பு

அனைவரும் மெச்சும் வண்ணம், காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி நடத்தி வருகையில், 1939-ஆம் ஆண்டின் இறுதியில் ஐரோப்பாவில் இரண்டாவது உலக மகாயுத்தம் மூண்டது. அதில் இங்கிலாந்து, அமெரிக்கா, ருஷ்யா இவை ஒரு பக்கமும், ஜெர்மனியும, ஜப்பானும், இத்தாலியும் ஒரு பக்கமுமாக இருந்தன.

இங்கே, மாகாணங்களில் காங்கிரஸ் மந்திரிகள் ஆட்சி நடத்தி வருகையில், அவர்களுக்கு அறிவிக்காமலேயே இந்தியாவையும் யுத்தத்தில் இழுத்துவிட்டது இங்கிலாந்து. ஏனெனில் தங்களுக்கு இந்தியா ஒரு மேய்ச்சல் நிலம் என்னும் எண்ணத்தை ஆங்கிலேயர் கைவிடவில்லை. அந்த யுத்த நிமித்தம் இங்கே இருந்து ஆளும், பணமும், பொருளும், பிறவும் இங்கிலாந்துக்கு ஏராளமாகப் போதல் வேண்டும். போகையில் ஏழை இந்தியா மிக்க கஷ்ட நஷ்டம் அடைதல் திண்ணம்.

தவிர, ஜெர்மனியின் தலைவரான ஹிட்லர் என்பவரின் எதேச்சாதிகாரத்தை எதிர்க்கவே போரில் புகுந்ததாக இங்கிலாந்து சாற்றியது. அந்நிலையில் எதேச்சாதிகாரமாகவே இங்கிலாந்து இந்தியாவைப் போரில் இழுத்துவிட்டிருக்கிறது. அங்ஙனம் இருக்கையில் காங்கிரஸ் மந்திரிகள் பதவியில் இருத்தல் எங்ஙனம்?

ஆதலினால், பதவிகளை விட்டெறிந்து வெளியே வந்துவிட வேண்டுமென்று காங்கிரஸ் மகாசபை அம்

மந்திரிகளுக்கு அறிவித்தது. அவ்வாறே எல்லா மந்திரிகளும் வெளியே வந்து விட்டனர். ஹிட்லரின் எதேச்சாதிகாரத்தை அழிக்கவே போரில் புகுந்தது உண்மையானால், இங்கிலாந்து தேசம் தனக்கு இந்தியாவின் மீதுள்ள எதேச்சாதிகாரத்தை உடனே விட்டொழிக்க வேண்டும். அதற்கு அடையாளமாக இங்கே தற்காலிகமாக தேசிய அரசாங்கத்தை அமைக்க வேண்டும். இங்கிலாந்துடன் சரிசமமான பங்காளிபோல் இருக்க இந்தியா விரும்புமே யல்லாமல், இங்கிலாந்தின் சார்பு நாடாக இருக்க ஒரு நாளும் விரும்பாது.

அவ்விதம் காங்கிரஸ் மகா சபை தீர்மானம் செய்தது. அப்போது அம் மகா சபையின் அக்ராசனராக இருந்தவர் சுபாஷ் சந்திரபோஸ். உள்ள நிலையை உணருவோமானால் ஆபத்தில் சிக்கியுள்ள இங்கிலாந்துடன் உடனேபோர் தொடுத்து, இந்தியாவில் சுயராஜ்யத்தை அமைக்கவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

ஆபத்துக் காலத்தில் இங்கிலாந்துக்கு இடையூறு விளைவிக்கக் கூடாது என்று காந்திமகான் கூறினார். இச் சமயம் தப்பினால், வேறு சமயம் வாய்ப்பது அரிது என்று சுபாஷ் சுட்டிச் சொன்னார். அதனால் சுபாஷுக்கும், காந்திக்கும் மனவேற்றுமை ஏற்பட்டது. சுபாஷின் கருத்தைக் காங்கிரஸ் ஏற்றுக்கொள்ளவில்லை.

அதன்மேல் "Forward Bloc" முன்னணி கோஷ்டி என்று ஒரு சபையை ஏற்படுத்தி, அதற்கு எங்கும் கிளைகளை நிறுவி, அரசியல் போராட்டத்தை நடத்த, சுபாஷ் ஒரு திட்டம் வகுத்தார். அவருக்கும் காங்கிரஸ் மகா சபைக்கும் கருத்து வேற்றுமை வலுக்கவே, அக்கிராசனப் பதவியை அவர் விட்டுவிட நேர்ந்தது.

அரசாங்கம் அவரது போக்கை அறிந்து, அவரைச் சிறை செய்து, விசாரணை இல்லாமல் காவலில் வைத்தது. அவரும் விதியின்றி நெடுநாள் காவலில் கிடந்தார். ஆனாலும் நல்ல சமயத்தை நழுவவிட அவருக்கு உத்தேசம் இல்லை. ஆதலின், இங்கிலாந்தைத் தாக்க வகை யாது என்று ஆலோசனை செய்து நின்றார். இது நிற்க,

காங்கிரஸ் மந்திரிகள் வெளியேறியதைக் கேட்டு, அமெரிக்கர் திகைத்தனர். இங்கிலாந்தின் பான்மை கண்டும் முணுமுணுத்தனர். காங்கிரசின் ஆதரவு இன்றேல், இந்தியாவின் உதவி ஏராளமாகக் கிட்டாது என்று இங்கிலாந்து உணர்ந்து கொண்டது. ஆனாலும், பிரித்தாளும் சூழ்ச்சியைக் கைவிடவில்லை.

இந்தியாவிலே தற்காலிகமாக, தேசிய அரசை ஏற்படுத்துவதானால் சிறுபான்மையாரின் (முகம்மதியரின்) நலம் கெட்டுப் போகும். ஆகவே, அரசப் பிரதிநிதியின் நிர்வாக சபையில் பலவாறான கட்சிகள், வகுப்புகள் இவற்றின் பிரதிநிதிகளைச் சேர்த்துக் கொள்வோம் என்று இங்கிலாந்து சொல்லிற்று.

சிறுபான்மையாரின் நலம் கெடுமே, எல்லாக் கட்சியாரின் பிரதிநிதிகளையும் நிர்வாகச் சபையில் சேர்த்துக் கொள்வோம் என்பதின் மர்மம் யாது? காங்கிரசின் பெருமிதமான செல்வாக்கைக் குறைத்து, ஏனைய கட்சிகளை காங்கிரசுக்கு எதிராகக் கிளப்பிவிட வேண்டும் என்பதேயாம். இதனைக் காங்கிரஸ் நன்கு கண்டு கொண்டது.

இங்கிலாந்துக்கு இடையூறு விளைக்க மகாத்மாகாந்தியும், காங்கிரசும் விரும்பவில்லை. தவிர, யுத்தத்தில் காங்கிரஸ் கலந்துகொள்ளவில்லை என்பதை உலகத்தி

னுக்கு அறிவித்தல் வேண்டும். ஆதலின் யுத்தத்தில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று தனி நபர்கள் கூறி, ஒப்புக்குச் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும் என்று காந்திமகான் ஒரு திட்டம் வகுத்தார். அவ்வாறே தனி நபர் சத்தியாக்கிரகம் ஒப்புக்கு நடைபெற்றது.

அதில் பண்டிதநேரு கைது செய்யப்பட்டு, நான்கு ஆண்டு சிறைத் தண்டனைக்கு ஆளானார். இன்னும் பலரும் கைதாயினர். இந்தியருக்கோ இங்கிலாந்தின் மீது வெறுப்பும், கடுப்பும் ஓங்கி நின்றன. வெற்றிமேல் வெற்றிபெற்று வரும் ஜப்பானிடமோ சிலருக்குப் பற்று மிருந்தது. ஐரோப்பாவிலே ஹிட்லர் எங்கும் வெற்றி பெற்று வந்தார். இங்கிலாந்தின் மீது அடுத்தடுத்து விமானங்களை ஏவி, இலண்டன் மா நகரின் மீது குண்டு மழை பொழிந்து வந்தார். ஐரோப்பாவிலே போரின் போக்கு இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் ஆபத்தாக மாறியது.

கிழக்கு ஆசியாவிலே பெருமித வெற்றியடைவதைத் தடுக்க, இந்தியாவை ஒரு தளமாகக் கொள்ளவேண்டும். இந்தியர் மனம் புழுங்கி நிற்கையில், இந்தியாவை தளமாக்க இயலாது என்று இங்கிலாந்து கண்டுகொண்டது. இந்தியாவை சாந்தம் செய்ய உடனே முயலவேண்டும் என்று இங்கிலாந்தில் உள்ள பிரமுகரும் வற்புறுத்தினர்.

அதன்மேல் ஆங்கில மந்திரிகளில் ஒருவரான கிரிப்ஸ் என்பார் இங்கே வந்தார்; வெகு நயமாகப் பேசினார். எனினும், தேசிய அரசை அமைப்பதில் அவர் ஒப்புக் கொடுக்கவில்லை. கண்ணைத் துடைக்கும் வேலையாகவே இருந்தன அவரது யோசனைகள். ஆகவே அவற்றைக் காங்கிரஸ் தலைவர்கள் ஏற்கவில்லை. எனவே, அவர் ஏமாற்றத்துடன் வந்த வழியே திரும்பிப் போனார்.

இவருக்குச் சற்று முன் பின்னதாக, ஆங்கில முதன் மந்திரியான சர்ச்சில் என்பாரும், அமெரிக்காவின் ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் என்பாரும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தில் ஓர் இடத்தில் கூடி, அட்லாண்டிக் சாசனம் என்னும் அறிக்கை ஒன்றை வெளியிட்டனர். உலகிலே ஒடுக்கப்பட்டுக் கிடக்கும் தேசமக்களுக்கெல்லாம் விடுதலை தேடித் தருதலே அச் சாசனத்தின் முக்கிய நோக்கமாம்.

அதன்படி இந்தியாவுக்கும் நல்லகாலம் பிறக்கும் என்று சிலர் எதிர்பார்த்து நின்றனர். ஆனால் இந்தியாவின் விஷயத்தில் அச்சாசனம் செல்லாது என்று, சர்ச்சில் துரை அறிவித்தார். எரிகிற நெருப்பில் எண்ணெயை ஊற்றியது போல், ஏற்கனவே புகைந்து கொண்டிருந்த இந்தியரின் மனம், அந்த அறிவிப்பைக் கேட்டதும், கொழுந்து விட்டு எரியத் தொடங்கியதில் ஆச்சரியமில்லையன்றோ.

"ஆற்றோடு போனாலும் போவேன், ஓடக்காரனுக்கு ஒரு தம்பிடியும் கொடேன்," என்னும் கதைபோல இங்கிலாந்து நடந்து வருதல் கண்டு, இந்தியமக்கள் சினம் பூத்தனர். அச் சீற்றம் ஆங்கிலேயரின் மீது கனகடுப்பும் வெறுப்புமாக மாறியது. இங்கிலாந்து அழிந்து போக வேண்டும் என்ற எண்ணமும் இந்தியாவில் பெருகிற்று

அல்லாமலும், இங்கிருந்து ஆளையும், பணத்தையும், பொருளையும், பிறவையும் இங்கிலாந்து தன் இஷ்டப்படி வாரிக் கொண்டு போயிற்று. தான் விரும்பியதை எல்லாம் மக்களிடமிருந்து பறித்துக் கொள்ளவும் ஒரு சட்டம் இயற்றியது. உ-தாரணமாக, அதிகாரிகள் கேட்ட அளவிலேயே இந்தியர் தம்மிடமுள்ள வாகனங்கள், பணங்கள்,

படகுகள், இதர சாமான்கள் இவற்றைக் கொடுத்தாக வேண்டும். அவ்விதம் கொடுக்காது போனால், அதிகாரிகளே வலிய வந்து, தேவையானவற்றை எடுத்துச் செல்ல வேண்டும் என்றும் எண்ண அச்சட்டம் அனுமதி தந்தது.

அந்நிலையில், இங்கே பண வறட்சி மிகுதியாக ஏற்பட்டது. உணவுப் பொருள்கள் பெரிதும் தட்டிப் போயின. பஞ்ச நிலைமை தோன்றிவிட்டது. அதுவே சமயமென்று கள்ளச்சந்தை இங்கே பெருகிற்று. அச்சந்தை கொள்ளைச் சந்தையாகவும் வடிவு கொண்டது. இதற்குக் கேள்வி முறை இல்லையா என்று இந்திய மக்கள் ஓலமிடுவதைக் கேட்டும், அதிகாரிகள் ஏனோ தானோ என்றே இருந்தார்கள்.

இனி, சிங்கப்பூர், மலாய்த் தீவுகள் இவற்றைப் பிடித்துக்கொண்டு பர்மாவை நோக்கிவரும் ஜப்பான் தேசம், இந்தியாவிலும் படையுடன் புகுதல் நலமேயாகும் என்று இந்தியரில் சிலர் எண்ணத் தொடங்கினர். வேறு சிலரோ, அந்த ஜப்பானியரை வரவேற்கவும் தயாராயிருந்தனர் என்னலாம்.

சுதந்திரத்தை மறுப்பது ஒன்று, இந்தியாவின் வளத்தையெல்லாம் அடியோடு வாரிச் செல்வது ஒன்று, அதனால் இந்திய மக்கள் சோற்றுக்கும் இல்லாமல் வாடி வதைதல் ஒன்று, எல்லாவற்றிற்கும் மேலாக ஜப்பானது படையெடுப்பு ஒன்று ஆகிய இவையும் பிறவும் ஒன்று கூடிக்கொள்ளவே, தேச நிலை யாதாகுமோ என்று காந்தி மகான் நெடுநாளாகவே வருந்தி நின்றார்; நீண்ட ஆலோசனையும் செய்தார்.

அதன் விளைவாக, இறுதியான சுதந்திரப் போராட்டத்தை நடத்தியாக வேண்டுமென்று அவருக்குத்

தோன்றியது. இல்லையானால், அன்றளவும் அவர் போதித்துவந்த அகிம்சை காற்றில் பறக்கும். மக்கள் மண்டியெழுந்து மீண்டும் பயங்கரச் செயல்களில் பாய்வர். பாய்ந்தால், தமது ஆயுள் இலட்சியம் சிதறிப்போம், அன்றியும், இங்கே ஜப்பானியர் வந்து புகுந்துவிடக் கூடும் என்று அவர் சிந்தாகுலம் கொண்டார்.

48. இறுதிப் போர்

ஐரோப்பா அனைத்தையும் பிடித்துக்கொண்டு, வெடி குண்டு வீசி இங்கிலாந்தை ஹிட்லர் தகர்த்து நின்ற பொழுது ஆங்கிலேயர் தடுமாறித் தத்தளித்தனர். கிழக்கு ஆசியாவிலே இங்கிலாந்துக்கு உட்பட்ட நாடுகள் பலவற்றையும் ஜப்பான் தேசம் வசம் செய்து கொள்ளவே, இங்கிலாந்தின் மதிப்பும் பெருமையும் மறைந்தே போயின.

அந்நிலையிலும் நாற்பது கோடி ஜனத்தொகை கொண்ட இந்தியாவை இங்கிலாந்து அணைத்துக் கொள்ளாமல், அலட்சியமே செய்து நின்றது. அது கண்டதும், "வெள்ளையரே வெளியேறுக. இந்தியர்காள் வெள்ளையரை வெளியேற்றும் வண்ணம் செயலாற்றுங்கள். அல்லது செத்து மடியுங்கள்," என்று காந்தி மகான் இறுதியாக முழக்கம் செய்தார். வேறு வழியில்லை என்றும் வற்புறுத்தினார்.

1942-ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் எட்டாந் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி பம்பாயில் கூடிய பொழுது அவ்விதம் மகாத்மா மனம் புழுங்கி மொழிய நேர்ந்தது. காங்கிரஸ் கமிட்டியும் அதனை ஆதரித்தது. வெள்ளையரே வெளியேறுக என்றால் மூட்டை முடிச்சுக்

களை கட்டிக் கொண்டு மனைவி மக்களுடன் இந்தியாவை விட்டு ஓடிவிடவேண்டும் என்பது அன்று.

மற்று, இந்தியாவிலே ஆட்சிபுரியும் உரிமையையும், ஆதிக்கத்தையும் கைவிடவேண்டும் என்பதே அவ்வாசகத்தின் பொருளாம். தேச மக்களுடன் மக்களாக இங்கே ஆங்கிலேயர் வாழ்வதில் தடையிராது. அரசாளும் உரிமையை விட்டொழித்தால் தான், ஆங்கிலேயரது அகம்பாவம் ஒழியும், ஏகாதிபத்ய வெறியும் மறையும்.

இனி, அரசாங்கத்தில் உத்தியோகம் பார்க்கும் நம்மவருக்கும் அவர் ஓர் உரை பகர்ந்தார். உத்தியோகங்களை விட்டு விட்டு வெளியே வரவேண்டும் என்று அவர் கூறவிடினும். "காங்கிரஸ் மகாசபையையே ஆதரித்து நிற்பதாக அரசாங்கத்துக்கு அறிவிக்க வேண்டும்," என்று வற்புறுத்தத் தவறவில்லை.

ஒன்று செயலாற்ற வேண்டும், அன்றேல் செத்து மடிய வேண்டும் என்று காந்தி மகான் கூறியதும் அதற்கான வகை துறைகளை எல்லாம் அவர் வகுத்திருந்தார். இறுதிப் போர் துவக்கு முன்னம் அரசப் பிரதிநிதியைக் கண்டு பேசவே அவர் விரும்பினார். ஆகஸ்ட் எட்டாம் தேதி இரவு முதல் சாமத்தில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் கூட்டம் முடிவுற்றது. தேசத் தலைவர்கள் அனைவரும் உறங்கப் போயினர்.

ஆங்கிலேயர் வெளியேற வேண்டும் என்னும் தீர்மானத்தை அறிந்ததும், அதிகார வர்க்கம் ஆத்திரத்தில் மூழ்கியது. ஆங்கில சமூகத்தாரோ அச்சப் பேய்க்கு ஆளாகிவிட்டனர். செங்கோலுக்கு முன்னே சங்கிதமா என்று அதிகாரிகள் சீறி, இரவோடு இரவாக மகாத்மா காந்தியைச் சிறை செய்தார்கள். ஒன்பதாந் தேதி

பொழுது புலர்ந்ததும், ஏனைய தலைவர்களையும் கைது செய்து விட்டனர்.

பின்பு, தேசமெங்கும் ஆங்காங்குள்ள தலைவர்களையும் அதிகார வர்க்கம் சிறைசெய்து கொண்டு போயிற்று. திடீரென்று தலைவர்களை எல்லாம் சிறை செய்த உடனே, தேசமக்கள் திடுக்கிட்டனர். உலகின் உத்தம புருஷரான காந்தி மகான், மானிடருள் மாணிக்கமான பண்டித நேரு போன்ற தலைவர்களை எங்கே கொண்டு போனார்கள், என்ன செய்யப் போகிறார்கள் என்று மக்களுக்குப் புலப்படவில்லை.

மதிப்புக்கு உகந்த தலைவர்களை வெளி நாட்டினுக்குக் கொண்டுபோய் விட்டனர் என்றும் ஒரு வதந்தி பிறந்தது. அது கேட்டதும், தேசமக்களிலே பலர் படபடப்புக்கும், பதைப்புக்கும் ஆளாகி விட்டனர். பஞ்சக் கொடுமை ஒருபுறம், பணத்தட்டு ஒருபுறம், ஜப்பான் வந்து விடுமோ என்னும் அச்சம் ஒருபுறம், எத்தனைநாள் பொறுப்போம் என்னும் ஏக்கம் ஒருபுறம் இவையெல்லாம் கூடிக் கொண்டன.

ஜன சமூகம் சீறிக் கிளம்பியதும் தேசமெங்கும் புகைவண்டிகள் கவிழ்ந்தன; புகைவண்டிப் பாதைகள் சிதைந்தன; தந்திக் கம்பிகள் அறுந்தன; பாலங்கள் உடைந்தன; கச்சேரிகள் தீக் கிரையாயின. போலீஸ் தலங்கள் தாக்குண்டன, இமயம் முதல் குமரி வரையில் ஜனக் கொதிப்பும் துடிப்பும் கொழுந்து விட்டன. கடல் கொதித்தால் விளாவ நீர் ஏது?

தேசத்திலே சிற்சில இடங்களில் ஆங்கில ஆட்சியின் சின்னங்கள் எல்லாம் அடியோடு மறைந்து போயின. மக்களின் நல்லாட்சியே நிலவியது. அங்கே அதிகாரி

களும் சேவகரும் இருந்த இடம் தெரியவில்லை. அதிகாரிகளை அண்டி வாழ்ந்து வந்தவர்களோ ஆருயிருக்கு அஞ்சி ஒளிந்து கொண்டனர். தேசத் தலைவர்களைச் சிறை செய்து விட்டால், தேசம் தலைசாய்ந்து விடும் என்றே அரசாங்கம் எண்ணியது.

ஆனால் தேச மக்களோ அன்னிய அரசின் மதிப்பைத் தவிடு பொடி செய்து ஆர்ப்பரித்தனர். இதனையே ஆகஸ்டு புரட்சி என்பர். அது கண்டு அதிகாரவர்க்கம் தனது மிருகபலம் அனைத்தையும் கையாளத் தொடங்கியது. அம் மிருக பலத்தின் கோரமோ கூற ஒண்ணாது. துப்பாக்கி வீரரும், இராணுவத்தாரும் கொக்கரித்து எழுந்தனர்; கண்ணில் கண்டவர்களை எல்லாம் சுட்டுத் தள்ளினர். வேட்டையாடினர் என்னலாம்.

சில இடங்களிலே கிராமங்களின் மீது விமானங்கள் பறந்து வெடிகுண்டுகளை வீசி வீடுகளுக்குத் தீ மூட்டின; ஏழை மக்களை வாட்டி வதைத்தன. மெஷின் பீரங்கிகள் கொண்டு இராணுவ வீரர் குண்டு மழை பொழிந்தனர். பொழியுங்கால், மாதர், குழந்தைகள் என்று அவ் வீரர் வேற்றுமை காட்டவில்லை. குண்டு சட்டியிலே குதிரை ஓட்டினான் என்பர். இவ் வசனம் அவ் வீரரிடம் மெய்யாயிற்று.

மக்களில் சிலர் மதிமயங்கிச் செயல் புரிந்தது கண்டு, காங்கிரஸ்காரர் விரைந்து வந்து அமைதி ஊட்ட முயன்றும் அன்னாரையும் போலீசார் தடிகொண்டு தாக்கினர். எட்டிக்குப் போட்டியாக அதிகாரவர்க்கம் இழைத்த அக்கிரமங்களுக்கு ஓர் அளவில்லை. மூன்று நான்கு மாதங்களுக்குள் அதிகாரக் கொடுமையினால் ஆவி துறந்த மக்கள் ஏழாயிரம் பேர் ஆவர். காயமுண்டோரோ

பதினுயிரக் கணக்காம். சிறை செய்யப்பட்டவர்களோ இலட்சத்துக்கு மேல் இருக்கும். பொருள் சேதமோ கோடிக் கணக்காம்.

சட்ட திட்டம் கொண்டு ஆட்சி நடத்துதல் என்பது மலையேறி விட்டது. எங்கும் இராணுவ பலத்தைக் கொண்டு, துப்பாக்கி முனையைக் காட்டி, வெடி குண்டுகளை வீசி, அல்லோலகல்லோலமாக அரசு நடந்து வந்தாலும், வீறிட்டெழுந்த தேச மக்களை அடக்க முடியவில்லை. அவ்விதம் ஒரு மாதம், இரண்டு மாதம் என்றில்லாமல் நாற்பத்து நான்கு மாதகாலம் அதிகாரிகள் கொடுமை இழைத்து வந்தார்கள்.

நாட்டுப் புறங்களிலே சில இடங்களில் மாதரை அதிகாரவர்க்க ஆட்கள் மானபங்கம் செய்தனர். கற்பைக் கைவிட மனமில்லா மங்கையரில் சிலர் ஆவி விடுத்தனர். அவ்விதம் அதிகாரிகள் நடத்தி வந்த கொள்ளை, கொலை, கொடுமை முதலியன வெளியாகா வண்ணம் பத்திரிகைகளுக்கு வாய்ப்பூட்டு இடப்பட்டது. அதுகண்டு, இத் தேசத்திலுள்ள பத்திராசிரியர் ஒன்றுகூடி, இனிமேல் அரசாங்க அறிக்கைகளை வெளியிடுவதில்லை என்று தீர்மானித்தனர். ஒருநாள் பத்திரிகைகளை வெளியிடாமல் நிறுத்தவும் முற்பட்டனர்.

ஜப்பானுடன் சண்டை போடுவதற்கு இந்தியா ஒரு தளமாக இருந்தமையால், அமெரிக்காவின் துருப்புகளும், அமெரிக்க அதிகாரிகளும் இங்கே தங்கி இருந்தனர். அதிகாரவர்க்கத்தின் கொடுமைகள் அமெரிக்காவுக்கு எட்டின. அதன் ஜனாதிபதியான ரூஸ்வெல்ட் என்பாரின் காரியதரிசி வில்லியம் பிலிப்ஸ் என்பார் இங்கே வந்து, உள்ள நிலையை உணர்ந்து ஜனாதிபதிக்கு அறிவிக்க எண்ணினர். அவரையும் அதிகாரிகள் தடுத்து விட்டனர்.

சிந்து மாகாணத்திலே முதல மந்திரியாக இருந்த அல்லா பக்ஷ் என்பார் அதிகார அக்கிரமம் கண்டு சகியாமல் தமக்கு அரசாங்கம் அளித்திருந்த கௌரவ பதக்கத்தை வீசி எறிந்தார். அதிகாரவர்க்கம் அது கண்டு பொறுமல், பதவியை விட்டு விலகும்படி அவருக்கு ஆணையிட்டது. அவர் பதவி மோகம் பிடித்தவரன்று; ஆயினும் அதிகாரிகளின் ஆணைக்கு அஞ்சி முதல் மந்திரி பதவியை விடுவதா? என்றிருந்தார். அதன்மேல் அவரை அப் பதவியினின்று அரசாங்கம் நீக்கியது. பின்னாளில் அவர் கொல்லப்பட்டும் போனார்.

நாற்பத்து நான்கு மாதகாலம் அன்னிய அரசும், பாரத தேசமும் மும்முரமாக மல்லுக்கு நின்றன. அதிகாரிகளின் கொடுமைகளை உணர்ந்தும், அகிம்சையின் உணர்ச்சி வரப்பெற்றும் மக்களிலே பலர் சாந்தம் கொண்டனர். ஆயினும் வேறு பலரோ மறைவில் இருந்து, ஏட்டிக்குப் போட்டியாக அதிகார வர்க்கத்துக்கு அவ்வப்போது இடையூறெல்லாம் விளைத்து வந்தனர். மறைந்து நின்று மாயமான காரியம் புரியும் நபர்களை அதிகாரிகளால் கண்டுபிடிக்க முடியவில்லை; தொல்லையும் அகன்ற பாடில்லை.

காந்தி, நேரு முதலிய பெருந்தலைவர்கள் ஆமதாபாத் நகரின் கோட்டையிலே காவலில் இருக்கின்றனர் என்னும் செய்தி அறிந்த பின்புதான் தேசத்திலே கொந்தளிப்பு ஒரு சிறிது அடங்கியது. சில இடங்களில் அமைதியும் நிலவத் தலைப்பட்டது. சில இடங்களிலோ போட்டி அரசாங்கம் பெருமிதமாக நடைபெற்று வந்தது. அப் போட்டி அரசாங்கத்தைப் புரட்டி எறிய அதிகாரவர்க்கத்தினால் ஆகவில்லை.

இதற்கு இடையில், வங்கத்திலே கொடிய பஞ்சம் ஒன்று தோன்றியது. உண்ண உணவின்றி ஏறக்குறைய நாற்பது இலட்சம் மக்கள் மாண்டும் மடிந்தனர். வாரந்தோறும் இலட்சம் மக்கள் பசிக்கும், பிணிக்கும் ஆளாகி மரித்துவர, அதிகாரிகளோ வாரத்தில் ஆயிரம் பேர்தான் செத்து வந்தனர் என்று கூசாமல் சொன்னார்கள். அப் பஞ்சம் காலவசத்தால் ஏற்பட்டதன்று. அதிகார தாசர் வேண்டுமென்றே மூட்டிய பஞ்சமாம்.

இதனை அரசாங்கம் அறிந்தும், பரிகாரமே தேடவில்லை. செத்து மடியட்டும் என்றே இருந்தனர் எனல் வேண்டும். ஈ, எறும்புபோல் மக்கள் மாண்டுவர, வீதிகளிலே சவங்கள் நிரம்பக்கிடந்தன. அந்நிலையை விரித்துரைப்பதில் யாது பலன்? உணவுப் பொருள் கடைகளிலே இருந்தாலும், விலை கொடுத்து வாங்கிப் புசிக்க மக்களிடம் காசு இல்லை. தேசத்திலிருந்த பண ஆதாய மூலமெல்லாம் யுத்தத்துக்குப் போய்விட்டன. பண வறட்சி சொல்லி முடியாது.

இனி, இத்தேசத்திலே ஆங்காங்கு வைக்கப்பட்டிருந்த துருப்புகள் மனந்தடுமாறி, இந்திய மாதரை இலேசாக எண்ணி நடந்து வந்தன. அது குறித்து மக்கள் குறைகூறியபொழுது, யுத்தத்தில் தலை கொடுக்க வந்திருக்கும் வீரரிடம் நாம் அன்புகாட்ட வேண்டும் என்று ஒரு கவர்னர் கூறியது கேட்டு தேசம் துடித்தது. துடிக்கவே, இந்தியாவைவிட்டு ஆங்கிலேயர் வெளியேறினால் போதாது, ஆசியாவை விட்டே வெளியேற வேண்டும் என்னும் கிளர்ச்சி இங்கே எழுந்தது.

காந்தி மகானும், பண்டித நேருவும் உலகறிந்த புருஷர். அவர்களையும் பிற தலைவர்களையும் பிடித்துக்

காவலில் போட்டிருத்தல் கண்டு, அமெரிக்கர் வருந்தியது ஒரு புறமிருக்க, ஜெர்மனியும் ஜப்பானும் இங்கிலாந்தை இகழ்ந்து எங்கும் பிரசாரம் செய்து வந்தன. ஆதி முதல் இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்தை உலக மக்கள் கூர்ந்து கவனித்து வந்ததனால், அன்னவரும் இங்கிலாந்தை எள்ளி நகையாட நேர்ந்தது.

இப்படி இருக்கையில் காந்திமகான் சிறையிலே நோய்கொண்டார். அது கேட்டு அஞ்சிய அரசாங்கம் 1944-ஆம் ஆண்டு மே மாதம் 6-ந் தேதி அவரை யாதொரு நிபந்தனையுமில்லாமல் விடுதலை செய்தது. ஒரு மாதம் ஆனதும் அவர் சிறிது குணம் அடைந்தார். உடனே சட்டமறுப்புப் போரை அவர் தொடங்கி விடுவாரோ என்று அரசாங்கம் அஞ்சியது. அப்பால் மேனாட்டுப் பத்திரிகையின் பிரதிநிதி ஒருவர் அப்பெரியாரைக்கண்டு பேசி இருந்தார்.

அப்போது, சட்ட மறுப்புப் போர் துவக்க உத்தேசம் இல்லை என்று காந்தி மகான் கூறினார். ஆனாலும் வெள்ளையரே வெளியேறுக என்னும் தீர்மானத்தை வாபஸ் பெற தமக்கு அதிகாரம் இல்லை என்று அறிவித்தார். காங்கிரஸ் மகாசபையின் தீர்மானத்தை மாற்றுவதானால் அச்சபையின் உத்தரவு வேண்டும். உத்தரவின்றி மாற்றுதல் எவர்க்கும் இயலாது.

இனி, இங்கே தற்காலிகமாக தேசீய அரசை அமைக்க அரசாங்கம் ஒப்பினால், தமது சகாக்களுடன் கலந்து பேசி, யுத்தத்தில் உதவி புரியும் வண்ணம் அவர்களைத் தூண்டக்கூடும் என்றும் மகாத்மா சொன்னார். சிறையில் கிடக்கும் சகாக்களைக்காண அரசாங்கத்தின் அனுமதி வேண்டும். இதற்கு அரசப்பிரதிநிதி ஒப்பவில்லை.

இங்கிலாந்தின் மீது காந்தி கொண்டுள்ள கருணைக்கு வேறு அத்தாட்சி வேண்டுமோ?

முஸ்லிம் லீக் என்னும் சபை அன்றளவும் எந்த சுதந்திரப் போராட்டத்திலும் பங்குகொள்ளவில்லை. ஆனாலும் அச்சபையும் காங்கிரஸ் மகாசபையும் ஒத்து வந்தாலல்லாமல் தேசிய அரசை அமைத்தல் ஆகாத காரியம் என்று அதிகார வர்க்கம் அடிக்கடி சாக்குப் போக்குச் சொல்லும். முஸ்லிம் லீக் சபையின் தலைவரான ஜனாப் ஜின்னா என்பார் அதிகாரிகளின் அக்கிரமத்தைக் கண்டு மனம் உடைந்து, "நாம் ஒரு மனப்பட்டு ஆங்கிலேயரை வெளியேற்ற வேண்டும்," என்று கூறினார்.

அதனை மகாத்மா காந்தி மனத்துள்கொண்டு அவருடன் கலந்து பேசச் சென்றார். அவரோ, "முஸ்லிம்கள் தனி, இந்துக்கள் தனி. இருவரும் ஒத்துப்போதல் எங்ஙனம்? முஸ்லீம்களே மிகுந்துள்ள இடங்களைப் பிரித்து எங்களுக்கு கொடுத்துவிட வேண்டும்," என்று சொல்லலானார். எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்திய மக்கள் என்னும் கொள்கை கொண்ட மகாத்மா காந்தி அவரது கூற்றினை ஒப்புக்கொள்ளுதல் எங்ஙனம்? ஈதிங்ஙனமிருக்க,

49. சுபாஷின் முனைப்பு

காங்கிரஸ் மகா சபையின் தலைவர்களுடன் மாறுபட்டதனால், சுபாஷ் சந்திர போஸை அதிகார வர்க்கம் பிடித்துச் சிறையில் போட்டது அல்லவா? விசாரணை நடத்தாமல், குற்றமும் சாட்டாமல் அவரை நெடுநாள் காவலில் போட்டிருத்தல் அடாது என்று மகாஜனங்கள் கண்டித்தார்கள். ஜனத் தலைவர்கள் சீற்றம் மிகுந்தார்கள். வங்க அரசாங்கம் அவற்றை மதிக்கவில்லை.

அதுவரையில் அவர் பதினொருமுறை சிறையில் கிடந்திருக்கிறார். அதனால் அவருக்குக் காசநோய் அதிகரித்தது. அத்துடன் தேசவிடுதலைக்கு ஏதும் செய்ய இயலவில்லையே என்னும் மனநோயும் அவரைச் சூழ்ந்து கொண்டது. யுத்த சமயத்தில் இங்கிலாந்தைத் தாக்கி விடுதலை பெறுவதற்கான வகை துறைகளை அவர் ஆராய்ந்து வந்தார்; ஓர் உபாயத்தையும் மேற்கொள்ள எண்ணினார்.

சிறையில் கிடக்கும்பொழுது அந்த உபாயத்தை எவ்விதம் மேற்கொள்வது. ஆதலின் விசாரணை நடத்துங்கள், நடத்தாவிடின் பட்டினிகிடந்து உயிரைத் துறப்பேன் என்று வங்காள கவர்னருக்கு அவர் இறுதிக் கடிதம் ஒன்று விடுத்தார். அவர் வங்கத்தின் திலகம். இந்திய இளைஞரின் பூஷணம். அவரது உயிருக்கு அவதி நேர்ந்தால், வங்க இளைஞர் வீறிட்டு எழுவர்; பயங்கரச் செயல்களும் பெருகும்.

ஆகையினால் அவரை வங்காள அரசாங்கம் விடுதலை செய்து கல்கத்தாவில் அவரது வீட்டிலேயே காவலில் வைத்தது. சின்னாள் அவர் தமது மாளிகையில் வதிந்தார். தேச விடுதலைத் துடிப்பு விஞ்சிவிடவே 1941-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ஆந் தேதி அவர் தமது வீட்டைவிட்டு மாயமாக மறைந்து விட்டார் என்னும் செய்தி வெளிப்பட்டது. ஆயினும் அத்தேதிக்கு முன்னதாகவே கூண்டைவிட்டு அக்கிளி பறந்து போயிற்று.

மறைந்த சமயத்தில் தாடியும், மீசையும் அவருக்கு வளர்ந்திருந்தன. சியாவுதீன் என்னும் நாமம் தாங்கி மாறு வேடத்தில் ஒரு பட்டாணியனைப்போல் அவர் புறப்பட்டார். இந்தியாவை அடுத்து வடமேற்கேயுள்ள ஆப்கானிஸ்தானம் என்னும் நாட்டின் தலைநகரில், நாற்பத்

தைந்துநாள் தங்கி இருந்தார். லாலா உத்தம சந்தர் என்ப வரே அவருக்கு அங்கே உதவியெல்லாம் செய்தவர். அது பற்றி உத்தம சந்தர் பின்னாளில் சிறையில் கிடக்க நேர்ந்தது.

மார்ச் மாத மத்தியில் சுபாஷ் போஸ் அங்குள்ள ஜெர்மன் அதிகாரிகளின் துணைகொண்டு, ருஷ்யாவுக்குப் போனார்; மாஸ்கோ நகரில் சிறிது காலம் தங்கினார். அங் கிருந்து அவர் ஜெர்மனியின் தலைநகரான பெர்லின் சேர்ந் தார். அங்கே இரண்டாண்டு காலம் அவர் தங்கி இருக்க நேர்ந்தது. அப்போது ஜெர்மனியின் தலைவரான ஹிட்லரை அவர் கண்டு பேசினார்; ஹிட்லரும் அன்புரை கூறி வர வேற்றார்.

ஐரோப்பிய யுத்த அரங்கத்திலே ஏராளமான இந்திய சிப்பாய்கள் ஜெர்மனியிடம் சிறைபட்டுக் கிடந்தனர். அவர்களுக்கு சுபாஷ் பாபு விடுதலை தேடித்தந்து, அவர் களைக் கொண்டு அங்கே "இந்திய தேசிய சேனை" என் பதை வகுத்தார். ஜெர்மனியில் படித்து நின்ற இந்திய மாணவரும் அத்தேசியச் சேனையில்சேர்ந்து சேவித்தனர். ஜெர்மனியின் துணைகொண்டு இங்கிலாந்தைத்தாக்க அவர் வகை தேடி நின்றார்.

இனி, இந்தியாவின் விடுதலைப் போரைக் குறித்து ஹிட்லருக்கும், சுபாஷுக்கும் இடையே பேச்சு நிகழ்ந் தது. தோழர் என்ற முறையில் தம்மாலான துணை யெல்லாம் புரிவதாக ஹிட்லர் வாக்களித்தார். அப்பால் ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று தேசங்க ளுடன் சுபாஷ் பாபு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டார். இந்தியாவிலிருந்து அன்னிய ஆட்சியை அகற்றுவதில் எல்லா உதவிகளையும் புரிவதாக அம் மூன்று தேசங்களும் வாக்களித்தன.

இந்தியாவின் சார்பாக அந்த ஒப்பந்தத்தில் சுபாஷ் பாபுவைச் சாத்து நாட்டினார். இந்தியாவை விடுவிக்கக் கிளம்பி வரும் சேனைகளிலே, ஜெர்மன் வீரரும் பிறரும் சேர்ந்த சேனையொன்று இந்தியாவின் மேற்குப் பக்கத்திலிருந்து டில்லியை நோக்கிப்பாயும்; மற்றொன்றோ இந்தியாவின் வடகீழ் எல்லை வழியே புகுந்து டில்லி மாநகரை நோக்கும். இத்தகைய வாசகம் ஒன்று அந்த ஒப்பந்தத்தில் காணப்பட்டது.

சுபாஷுக்கு அங்கே விருந்துகள் பல நடந்தன. பெருந் தளபதிகள் அவரைப் பற்பல போர் முனைகளுக்கும் இட்டுச் சென்று, எல்லாவற்றையும் காட்டினர்; போர்முறை, அதன் போக்கு, படை நிலை முதலியவற்றையும் விளக்கி உரைத்தனர். பண்பட்ட தளபதியே போலச் சுபாஷும் அவ்விவரங்களை உணர்ந்து, நுணுக்கமான கேள்விகள் போட்டார். அப்பெருந் தளபதிகள் அவைகளைக்கேட்டு வியந்து திகைக்க நேர்ந்தது.

அவர் ஜெர்மனியிலுள்ள இந்தியரனைவரையும், பிறரையும் ஒன்று கூட்டுவித்து, இந்திய சுதந்திரச் சங்கம் என்ற ஒன்றை நிறுவினார். அவர் ஏற்கனவே திரட்டியிருந்த இந்திய தேசியச் சேனையில் ஏறக்குறைய நாலாயிரம் பேர் இருந்தனர். சுதந்திர இந்தியாவின் சார்பாக அப்படைஞர் பிரான்ஸ் தேசத்திலுள்ள போர் முனைகளில் சமர் செய்தனர். அவர்களின் போர்த் திறங்கண்டு, ஜெர்மன் தலைவர்கள் தகவுரை கூறியது ஒருபுறமிருக்க, ஆங்கிலேயரும் பிரெஞ்சுக்காரருமே, ஈதென்ன இந்திய மாயப் படை என்று மறுகினர்.

பெர்லின் நகரிலே இருந்த காலையில் சுபாஷ்பாபு உலக நிலையையும், போரின் போக்கையும் கூர்ந்து கவ

னித்து வந்தார்; அடிக்கடி இத்தாலிக்கும் சென்றார். அங்கும் அவருக்குச் சிறப்பெல்லாம் கிட்டின. 'அவரைத் தமது தேசத்தின் விருந்தினராகக் கொள்ளும் பாக்கியம் ஜெர்மனிக்கன்றோ கிடைத்தது! நமக்குக் கிடைக்க வில்லையே!' என்று இத்தாலியப் பிரமுகரில் பலரும் ஏங்கி வருந்தினர்.

ஜெர்மனியிலும் சரி, இத்தாலியிலும் சரி, சுபாஷின் நடையும் உடையும், நேர்மையும் உயர்வும் இந்தியாவின் புகழை மேலும் பெருக்கின. அவ்விரு தேச அதிகாரி களும் அவருடன் பழகும் காலையில், இந்தியாவின் ஒப்பற்ற தலைவருடன்—வருங்கால சுதந்திர இந்தியாவின் தனித் தலைவருடன்—பழகுவதாகவே கருதி, மரியாதையுடன் நடந்து வந்தனர். இத்தாலிய மக்களும் அவரைக் காணும் போது ஆனந்த ஆரவாரம் செய்தனர்.

இதற்கு இடையில், கிழக்கு ஆசியாவிலே சிங்கப்பூர், மலாயா, பர்மா இந்நாடுகளை ஒன்றன்பின் ஒன்றாக ஆங் கிலச் சேனை கைவிட்டு பின் வாங்கி ஓட நேர்ந்தது. அப் போது இந்தியச் சிப்பாய்களை ஆங்கில தளகர்த்தர் அலட் சியம் செய்து, பிரிட்டிஷ் வீரரின் நலத்தையே கவனித் தனர். ஏறக்குறைய 75 ஆயிரம் இந்தியச் சிப்பாய்கள் ஜப்பானிடம் சிக்கிக்கொண்டனர்.

அல்லாமலும், அக் கீழ்நாடுகளுக்கு இந்தியாவி லிருந்து சென்று பலவாறான துறைகளில் காலங் கழித்து வந்த இந்தியரின் தொகை 30 இலட்சம் ஆகும். அந்த முப்பது இலட்சம் பேருக்கும் அங்கே ஆதரவு அளிப்பார் யாரும் இல்லாது போயினர். அவர்களைக் காத்தல் வேண்டும். அவர்களது சொத்து சுதந்திரங்களையும் பரா மரித்தல் அவசியம். சிறையான சிப்பாய்களையும் கவனிக்க வேண்டும்.

அமெரிக்கா, கானடா முதலிய இடங்களில் நம்மவரைத் திரட்டி அன்னாரிடம் சுதந்திரத் தீயை மூட்டியபின் ராஷ் விகாரி கோஷ் என்பவர் நெடுநாளாக ஜப்பானில் தங்கி, அங்கே இந்தியர் சுதந்திர சங்கம் என்பது கண்டு, பலவாமுன ஊழியம் புரிந்து வந்தார். கீழ்நாடுகளின் நிலையையும், அங்குள்ள நம்மவரின் கதியையும் பார்த்த உடனே அக்கோஷுக்கு அக்கறை மிகுந்தது.

1942-ஆம் ஆண்டின் மத்தியிலே அம்முப்பது இலட்சம் இந்திய மக்களின் பிரதிநிதிகளை கோஷ் வரவழைத்தார். சுமார் 130 பிரதிநிதிகள் வந்து சேர்ந்தனர். தாய்லாந்து எனும் நாட்டின் தலைநகரான பாங்காக் என்னும் இடத்தில் எல்லோரும் கூடினர். அக் கூட்டத்தினுக்கு அவரே தலைமை தாங்கினர். அப்போது இந்தியர் சுதந்திர சங்கம் என்பது நிறுவப் பெற்றது.

அச்சங்கத்தின் கிளைகள் ஆங்குள்ள பர்மா, தாய்லாந்து, சிங்கப்பூர், ஜாவா, ஜப்பான் முதலிய பற்பல இடங்களிலும் தோன்றின. நமது இந்தியா தேசம் சுதந்திரம் எய்துவதற்கான உதவியனைத்தையும் செய்தாக வேண்டும் என்பதே அச்சங்கத்தின் நோக்கமாம். ஆவன அனைத்தும் செய்ய அனைவரும் உறுதி பூண்டனர்.

ஆரம்பத்திலே அச்சங்கத்தின் அங்கத்தினர் ஏழரை இலட்சம் பேர் ஆவர். வரவர அங்கத்தினரின் தொகை பெருத்து வந்தது. கீழ் நாடுகளிலுள்ள இந்திய மக்களையும், இந்திய வீரரையும் நட்டாற்றில் கை விடுவதுபோல், விட்டு ஓடிய இங்கிலாந்தை இனி ஒரு கணமும் நம்பியிராமல், இந்த யுத்த காலத்தில் அதனைத் தாக்கி, இந்தியாவின் சுதந்திர சித்திக்கு வழி தேடவேண்டும் என்று அச்சங்கம் தீர்மானம் செய்தது.

ஜப்பானியரிடம் சிறைபட்டுக் கிடந்த இந்திய வீரரை யும், பிற இந்தியரையும் அச் சங்கத்தார் வேண்டிக் கொண்டனர். கொள்ளவே, பலர் முன்வந்து போர்ச் சேவகம் புரிய ஒப்புக் கொண்டனர். அவ்விதம் திரண்ட சேனை "இந்திய தேசீயர் சேனை" என்று பெயர் கொண் டது. தங்களிடம் சிறை கிடந்த இந்திய வீரரையும் அச் சேனையில் சேருமாறு ஜப்பானிய அதிகாரிகள் வேண்டித் தூண்டினர்.

முடிவிலே அச் சேனையிலே ஓர் இலட்சம் பேர் சேர்ந்தனர். அச்சேனை இந்தியாவின் மீது பாய்ந்து போர் புரிய ஆயுதங்கள் வேண்டும். இதற்காக அம் மக்கள் அனை வரும் காசும் பணமும், பொருளும் பிறவுமாக இருபது கோடி ரூபாய் கொடுத்து உதவினர். அந்நிதி கொண்டு, ஆயுதங்கள் வாங்கி, அச்சேனை வீரருக்குப் பயிற்சி ஊட்டப்பெற்று வந்தது.

இதற்கு இடையில், தற்காலிக "இந்திய சுதந்திர அரசாங்கம்" ஒன்றும் அமைக்கப் பெற்றது. திறமையும் தகுதியும் வாய்ந்த பலர் அந்த அரசிலே அமைச்சராய் அமர்ந்தனர். இந்தியாவிலுள்ள காங்கிரஸ் மகா சபைக்குப் பக்கபலமாகவே, அந்த அரசும் சேனையும் வேலை செய்ய வேண்டும் என்பதே திட்டமாம். ஜப்பானுக்கோ, ஜெர்மனிக்கோ கட்டுப்பட்டு நடக்க அந்த அரசும், சேனை யும் ஒப்பவில்லை.

ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி ஆகிய தேசங்களெல் லாம் அந்த அரசையும், சேனையையும் அங்கீகரித்தன; இயன்ற உதவி புரியவும் வாக்களித்தன, அவ்வாறே உத வியும் செய்துவந்தன; அந்நிலையில் அந்த அரசு சேனை ஆகிய இரண்டின் மீதும் ஆதிக்கம் வகிக்க ஜப்பானிய அதிகாரிகள் விரும்பி முயன்றனர். நெடுங்காலம் ஜப்பானி

வருடன் பழகிவந்த பாசத்தினுல், அதற்கு ராஷ்விகாரி கோஷ் இசைந்தார்.

அந்த அரசும் சேனையும் அவரது நிலைகண்டு பிணங்கின. விலங்கை விட்டுத் தொழுவில் மாட்டிக்கொள்ள அவ்விரண்டும் சம்மதிக்கவில்லை. அதுபற்றி அவருக்கும் அரசின் பிற உறுப்பினருக்கும் கருத்துவேற்றுமை வலுத்தது. அதன்மேல் சுபாஷ் சந்திர போஸை ஜெர்மனியிலிருந்து வரவழைக்க ஆயத்தங்கள் நடந்தன. சுபாஷுக்கும் தந்தி போயிற்று.

இனி, முத்தரின் மனம் மோனத்திலேயே குவிந்து கிடக்கும். சுபாஷின் மனமோ, இந்தியரின் விடுதலையையே நாடிக் கிடந்தது பெர்லின் நகரில் இருந்தாலும், கிழக்காசியாவில் நடப்பன அனைத்தையும் அவர் கூர்ந்தறிந்து வந்தார். ராஷ்விகாரி போஸின் தலைமையில் கிளைத்த சுதந்திர சங்கமும், சேனையும் தத்தளிக்கும் நிலைகண்டு அவர் மனந்தாளவில்லை. அதற்கேற்ப ஜப்பானிலிருந்து வந்த அழைப்புத் தந்தியைக் கண்டதும், உடனே அவர் புறப்பட்டுவிட்டார்.

அவருடன் அவர் அந்தரங்க சீடனுகிய கர்னல் ஹஸன், ஒரு ஜப்பானிய அதிகாரி, ஒரு ஜெர்மன் அதிகாரி இவர்கள் புறப்பட்டனர். எல்லாருமாக ஒரு ஜெர்மன் சப்மரீனில் அமர்ந்து பயணமாயினர். ஜப்பானுக்கு வரும் வழியில் உள்ள கடல்களில் எல்லாம் ஆங்கில, அமெரிக்க யுத்தக் கப்பல்கள் எங்கும் நடமாடிக் கொண்டிருந்தன. புலியின் வாயில் புகுந்து புறப்படுவதுபோல், இருந்தது அவரது பிரயாணம்.

1943-ஆம் ஆண்டு ஜூன் மாதம் அவர் டோக்கியோ சேர்ந்தார். எல்லாரும் அவ்வீர கேசரியை மனமார வர

வேற்றனர். கிழக்காசியாவிலுள்ள இந்தியரின் நிலைமை எடுத்துரைக்கச் சில பிரதிநிதிகளும் டோக்கியோவுக்கு வந்திருந்தனர். அங்கே பத்திரிகைகளுக்கு அவர் ஓர் அறிக்கை விடுத்தார். அதன் கருத்து யாதெனில்:—

"இந்தியர் சுதந்திரம் எய்த வேண்டிய காலம் இதுவே. இதனைக் கைவிடின் இன்னும் ஒரு நூறு ஆண்டுகள் வரையில் நற்காலம் வாய்ப்பது அரிது. வறுமைப் போரின் எல்லையையும் காணுதல் வேண்டும். நமது உதிரத்தை வாரி இறைத்தாலல்லாமல், சுதந்திரம் கூடுமோ? வாளுருவி நிற்கும் பகைவனை வாள்கொண்டு தாக்குதல் வேண்டும். வெறுஞ் சட்டமறுப்பு இயக்கத்தினுல் இயலாது" என்பதேயாம்.

அவ்விதம் அறிக்கை செய்தபின், டோக்கியோ நகரில் ரேடியோவிலிருந்து உலகறிய அவர் பேசத் தொடங்கினர். சிங்கப்பூர் வீழ்ச்சி, பர்மா பறிபோனது முதலியவற்றை அவர் குறிப்பிட்டார். இந்தியாவிலிருந்தே ஆங்கில ஏகாதிபத்யம் வளர்ந்ததனுல், அந்த இந்தியாவைக் கைவிட அவர்கள் ஒருநாளும் விரும்பார்கள். இந்தியாவிலிருந்து அவர்கள் மூட்டை முடிச்சுடன் வெளியேறினுல் தான், ஆசியா மக்கள் இனிது வாழ முடியும்," என்று அவர் சுட்டிச் சொன்னர்.

அப்பால் அவர் ஜூலை மாதம் 2-ஆந் தேதி சிங்கப்பூர் சேர்ந்தார். சுதந்திரச் சூரியனைக் கண்டதுபோல், சிங்கப்பூர் வாசிகள் அனைவரும் ஆண், பெண், குழந்தை அடங்கலாக அவரை வரவேற்கத் தயாராயினர். அன்று அந் நகரில் வேறு அலுவல் ஏதும் நடைபெறவில்லை. மலாய் மக்கள், சீனர், ஜப்பானியர் முதலியோரும் மகிழ்ந்து வந்தனர்.

பிரமாண்டமான அக் கூட்டத்தில் அவர் கர்ஜனை செய்தது இது:—

"நாம் எப்போதும் விழிப்புடன் இருந்தால், ஆங்கில ஆதிக்க ஆசைக்காரர், அத்தகைய ஆசை கொண்ட ஜப்பானியர், நம்மிடையே இருக்கும் துரோகியர் ஆகிய பலரையும் நாம் புறங்காண முடியும். எல்லாரும் தியாகிகளாகத் திகழவேண்டும்; நீங்கள் செய்ய வேண்டிய வேலை எவ்வளவோ உளது. அதனை உணர்த்தும் பொறுப்பு எனது"

அவ்வார்த்தைகளைக் கேட்டதும், பலரும் மகிழ்ந்தனர். மறு நாள், முதல் இந்திய தேசியச் சேனையின் தலைவர்களைச் சுபாஷ் சந்தித்தார். அதற்கு மறுதினம் மற்றொரு பொதுக்கூட்டத்தில் அவர் சொல்மாரி பொழிந்தார். சுதந்திரச் சேனுவீரர்களை நோக்கி:—

"சுதந்திர சேனுவீரர்களே! பாரத மாதாவின் சுதந்திரத்துக்குப் போராடும் சேனை திரண்டுவிட்டது. எனது வாழ்க்கையில் இதுவே நன்னாள். இச்சேனை நமது மானத்தைக் காக்கும்; அனைவருக்கும் மகிழ்வை ஊட்டும். போர் வீரர்காள்! நமது தேசியக் கொடி டில்லிமா நகரிலே பறக்கவேண்டும். டில்லி சேரும் வரைக்கும் நம் கொதிப்புத் தீராது. நாம் இரத்தம் சிந்துதலும் தவறாது. இப்போரின் முடிவில், நம்மில் எத்தனைபேர் உயிருடன் இருப்பர் என்பதை, என்னாலும் வேறு எவராலும் கூற இயலாது. இறுதியிலே நமக்குத்தான் வெற்றி என்பது உறுதி. ஆங்கில ஏகாதிபத்தியத்துக்கு டில்லியே சவக்குழியாகும். அங்கே வெற்றிக் கொடி நாட்டும்வரையில் மானமுள்ள எந்த இந்தியனது கடமையும் முற்றுப் பெறாது," என்று இடிமுழக்கம் செய்தார்.

"டில்லி செல்வோம், கொடி போடுவோம்," என்னும் உரைகளும், "படைச் செலவுக்கு வேண்டிய அனைத்தை யும் தருவோம்," என்னும் வாக்குறுதிகளும், சுபாஷ் தனது உரையை முடித்ததும், ஏகோபித்த குரலில் எழுப்பி வானை முட்டின. "சுபாஷ் பாபு வந்தார்; மானம் காத்தார்; தலை கொடுத்தார்; தலையும் காத்தார்," என்று ஆனந்தத்துடன் பேசிக்கொண்டே மக்களனை-வரும் தம்தம் மனை எய்தினர்.

ஜூலை மாதம் 6-ந் தேதி இரண்டாவது தேசியச் சேனையின் அணிவகுப்பு நடைபெற்றது. அன்று நூறு யிரத்துக்கு மேற்பட்ட மக்கள் குழுமி இருந்தனர். ஜப்பா னது பிரதம மந்திரி ஜெனரல் டோஜோ என்பவர் மனமு வந்து வந்து, அந்த அணிவகுப்பைப் பார்வையிட்டுப் பரவசம் அடைந்தார். டோஜோவும், சுபாஷும் சரிசம மான புருஷரே போலத் தோன்றினர்.

50. தேசீயச் சேனை

பெருஞ்சேனை தேவை யென்று சுபாஷ் சொன்ன உடனே, இலட்சக்கணக்கில் மக்கள் வந்துகுவிந்தனர். அவ்விதம் வந்து குவிந்த மக்களின் தொகை ஏழரை இலட்சம் ஆகும். சுபாஷ் பாபு பெரு முயற்சிசெய்து, ஆயுதங்களைச் சேகரித்து, அச்சேனையில் வந்து சேர்ந்த அனைவருக்கும் பயிற்சி அளிக்க வகை செய்தார்; சில மாதங்களுக்குள்ளாக இரண்டு இலட்சம் வீரரைத் திரட்டி அணிவகுப்புச் செய்தார்.

சிங்கப்பூர், மலாய் நாடு, தாய்லாந்து, பர்மா இந்த நாடுகளில் தேசீயச் சேனையின் பட்டாளங்களை அவர் நிறுத்தினார். ஆங்காங்குள்ள இந்திய மக்களின் சொத்துச்

சுதந்திரங்களைக் காக்கவும், ஜப்பானியத் துருப்புகளால் கொடுமை நேராதவாறு தடுக்கவும் ஏற்பாடுகள் பலவும் செய்தார். ஆயுதங்கள் கிடைக்கக் கிடைக்க, அத்தேசியச் சேனையின் தொகையும் பெருகிக்கொண்டே போயிற்று.

தேசியச்சேனை திரண்டதும், அதன் பலவாறான படை வகுப்புக்களுக்கும் பெயர் கொடுக்க நேர்ந்தது. அப்போது, காந்தி படை, ஆஸாத் படை, நேரு படை என்றெல்லாம் அவற்றிற்கு அவர் பெயர் கொடுத்தார். அப்படைகளின்மீது ஜப்பானியரின் தலையீடு என்னும் காற்று சிறிதும் வீசாமலும் அவர் பார்த்துக் கொண்டார். அச்சேனைக்கு நம் சுபாஷ்பாபுவே சேனாதிபதியானார். பயிற்சி கொடுப்பது முதல் போர் நடத்துவது வரையில் உள்ள அனைத்தையும் அவரே கவனித்து வந்தார். சேனா வீரரனைவரும் அவரைத் தெய்வமெனக் கொண்டாடிக் களித்தனர்.

அச்சேனையில் ஜான்சிராணிப்படை என்னும் ஒரு பிரிவு இருந்தது. அப்படையினர் அனைவரும் இள மாதரே யாவர். அதில் ஆயிரத்து ஐந்நூறுக்கு மேற்பட்ட மாதர் இருந்தனர். இனி, பாலர் படை என்னும் ஒரு பிரிவும் அச்சேனையில் இருந்தது. பன்னிரண்டு வயதுக்கு மேல், பதினெட்டு வயதுக்குட்பட்ட வாலிபர் அப்படையில் அதிகமாய் இருந்தனர். இவ்விதம் எல்லாம் தேசியச் சேனையில் பல பிரிவுகளை ஏற்படுத்தி, அதற்கான சட்டதிட்டங்களையும், ஒழுக்க முறைகளையும் சுபாஷ் வகுத்தார்.

போர் முனையிலே தேசியச் சேனை ஒன்றும், பிரிட்டிஷ் இந்தியப் படை வகுப்பு ஒன்றும் நேருக்கு நேரே சந்தித்த சமயம், "எங்கள் பக்கம் வந்து சேர்ந்து, தாய் நாட்டின் விடுதலைக்குப் பாடுபடுங்கள்," என்னும் பெரிய

விளம்பர அட்டையொன்றை தேசியப் படை வகுப்பு உயர்த்திக் காட்டியது. அதுகண்டதும், "நீங்கள் ஜப்பானியரின் கையாட்கள்; உணவு கிட்டாமல் வருந்து கிறீர்கள். எங்கள் பக்கம் வந்து சேர்ந்தால், வயிறு நிரம்ப உணவு கிட்டும்," என்று பிரிட்டிஷ் இந்தியப் படைஞர் பதிலளித்தனர்.

"நாங்கள் ஜப்பானியரின் கையாட்கள் அல்ல. அடிமைகளும் ஆகோம்; சுபாஷ் வீரரின் படை வீரர். கோதுமை மாவையும் நெய்யையும் கலந்து புசித்து, உங்களைப்போல அடிமைகளாய் இருப்பதினும், சுதந்திர வீரராய் நின்று, வயிறு காய்ந்து, புல்லைப் புசித்தலும் புனிதம் உடையதாம்," என்று தேசியப் படைஞர், பகைப் படையில்சேர்ந்து, அடிமைகளாய் வாழும் இந்திய சோதரருக்குப் பதில் அளித்தனர்.

தேசியச் சேனையிடம் விமானங்கள் இல்லை; மோட்டார் வாகனங்கள் இல்லை. தளகர்த்தரிடமும் மோட்டார் கார் கிடையாது. படைஞரோ, எதையும் தமது தோளி லேயே சுமந்து செல்ல நேர்ந்தது. எதிரிகளிடமோ, அவ்வகையான வசதிக்கு ஒரு குறைவும் இல்லை. இந் நிலையிலும் தேசியப் படைஞர் சளைக்கவில்லை. போர் முனையிலே வீராவேசத்துடன் சண்டைசெய்து,பகைவரிட மிருந்து புகழுரையே பெற்றனர்.

தேசியப் படைஞர் பலவாறான சாதி, மத, வகுப்பு, வர்ணத்தைச் சேர்ந்தவர்கள். ஆயினும், "எல்லாரும் ஓர் இனம். எல்லாரும் ஓர் குலம். எல்லாரும் ஓர் நிறை. எல்லாரும் இந்திய மக்கள். எல்லாரும் இனியசோதரர்," என்னும் உயரிய எண்ணமும், ஒழுக்கமுமே அவர்களிடம் மேம்பட்டு விளங்கின. பொதுவான ஒரு சமயலறையில்

தயாரான உணவையே எல்லாரும் பங்கிட்டுக்கொண்டு இனிது புசித்தனர்.

அப்படையினர் யுத்த சன்னத்தராய் வடகீழ் எல்லையின் வழியே இந்திய மண்ணில் காலடிவைத்ததும், "அன்னை பாரதியே! நாங்கள் உன் அருமைக் குழந்தைகள். சுதந்திர மக்கள் ஆகும் வரையில் சோம்பிக் கிடவோம். உனது அடிமை விலங்கை உடைத்தெறியவே வந்துள்ளோம்," என்று கூறி எல்லாருமாக அப் பூமியில் வீழ்ந்து அங்கமெல்லாம் மண்பட வணங்கினர்; பின்பே சண்டையில் புகுந்தனர்.

அப்படையினர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் பொழுதும், அணி வகுப்புக்கு ஆயத்தமாகும் பொழுதும் ஆயுதங்களைக் கைதனில் ஏந்தும்பொழுதும், சேனைபதியைக் காணும்பொழுதும், 'ஜெய்ஹிந்த்' என்னும் வீர மொழியை விளம்பி மகிழ்வர். காங்கிரசின் கொடியே அவர்களின் கொடியாயிற்று. தாகூரின் தேசீய கீதமே அவர்களின் வீர கீதமாயிற்று.

இனி, மாதர் என்போர் சத்தியின் வடிவம். 'சத்தியின்றேல் சிவம் இல்லை," என்பர் பெரியோர். மாதரின் கூட்டுறவு இன்றி ஆடவர் எதனையும் சாதிக்க இயலாது. ஆதிமுதல் பற்பல துறைகளிலும் மாதர் திறம்பட சேவை செய்துள்ளனர்; அரசாண்டுள்ளனர்; அரும் போரும் புரிந்துள்ளனர். இவற்றையெல்லாம் நினைவூட்டவே சிங்கப்பூரில் தோன்றிய இந்திய சுதந்திரச் சங்கத்தில் மாதர் கிளை ஒன்று ஏற்பட்டது. அக்கிளையின் சார்பிலே ஒரு பொதுக் கூட்டம் நடந்தது.

சிங்கப்பூரிலே கூடிய அப்பொதுக் கூட்டத்தில் தான் ஜான்சி ராணிப் படை உதித்தது. மாதரில் பலரும் மிகுந்த

உற்சாகத்துடன் அப்படையில் சேர்ந்தனர். சேலைகட்டும் மாதரும் சீறி எழுவர், வளையல் பூணும் மாதரும் வய வாள் தாங்கிப் போர் புரிவர் என்பதை உணர்த்துவதே அம்மாதரின் நோக்கமாம். ஏழை, பணக்காரர், இளமாதர், கிழவியர், மணமானோர். மணமாகாதோர் ஆகிய பலரும் வந்து குவியவே, அவர்களுக்குப் பயிற்சியளிக்க ஏற்பாடாயிற்று.

மூன்று மாதகாலம் யுத்தப் பயிற்சி அளிக்கப்பட்டது. மிடுக்கான பல விதிகளுக்கு உட்பட்டு அவர்கள் நடந்து வந்தனர். கைத்துப்பாக்கி, சுழல் துப்பாக்கி, இயந்திரத் துப்பாக்கி, குத்தீட்டி, எறி குண்டு முதலிய ஆயுதங்களை அவர்கள் திறம்படக் கையாண்டனர். முன்னேறித் தாக்குதல், தற்காப்பில் நிற்றல், வேவு பார்த்து வருதல், காவல் வேலை செய்தல், காடுகளில் மறைந்து சண்டை செய்தல் முதலியவற்றிலும் அப்படையினர் தேர்ச்சிபெற்று விளங்கினர்.

சென்னை நகர வாசியான லட்சுமி சுவாமிநாதன் என்னும் மாது அப்பட்டாளத்தின் தலைவியானாள். அவர்களில் தாதி வேலைக்கும், மருத்துவ வேலைக்குமாக ஐந்நூறு பேர் போக, பாக்கி ஆயிரவர் அசல் வீரமாதராயினர். ஆரம்பத்திலே அவர்களைப் போர் முனைக்கு அனுப்புவதற்கு சுபாஷ் எண்ணவில்லை. அதுபற்றி அவர்களுக்கு ஏமாற்றம் உண்டாயிற்று. உண்டாகவே, பிரதம சேனாதிபதிக்கு அவர்கள் ஒரு கடிதம் அனுப்பினர். அதன் சாரம்:—

“எங்கள் ஜான்சி ராணிப் படையைத் திரட்டுகையில், போர் முனை சென்று சேவகம்புரிய எங்களுக்கு வசதி கிட்டும் என்று உறுதி கூறினீர்கள். எங்களது உயிரையும் சுதந்திரத் தீயில் ஆகுதி செய்ய ஒப்பியே நாங்கள் இப்

படையில் புகுந்தோம். எனவே, எங்களை யுத்த முனைக்கு அனுப்பாதது ஏன்? எங்களது மன உறுதியில் உங்களுக்கு ஐயம் பிறக்கக் காரணம் இல்லையே! எங்கள் மன வலிக்கு உதாரணமாக, எங்களது உடம்பிலுள்ள உதிரத்தையே மையாகக் கொண்டு இம்மனுவை எழுதியுள்ளோம்.''

அக்கடிதம் கண்டதும், சுபாஷ்பாபு திடுக்கிட்டார். "விரைவில் போர் முனையில் பாய ஆணைவரும்,'' என்று பதில் விடுத்தார். அவ்வாறே அவர்கள் போர் முனைக்கு அனுப்பப் பெற்றனர். போர் முனையின் நடுவே ஆகாய விமானத்திலிருந்து வீரரைக் கீழிறக்கி, எதிரிகளைத் திடீரென்று தாக்குதல் யுத்த தந்திரத்தில் ஒன்றாம். தேசியப் படையினர் இருந்த இடத்தைத் தாக்கும் பொருட்டு, ஆகாய விமானங்களிலிருந்து பிரிட்டிஷார் பல போர் வீரர்களை இறக்கினர். அவ்விதம் இறங்கிய வீரர் அனைவரிடமும் தேவையான ஆயுதங்கள் பலவும் இருந்தன. அவர்களைச் சூழ்ந்துகொண்டு அனைவரையும் அழித்துப் போட்டனர் ஜான்சி ராணி படையினர்.

பர்மா தேசத்திலுள்ள மோல்மீன் என்னும் நகருக்கு அருகே பிரிட்டிஷ் வீரர் பிரமாதமாக முன்னேறி வந்தனர். ஆங்கிருந்த தேசியப் படைஞரைத் தாக்கி அழிப்பதே பிரிட்டிஷ் வீரரின் நோக்கமாம். அப்போது முன்னணியிலே ஜான்சி ராணிப் படையினர் இருந்தனர்; பகைவரைக் கண்டதும் வெகுண்டெழுந்து போர் புரிந்தனர். முனைந்து முனைந்து முயன்றும் பிரிட்டிஷ் வீரரால் முன்னேற முடியவில்லை.

பதினாறு மணி நேரம் பிரிட்டிஷார் போரிட்டு மறிவுண்டு கிடந்தனர். முடிவிலே அவ்வீர மாதர் பின் வாங்க நேர்ந்தது. பிரிட்டிஷார் பெரு மிதத் துணைவலி பெற்

றதே அதற்குக் காரணமாம். அம்மாதரின் வீரங் கண்டு, பிரிட்டிஷ் வீரர் மெச்சிப் பேசினர். இவ்விதம் ஜான்சி ராணிப் படையினர், போர் முகத்தே காட்டிய வீரச் செயல்கள் எத்தனையோ உண்டு.

இனி, பெருவாரியான படையுடன் இலங்கைத் தீவிலோ, தமிழகத்திலோ இறங்கி, அருஞ்சமர் செய்து, இலகுவில் இந்தியாவை வசம் செய்யவேண்டும் என்று ஜப்பானியர் துடிப்புடன் இருந்தனர். அதற்கான படைகளும், சண்டைக் கப்பல்களும் திரண்டன. பகட்டிலும், பயத்திலும் காரியத்தைச் சாதிக்கப் பார்த்தல் போர் முறையின் உபாயங்களில் ஒன்றும். அவ்வாறே ஜப்பானியரின் உட்கருத்தை ரேடியோவின் மூலம் மறைமுகமாக நமது சுபாஷ் பாபு அறிவித்து, ஆங்கிலேயருக்குத் திகில் ஊட்டினர்.

ஆங்கிலேயரும் அதனை உணர்ந்து பரம கவலையும், பரபரப்பும் எய்தினர். இச்சந்தர்பத்திலேதான், இந்தியாவின் கிழக்குக் கரையிலுள்ள துறைமுகங்கள் பலவும்—சென்னை நகரம் உட்பட—காலியாயின. இங்கே மகாத்மா காந்தியும், "வெள்ளையரே வெளியேறுக" என்று போர் முரசு கொட்டியும், செயலாற்றுதல் அல்லது செத்துமடிதல் என்று பாரத மக்கள் பதைப்புடன் எழுந்தும், இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிப்பதில் அணுவளவு அக்கறையும் காட்டவில்லை ஆங்கிலேயர். ஆதலினால், "முனை முகத்தில் இறங்கி அச்சுறுத்துவோம்" என்று சுபாஷ் பாபு முடிவு கட்டினர்; அவ்வாறே செயலில் இறங்கவும் செய்தார்.

அதற்கு முன்னதாகவே, இந்திய தேசியப் படைஞர் பற்பல போர்முனைகளில் ஜப்பானியாருடன் தோளோடு தோள் கலந்து சண்டை செய்தனர். முடிவில், அப்படை

ஞரை அவர் இந்தியாவின் மீது ஏவ நினைத்தார். அதனால் 1944-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் படையெடுப்புத் திட்டத்தைக் குறித்து, அப்படைஞரின் பிரதம தளகர்த் தரான ஷாநவாஸ்கான் என்பாருடனும், ஜப்பானிய தளபதி யுடனும் கலந்து ஆலோசனை செய்தார்.

இந்தியாவின் வட கீழ் எல்லை வழியே மார்ச் 18-ந் தேதி தேசியப் படைகள் காலடிவைத்தன. நாகமலை பிரதேசத்தின் தலைநகரான கொஹிமா, மணிபுர சமஸ் தானத்தின் தலைநகரான இம்பால் இவற்றைக் குறிக் கொண்டு அப்படைஞர் பாய்ந்தனர். சுருங்கச் சொன்னால் பிரிட்டிஷ் இந்தியப் படைகள் சுபாஷ் படையின் முன்னே ஆற்றாது பின் வாங்கி ஓடின. சில இடங்களில் சரணகதி யும் அடைந்தன.

இந்தியாவில் புகுந்த இரண்டொரு மாதத்திற்குள் மணிபுர சமஸ்தானத்தின் பாதிப்பாகம் தேசியப் படைஞ ரின் கைக்குள் அடங்கிவிட்டது. உடனே இம்பால் பள் ளத்தாக்கைத் தாண்டி அதன் அருகேயுள்ள விஷ்ணுபுரம் என்னும் நகரை அப்படைஞர் நோக்கினர். அந்நகரம் பிடிபட்டு விட்டால், சுலபமாக வங்காளத்தில் புகுந்து விடலாம். இத்தகைய நிலைமை கண்டதும், பிரிட்டிஷ், அமெரிக்கப் படைகள் அங்கேவந்து குவியத்தொடங்கின.

அச் சமயத்திலே தூரக் கிழக்கில் அமெரிக்கர் வெகு வேகமாக முன்னேறி, ஜப்பானியரிடம் உள்ள தீவுகளை ஒன்றன்பின் ஒன்றாக வசம் செய்து வந்தனர். அதனால் பேராபத்தில் சிக்கிய ஜப்பான் தேசியப் படைக்குத் தேவையான தளவாடங்களையும், உணவுப் பொருள்களை யும் அனுப்ப இயலாது போயிற்று. மேலும், தேசீயப் படைஞருக்குத் துணையாக வந்த ஜப்பானியத் தளபதி

தம் துருப்புகளுடன், பிறர் அறியா வண்ணம் பின்வாங்கத் தலைப்பட்டார்.

இங்கிலையில், அப்போர் முனையிலே பெருமழை பொழியத் தலைப்பட்டதால், எங்கும் ஒரே வெள்ளக்காடாயிற்று. மோட்டார் வசதி முதலியவையற்ற தேசியப் படைஞர், அம்மழையிலேயே நனைந்து போர்புரிய வேண்டியதாயிற்று. மாற்று உடைகள் இல்லை. உணவுப்பொருள்கள் தட்டிவிட்டன. அந்நிலையில் பகை விமானங்கள் பரிபவம் இழைத்து வந்தன.

உள்ள நிலைமையை உணர்ந்த சுபாஷ், வீணே தம் வீரரைப் பலிகொடுக்க விரும்பாமல், பின்வாங்கும்படி தம் வீரருக்கு வேண்டுகோள் விடுத்தார். விதியின்றி, அதில் "முதல் ஆட்டத்திலே நாம் தோல்வி கொண்டு விட்டாலும், பின்னால் வெற்றி பெறுவோம். உங்களது வீரமும் தியாகமும் வீண்போகா. நமது இந்தியா தேசம் சீக்கிரம் சுதந்திரம் அடைந்தே தீரும்," என்று குறிப்பிட்டிருந்தார்.

ஏறக்குறைய ஒன்றரை ஆண்டுகாலம் தேசியச் சேனை தீரமுடன் போர் புரிந்தது. பின் வாங்க வேண்டுமே யென்று கண்ணீர் வடித்துக்கொண்டே அவர்கள் பின் வாங்கினர். அப்போதும் எதிரியை அலறவைக்கவும் அலக்கழிக்கவும் அவர்கள் தவறவில்லை. இந்திய எல்லையிலிருந்து சிறிது சிறிதாகப் பின் வாங்கி, நூற்றுக் கணக்கான மைல் தூரமுள்ள பர்மா வரையில் சண்டை செய்யத் தவறவில்லை. முடிவிலே அவர்கள் வகையின்றிப் பணிய நேர்ந்தது.

1945-ஆம் ஆண்டு, ஆகஸ்டு மாதம் 14-ஆந் தேதி ஜப்பானே, அணுக்குண்டுக்கு அஞ்சி சரணகதி அடைந்து

விட்டது. அப்போது மலாய்த் தீவுகளிலும், தாய்லாந்திலும் தேசீயப் படைகளிருந்தன. அவையோ சரணுகதி அடையச் சம்மதிக்கவில்லை. விதியை மீறி எத்தனை நாள் தலைதூக்க முடியும். கடைசியில் அவையும் சரண் புகுந்தன. இந்திய தேசீய ராணுவத்தின் முதல் யுத்தம் அவ்வாறு முடிந்தது.

பர்மா தேசத்திலிருந்து சிங்கப்பூருக்குத் திரும்பிய சுபாஷோ ஜப்பானது சரணுகதி கண்டு தயங்கினும், மேற்கொண்டு சுதந்திரப் போரை நடத்துவதற்கான வழி துறைகளை ஆராயவே கருதினர். முப்பது இலட்சம் இந்தியரின் பக்கபலத்தை முன்னிட்டு மீண்டும் போரில் முனையலாம் என்பதே அவரது துணிபாம்.

51. அரசும் ஆண்மையும்

கிழக்கு ஆசியாவில் முப்பதுஇலட்சம் இந்தியமக்கள் திரண்டு நிற்பதை உலகம் அறிய, சுபாஷ் பாபு ஓர் உபாயம் மேற்கொண்டார். தமது தனிப் பொறுப்பில் மட்டும் காரியத்தை நடத்த அவர் விரும்பவில்லை. அம் மக்களுக்கும் பொறுப்பை அளிக்க எண்ணியே, இந்திய சுதந்திர அரசு ஒன்றை அவர் ஏற்படுத்தினர்.

சுபாஷ்பாபு அந்த அரசின் பிரதம மந்திரி, யுத்த மந்திரி, அயல் நாட்டு மந்திரி, போக்கு வரவு மந்திரி முதலிய பதவிகளை ஏற்றார். பொக்கிஷ மந்திரியாகக் கர்னல் சட்டர்ஜீ அமர்ந்தார். மாதர் இலாக்காவுக்கு லட்சுமி சுவாமிநாதன் மந்திரியாக நியமனம் பெற்றார். ஸ்ரீ எஸ். ஏ. ஐயர் என்பார் விளம்பரம், பிரச்சாரம் ஆகிய இலாக்காக்களின் அமைச்சரானர். தலைமை ஆலோசகராக ராஷ்விகாரி போஸ் அமர்ந்தார்.

1943-ஆம் ஆண்டு அக்டோபரில் அந்த அரசு முளைத்தது. தேசியச் சேனையின் துணையும், ஜப்பான், ஜெர்மனியின் ஆதரவும் கொண்டு இந்தியாவில் புகுந்து. அதனை ஆங்கில ஆதிக்கத்தினின்றும் விடுவித்தலே அந்த அரசின் முதல்நோக்கமாம். அதனைத் தழுவி, இங்கிலாந்து, அமெரிக்கா இவற்றின்மீது யுத்த அறிக்கை அது இட்டது. ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய தேசங்கள் அந்த அரசை ஒப்புக்கொண்டன. அயர்லாந்தின் தலைவரான டி'வேலரா என்பார் ஆசிச் செய்தி ஒன்று அனுப்பினர்.

இங்கிலாந்து, அமெரிக்கா இவற்றின்மீது யுத்த அறிக்கை இட்டதை அவர் ஒரு பொதுக் கூட்டத்தில் அறிவித்தார். அங்கே கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் தம் இரு கைகளையும் கூப்பி உயரத்தூக்கி, "ஜெய் ஹிந்த்" என்று ஆனந்த ஆரவாரம் செய்தனர். தேசியப் படைஞரும் தமது பட்டாக் கத்தியை உருவிக் காட்டி, "இந்த உடைவாள் வீரம் விளைக்கும!" என்றனர்.

அந்த அரசின் காரியாலயம் ஆதியிலே சிங்கப்பூரில் அமைந்தது: அப்பால், தற்காலிகமாக இரங்கூனுக்கு மாறியது. அந்த அரசில் 19 இலாக்காக்கள் அமைந்தன. பண்பட்ட பெருமக்கள் அந்த இலாக்காக்களை நிர்வகித்து வந்தனர். தான்பிடித்திருந்த அந்தமான், நிகோபார்த் தீவுகளை அந்த அரசுக்கு ஜப்பான் அளித்தது. அத்தீவுகள் அன்றும், இன்றும் இந்தியாவுக்கே சொந்தம்.

அரசின் காரியாலயம் உள்ள இரங்கூன் நகரிலே ஐம்பது சதுர மைல் உள்ள பூமியை சுபாஷ் விலைக்கு வாங்கினர்; அப்பால் அந்தமான் தீவிற்கு விஜயம் செய்து அரசியல் கைதிகளின் சித்திரவதைத் ஸ்தலமாய் விளங்கிய அந்த இடத்தில் சுதந்திரக் கொடியைப் பறக்கவிட்டார்

அந்த அரசுக்கு அவசியமான தனசாலை (பாங்கு) ஒன்று அவர் ஏற்படுத்தினார். இரங்கூன் கோடீசுவரரில் ஒருவர் உடனே ஐம்பது இலட்சம் ரூபாய் கொடுத்து உதவினார். அத்தனசாலை ஆஸாத் ஹிந்து தனசாலை என்ற பெயரினால் வழங்கப்பட்டது.

1944-ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதிக்குள் ஒரு கோடியே அறுபது இலட்ச ரூபாய்கள் சேர்ந்தன. தங்கம், வெள்ளி, நகை நட்டு முதலிய வகையில் சேர்ந்த தொகையும் ஏராளம். கையிருப்பில் ஏராளமான பணம் இருக்கவே, அந்த அரசே நாணயங்களை அச்சிட்டு வழங்கியது. கரன்சி நோட்டுகளையும் அச்சடித்து வழங்கத் தவறவில்லை. 1945-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அத் தனசாலையின் மூலதனம் முப்பத்தைந்து கோடி ரூபாயாக உயர்ந்து விட்டது.

சுபாஷ்பாபு பொதுக்கூட்டங்களில் பேசும்பொழுது, அவருக்கு மாலைகள் சூட்டப்பெறும். கூட்டம் முடிந்ததும், ஒவ்வொரு மாலையும் ஏலத்தில் விடப்படும். அப்போது அவற்றுள் ஒவ்வொன்றும் ஆயிரம், பதினாயிரம், இலட்சம் என்று விலைபோகும். ஒரு கூட்டத்திலே மாலை ஒன்று பன்னிரண்டு இலட்ச ரூபாய்க்கு ஏலம் போயிற்று. அந்த அரசின் அமைப்பையும், சிறப்பையும் கண்டு, ஒரு முஸ்லீம் தமக்குச் சொந்தமான நகை, நட்டு, பூமி காணி எல்லாவற்றையும் அந்த அரசுக்கு அளித்து விட்டார். அந் நன்கொடையின் மதிப்பு ஒரு கோடி ரூபாய்.

யுத்த நிலைமையை முன்னிட்டு, பண வீக்கமும், விலை உயர்வும் மிக மிஞ்சி நின்ற காலத்தில், அங்கே பொருளாதாரக் குழப்பம் உண்டாயிற்று. அந்நிலையில் சுதந்திர அரசு முன் வந்து, தேவையானவர்களுக்கெல்லாம் அத்தனசாலையின் மூலம் பொருள் கொடுத்து உதவிற்று.

மேலும், உடை, உணவு இவற்றை மொத்தத்தில் வாங்கி, வாடும் மக்களுக்கு விநியோகம் செய்தது.

"பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும் நற்றவ வானி லும் நனி சிறந்தன" என்று பாரதியார் பாடிப் போனார். தேசியப் படையினர் ஒவ்வொருவரும் அப்பாசுரத்தை மெய்ப்பிக்கவே முனைந்தனர். அவர்களின் பான்மை கண்டதும், சுபாஷ் பாபு சித்தம் குளிர்ந்து, சீரிய உரை பகர்ந்து, செம்மை நெறி புகட்டினார்.

இந்தியப் போர் முனையிலே தம் படைஞர் சமர் செய்கையில், சுபாஷ் பாபு உடனிருந்து உயரிய தலைவர் என்பதை உலகறியச் செய்தார். ஒரு முனையிலே முன்ன ணித் துருப்புகளை அவர் காணச் சென்றார். தலைக்கு மேலே நான்கு பக்கத்திலும் துப்பாக்கி ரவைகள் பறக்கின்றன. வான் வீதியில் நின்று விமானங்கள் வெடி குண்டு வீசு கின்றன.

"அனர்த்தம் விளையும்! முன்னணிக்குச் செல்ல வேண்டா!" என்று பலரும் தடுத்தனர். "என் வீரர், இனிய வீரர், இணையிலா வீரர் பேராபத்துக்கு ஆளாகி ஆவியை வழங்க நிற்கையில் எனது உயிர் எம்மாத்திரம்? என் வீரத்தோழருடன் இம் மண்ணில் எனது உடலம் புரண்டால், அது இம்மாபிச கோசத்துக்கு மகிமை தரும்" என்று கூறினார்.

முனை முகத்தே ஓர் அரணில் பதுங்கியிருந்த வீர ருக்கு அவசியமான தேயிலைப் பானம் தயாராய் இருந் தது. அதனை எடுத்துச் செல்லும் ஆள் வரத் தாமதமா யிற்று. அவ்வளவில் அவர் அப்பானத்தை எடுத்துச் சென்று, அவ்வீரருக்கு அளித்து மகிழ்ந்தார். அப்போது அவரது தலைக்கு மேலாக மயிரிழை உயரத்தில் எதிரியின் துப்பாக்கி ரவைகள் பறந்து சென்றன.

அம்முனையிலே ஒரு பட்டாளத்தின் தலைவர் தில்லன் எனப்படுபவர். அத்தலைவர் நம் சுபாஷுக்கு எழுதிய ஒரு கடிதம் இது :—"அருந்தலைவரே, குறிக்கோளை அடையும் வரையில் ஓய்வு என்பதை நாங்கள் கருதோம். நமது தேசியச் சேனையின் மதிப்பையும், சிறப்பையும் நிலை நாட்ட எங்களது ஆருயிரையும் வழங்குவோம். குடிக்கத் தண்ணீர் கிடைத்தால் என்ன? கிடைக்காமல் போனால் என்ன? வாடும் வயிற்றினுக்கு உணவு கிடைத்தால் என்ன, கிடைக்காது போனால் என்ன? எங்களது போராற்றல் இம்மியும் குறைவு படாது. சத்தியம் இது."

பாலர் படையிலே தியாகப் படை என்பது ஒரு பிரிவு. அப்பிரிவைச் சேர்ந்த வீரக் குழந்தைகள் எத்தகைய தியாகம் செய்தனர். பிரிட்டிஷாரிடத்திலே டாங்கு என்னும் மோட்டார் வாகனம் உண்டு. அது வரும் பொழுது, அனலையும், துப்பாக்கி ரவைகளையும் வாரி இறைத்துக் கொண்டு வரும். அதனை இராட்சச ஆயுதம் என்றே கூற வேண்டும். அது கொண்டு தேசியப் படையினரை அழிக்க எதிரிகள் முயன்றனர். அதனை மறித்து நிறுத்தி அழிப்பது எப்படி?

அந்த ராட்சச ஆயுதங்கள் புறப்படுகின்றன என்று புலப்பட்டதும், வீரக் குழந்தைகளில் இருவர் அல்லது மூவர் தமது முதுகிலே பலமான வெடி குண்டுகளைக் கட்டிக்கொண்டு, வழியிலே படுத்துக் கிடப்பர். அவர்களைப் பிணமென்றே நினைக்க நேரும். வேகமாக ஓடி வரும் ஆயுத வண்டியோ, படுத்திருக்கும் பையன்களின் மீது ஏறிச் செல்லும். பலமான வெடிகுண்டுகள் உடனே வெடிக்கும். அதுகண்டு அந்த ஆயுத வண்டியை நடத்துவோர் அறிவிழப்பர். ஆயுதமும் சக்தியற்றுப் போகும்.

மற்றொரு மகத்தான சம்பவம் கூறுவோம். ஒரு நூறு பேர் தேசீயப் படைஞர் ஓர் அரணின் அருகே இருந்தனர். அந்நூற்றுவரை அப்புறப்படுத்தப் பகைவர்களால் இயலவில்லை. ஆனது பற்றி இயந்திரக் கைபீரங்கிகள், வெடி குண்டெறியும் வாகனங்கள் இவற்றை டஜன் கணக்கில் துணைகொண்டு பகைவர் புறப்பட்டு வந்தனர். அளவற்ற ஆயுதபலம் தாங்கிய அப்பகைவரை அந்நூற்றுவர் எதிர்த்துநின்றால், அத்தனை பேரும் மாள்வர் என்பது திண்ணம்.

அந்நூற்றுவரின் தலைவன் அது அறிந்ததும், "நேதாஜிக்கு ஜே! புரட்சி நீடூழி வாழ்க! ஆஸாத் ஹிந்துஸ்தான் ஓங்குக! டில்லியை நோக்குக!" என்று கோஷங்கள் கிளப்பினான். அது கேட்டு, ஆவேசம் கொண்ட நூற்றுவரும் துள்ளி எழுந்து, துப்பாக்கியைத் தூக்கிக் காட்டி எதிரிகளின்மீது பாய்ந்து வந்தனர்.

அந்த ஆவேச எழுச்சி கண்டதும், பகைவர் திகைத்துப் போயினர். உடனே கைகலந்த சண்டை மூண்டது. பகைவரின் தொகையோ முந்நூறு. அப்பகைவரில் நூறு பேரை மாய்த்த பின்பே, நூற்றுவரில் நாற்பதுபேர் மாண்டு வீழ்ந்தனர். கைகலந்த சண்டையையும் சேதத்தையும் கண்ட பகைவர், கருத்தழிந்து வந்த வழியை நோக்கினர்.

முனை முகத்தின் நிலைகண்டு, "பின் வாங்குக" என்று சுபாஷ் பாபு அறிக்கையிட்ட காலத்தில், "அந்தோ!" என்று அழுது அரற்றினோர் பலர். "முன் வைத்த காலைப் பின் வாங்குவதோ! டில்லி சேர்ந்த பின்பே திரும்ப வேண்டும். செங்கோட்டைமீது சுதந்திரக் கொடியை நாட்டிய பின்பே காலைப் பெயர்க்க வேண்டும்," என்று பேசியவர்களாய் அங்கேயே ஆவியை விடுத்துப் பிணமாய் விழுந்தோரும் பலராவர்.

52. உயிர் நிலையில் பேரிடி

ஆகஸ்டு புரட்சியின்போது இந்தியாவில் சேனாதிபதியாக இருந்தவர் லார்டு வேவல் என்பவர். அப்போது, தமது யுத்த முயற்சியெல்லாம் இந்திய மக்களின் மனப் புழுக்கத்தால் மண்ணாயினதை அவர் நன்கு அறிந்து கொண்டார். அத்தகையவர் 1945-ஆம் ஆண்டு அரசப் பிரதிநிதியாக இங்கே வந்து, தேசத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கலானார்.

ஏற்றதும், தேச மக்களின் பிணக்கைப் போக்கினால் அல்லாமல், இங்கே ஆங்கில அரசு நடவாது, ஆங்கிலேயரும் வாழ முடியாது என்று அவருக்குத் தெள்ளெனப் புலப்பட்டது. உடனே அவர் இலண்டன் மாநகருக்குப் பறந்து சென்றார்; ஆங்குள்ள இங்கிலாந்தின் மந்திரிகளுடன் கலந்து பேசினார்; பேசி இந்தியாவுக்குத் திரும்பியதும் சிம்லா நகரிலே ஒரு மகா நாடு கூட்டினார்.

அதற்குத் தேசத்திலுள்ள பலவாறான அரசியல் கட்சிகளின் தலைவர்களை அவர் வரவழைத்தார். "இந்தியாவின் அரசிலே அரசப் பிரதிநிதியும், இராணுவ மந்திரியும் ஆங்கிலேயராக அமர்வர். ஏனையோர் அனைவரும் இந்தியராக இருக்கலாம். ஜப்பானுடன் நடக்கும் யுத்தத்துக்கு இந்தியா உதவி புரிய வேண்டும்," என்று அவர் அக்கூட்டத்திலே அறிவித்தார்.

ஆகவே, "உண்மையில் இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க ஆங்கில மந்திரிகளுக்கு மனம் இல்லை. போரை நன்கு நடத்துவதிலே நமது உதவி பெறுவதற்காகத் தான் இச்சூழ்ச்சி செய்கின்றனர்" என்னும் விஷயம் நமது காங்கிரஸ் தலைவர்களுக்குத் தெரிய வந்தது. ஆதலின் அந்த யோசனையை நமது காங்கிரஸ் தலைவர்கள் ஏற்கவில்லை.

அன்றியும், அன்றளவும் சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொள்ளாது விலகி நின்ற கட்சித் தலைவர்களை, வேவல் பிரபு அழைத்ததும், அத்தலைவர்களுக்கும் பதவியளிக்க அவர் விரும்புவதும் காங்கிரஸ் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. ஏனெனில் அது பிரித்தாளும் தந்திரத்தின் ஒரு அம்சமேயாம்.

“நாங்கள் அரசியல் திருத்தம் அளிக்க முன்வந்தும், அதனை ஏற்றுக் கொள்வதில் தேசத் தலைவர்களுக்குள் ஒற்றுமை இல்லை. நாங்கள் என்ன செய்யமுடியும்?” என்று அப்பிரபு பழி சுமத்த முயன்றார். மேலும், “ஆங்கிலேயரே வெளியேறுக” என்ற தீர்மானம் நிலையாக நிற்பதால், ஆங்கில அரசுக்கு அது ஓர் அவமானமாகவே இருந்தது; அந்த அரசின் யுத்த முயற்சிக்கும் இடறு கட்டையாகத் துலங்கியது. ஆதலின், அத்தீர்மானத்தை வாபஸ் பெற வேண்டுமென்று காங்கிரஸ் தலைவர்களை அப்பிரபு வற்புறுத்தினர். பூரண சுதந்திரம் வழங்க ஆங்கில மந்திரிகள் மறுக்கையில், “வெள்ளையரே வெளியேறுக” என்னும் தீர்மானத்தை வாபஸ் பெற நம் தலைவர்கள் ஒப்பவில்லை.

இனி, கிழக்கு ஆசியாவிலே சுபாஷ்பாபு திரட்டிய இந்திய தேசியச் சேனையில் ஒவ்வொருவரும் ஒப்பற்ற வீரரேயாவர். போர் முனைகளிலே பராக்கிரமத்துடன் போர் புரிந்தும், அவர்களில் சிலரை ஆங்கிலேயர் பிடித்து விட்டனர். உடனே, ஆங்கில அரசுக்குத் துரோகம் புரிந்ததாகச் சொல்லி, அவர்களில் சிலரைத் தூக்கில் போட்டனர். சிலரை நீண்டகாலத் தண்டனைக்கு ஆளாக்கினர். சிலரை விசாரித்துத் தலை வாங்கக் காவலில் வைத்திருந்தனர்.

விசாரித்துத் தலைவாங்க வைத்திருந்தவர்களில் மூவரை முதன்மையாகச் சொல்லவேண்டும். ஒருவர் மேஜர் ஜெனரல் நவாஸ்கான் என்பவர். மற்றொருவர் லெப்டினன்டு கர்னல் ஷேகால் எனப்படுவார். இன்னொருவர் லெப்டினன்டு கர்னல் தில்லன் என்பவராம். அம் மூவரும் சுபாஷின் சேனையிலே சேவித்த வீரத் தளபதிகள். ஆங்கில அரசருக்கு விரோதமாகச் சண்டை செய்தனர் என்பது அவர்களின் மீது சுமத்தப்பட்ட முக்கியமான குற்றங் களில் ஒன்றாகும். இது செய்தி நம் தலைவர்களுக்குத் தெரிய வந்தது. தெரிய வந்ததும், தேசத்திலே பரபரப்பு மிருந்தது.

வீர திலகங்களான அம் மூவரையும் பறிகொடுக்க நம் தலைவர்கள் மனம் ஒப்பவில்லை; ஆதலின் அம் மூவரின் மீதும் பகிரங்கமாக விசாரணை நடத்தவேண்டும் என்று கிளர்ச்சி செய்தனர்; அதற்காக ஒரு நிதியும் திரட்டினர். அம் மூவரின் சார்பாக எதிர் வழக்காட இந்தியாவின் தலைசிறந்த வக்கீல்கள் முன்வந்தனர். பண்டித ஜவஹர்லால் நேரு, காலஞ்சென்ற பாரிஸ்டர் புலாபாய் தேசாய், காலஞ் சென்ற சர். டேஜ்பகதூர் சாப்ரு, டாக்டர் கைலாசநாத் கட்ஜு முதலியோரைக் குறிப்பிடலாம். அப்போது, சுபாஷ் திரட்டிய தேசியச் சேனையின் விவரங்கள் பலவும் இந்தியருக்குப் புலப்பட்டன.

மூவரின் மீதும் 1945-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 5-ந் தேதி விசாரணை தொடங்கியது. அது மிகவும் பிரமாதமாக நடந்தது. அடிமையாய்க் கிடக்கும் இந்தியர் ஆயுதம் தாங்கிச் சுதந்திரப் போர் புரிதல் ஏற்கும். அதனைத் தவறு என்று எவரும் கூறமுடியாது. அம் மூன்று தளபதிகளின் வீரச்செயலை எண்ணி, இந்தியா பெருமை யடைதல் வேண்டும் என்னும் பொருள்படும்

வண்ணம், புலாபாய் தேசாய் மிக அற்புதமாக வாதாடினார்.

அச் சமயத்தில் அம் மூவரும் வீரவாசக வாக்கு மூலம் கொடுத்தனர். ஷாநவாஸ்கான் கொடுத்த வாக்கு மூலத்தின் சாரம் ஈதாம்:—"தேசியச் சேனையில் நான் சேர்ந்த உடனே, எனது வாழ்வு, எனது வீடு வாசல், குடும்பம், எனது சொத்து சுதந்திரம், எனது பரம்பரை ஆகிய அனைத்தையும் தேச சுதந்திரத்திற்காகப் பணயம் வைத்து விட்டேன். நேதாஜி போஸின் அரும்பெரும் குணங்கள் அனைத்தும் என் மனதைக் கொள்ளை கொண்டன. அவர் மூலம் எனது தேசத்தின் உண்மை நிலையை நான் உணர்ந்து கொண்டேன்.

"அன்னியரின் கொடுங்கோன்மை, ஆயுதமின்றி இந்தியர் படும் அல்லல் முதலியவற்றை எல்லாம் எங்களுக்கு அவர் எடுத்துச் சொன்னார். தேசியச் சேனையில் சேருமாறு என்னை அன்புடன் அழைத்தார். தன்மதிப்பும், தேசிய உணர்ச்சியும் இம்மியளவேனும் உள்ள எந்த இந்தியனும், அந்தச் சேனையில் சேர்ந்து சேவிப்பது சிறப்பாகும். எனது தேச நலம் கருதி நான் போர் புரிந்தேன். தேசபக்தி ஒரு குற்றம் ஆமோ?"

அவ்விதமே மற்ற இருவரும் வாக்கு மூலம் கொடுத்தனர். "இந்த விசாரணை சட்ட விரோதம். சிங்கப்பூரிலே எங்களை ஜப்பானியரிடம் ஆடு மாடுகள் போல ஒப்படைத்தீர்கள். அப்போது பிரிட்டிஷ் மன்னர் வந்து எங்களைக் காக்கவில்லையே? இந்நிலையில் நாங்கள் எவ்வாறு இராஜ விசுவாசம் காட்டமுடியும்? சுதந்திரக் கொடியின் கீழ்ச் சுதந்திர வீரர்களாகவே நாங்கள் போர் புரிந்தோம். யுத்தக் கைதிகளாகவே நாங்கள் உங்களிடம் சரணாகதி அடைந்தோம். எனவே எங்கள் மீது நீங்கள்

குற்றம் சாட்ட நியாயம் ஏது?" என்று காப்டன் ஷேகால் முழங்கினார்.

முடிவிலே, அவ் விசாரணையில் மூவருக்கும் தீவாந்தர தண்டனை கிட்டியது. தேசமோ அது கேட்டு வீறுப் புடன் பதைத்தது. அரசின் சேனை வீரரும் அஞ்சி அறிவிழந்தனர். பிரதம சேனாதிபதி தமது விசேட அதிகாரத்தைக் கையாண்டு, அத் தண்டனையை மாற்றி, மூவருக்கும் விடுதலை அளித்தார். பொது மக்களும் ஒருவாறு ஆறுதல் அடைந்தனர்.

அம் மூவருக்காகவும் எதிர் வழக்காடுவதில் ஏராள மான பணம் செலவாயிற்று. தேசமக்கள் அனைவரும் பணங்கொடுத்து உதவினர். இந்தியச் சேனையிலே, நிலப் படையிலும், நீர்ப்படையிலும், ஆகாயப் படையிலும் சேவித்து நின்ற வீரரில் பலரும் தாராளமாக அவ் வழக்கி னுக்கு நிதி திரட்டி உதவினர்.

ஆங்கில அரசுக்கு இங்கே உயிர்நிலை போன்றது இராணுவமே. அந்த இராணுவத்தாரே, நம் காங்கிரஸ் தலைவர்கள் நடத்திய எதிர்வழக்கினுக்கு உதவி புரிந்தது கண்டு, இனி இந்தியாவை ஒரு கணமும் ஆளமுடியாது என்பதை இங்கிலாந்தின் மந்திரிகள் கைநெல்லிக்கனி போல் அறிந்து கொண்டார்கள். கௌரவமாக இந்தியா வுக்கு அரசியல் சுதந்திரம் வழங்காவிடின், அடிபிடி கட்டாயமாக அதனை இந்தியர் அடைந்தே தீருவர் என்றும் அவர்களுக்குப் புத்தி பிறந்தது.

அதன் பின்பு, இங்கிலாந்தின் பார்லிமெண்டு சபை உறுப்பினரில் பதின்மர் இங்குவந்து, தேசமெங்கும் சுற்றிப் பார்த்து, உள்ள நிலையையும், மக்களின் மனக் கோளையும் அறிந்து, மரியாதையாக நாம் இந்தியாவுக்குச்

சுதந்திரம் வழங்குதலே மேலாம் என்று இங்கிலாந்தின் மந்திரிகளுக்கு வலியுறுத்தினர்.

மண்டியெழுந்த சுதந்திர ஆவேசம் நாளுக்கு நாள் இங்கே கொழுந்து விட்டு வந்தது. மாணவரும் தொழிலாளரும் அடிக்கடி ஆங்காங்கே கூட்டங்கள் கூடி, சுதந்திர கோஷத்தை வானளாவச் செய்தனர். ஆசியாவை விட்டும் ஆங்கிலேயர் வெளியேற வேண்டும் என்று சர்தார் வல்லபாய் படேல் கர்ஜனை செய்தார். இதனைக் கேட்டதும், இங்கிலாந்து பின்னும் நடுங்கியது.

அதன்மேல், இங்கிலாந்தின் மந்திரிகளில் மூவர்—இந்தியா மந்திரி என்பார் உட்பட—இங்கே வந்து தேசத் தலைவர்களைக் கண்டு பேசி, ஓர் உடன்பாடு கொள்ள நினைத்தார்கள்.

53. சுதந்திர உதயம்

ஆங்கில மந்திரிகளில் மூவர் நமது தேசத்தினுக்கு 1946-ஆம் வருடம் மார்ச்சு மாதம் வந்து சேர்ந்தனர். நமது தலைவர்கள் இலண்டனுக்குப் போகாமல், அம் மந்திரிமாரே இங்கு வந்தது விசேஷம் ஆகும். அந்த அமைச்சர்களோ இங்குள்ள நானாவிதமான கட்சியினரை முதலில் அழைத்துப் பேசினர். அப்பால்தான் காங்கிரஸ் மகாசபை, முஸ்லிம் லீக் இரண்டின் பிரதிநிதிகளையும் அழைத்தனர் பேச்சுவார்த்தை நடத்த.

ஆதிமுதல் காங்கிரஸ் மகாசபையே சுதந்திரப் போராட்டம் நடத்தி வந்தது. அதன் பலனாகவே அவ்வப்போது அரசியல் திருத்தங்கள் கிட்டின. அப்போராட்டத்தில் பங்கு கொள்ளாதாரோ, அத்திருத்தங்களின் பலனைப் புசிக்க ஆசைகொண்டனர். எல்லாருக்குமாகப்

போராடிய காங்கிரஸ் மகாசபை அதற்கு இணங்கியது. அதுவே அச்சபையின் பெருமைக்குக் காரணம்.

ஆயினும், அச்சபையின் போராட்டத்தை மதித்தே, அரசியல் பேச்சு நடத்த வந்திருக்கும் மந்திரிமார், அச்சபையுடன் முஸ்லிம் லீகையும் அழைத்தது அழகோ என்று காங்கிரஸ்காரரிலே பலரும் ஆத்திரம் அடைந்தனர்; பிரித்தாளும் தந்திரத்தின் ஒரு சூழ்ச்சியே என்றும் எண்ணினர்; என்றாலும், காங்கிரஸ் தலைவர்களோ ஆங்கிலேயரிடமிருந்து அரசியலைப் பறிப்பதிலேயே கண்ணாயிருந்தார்கள்.

அது பற்றியே, அம் மந்திரிகளைக் கண்டு பேச அத் தலைவர்கள் இணங்க நேர்ந்தது. இத் தேசத்தை முஸ்லிம்களே அதிகமாயுள்ள மாகாணங்கள், இந்துக்களே அதிகமாயுள்ள மாகாணங்கள், சமஸ்தானங்கள் என்று மூவகைப்படுத்தி அம் மந்திரிகள் சிற்சில யோசனைகள் சொல்லினர். மதவாரியாக மாகாணங்களைப் பாகுபடுத்தல் தகாது என்று காங்கிரஸ் தலைவர்கள் சுட்டிச் சொன்னார்கள்.

பின்பு ஹிந்துக்களும், முகம்மதியரும் ஒரு மனம் கொண்டு வருங்கால அரசியலை வகுத்துக் கொள்ளுதல் அவசியம்; அதற்கு இடையில் தற்காலிக தேசீய அரசை ஹிந்துக்களும், முகம்மதியரும் சேர்ந்து அமைத்துக் கொள்ளலாம் என்று அம் மந்திரிகள் வேறு ஒருயோசனை சொல்லினர். அப்போதும் ஜனாப் ஜின்னா முட்டுக்கட்டை போட்டார். கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போகக்கூடாது என்று காங்கிரஸ் தலைவர்கள் கருதினர். காரியத்திலும் கண்ணாயிருந்தனர்.

அது பற்றியே, முஸ்லிம் லீகிடம் அரசியலை ஒப்படைத்தால் அதற்கு ஒப்புவோம் என்று சர்தார்

படேலும், பிறரும் உரைத்தனர். ஆங்கிலேயர் இத் தேசத்தைவிட்டு வெளியேறினால் போதும் என்பதே படேலின் குறிக்கோளாம். அது கேட்டதும், காங்கிரஸ் மகாசபையின் பெருந்தன்மையில் அம் மந்திரிமார் சந்தேகங் கொள்வதற்கு இடமில்லாது போயிற்று.

முடிவிலே, "இந்தியாவின் அரசியலை இந்தியரே வகுத்துக்கொள்ளலாம். அதற்கான இந்திய அரசியல் நிர்ணய சபை ஏற்படுவதில் எங்களுக்குச் சம்மதமே. இதற்கு இடையில் தேச ஆட்சியை இந்தியரிடம் ஒப்படைத்துவிடுகின்றோம். காங்கிரசும், லீகும் சேர்ந்து தற்காலிகமாக தேச ஆட்சியை நடத்திவருமாக" என்று அம் மந்திரிமார் உரைக்கலாயினர். அப்போதும் ஜனாப் ஜின்னா அந்த யோசனையை ஏற்கவில்லை.

முகம்மதியரே அதிகமாயுள்ள பாகங்களை எல்லாம் தனியாக்கி அவற்றை முஸ்லிம்களிடம் கொடுத்துவிட வேண்டும் என்று ஜின்னாசாகிப் பிடிவாதம் பேசினார். தேச அரசியலை தற்காலிகமாக காங்கிரசுடன் சேர்ந்து நடத்திவரவும் அவர் ஒப்பவில்லை. தேசத்தைத் துண்டாடவோ காங்கிரஸ்காரருக்கு மனம் இல்லை. ஆங்கில மந்திரி மார் யாது செய்வர் ?

இந்தியாவின் அரசியலை இந்தியரிடம் ஒப்படையா விடின், உலகோரின் முன்னிலையில் ஆங்கில மந்திரிகளுக்கு மகிமை இராது. அன்றியும் இனிமேல் இந்தியாவை ஒரு கணமும் கட்டியாள முடியாது என்பது அம் மந்திரி மாருக்குத் தெரியும். செல்வாக்கும் சக்தியும் மிகுந்த காங்கிரஸ்காரரின் நல்லெண்ணத்தை கைகழுவிவிட அவர் களுக்கு மனம் இல்லை. பின்னாளில் இந்தியாவின் நட்புறவு இருந்தால் இங்கிலாந்துக்கு நன்மையுண்டு என்று, அம் மந்திரிமார் அறிவுகொண்டனர்.

ஆங்கிலேயர் ஆதிமுதல் கிளப்பிவிட்ட வகுப்புவாதம் என்னும் பேய் அவர்களுக்கே அனர்த்தமாக முடிந்தது. அந்நிலையில், "ஆங்கிலேயராகிய நாங்கள் இத்தேசத்தை விட்டுப் போகின்றோம். இந்துக்களும், முகம்மதியரும் சமரசமாகப் போதலே அழகாம்," என்று பொருள்படும் வண்ணம் ஆங்கில மந்திரிகள் கூறிப் போயினர். இடைக் காலத்தில் அரசியலை ஏற்று நடத்த ஜனுப் ஜின்னு முதலில் ஒப்பவில்லை. அது அறிந்து அரசப் பிரதிநிதியான லார்டு வேவல் என்பார் திகைத்தார்.

அந்நிலையில் காங்கிரஸ் மகாசபையின் சார்பாக பண்டித ஜவாஹர்லால் நேரு முன்வந்து இடைக்கால சர்க்காரை அமைக்க ஒருப்பட்டார். அதற்கு ஆங்கில மந்திரிகள் சம்மதிகொடுத்தனர். முஸ்லிம் லீக் பிரதிநிதிகள் ஒப்பினுல், அவர்களைச் சேர்த்துக்கொண்டு இடைக்கால சர்க்காரை நடத்த ஆயத்தமாயிருப்பதாக பண்டிதநேரு பகிரங்கமாக அறிவித்தார். பலரும் அதுவே சரி யென்றனர்.

பின்னர் காங்கிரஸ் தலைவர்கள் இடைக்கால சர்க்காரை நடத்திவந்தனர். தம்மைவிட்டு வால்பிடிக்கும் கதையாக ஆகிவிடுமோ என்று ஜின்னு சாகிப் அஞ்சினர்; அதன்மேல் தமது லீகின் பிரதிநிதிகளை இடைக்கால சர்க்காரில் சேரச் சொன்னர். அவர்களை அன்புடன் வரவேற்றார் பண்டிதநேரு. 1946-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அவ்விதம் இத்தேச ஆட்சியை நம்மவர் ஏற்றுக் கொண்டனர்.

இந்துக்களும், முஸ்லிம்களும் ஒருமனம் கொண்டு ஆட்சியை நன்கு நடத்தி, இத்தேசத்தை உன்னத நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று பண்டிதரும், காங்கிரஸ்காரரும் ஆவலாக இருந்தனர். ஆயினும்

இடைக்கால சர்க்காரில் சேர்ந்த லீக் மந்திரிகளோ தேச நிர்வாகத்தில் அக்கறை காட்டவில்லை; மற்று வகுப்பு வெறியை வளர்க்கும் வகையிலேயே பேசியும், நடந்தும் வந்தனர்.

அதனால் வங்காளம், பீஹார், பஞ்சநதப் பிரதேசம் இந்த இடங்களிலே இந்து-முஸ்லிம் கலகம் கொழுந்து விட்டது. கொலைகளும், கொள்ளைகளும் கங்குகரை யின்றி அங்கெல்லாம் தாண்டவம் ஆடின. உயிர்ச்சேதமும் பொருட் சேதமும் சொல்லி முடியா. அந்த வகுப்புக் கலகத்தை அடக்கும் பொறுப்பும், அதிகாரமும் அப் போது லார்டு வேவல் என்பாரின் கையில் இருந்தன. அவரோ வாளா இருந்துவிட்டார். லீக் மந்திரிகளைப் பகைத்துக்கொள்ள அவர் விரும்பவில்லை. ஸ்தல அதிகாரி களும் அக்கலகம் வளர்வதில் கருத்தாயிருந்தனர்; அதனை மூட்டியும் நின்றனர்.

அந்நிலையில், ஆங்கிலேயர் அடியோடு இத்தேசத்தை விட்டு அகன்றால் அல்லாமல், வகுப்புப்பூசல் ஓயாது என்று மகாத்மாகாந்தி உரைத்தார். அப்போது இங்கி லாந்தின் முதன் மந்திரியாக விளங்கிய அட்லி என்பார் அதற்கு இசைய நேர்ந்தது. நேரவே, அதற்கு ஆவன அனைத்தும் விரைந்து செய்யுமாறு, மௌண்ட் பேட்டன் என்னும் பிரபுவை அரசப் பிரதிநிதியாக இங்கே அனுப்பி வைத்தார்.

அப்பிரபுவும் இங்கே வந்து, உள்ளநிலைமை கூர்ந்து உணர்ந்துகொண்டார். முகம்மதியரே அதிகமாயுள்ள சிந்துநாடு, வடமேற்கு எல்லை மாகாணம், பஞ்சநதத்தின் ஒரு பகுதி, கிழக்கு வங்காளம் இவற்றை ஒரு தனி அரசாக்கி லீக் மந்திரிகளிடம் கொடுத்து, எஞ்சிய பாரத பூமியை இந்திய யூனியன் என்னும் பெயருடன் காங்கிரஸ்

காரர் ஆண்டுவருதல் வேண்டும் என்று அவர் ஆலோசனை கூறினார். அஃது இராஜதந்திர சூழ்ச்சியில் ஒன்றும்.

தேசத்தைத் துண்டாடுவதில் காங்கிரஸ்காரருக்கு விருப்பம் கிடையாது. துண்டாடக்கூடாது என்றே ஆதி முதல் அவர்கள் வலியுறுத்தி வந்தனர். ஆயினும் பற்றி எரியும் வகுப்புப்பூசல் ஒழிந்தால் போதும் என்று பண்டிதநேருவும், சர்தார்படேலும் கருத நேர்ந்தது. காரியமே பெரிது, வீரியம் அன்று என்று அந்த ஆலோசனைக்கு இருவரும் இணங்கினர். மகாத்மாவும் தேசத்தாரும் விதியின்றி அந்த ஏற்பாட்டினுக்கு ஒப்பினர்.

வகுப்பு வெறி காரணமாக பஞ்சநதப் பிரதேசத்திலிருந்தும், கிழக்கு வங்காளத்திலிருந்தும் சுமார் ஒரு கோடி மக்கள் உயிர் தப்பினால் போதுமென்று இங்கு வந்து புகுந்தனர். அங்கே அவர்கள் விட்டுவந்த சொத்துக்களின் மதிப்பு ஆயிரத்து நானூறு கோடி ரூபாயாகும். அங்கே உயிரிழந்த மக்களுக்கு ஒரு கணக்கு இல்லை. முகமதியரிடம் சிக்கிக்கொண்ட ஹிந்து மாதரோ பதினாயிரக் கணக்கு ஆவர்.

இத்தகைய இரத்தப் பெருக்கம், பிணக்காடும் நேராமலிருக்கவே, முன்னம் பற்பல சமயங்களில் முகம்மதிய சமூகத்தினுக்கு வரம்பு மீறிச் சலுகையும், உரிமையும் அளித்து வந்தார் காந்தி மகான். வகுப்புப் பூசல் ஏற்படும் போதெல்லாம் தமது உயிரைப் பணயமாக வைத்து உண்ணா நோன்பும் மேற்கொண்டார். இரு சமூகமும் இணைந்து பிணைந்து, குழைந்து வாழவேண்டும் என்று காங்கிரஸ் தலைவர்களும் ஆதிமுதலே அரும்பாடு பட்டார்கள். ஆயினும் விதியோ வேறு விதமாக முடிந்தது.

அகிம்சை, சத்தியம் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டே, அரசியல் போராட்டத்தை நடத்தி, உலகி

னுக்கு ஒரு புது வழிகாட்டவே முயன்றார் காந்தி மகான். அத் துறையில் ஆங்கில சாம்ராஜ்யத்தை அவர் பணியவும் வைத்தார். உலக மேதைகளின் நன்மதிப்புக்கும் ஆளானார். இந்நிலையில் சுதந்திர சூரியன் 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15-ஆம்தேதி உதயமானான். உதித்த பின்பு வகுப்புப் பூசலினால் இங்கே இரத்த வெள்ளம் கரை புரண்டு ஓடியது. இஃது தெய்வச் செயலா அல்லது வினையின் விளைவா வாசகரே மதித்துணர்க.

முகம்மதியரின் ஆட்சிக்கு உட்பட்ட பாகம் பாகிஸ்தான் எனப்படும். எஞ்சிய பாகமோ பாரதம் என்று பெயர் பெறும். சட்ட ஞான மேதைகளை கொண்ட அரசியல் நிர்ணய சபையார் நெடுநாள் கூடி ஆலோசனை செய்து, குடி அரசு அரசியலை வகுத்துளர். எனவே பாரத பூமி குடி அரசு நாடாம். அக் குடியரசின் தலைவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவார். தேச நிர்வாகம் இந்திய மக்களாலேயே நடந்து வரும்.

ஆங்கில ஆட்சி நிலைநின்ற காலத்தில் இங்கிருந்து வந்த ஆங்கிலச் சேனை அச்சுதந்திர உதயத்துக்குப்பின் இங்கிலாந்துக்குப் போய்விட்டது. இங்கிருந்த ஆங்கில அதிகாரிகளில் சிலரும் அப்போதே தமது வேலையை விட்டு, உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு போய்விட்டனர். மற்றவர்களோ ஒப்பந்த காலம் வரையில் வேலை பார்க்க ஒப்பி, உண்மையில் உழைத்து வருகின்றனர்.

கடைசியில் மனமொப்பி இத்தேச அரசியலை நம்மிடம் ஒப்படைத்ததனால், ஆங்கிலேயருக்கும் நம்மவருக்கும் இடையே அவ்வளவாக மனக்கசப்பு ஏதும் இல்லை. நல்லெண்ணமும் உறவுமே நிலவி வர எல்லோரும் ஆவலாய் இருக்கின்றனர். இங்கே வர்த்தகம் புரிந்துவரும் ஆங்கிலேயரும் பாரத மக்களிடம் நேசம் பூண்டு நடந்து வரு

கின்றனர். "வெள்ளையரே வெளியேறுக" என்று காந்தி மகான் கர்ஜனை செய்தபொழுது, வெள்ளையரின் ஆதிக்கத்தைப் போக்கவே அவர் விரும்பினர். அது கைகூடிவிட்டது.

பாரத பூமியில் இன்றும் சுமார் மூன்று, நான்கு கோடி முகம்மதியர் வசித்து வருகின்றனர். இந்துக்களுக்கும், முகம்மதியருக்கும் மன ஒருமை இங்கே நிரம்பி நிற்கின்றது. பாகிஸ்தானிலே ஹிந்துக்கள் பலர் இருந்து வருகின்றனர். அந்த ஹிந்துக்கள் அவ்வளவாக நிம்மதியுடன் வாழ முடியவில்லை. தத்தளிக்கின்றனர் என்றே சொல்ல வேண்டும்.

பாரத பூமியிலே எவ்விதமான மதச் சார்பும் இல்லாத பொதுவான குடியரசே நிலவுகின்றது. இங்கே முகம்மதியர், ஹிந்துக்கள், கிறிஸ்தவர், புத்தர், சமணர், சீக்கியர், பார்சியர் முதலிய பலவாறான சமயத்தார் வசித்து வந்தாலும், எல்லாரும் சரிநிகர் சமானமான புருஷராகவே மதிக்கப்படுகின்றனர். எந்த வகுப்பாருக்கும் விசேஷமான சலுகையோ, உரிமையோ கிடையாது.

பாகிஸ்தானத்திலோ இஸ்லாமிய தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்ட அரசே நிலவுகின்றது. எனவே பாகிஸ்தான் அரசு மதச் சார்பு உள்ளது. நமது பாரதக் குடி அரசோ மதச் சார்பற்ற மகிமை வாய்ந்ததாம். இது கண்டு உலகம் போற்றுகின்றது.

54. முடிவுரை

"திருவையாற்றான் இருந்தும் கெடுத்தான், செத்தும் கெடுத்தான்" என்பது ஒரு வசனம். ஆங்கில ஆதிக்கம் இங்கிருந்து அகன்ற உடனே, புராதன பாரத பூமி இரு துண்டாக நேர்ந்தது. தவிர, நமது சுதந்திர சித்திக்கு

இங்கிருந்த சமஸ்தானங்கள் என்பவை இடறு கட்டையாக இருந்தன. ஆங்கிலேயரின் காலத்தில் இந்தியாவிலே பிரிட்டிஷ் இந்தியா, சமஸ்தான இந்தியா என்று இரண்டு பிரிவு உண்டு.

பிரிட்டிஷ் இந்தியாவை அன்னார் நேர்முகமாக ஆண்டு வந்தனர். அந்த பிரிட்டிஷ் இந்தியாவிலே நாம் சுதந்திரம் எய்திேனும். சமஸ்தான இந்தியா பாரத பூமியிலே மூன்றில் ஒரு பாகமாகும். இதில் எட்டு கோடி மக்கள் உண்டு. சிறியதும் பெரியதுமாக ஐந்நூற்று அறுபத்து நான்கு சமஸ்தானங்கள் இருந்தன. அவை இந்தியாவின் ஊடே ஊடே சிறுசிறு திட்டுகளாக விளங்கின.

சமஸ்தானங்களை மன்னர் என்போர் ஆண்டு வந்தனர். இங்கிருந்த அரசப் பிரதிநிதியே அவர்களுக்கெல்லாம் சர்வாதிகாரி. பெயரளவில் அம் மன்னர்கள் ஆண்டு வந்தாலும், ஆங்காங்கிருந்த ஆங்கில தானுதிபதியின் சொற்படியே அவர்கள் நடத்தல் வேண்டும். நமது சுதந்திரப் போராட்டம் தலை சிறந்து நின்ற காலத்திலே, சமஸ்தானங்களைச் சுட்டிக்காட்டி, நமது சுதந்திரத்தை அதிகார வர்க்கம் மறுத்து வந்தது. எங்ஙனம் என்றல்:—

“ சமஸ்தானங்கள் தனி அரசுகள். அம்மன்னவரோ மகிமை வாய்ந்தோர்; எங்களிடம் பயபக்தி விசுவாசம் கொண்டுள்ளவர்கள். அவர்களுக்கும் எங்களுக்கும் நெடு நாளாக உடன்பாடும் உறவும் உண்டு. ஆபத்துக் காலத்திலோ அவர்களுக்கு நாங்கள் துணைபுரிவோம். எங்களுக்கும் அவர்கள் துணை செய்வர். அத்தகைய மன்னவர் சரிசமமாக ஜனத் தலைவர்களுடன் வீற்றிருக்க ஒண்ணுமோ? அது அம் மன்னவரின் மகிமைக்கும், மரபுக்கும் ஏற்குமோ?”

அந்த வாதத்தை நம் தலைவர்கள் உணர்ந்து, சமஸ்தான மக்களின் சுதந்திரப் போராட்டத்தை முன்னின்று நடத்த நேர்ந்தது. அதிகாரவர்க்கத்தின் தலையீடு இல்லாதிருந்தால், சமஸ்தான மக்கள் முன்னதாகவே சுதந்திரம் பெற்றிருப்பர். இனி, ஆங்கிலேயர் வெளியேறியதும், "இனிமேல் சமஸ்தானங்கள் தமது இஷ்டம் போல் நடந்து கொள்ளலாம்," என்று சொல்லிப் போயினர்.

இஷ்டம்போல் சமஸ்தானங்கள் நடக்கலாம் என்றால் ஒவ்வொரு சமஸ்தானமும் தனியரசு கொள்ளக் கூடும். கொண்டால் இந்தியாவிலே அறுநூறு தனியரசுகள் முளைக்கும். அவை அன்னிய தேசங்களுடன் தொடர்பு கொண்டு, நமது சுதந்திரத்துக்குத் தீமை விளைவிக்கலாம். திருவாங்கூர், நிஜாம் ராஜ்யம் முதலிய சமஸ்தானங்கள் அவ்விதமே தனியரசு என்று கூறி ஆரம்பத்தில் ஆர்ப்பரித்தன.

நாம் பரிபூரண சுயராஜ்யம் எய்தியதும், உள்நாட்டு மந்திரியாக அமர்ந்தார் சர்தார்படேல். உடனே, சமஸ்தானங்களின் விஷயத்தில் அவர் கவனம் பாய்ந்தது. தனித்தனியே சமஸ்தான மன்னரை அவர் வரவழைத்து, அரிய போதம் புகட்டி, அவையனைத்தும் இந்தியாவைச் சார்ந்து நிற்க வேண்டும் என்று கண்டிப்பாகக் கூறினார். மன்னரில் பலரும் பெருந்தன்மை மிகுந்து அதற்கு இணங்கினர்.

பின்பு, சிறிய சிறிய சமஸ்தானங்களை எல்லாம் ஒன்று சேர்த்து, ஒரு மாகாணமாக ஆக்கினார் அவர்; அம் மன்னருக்கிருந்த சொத்துக்களை அவர்களிடமே ஒப்படைத்தார்; மாகாண சமஸ்தானங்களுக்கு அம் மன்னரில் ஒருவரை இராஜப் பிரமுகர் என்று அமர்த்தினார்; அங்கே சட்டசபைகள் அமைத்தார்; மக்களுக்குச்

சுதந்திரம் அளித்தார். சட்ட வரம்புக்கு உட்பட்டே அந்த இராஜப் பிரமுகர் ஆட்சி நடத்தி வரவேண்டும். அவருக்கு உதவியாக மந்திரிசபைகள் அமைந்தன.

தமிழகத்திலுள்ள புதுக்கோட்டை சமஸ்தானம் திருச்சி ஜில்லாவுடன் இணைந்து விட்டது. கொச்சி சமஸ்தான அரசர் தமது பதவியை விட்டுக்கொடுத்தார். கொடுக்கவே, கொச்சியும் திருவாங்கூரும் ஒரு மாகாணம் போல் ஆகிவிட்டன. திருவாங்கூர் மகாராஜா அம் மாகாணத்தினுக்கு இராஜப் பிரமுகர் என்னும் பதவி வகிக்கிறார். மைசூர் சமஸ்தானமும் இந்தியாவின் ஒரு மாகாணம் போல் இருந்து வருகிறது.

நிஜாம் ராஜ்யமோ, தனியரசாகத் தருக்கி நிற்கத் தலைப்பட்டது. சமயம் பார்த்து அதன்மீது சேனையை ஏவவே, நிஜாம் மன்னர் வழிக்கு வந்தார். நிஜாம் ராஜ்ய மும் ஒரு மாகாணம் போல் ஆகிவிட்டது. அவ்விதம் மாறிய சமஸ்தானங்களிலெல்லாம், மந்திரிகளே ஆட்சியை நடத்தி வருகின்றனர். இராஜப் பிரமுகர் என்போர் பெயரளவில் தக்க மரியாதைகளுடன் தலைவர்களாகத் திகழ்கிறார்கள்.

சமஸ்தானங்களை எல்லாம் அவ்விதம் இந்தியாவுக்கு உட்பட்டு நடக்கும்படி சாதித்த பெருமை சர்தார் படேலைச் சாரும். ஆங்கிலேயர் அகன்றுபோன ஓர் இரண்டு ஆண்டினுக்குள் சமஸ்தானங்கள் என்னும் பெயரையே மறையச் செய்து, அம் மன்னவர் அனைவரையும் கட்டுப்படுத்திய அரிய சாதனைகண்டு, ஆங்கிலேயரே வியக்க நேர்ந்தது. இந்தியாவுடன் இனிய முறையில் அவை பிணைந்து வாழுதல், நம் தலைவர்களின் திறமையைக் காட்டும்.

இடையூறு இல்லாதிருந்தால்தான் புல்பூண்டும் இனிது வளரும். பறவைகளும், விலங்கினங்களும் இஷ்டப்படி வாழவே இச்சை கொள்ளும். மானிடமும் அப்படித்தான். மனிதரிலே ஒரு சாரார் மற்றொரு சாராருக்குக் கட்டுப்பட்டு வாழ்தல் இயற்கைக்கு மாறும். ஒரு சமூகத்தார் அல்லது தேசத்தார், பிறசமூகத்துக்கோ, தேசத்துக்கோ அடங்கி ஒடுங்கி வாழ்தல் அடுக்காது.

ஒரு தேசத்தை மற்றொரு தேசத்தார் கட்டி ஆளுகையில் ஆளப்படும் தேசத்தார் பலவகையிலும் குன்றி நிற்கவே நேரும்: உயர்ந்து ஓங்குதல் இயலாததாகி விடும். ஆனது பற்றியே, ஆளப்படும் தேசத்தார் அக்கட்டிலிருந்து விடுபடப் பெரிதும் முயல்வர். அம்முயற்சி இருவகைப்படும். ஒன்று அற வழி; மற்றொன்று மறவழி.

அடக்கி ஆளும் தேசத்தாரின் மனத்தை அன்பு வழியில் கவர்ந்து, அவர்களின் ஆன்மாவையும் புனிதமாக்கி, அன்னாருக்கு யாதோர் இடையூறும் புரியாமல், அன்னார் இழைக்கும் தீமைகளை எல்லாம் பொறுத்து நின்று, அகிம்சை, சத்தியம் இரண்டையும் ஆயுதமாக்கித் தாங்கி விடுதலை பெறுதலே அறவழி எனப்படும்.

இனி, ஆளும் தேசத்தாரை ஆயுதபலம் கொண்டு அடித்துப் புடைத்து, அன்னார் கொடுக்கும் அடி உதைகளை ஏற்றுக்கொண்டு, அவர்களைப் போர் முகத்தே வீழ்த்தி, வெற்றிமாலைசூடி, விடுதலை அடைதலே மறவழியாம். அம்மறவழியில் இருபக்கத்திலும் அளவற்ற உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் நேரும்; மனக் கசப்பும் தோன்றி கொழுந்துவிடும்; சாந்தி என்பது இராது.

உலக சரிதத்தை உற்று நோக்கின் ஆயுதம் தாங்கி, இரத்த ஆறு பெருக்கி, எவ்வளவோ சேதம் விளைத்தே பற்பல நாடுகள் விடுதலை அடைந்திருத்தலை அறியலாம்.

1914-ஆம் ஆண்டிலும், 1939-ஆம் ஆண்டிலுமாக இரண்டு உலக மகா யுத்தங்கள் நடந்தன. இரண்டிலும் நேர்ந்த இரத்தக் களறிக்கு எல்லையுண்டோ? வெற்றிகொண்ட தேசங்கள் நிம்மதியுடன் இருக்கின்றனவோ? எங்கும் அச்சப்பேய் தாண்டவம் ஆடுகின்றது.

ஆதலின், மானிட கோடிகளுக்கு மகிமையான மார்க்கமொன்று காட்டவே, அன்பு நெறியில், அகிம்சை வழியில், சத்தியப் பாதையில் மகாத்மா காந்தி சுதந்திரப் போரை நடத்தி வந்தார். இரண்டு உலக மகா யுத்தங்களிலும் வாகை சூடிய ஆங்கில சாம்ராஜ்ஜியம்—பலவாறான படைபலங்களை நிரம்பப்படைத்த, சர்வ வல்லமையுள்ள ஆங்கில சாம்ராஜ்ஜியம்—ஆயுதபலத்தை நம்பாமல், ஆன்ம பலத்தையே நம்பிநின்ற பாரத பூமியினிடம் பணிந்தது.

எதிரியின் ஒரு துளி இரத்தத்தையும் சிந்தாமல், அவனது மனத்தை இளகவைத்து, அகில உலகும் மெச்சும் முறையை அம்மகான் நமக்கு போதித்தார்; சுதந்திரத்தையும் தேடித் தந்தார்; உலகத்துக்கும் நல்வழிகாட்டினார். அவரை நாம் சுயராஜ்ஜிய பிதா என்போம். உலகத்தாரோ அவரை அன்பு மார்க்கத்தின் அரிய பிதா என்றழைப்பர்.

ஆதியிலே புத்தர் பிரானும், மகா வீரரும், "அன்பே வெல்லும், அருளே சிறக்கும்" என்று உபதேசித்தனர். ஆயினும் மக்களிலே பலர் அதனைக் கடைப்பிடித்து நடக்கவில்லை. அப்பால் ஏசுமகான் தோன்றி, "துன்பம் இழைத்தவனுக்கும் இன்பமே புரிக" என்று போதமருளிப் போனார். அவரது சமயத்தைத் தழுவி நிற்கும் ஐரோப்பியரோ ஆயுத பலத்தை வளர்த்து, அகில உலகையும் கட்டியாள விழைகின்றனர்.

உலகப் பெரியாரனைவரும் சாதிக்க முடியாத காரியத்தை, நமது காந்தி மகான் நம்மவரை ஒரு கருவி

யாகக்கொண்டு சாதித்துக் காட்டியுள்ளார். அவரது பெருமையில் நமக்கும் சிறிது பங்குண்டு. அன்பே சிவம், தர்மமே ஜெயம், அறமே ஆக்கமளிக்கும் என்பன நமது பாரத பூமியின் புனிதமான போதப் பொருளாம். உலகெலாம் இன்புற்றிருக்க வேண்டும் என்றே, நமது வேத சாத்திரக் காவியங்கள் நமக்கு உரைக்கா நிற்கும்.

அத்தகைய பழம்பெரும் பூமியில் பிறந்துள்ள நாம—அறவழியில் சுதந்திரம் அடைந்துள்ள நாம்—இனிமேலும் அந்த அரிய அன்பு நெறியையே மேற்கொண்டு, நமது குடி அரசு குவலயத்தில் ஓங்கும் வண்ணம் நடந்து வருதல் கடமையாம் எல்லாரும் இன்புற்று இருக்கவேண்டும் என்று எண்ணுவோமாக! எல்லாருக்கும் பணி புரிந்து இன்பம் எய்துவோமாக!

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே:
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்" என்று
(ஆடுவோமே)

எல்லோரும் ஒன்றென்னும் காலம் வந்ததே
ஏமாற்றந் தொலைகின்ற காலம் வந்ததே—இனி
நல்லோர் பெரியர் என்னும் காலம் வந்ததே—
[கெட்ட
நயவஞ்சக் காரருக்கு நாசம் வந்ததே
(ஆடுவோமே)

நாமிருக்கும் நாடு நமது என்பது அறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம் என்பது அறிந்தோம்—இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்
(ஆடுவோமே)

தேசீய கவி சுப்பிரமணிய பாரதியார்.

வந்தேமாதரம்

மறைமலையடிகள் நூல்நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY